எம். என். ரின்டிஞு
ஜி. பி. செர்னிக்கவ்
ஜி. என். ஹுடக்கோர்மவ்

# அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

М. Н. Рындина,
Г. П. Черников,
Г. Н. Худокормов

ОСНОВЫ ПОЛИТИЧЕСКОЙ ЭКОНОМИИ

*на тамильском языке*

**Ryndina M.,**
**Chernikov G.,**
**Khudokormov G.**

FUNDAMENTALS OF POLITICAL ECONOMY

***in Tamil***

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1982

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

P $\frac{10700-14}{016(01)-82}$ 689—82 0603010000

## பொருளடக்கம்

அத்தியாயம் 1

அரசியல் பொருளாதாரத்தின் ஆய்வுப் பொருள் 11

அத்தியாயம் 2

முதலாளித்துவத்திற்கு முற்பட்ட கால உற்பத்தி முறைகள் . . . . . . . . . 22

1. புராதன-கூட்டுவாழ் குழு உற்பத்தி முறை . 22
2. அடிமையுடைமை உற்பத்தி முறை . . . 26
3. நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை . . . 32

அத்தியாயம் 3

முதலாளித்துவ பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி முறை . . . . . . . . . 38

1. முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிக்குரிய முக்கிய பண்புக் கூறுகளும் கட்டங்களும் . 38
2. பரிவர்த்தனை பண்டப் பொருளாதாரத்தின் விதங்கள் . . . . . . . . . . . . 42
3. பரிவர்த்தனை பண்டமும் அதில் அடங்கியுள்ள உழைப்பும் . . . . . . . . . . . 44
4. பணம். அதன் சாராம்சமும் செயற்பாடுகளும். 51
5. மதிப்பு விதி . . . . . . . . . . 58

அத்தியாயம் 4

முதலாளித்துவச் சுரண்டல் . . . . . . 62

1. பணம் மூலதனமாக மாறுதல் . . . . . 62
2. உபரி மதிப்பின் உற்பத்தி . . . . . . . 66
3. கூலி . . . . . . . . . . . . . . . . 76
4. மூலதனத் திரட்சி. தொழிலாளி வர்க்கத்தின் நிலை . . . . . . . . . . . . . . . 81

அத்தியாயம் 5

சுரண்டுவோர் குழுக்களுக்கிடையே உபரி மதிப்பின் விநியோகம் . . . . . . . 94

1. உபரி மதிப்பை இலாபமாக மாற்றல் . . 94
2. வணிக மூலதனமும் வணிக இலாபமும் . . 102
3. கடன் மூலதனமும் கடன் வட்டியும் . . 105
4. நில வாடகை. முதலாளித்துவ சமுதாயத்தில் விவசாய உறவுகள் . . . . . . . 109

அத்தியாயம் 6

சமூக மூலதனத்தின் புனருற்பத்தி. பொருளாதார நெருக்கடிகள் . . . . . . . 117

1. மொத்த சமூக உற்பத்திப் பொருள் . . 117
2. முதலாளித்துவ புனருற்பத்தி: சாதாரணமானதும் விரிவுபடுத்தப்பட்டதும் . . . 119
3. முதலாளித்துவப் புனருற்பத்தியின் எதிரும் புதிருமான முரண்பாடுகளும் பொருளாதார நெருக்கடிகளும் . . . . . . . . . . 123

அத்தியாயம் 7

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய லெனினின் தத்துவமும் தற்காலத்திய ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் . . . . . . . 132

1. மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் தத்துவ போதனையை லெனின் தொடர்கிறார். . . . 133

2. ஏகாதிபத்தியத்தின் முக்கிய பண்புக் கூறுகள் . . . . . . . . . . . . . . . . 137
3. முதலாளித்துவ பொருளாதாரத்தின் புதிய பண்புக் கூறுகள். விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சி . . . . . . . . . . . . . . 141
4. தற்காலத்திய ஏகபோக வளர்ச்சியின் குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகள் . . . . . . 145
5. நிதி மூலதனத்தைப் பற்றிய லெனினின் தத்துவம். இன்றைய நிதி மூலதனம் . . . 149
6. நிதி ஆதிக்கக் குழுவின் ஆதிக்கம் . . . 156
7. ஏகபோக இலாபமும் ஏகபோக பூர்ஷ்வாவின் செழிப்பும். முதலாளித்துவ நாடுகளில் நடைபெறும் ஏகபோக-எதிர்ப்புப் போராட்டத்தின் பொருளாதாரக் கோட்பாடுகள் . . . 160

அத்தியாயம் 8

அரசு-ஏகபோக முதலாளித்துவம் . . . 167
1. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் சாராம்சம், அதனுடைய வளர்ச்சியின் புறவய விதிகள் ஆகியவற்றைப் பற்றிய லெனினுடைய போதனே. 167
2. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் தற்காலக் கட்டம். அரசு-ஏகபோக அமைப்பு உருவாதல் . . . . . . . . . . . . 171
3. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் அடிப்படை வடிவங்கள் . . . . . . . . . . 177
4. அரசு-ஏகபோக முதலாளித்துவமும் சோஷலிசத்திற்கான முன்தேவைகளைத் தயாரித்தலும் . 189

அத்தியாயம் 9

உலக முதலாளித்துவப் பொருளாதாரமும் இன்றைய கட்டத்தில் அதனுடைய முரண்பாடுகளின் பெருக்கமும் . . . . . . 194
1. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தோற்றமும் அதன் சாராம்சமும். . . . 194

2. மூலதனத்தின் ஏற்றுமதி . . . . . . 196
3. சர்வதேச ஏகபோகங்களால் உலகம் பொருளாதார ரீதியாகப் பிரிக்கப்படல். சர்வதேச ஏகபோகங்களின் புதிய பண்புக் கூறுகள் . . 203
4. ஏகாதிபத்திய பொருளாதார ஒருமைப்பாடு . . . . . . . . . . . . . . . . . 209
5. உலகத்தைப் பிராந்திய ரீதியாகப் பிரித்தல் . . . . . . . . . . . . . . . 214
6. வளரும் நாடுகளின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகள். விடுதலைப் பெற்ற இளம் தேசிய அரசுகளின் வளர்ச்சிக்கான இரு வழிகள் . . . . . . . . 219
7. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தற்போதைய வளர்ச்சிக் கட்டமும், அதனுடைய நெருக்கடி ஆழப்படுதலும் . . . 224
8. பண நெருக்கடி . . . . . . . . 230
9. புதிய பொருளாதார முறை. சோவியத் யூனியன் மற்றும் பிற சோஷலிச நாடுகளின் பங்கு. . . . . . . . . . . . . . 234

அத்தியாயம் 10

வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடம். முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியும் தற்கால நிலைமைகளில் அது தீவிரமடைதலும் . . . . . . . . . . . . 239

1. ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டம். சோஷலிசப் புரட்சியின் நுழைவாயில் . . . . . . . . . . 239
2. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி. அதனுடைய பிரதான கட்டங்கள் . . . . 246
3. தற்கால நிலைமைகளின் கீழ் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் வளர்ச்சியில் பண்பு மாற்றங்கள் . . . . . . . . 253

4. உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கும் முதலாளித்துவத்தின் இன்றைய வரலாற்றுப் போக்கும் . . . . . . . . . . . . . 262

அத்தியாயம் 11

கம்யூனிச உற்பத்தி முறையும் அதனுடைய இரு கட்டங்களும் . . . . . . . 266

1. கம்யூனிச உற்பத்தி முறையின் பொது பண்புக் கூறுகள் . . . . . . . . . . . . 267

2. கம்யூனிச உற்பத்தி முறையின் வளர்ச்சியில் இரு கட்டங்கள் . . . . . . . . . . 270

3. வளர்ச்சியுற்ற சோஷலிசத்தின் பிரதான பொருளாதாரப் பண்புக் கூறுகள் . . . . . 277

அத்தியாயம் 12

சோஷலிசம் தோன்றுதல், நிலைபெறுதல் ஆகியவற்றின் புறவயப் பொருளாதாரப் பண்புக் கூறுகள் . . . . . . . . . . 281

1. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் திற்கு மாறும் இடைக்கட்டக் காலத்தின் தேவை யும் சாரமும் . . . . . . . . . . . . 281

2. இடைக்கட்டக் காலத்தின் போது சமுதா யத்தின் பொருளாதார கட்டமைப்பு . . . . 286

3. இடைக்கட்டக் காலத்தியப் பொருளாதாரக் கொள்கையின் சாரம் . . . . . . . . 292

4. சோஷலிசத்தின் பொருளாயத-தொழில் நுணுக்க அடித்தளத்தைக் கட்டுதல். சோஷலிச தொழில்மயமாக்குதல் . . . . . . . 295

5. விவசாயத்தைச் சோஷலிச முறையில் புனர் ஒழுங்கமைத்தல் . . . . . . . . . . . 300

6. சோஷலிசத்தின் வெற்றி . . . . . . 304

7. முதலாளித்துவத்தைத் தாண்டி சோஷலிசத் தைக் கட்டுவதிலுள்ள குறிப்பிட்ட பண்புக் கூறு கள் . . . . . . . . . . . . . . . 307

அத்தியாயம் 13

உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை 310

1. உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையும் அதனுடைய இரு வடிவங்களும் . . . . . . 310
2. சோஷலிசத்தின் கீழ் பொருளாதார விதிகள். 320
3. சோஷலிச அரசின் பொருளாதாரப் பங்கு . . 323

அத்தியாயம் 14

சோஷலிசத்தின் பிரதான பொருளாதார விதி 325

1. சோஷலிசத்தின் பிரதான விதியின் சாராம்சம். 325
2. சோஷலிச உற்பத்தியின் வளர்ச்சியின் பிரதான மூலாதாரம் . . . . . . . . . . . . 332
3. சோஷலிசத்தின் கீழ் பொருளாதார ஆர்வங்கள் . . . . . . . . . . . . . . . 334

அத்தியாயம் 15

சோஷலிச சமூக உற்பத்தியின் திட்டமிட்ட வளர்ச்சி . . . . . . . . . . . 339

1. சமூக உற்பத்தியின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சி—சோஷலிசத்தின் ஒரு பொருளாதார விதி . . . . . . . . . . . 339
2. தேசியப் பொருளாதாரத்தில் சரியான விகிதாச்சாரத்தை உறுதிப்படுத்துதல் . . . . 344
3. தேசிய பொருளாதாரத்தின் நிர்வாகம் . 347
4. சமூக உற்பத்தியைத் திட்டமிடுதல் . . 350

அத்தியாயம் 16

பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் . . 358

1. சோஷலிசத்தின் கீழ் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் . . . . . . . . . . . 358
2. பரிவர்த்தனைப் பண்டமும் அதனுடைய குணங்களும் . . . . . . . . . . . . . 360
3. சோஷலிச சமுதாயத்தில் பணம் . . . . . 365
4. மதிப்பு விதி . . . . . . . . . . . 367

அத்தியாயம் 17

சோஷலிச தொழில் நிலையங்களின் பொருளாதார சுயாட்சி . . . . . . . . . . 373

1. இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையின் சாரமும் முக்கிய கோட்பாடுகளும் . . . . 373

2. இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையின் ஊக்குவிக்கும் பங்கு . . . . . . . . 380

அத்தியாயம் 18

பொருளாயத பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் வினியோகம் . . . . . . . . 386

1. வேலைக்குத் தக்க வினியோகம் . . . . . 386

2. கூலிகளும் சம்பளங்களும். கூட்டுறவுகளில் (கூட்டுப் பண்ணைகளில்) வேலைக்கு ஏற்ற வினியோகம் . . . . . . . . . . . . . . 389

3. சமூக நுகர்வு நிதிகள் . . . . . . . . 396

அத்தியாயம் 19

உலக சோஷலிசப் பொருளாதார அமைப்பு 399

1. சர்வதேச பொருளாதார உறவுகளின் புதிய மாதிரி . . . . . . . . . . . . . . 399

2. சோஷலிசப் பொருளாதார ஒருமைப்பாடு. சோஷலிச நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு . . . . . . . . . . . . . . 403

3. இரு உலகப் பொருளாதார அமைப்புகளுக்கு இடையே உள்ள பொருளாதாரப் போட்டி . . 410

அத்தியாயம் 1

# அரசியல் பொருளாதாரத்தின் ஆய்வுப் பொருள்

மார்க்சிய—லெனினிய அரசியல் பொருளாதாரமானது உற்பத்தி முறையில் மக்களிடையேயுள்ள சமூக உறவுகளைப் பற்றியதாகும். மனித சமுதாயத்தின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் பொருளாயத நன்மைகளின் உற்பத்தி, வினியோகம், பரிமாற்றம், நுகர்வு ஆகியவற்றை ஆளுகின்ற பொருளாதார விதிகளை அது ஆராய்கிறது.

## உற்பத்திச் சக்திகள்

பொருள்களின் உற்பத்தியே மனிதகுல வாழ்வின் அடித்தளமாகும். வாழ்க்கைக்கு வலிமையளிக்க, உணவு, உடை, வீடுகள் மற்றும் பிற முக்கிய தேவையான பொருள்களை மக்கள் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. உற்பத்தி முறையானது மனிதன் அல்லது சமுதாயம், இயற்கை ஆகியவற்றிற்கு இடையேயுள்ள பரஸ்பர செயலை உள்ளடக்கியதாகும். மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள பரஸ்பர செயல் சமுதாய அமைப்பைப் பொருத்ததல்ல. அது உழைப்பு, உழைப்புப் பொருள்கள், உழைப்புக் கருவிகள் ஆகிய மூன்றின் சேர்க்கையாகும்.

**உழைப்பு** என்பது மனிதத் தேவைகளைத் திருப்தி செய்யக் கூடியவாறு இயற்கைப் பொருள்களை தகவமைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட காரியார்த்தமான மனித நடவடிக்கையே. மனிதன் இயற்கையின் மீது செயல்படும்

பொழுது அறிவையும் திறமையையும் சேகரிக்கிறான்; உழைப்பின் நிகழ்ச்சிப் போக்கில் மேம்பாடுகளைப் புகுத்துகிறான். "ஓர் அர்த்தத்தில், உழைப்பு மனிதனையே சிருஷ்டித்தது என்று நாம் கூற வேண்டிய அளவுக்கு அது மானுட வாழ்வு முழுவதற்கும் முதன்மையான அடிப்படை நிபந்தனையாக உள்ளது"* என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டார்.

உழைப்புப் பொருள்கள் என்பது மனிதன் தன்னுடைய உழைப்பைப் பயன்படுத்தும் இயற்கையில் காணக்கிடைப்பவையாகும். மண்ணுடன் கூடிய பூமியே சர்வவியாபகமான ஒரு உழைப்புப் பொருளாகும். ஏற்கெனவே உழைப்பு பயன்படுத்தப்பட்டு மேலும் மாற்றங்களுக்கு உட்படுத்தப்படும் பொருள்கள் கச்சாப் பொருள்கள் எனப்படும். விஞ்ஞானம் முன்னேற முன்னேற அதனுடன் உழைப்புப் பொருள்களின் வகைகள் விரிவடைகின்றன. புதிய உழைப்புப் பொருள்கள் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டு: பல்பொருள் செயற்கை சேர்க்கமான பொருள்கள்.

உழைப்புக் கருவிகள் என்பன, உழைப்புப் பொருள்களின் மீது செயல்பட மனிதனால் பயன்படுத்தப்படும் கருவிகளாகும். உழைப்பதற்குத் தேவையான கருவிகள் அவற்றினுள் முதலாக அடங்கும். எலும்பும் தசையும் உற்பத்திக்கான உழைப்புக் கருவிகள் என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். உழைப்புக் கருவிகளை உற்பத்தி செய்வதிலிருந்துதான் உண்மையில் மனித உழைப்பு ஆரம்பித்தது. ஒவ்வொரு வரலாற்று உற்பத்தி சகாப்தத்தின் முக்கிய குணும்சம் அவற்றின் வளர்ச்சியின் அளவுதான். கற்கோடாரி, மண்வெட்டி, வில், அம்புகள் ஆகியவைகளே முதல் உற்பத்திக் கருவிகளாக இருந்தன. விஞ்ஞான நுணுக்கம் நிறைந்த நவீன இயந்திரங்கள் இன்று உழைப்புக் கருவிகளில் அடங்கும். போக்குவரத்து வாகனங்கள், தொழிற்சாலைக் கட்டிடங்கள், நிறுவனங்கள் ஆகியவை கூட உழைப்புக் கருவிகளில் அடங்கும். பூமி கூட உழைப்புக் கருவியாகும்.

---

* பி. எங்கெல்ஸ், இயற்கையின் இயக்க இயல், மாஸ்கோ, 1969, பக்கம் 267.

உழைப்புப் பொருள்கள் உழைப்புக் கருவிகள் இரண்டும் சேர்ந்து உற்பத்திச் சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன. மக்களால் அவை கையாளப்பட்டாலன்றி உற்பத்திச் சாதனங்கள் தாமாகவே எதையும் உற்பத்தி செய்துவிட முடியாது. உற்பத்தி அனுபவமும் திறமையும் கொண்ட மக்களும் உற்பத்திச் சாதனங்களும் **உற்பத்திச் சக்திகள்** என அழைக்கப்படுகின்றன. மக்களால் உற்பத்திக் கருவிகள் உருவாக்கப்பட்டு மேம்பாடடையச் செய்யப்படும் என்பதால் மக்களே முதன்மையான உற்பத்திச் சக்திகளாவார்கள். இயற்கையிடம் சமுதாயத்தின் செயல்வன்மையுள்ள போக்கை உற்பத்திச் சக்திகள் வெளிப்படுத்தும். இயற்கையின் மேல் மனிதனுடைய கட்டுப்பாட்டின் அளவை அவற்றின் வளர்ச்சி நிலை காட்டுகிறது. உற்பத்திச் சக்திகள் முன்னேற முன்னேற விஞ்ஞானம் அதிக அளவு பங்காற்றுகிறது. விஞ்ஞானம், அதுவே நேரடியாக ஒரு உற்பத்திச் சக்தியாக மாறுகிறது. தற்கால நிலைமையின் கீழ் விஞ்ஞான—தொழில் நுணுக்கப் புரட்சி ஒவ்வொரு உற்பத்திச் சக்தியையும் (புதிய உழைப்புக் கருவிகள், புதிய உழைப்புப் பொருள்கள், புதிய ஆற்றலின் மூலாதாரங்கள், மனித சக்தியின் பாலான புதிய தேவைகள்) விரிவடையச் செய்துள்ளது.

உற்பத்திச் சக்திகள் சமுதாய உற்பத்தியின் ஒரு அம்சத்தை உருவாக்குகின்றன. உற்பத்தியிலான சமுதாய உறவுகளில் அல்லது மக்களிடையே உள்ள பொருளாதார உறவுகளில் அடுத்த அம்சம் அடங்கியுள்ளது.

### உற்பத்தி உறவுகள்

உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கால் இயற்கையை மாற்றும் அதே நேரத்தில் மக்கள், ஒருவருடன் ஒருவர் சமூக உறவுகளைக் கொள்ளுகின்றனர். அத்தகைய உறவுகள்தான் **உற்பத்தி உறவுகள்** எனப்படும். பொருளாயத நன்மைகளை மக்கள் உரிமையாக்கிக் கொள்ளும் உறவுகளுக்குச் சொத்து உறவுகள் எனப் பெயராகும். அவை உற்பத்தி முறையில் தோன்றும். ஏன் எனில் ''உற்பத்தி என்பது எப்பொழுதும் குறிப்பிட்ட ஒரு சமூக அமைப்பு முறைக்குள்ளும் சமூக அமைப்பு முறையின்

உதவியாலும் தனிமனிதனுல் இயற்கை தனதுரிமையாக்கப் படுகிறது.''* சமூக சொத்து உறவு, தனிச் சொத்து உறவு என இருவகை சொத்து உறவுகள் உள்ளன.

உழைப்புச் சக்தி எவ்வாறு உற்பத்திச் சாதனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதனைச் சொத்துறவுகள் தீர்மானிக்கும். உற்பத்தி உறவுகள் என்பதில் சொத்துறவுகள் தவிர உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மக்களிடையே நடைபெறும் செயல் பரிமாற்றமும் உள்ளடங்கும். தனியார் சொத்து உரிமை என்ற அடிப்படையில் உருவான ஒரு சமுதாயத்தில் இத்தகையப் பரிமாற்றம் பல்வேறு உருவங்களில் சுரண்டல், போட்டி ஆகியவற்றில் தவிர்க்க முடியாத அளவு ஈடுபடுகிறது. பொதுச் சொத்துரிமை என்ற அடிப்படையில் உருவான ஒரு சமுதாயத்தில் உழைப்புப் பரிமாற்ற நடவடிக்கையானது, தாஞக முன்வந்து ஒத்துழைத்தல், ஒருவருக்கொருவர் உதவுதல் என்ற உணர்வில் செயல்படுகிறது.

உற்பத்தி உறவுகள் வினியோக உறவுகளின் குணும்சத்தையும் தீர்மானிக்கின்றன. உற்பத்திச் சாதனங்கள் ஒரு குறிப்பிட்ட குழுக்களாலோ வர்க்கங்களாலோ ஏகபோகமாக்கப்பட்டால், இந்த ஆதிக்கக் கும்பல்கள் செய்பொருள்களில் ஒரு பெரும் பங்கினை உரிமையாக்கிக் கொள்ளும். அதே நேரத்தில் உழைப்பாளிகள் மீண்டும் உற்பத்தி செய்வதற்கு, உற்பத்திச் சக்தியைப் பெறத் தேவையான குறைந்த பட்ச சாதனங்களைக் கூட பெறுவதில்லை. அதற்கு மாருக உற்பத்திச் சாதனங்கள்—அதன் விளைவாக உற்பத்தியான எல்லா செய்பொருள்களும்—மக்களுக்குச் சொந்தமாஞல் இந்தச் செய்பொருள்கள் சமுதாயம் முழுவதின் நலனில் அக்கறை கொண்டு வினியோகிக்கப்படும்.

அடுத்த முக்கியமான பொருளாதார உறவுகள் நுகர்வு உறவுகள் ஆகும். நுகர்வு என்பது உற்பத்திக்கான காரணமாகும். மேலும் மறு உற்பத்தி முறையில் அது ஒரு பகுதியாகும். நுகர்வின் அளவும் தேவைகளின் தன்மைகளும் உற்பத்

---

* K. Marx, *A Contribution to the Critique of Political Economy*, Moscow, 1977, p. 192.

தியைப் பொறுத்துள்ளது. சுரண்டல் சமுதாயங்களில் புல்லுருவித்தனமான நுகர்வு அமைப்பு நிலவுகிறது. அத்தகைய சமுதாயங்களில் உழைப்பாளிகள் தரக்குறைவான மலிவான பொருள்களைத்தான் நுகரவேண்டியுள்ளது.

சர்வதேச பொருளாதார உறவுகளுக்கு ஒரு தனியிடம் உண்டு. மார்க்ஸ் அவற்றை இரண்டாவதானது என விவரித்தார். அதன் பொருளாவது அவை ஆரம்ப உற்பத்தி உறவுகளின் குணும்சத்தைப் பொறுத்துள்ளவை என்பதாகும். அவற்றின் முக்கியத்துவம் மேலும் மேலும் உயர்ந்து கொண்டேயிருக்கின்றது. முதலாளித்துவ உலகில் தற்காலத்தில் அநேக விதமான சர்வதேசப் பொருளாதார உறவுகள் இருக்கின்றன. உலக சோஷலிச அமைப்பின் தோற்றத்துடன் புதிய சர்வதேசப் பொருளாதார உறவுகள் தோன்றியுள்ளன.

உற்பத்தி உறவுகளின் பல்வேறு விதமான அம்சங்கள் ஒரு ஒருங்கிணைந்த அமைப்பை உண்டாக்குகின்றன. அதில் எல்லாப் பகுதிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. மேலும் ஒன்று மற்றதன் செல்வாக்கிற்கு உட்படுகிறது. ஆனால் உற்பத்திச் சாதனங்களின் உடைமை உறவுகள் இந்த முறையில் முதன்மையான பங்காற்றுகின்றன. ஏன் எனில் அவை எல்லா பொருளாதார உறவுகளையும் ஒரே மொத்தமாக இணைத்து சமுதாயத்தின் முக்கிய குணும்சங்களை நிறைவாக்கிக் கொடுக்கின்றன.

உற்பத்தி சாதனங்களின் உடைமை உறவுகளின் தீர்க்கமான முக்கியத்துவத்தைக் குறைக்க பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் தடம் புரண்டு செல்லுகிறுர்கள்.

அதே நேரத்தில் சமூகப் பொருளாதார உறவுகளில் உற்பத்திச் சாதனங்களின் உடைமை உறவுகள் முதன்மையான பங்காற்றுகின்றன என்பதனை நிகழ்ச்சிகள் எப்பொழுதையும் விட தீர்மானமாகக் காட்டுகின்றன. முக்கியமாக முதலாளித்துவத்தையும் சோஷலிசத்தையும் ஒப்பிடுவதிலிருந்து இது தெளிவாகும். அவ்விரு சமூக அமைப்புகளும் எதிரும் புதிருமாக இருப்பதற்கு எல்லாவற்றையும் விட முக்கிய காரணம் அடிப்படையிலேயே வேறுபட்ட உடைமை வடிவங்களைக் கொண்ட பொருளாதார அடிப்படையில் இவை அமைந்துள்ளன.

## உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு

உற்பத்தி உறவுகள் இறுதியாக உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, குணும்சம், தரம் ஆகியவற்றைப் பொறுத்துள்ளன. புராதன சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளின் தாழ்ந்த நிலேக்கு ஏற்ப உற்பத்திச் சாதனங்களின் கூட்டுடைமை, கூட்டுழைப்பு, சமமான விநியோகம் ஆகியவை இருந்தன. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி இறுதியாக உற்பத்தி உறவுகளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. எது எப்படியாயினும் சமுதாய உற்பத்தி உறவுகள் செயலற்றவையாக இல்லே. அவை உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. புதிய உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை மேம்படச் செய்கிறது. ஆனல் பின்னல் அவை இவற்றின் மேல் ஒரு தடையாகச் செயல் படுகின்றன. உற்பத்தி சக்திகளும் அவற்றின் சமுதாய வடிவமும் ஒன்றுடன் ஒன்று முரண்படுகின்றன. இத்தகைய முரண்பாடு சமுதாயப் புரட்சிக்கான பொருளாதார அடிப் படையை அமைக்கிறது.

உற்பத்தியில் சமூக உறவுகளேப் பற்றி அரசியல் பொருளாதாரம் ஆராயும் பொழுது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் மீது அவற்றின் தாக்கத்தைக் கவனிக்கிறது. இக்காரணத்திஞல் தற்காலத்திய விஞ்ஞான-தொழிற்நுட்ப புரட்சியின் காரணங்களும் அதன் விளேவுகளும் போன்றப் பிரச்சினேகள் அரசியல் பொருளாதாரத்தின் ஆய்வுப் பொருளுக்குள் வருகின்றன.

உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் ஒரு குறிப்பிட்ட வரலாற்று இணேப்பில் உற்பத்தி முறையை உருவாக்குகின்றன. ஐந்து வகையான உற்பத்தி முறைகள் உள்ளன. அவையாவன: புராதன-கூட்டுவாழ் குழு உற்பத்தி முறை, அடிமையுடைமை உற்பத்தி முறை, நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை, முதலாளித்துவ உற்பத்தி முறை, கம்யூனிச உற்பத்தி முறை. கம்யூனிச உற்பத்தி முறையின் முதல் கட்டம்தான் சோஷலிசம்.

## சமுதாயத்தின் சமூகக் கட்டமைவு. அடித்தளமும் மேற்கட்டுமானமும்

உற்பத்தி உறவுகளே சமுதாயத்தின் சமூகக் கட்டமைவின் அடிப்படையாகும். இவ்வாறாக உற்பத்தி சாதனங்களின் தனி உடைமை சமுதாயத்தை ஒன்றுக்கொன்று எதிர் எதிரான வர்க்கங்களாகப் பிரிக்கக் காரணமாக இருப்பதோடு வர்க்கப் போராட்டத்தையும் உண்டு பண்ணுகிறது. அரசியல் பொருளாதாரம், வர்க்கப் போராட்டத்தின் பொருளாதாரக் கோட்பாடுகளை ஆய்கிறது. அவ்வாறு ஆயும் பொழுது கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளுக்கான விஞ்ஞானப்பூர்வ போர் திட்ட மற்றும் போர் தந்திரங்களின் அடிப்படைகளையும் தருகிறது. முரண்பாடான வர்க்கங்களற்ற சோஷலிச சமுதாயத்தில் அரசியல் பொருளாதாரம் கம்யூனிசத்தைக் கட்டுவதற்கான குறிக்கோளைக் கொண்ட மக்களின் நடவடிக்கைகளுக்குத் தத்துவார்த்த அடிப்படையாக இருக்கிறது. மனித சமுதாயத்தின் வரலாறு ஒரு கட்டத்திலிருந்து மறு கட்டத்திற்கு வளர்ச்சியடையும் பொழுது இவ்வளர்ச்சியை ஆளுகின்ற அகவய விதிகளை ஆராயும் மார்க்சிய-லெனினிய அணுகுமுறையின் அடிப்படை ஆய்வு முறைக் கோட்பாடு இப்படிப்பட்டதே.

உற்பத்தி உறவுகளே சமுதாயத்தின் பொருளாதார அடித்தளம். அரசியல், சட்ட ரீதியான கருத்துக்கள், சித்தாந்தம் அவற்றிற்குரிய நிறுவனங்கள் ஆகியவை சமுதாயத்தின் மேல் கட்டுமானத்தை உருவாக்குகின்றன. இந்த மேல்கட்டுமானமானது அடித்தளத்தால் தீர்மானிக்கப்பட்டு அதன் மேல் தான் செயல்படுகிறது. மேல் கட்டுமானம் அதன் முறைக்கு அடித்தளத்தின் மீது செல்வாக்கு செலுத்துகிறது. ஆனால் இத்தகைய செல்வாக்கின் தன்மை, அளவு, விளைவு ஆகியவை அடித்தளத்தால் தீர்மானிக்கப்படுகின்றன. மேல்கட்டுமானத்தின் முக்கிய பாகம் அரசாகும். அரசின் பொருளாதாரப் பங்கினையும் அடித்தளத்தின் மேல் அதன் செல்வாக்கினையும் இச்செல்வாக்கால் ஏற்பட்ட சமூக-பொருளாதார விளைவுகளையும் அரசியல் பொருளாதாரம் ஆராய்கிறது. அரசியல் பொருளாதாரமே மேல்கட்டுமானம் ஆகும். உற்பத்தி

உறவுகளின் ஆராய்வுடன் கூடவே பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் வளர்ச்சியை மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் தடங்கண்டு அதனுடைய ஆதாரமற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது.

ஸ்தூலமான வரலாற்று ஒட்டுமொத்தமான உற்பத்திச் சக்திகள், பொருளாதார அடித்தளம், மேல்கட்டுமானம் ஆகியவை ஒரு சமூக-பொருளாதார அமைப்பை உண்டாக்குகின்றன.

## பொருளாதார விதிகள்

உற்பத்தியில் சமூக உறவுகளும் அவற்றின் இயல்பான தற்செயல் தொடர்புகளும் பொருளாதார விதிகளில் வெளிப்படுகின்றன. பொருளாதார விதிகள் புறவயமானவை. அதாவது அவை மனிதர்களின் சித்தம், உணர்வு ஆகியவற்றைச் சாராத சுதந்திரமானவை. உற்பத்திச் சக்திகளின் தரத்தால் தீர்மானிக்கப்படும் புறவயத் தன்மையுடைய உற்பத்தி உறவுகளினுல் அவை சுதந்திரமானவையாக உள்ளன. இத்தகைய விதிகள் வரலாற்று பூர்வமானவை. ஏனெனில் அவை வரலாற்றுப் பூர்வமாக நிலவும் உற்பத்தி உறவுகளை வெளிப்படுத்துகின்றன.

பொருளாதார விதிகளின் செயல்பாடு உற்பத்தி உறவுகளின் தன்மையைப் பொறுத்துள்ளது. தனிச் சொத்துரிமையால் மக்கள் பிரிக்கப்படும் முதலாளித்துவ சமுதாயத்தில் பொருளாதார விதிகள் தன்னியல்பாக செயல்படுகின்றன. வர்க்கப் போராட்டம், போட்டி ஆகியவற்றுல் அவை தெளிவாக்கப்படுகின்றன. சோஷலிச சமுதாயத்தில் உணர்வு பூர்வமான, முறைப்படுத்தப்பட்ட மக்களின் நடவடிக்கையால் அவை நிறைவேற்றப்படுகின்றன.

பொருளாதார விதிகளின் தன்னியல்பான செயலை அவற்றின் புறவய குணும்சத்துடன் சமப்படுத்தி அடையாளம் காணும் தத்துவவாதிகளால் இதைப் புரிந்து கொள்ள முடியாது. சோஷலிச சமுதாயத்தில் தன்னியல்பாகவே செயல்படும் பொருளாதார விதிகள் இல்லை, இருக்க முடியாது என்பதால் சோஷலிச சமுதாயத்தில் புறவயமான விதிகள்

இல்லை என்று அவர்கள் அனுமானிக்கின்றனர். சோஷலிசத்தின் கீழ் தன்னியல்பாகவே செயல்படும் மார்க்கெட் உறவுகளின் வளர்ச்சிக்காகப் பரிந்து பேசும் ''வலதுசாரியினர்'', புறவயமான பொருளாதார விதிகளைப் புறக்கணித்துவிட்டு அரசியலில் முரட்டுத் துணிவு கொண்டு தன்விருப்பார்வ செயல்களில் ஈடுபடும் மாவோஸ்டுகள் அடங்கிய ''இடதுசாரியினர்'' ஆகிய இரு தரப்பாரிடையும் இத்தகையத் தவறுகள் பொதுவாகக் காணப்படுகின்றன.

மக்கள் பொருளாதார விதிகளைப் பற்றிய அறிவினைப் பெற்று அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இந்த அறிவின் எல்லை, பொருளாதார விதிகளைப் பயன்படுத்தும் எல்லை, நோக்கங்கள் ஆகியவை மீண்டும் உற்பத்தி உறவுகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு சமூக-பொருளாதார முறைக்கும் பொருளாதார விதிகள் அமைப்பு ஒன்று உண்டு. அவற்றில் குறிப்பிட்ட சமூக முறைக்கு உரிய விதிகளும் சமுதாயம் வாழ்வதற்கான பொதுப்படையான நிபந்தனைகளை வெளிப்படுத்தும் விதிகளும் அடங்கியுள்ளன. மேலும் சில விதிகள் ஒரே ஒரு சமூக-பொருளாதார அமைப்புக்கு மட்டும் அடங்கியதாக இராது. அவைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்டவை. ஆனால் ஒவ்வொன்றும் உற்பத்தி உறவுகளின் குறிப்பிட்ட அம்சங்களை வெளிப்படுத்தும். குறிப்பிட்ட உற்பத்தி முறையை ஆளுகின்ற அடிப்படைப் பொருளாதார விதியால் மொத்தமாக குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளின் சாரம் வெளிப்படுத்தப்படுகிறது.

அரசியல் பொருளாதாரம் உற்பத்தி உறவுகளைப் பற்றியது. எனவே இயல்பாகவே அது, சமுதாய வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் பொருளாயத நன்மைகளின் உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றை ஆளுகின்ற பொருளாதார விதிகளைக் கவனிக்கிறது.

எதார்த்த வாழ்க்கை பொருளாதார விதிகளை அறிவதற்கான தோற்றுவாயாகவும், விஷயங்களின் பெருக்கத்தாலும் பல்வகைப்பட்ட இயல் நிகழ்ச்சிகளாலும் குழம்சப்படுத்தப்பட்டதாகவும் உள்ளது. ஆழமாக அடிகோலப்பட்ட நடைமுறைகளை வெளிப்படுத்துவதற்காக விஞ்

ஞானப் பூர்வமான பிரித்தெடுக்கும் முறையையே தேர்ந்து எடுக்க வேண்டும். அதன்படி நம் கவனத்திற்குட்பட்ட வற்றின் உண்மைப் பொருளை ஆழமாகப் பார்த்து தேவை யற்றதை விட்டுவிட வேண்டும். ஆராயப்படும் இந்த நிகழ்ச்சிப் போக்குகள் அவற்றின் பண்பு, அளவு ஆகியவற்றின் நிச்சயத் தன்மையாலும் அவற்றின் வளர்ச்சியாலும் மதிப்பிடப்படு கின்றன. அவற்றின் வளர்ச்சியானது உள் முரண்பாட்டின் அடித்தளத்தில் நடைபெறுகிறது. இவ்வாறு தத்துவம் மிகத் திட்டமாக ஆக்கப்படுகிறது. பிரித்து ஆய்தல், தொகுத்தாய் தலால் ஈடு செய்யப்படுகிறது. தனிவிதியிலிருந்து பொது விதிக்குச் செல்வதும், பொது விதியிலிருந்து தனிவிதிக்குச் செல்வதும் சேர்க்கப்படுகிறது. தர்க்க ரீதியான சிந்தனை ஓட்டம் உண்மையிலேயே வரலாற்றுப் பூர்வமான வளர்ச் சியைப் பிரதிபலிக்கிறது.

பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் பொருளாதார நடைமுறை சாரத்திற்குள் நுழைவதில்லை. அவர்கள் மேற்போக்காகத் தெரியும் விஷயங்களை மட்டும் விவரித்து வகைப்படுத்து கிறார்கள். இந்த அணுகு முறை எதார்த்தத்தில் முதலாளித்து வம் இருப்பதைவிட, நன்றாக இருப்பதாக அவர்களை எண் ணும்படி செய்கிறது. முதலாளித்துவ சுரண்டல் மேற்போக் கில் மறு உருவத்திலுள்ளது. அநேக பூர்ஷ்வா பொருளா தாரவாதிகள் பொருளாதார விதிகள் இருப்பதையே மொத் தமாக மறுக்கின்றனர். மற்றவர்கள் ''உலகம் முழுவதும் பொருந்தக் கூடியதும் அழிவற்றதுமான விதிகளை'' முன்வைக் கின்றனர். வரலாற்று பூர்வமாக நிலையற்றதான ஒரு இயல் நிகழ்ச்சியை தத்துவ அளவில் சர்வவியாபகமானதாகவும் அழியாததாகவும் இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

## அரசியல் பொருளாதாரத்தில் கட்சி உணர்வு

வர்க்கப் பிரிவுள்ள ஒரு சமுதாயத்தில் அரசியல் பொரு ளாதாரம் வர்க்க குணாம்சத்தைக் கொண்டதாக இருக்கும். எனவே முதலாளித்துவ சமுதாயத்தில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரமும் பாட்டாளி வர்க்க (மார்க்சிய-லெனினிய)

அரசியல் பொருளாதாரமும் முறையே அந்தந்த வர்க்கத்தின் நலன்களை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கின்றன. நவீன பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் விஞ்ஞான ஆய்வுகளை அதாவது உண்மையைக் காணும் ஆய்வினை செய்யவில்லை. முதலாளித்துவத்தைக்காக்கப் பல்வேறு சித்தாந்தங்களைக் கொடுப்பதும், மார்க்சிய-லெனினியத்தையும் இப்பொழுது நிலவி இருக்கும் சோஷலிசத்தையும் தாக்குவதும், முதலாளித்துவத்திற்கு முட்டுக்கட்டைக் கொடுக்க நடைமுறை சாத்தியமான ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிப்பதும் அதனுடைய நோக்கமாகும். இதில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் கட்சி உணர்வு, வர்க்க குணம்சம் ஆகியவை அடங்கியுள்ளன. புறவயத்தன்மை, விஞ்ஞானத்தின் பாரபட்சமற்றத் தன்மை ஆகியவற்றைப் பற்றிய பேச்சிற்குப் பின்னல் பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் அரசியல் பொருளாதாரத்தின் வர்க்க குணம்சத்தை மறைக்க முயலுகின்றனர்.

மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் அதனுடைய விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சியால் சமுதாயத்தின் வளர்ச்சியை ஆளுகின்ற புறவய விதிகளை ஆய்ந்து, தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்று முக்கியத்துவமுள்ள பணி முதலாளித்துவத்திற்குச் சவக் குழி தோண்டுவதும் கம்யூனிசத்தைக் கட்டுவதுமாகும் என்று தத்துவ ரீதியாக நிலைநாட்ட வழி செய்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரம் மார்க்ஸ், எங்கெல்சால் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னல் லெனினல் வளர்ச்சியடையப்பட்டது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரசுகளின் ஆவணங்களிலும் மற்ற எல்லா மார்க்சிய-லெனினிய கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள், அவற்றின் சர்வதேச கூட்டங்கள் ஆகியவற்றின் ஆவணங்களில் மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் இன்று மேலும் வளர்க்கப்படுகிறது.

அத்தியாயம் 2

# முதலாளித்துவத்திற்கு முற்பட்ட கால உற்பத்தி முறைகள்

## 1. புராதன-கூட்டுவாழ் குழு உற்பத்தி முறை

இருபது இலட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புராதன-கூட்டு வாழ் குழு சமூக அமைப்பே முதல் முதல் தோன்றிய சமூக-பொருளாதார அமைப்பாகும். இது மனித வரலாற்றில் மிக நீண்ட காலமாக நிலவி வந்தது. ஏழாயிரம் ஆண்டுகள் முதல் ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்குள் இடைப்பட்டக் காலத்திற்கு முன்தான் இந்த முறை முடிவுற்றது.

### உற்பத்திச் சக்திகள்

புராதன-கூட்டுவாழ் குழு சமூகத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் இரு கட்டங்கள் இருந்தன. இயற்கையாக விளைந்தவற்றைக் கைகொள்வதை முக்கியமாகக் கொண்டது முதல் கட்டம். புனருற்பத்திப் பொருளாதாரத்திற்கு மாறும் நிலையைக் குறிப்பது இரண்டாவது கட்டமாகும். முதல் கட்டத்தில் முக்கியமாகப் பழங்களையும் தானியங்களையும் பிற தாவரப் பொருள்களையும் திரட்டுவது, வேட்டையாடுவது ஆகியவையே வாழ்விற்குரிய வழிகளாக இருந்தன. கற்களும் கம்புகளுமே முக்கிய உழைப்புக் கருவிகளாக இருந்தன. பின்னுல் கற்கோடாரி, வில், அம்பு ஆகியவைகள் பயன்படுத்தப்பட்டன. பிறகு மக்கள் நெருப்பை உண்டு பண்ணவும் அதைப் பயன்படுத்தவும் கற்றுக் கொண்டனர்.

அது அவர்களை குளிரிலிருந்து காப்பாற்றியது. நல்ல உணவு சமைக்க அது உதவியது. இவ்வாறு அது அவர்களுக்கு உடல் வலுவை அதிகப்படுத்தவும் உதவியது.

மக்கள் தங்கள் திறமையை மேம்பாடடையச் செய்தனர். வேலை அனுபவத்தைச் சேகரித்தனர். புராதன சமுதாயத்தில் மக்கள் சேர்ந்து உழைத்தனர். அவர்கள் சேர்ந்து உழைக்க வேண்டியிருந்தது. ஏனெனில் உற்பத்திச் சக்திகள் மிகக் குறைவான வளர்ச்சியடைந்திருந்தன. ஒருவராலும் தனியாகத் தனக்கு வேண்டியதைத் தயாரித்துக் கொள்ள முடியவில்லை. ஒவ்வொருவரின் உழைப்பும் நேரடி சமூக உழைப்பாகவே இருந்தது. இயற்கையில் காணப்பட்ட பொருள்களைக் கைகொள்வதில் கடைப்பிடித்த மக்களுடைய கூட்டு நடவடிக்கைகள் எளிய கூட்டுறவு என அழைக்கப்பட்டது. அந்த எளிய கூட்டுறவு திட்ட வரைக்குள் பால், வயது ஆகியவற்றால் ஏற்பட்ட இயல்பான உழைப்புப் பிரிவினை, உழைப்பை மேலும் திறமையுள்ளதாக ஆக்கியது.

பின்னால் மனிதர்கள் ஊட்டச்சத்து மதிப்புள்ள தானியங்களைப் பயிரிடத் தெரிந்த பொழுது சேகரித்தல் என்பது உழுது பயிரிடும் முறைக்கு இட்டுச் சென்றது; வேட்டையாடுவது கால்நடைகளை வளர்க்கத் தூண்டியது, அதாவது சில பிராணிகள் வீட்டில் வளர்க்கப்படக் கூடியன ஆயிற்று. இந்த நிகழ்ச்சிப் போக்கு ஒரே சீராக வளர்ச்சியடையவில்லை. இதற்கு நீண்ட காலம் ஆயிற்று. புராதன-கூட்டு வாழ்க்குழு சகாப்தம் முடிவடையும் தருவாயில்தான் உழுது பயிரிடும் முறையும் கால்நடை வளர்ப்பும் தலைமைப் பொருளாதாரக் கிளைகளாக மாறின.

உழுது பயிரிடவும் கால்நடையை வளர்க்கவும் சரியான உழைப்புக் கருவிகள் தேவைப்பட்டன. எனவே அக்கருவிகள் தொடர்ந்து விருத்தி செய்யப்பட்டன. மக்கள் உலோகத்தைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டு உலோகத்தாலான ஆயுதங்களை (கலப்பை) பயன்படுத்தலானார்கள். அவர்கள் மேலும் நூற்கவும் நெய்யவும் கற்றுக் கொண்டனர்.

புதிய உழைப்புக் கருவிகளினாலும் உழுது பயிரிடுவதில் சமுதாயம் சிறப்புறப் பயிற்சி பெற்றதனாலும் அல்லது கால்

நடையை வளர்ப்பதில் தேர்ச்சி பெற்றதனுலும் உழைப்பு இன்னமும் அதிக திறமையடைந்தது. மக்கள் மேம்பாடான வாழ்க்கை நிலையை அனுபவித்தனர்.

## உற்பத்தி உறவுகள்

சமுதாயத்தின் ஆரம்பக் குழுக்கள் இரத்தப் பந்தமுள்ள குழுக்களாக இருந்தன. அக்குழுக்கள் பொதுவான உறைவிடத்தில் வாழ்ந்தனர். வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைக் கூடிச் சேர்ந்து பெற்றனர். இத்தகைய குழுக்கள் நாளடைவில் இரத்த பந்தமுள்ள கூட்டுவாழ் சமுதாயங்களாக மாறி, பிறகு கூட்டு இனக்குழுவாக மாறின. இந்த இனக்குழுவில் தலைமைதாங்கும் பங்கு பெண்களைச் சார்ந்தது (தாய்வழி). உற்பத்திச் சாதனங்கள் கூட்டுரிமையாக இருந்தன. நிலம், கால் நடை, கருவிகள் மற்றும் வீடுகள் கூட சமுதாயத்திற்குச் சொந்தமாக இருந்தன. சில உழைப்புக் கருவிகள் சமுதாயத்தில் சில தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டன. அவை அவர்களுடைய சொந்தச் சொத்தாயின. அந்நாளில் தனியார் சொத்து கூட்டுச் சொத்தால் கட்டுப்படுத்தப்பட்டது. தனியார் சொத்தின் பங்கானது கூட்டுச் சொத்திற்குக் கீழ்பட்டதாக இருந்தது.

வாழ்விற்குத் தேவையான, சேகரிக்கப்பட்ட எல்லாப் பொருள்களும் சமுதாயத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. வழக்கமாக அவை சமமாகப் பிரித்து வினியோகிக்கப்பட்டன.

புராதன மனிதனின் முக்கிய தேவைகளுக்கும் தரக்குறைவான உற்பத்திச் சக்திகளுக்கும் இடையேயிருந்த முரண்பாடுதான் புராதன-கூட்டுவாழ் குழு அமைப்பின் பிரதான முரண்பாடாகும். உற்பத்திச் சாதனங்கள் பொதுச் சொத்தானதாலும் புராதன உழைப்புக் கருவிகள் மட்டுமே கிடைத்ததாலும் சமுதாயத்திலுள்ள உறுப்பினர்களுக்கு முக்கிய தேவைகளைக் கொடுப்பதே இந்த முறையின் முக்கிய பொருளாதார விதியாகும்.

உற்பத்திச் சக்திகள் வளர்ச்சி அடைய அடைய உற்பத்தி உறவுகளில் மாறுதல் ஏற்பட்டது. விவசாய உற்பத்தி,

மிருகங்களிலிருந்து கிடைக்கும் பொருள்களின் உற்பத்தி ஆகியவற்றில் சமுதாயங்கள் தனிப்பயிற்சி பெற ஆரம்பித்ததும் ஆடுமாடுகளை மேய்க்கும் இனக்குழு தோன்றலாயிற்று.

மார்க்சியத்தைத் தோற்றுவித்தவர்கள் குறிப்பிட்டது போல் இதுவே முதல் பெரிய சமூக உழைப்புப் பிரிவினையாகும். மேய்க்கும் இனக்குழுவினர் மற்றவர்களை விட அதிகம் உற்பத்தி செய்தது மட்டுமல்ல, அவர்கள் உற்பத்தி செய்த வாழ்விற்குத் தேவையான பொருள்களே வித்தியாசமானவை. அது, அதுவரை இல்லாத ஒழுங்கான பரிமாற்றத்தை முதல் முறையாக சாத்தியமாக்கிற்று. ஆரம்பத்தில் அது அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் நடந்தது. பிறகு, கூட்டுவாழ் குழு சமுதாயங்களிடையே உழைப்புப் பிரிவினையும் அதன் சிறப்புத் தன்மையும் அதிகரிக்க அதிகரிக்க பரிமாற்றம் ஒழுங்கான அடிப்படையில் நடைபெறலாயிற்று.

## புராதன-கூட்டுவாழ் குழு உற்பத்தி முறையின் சிதைவு

உழைப்புச் சக்திகளின் வளர்ச்சியும் அதன் காரணமாக உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பும் கூட்டு உழைப்பாலின்றி தனிப்பட்ட உழைப்பால் வாழ்வதைச் சாத்தியமாக்கிற்று. எடுத்துக் காட்டாக கலப்பையின் கண்டுபிடிப்பு நிலத்தில் கூட்டு விவசாயம் செய்வதிலிருந்து தனிமனித விவசாயத்திற்கு மாற்றம் செய்ய விரைவுபடுத்தியது. நிலம் இன்னமும் பொதுச் சொத்தாகத்தான் இருந்தது. ஆனால் சிறுகச் சிறுகத் தனியார் நிலவுடமை நிறுவப்பட்டது. ஒரே நேரத்தில் இனக்குழுவிலுள்ள முதியவர்கள் பொது உழைப்பு நடவடிக்கையில் பங்கு ஏற்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டனர். அவர்கள் நிர்வாகம், பரிமாற்றங்கள் செய்வதை ஒழுங்குபடுத்துதல், போரை நடத்துதல் ஆகியவற்றை முழுக்க கவனிக்கலாயினர். இத்தகைய நடவடிக்கைகள் விரைவில் தனி மனித இலாபத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறாகத் தனியார் சொத்துரிமையுடன் ஏழை பணக்காரர் என்ற பிரிவும் தோன்றலாயிற்று. தனி

யார் சொத்துரிமையின் தோற்றம் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால் புறவயமாகத் தீர்மானிக்கப்பட்டது.

பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் கூட்டு சமூக உடைமை என்பது ஒருபொழுதும் இருந்ததில்லை எனவும் மனித வரலாறு உண்மையிலேயே தனிப்பட்ட தனியார் சொத்துரிமையில்தான் ஆரம்பித்தது எனவும் அடிக்கடி வாதிக்கின்றனர். தனியார் உடைமையின் வரலாற்றுப் பூர்வமான நிலையற்றத் தன்மையை மறைத்து அதனை அழிவற்றதாகச் செய்யும் ஒரு முயற்சியே இது. ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சி, முதல் உடைமை வடிவம் கூட்டு வாழ் குழு வடிவமே என்று நிறுவியுள்ளது.

கூட்டு வாழ் அமைப்பின் மீதமிச்சங்களை இப்பொழுதும்கூட ஆப்பிரிக்க, ஆசிய, லத்தின் அமெரிக்க நாடுகளில் நாம் பார்க்க முடியும். இந்நாடுகளில் இன்னமும் இனக்குழுக்கள், குழுத்தலைவர்கள், கூட்டு வாழ் குழு உடைமை ஆகியவை உள்ளன.

## 2, அடிமையுடைமை உற்பத்தி முறை

### அடிமையுடைமை உற்பத்தி முறையின் தோற்றம்

மனித வரலாற்றில் வர்க்க முரண்பாடு, மனிதனை மனிதன் சுரண்டுவது ஆகியவற்றின் மேல் நிறுவப்பட்ட முதல் சமுதாயம் அடிமை உடைமை சமுதாயமே. உபரிப் பொருளை அதாவது வாழ்க்கைக்கு மிகவும் தேவையான பொருள்களைக் குறைந்தபட்ச அளவிற்கு அதிகமாக உற்பத்தி செய்யும் கட்டத்திற்கு, உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சியடைந்த பொழுது வர்க்கங்கள் தோன்றின. இதுவே வர்க்கங்கள் தோன்றுவதற்கான புறவயமான அடித்தளம். இது சிலர் மற்றவர்களைச் சுரண்டுவதற்கு வழி செய்தது. அடிமை உடைமை அமைப்பிற்கு அடுத்த முன்தேவை என்னவெனில் உற்பத்திச் சாதனங்கள் தனியுடைமையானதும் வளர்ந்து கொண்டே வந்த பொருளாதார சமத்துவமின்மையுமாகும். புராதன கூட்டு வாழ் குழு அமைப்பு சிதைந்து உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைந்ததிலிருந்து இவ்விரண்டும் ஏற்பட்டன.

முதலில் தந்தைவழி அடிமை உடைமை அமைப்பு தோன்றியது. தந்தைவழி குலத்திற்குள் இது தோன்றியது. இந்தக் குலத்தில் சுதந்திர உறுப்பினர்கள் தவிர போரில் சிறை பிடிக்கப்பட்ட கைதிகள் அதாவது அடிமைகள் இருந்தனர். இத்தகைய சமூகங்களில் அடிமைகள் முக்கிய உழைப்புச் சக்தியல்ல.

பின்னல் தந்தைவழி அடிமையுடைமை அமைப்பு சில நாடுகளில் (பண்டைய கிரேக்கத்திலும் ரோமிலும்) மூலச் சிறப்புள்ள அடிமையுடைமை அமைப்பாக வளர்ந்துள்ளது. அநேக மக்களினங்கள் இத்தகைய அடிமையுடைமை அமைப்பைத் தாண்டி நேரடியாக நிலப்பிரபுத்துவத்திற்குச் சென்று விட்டன.

## அடிமையுடைமை அமைப்பில் உற்பத்திச் சக்திகள்

பயிர் செய்தல், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றைத் தவிர கைத்தொழிலும் ஒரு பெரிய பொருளாதாரக் கிளையாக மாறியது. விவசாயத்திலிருந்து கைத்தொழில் தனியாகப் பிரிக்கப்பட்ட பொழுது அதன் வளர்ச்சி இரண்டாவது பெரிய சமூக உழைப்புப் பிரிவினையாக அமைந்தது. இந்த அடித்தளத்தில் பரிவர்த்தனைக்காக பொருள்கள் செய்யப்பட்ட பொழுது பண்ட உற்பத்தி தோன்றியது. இருப்பினும் பண்ட உற்பத்தி அந்நாளில் முக்கியமான உற்பத்தி முறையல்ல. அடிமையுடைமை அமைப்பின் கீழ் பிழைப்பிற்கான பொருளாதாரம் ஆதிக்கம் செலுத்தியது. அதாவது ஒவ்வொரு தனி மனிதனின் பொருளாதார அடிப்படைத் தேவைகள் பரிவர்த்தனை மூலம் நிறைவேற்றப்படவில்லை. ஆனல் அது என்ன உற்பத்தி செய்ததோ அதால் தேவைகள் நிறைவேற்றப்பட்டன. அடிமையுடைமை சகாப்தத்தில் கைத்தொழிலிலும் விவசாயத்திலும் உழைப்புப் பிரிவினையில் கிளைகள் தோன்றின. இது உழைப்புக் கருவிகளின் வளர்ச்சிக்கு வகை செய்தது. இரும்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது. தறியும் சில பிற நுண்மையான கருவிகளும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்

டன. அவை கரடுமுரடாகவும் சுலபமாக கையாள முடியாத தாகவும் இருந்த போதிலும் அவை உற்பத்திச் சக்திகளின் முன்னேற்றத்தை மேம்படுத்தின. உழைப்புக் கருவிகள் மாற வும் உழைப்புச் சக்தியும் மாறியது. உழைப்பின் தனிவகை கள் தோன்றின. புராதன-கூட்டு வாழ் சமுதாயத்திலுள்ள தைப் போல் எளிய கூட்டுறவு—உற்பத்தியில் மக்களின் ஒத்துழைப்பு—பிரதானமாக இருந்தது.

ஆனால் அடிமையுடைமை அமைப்பில் இந்த ஒத்துழைப்பு கட்டாயமானது. அடிமை உடைமையாளர்களால் உற்பத்தி யாளர்கள் சுரண்டப்படுவதைக் குறிப்பிட்டது.

## வர்க்கங்களின் பொருளாதார சமத்துவமின்மை, அரசு ஆகியவற்றின் தோற்றம்

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி பொருளாயதச் செல்வ அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. தனியார் உடைமை தோன்ற வும் பொருளாதார சமத்துவமின்மை ஏற்படவும் காரண மாயிற்று. இதை வளர்ச்சியுறச் செய்த அடுத்தக் காரணி பரிவர்த்தனையாகும். இப்பரிவர்த்தனை சில குடும்பங்களைப் பணக்காரக் குடும்பங்களாக்கியது. பணக்காரக் குடும்பங்கள் அடிமை உழைப்பை ஒழுங்காகப் பயன்படுத்த ஆரம்பித் தன. போரில் கைதானவர்கள் மட்டுமின்றி கடன்காரர் களும் இப்பொழுது வாங்கவும் விற்கவும் கூடிய அடிமை களானார்கள்.

தனியார் உடைமை தோன்றி, சமுதாயம் அடிமைகள் அடிமை உடைமையாளர்கள் என்று எதிரும் புதிருமான இரு வர்க்கங்களாகப் பிரிந்த பொழுது அடிமையுடைமை உற்பத்தி முறை ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. இது தவிர கைவினைஞர்கள் விவசாயிகள் போன்ற சுதந்திரமான சிறு உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் கடும் வட்டி வாங்குவோர்களும் இருந்தனர்.

வர்க்கங்கள் தோன்றிய அதே நேரத்தில் அரசும் தோன்றி யது. அதனுடைய நிர்வாக இயந்திரம் அடிமைகளைக் கட்டுப் பாட்டிற்குள் வைக்கவும் அடிமை உடைமை அமைப்பைக் கட்டிக் காத்து வளர்க்கவும் பயன்படுத்தப்பட்டது.

## அடிமையுடைமை அமைப்பின் கீழ் உற்பத்தி உறவுகள்

அடிமையுடைமை சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்களும் நிலைமைகளும் அடிமைச் சொந்தக்காரர்களுக்கு உரியதாக இருந்தன. தனியார், அரசு மற்றும் திருச்சபை சொத்துரிமை முறைகள் இருந்தன. நேரடி உற்பத்தியாளர்கள் உற்பத்திச் சாதனங்களை இழப்பதோடல்லாமல் அவர்களே சொத்தாயினுர்கள். அவர்கள் கால் நடையாகக் கருதப் பட்டனர். அடிமை கட்டாயமாக உழைக்க வேண்டியிருந்தது. அவனுடைய உழைப்பின் பலன்கள் அடிமைச் சொந்தக் காரர்களுக்குச் சொந்தமாகும். அடிமையின் சொந்தக்காரன் அடிமைக்கு கொஞ்சம் உணவை அவன் உழைத்துக் கொண்டே இருப்பதற்காக ஒதுக்குவான். இது அவசிய உற்பத்திப் பொருள் என அழைக்கப்படும். அவசிய உற்பத்திப் பொருளுக்கு அதிகமானது அல்லது உபரி உற்பத்திப் பொருள் அடிமைச் சொந்தக்காரர்களால் பயன்படுத்தப்பட்டது. அந்த உபரி பொருளில் ஒரு பகுதி வியாபாரிகளுக்கும் கடும் வட்டி வாங்குவோருக்கும் இலாபம், அசலுக்கு வட்டி என்ற உருவத்தில் போய் சேர்ந்தது.

அடிமைச் சொந்தக்காரர்களின் தேவைகளை நல்ல முறையில் திருப்தி செய்வதே அடிமையுடைமை அமைப்பின் கீழ் உற்பத்தியின் குறிக்கோளாக இருந்தது. இக்காரியத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வழி, அடிமைகளை கொடூரமாக சுரண்டுவதாக இருந்தது. அடிமையுடைமை சமுதாயத்தின் பொருளாதார விதி இப்படித்தான் இருந்தது.

## அடிமை உடைமை அமைப்புக்குள் முரண்பாடுகள்

புராதன-கூட்டுவாழ் குழு உற்பத்தி முறையைவிட அடிமையுடைமை உற்பத்தி முறை மிக முற்போக்கானது. உற்பத்திச் சக்திகளுக்கு அது ஒருவகை தூண்டுகோலாக இருந்தது. கலை, விஞ்ஞானம் ஆகியவற்றின் முன்னேற்றம் ஆரம்பிப்பதைக் குறித்தது. இருந்த பொழுதிலும் உற்பத்தி

மெதுவாகத்தான் விரிவடைந்தது. உழைப்புக் கருவிகள், அவற்றின் பயன்பாடு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதில் அடிமைகளுக்கு அக்கறையில்லே. அடிமைச் சொந்தக்காரர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தாங்களாக வேலே செய்வதே இல்லே. அநேகர் சோம்பேறித் தனமான புல்லுருவி வாழ்க்கை வாழ்ந்தனர். அடிமை உடைமை சமுதாயம் வரலாற்றுப் பூர்வமாக வரையறுக்கப்பட்டது என்று அது காட்டுகிறது.

அடிமையுடைமை சமுதாயத்திற்குள் மிகுந்த முரண்பாடுகள் உண்டு. அடிமைச் சொந்தக்காரர்களுக்கும் அடிமைகளுக்கும் இடையே இருந்த எதிரும் புதிருமான முரண்பாடு பிரதானமான ஒன்றுகும். சுரண்டுகிறவர்கள் சுரண்டப்படுகிறவர்கள் என்ற இத்தகைய வர்க்கங்களின் நிலேயிலும் அவற்றிற்கிடையே ஏற்பட்ட போராட்டத்திலும் இந்த முரண்பாடு வெளிப்பட்டது. இந்த முரண்பாட்டுடன் மூளே உழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையிலான வேறுபாடும் சேர்ந்து கொண்டது. சமுதாயத்தின் பெரும்பகுதியினர்—அடிமைகளும் சிறு உற்பத்தியாளர்களும்—உடலுழைப்புச் செய்ய வேண்டியிருந்தது. அதே நேரத்தில் அறிவுத்துறை முயற்சிகள் எல்லாம் முழுக்க முழுக்க அடிமைச் சொந்தக்காரர்களின் ஏகபோகமாக இருந்தன. இந்த உழைப்புப் பிரிவினே என்பது தனக்குத் தானே முரண்பாடுடையதாகும். ஏனெனில் அது விஞ்ஞானம், உற்பத்தி ஆகியவற்றை மேம்படச் செய்தாலும் அடிமைகளின் அறிவுத் திறனே அது தடை செய்து அவர்களே வெறும் இயந்திரங்களாக மாற்றியது.

அடிமையுடைமைச் சமுதாயத்தில் நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடும் கூட தொடங்கலாயிற்று. நகரங்கள் அடிமை உடைமை அரசுகளாகவும் கைத்தொழில், வாணிபம், கலாச்சாரம் ஆகியவற்றின் மையங்களாகவும் இருந்தன. இந்நகரங்களேச் சுற்றி கிராமப் பகுதிகளும் வெற்றிக் கொள்ளப்பட்ட காலனிப் பிராந்தியங்களும் இருந்தன. இவற்றில் உற்பத்தி மிகவும் பின்தங்கியதாக இருந்தது. நகரங்கள் கிராமப்புற மக்களுக்குச் செய்பொருள்களே அதிக விலேக்கு விற்று அவர்களிடமிருந்து பண்ணேப் பொருள்களேக் குறைந்த விலேக்கு வாங்கி அவர்களேச் சுரண்டின. கிராமப்புறங்களிலிருந்து வலுக்கட்டாய

மாக வசூலிக்கப்பட்ட வரிகளும் பறிமுதல் பொருள்களும் சுரண்டலின் வேறொரு மூலாதாரமாக இருந்தன.

அடிமை உழைப்பு ஈடுபடுத்தப்பட்ட பெருவீத உற்பத்திக்கும் சுதந்திர மனிதர்களின் சிறுவீத உற்பத்திக்கும் இடையே ஏற்பட்ட வேறுபாடு அடிமையுடைமை சமுதாயத்தின் சிறப்பம்சமாகும். அடிமை உடைமை அமைப்புக்கு சிறு உற்பத்தியாளர்கள் மிகவும் தேவை. ஏனெனில் அவர்கள் வரிகளைக் கொடுத்து படையின் பெரும்பகுதியை உருவாக்கினார்கள். ஆனால் அவர்கள் அடிமைகள் ஈடுபடுத்தப்படும் பெருவீதப் பொருளாதாரப் போட்டியில் அழிக்கப்பட்டார்கள். அடிமைச் சொந்தக்காரர்கள் விவசாயிகளின் நிலங்களைக் கைப்பற்றினர். பல விவசாயிகள் வியாபாரிகளாலும் கடும் வட்டி வாங்குவோர்களாலும் அழிக்கப்பட்டார்கள்.

வாணிப மூலதனம் பரிவர்த்தனையின் வளர்ச்சியில் தோன்றியது. வாணிபம், வியாபாரிகள் என்ற பிரிவினை மூன்றாவது பெரிய சமூக உழைப்புப் பிரிவினையாகும். வாணிபம் சமூக உழைப்புப் பிரிவினையை மேலும் அதிகப்படுத்த உதவியது. சரக்குகளை, முக்கியமாக ஆடம்பரப் பொருள்களை வாங்க அதிகப் பணத்தைப் பெற அடிமைச் சொந்தக்காரர்கள், அடிமைகளைச் சுரண்டுவது மேலும் அதிகப்படுத்த அது தூண்டியது. இவ்வாறாக வாணிப மூலதனமும் வட்டி மூலதனமும் அடிமை உடைமைச் சமுதாயத்தின் முரண்பாடுகளை அதிகப்படுத்தின.

### அடிமையுடைமை அமைப்பின் சிதைவும் வீழ்ச்சியும்

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் அதிக நுட்பமான உழைப்புக் கருவிகளின் தோற்றமும் அதிகத் தேர்ச்சி பெற்ற தொழிலாளிகளின் அவசியத்தை உண்டாக்கின. ஆனால் அடிமைகள் அவர்களுடைய வேலையின் விளைவுகளில் அக்கறை கொள்ளவில்லை. அவர்களில் பெரும்பகுதியினர் தேவையான பயிற்சி பெறவில்லை. உழைப்பின் உற்பத்தித் திறன் குறைந்தது. அதே போல், அடிமை உழைப்பைப் பயன்படுத்திய பட்டறைகளிலும் பெரும்பண்ணைகளிலும் இலாபங்கள்

குறைந்தன. அடிமைச் சொந்தக்காரர்கள் தங்களுடைய பண்ணைகளைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து விவசாயிகளுக்கும் அடிமைகளுக்கும் ஒத்திக்குக் கொடுத்தார்கள். அவர்கள் காலோனி (குத்தகைக்காரர்கள்) என அழைக்கப்பட்டனர். இத்தகைய குத்தகைக்காரர் தங்களுடைய உற்பத்திப் பொருளின் பெரும் பங்கை நிலச்சொந்தக்காரருக்குக் கொடுத்தார். சிறுகச் சிறுக வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் சிறு பண்ணைகள் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தலாயின.

அடிமையுடைமை அமைப்பின் வீழ்ச்சிக்கு மிக முக்கியமானது வர்க்கப் போராட்டமே. அடிமைச் சமுதாயத்தில் அடிமைகளின் எழுச்சிகள் சொந்தக்காரர்களால் சுரண்டப்படுவதற்கான எதிர்ப்புக்கு, தெளிவான வெளிப்பாடாக இருந்தன. அடிமைகளுக்கு சமுதாயத்தை மாற்றி அமைப்பதைப் பற்றிய தெளிவான கருத்தோ குறிக்கோளோ இல்லை. ஆனால் அவர்களுடைய போராட்டம் அடிமை உடைமைச் சமுதாயத்தின் அடித்தளங்களை ஆட்டியது. இது சமுதாய வளர்ச்சியில் இதைவிட உயர்ந்த கட்டத்திற்கு மாறுவதற்கான நிலைமைகளை உருவாக்கிற்று.

## 3. நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை

### நிலப்பிரபுத்துவத்தின் தோற்றம்

அடிமையுடைமை அமைப்பிலிருந்து நிலப்பிரபுத்துவத்திற்கு மாறும் நிலையில் காலோனடஸ் முறை என்பது ஒரு இடைப்பட்ட அமைப்பாகும். அது நிலப்பிரபுத்துவத்தின் ஒரு மூலக் கூறுகும். அது அடிமை உடைமை அமைப்பின் உள்ளே இருந்தது. அது அடிமை உடைமைப் பொருளாதாரத்தை ஒரு உற்பத்தி முறை என்ற நிலையிலிருந்து வெளியேற்றி அவ்விடத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அநேக நாடுகளில் அடிமையுடைமை ஒரு அமைப்பாக வளர்ச்சியுறவில்லை. ருஷ்யாவிலும் மத்திய, கிழக்கு ஐரோப்பிய ஸ்லாவ் நாடுகளிலும் தந்தைவழி அடிமையுடைமையின் சில கூறுகள் மட்டுமே இருந்தன. அவை மூலச்சிறப்புள்ள அடிமை

யுடைமை அமைப்பாக ஒருபொழுதும் வளர்ச்சியடையவில்லை. இந்நாடுகளில் புராதன-கூட்டுவாழ் குழு அமைப்பு நேரடியாக நிலப்பிரபுத்துவத்தால் மாற்றீடு செய்யப்பட்டது. நிலப்பிரபுத்துவம் ஐரோப்பாவில் மட்டுமல்லாமல், கிழக்கிலும் நிலவியிருந்தது. சீனு, இந்தியா, பாபிலோனியா போன்ற நாடுகளில் அதன் தோற்றம் அடிமையுடைமை அமைப்பினுல் தயாராக்கப்பட்டது. ஆசிய நாடோடி மக்களினங்கள் அடிமையுடைமை அமைப்பிற்குச் செல்லாமல் நிலப்பிரபுத்துவத்திற்குச் சென்றன. ஒவ்வொரு இடத்திலும் நிலப்பிரபுத்துவத்திற்கு மாறும் பொழுது நிலப்பிரபுத்துவ அதிபர்களின் வர்க்கம், அதாவது பெரும் நிலச்சொந்தக்காரர்களின் வர்க்கம் தோன்றியது. மறுபுறம் நிலப்பிரபுக்களைச் சார்ந்த சொந்த நிலமற்ற, சுரண்டப்படும் விவசாயிகளின் வர்க்கம் தோன்றியது. இவ்விவசாயிகள் நிலப்பிரபுக்களின் நிலத்தில் சிறு பண்ணைகளை நடத்தி வந்தனர்.

## உற்பத்திச் சக்திகள்

விவசாயம் நிலப்பிரபுத்துவத்தின் கீழ் முக்கியப் பொருளாதாரக் கிளையாகும். பயிர் செய்வதில் மூவகை முறை சிறுகச் சிறுக புகுத்தப்பட்டது. காய்கறி, பழவகை உற்பத்தி மேலும் வளர்ச்சியுற்றது. கால்நடை வளர்த்தலில் முக்கியமாக குதிரை வளர்த்தலில் மாற்றங்கள் ஏற்பட்டன. நிலப்பிரபுத்துவத்தின் கீழ் பிழைப்புக்கான பொருளாதாரம் பிரதானமாய் இருந்தது. பிரபு, அவருடைய குடும்பம் ஆகியோரின் தேவைகளும் விவசாயிகளின் தேவைகளும் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களால் பூர்த்தி செய்யப்பட்டன. விவசாயிகள் விவசாயத்துடன் நூற்பதிலும் நெய்வதிலும் பிற குடிசைத் தொழில்களிலும் ஈடுபட்டனர்.

அடிமையுடைமை அமைப்பு சிதைவுற்ற காலத்தில் கைத்தொழில்கள் அழிவுற்றன. ஆனுல் நிலப்பிரபுத்துவத்தில் கைத்தொழில்கள் புத்துயிர் பெற்றன. அவை சிறுகச் சிறுக ஒரு தனிப் பொருளாதாரக் கிளையாக அவற்றின் சொந்த சிறப்பியல்புகளுடன் உருவாயின. கைத்தொழில் சங்கங்கள் உருவாகத் தொடங்கின. நகரங்கள் வளர்ந்தன.

விவசாயக் கருவிகளின் மேம்பாடு, உலோகச் செய்முறையின் மேம்பாடு ஆகியவை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு ஆற்றின. இருப்பினும் தொழில் நுணுக்கம் மெதுவாக மாற்றமடைந்தது. கைத்தொழிலும் விவசாயமும் மொத்தத்தில் உடலுழைப்பையே அடித்தளமாகக் கொண்டன.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, சமூக உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சி ஆகியவற்றின் விளைவால் பரிவர்த்தனைப் பண்டங்களின் உற்பத்தி வளர்ச்சியடைந்தது. உள்நாட்டு மார்க்கெட்டுகள் உருவாயின. வெளிநாட்டு வாணிபம் அதிகரித்தது.

## உற்பத்தி உறவுகள்

உற்பத்திக்குத் தேவையான முக்கிய சாதனமும் நிபந்தனையுமான நிலம் நிலப்பிரபுக்களுக்குச் சொந்தம் என்ற அடிப்படையில் நிலப்பிரபுத்துவ சமுதாயம் நிறுவப்பட்டது. ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவப் படிநிலை அமைப்பு பிரதானமாய் இருந்தது. ஒரு பிரபு நிலவுரிமையை மற்றொருவருக்கு என்றென்றைக்கும், வேலை செய்தல் என்ற அடிப்படையில் அளித்தார். கீழ்த்திசை நாடுகளில் குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளின் காரணத்தால் நிலமும் நீரும் அரசு நிலவுடைமையாகப் பரவலாக இருந்தன. இருந்த பொழுதிலும் அங்கு கூட நிலமானது நிலப்பிரபுக்களால்தான் முழுக்க முழுக்க சொந்தமாக்கப்பட்டது. இருவகையான நிலப்பிரபுத்துவ உடைமையுரிமைகள் இருந்தன. நேரடி உற்பத்தியாளர்களான விவசாயிகளுக்கு நிலம் கிடையாது. இதில் விதிவிலக்கு மிகவும் அரிது. நிலப்பிரபுக்களால் விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டது. அதற்கு விவசாயி பல்வேறு கடமைகளை அவருக்குச் செய்ய வேண்டும். நிலப்பிரபுவின் நிலவுடைமை உரிமைதான் விவசாயிகளைச் சுரண்டுவதற்கான பொருளாதார அடித்தளமாக இருந்தது.

அதே நேரத்தில் கருவிகள், கால்நடை, வீடுகள் போன்ற உற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரர்களாக விவசாயிகளும் கைவினைஞர்களும் இருந்தனர். இந்த உடைமையானது உற்பத்தியாளர்களின் சொந்த உழைப்பின் அடிப்படையில்

அமைந்தது. இத்தகைய நிலைமைகளின் கீழ், பொருளாதார சார்பு தவிர விவசாயிகளைச் சுரண்ட பொருளாதாரமற்ற நிர்பந்தமும் தேவையாயிருந்தது. விவசாயிகள் தனிப்பட்ட முறையில் நிலப்பிரபுக்களைச் சார்ந்திருப்பதில் இது வெளிப் பட்டது. இதன் அளவும் வடிவங்களும் நாட்டிற்கு நாடு வேறு பட்டன. அதே போல் நிலப்பிரபுத்துவ வளர்ச்சியின் ஒரு கட்டத்திலிருந்து மறுகட்டம் வேறுபட்டது.

விவசாயிகளாலும் கைவினைஞர்களாலும் உருவாக்கப் பட்ட உபரி உற்பத்திப் பொருள் நில வாடகையாக நிலப் பிரபுக்களால் இனமாக உடைமையாக்கப்பட்டது. சார்பு நிலையிலுள்ள சுரண்டப்பட்ட விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட உபரி பொருளின் உற்பத்தியிலும் அது நில வாடகையாக நிலப்பிரபுக்களால் உடைமையாக்கப்படுவதி லும் நிலப்பிரபுத்துவத்தின் முக்கியமான பொருளாதார விதி அடங்கியுள்ளது.

ஆரம்பத்தில் நில வாடகை, உழைப்பு வாடகையாக உருக்கொண்டிருந்தது. தேவையான பொருளை உற்பத்தி செய்வதற்கு விவசாயி அவனுடைய பண்ணையில் நேரத்தின் ஒரு பகுதியை வேலை செய்து, மீதி நேரத்தை அவனுடைய எஜமானரின் பண்ணையில், அவருக்காக உபரிப் பொருளை உற்பத்தி செய்ய உழைத்தான்.

நில வாடகையின் மிக வளர்ச்சியடைந்த வடிவம் பொருள்வகை வாடகை ஆகும். இந்த விஷயத்தில் விவசாயி தன் னுடைய சொந்தப் பண்ணையில் மட்டுமே வேலை செய்தான். நிலத்தைப் பயன்படுத்தியதற்கு நிலப்பிரபுக்கு உற்பத்திப் பொருளின் பெரும் பகுதியைக் கொடுத்தான். பொருள் வகை வாடகை அளிப்பது என்பது உற்பத்திச் சக்திகளின் உயர் தர மான நிலையை ஒத்திருந்தது. அது விவசாயிகளுக்கு அவர் களுடைய வேலையை மிகத் திறம்படச் செய்யத் தூண்டு கோலாக இருந்தது. அது விவசாயிகளிடையே வளர்ந்து வரும் பொருளாதாரச் சமத்துவமின்மையின் ஒரு அடையாள மாகவும் இருந்தது. நிலப்பிரபுத்துவ வாடகையின் கடைசி வடிவம் பண வாடகையாகும். உபரிப் பொருள் பண உரு வத்தில் நிலப்பிரபுக்குக் கொடுக்கப்பட்டது. அதாவது உபரிப் பொருள் முதலில் விற்கப்பட்டு அதைப் பணமாக மாற்று

வது என்று பொருள். நிலப்பிரபுத்துவத்தின் சிதைவு காலத்தில் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் முன்னேற்றமான நிலையை அடைந்த பொழுது பண வாடகை தோன்றியது.

அடிமையுடைமை போலல்லாது நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளின் கீழ் உற்பத்தியாளர் ஓரளவு தன்னுடைய வேலையின் விளைவில் ஆர்வமுடையவராக இருந்தார். அது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை முன்னேற்றியது.

## நிலப்பிரபுத்துவத்தின் சிதைவு

விவசாயம், கைத்தொழில்கள், பரிவர்த்தனை ஆகியவற்றின் முன்னேற்றத்தால் நிலப்பிரபுத்துவ உறவுகள் உற்பத்திச் சக்திகள் மேற்கொண்டு வளர்வதற்குத் தடையாக ஆகின. சமூக உழைப்புப் பிரிவினையையும் பரிவர்த்தனையையும் நிலப்பிரபுத்துவத் தனிமை தடை செய்தது. உழைக்கும் மக்களின் தனிப்பட்ட முறையில் நிலப்பிரபுக்களைச் சார்ந்திருக்கும் தன்மையானது உழைப்புச் சக்தியின் சுதந்திரமான இடப்பெயர்ச்சியைத் தடுத்தது. நிலப்பிரபுத்துவ அமைப்பிலுள்ள முரண்பாடுகளை அதிகப்படுத்துவதற்கு இதெல்லாம் புறவயமாகச் செயல்பட்டது. அவையாவன: ஒரு புறம் விவசாயிகளும் கைவினைஞர்களும் மறுபுறம் நிலப்பிரபுக்கள், இவர்களுக்கிடையே உள்ள முரண்பாடு, நகரத்துக்கும் நாட்டுப்புறத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடு, மூளை உழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையேயுள்ள முரண்பாடு, நிலப்பிரபுத்துவப் பிழைப்பிற்கான பொருளாதாரத்திற்கும் வளர்ந்து வரும் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்கும் இடையேயுள்ள முரண்பாடு. இத்தகைய முரண்பாடுகளால்தான் நிலப்பிரபுத்துவம் சிதைந்து வீழ்ந்து முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றியது.

## நிலப்பிரபுத்துவத்தின் மீதமிச்சங்கள்

நிலப்பிரபுத்துவத்தின் மீதமிச்சங்கள் அநேக இடங்களில், குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளில் உள்ளன. பெருத்த நிலங்களையுடைய பண்ணைச் சொந்தக்காரர்களும் நிலத்தைப்

பயன்படுத்தியதற்காக நிலச் சொந்தக்காரருக்குப் பயிரில் பெரும்பகுதியை வாடகையாகக் கொடுக்கும் பாட்டக்காரர்களும் (பயிர்பங்கு தருவோர்) இருப்பது இம்மாதிரியான நிலப்பிரபுத்துவத்தின் ஒரு மீதமிச்சமாகும். நிலக் குத்தகைக்காகவும் கருவிகளைப் பயன்படுத்துவதற்காகவும் நிலப்பிரபுவின் நிலத்தில் வேலை செய்வது மற்றொரு மீதமிச்சமாகும். தொழில்மயமான சில நாடுகளில் பெருத்த நிலப்பிரபுச் சொத்துரிமை உண்டு. அது அரை நிலப்பிரபுத்துவ வாடகையைக் காக்கப் பணிபுரிகிறது. எல்லா நிலப்பிரபுத்துவ மீதமிச்சங்களும் பிற்போக்குப் பங்கைத்தான் ஆற்றுகின்றன. அவை உற்பத்திச் சக்திகளின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும். விவசாயிகளை அதிகபட்ச சுரண்டலுக்கு ஆளாக்கி அவர்களை வறுமையில் ஆழமாக அழுத்தும்.

அத்தியாயம் 3

# முதலாளித்துவ பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி முறை

## 1. முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிக்குரிய முக்கிய பண்புக் கூறுகளும் கட்டங்களும்

### முதலாளித்துவத்தின் தோற்றம்

முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தின் உட்பாகத்திலிருந்து தோன்றியது. நகரம் நாட்டுப்புறம் ஆகிய இரண்டிலும் சிறு உற்பத்தியாளர்களிடம் வேறுபாட்டு போக்கு நிகழ்ந்தது. இது மிகச் சிறிய எண்ணிக்கையுள்ள பணக்காரர்கள் தோன்றவும், கூலிக்கு உழைக்கும்படி கடமைப்படுத்தப்பட்ட எண்ணற்ற விவசாயிகள் கைவினைஞர்கள் ஆகியோரின் அழிவிற்கும் இட்டுச் சென்றது. பெருந்தொகையாகப் பணத்தைச் சேர்த்த வியாபாரிகளும் பெரிய சொத்துக்காரர்களாயினர். முதலாளித்துவத்தின் முன்தேவைகளின் தோற்றத்தை துரிதப்படுத்துவதில் கட்டாய நிர்பந்தம் முக்கிய பங்காற்றிற்று.

உழைப்பில் பற்றுள்ளவர்களும் சிக்கனமானவர்களும் முதலாளிகளானார்கள், வேலை செய்ய விருப்பமில்லாதவர்கள் பாட்டாளிகளாயினர் என்று பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் கூறுகிறார்கள். எது எவ்வாறாயினும் எதார்த்தத்தில் உற்பத்திச் சாதனங்கள் பறிக்கப்பட்டவர்கள், எதிர்கால முதலாளிகளான பணக்காரர்கள் என இரு எதிர்துருவங்களாக சமுதாயம் பிரிவது மிருகத்தனமான கட்டாய நிர்பந்தத்தால் நடைபெற்றது. இது ''மனிதகுல வரலாற்றில் ரத்தத்தாலும் நெருப்பாலும்'' எழுதப்பட்டது''*.

* Karl Marx, *Capital*, Vol. 1, Moscow, 1975, p. 669.

நேரடி உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்திச் சாதனங்கள் வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்பட்டு ஒரு சிலர் கைகளில் இவை குவிவதை ஆரம்பகால மூலதனத் திரட்சி என அழைக்கப்படுகிறது. ஆரம்பகாலத் திரட்சி என ஏன் அழைக்கப் படுகிறது எனில் அது முன்னேறியவுடன் உண்மையான முதலாளித்துவ திரட்சிக்கு முன்தேவைகள் உருவாக்கப் பட்டன, அதாவது கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவது என்று பொருள்.

இங்கிலாந்தில் 15ம் நூற்றுண்டு முதல் 18ம் நூற்றுண்டு வரை விவசாயப் பண்ணைகள் வலுக்கட்டாயமாகப் பறிக்கப் பட்டன. இது ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாகும். நிலப்பிரபுக்கள் விவசாயிகளை அவர்களுடைய நிலங்களிலிருந்து விரட்டிவிட்டு அந்நிலங்களை ஆடுமேய்க்கும் நிலங்களாகப் பயன்படுத்தினர். விவசாயிகளே பாட்டாளிகளாயினர். அதே நேரத்தில் நிலப்பிரபுக்களிடத்திலும் வியாபாரிகளிடத்திலும் பணக்கார கைவினைஞர்களிடத்திலும் பெருந் தொகைப் பணம் குவிந்தது. காலனி நாட்டு மக்களிடமிருந்து அடித்த கொள்ளை, அடிமை வாணிபம் போன்றவை செல்வத் திரட்சிக்கான அடுத்த மூலாதாரமாகும். நிலப் பிரபுத்துவம் இறுதியாக பூர்ஷ்வா புரட்சிகளால் கவிழ்க்கப் பட்டது. அவற்றில் விவசாயிகளும் கைவினைஞர்களும் முக்கியமான புரட்சி சக்தியாக இருந்தனர்.

## உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி.
## உற்பத்தி உறவுகள்

தனியார் உடைமை நிலைமைகளில் முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்தி சமுதாயமயமாக்கப்படல் நடைபெறுகிறது. முதல் முதலாளித்துவத் தொழில் நிலயம் எளிய முதலாளித்துவக் கூட்டுறவு என்ற உருவத்தில் இருந்தது. இதில் உற்பத்திச் சாதனங்கள் முதலாளிக்குச் சொந்தமானவை. அவர் அவற்றை தானே கண்காணித்து உற்பத்திப் பொருள்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். உற்பத்திப் பொருள்களின் பெரும் பகுதியை அவர் தனது உரிமையாக்கிக் கொண்டார்.

இந்தக் கூட்டுறவு உடல் உழைப்பின் அடிப்படையில் அமைந்தது. இருந்த போதிலும் இந்தக் கூட்டுறவு உழைப்பின் உற்பத்தித் திறனை முன்னேறச் செய்தது; கூட்டு உழைப்பின் உற்பத்திச் சக்தியின் தோற்றத்திற்கு வகை செய்தது; தொழிலை விருத்தியடையச் செய்தது. அது தொழிலாளிகளிடையே போட்டியையும் ஏற்படுத்தியது.

எளிய கூட்டுறவு பட்டறைத் தொழில் முறையால் அகற்றப்பட்டது. அது எளிய கூட்டுறவைப் போல்அல்லாமல் பட்டறை உழைப்புப் பிரிவினையைக் கொண்டது. ஒரே வகை பரிவர்த்தனைப் பண்டத்தைக் கூட்டாக உற்பத்தி செய்வதற்காக வெவ்வேறு வகை தொழில்களைச் சார்ந்த கைவினைஞர்கள் ஒன்று சேர்ந்தது மூலமாகவோ, ஒரே வகை தொழிலின் கட்டமைப்புக்குள் உழைப்புப் பிரிவினையைப் புகுத்தியது மூலமாகவோ அது தோன்றியது. உழைப்பு பிரிவினையின் காரணமாக கைவினைஞர்கள் ஒவ்வொருவரும் உற்பத்தி போக்கின் ஒரு பகுதியை இயக்குகிறவர்களாக மாறினர். ஒரு புறத்தில் இது உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரித்தது. மறுபுறத்தில் இந்த உழைப்பாளிகளால் அவர்களுடைய கைத்தொழிலை மீண்டும் அவர்களுடைய செலவில் இப்பொழுது ஆரம்பிக்க முடியவில்லை. இந்நிலை அவர்களை முதலாளிகளைச் சார்ந்து இருக்கும்படி செய்தது.

பட்டறை முறை உழைப்புக் கருவிகளை மேம்பாடடையச் செய்தது. அது இயந்திர உற்பத்திக்கு வழி வகுத்தது.

18ம் நூற்றூண்டின் இறுதியிலும் 19ம் நூற்றூண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகள் பெருவீத இயந்திர உற்பத்திக்கு மாறத் தொடங்கின. தொழிற் புரட்சி என்ற நிகழ்ச்சிப்போக்கின் பொழுது கைவினைஞர்களின் கருவிகள் இயந்திரங்களாக மாற்றப்பட்டன. இவ்வாருக, முதலாளித்துவத்தின் பொருளாயத-தொழில் நுணுக்க அடித்தளம் கட்டப்பட்டது.

முதலாளித்துவம் என்பது ஒரு சமூக அமைப்பு. அதன் கீழ் எல்லா உழைப்புச் சாதனங்களும் முதலாளிகளுக்கே சொந்தம். அதே நேரத்தில் தொழிலாளிகளுக்கு ஒன்றுமே கிடையாது. அவர்கள் அவர்களுடைய உழைப்புச் சக்தியை, உயிர் வாழ்வதற்காகக் கட்டாயமாக விற்க வேண்டியிருக்

கிறது. அடிமையுடைமை அமைப்பு, நிலப்பிரபுத்துவம் போலன்றி முதலாளித்துவ சமுதாயத்தில் சுரண்டல் மறைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையேயுள்ள உறவானது சமமான பண்ட சொந்தக்காரர்களிடையேயுள்ள உறவைப் போலிருக்கும் என எண்ணப்படும். ஆனால் முதலாளித்துவ சுரண்டலின் இரகசியம் மார்க்சால் வெளிப்படுத்தப்பட்டது.

## முதலாளித்துவ வளர்ச்சியின் கட்டங்கள்

முதலாளித்துவ வளர்ச்சியில் இரு கட்டங்கள் உள்ளன. முதல் கட்டத்தில் சுதந்திரமான போட்டி ஆதிக்கம் செலுத்துகிறது. முக்கியமாக உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தம். இரண்டாவது கட்டம் 20வது நூற்றாண்டு திருப்பத்தில் தொடங்கியது. அதை ஏகபோக முதலாளித்துவம் அல்லது ஏகாதிபத்தியம் என்போம். இந்தக் கட்டத்தில் பொருளாதாரம் அரசியல் ஆகியவற்றில் ஆதிக்கப் பங்கு வகிப்பது பெருமுதலாளிகளின் சங்கங்களான ஏகபோகங்களாகும். பங்கு முறைச் சொத்து மற்ற முதலாளித்துவ சொத்துக்களைவிட ஆதிக்கம் செலுத்துவதாகிறது. பொருளாதாரத்தில் பூர்ஷ்வா அரசின் தலையீடு அதிகரிக்கிறது. அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பு உருவாகிறது. முதலாளித்துவம் பொது நெருக்கடிக்குள்ளாகும் போது ஏகாதிபத்தியம் ஒரு முடிவிற்கு வருகிறது. அதாவது அதனுடைய சிதைவின் சகாப்தத்திற்கு வருகிறது. இந்தக் காலமானது மாபெரும் அக்டோபர் சோஷலிச புரட்சியால் முன்னறிவிக்கப்பட்டது.

முதலாளித்துவ உற்பத்தி முறையானது மார்க்சால் அவருடைய மூலதனம் என்ற நூலில் பகுத்தாராயப்பட்டது. அவர் விரித்துரைத்த கருத்துக்கள் லெனினால் மேலும் அவருடைய நூலான ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என்ற நூலில் செழுமைப்படுத்தப்பட்டன.

மார்க்சின் முதலாளித்துவம் பற்றிய பகுத்தாய்வு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியிலிருந்து தொடங்குகிறது.

## 2. பரிவர்த்தனை பண்டப் பொருளாதாரத்தின் விதங்கள்

### பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் முக்கிய பண்புக் கூறுகள்

புராதன-கூட்டுவாழ் குழு அமைப்பின் அழிவில் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி தோன்றியது. அது முதலாளித்துவத்திற்கு முந்திய எல்லா அமைப்புகளிலும் இருந்தது. ஆனால் அந்தக் காலகட்டத்தில் பிழைப்பிற்கான பொருளாதாரம் ஆதிக்கம் செலுத்தியது.

பண்டப் பொருளாதாரத்தில், தனியான உற்பத்தியாளர்களால் பரிவர்த்தனைக்காகவே பொருள்கள் செய்யப்படுகின்றன. இந்த மாதிரியான பொருளாதாரம் சமூக உழைப்புப் பிரிவினையின் அடித்தளத்தில் அமைந்தது. இவ்வகை பொருளாதாரத்தில் ஒவ்வொரு உற்பத்தியாளரும் ஏதாவது ஒரு வகை உற்பத்திப் பொருளைச் செய்கிறார். உற்பத்திச் சாதனங்களும் உழைப்பால் உருவான பொருள்களும் தனியார் உடைமையாக இருப்பதால் உற்பத்தியாளர்கள் தனிமைப் படுத்தப்படுகிறார்கள். இதன் விளைவாக மார்க்கெட் பரிவர்த்தனை தேவையாகிறது. பண்டங்களின் பரிவர்த்தனை, தனிப்பட்ட உற்பத்தியாளர்களை இணைக்கும் பொருளாதார உறவின் ஒரே வடிவமாகும்.

### பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் விதங்கள்

சோஷலிச சமுதாயத்திற்கு முந்திய சமுதாயங்களில் சாதாரண பண்ட உற்பத்தி முறை, முதலாளித்துவப் பண்ட உற்பத்தி முறை என இருவகைகள் இருக்கின்றன. சாதாரண பண்ட உற்பத்தி முறையில் சிறு உற்பத்தியாளர்கள் உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாகப் பெற்றிருக்கின்றனர். அதே நேரத்தில் அவர்களே உழைப்பாளிகளுமாவார்கள். இந்தப் பொருளாதாரத்தில் சுரண்டல் இல்லை.

தனியுடைமைச் சொந்தக்காரர் என்ற முறையில் சிறு உற்பத்தியாளர்கள் பூர்ஷ்வா பக்கம் ஈர்க்கப்படுகின்றனர். உழைப்பாளி என்ற முறையில் தொழிலாளி வர்க்கத்தை அவர் ஆதரிக்கிறார். பூர்ஷ்வாவிற்கு எதிரான போராட்டத்தை ஆதரிக்கிறார். இதுதான் தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையேயான கூட்டணியின் பொருளாதார அடித்தளமாகும். முதலாளித்துவ பண்ட உற்பத்தி கூலி உழைப்பைச் சுரண்டி முதலாளிகளால் நடத்தப்படுகிறது. இங்கே உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து பிரிக்கப்பட்டன. இத்தகைய உற்பத்தியின் நோக்கம் இலாபம் சம்பாதிப்பதுதான். இருந்த போதிலும் சாதாரண பண்ட பொருளாதாரமும் முதலாளித்துவ பொருளாதாரமும், உற்பத்திச் சாதனங்களின் மீது தனியுடைமையை அடிப்படையாகக் கொண்டதால் அவை இரண்டும் ஒரே விதமானவை என்பது தெளிவாகவே தெரிகிறது. இந்த விஷயம் சாதாரண பண்டப் பொருளாதாரத்தை முதலாளித்துவப் பொருளாதாரமாக மாற்றுவதைச் சாத்தியமாக்கியது.

சாதாரண பண்ட உற்பத்தி வரலாற்று ரீதியாக முதலாளித்துவத்தின் ஆரம்பமாக இருந்தது. முதலாளித்துவத்தின் கீழ் பண்ட உற்பத்தி சர்வவியாபகமுடையதாகிறது. பரிவர்த்தனைக்காகவே உற்பத்தி செய்யப்பட்டதால் எல்லா உற்பத்திப் பொருள்களும் பரிவர்த்தனை பண்டங்களாகின்றன. உழைப்புச் சக்தியும் கூட ஒரு பண்டமாகிறது. முதலாளித்துவ சமுதாயத்தின் செல்வம் பெருத்த பரிவர்த்தனைப் பண்டங்களைக் கொண்டுள்ளது. தனிப்பட்ட ஒவ்வொரு பண்டமும் இந்தச் செல்வத்தின் ஆரம்ப உருவமாகும். கருவில், பண்டம் இந்தச் சமுதாயத்தின் எல்லா குணாம்சங்களையும் முரண்பாடுகளையும் கொண்டுள்ளது. இக்காரணத்தாலேயே மார்க்ஸ் அவருடைய ஆராய்ச்சியைப் பரிவர்த்தனைப் பண்டம் பற்றிய பகுத்தாய்விலிருந்து ஆரம்பித்தார்.

# 3. பரிவர்த்தனை பண்டமும் அதில் அடங்கியுள்ள உழைப்பும்

## பரிவர்த்தனைப் பண்டத்தின் குணங்கள்

பரிவர்த்தனைப் பண்டம் என்பது உழைப்பால் உற்பத்தியானது. மனிதனுடைய தேவையைப் பூர்த்திச் செய்யக்கூடியது; பரிவர்த்தனைக்காகச் செய்யப்பட்டது.

மனிதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தன்மைக்கு பரிவர்த்தனைப் பண்டத்தின் உபயோக மதிப்பு என்று பெயர். இத்தகைய தேவைகளின் தன்மை முக்கியமல்ல. நுகர்வுப் பொருள்கள் தேவைகளை நேரடியாகப் பூர்த்தி செய்கின்றன. உற்பத்திச் சாதனங்கள் தேவைகளை மறைமுகமாகப் பூர்த்தி செய்கின்றன. உபயோக மதிப்பு பொருள்களின் இயல்பான தன்மையைப் பொறுத்துள்ளது. இருந்தபோதும் இத்தன்மைகளின் பயன்பாடு வரலாற்று முன்னேற்றத்தின் ஒரு விளைவாகும். எந்த வகையான சமுதாயத்திலும் உபயோக மதிப்புகள் உண்டு. ஆனால் பரிவர்த்தனைப் பண்டத்தின் உபயோக மதிப்பு வரலாற்றுப் பூர்வமான ஒரு வகையினமாகும். பரிவர்த்தனைப் பண்டப் பொருளாதாரத்தில் உற்பத்தியாளர் தனக்காக உபயோக மதிப்பை உற்பத்தி செய்வதில்லை. பிறருக்காக உற்பத்தி செய்கிறார். ஏனெனில் பண்டம் விற்பனைக்காகச் செய்யப்படுவதாகும். அதனால் நுகர்வோரை அடைய வேண்டுமென்பதற்காக பண்டம் விற்கப்பட வேண்டும். ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தில், உபயோக மதிப்பு பரிவர்த்தனை மதிப்பை வெளிப்படுத்துகிறது பரிவர்த்தனை மதிப்பு பண்டத்தின் இரண்டாவது குணமாகும். பரிவர்த்தனை மதிப்பு மற்றப் பண்டங்களுக்காகக் குறிப்பிட்ட அளவில் பரிவர்த்தனை செய்யப்படக் கூடிய ஒரு பண்டத்தின் தன்மையாகும். பண்டங்களைப் பரிவர்த்தனை செய்யும் விகிதங்களில் பரிவர்த்தனை மதிப்பு வெளிப்படுகிறது.

முழுக்க மாறுபட்ட பல்வேறு பரிவர்த்தனைப் பண்டங்களை எப்படி ஒப்பிட முடியும்? மதிப்பு அடிப்படையில் என்பதுதான் விடை. அது, ஒவ்வொரு பரிவர்த்தனைப் பண்டத்தை உற்பத்தி செய்யச் செலவானதும் அப்பண்டத்திற்குள் அடங்கியுள்ளதுமான சமூக உழைப்பால் அளவிடப்படுகிறது.

மதிப்பு என்பது பரிவர்த்தனைப் பண்டத்தின் உள்ளார்ந்த தன்மை. அது பரிவர்த்தனை மதிப்பில் வெளிப்படுத்தப்படுகிறது.

மதிப்பு என்பது வரலாற்றுப் பூர்வமான ஒரு வகையினம். பரிவர்த்தனை பண்ட உற்பத்தியில் மட்டுமே அது இருக்கிறது. அது சமூக உற்பத்தியில் உற்பத்தியாளர்களிடையேயுள்ள உறவுகளை வெளிப்படுத்துகிறது.

மதிப்பு, உபயோக மதிப்பு ஆகிய இரண்டும் பிரிக்க முடியாத அளவு இணைக்கப்பட்டுள்ளன. ஏனெனில் ஒன்று மற்றது இல்லாமல் இருக்க முடியாது. இதைப் போலவே பரிவர்த்தனைப் பண்டத்தின் உபயோக மதிப்பிற்குக் கண்டிப்பாய் மதிப்பு இருக்க வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு பண்டமும் விற்பனைக்காகவே செய்யப்படுகிறது. இது ஒரு வேற்றுமையில் ஒற்றுமையாகும். ஏனெனில் உபயோக மதிப்புகள் என்ற முறையில் பண்டங்கள் மாறுபட்டவை, அவற்றை ஒப்பிட முடியாது. மதிப்புகள் என்ற முறையில் அவை சமமானவை, ஒப்பிடக்கூடியவை. உற்பத்தியாளருக்கு பண்டம் உபயோக மதிப்பைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் நுகர்வோருக்கு அப்பண்டத்தின் முக்கியத்துவம் அதனுடைய உபயோக மதிப்பில் அடங்கியுள்ளது.

## பரிவர்த்தனைப் பண்டத்தில் அடங்கியுள்ள உழைப்பின் இரட்டைக் குணம்சம்

ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தின் குணங்கள் அது உற்பத்தி செய்யப்பட்ட உழைப்பின் இரட்டை குணம்சத்தால் தீர்மானிக்கப்படுகின்றன. ஒவ்வொரு உற்பத்தியாளரும் குறிப்பிட்ட ஒரு வகை பொருளை உற்பத்தி செய்யும் வேலையில் ஈடுபடுகிறார். உதாரணமாக அவர் துணி, காலணிகள், மரச்சாமான்கள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை செய்யலாம். ஒவ்வொரு குறிப்பிட்ட விதமான உற்பத்தி நடவடிக்கையும் ஸ்தூலமான உழைப்பாகும். பல்வேறு விதமான ஸ்தூலமான உழைப்பு, அவற்றின் நோக்கம், உழைப்பிலடங்கிய நடவடிக்கைகள், உழைப்புப் பொருள்கள், கருவிகள், உழைப்பின் விளைவுகள் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடு

கின்றன. பரிவர்த்தனைப் பண்டத்தின் உபயோக மதிப்பை ஸ்தூலமான உழைப்பு உருவாக்குகிறது. இக்காரியத்திற்காக அது இயற்கையிலுள்ள பொருள்களைக் பயன்படுத்திக் கொள்ளுகிறது. வில்லியம் பெட்டி என்ற ஆங்கிலேய பொருளாதாரவாதி குறிப்பிட்டதைப் போல, செல்வத்தின் தந்தை உழைப்பு, தாய் நிலம்.

ஸ்தூலமான உழைப்பு வகைகளில் வேற்றுமைகள் இருந்த போதிலும் அவைகளிடையே பொதுவான ஒன்று உள்ளது. தசை, நரம்பு ஆகியவற்றின் ஆற்றலை, அதாவது உடலியல் என்ற கருத்தில் மனித உழைப்புச் சக்தியை ஈடுபடுத்துவதில் ஒற்றுமையுள்ளது. இது பரிவர்த்தனைப் பண்டங்களை ஒப்பிட சாத்தியமாக்குகிறது.

செலவழிக்கப்படக்கூடிய உழைப்பு வகையைப் பொருட்படுத்தாமல், பொதுவாக மனித உழைப்புச் சக்தியின் செலவு சூட்சும உழைப்பு எனப்படும். இந்த அடிப்படையில் எல்லா பரிவர்த்தனைப் பண்டங்களையும் நன்ருக இறுகிப்போன சூட்சும உழைப்பின் மொத்தங்களாக ஒப்பிடலாம். அவை அளவில் மட்டும் வேறுபட்டிருக்கலாம். பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பு சூட்சும உழைப்பால் உருவாக்கப்படுகிறது. பல்வேறு விதமான உழைப்புகளை ஒப்பிட வேண்டிய பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் கீழ் மட்டுமே அது நிலவுகிறது. ஸ்தூலமான உழைப்பு எல்லா சமூக-பொருளாதார அமைப்புகளிலும் உள்ளது. ஸ்தூலமான உழைப்பு, சூட்சும உழைப்பு என்ற பிரிவினை பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியில் மட்டுமே உரிய குணும்சமாகும்.

சோஷலிச சமுதாயத்திற்கு முந்திய அமைப்புகளில் ஸ்தூலமான உழைப்பு தனியார் உழைப்பாக நேரடியாக வெளிப்படுகிறது. அது, உற்பத்திச் சாதனங்கள், உழைப்பாலான உற்பத்திப் பொருள்கள் ஆகியவை தனியாருக்குச் சொந்தம் என்ற அடித்தளத்தில் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு பண்ட உற்பத்தியாளரும் சுய தேவை பூர்த்தியான, ஒரு சுதந்திரமான நபராக, எதை, எப்படி அவர் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைப் போன்றவற்றை தானே தீர்மானிக்கிருர். எதார்த்தத்தில் எந்த தனியார் உழைப்பும் சமூக உழைப்பின் ஒரு துளியாகும். ஏனென்ருல் பரிவர்த்தனைப்

பண்ட உற்பத்தி சமூக உழைப்புப் பிரிவினையையே குறிப்பிடுகிறது. உண்மையில் மக்கள் ஒருவர் மற்றவருக்காக உழைக்கின்றனர். அவர்களுடைய தனிப்பட்ட உழைப்பு கூட சமூக உழைப்பாகிறது. ஆனால் சமூக உழைப்பு என்பது மறைந்திருக்கிறது. பரிவர்த்தனைப் பண்டங்களின் மதிப்பின் மூலம் பரிவர்த்தனை முறையில் மட்டுமே அது வெளிப்படுகிறது. சூட்சும உழைப்பு என்பது ஒரு குறிப்பிட்ட உருவமே, அதில் பரிவர்த்தனை பண்ட உற்பத்தியின் கீழ் உழைப்பின் சமூக குணும்சம் வெளிப்படுத்தப்படுகிறது என்று கூறப்படலாம்.

சாதாரண பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் முக்கிய முரண்பாடு, தனியார் உழைப்பிற்கும் சமூக உழைப்பிற்கும் இடையேயுள்ள முரண்பாடாகும். இந்த முரண்பாடு பல குறிப்பிட்ட வழிகளில் தோன்றும். உதாரணமாக, ஒரு உற்பத்தியாளரின் உற்பத்திப் பொருளுக்குத் தேவை இல்லாமல் போனால் அல்லது அப்பொருளின் விலை அதிகமானல், அவருடைய தனிப்பட்ட உழைப்பு சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படாமல் போகலாம். இதுதான் பண்டங்களின் அதீத உற்பத்தியின் மூலாதாரம். ஆங்காங்கு காணப்படும் விலைகளின் ஏற்றத்தாழ்விற்கும் மூலாதாரமாகும்.

### மதிப்பின் பரிமாணம்

பரிவர்த்தனைப் பண்டத்தில் அடங்கியுள்ள சூட்சும உழைப்பின் அளவினால் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது என்பதை நாம் பார்த்தோம். ஒரு பண்டத்தின் மதிப்பு அதனுடைய பயன்பாட்டைச் சார்ந்துள்ளது என்று நிரூபிக்க பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் முயற்சி செய்கின்றனர். ஆனால் பண்டங்கள் உபயோக மதிப்புகள் என்ற முறையில் பண்பு ரீதியாக மாறுபடுகின்றன. எனவே அளவு முறையில் ஒப்பிடப்பட முடியாது. பண்பு ரீதியாக வேறுபடுத்தப்பட முடியாத சூட்சும உழைப்பின் அளவின் மொத்தங்களாக மட்டுமே அவை ஒரு பொது அளவைப் பெற முடியும்.

உழைப்பின் அளவு வேலை நேரத்தால்தான் அளக்கப்படுகிறது. வெவ்வேறு தொழில் நிலையங்களில், ஒரே வகைப் பண்டத்தைத் தயாரிக்க வெவ்வேறு நேரம் செலவிடப்

படுகிறது. அது கருவியின் தன்மையும் தரமும், உழைப்பை ஒழுங்கமைக்கும் முறை, தொழிலாளிகளின் திறமை ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. ஒரு தனிப்பட்ட தொழில் நிலையத்தில் ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய எவ்வளவு நேரம் தேவையோ அந்த நேரம் தனிப்பட்ட வேலை நேரம் என அழைக்கப்படுகிறது. இந்த உற்பத்தி முறையில் செலவிடப்பட்ட உழைப்பு தனிப்பட்ட உழைப்பு என அழைக்கப்படுகிறது.

இருந்த போதிலும் தனி தொழில் நிலையத்தில் செலவிடப்பட்ட நேரத்தைக் கொண்டு மதிப்பைத் தீர்மானிக்க முடியாது. ஏனெனில் ஒரு பரிவர்த்தனைப் பண்டத்திற்கு ஒரே ஒரு விலை தான் இருக்க முடியும். மார்க்சிற்கு முந்தியவர்களுக்கு இந்த உண்மை தெளிவாக தெரிந்திருந்தது. அவசியமான உழைப்பால் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆங்கிலேய பொருளாதாரவாதி ஸ்மித் சிறந்த தொழில் நிலையங்களில் செலவிடப்படும் உழைப்பு அவசியமான உழைப்பு என்றார்; ரிக்கார்டோ மிக மோசமான தொழில் நிலையங்களிலே என்றார்.

மதிப்பு என்பது சமூக வகையினம் என்று கருதிய மார்க்ஸ், மதிப்பானது சமூக ரீதியில் அவசியமான உழைப்புச் செலவு அல்லது சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகிறது என்று கண்டுபிடித்தார். சமுதாயத்தில் பொதுப்பட நிலவும் உற்பத்தியின் நிலைமைகள், சமுதாயத்தின் சராசரி உழைப்பின் திறமை, தீவிரம் ஆகியவற்றைக் கொண்டு பண்டத்தை உற்பத்தி செய்ய அவசியமான நேரத்தை சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரம் எனக் குறிப்பிடுகின்றனர். குறிப்பிட்ட வகைப் பொருள்களைப் பெரும்பாலானதாய் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்களில் செலவிடப்படும் தனிப்பட்ட உழைப்பு நேரத்தை நோக்கி சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரம் அணுகுகிறது. இவை சிறந்ததான, சுமாரானதான, மிக மோசமானதான தொழில் நிலையங்களாக இருக்கலாம். அது எதை பெருமளவு உற்பத்தி செய்கிறதோ அதைப் பொறுத்துள்ளது.

உற்பத்திப் பொருளின் ஒரு அலகின் மதிப்பு மீது, சமூக

உழைப்பின் உற்பத்தித் திறன் செல்வாக்குச் செலுத்துகிறது. உழைப்பின் உற்பத்தித் திறன் ஒரு கால அலகில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் அளவைச் சார்ந்துள்ளது. உற்பத்தித் திறன் அதிகமானல், அதன் விளைவாக உழைப்பு நேரத்தின் ஒரு அலகில் உற்பத்திப் பொருள்களின் அளவு அதிகமானல், ஒவ்வொரு பொருளின் மதிப்பும் குறைவாக இருக்கும். ஒவ்வொரு தனிப்பட்ட பொருளும் சிறிதளவு சமூக ரீதியில் அவசியமான உழைப்பை உள்ளடக்கியுள்ள தால் இது ஏற்படுகிறது.

வேலைக்குத் தேவையான தேர்ச்சிகேற்ப வேலை வேறுபடு கிறது என்ற உண்மையைக் கருத்தில் கொண்டால் இரு வித மான உழைப்பை வேறுபடுத்திக் காட்டலாம். **சாதாரண உழைப்பு** என்பது மிகுந்த தேர்ச்சி தேவையில்லாத உழைப்பு. அதற்கென்று தனிப் பயிற்சி தேவை இல்லை. தனிப் பயிற்சி தேவைப்படும் உழைப்பிற்கு **சிக்கலான உழைப்பு** எனப் பெயர். சிக்கலான உழைப்பு அதிக மதிப்பை உருவாக்கு கிறது. அது பெருக்கப்படும் சாதாரண உழைப்பாகும். ஏனெனில் இவ்விஷயத்தில் பயிற்சி பெறுவோர் பயிற்சியளிப் போர் ஆகிய இருவருக்கும் பயிற்சியளிக்க ஆன உழைப்புச் செலவு கணக்கில் எடுக்கப்படுகிறது.

## மதிப்பின் உருவம்

பரிவர்த்தனைப் பண்டத்தில் உள்ளடங்கிய பண்புதான் மதிப்பாகும். ஆனால் நாம் ஏதேனும் ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தை எடுத்துக் கொண்டால் அதனுடைய உபயோக மதிப்பு மட்டுமே மதிப்பிடப்பட முடியும். ஒரு பரிவர்த் தனைப் பண்டத்தின் மதிப்பை மற்ற பண்டங்களுடன் ஒப் பிட்டுப் பார்த்தால்தான் மதிப்பிட முடியும். மதிப்பு என்பது பண்ட உற்பத்தியாளர்களிடையே நிலவும் உற்பத்தி உறவு களின் தன்மையைப் பிரதிபலிக்கும் ஒரு சமூக ரீதியான வகையினமாகும். அதன் விளைவாக மதிப்பு வெளிப்புற உரு வத்தை நிச்சயம் கொண்டதாக இருக்க வேண்டும். பலவித மான பரிவர்த்தனைப் பண்டங்களைப் பரிமாற்றம் செய்வதில்,

தன்னை அளவு விகிதாச்சாரத்தில் வெளிப்படுத்தும் பரிவர்த்தனை மதிப்பைப் பற்றி நாம் ஏற்கெனவே பேசிக் கொண்ட பொழுது இந்த வெளிப்புற உருவத்தைச் சந்தித்திருக்கிறோம்.

பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியும் பரிவர்த்தனையும் வரலாற்றுப் பூர்வமாக வளர்ந்த போக்கில் மதிப்பின் உருவம் வளர்ந்தது. பரிவர்த்தனை தற்செயலான நிகழ்ச்சியாக இருந்த பொழுது, தற்செயலான அல்லது ஆரம்ப நிலையிலுள்ள மதிப்பின் உருவம் தோன்றிற்று. இந்த உருவத்தில் ஒரு பண்டத்தின் மதிப்பு மற்றொரு பண்டத்தின் மதிப்பு மூலம் வெளிப்படுத்தப்படுகிறது (சார்பு மதிப்பு). உதாரணத்திற்கு பண்டம் Aன் மதிப்பு X=பரிவர்த்தனைப் பண்டம் Bன் y மதிப்பு. பண்டம் A அதனுடைய மதிப்பை வெளிப்படுத்துகிறது. அதே நேரத்தில் பண்டம் B மதிப்பை வெளிப்படுத்தும் ஒரு பொருளாக அதாவது சமானமாக செயல்படுகிறது. பண்டம் Bன் வகையில் வெளிப்படுத்தப்பட்ட பண்டம் Aன் சார்பு மதிப்பு, Aல் உள்ளடங்கியுள்ள மதிப்பிலிருந்து மாறுபடலாம் என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஏன் எனில் அது Aன் மதிப்பு சமான பொருளின் B மதிப்பின் மாறுபாடுகளால் பாதிக்கப்படலாம்.

சமான பண்டம் சிறப்பான பங்கொன்று ஆற்றுகிறது. அதனுடைய உபயோக மதிப்பு, மதிப்பை வெளிப்படுத்தும் உருவமாகிறது. அதை உற்பத்திக்காகச் செலவழிக்கப்பட்ட ஸ்தூலமான உழைப்பு, சூட்சும உழைப்பை வெளிப்படுத்தும் உருவமாகிறது. சமான பண்டத்தில் அடங்கியுள்ள தனிப்பட்ட உழைப்பு சமூக உழைப்பின் உருவமாகிறது.

இவ்வாறாகப் பண்டத்தின் உள் முரண்பாடு ஒரு வெளிப்புற உருவத்தைப் பெறுகிறது. பண்டம் A ஒரு உபயோக மதிப்பாகத் தோன்றுகிறது; அல்லது ஸ்தூலமான தனிப்பட்ட உழைப்பின் ஒரு பொருளாகத் தோன்றுகிறது. பண்டம் B ஒரு மதிப்பாக அல்லது சூட்சும சமூக உழைப்பின் ஒரு மொத்தமாகத் தோன்றுகிறது.

பரிவர்த்தனையின் வளர்ச்சி, மதிப்பின் விரிவடைந்த உருவமாகத் தோன்ற இட்டுச் சென்றது.

$$\text{பண்டம் Aன் X} \left\{ \begin{array}{l} = \text{பண்டம் Bன் y} \\ = \text{பண்டம் Cன் z} \\ = \text{பண்டம் Fன் q} \end{array} \right.$$

இந்த விஷயத்தில் பரிவர்த்தனை பல பொருள்களை உள்ளடக்கிக் கொள்ளுகிறது. அதில் சார்பு மதிப்பு என்ற உருவத்திலான ஒவ்வொரு பண்டமும் பல சமான பொருள்களைக் கொண்டதாகும். இதில் எந்த ஒரு பண்டத்தின் மதிப்பிற்கும் முடிவான வரையறை இல்லை. அது பரிவர்த்தனையைச் சிக்கலாக்குகிறது.

பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி விருத்தியடைய அடைய சில பண்டங்கள் பரிவர்த்தனைக்கான பிரதான பொருள்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டு: கால்நடை, மிருக உரோமங்கள், தானியங்கள், நகைகள் போன்றவை. மதிப்பின் விரிவடைந்த உருவம், அதனுடைய பொதுவான உருவத்தால் அகற்றப்பட்டது. அதனால் எல்லா பண்டங்களின் மதிப்பும் ஒரே ஒரு பொது சமானத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.

$$\left. \begin{array}{l} \text{பண்டம் Aன் x} \\ \text{பண்டம் Bன் z} \\ \text{பண்டம் Fன் q} \end{array} \right\} = \text{பண்டம் Bன் y}$$

இத்தியாதி.

பின்னால் பொது சமானத்தின் செயல்பாடு நிரந்தரமாக ஒரே ஒரு பண்டத்திற்கு அளிக்கப்பட்டது. அதாவது **பண மதிப்பு உருவம் தோன்றிற்று.** ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பை பணத்தில் கூறினால் அதுவே **விலையாகும்.**

## 4. பணம். அதன் சாராம்சமும் செயற்பாடுகளும்

### பணத்தின் சாராம்ச தன்மை

பணம் ஒரு தனி பரிவர்த்தனைப் பண்டம். அது சர்வ வியாபகமான சமானமாகப் பணிபுரிகிறது. அதன் தோற்றத்திலிருந்தே பணம் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாக உள்ளதை

நாம் அறிவோம். படிப்படியாக பணத்தின் பங்கை விலையுயர்ந்த உலோகங்கள் மேற்கொண்டன. அவை அந்தக் காரியத்திற்கு மிகவும் பொருத்தமாக இருந்தன. அவை ஒரே சீரான அமைப்பைக் கொண்டன; பிரிக்கப்படக் கூடியவை, எளிதில் எடுத்துச் செல்லக் கூடியவை, நீடித்து உழைப்பவை. எந்த ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தையும் போலவே பணம் செய்வதற்காகப் பயன்படும் பொருள்களுக்கும் மதிப்பு, உபயோக மதிப்பு என்பன உண்டு. அதனுடைய மதிப்பானது அந்த விலைமதிப்புள்ள பொருளைத் தோண்டி எடுத்து, வேலை செய்து பணமாக்குவதற்குச் செலவிடப்படும் சமூக ரீதியில் அவசியமான உழைப்பால் தீர்மானிக்கப்படுகிறது. உபயோக மதிப்பாக அப்பொருள்களை நகைகளைச் செய்யவும் இது போன்ற பிற பொருள்களைச் செய்யவும் அவைகளைப் பயன்படுத்த முடியும்.

ஆனால் பணம் ஒரு தனி பரிவர்த்தனைப் பண்டம். அதனுடைய தனிப் பண்பு சமான மதிப்பு வடிவத்திலிருந்துதான் தோன்றுகிறது. மதிப்பு மற்றும் சூட்சும சமூக உழைப்பின் நேரடி வெளிப்பாடாக பணம் செயல்புரிகிறது. மற்ற பரிவர்த்தனைப் பண்டங்களைப் போலன்றி பணத்திற்கு அதிகமான உபயோக மதிப்பு உண்டு. அது எத்தகையப் பொருளுக்காகவும் பரிவர்த்தனை செய்யக் கூடியதாகும். எனவே அது சர்வவியாபகமான உபயோக மதிப்பை அல்லது அதனுடைய சொந்தக்காரரின் ஒவ்வொரு தேவையையும் அது பூர்த்தி செய்யும் திறனைப் பெற்றிருக்கிறது.

வர்க்க சமுதாயத்தில் பணம் என்பது உழைக்கும் மக்களைச் சுரண்டும் ஒரு கருவியாகும். முதலாளித்துவ சமுதாயத்திற்கு முந்திய சமுதாயங்களில் பணம், வியாபாரிகள், கடும் வட்டி வாங்குவோர்கள், அடிமைச் சொந்தக்காரர்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோர்களால் அடிமைகள், விவசாயிகள், கைவினைஞர்கள் ஆகியோரின் உபரி உழைப்பைத் தனதுரிமையாக்கவும் சுரண்டலைத் தீவிரப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது. முதலாளித்துவத்தின் கீழ் பணம் மூலதனமாகிறது. அது கூலித் தொழிலாளர்களையும், மற்ற உழைப்பாளி பகுதியினரையும் சுரண்ட பயன்படுத்தபடுகிறது.

## பணத்தின் செயற்பாடுகள்

பணத்தின் செயற்பாடுகளால் அதனுடைய சாராம்சம் வெளிப்படுகிறது. மதிப்புகளின் அளவாக இருப்பதே பணத்தின் முதல் செயல்பாடு. பண்டங்கள் பணம் ஆகிய இரண்டும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. அவை சமூக சூட்சும உழைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் பண்டங்களை ஒப்பிட முடிகிறது. இந்தச் செயற்பாடு, இலட்சிய அல்லது கற்பனையான பணத்தால் நிறைவேற்றப்படுகிறது. விலைகளின் அளவுகோல் இருப்பதை இந்தச் செயல்பாட்டின் நடவடிக்கை குறிப்பிடுகிறது. அதாவது வரையறுத்து ஒப்புக் கொள்ளப்பட்ட உலோகத்தின் அளவு ஒரு நாட்டின் பண அலகாகும்.

ஒரு பண்டத்தின் விலை (1) அதனுடைய சொந்த மதிப்பு, (2) பணப் பொருளின் மதிப்பு, (3) பண்டத்திற்கான அளிப்பு—தேவைக்கு இடையிலான விகிதத்தைச் சார்ந்துள்ளது. அவ்விகிதம் விலைகள் மதிப்பிலிருந்து விலகிச் செல்லக் காரணமாகலாம். நீண்ட கால அளவை எடுத்துக் கொண்டு, பண்டத்தின் மதிப்பைச் சரியாக பிரதிபலிக்கும் சராசரி விலைகள் வெளிப்படுத்தப்படும்.

நவீன முதலாளித்துவத்தின் தனிமாதிரியான ஒரு பண்புக் கூறு ஏகபோக விலை. மதிப்பை விட மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ (ஏகபோகங்களால் வாங்கப்படும் பொருள்களுக்காக விலை மிகக் குறைக்கப்படும்) விலை நிர்ணயிக்கப்படும். அதே நிலையில் நீண்ட காலத்திற்கு வைத்துக் கொள்ளப்படும். இருந்த போதிலும் சமூக ரீதியில் அவசியமான உழைப்பால் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது என்ற உண்மை தெளிவாகிறது. போட்டியின் தாக்கத்தினுலும் மற்ற காரணத்தாலும் ஏகபோக விலை மாற்றப்பட வேண்டியிருக்கும் பொழுது ''விலை புரட்சிகள்'' என்பதில் இது பிரதிபலிக்கப்படுகிறது. இருந்த போதிலும் ஏகபோகங்களுக்குச் சாதகமாக வருமானத்தின் மறுவினியோகத்தில் விலையின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பணத்தின் இரண்டாவது செயற்பாடு புழக்கத்தின் சாதனமாகும். பணத்திற்கு முன்பாக ஒரு பண்டம் மற்ருெரு

பண்டத்திற்காக மாற்றப்படும்—C—C. பணம் தோன்றிய பிறகு பரிவர்த்தனை இரு செயல்களைச் செய்கிறது. அதாவது C—M (விற்பனை), M—C (வாங்குதல்). இவ்விரு செயல்களுக்கும் இடையே இடைவெளி ஏற்படலாம் (உதாரணத்திற்கு, ஒரு பண்டத்தை விற்பவர் உடனடியாக வாங்குபவராக மாட்டார்). அது அதீத உற்பத்தி, அதாவது நெருக்கடியை உருவாக்கும்.

இச்செயற்பாடு கையிருப்புப் பணத்தினால்தான் நிறைவேற்றப்பட முடியும். ஆனால் அது உண்மையான பணமாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. புழக்கத்தில் பணம் ஒரு கையிலிருந்து மறு கைக்கு மாறுகிறது. இந்தச் செயல்பாட்டில் பணமானது மதிப்பின் குறியீடுகளால் மாற்றீடு செய்யப்பட முடியும். உலோக நாணயங்கள் தேய்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவு உலோகத்தின் அளவைவிடக் குறைவாக இருந்த போதிலும் அவை வெற்றிகரமாகச் செயல்படுவதைக் கவனித்த பொழுது இந்தக் கருத்து தோன்றுகிறது. பின்னால் பணப் புழக்கத்திற்குத் தங்கத்திற்குப் பதிலாக அரசாங்கங்கள் காகிதப் பணத்தைக் கொடுக்க ஆரம்பித்தன. காகிதப் பணம் மதிப்பின் ஓர் அளவையாக முடியாது. ஏன் எனில் அதற்கென்று சொந்த மதிப்பு இல்லை. அது தங்கத்தைக் குறியீடுகளால் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பொதுச் செல்வத்தின் உருவமாகப் பணம் இருப்பதால் அது செல்வத்தைச் சேகரிக்கும் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இச்செயற்பாட்டை உண்மையான பணத்தினால்தான் நிறைவேற்ற முடியும். பரிவர்த்தனைப் பண்டங்களின் ஒழுங்கான உற்பத்திக்குப் பணத்தைச் சேகரித்து வைப்பது தேவைபடுகிறது. ஏன் எனில் ஒவ்வொரு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளருக்கும் பண இருப்புத் தேவைப்படுகிறது. பரிவர்த்தனைப் பண்டம்—பணம் இவற்றின் உறவுகள் முன்னேற முன்னேற பணத்தின் ஆதிக்கம் அதிகரிக்கிறது. பணத்தைச் சேகரிக்க வேண்டும் என்ற ஆவலும் வளர்கிறது. இப்பொழுது முதலாளித்துவ நாடுகளில் பணப் புழக்கம் கட்டுப்பாட்டில் இல்லை. காகிதப் பணத்தின் மதிப்பும் குறைந்து கொண்டே போகிறது. முதலாளிகள் பேராவலுடன் தங்

கத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சேகரிக்கப்பட்ட பணம் வங்கிகளில் குவிக்கப்படுகிறது. அவ்வங்கிகள் பணத்தை கடன் வகைக்குக் கொடுத்து தாமே இலாபத்தைச் சம்பாதிக்கின்றன.

பணத்தின் மற்றொரு செயல்பாடு சம்பளம் கொடுப்பதற்கான சாதனமாகச் செயல்புரியும் நடவடிக்கைகளை இது குறிப்பிடுகிறது. சரக்குகளை கடனுக்கு விற்கும் பொழுது இது நடைபெறுகிறது. கடனுக்கு விற்பது என்பது வளர்ந்த முதலாளித்துவத்தின் குணாம்சமாகும். இச்செயற்பாட்டின் வளர்ச்சி, கடன் பணம் தோன்ற வழிவகுக்கிறது. சரக்குகள் கடனுக்கு விற்கப்பட ஆரம்பித்ததும் மாற்று உண்டியல்கள் தோன்றலாயின. உண்மையில் மாற்று உண்டியல்கள் வாணிகத்தில் பணமாகப் பயன்படுத்தப்பட்டன. பின்னால் வங்கிகளால் கழிவு எடுத்துக் கொள்ளப்படும் மாற்று உண்டியல்கள் வங்கி நோட்டுகளால் அகற்றப்பட்டன. காசோலைகள் (காசோலை என்பது அதில் கூறப்பட்டப்படி பணத்தைக் கொடுக்கும்படி வங்கிக்கு இடப்பட்ட உத்திரவு) மற்றொரு வகை கடன் பணமாகும்.

வரிகள், வாடகை போன்றவற்றிற்காகக் கொடுப்பதற்கான சாதனமாக அதனுடைய செயல்பாட்டைப் பணம் செய்கிறது.

சர்வதேசப் பொருளாதார உறவுகளின் வளர்ச்சியின் காரணமாக உலகப் பணம் என்ற செயற்பாடு தோன்றியுள்ளது. உலக மார்க்கெட்டில் பணம் அதனுடைய தேசிய சீருடையைக் களைந்து விடுகிறது என்றார் மார்க்ஸ். உலகப் பணத்தின் பங்கு தங்கத்தால் செயல்படுத்தப்படுகிறது. அது கொடுப்பதற்கும் வாங்குவதற்குமான சர்வதேசச் சாதனமாகப் பயன்படுகிறது. பொதுச் செல்வம் உலகப் பணத்திற்குள் அடக்கப்பட்டது. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்லும் உலகப் பண இயக்கம் பொதுச் செல்வத்தின் இயக்கமாகும்.

காகிதப் பணம்கூட இச்செயற்பாட்டை நிறைவேற்ற முடியும். ஆனால் அது தங்கமாக தடையின்றி மாற்றக் கூடியதாக இருக்க வேண்டும். இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து காகித டாலர் அத்தகைய காகிதப் பணமாக இருந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் தங்கத்திற்காக டாலரை மாற்றுவதை நிறுத்தியவுடன் டாலர் அதனுடைய சலுகைப் பெற்ற நிலையை இழந்தது.

## புழக்கத்திற்குத் தேவையான பணத்தின் அளவு

இந்த அளவு, முதல் முதலில் பரிவர்த்தனைப் பண்ட விலைகளின் மொத்த பரிமாணத்தால் தீர்மானிக்கப்படுகிறது. அது **பணப் புழக்கத்தின் வேக வீதத்தையும்** பொறுத்துள்ளது. ஏனெனில் ஒரே அலகு பணம் கைகள் மாறும் பொழுது பல்வேறு பரிவர்த்தனைப் பண்ட அலகுகளின் விற்பனைப் புரள்வில் ஈடுபடுகிறது. எனவே புழக்கத்திற்குத் தேவையான அளவு பணமானது பரிவர்த்தனைப் பண்டங்களின் மொத்த விலையை, அதே மதிப்புள்ள நாணயங்களின் புழக்க வேகத்தால் வகுப்பதற்குச் சமம். கடன் வாணிப நடவடிக்கைகளைக் கணக்கிலெடுக்க கீழ்க் கண்ட சூத்திரம் நமக்குக் கிடைக்கும்:

K = (பண்டங்களின் மொத்த விலைகள் — கடனுக்கு விற்கப்பட்ட சரக்குகளின் விலை மொத்தம் + மாற்று உண்டியல், பிறசெலுத்தினங்களின் மொத்தம் — ஒன்றுமற்றதால் மாற்றீடு செய்யப்படும் செலுத்தினங்களின் மொத்தம்) / பணப் புழக்கங்களின் சராசரி எண்ணிக்கை

தங்கம் புழக்கத்திலிருக்கும் பொழுது காகிதப் பணம் தடங்கலின்றி தங்கத்திற்காகப் பரிவர்த்தனைச் செய்யப்படுமானால் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவு தானாகவே அதற்கு தன்னை தகமைந்து கொள்ளுகிறது. உதாரணமாக, புழக்கம் குறைகிறது எனில் கொஞ்சம் தங்கம், பணப் புழக்கத்தின் இருப்பாகச் சேமித்து வைக்கப்படுகிறது.

வங்கிநோட்டுகள் தங்கத்திற்காகப் பரிமாற்றப்பட முடியாத பொழுது வெளியிடப்பட்ட காகிதப் பணத்தின் மொத்த தொகை, அந்த நேரத்தில் புழக்கத்திற்குத் தேவையான தங்கத்தின் அளவை பிரதிபலிக்கிறது. பரிவர்த்தனைப் பண்டப் புழக்கத்திற்குத் தேவையான தங்கப் பணத்தின்

அளவிற்கு ஒத்த அளவு காகிதப் பணம் வெளியிடப்பட்டால், தங்க நாணயங்களுக்குப் பதிலான காகிதப் பணம் தங்க நாணயங்களுக்குச் சம மதிப்பில் புழங்குகிறது. கூடுதலான காகிதப் பணம் வெளியிடப்பட்டால் அதன் மதிப்பு குறைகிறது. ஒவ்வொரு பண அலகும், தங்கத்தின் அளவிற்குச் சமமான மதிப்பை விட குறைவான மதிப்பைப் பிரதிபலிக்கிறது.

### பணவீக்கம்

**பணவீக்கம்** என்பது அதிக அளவு காகிதப் பண வெளியீடும் அதன் மதிப்புக் குறைவுமாகும். நவீன முதலாளித்துவத்தின் கீழ் பணவீக்கமானது முன்பு இல்லாத விகிதாச்சாரத்தை அடைந்துள்ளது. மேலும் அது தீராத நிகழ்ச்சியாகவும் மாறிவிட்டது. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஸ்திரமற்ற நிலே, பற்றுக்குறை வரவு செலவிற்குக் காரணமான ஊதாரித்தனமான ராணுவச் செலவு ஆகியவற்றை அடித்தளமாக அது கொண்டுள்ளது. பற்றுக்குறையைச் சரி செய்ய அரசாங்கங்கள் அதிகளவு காகிதப் பணத்தை வெளியிடுகின்றன. வங்கிநோட்டுகளுக்கும் காகிதப் பணத்திற்கும் எந்த வித வேறுபாடும் இல்லே. எந்த நாட்டிலும் தங்கத்திற்காக வங்கி நோட்டுகளே மாற்ற முடியாது. அதிகாரப் பூர்வமான தங்கத்தின் விலே அறிவிக்கப்படாத நிலேயில் காகிதப் பணமானது தங்கத்தின் மதிப்பை விட்டு மேலும் மேலும் அதிகத் தூரம் சென்று விடுகிறது. அதன் விளேவு பணவீக்கம் அதிகரித்துக் கொண்டே இருப்பதும் செலாவணி இன்னமும் ஆழமான குழப்பத்தில் மூழ்குவதுமாகும்.

பணவீக்கம் மிகத் தெளிவாக விலே ஏற்றத்தில் வெளிப்படுகிறது. இது உழைக்கும் மக்களுக்குப் பெரிய பளுவாகும். ஏனெனில் அவர்களுடைய உண்மையான வருமானம் குறைகிறது. அதன் விளேவாக உற்பத்திச் செலவு குறைகிறது. இலாபம் கூடுகிறது. இவ்வாருக தேசிய வருமானம் முதலாளிகளுக்குச் சாதகமாக மறுவினியோகம் செய்யப்படுவதற்கு பணவீக்கம் ஒரு வழியாகவுள்ளது. சிறு உற்பத்தியாளர்களேப் பணவீக்கம் கடுமையாகத் தாக்குகிறது. அவர்கள் செய் பொருள்களுக்கு அதிக விலேயைக் கொடுக்க வேண்டி

யுள்ளது. அதே நேரத்தில் அவர்களுடைய சொந்த உற்பத்திப் பொருள்களின் விற்பனையால் கிடைக்கக் கூடிய இலாபங்கள் முழுவதும் மொத்தமாக வாங்குவோர்களுக்குப் போய் சேருகிறது.

பணவீக்கம் தவிர, ஏகபோகங்கள் விலையை உயர்த்துவதும் கூட விலை ஏற்றத்திற்கான காரணமாகும்.

ஏகபோகங்கள் பணவீக்கத்தால் இலாபம் அடைந்த பொழுதும், செலாவணி-கடன் முறையிலும் முதலாளித்துவ புனர் உற்பத்தியிலும் ஒழுங்கு அமைப்பு இன்மையால் அவைகள் மதிப்பு இழக்க வேண்டியுள்ளது. இக்காரணத்திற்காக பூர்ஷ்வா அரசாங்கங்கள் செலாவணிகளை நிலையானதாக்க நடவடிக்கைகள் எடுக்கின்றன. அத்தகைய நடவடிக்கைகளாவன: நஷ்ட ஈடு கொடுக்காமல் மதிப்பு குறைக்கப்பட்ட காகிதப் பணத்தைச் செல்லாததாக்குவது, புதிய காகிதப் பணத்தை வெளியிடுவது; மறு மதிப்பீடு செய்வது அல்லது காகிதப் பணத்தின் மதிப்பைக் காக்க புழக்கத்திலிருந்து அதிகமாகவுள்ள பணத்தைத் திரும்பப் பெறுவது; மதிப்பைக் குறைப்பது அதாவது தேசிய பண அலகின் தங்கத்தின் அளவைக் குறைப்பது அல்லது அயல் நாட்டின் பணத்தின் மதிப்பை விட பரிவர்த்தனை வீதத்தைக் குறைப்பதாகும். பின்னால் சொல்லப்பட்ட முறைதான் வழக்கமானது. இம்முறை பிரிட்டன், பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் பிற முதலாளித்துவ நாடுகளில் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் பணவீக்கத்தின் காரணங்கள் தொடர்ந்து செயல்படும் பொழுது தங்கத்திற்காக பரிவர்த்தனை புதுப்பிக்கப்படாவிடில் பண மதிப்பைக் குறைப்பது செலாவணியை நிலையானதாக்காது.

## 5. மதிப்பு விதி

### மதிப்பு விதியின் சாரம். உற்பத்திச் சக்திகளை குருட்டுத்தனமாக ஒழுங்குப்படுத்தும் அதனுடைய பங்கு

பண்ட உற்பத்தியை ஆளுகின்ற ஒரு புறவயமான பொருளாதார விதியே மதிப்பு விதியாகும். இவ்விதியின்படி பண்டங்களின் மதிப்பில் சமூக உழைப்பு வெளிப்படுகிறது.

பண்டங்கள், அவற்றில் அடங்கியுள்ள சமூக ரீதியில் அவசியமான சூட்சும உழைப்பின் அளவிற்கு ஏற்ற விகிதத்தில் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

இருந்த போதிலும், பண்டங்கள் எப்பொழுதும் அவற்றின் மதிப்பிற்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் மிகச் சரியாக பரிவர்த்தனைச் செய்யப்படும் என்று பொருளல்ல. ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பு, பணம் என்ற வேடத்தில், அதனுடைய விலையாகத் தோன்றுகிறது. விலையானது மதிப்புடன் எப்பொழுதும் பொருந்தாது. தனியார் உடைமையின் அடித்தளத்தில் அமைக்கப்பட்ட பரிவர்த்தனைப் பண்டத்தின் உற்பத்தியின் கீழ் மதிப்பிற்கு ஏற்றவாறு விலைகள் ஏறி இறங்குகின்றன. உற்பத்தியாளர்களிடையேயுள்ள போட்டியும், அளிப்பிற்கும் தேவைக்கும் உள்ள விகிதத்தின் நிலையான மாற்றங்களுமே இதற்குக் காரணமாகும். இத்தகைய ஏற்ற இறக்கங்கள் மதிப்பு விதியை, பல்வேறு தொழிற் கிளைகளுக்கும் பல்வேறு விதமான உற்பத்தித் துறைகளுக்கும் இடைபட்ட விகிதாச்சாரங்களை ஒரு இயற்கையான ஒழுங்கு செய்யக்கூடியதாக ஆக்குகின்றன. அளிப்பு தேவைக்கு அதிகமானால் விலை வீழ்ச்சியடைகிறது. உற்பத்தியாளர்கள் உற்பத்தியைக் குறைக்க வேண்டியுள்ளது. தேவை அளிப்பைவிட அதிகமானால் விலை மதிப்பைவிட உயர்கிறது. இவ்வகைப் பண்டத்தின் உற்பத்தி விரிவடையச் செய்யப்படுகிறது.

விலைகளின் மாற்றத்திற்கு இன்னொரு காரணம், உழைப்பின் உற்பத்தி திறனின் வளர்ச்சியுடன் பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பு மாறுகிறது. உழைப்பையும் செல்வத்தையும் தொழிற் கிளைகளுக்கிடையே மறுவினியோகம் செய்ய இது காரணமாக இருக்கிறது.

### உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் மீது மதிப்பு விதியின் தாக்கம். உற்பத்தியாளர்களுக்கிடையிலான வேறுபாட்டுப் போக்கு

தங்களுடைய சரக்குகளை உற்பத்தி செய்வதில் சமூக ரீதியில் அவசியமானவற்றைவிட குறைவாகச் செலவு செய்

யும் உற்பத்தியாளர்கள் கூடுதலான இலாபத்தை பெறுகிறார்கள். ஏனெனில் விலைகள் சமூக ரீதியில் அவசியமான உழைப்பால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. மறுதலையாக சமூக ரீதியில் அவசியமானதைவிட அதிகமான உற்பத்திச் செலவை செய்கிறவர்கள் நஷ்டமடைந்து தொழிலை விட்டு விலகுகிறார்கள். ஆகவே உற்பத்தியாளர்களுக்கு, புதிய தொழில்நுட்ப சாதனங்களைப் புகுத்துவது, உற்பத்தி முறையை மேம்பாடடையச் செய்வது, இது போன்றவற்றைச் செய்ய வேண்டியது மிக முக்கியமாகிறது. இவ்வாறாக, தன்னியல்பாக செயல்படும் மதிப்பு விதி உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது. ஆனால் அது இவ்வாறு செய்வது ஒரு வரையறைக்குள்தான். ஏனெனில் புதிய இயந்திரம், முறைகள் ஆகியவை கூடிய வரையில் அதிக வருமானத்தை அனுபவிக்க உற்பத்தியாளர்களால் இரகசியமாக வைத்துக் கொள்ளப்படுகின்றன.

மதிப்பு விதியின் செயற்பாடு உற்பத்தியாளர்களுக்கிடையிலான வேறுபாட்டிற்கு காரணமாக இருக்கிறது. இது, மதிப்பு விதி செயல்படும் திசைகளில் முதல் இரு திசைகளின் ஒரு இயற்கையான விளைவாகும். சமூக ரீதியில் அவசியமானதை விட தனிப்பட்ட உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கும் போது உற்பத்தியாளர்கள், உற்பத்தியை மறு அமைப்பு செய்யாவிடில் அழிவார்கள். பரிவர்த்தனைப் பண்டத்தின் விலை அதனுடைய மதிப்பை விட குறைய ஆரம்பிக்கும் பொழுது முக்கியமாக இது நடைபெறுகிறது. அதே நேரத்தில் மதிப்பு விதியின் செயல்பாடு, வேலைக்கு சாதகமான நிலைமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் உற்பத்தியாளர்களுக்காக அதிக வருமானத்தை ஈட்டித் தருகிறது. நொடிந்து போன பண்ட உற்பத்தியாளர்கள் கூலித் தொழிலாளர்களாக மாறுகிறார்கள்; செல்வந்தர்களாக ஆகிறவர்கள் மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டுவோர்களாகிறார்கள். எனவே சாதாரண பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி முதலாளித்துவ உறவுகளை ஊட்டி வளர்க்கிறது.

## பரிவர்த்தனைப் பண்ட மாய்மாலம்

உற்பத்திச் சாதனங்களின் மீது தனியார் உடைமை என்ற அடிப்படையில் நிறுவப்பட்ட பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் கீழ், உற்பத்தியாளர்களிடையே உள்ள உறவுகள் உழைப்புப் பிரிவால் தீர்மானிக்கப்படுகின்றன. இவ்வுறவுகள் பரிவர்த்தனைப் பண்ட பரிவர்த்தனையில் தெளிவாக்கப்படுகின்றன. அதாவது பொருள்களுக்கு இடையேயுள்ள உறவுகளில். வேறு வார்த்தைகளில் சொன்னால் உற்பத்தியில் சமூக உறவுகள் பொருள்களுக்கிடையிலான உறவுகளாகின்றன. சோஷலிச சமுதாயத்திற்கு முந்திய எளிய பரிவர்த்தனைப் பண்ட நிலைகளிலும் முதலாளித்துவ பொருளாதாரத்தின் கீழும் இந்த உறவுகள் தன்னியல்பாக உருவாகின்றன. மனிதர்களை ஆதிக்கம் செய்கின்றன. பொருள்கள் மனிதர்கள் மீது செலுத்தும் ஆதிக்கம் என்ற வேடத்தில் இது தோன்றுகிறது. ஓர் உற்பத்தியாளரின் தலைவிதி, அவருடைய பரிவர்த்தனைப் பண்டத்தை இலாபத்திற்கு அல்லது நஷ்டத்திற்கு விற்பதைப் பொறுத்துள்ளது.

உற்பத்தி உறவுகள் பொருள்களில் மெய்யாக்கப்படுவதை மார்க்ஸ் பரிவர்த்தனைப் பண்ட மாய்மாலம் என்று விவரிக்கிறார். இந்தப் புறவய நிகழ்ச்சிப் போக்கிலிருந்து பொருள்கள் குறிப்பாகப் பணம், மனிதனை ஆதிக்கம் செலுத்தக் கூடிய சில இயற்கையை மீறிய சக்திகள் அல்லது தன்மைகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதாக எண்ணும் தவறான ஒரு கருத்திற்கு வர முடிகிறது. உண்மையில் மக்கள் அவர்களுடைய சொந்த உற்பத்தி உறவுகளினால்தான் ஆதிக்கம் செலுத்தப்படுகிறார்கள். இது பொருள்களில் தெளிவாக்கப்படுகிறது. தனியுடைமையை அழிப்பதுடன் பரிவர்த்தனைப் பண்ட மாய்மாலம் மறைகிறது.

அத்தியாயம் 4

# முதலாளித்துவச் சுரண்டல்

## 1. பணம் மூலதனமாக மாறுதல்

### மூலதனத்திற்குப் பொதுச் சூத்திரம்

சாதாரண பரிவர்த்தனைப் பண்ட புழக்கத்திற்கான சூத்திரம் C — M — C என்பதே. இங்கே விற்பனை என்பது வாங்குவதற்காகவே செயல்படுகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கில் பணம் முழுமையாக செலவழிக்கப்படுகின்றது. பரிவர்த்தனைப் பண்டப் புழக்கத்தின் இறுதி குறிக்கோள், உற்பத்தியாளர்கள் தங்களுடைய சொந்த பரிவர்த்தனைப் பண்டத்திற்கு பரிவர்த்தனையாக உபயோக மதிப்பைப் பெற வேண்டும் என்பதாகும்.

மூலதனத்தின் பொது சூத்திரம் $M — C — M^1$. இங்கே $M^1 = M + m$. அதாவது பொருள்களை விற்பதால் கிடைக்கும் பணம் அப்பொருள்களை வாங்குவதற்காகச் செலவழிக்கப்பட்ட பணத்தைவிட அதிகம் என்பது பொருள். இதில் மூலதனத்தின் பொதுச் சூத்திரத்திற்கும் சாதாரண பரிவர்த்தனைப் பண்டப் புழக்கத்திற்கானச் சூத்திரத்திற்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடு அடங்கியுள்ளது. மூலதன இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் உபயோக மதிப்பல்ல, ஆனால் மதிப்பில் கூடுதல் என்பதாம். இவ்விஷயத்தில் வாங்குவது விற்பனைக்காகவே செயல்படுகிறது. இந்தச் சூத்திரத்தில் பணம் முழுமையாகச் செலவழிக்கப்படுவதில்லை. ஆனால் முன்பணமாகக் கொடுக்கப்படுகிறது. மூலதனம் என்பது தானே அதிகரிக்கும் மதிப்பு அல்லது உபரி மதிப்பை உருவாக்கும் மதிப்பு என்று இந்தச்

சூத்திரத்திலிருந்து இது தெளிவாகும். மூலதனத்திற்கான பொதுச் சூத்திரம், புழக்க வட்டாரத்தில் மூலதனத்தின் இயக்கத்தை நேரடியாக பிரதிபலிக்கிறது. இருப்பினும் எல்லாவித மூலதனத்தையும் இது குறிப்பிடுகிறது. ஏனெனில் அது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் எல்லா கிளைகளிலும் மூலதன புழக்கத்தின் குறிக்கோள், உள்நோக்கம் ஆகியவற்றையும் கூட குறிப்பிடுகிறது.

## மூலதனத்திற்கான பொதுச் சூத்திரத்தின் முரண்பாடு

$M - C - M^1$ என்ற சூத்திரம் மதிப்பு விதியோடு முரண்படுகிறது. இவ்விதியின் படி பண்டங்கள், சமூக ரீதியாக தேவைப்படும் உழைப்பின் செலவிற்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. அதனுல் புழக்க வட்டாரத்தில் மதிப்பு உயர முடியாது. மதிப்பிலிருந்து விலை விலகுவதால் ஒரு தனிப்பட்ட முதலாளி உபரி மதிப்பைப் பெற முடியும் என்பது எண்ணிப்பார்க்கத் தக்கதே. அப்படியானுலும் சமமில்லாத பரிவர்த்தனை, சில முதலாளிகளுக்கு இலாபத்தையும் பிறருக்கு நஷ்டத்தையும் கொடுப்பதில் முடியக் கூடும். அதனுடைய சொந்தச் செலவிலேயே மொத்த முதலாளித்துவ வர்க்கமும் பணக்காரராகி விட முடியாது.

அதனுல் தான் உபரி மதிப்பு புழக்க வட்டாரத்தில் தோன்ற முடியாது. பரிவர்த்தனைப் பண்டச் சொந்தக்காரர் இந்த வட்டாரத்திற்குள் நுழையாமலும் அது தோன்ற முடியாது. அவர் தன்னுடைய பரிவர்த்தனைப் பண்டத்துடன், பிற பரிவர்த்தனைப் பண்டச் சொந்தக்காரர்களுடன் தொடர்பு கொள்ளாமல் தனியே இருப்பாராளுல் அவரால் அப்பண்டத்தைப் பணமாகவோ மூலதனமாகவோ மாற்ற முடியாது.

மூலதனத்திற்கான பொதுச் சூத்திரத்தின் இரு மூலக் கூறுகளைப் பார்ப்போம். அவற்றில் ஒன்று பணம். மதிப்பு உயரக்கூடிய ஒரு மூலாதாரமாக அது இருக்க முடியாது. அதனுல் பணம் வாங்கக் கூடிய பரிவர்த்தனைப் பண்டத்தில்

உபரி மதிப்பின் இரகசியம் அடங்கியுள்ளது. மேலும் அது மதிப்பைப் பொறுத்த விஷயமல்ல. உபயோக மதிப்பைப் பொறுத்த விஷயம். ஏனென்றால், முதல் செயலான M—Cல் சமமான பரிவர்த்தனை ஈடுபாடு கொள்ளுகிறது. எனவே பரிவர்த்தனைப் பண்ட நுகர்வில், அதனுடைய உபயோக மதிப்பிலிருந்து உபரி மதிப்பு தோன்றுகிறது. அதனுடைய நுகர்வால் மதிப்பையும் உபரி மதிப்பையும் உருவாக்கும் பரிவர்த்தனைப் பண்டம் மட்டுமே உழைப்புச் சக்தியாகும்.

## உழைப்புச் சக்தி ஒரு பரிவர்த்தனைப் பண்டமாக

மனிதனுடைய உடல், அறிவு ஆகியவற்றின் திறமையின் ஒட்டு மொத்தமே உழைப்புச் சக்தியாகும். அவை உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மெய்மையாக்கப்படுகின்றன. உழைப்பதற்கான திறமையாக உழைப்புச் சக்தி எல்லா சமுதாயங்களிலும் இருக்கும். ஆனால் அது சில குறிப்பிட்ட நிபந்தனைகளில்பரிவர்த்தனைப் பண்டமாகிறது. அந்த நிபந்தனைகளாவன: முதலாவதாக, உற்பத்தியாளரின் சொந்த சுதந்திரம். அது உழைப்புச் சக்தியின் சொந்தக்காரனை மார்க்கெட்டில் விற்பனையாளராக நுழைந்து பணத்தின் சொந்தக்காரரான வாங்குவோரிடம் வியாபாரம் செய்ய ஏதுவாக்குகிறது. இரண்டாவதாக, உழைப்புச் சக்தியின் சொந்தக்காரருக்கு உற்பத்திச் சாதனங்களோ, பிழைப்புச் சாதனங்களோ இருக்கக் கூடாது. அப்படி இல்லை எனில் அவருடைய உழைப்புச் சக்தியை அவர் விற்க வேண்டிய காரணமில்லை.

இந்நிபந்தனைகள் நிலப்பிரபுத்துவம் விழுந்து அழிந்து முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றும் பொழுது உருவெடுத்தன. உழைப்புச் சக்தி ஒரு பரிவர்த்தனைப் பண்டமாக மாறுவது முதலாளித்துவத்தின் குணும்சமாகும்.

மற்ற எல்லா பரிவர்த்தனைப் பண்டங்களையும் போல் உழைப்புச் சக்திக்கும் உபயோக மதிப்பும், மதிப்பும் உண்டு.

மனிதனிடமிருந்து வேலை செய்வதற்கான திறமையான உழைப்புச் சக்தியைப் பிரிக்க முடியாது. எனவே அதன் உற்பத்திக்கும், மறு உற்பத்திக்கும் மனிதனுடைய முக்கியமான

செயற்பாடுகள் ஒரு இயல்பான நிலையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பதனைக் குறிப்பிடுகிறது. எனவே உழைப்புச் சக்தியின் மதிப்பு (1)உழைப்புச் சக்தியின் சொந்தக்காரருக்கு வாழ்க்கையைத் தாக்குப்பிடிக்கத் தேவையான பிழைப்புச் சாதனங்கள், (2)சமுதாயம் வளர வளர வளர்ந்து வரும் அவனுடைய சமுதாய, கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழிகள், (3)உழைப்புச் சந்தைக்கு உழைப்பை அளிப்பதற்காக ஒரு சராசரி குடும்பத்தை ஆதரிக்கத் தேவையான சாதனங்கள், (4)தொழிலாளர்களுக்குப் பல்வேறு திறமைகளில் பயிற்சியளிக்கத் தேவையான வழிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினால் தீர்மானிக்கப்படுகிறது.

**இவ்வாறாக உழைப்புச் சக்தியின் மதிப்பு, அதனுடைய மறு உற்பத்திக்குத் தேவையான அடிப்படை அவசியங்களின் மதிப்பால் தீர்மானிக்கப்படுகிறது.**

சமுதாய வளர்ச்சியுடன் உழைப்புச் சக்தியின் மதிப்பு இயக்கத்தில் இருவித எதிர்ப் போக்குகள் தோன்றுகின்றன.

சமூக உழைப்பின் அதிக உற்பத்தித் திறன் உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறைக்கும் போக்கிலுள்ளது. உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்தால் வாழ்விற்குத் தேவையான சாதனங்களின் மதிப்பு குறைகிறது. அதைப் போலவே உழைப்புச் சக்தியின் மதிப்பும் குறைகிறது. பெண்களும் குழந்தைகளும் உற்பத்தியில் ஈடுபட்டால், குடும்பத்தலைவர் மட்டுமன்றி எல்லா உறுப்பினர்களும் அதனுடைய மறு உற்பத்தியில் பங்கு ஏற்பதால் உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைகிறது.

உழைப்பு மதிப்பை அதிகரிக்கச் செய்யும் போக்குடைய காரணிகளில் முதலாவதானது, தொழிலாளர்களின் திறமையை மேம்பாடடையச் செய்ய ஆகும் உயர்ந்து கொண்டே இருக்கும் செலவு, இன்றையத் தொழில் நுணுக்கப் புரட்சியின் காரணத்தால் தொழிலாளர்களின் தேவைகளில் ஏற்படும் வளர்ச்சி, மாற்றம் ஆகிய இரண்டுமாகும். உழைப்புச் சக்தியின் மதிப்பை உயர்த்த செயல்படும் அடுத்தக் காரணி உழைப்பை அதிகத் தீவிரப்படுத்துவதாகும். அப்பொழுது ஒரு தொழிலாளியின் முக்கிய செயல்பாடுகளைத் தாக்குப்பிடிக்க அதிகத் தேவையான அடிப்படை அவசியங்கள்

தேவைப்படுகின்றன. இரு போக்குகளும் ஒரே நேரத்தில் செயல்படுகின்றன. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாடுகளில் இதாவது அல்லது அதாவது ஆதிக்கம் செலுத்துகிறது.

உழைப்புச் சக்தியின் நுகர்வு உழைப்பின் நிகழ்ச்சிப் போக்காகும். அந்நிகழ்ச்சிப் போக்கில் பரிவர்த்தனைப் பண்டம் உற்பத்தி செய்யப்பட்டு மதிப்பும் உபரி மதிப்பும் உருவாக்கப்படுகின்றன. பரிவர்த்தனைப் பண்டத்தின் (உழைப்புச் சக்தியின்) குறிப்பிட்ட உபயோக மதிப்பானது உபரி மதிப்பை உருவாக்கும் அதனுடைய ஆற்றலில் அடங்கியுள்ளது. அதனால் தான் அதை முதலாளிகள் வாங்குகின்றனர்.

## 2. உபரி மதிப்பின் உற்பத்தி

### முதலாளித்துவத்தின் கீழ் உழைப்பின் நிகழ்ச்சிப் போக்கு. மதிப்பின் உயர்வு

எப்பொழுதும் இயற்கையின் மீது மனிதனின் சுறுசுறுப்பான செல்வாக்கை செலுத்தும் ஒரு முறையே உழைப்பு என்பதாகும். முதலாளியால் வாங்கப்பட்ட உழைப்புச் சக்தியின் நுகர்வை இந்த முறை குறிப்பிடுகிறது. உழைப்புச் சாதனங்களும் உழைப்புச் சக்தியும் முதலாளிக்குச் சொந்தம். இத்தகைய முதலாளியின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிலாளி வேலை செய்கிறான். தொழிலாளியால் உற்பத்தி செய்யப்பட்ட உழைப்பின் உற்பத்திப் பொருள் முதலாளியால் உரிமையாக்கப்படுவதற்கு இதுவே காரணம்.

உழைப்புச் சக்தியின் நுகர்வின் விளைவால் கூலித் தொழிலாளர்கள், அவர்களுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பை விட அதிக மதிப்புடைய புதிய மதிப்பை உருவாக்குகின்றனர். உதாரணமாக: உழைப்புச் சக்தியின் மதிப்பு பத்து டாலராகவும் தொழிலாளியால் உருவாக்கப்பட்ட மதிப்பு இருபது டாலர்கள் ஆகவும் இருப்பின் அந்த வித்தியாசம் அதாவது உபரி மதிப்பு பத்து டாலர்களாகும். எனவே

உபரி மதிப்பு என்பது கூலித் தொழிலாளர்களின் உழைப்பால் அவர்களுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பைத் தவிர அதிகமான உழைப்பால் உருவாக்கப்பட்ட மதிப்பாகும். அவ்வுபரி மதிப்பு முதலாளிகளால் இலவசமாக தனதுரிமையாக்கப்படுகிறது.

*ஒரு முதலாளி உற்பத்திச் சாதனங்களேயும், உழைப்புச் சக்தியையும் வாங்குகிருர். உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் உற்பத்திச் சாதனங்களேப் பயன்படுத்தும் பொழுது அவர் நாற்பது டாலர்கள் செலவழிப்பதாகக் கொள்ளுவோம். உழைப்புச் சக்தியின் மதிப்பு பத்து டாலர்களாகும். அப்போது முதலாளியின் செலவு ஐம்பது டாலர்களாகும். உற்பத்தி செய்யப்பட்ட பரிவர்த்தனேப் பண்டத்தின் மதிப்பு அறுபது டாலர்களாகும் (வித்தியாசம்—பத்து டாலர்கள்).* உழைப்புச் சக்தியின் சுரண்டலின் விளேவால் கிடைக்கும் வித்தியாசம் உபரி மதிப்பாகும்.

*உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில்: (1)பழைய மதிப்பு (இயந்திரங்கள், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் மதிப்பு) காப்பாற்றப்பட்டு, ஸ்தூலமான உழைப்பின் விளேவால் புதிய பரிவர்த்தனேப் பண்டத்திற்கு மாற்றப்படுகிறது; (2) புதிய மதிப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இப்புதிய மதிப்பு சூட்சும உழைப்பின் ஒரு குணமாகும். இவ்வாருக மூலதனத்தின் பொதுச் சூத்திரத்தின் முரண்பாடு தீர்மானிக்கப்படுகிறது. அது வருமாறு: உபரி மதிப்பு என்பது புழக்க வட்டாரத்தில் உருவாக்கப்படவில்லே. ஆனுல் உற்பத்தியில், முதலாளி உழைப்புச் சக்தியை வாங்குகின்ற புழக்க சாதனத்தின் மூலம் அது உருவாக்கப்படுகிறது. முதலாளி உழைப்புச் சக்தியின் முழு மதிப்பையும் செலுத்தும் பட்சத்தில் மூலதனத்தின் பொதுச் சூத்திரம், மதிப்பின் விதியுடன் மோதாது, என்பதும் விளக்கப்பட்டிருக்கிறது.*

c+v+m *என்ற சூத்திரத்தால் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட பரிவர்த்தனேப் பண்டத்தின் மதிப்பை வெளிப்படுத்த முடியும்.* c *என்பது செலவு செய்யப்பட்ட உற்பத்தி சாதனங்களின் மதிப்பு,* v *என்பது உழைப்புச் சக்திக்குச் சமமான மதிப்பு,* m *என்பது உபரி மதிப்பு.*

## மூலதனம்: அதனுடைய சாரமும் கட்டமைப்பும்

பூர்ஷ்வா பொருளாதாரவாதிகளின் கூற்றுப்படி மூலதனம் என்பது ஒரு பொருள். அவர்கள் அது என்ன பொருள் என்பதை மட்டுமே விவாதிக்கின்றனர். அதாவது அது பணமா அல்லது உற்பத்திச் சாதனங்களா அல்லது பொதுவாக எல்லா பரிவர்த்தனைப் பண்டங்களா என்பதைப் பற்றி மட்டுமே விவாதிக்கின்றனர். எதார்த்தத்தில் பூர்ஷ்வா சமுதாயத்தில் முதலாளிகளுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் இடையேயுள்ள உற்பத்தி உறவுகளை மூலதனம் வெளிப்படுத்துகிறது. இத்தகைய உறவுகள் பொருள்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. அதனால் தான் பொருள்களுக்கு ஒரு சமூகப் பண்பு ஏற்படுகிறது.

மூலதனத்தை பொருளுடன் வகைப்படுத்தும் பொழுது—வழக்கமாக உற்பத்திச் சாதனங்களுடன்—பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் அதை ஒரு அழியாத வகையைச் சார்ந்ததாகக் கருதுகின்றனர். எதார்த்தத்தில் முதலாளித்துவத்தின் கீழ் தான் உற்பத்தி உறவுகள் மூலதனமாக மாறுகின்றன. மூலதனம் கூலி உழைப்பு இருத்தலை அவசியம் குறிப்பிடுகிறது. அவ்வாறே கூலி உழைப்பு மூலதனம் இருத்தலை குறிப்பிடுகிறது. அவை ஒரே உறவின் இரு பக்கங்களாகும்.

உற்பத்திச் சாதனங்களாக மாற்றப்படும் மூலதனத்தின் பகுதி, உற்பத்தி முறையில் அதனுடைய மதிப்பை மாற்றிக் கொள்ளாது. இக்காரணத்திற்காகவே இது **மாருத மூலதனம்** என அழைக்கப்படுகிறது. அது c என்ற எழுத்தால் குறிப்பிடப்படுகிறது. (இலத்தீன் சொல்லான constantes என்ற சொல்லின் முதல் எழுத்து).

உற்பத்திச் சக்தியாக மாறக்கூடிய மூலதனத்தின் அடுத்தப் பகுதி உற்பத்தி முறையில் அதனுடைய மதிப்பை மாற்றுகிறது. அது **மாறும் மூலதனம்** என அழைக்கப்படும். v என்ற எழுத்தால் (இலத்தீன் சொல்லான variables என்ற சொல்லிலிருந்து குறிப்பிடப்படுகிறது). உழைப்புச் சக்தி அதனுடைய மதிப்பிற்குச் சமமான மதிப்பை மீண்டும் உற்பத்தி செய்கிறது. மேலும் உபரி மதிப்பை உருவாக்குகிறது. அது அளவில் மாறக் கூடும். மூலதனத்தின்

இந்தப் பிரிவு மார்க்சால் கண்டுபிடிக்கப்பட்டது. உபரி மதிப்பு போடப்பட்ட மூலதனம் முழுவதாலும் உருவாக்கப் படவில்லை என்றும் ஆனால் உழைப்புச் சக்தியை வாங்கப் பயன்பட்ட மூலதனத்தின் பகுதியால் மட்டுமே உபரி மதிப்பு உருவாக்கப்படுகிறது என்றும் அது காட்டுகிறது. தொழி லாளிகளின் சம்பளம் கொடுக்கப்படாத உழைப்பு மட்டுமே உபரி மதிப்பை உருவாக்க முடியும் என்பது வெளிப்படை.

மாறும் மூலதனம் மாறாத மூலதனம் என்ற இந்த மூல தனத்தின் பிரிவு உற்பத்தி வட்டாரத்தில் செயல்படும் மூல தனத்தையே குறிக்கும். அதாவது உபரி மதிப்பை உருவாக் கும் மூலதனம் செயல்படும் இடத்தில் மட்டுமே.

உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம் கூட நிலை யான **மூலதனம் புழங்கும் மூலதனம்** எனப் பிரிக்கப்படுகிறது. உற்பத்தி செய்யும் மூலதனத்தின் சில கூறுகள் தங்களை முழுக்க உற்பத்தியில் ஈடுபடுத்திக் கொள்ளுகின்றன. ஆனால் அவை தேய்ந்து அழியும் பொழுது அவற்றின் மதிப்பை சிறுகச் சிறுக உற்பத்திப் பொருளுக்கு மாற்றுகின்றன. மூல தனத்தின் இந்தப் பகுதி **நிலையான மூலதனம்** என அழைக்கப் படுகிறது. ஆலை கட்டிடங்களைக் கட்டவும் இயந்திரங்களை, பிற சாதனங்களை நிறுவுவதற்கும் இத்தகைய மூலதனம் தான் போடப்படுகின்றது.

உற்பத்தி மூலதனத்தின் மதிப்பு உடனடியாகவும் முழு மையாகவும் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் போது, முடி வடைந்த உற்பத்திப் பொருளுக்கு மாற்றப்படக்கூடியதும், ஒவ்வொரு உற்பத்திச் சுழற்சியின் முடிவிலும் முதலாளியிடம் திரும்பக்கூடியதுமான உற்பத்தி செய்யும் மூலதனத்தின் பகுதி **புழங்கும் மூலதனம்** எனப்படும். புழங்கும் மூலதனத் தின் கூறுகளாவன: கச்சாப் பொருள்களும் துணைப் பொருள் களும் எரிபொருள்களும் ஆகும். உழைப்புச் சக்தியை வாங்கு வதற்காகச் செலவிடப்பட்ட மூலதனமும் புழங்கும் மூலதன மாகும். ஆனால் உழைப்புச் சக்தி தன்னுடைய மதிப்பை உற்பத்திப் பொருளுக்கு மாற்றிக் கொள்ளாது. ஆனால் அத னுடையச் சொந்த மதிப்பிற்குச் சமமான மதிப்பை மீண்டும் உற்பத்தி செய்யும். மாறும் மூலதனம், புழங்கும் முறையில், புழங்கும் மூலதனத்தின் மற்ற கூறுகளிலிருந்து மாறுபடாது.

நிலையான மூலதனம் புழங்கும் மூலதனம் என்ற பிரிவிற்குக் காரணமாயிருப்பது, தெளிவாக, மூலதனம் புழங்கும் பல்வேறுவிதமான வழிகளும், அதனுடைய பல்வேறு பகுதிகள் உற்பத்திப் பொருளுக்கு மாற்றப்படும் விதமும் ஆகும்.

உற்பத்தி மூலதனத்தின் நிலையான மூலதனம், புழங்கும் மூலதனம் என்ற பிரிவு அதனுடைய பிரிவான மாறாத மூலதனம் மாறும் மூலதனம் என்ற பிரிவை மறைக்கிறது.

உற்பத்தி மூலதனத்தைப் பிரிக்கும் இரு வழிகளுக்கிடையிலுள்ள உறவை கீழ்கண்டவாறு எளிமையாக்கலாம்:

உற்பத்தி செய்யும் மூலதனம்

| பிரிவினையின் கோட்பாடு<br>உபரி மதிப்பை உருவாக்குவதில் பங்கு | | பிரிவினையின் கோட்பாடு<br>மதிப்பு உற்பத்திப் பொருளுக்கு மாற்றப்படும் விதம் |
|---|---|---|
| மாறாத மூலதனம் | [ஆலைக் கட்டிடங்கள், இயந்திரங்கள், தளவாடங்கள் ஆகியவற்றின் மதிப்பு] | நிலையான மூலதனம் |
| | [கச்சாப் பொருள்கள், துணைப் பொருள்கள், எரிபொருள்கள் ஆகியவற்றின் மதிப்பு] | புழங்கும் மூலதனம் |
| மாறும் மூலதனம் | [உழைப்புச் சக்தியின் மதிப்பு] | |

இரு பிரிவினைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மூலதனத்தை மட்டும் குறிக்கின்றன. அங்கே தான் உபரி மதிப்பு உருவாக்கப்படுகிறது; உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு உற்பத்திப் பொருளுக்கு மாற்றப்படுகிறது. பரிவர்த்தனை பண்ட மூலதனம், பண மூலதனம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அவையே புழக்க வட்டாரத்திலுள்ள மூலதனமாகின்றன.

### உபரி மதிப்பின் மொத்தத் திரட்டும் விகிதாச்சாரமும்

முதலாளித்துவ அமைப்பின் கீழும் மற்ற சுரண்டக் கூடிய சமூக-பொருளாதார அமைப்புகளின் கீழும் ஒரு தொழில்

நிலையத்திலுள்ள தொழிலாளியின் உழைப்பு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உழைப்புச் சக்திக்குச் சமமான மதிப்பு உருவாக்கப்படும் நேரமான வேலை நாளின் முதல் பகுதி தேவையான உழைப்பு நேரம் என அழைக்கப்படும். அந்த நேரத்தில் செலவழிக்கப்பட்ட உழைப்பிற்கு தேவையான உழைப்பு எனப் பெயர்.

உபரி மதிப்பு உருவாக்கப்படும் வேலை நாளின் இரண்டாம் பகுதி **உபரி உழைப்பு** நேரம் என அழைக்கப்படும். அந்நேரத்தில் செலவு செய்யப்பட்ட உழைப்பிற்கு **உபரி உழைப்பு** எனப் பெயர்.

$\frac{\text{உபரி உழைப்பு}}{\text{தேவையான உழைப்பு}}$ என்ற விகிதம் முதலாளித்துவ சமுதாயம் போன்ற எந்தப் பகைவர்க்க சமுதாயத்திலும் உற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரர் உற்பத்தி செய்வோரைச் சுரண்டும் அளவை வெளிப்படுத்துகிறது. உபரி மதிப்பிற்கும் மாறும் மூலதனத்திற்கும் உள்ள விகிதம் முதலாளித்துவத்தின் கீழ் உள்ள சுரண்டலின் அளவைக் காட்டுகிறது:

$$m' = \frac{m}{v} \times 100$$

உபரி மதிப்பின் விகிதம் புதிதாக உருவாக்கப்பட்ட மதிப்பு தொழிலாளர்கள் முதலாளிகள் ஆகியோரிடையே எப்படி வினியோகிக்கப்படுகின்றது என்பதைக் காட்டுகிறது. தொழிலாளி தனக்காக ஒரு நாளின் எந்தப் பகுதியில் வேலை செய்கிறான், எந்தப் பகுதியில் முதலாளிக்காக வேலை செய்கிறான் என்று காட்டுகிறது.

முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் உபரி மதிப்பின் விகிதம் அதிகரிக்கிறது. அதன் விளைவாக தொழிலாளர்கள் சுரண்டப்படுவதும் அதிகரிக்கிறது. 20வது நூற்றாண்டு ஆரம்பத்தில் தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளில் அது 150 சதவீதத்தைத் தாண்டவில்லை. நவீன நிலைகளின் கீழ் இத்தகைய நாடுகளில் அது 250 சதவீதம் முதல் 350 சதவீதம் வரை ஏறி இறங்குகிறது.

உபரி மதிப்பின் வீதம் உபரி மதிப்பின் மொத்தத்தைக் காட்ட போதுமானதல்ல. **உபரி மதிப்பின் மொத்த அளவு**

முழுவதும் அதனுடைய மொத்தத்திரட்டு என்றழைக்கப்படும். திட்டமான ஒரு உழைப்புச் சக்தியின் மதிப்பு கொடுக்கப் படுகிறது, தனிப்பட்ட தொழிலாளியால் உற்பத்தி செய்யப் பட்ட உபரி மதிப்பின் மொத்தத் திரட்டு, உழைப்புச் சுரண்டலின் அளவைப் பொறுத்துள்ளது.

$m' = \frac{m}{v} \times 100$ என்ற சூத்திரத்திலிருந்து $m = v \times m'$ என்பதைப் பெறுகிறோம். அதாவது உபரி மதிப்பின் மொத்தத் திரட்டு, செலவிடப்பட்ட மாறும் மூலதனத்தின் அளவை உபரி மதிப்பின் விகித அளவால் பெருக்கி வருவதற்குச் சமம்.

முதலாளித்துவச் சுரண்டல் மறைக்கப்பட்டிருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது. அடிமையுடைமை அமைப்பிலும் நிலப்பிரபுத்துவ அமைப்பிலும் காணப்பட்ட பொருளாதார மற்ற நிர்பந்தம் முதலாளித்துவத்தின் கீழ் இல்லை. கூலித் தொழிலாளி சுதந்திரமானவன். ஆனால் அவனிடம் உற் பத்திச் சாதனங்கள் இல்லாததால் அவனுடைய உழைப்புச் சக்தியை விற்க நிர்பந்திக்கப்பட்டு அவனைச் சுரண்டுவதற்கு அவனே அனுமதிக்கிறான். முதலாளித்துவத்திலும் உழைப்பு என்பது கட்டாயம். ஆனால் அந்த நிர்பந்தம் பொருளாதார ரீதியானது. இந்த முக்கிய உண்மை தொழிலாளியின் தனிப் பட்ட சுதந்திரத்தால் மறைக்கப்படுகிறது. அவன் அவ னுடைய உழைப்புச் சக்தியைத் தானாகவே விற்க மனமுவந்து வருகிறான் என்று கருதப்படுகிறது.

முதலாளித்துவ சுரண்டலின் அடுத்த பண்பு, முதலாளி களின் உபரி மதிப்பிற்கான தணிக்க முடியாத பசியாகும். ஏனென்றால் முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்தியின் குறிக் கோள், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது அல்ல, பண உருவத்தில் செல்வத்தை அதிகரிப்பதே தான். பண உருவத்தில் செல்வத்தை எல்லையில்லாமல் சேகரிக்கலாம். எனவே தொழிலாளர்களின் சுரண்டலைத் தீவிரப்படுத்தும் மிக தந்திரமான முறைகள் தோன்றுகின்றன.

### தொழிலாளர்களின் சுரண்டலைத் தீவிரப்படுத்தும் முறைகள்

முதலாளிகள் அவர்களுடைய உபரி மதிப்பைப் பெறு வதற்கான வேட்டையில், உபரி நேரத்தை அதிகரிக்க

விரும்புகின்றனர். சார்பற்ற உபரி மதிப்பு, சார்புள்ள உபரி மதிப்பு என்ற இரு வகை மதிப்புகளின் உற்பத்தி மூலம் இதைச் செய்ய முடியும். வேலை நேரத்தை நீட்டி அதனால் அடையப் பெறும் உபரி மதிப்பிற்கு சார்பற்ற உபரி மதிப்பு என்று பெயர்.

சார்பற்ற உபரி மதிப்பின் உற்பத்தி அதாவது தேவையான அளவு வேலை நேரத்தைவிட அதிக அளவு வேலை நாளை நீட்டிப்பது, முதலாளித்துவ சுரண்டலின் பொதுவான அடித்தளம். முதலாளித்துவத்தின் ஆரம்ப கட்டங்களில் இந்த முறை ஆதிக்கம் செலுத்தியது. தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைக்காகப் போராடி ஸ்தாபனங்களை அமைக்க ஆரம்பித்ததும் பூர்ஷ்வா அரசாங்கங்கள் வேலை நேரத்தை வரையறுத்து சட்டங்கள் இயற்ற வேண்டிய கடமைக்குள்ளாயின. சார்பற்ற உபரி மதிப்பை மற்ற வழிகளில் கூட உற்பத்தி செய்ய முடியும். அவையாவன: வேலையைத் துரிதப்படுத்துதல், மிகை நேரம், குறைவான சம்பளத்தில் உள்ள தொழிலாளர்கள்.

சுரண்டலின் அளவை அதிகப்படுத்தும் இரண்டாவது வழி சார்புள்ள உபரி மதிப்பை உருவாக்குவதே. தேவையான உழைப்பு நேரத்தைக் குறைப்பதால் உபரி நேரம் அதற்குத் தக்க அதிகரிக்கிறது. அதனால் அதிக உபரி மதிப்பைப் பெற முடியும். தேவையான உழைப்பு நேரம், சமூக உழைப்பின் உற்பத்தித் திறனின் மட்டத்தைப் பொறுத்துள்ளது. சமூக உழைப்பு உற்பத்தித் திறன், நுகர்வு பொருள்கள் தொழில் துறைகளிலும் அவற்றிற்கான உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலும் அதிகரித்தால் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் மலிவாகும். இது உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறைக்கிறது. இயந்திர உற்பத்தியின் வளர்ச்சி காரணமாக அதிகமான சார்புள்ள உபரி மதிப்பு உருவாக்கப்படுகிறது.

சார்புள்ள உபரி மதிப்பை, உழைப்பை தீவிரப்படுத்துதல் கூட அதிகரிக்கிறது. பெரும்பான்மையான தொழிலாளர்கள் அதிகத் தீவிரத் தன்மையுடன் வேலை செய்ய ஆரம்பிக்கும் பொழுது சமூக ரீதியாக அவசியமான உழைப்பு நேரம் குறைகிறது.

## மிகை உபரி மதிப்பு

மிகை உபரி மதிப்பு தனிப்பட்ட முதலாளிகளால் உரிமையாக்கப்படுகிறது. புதிய இயந்திரங்கள், உற்பத்தி அமைப்பு முறைகள் ஆகியவற்றைப் பெற்றுள்ள ஆலைகளில் அது உருவாக்கப்படுகிறது. இத்தகைய ஆலைகளில் தனிப்பட்ட செலவுகள், சமூக ரீதியாகத் தேவையான செலவை விட குறைவு. மார்க்கெட் விலைகள், சமூக ரீதியாகத் தேவையான செலவுகளால் ஒழுங்குபடுத்தப்படுவதால், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கக் கூடிய ஆலைகளில் முதலாளிகள் சாதாரண உபரி மதிப்புடன் கூட **மிகை உபரி மதிப்பைப்** பெறுகின்றனர். வேலை நாளின் நேரத்தை அதிகரித்து இது பெறப்படவில்லை. ஆனால் தேவையான உழைப்பு நேரத்தைக் குறைத்துப் பெறப்படுவதால் மிகை உபரி மதிப்பு ஒரு வகையான சார்புள்ள உபரி மதிப்பாகும். அதனுடைய விசேஷமான தன்மை என்னவெனில் அதைச் சில குறிப்பிட்ட முதலாளிகளால் தான் பெற முடியும். மேலும் அந்த புதிய தொழில்நுணுக்கச் சாதனைகள் தொழில் துறை முழுவதும் பரவினால் அதைப் பெற முடியாது. ஆனால் சில ஆலைகளில் மறைந்ததும் மிகை உபரி மதிப்பு மற்ற ஆலைகளில் தோன்றுகிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் இது ஒரு நிலையானதும் ஒழுங்கானதுமாகும். மிகை உபரி மதிப்பைப் பெறுவதற்கான தேட்டம் முதலாளிகளை, புதிய இயந்திரங்களைப் புகுத்தி உற்பத்திச் சக்திகளை வளர்ச்சியடையச் செய்கிறது. அதே நேரத்தில் அவர்கள் அவர்களுடைய முன்னேற்றங்களை எவ்வளவு நாட்களுக்கு முடியுமோ அவ்வளவு நாட்களுக்கு இரகசியமாக வைத்துள்ளார்கள். இச்செயல் தொழில் நுணுக்க வளர்ச்சிக்கு ஒரு தடையாகச் செயல்படுகிறது.

எளிய கூட்டுறவு, சிறு தொழிற்சாலைகள், பெரும் ஆலைகள் என்பன முதலாளித்துவ தொழில் வளர்ச்சியின் மூன்று கட்டங்களாகும். ஒவ்வொன்றும் முறையே, உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சி, சார்புள்ள உபரி மதிப்பின் உற்பத்தியை அதிகப்படுத்துதல், தொழிலாளர்களைச் சுரண்டுவதைத் தீவிரப்படுத்துதல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

## முதலாளித்துவத்தின் பிரதான பொருளாதார முரண்பாடு

முதலாளித்துவம் முன்னேற முன்னேற சமூக உழைப்புப் பிரிவினை அதிகரிக்கிறது. தொழில் துறைகளின் எண்ணிக்கையும் விவசாயத் துறை கிளைகளின் எண்ணிக்கையும் பெருகுகின்றன. அதே நேரத்தில் இந்தத் துறைகளுக்கு இடையேயுள்ள பிணைப்புகள் நெருக்கம் அடைகின்றன. தனித்த சிறு தொழில்கள் முதலாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு முனைப் படுத்தப்பட்ட, பெரும் எண்ணிக்கையில் வேலைசெய்யும் தொழிலாளர்களைக் கொண்ட பெரும் ஆலைகளால் அகற்றப் படுகின்றன. அங்கேயும் உழைப்புப் பிரிவினை உள்ளது. ஒவ்வொரு பரிவர்த்தனைப் பண்டத்தின் உற்பத்தியிலும் நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு உற்பத்தி சமூக ரீதியாகிறது. அதே நேரத்தில் உற்பத்திச் சாதனங்களும் அதனுடைய விளைவுகளும் தனியார்களான முதலாளிகளுக்குச் சொந்தமாகின்றன. அம் முதலாளிகள் பணக்காரர்களாவதற்காகவே உற்பத்தி செய்கின்றனர்.

உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் அதனுடைய விளைவுகளைத் தனிப்பட்ட முதலாளிகள் தனதுரிமையாக்கிக் கொள்ளும் முறைக்கும் இடையேயுள்ள முரண்பாடே முதலாளித்துவத்தின் பிரதானமான பொருளாதார முரண்பாடாகும். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டில் அது வெளிப்படுகிறது. இந்த இரு வர்க்கங்களுக்கு இடையேயுள்ள நலன்களின் இணக்கப்படுத்த முடியாத எதிர்ப்பே முதலாளித்துவத்தின் முக்கிய வர்க்க முரண்பாடாகும்.

## முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதி

கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதை அதிகரிப்பதன் மூலம் முடிந்த அளவு அதிகபட்ச உபரி மதிப்பை உற்பத்தி செய்வதும் அந்த உபரி மதிப்பை முதலாளிகள் தனதுரிமையாக்குவதுமே முத

லாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாகும். முதலாளித்துவ உற்பத்தியின் குறிக்கோளை அது காட்டுகிறது. எவ்வளவு உபரி மதிப்பைச் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு சம்பாதிப்பதே அதன் குறிக்கோளாகும். தொழிலாளர்களைச் சுரண்டுவதை அதிகப்படுத்துவதின் மூலமே இதைச் சாதிக்க முடியும். முதலாளித்துவ சுரண்டலின் சாரத்தையும், முதலாளித்துவத்தின் அடிப்படை உற்பத்தி உறவுகளை அதாவது முதலாளிகளுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் இடையேயுள்ள உறவுகளை உபரி மதிப்பு விதி காட்டுகிறது. எனவே அது முதலாளித்துவ உற்பத்தி முறை எப்படி வளர்ச்சியடைகிறது என்பதை தீர்மானிக்கிறது. மூலதனத்தின் இருத்தலும் வளர்ச்சியும் உபரி மதிப்பை உருவாக்குவதில் அமைந்துள்ளது, உபரி மதிப்பு விதியின் செயல்பாட்டால் விரைவுபடுத்தப்பட்ட உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி முதலாளித்துவத்தின் முக்கிய முரண்பாட்டை அதிகரித்து வர்க்கப் போராட்டத்தை தீவிரப்படுத்துவதற்கு காரணமாயிருக்கிறது என்ற முக்கியமான உண்மையை இந்த விதி தெளிவுபடுத்துகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையின் இயக்க விதியே உபரி மதிப்பு விதியாகும். அது சோஷலிசப் புரட்சிக்கு இட்டுச் செல்லுகிறது.

உபரி மதிப்பு விதியின் தத்துவமே மார்க்சியப் பொருளாதாரப் போதனையின் மூல ஆதாரம் என்று லெனின் கூறினார். அது முதலாளித்துவ சுரண்டலின் ஆழமான வேர்களை அம்பலப்படுத்துகிறது. மேலும் முதலாளித்துவம் புரட்சிகரமாக தூக்கி எறியப்படுவது ஏன் தவிர்க்க முடியாதது என்பதையும் அது விஞ்ஞான ரீதியாக விளக்குகிறது.

## 3. கூலி

### கூலியின் உண்மையான சாராம்சம்

மேலெழுந்தவாரியாக பூர்ஷ்வா சமுதாயத்தில் கூலி உழைப்பிற்கான சம்பளமாகவும் உழைப்பு ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகவும் தோன்றுகிறது. எதார்த்தத்தில் உழைப்பு ஒரு பரிவர்த்தனை பண்டமல்ல. அதற்கு மதிப்பு

கிடையாது. ஏனெனில் உழைப்பிற்குள் உழைப்பு அடங்கி இருக்க முடியாது. ஒரு பரிவர்த்தனைப் பண்டம் அது விற்பனையாவதற்கு முன்பே இருக்கிறது; வாணிப நடவடிக்கை முடிவடையும் வரை உழைப்பு ஆரம்பமாகாது. உழைப்பு என்பது முதலாளியால் அதனுடைய முழு மதிப்பும் கொடுக்கப்பட்டு வாங்கப்பட்ட பரிவர்த்தனைப் பண்டமாக நாம் பாவித்தால் முதலாளிக்கு உபரி மதிப்பு ஒன்றும் கிடைக்காது. ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில் இது உண்மைக்கு முரணானது.

எதார்த்தத்தில், கூலி என்பது உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கு மாற்று உருவில் கொடுக்கப்பட்ட சம்பளம். பண உருவத்தில் வெளியிடப்பட்ட உழைப்புச் சக்தியின் மதிப்பு உழைப்புச் சக்தியின் விலையாகும். உழைப்புச் சக்தி வழக்கமாக அதனுடைய மதிப்பிற்குக் குறைவான விலையில் விற்கப்படுகிறது. வெளிப்படையாக, கூலி, உழைப்பின் விலையாகத் தோன்றுகிறது. எல்லா உழைப்பிற்கும் விலை கொடுக்கப்பட்டது போல் தோன்றுகிறது. உண்மையில், ஒரு தொழிலாளி அவனுடைய உழைப்புச் சக்தியின் அன்றாட மதிப்பைப் பெற ஒரு நாள் முழுவதும் வேலை செய்ய வேண்டும்.

எனவே கூலி என்பது உழைப்புச் சக்தியின் மதிப்பு, அதனுடைய விலை ஆகியவற்றின் மாற்றப்பட்ட உருவாகும். முதலாளிகளால் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைக் கூலி மூடி மறைக்கிறது. அது தொழிலாளி, முதலாளி ஆகிய இருவரும் பரிவர்த்தனைப் பண்டங்களின் சொந்தக்காரர்கள் என்ற மாயத் தோற்றத்தை உருவாக்குகிறது.

உழைப்புச் சக்தியின் மதிப்பு நேரடியாக இரு முக்கிய கூலி உருவங்களில் தோன்றுகிறது. அவையாவன: நேரக் கூலி, வேலை வீதக் கூலி.

## நேரக் கூலி

உழைப்புச் சக்தி ஒரு குறிப்பிட்ட கால அளவில்—அதாவது ஒரு நாள், ஒரு வாரம், ஒரு மாதம்—செயல்பட்டதற்காக அதன் மதிப்பிற்காகச் செலவிடுவது நேரக் கூலி எனப்படும். மேலும் உழைப்புச் சக்தியின் மதிப்பை வெளிப்படுத்துவதற்குத் தனி உருவம் இருக்

கிறது. அதுவே உழைப்பின் விலையாகும். உழைப்புச் சக்தியின் ஒரு நாளைய மதிப்பை, சராசரி வேலை மணியின் எண்ணால் வகுத்துக் கிடைப்பதன் அடிப்படையில் உழைப்பின் விலை கணக்கிடப்படுகிறது. முதலாளித்துவ நாடுகளில் அடிக்கடி உழைப்பு மணிக் கணக்கில் தான் கணக்கிடப்பட்டு சம்பளம் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக, தொழிலாளர்கள் மிகை நேரம், அல்லது குறை நேரம் வேலை செய்தால் அதற்குத் தக்கச் சம்பளம் கொடுக்கப்படுவது. இத்தகைய உழைப்பிற்கான சம்பளம் நேரக் கூலியின் ஒரு மறு உருவமே.

மற்ற விதக் கூலிகள் தோன்றுவதற்கு முன்பே நேரக் கூலித் தோன்றி, முதலாளித்துவத்தின் ஆரம்பக் கட்டங்களில் ஆதிக்கம் செலுத்தியது. பின்னால் அது வேலை வீதக் கூலியால் அகற்றப்பட்டது. தற்காலத்திய தொழில்-நுணுக்கப் புரட்சியின் நிலைமையின் கீழ், இயந்திரங்களாலோ உற்பத்தி முறைகளாலோ வேலையின் வேகம் சுமத்தப்படும் பொழுது நேரக் கூலி பெருமளவில் மீண்டும் தோன்றுகிறது. எடுத்துக் காட்டாக, மேற்கு ஜெர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளில் 80 சதவீதமும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உற்பத்தி செய்யும் தொழில் துறைகளில் 70 சதவீதமும் தொழிலாளர்கள் இப்பொழுது நேரக் கூலியைப் பெறுகின்றனர். இவ்வாருக நேரக் கூலி கட்டாய வேலை வேகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஊக்கக் கூலி என்றழைக்கப்படும் கூலி உற்பத்தி வெளிப்பாட்டிற்குத் தக்க வேறுபட்ட வீதத்தில் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுவதாகும். நல்ல முயற்சிகளுக்கு அவர்களுக்குப் போனசும் கொடுக்கப்படும்.

### வேலை வீதக் கூலி

ஓர் அலகு நேரத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி வெளிப்பாட்டின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட உழைப்புச் சக்திக்காகச் செலவிடுவது வேலை வீதக் கூலியாகும். அது நேரக் கூலியின் மாற்றப்பட்ட உருவம். உழைப்புச் சக்தியின் செலவு வேலை நேரத்தால் அல்லாமல் உற்பத்தி வெளிப்பாட்டால் அளக்கப்படுகிறது. இது ஒன்று தான் வேறுபாடு. வேலை வீதக் கூலி விஷ

யத்தில் நாள்தோறும் வேலை ஒதுக்கிடப்பட்டு ஒவ்வொரு உற்பத்தி வெளிப்பாட்டு அலகிற்கும் தக்க கூலி நிர்ணயிக்கப் படும். தொழிலாளர்களைச் சுரண்டுவது இன்னமும் அதிக மாக மறைவாக இருக்கும். தொழிலாளிக்கு அவன் உற்பத்தி செய்த பொருளுக்கு முதலாளி முழுக் கூலியையும் கொடுத் தது போன்ற தோற்றம் இருக்கும். உழைப்பின் உற்பத்தித் திறனையும் தீவிரத் தன்மையையும் அதிகரிக்கச் செய்யும்படி தொழிலாளர்களை வேலை வீதக் கூலி கட்டாயப்படுத்துகிறது. அது முதலாளிகளின் இலாபத்தை அதிகரிக்கிறது. அதனுல் தான் முதலாளிகள் பல ஆண்டு காலமாக அவர்களுடைய வேலையாட்களை வேலை வீதக் கூலியில் வைத்துக் கொள்ள விரும்பினர்.

ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல் தற்காலத்தில் மரபு முறை கூலிகள் அவ்வளவு பிரபலமாக இல்லை. அவை, வேலை வீத-போனஸ் கூலி, பல காரணிகள் கூலி ஆகிய வற்ருல் மாற்றப்பட்டு வருகின்றன. உற்பத்தி வெளிப்பாடு, தரம்,கச்சாப் பொருளின் சிக்கனம்,தளவாடங்களைத் திறமை யாகப் பயன்படுத்துவது போன்ற எண்ணற்றக் காரணி களின் அடிப்படையில் கூலிகள் கணக்கிடப்படுகின்றன. ஒதுக் கப்பட்ட வேலையைப் பூர்த்தி செய்வோரும் அதற்கு மேல் வேலை செய்வோரும் போனஸ் பெறுகின்றனர். ஒதுக்கப் பட்டதை விடக் குறைவாக வேலை செய்தவர்களுக்கு கூலி குறைக்கப்படலாம்.

### ''இலாபப் பங்கீடு''

முதலாளித்துவ நாடுகளில் பிடிவாதமாக புகுத்தப்படுத் தப்பட்ட கூட்டுப் போனஸ் முறை, ''இலாபப் பங்கீடு'' முறை போன்ற ஒரு உருவமாகும். அது தொழிலாளர்கள் ஆலை நிர்வாகத்தில் பங்கு கொள்ளுவதைப் போன்ற ஒரு போலித் தோற்றத்தை உருவாக்குகிறது. அவர்களை வேலை நிறுத்தம் செய்வதிலிருந்து தடுக்கிறது. இம்முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் எதார்த்தத்தில் என்ன நடக் கிறது எனில் கூலி இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது: கூலியின் முக்கிய பகுதி ஒழுங்காகக் கொடுக்கப்படுகிறது;

மற்றப் பகுதி சிறுகச் சிறுக அவ்வப்போது கொடுக்கப்படுகிறது. கொடுக்கப்படும் தொகை இலாபத்தின் நிலையை அல்லது உற்பத்திச் செலவில் மீதப்படுத்தப்பட்ட நிலையைப் பொறுத்துள்ளது.

இவ்வித கூலிகள் மற்ற எல்லா கூலி வகைகளைப் போல் முதலாளித்துவ தொழில் நிலையங்களை அதிக இலாபகரமாக்குகின்றன.

இவ்வாறாக எல்லா கூலி வகைகளும் முதலாளித்துவ சுரண்டலை மறைத்து அதே நேரத்தில் அதை அதிகரிக்கும் கருவியாகவும் செயல்படுகின்றன.

## பெயரளவுக் கூலியும் உண்மைக் கூலியும்

பண உருவத்தில் தொழிலாளர்களால் பெறப்படும் கூலி பெயரளவுக் கூலியாகும். அது வாடகை கொடுக்க, வரிகள் செலுத்த இவை போன்ற வாழ்க்கைக்குரியவற்றைப் பெற பயன்படுத்தப்படுகின்றது. பொருள்களுக்கும் ஊழியத்திற்கும் விலைகள் நிலையாக இல்லாததால் பெயரளவுக் கூலி மட்டுமல்ல உண்மைக் கூலியும் ஆராயப்பட வேண்டும். ஒரு தொழிலாளி அவனுடைய சம்பாத்தியத்தில் வரி போன்றவற்றைப் பிடித்து போக எஞ்சியுள்ளதில் நடைமுறை விலைகளில் வாங்கக் கூடிய பொருள்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் மொத்தத்திற்கு உண்மைக் கூலி சமமாகும். உண்மைக் கூலியானது, பெயரளவுக் கூலியின் அளவு, பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள், வரிகள் ஆகியவற்றை பொறுத்துள்ளது.

அதிகரித்துக் கொண்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், உழைப்பு மார்க்கெட்டில் அதனுடைய அழுத்தம், உற்பத்தியில் குறைந்த பயிற்சியுடைய தொழிலாளர்கள், பெண்கள் ஆகியவர்களை ஈடுபடுத்துதல், குறைந்து கொண்டே வரும் உழைப்புச் சக்திக்கான தேவை ஆகியவை பெயரளவுக் கூலியைக் குறைத்து உண்மைக் கூலியைக் குறைக்கப் பணிபுரிகின்றன.

விலை ஏற்றங்கள், வரிகள், வாடகை போன்ற காரணிகள் உண்மைக் கூலியைக் குறைய பங்காற்றுகின்றன.

பெயரளவுக் கூலி, உண்மைக் கூலி ஆகியவற்றைக்

குறைப்பதை எதிர்த்தும், வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் அடிப்படையில் முறையான கூலி வீதத்திற்கான திருத்தத்தை வற்புறுத்தியும் தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் முக்கியத் தேவைகளின் பரிமாணம் சமுதாயம் வளர்ச்சியடைய அடைய அதிகரிக்கிறது. இதன் விளைவாக உண்மைக் கூலி உயருகிறது. இருந்தபோதிலும் கடுமையான வர்க்கப் போராட்டத்தின் மூலமே தொழிலாளர்களால் அவர்களுடைய புறவயத் தேவைகளைப் பெற முடிகிறது.

சுருங்கச் சொன்னால் மேல் நோக்கிச் செல்லும் போக்கு கீழ் நோக்கிச் செல்லும் போக்கு என்ற இருவகையான போக்குகள் உண்மைக் கூலி இயக்கத்திலுள்ளன. சில காலங்களில் குறிப்பாக பொருளாதார நெருக்கடி அல்லது போர் காலங்களில் உண்மைக் கூலி குறையும் போக்கிலுள்ளது. மற்ற நேரங்களில் மேல் நோக்கிச் செல்லும் போக்கே பிரதானமாக உள்ளது. உண்மைக் கூலியின் உயர்வு அல்லது வீழ்ச்சி தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியைத்தான் பாதிக்கலாம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அடுத்த முக்கியமான விஷயம் என்னவெனில், முதலாளித்துவத்தின் கீழ் பெண்கள், இளம் மக்கள், தேசிய சிறுபான்மை மக்கள் ஆகியோர்களுக்கு உழைப்பிற்கான கூலி கொடுக்கும் பொழுது வேறுபாடு காட்டப்படுகிறது. மேலும் நாட்டிற்கு நாடு உழைப்புச் சக்தியின் மதிப்பு, உண்மைக் கூலி ஆகியவை மாறுபடுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார, வரலாற்று நிலைமைகளும், தொழிலாளி வர்க்கம் உருவான நிலைமைகளும் இந்த மாறுபாடுகளுக்குக் காரணமாகும்.

## 4. மூலதனத் திரட்சி. தொழிலாளி வர்க்கத்தின் நிலை

தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் உற்பத்தி முறையைத் தொடங்குவதும் தொடர்வதும் சமுதாயம் நிலைத்திருக்கத் தேவையான ஒரு நிபந்தனையாகும். இது புனருற்பத்தி என்று அழைக்கப்படுகிறது. பொருளாயத நன்மைகள்

மட்டுமன்றி உழைப்புச் சக்தியும், சமூக-உற்பத்தி உறவுகளும் நிரந்தரமாகப் புதுப்பிக்கப்படுகின்றன. புனருற்பத்தி என்பது சாதாரணமானதாக அல்லது விரிவாக்கப்பட்டதாக இருக்கலாம். உற்பத்தி அதே அளவிற்கு மீண்டும் மீண்டும் செய்யப்படுவதை **சாதாரணமான புனருற்பத்தி** என்போம். அதிகரித்துக் கொண்டே வரும் அளவில் உற்பத்தியை மீண்டும் மீண்டும் செய்வது **விரிவாக்கப்பட்ட புனருற்பத்தி** என்போம்.

## முதலாளித்துவத்தின் கீழ் சாதாரணமான புனருற்பத்தி

சாதாரணமான புனருற்பத்தியில் செயல்படும் மூலதனத்தின் அளவு அதிகரிக்காது. ஏனெனில் உபரி மதிப்பு எல்லாம் முதலாளியின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் செலவழிக்கப்படுகிறது. முதலாளித்துவ உற்பத்தியை ஒரு தொடர்ச்சியான முறையாக நாம் கருதினுல் பின்வருவனவற்றை பார்க்கலாம்: (1) முதலாளியால் கூலியாகக் கொடுக்கப்பட்ட பணம் அவருடைய சொந்தப் பையிலிருந்து கொடுக்கப்பட்டதில்லை. ஆனுல் அது அவருடைய தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட ஒரு பகுதியாகும். தொழிலாளர்களுக்கு முதலாளி முன்பணம் தருவதில்லை, ஆனுல் தொழிலாளிகள் முதலாளிக்கு முன்பணம் தருகிருர்கள். முதலாளிக்காக ஒரு தொகையை உருவாக்கித் தருகிருர்கள்; அதிலிருந்து அவர் உழைப்புச் சக்திக்காக மேற்கொண்டுப் பணம் செலவழிக்க முடியும். (2) முதலாளியின் மூலதனம் அவருடைய மூதாதையரின் உழைப்பால் உருவாக்கப்பட்டிருந்தால் கூட (முதலாளித்துவத்திற்காக இரங்கி உரைப்போர் அறிவிப்பதைப் போல்) அதைக் காலம், சேகரிக்கப்பட்ட உபரி மதிப்பாக, மற்ற மக்களின் உழைப்பிற்குக் கொடுப்படாத சம்பளமாக மாற்றும். ஏனெனில் முதலாளியின் சொந்த சேமிப்புகள் அவருடைய சொந்த நுகர்விற்கே போய்விடுகின்றன. (3) முதலாளித்துவ புனருற்பத்தி முதலாளித்துவ உறவுகளின் புனருற்பத்தியைக் குறிப்பிடுகிறது. அது ஒரு புறம் முதலாளியையும் மறுபுறம் கூலித்தொழிலாளரையும் புனருற்பத்தி செய்கிறது.

இவை எல்லாம் முதலாளித்துவ விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்திக்கும் சமமாகப் பொருந்தும்.

## மூலதனத் திரட்சி

விரிவுப்படுத்தப்பட்ட முதலாளித்துவ புனருற்பத்தியில் உபரி மதிப்பு இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பாகம் முதலாளியின் சொந்த நுகர்விற்கும் மறு பாகம் மூலதனமாக அல்லது திரட்சியடையச் செய்யப் பயன்படுத்தப்படுகிறது. உபரி மதிப்பை மூலதனமாக மாற்றுவது மூலதனத் திரட்சி யாகும். இதற்கு இன்னும் அதிகமான உற்பத்திச் சாதனங் கள், பிழைப்புச் சாதனங்கள், அத்துடன் அதிகமான உழைப்புச் சக்தி ஆகியவை தேவை. மூலதனமும், முதலாளித்துவ உற் பத்தி உறவுகளும் விரிந்த அளவில் புனருற்பத்தி செய்யப் படுகின்றன என்பதை மூலதனத் திரட்சி குறிப்பிடுகிறது.

## மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு

மூலதனம் திரளத் திரள அதனுடைய கட்டமைவு மாறு கிறது. பௌதீக ரீதியாக, உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மூலதனத்தில், உற்பத்திச் சாதனங்களும் உழைப்புச் சக்தி யும் அடங்கி உள்ளன. உற்பத்திச் சாதனங்களின் மொத்தத் திற்கும், அவற்றைக் கையாளுகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கும் இடையேயுள்ள விகிதம் **மூலதனத்தின் தொழில்நுணுக்கக் கட்டமைவு** என அழைக்கப்படும். அதிக சிறப்பான இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் மூலதனத் தின் தொழில்நுணுக்கக் கட்டமைவு அதிகரிக்கிறது.

மாறுத மூலதனத்தின் மதிப்பிற்கும் மாறும் மூலதனத் தின் மதிப்பிற்கும் உள்ள விகிதம் **மூலதன மதிப்புக் கட்ட மைவு** என்று அழைக்கப்படுகிறது. மூலதனத்தின் தொழில் நுணுக்கக் கட்டமைவும் மூலதன மதிப்புக் கட்டமைவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. வழக்கமாக மூலதனத் தின் தொழில்நுணுக்கக் கட்டமைவில் ஏற்படும் ஒரு மாற்றம் மதிப்புக் கட்டமைவில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மாறுத மூலதனத்திற்கும் மாறும் மூலதனத்திற்கும் உள்ள

விகிதம் $\left(\frac{c}{v}\right)$ அதாவது மூலதனத்தின் மதிப்புக் கட்டமைவு, தொழில்நுணுக்கக் கட்டமைவால் தீர்மானிக்கப்பட்டு அதில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதால் அது மூலதனத்தின் **உள்ளார்ந்த கட்டமைவு** என அழைக்கப்படும். தொழில் நுணுக்க முன்னேற்றத்தின் விளைவால் மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு தொழிலிலும் விவசாயத்திலும் அதிகரிக்கிறது. தற்கால விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் போது அது ஒரு தீவிர ஆழமற்ற நிகழ்ச்சிப் போக்காக இருக்கிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கில் சில முரண்பாடான போக்குகளைக் காண முடியும். வேகமான வளர்ச்சியின் காலங்கள், மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு குறைவான விகிதத்தில் உயரும் பொழுது அல்லது நிலையான தாகும் பொழுதான காலங்களுடன் மாறிமாறி வருகின்றன. புதிய இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால் ஏற்படும் மாறாத மூலதனத்தின் வேகமான வளர்ச்சி, திறமை மிக்க உழைப்புச் சக்தியின் உயர்வு, மாறாத மூலதனத்தின் குறைவான செலவில் அதிகரிக்கும் உற்பத்தி வெளிப்பாடு இவை போன்ற பிற காரணிகள் தான் இத்தகைய ஏற்ற இறக்கத்திற்குக் காரணமாகும்.

## மூலதனத்தை மையப்படுத்துதலும் ஒருமுனைப்படுத்துதலும்

முதலாளித்துவம் வளர வளர மூலதனத்தை மையப்படுத்துதலும் ஒருமுனைப்படுத்துதலும் நடைபெறுகின்றன. அவை இரண்டும் தொழில்-நுணுக்கத்தின் முன்னேற்றம், உழைப்பின் அதிக உற்பத்தி திறன், அதிகமான உள்ளார்ந்த கட்டமைவு ஆகியவற்றை சாத்தியமாக்குகின்றன. உபரி மதிப்பை மூலதனப்படுத்துதலின் விளைவால் ஏற்பட்ட வளர்ச்சியே **மூலதனத்தை ஒருமுனைப்படுத்துதலாகும்**. அதாவது மூலதனத் திரட்சியின் காரணத்தால் ஏற்பட்ட ஒரு வளர்ச்சி. தனியார் மூலதனம், சமூக மூலதனம் ஆகிய இரண்டும் இந்த முறையில் அதிகரிக்கின்றன. பல தனிப்பட்ட மூலதனங்களின் ஒரு பெரிய கூட்டுக் கலவையே **மூலதனத்தை**

மையப்படுத்துதலாகும். சிறு மூலதனங்கள் பெரு மூலதனங்களால் விழுங்கப்படுதல் மூலமும் இதைச் சாதிக்க முடியும். கிடைக்கும் மூலதனங்களை மறு வினியோகம் செய்வது மூலதனத்தை மையப்படுத்துதலாகும். அப்படிச் செய்வதால் அவற்றின் மொத்தத் தொகை உயராது. மூலதனத்தை ஒருமுனைப்படுத்துதலும், மையப்படுத்துதலும் ஒன்றுக்கொன்று நிரப்பிகளாகி, பெருமளவு உற்பத்தியின் வளர்ச்சியை அதிகப்படுத்துகின்றன. மூலதனத்தின் வளர்ச்சியுடன் பெரிய தொழில் நிலையங்கள் பெரும் பங்காற்றுகின்றன. சிறிய தொழில் நிலையங்களை விட அதிக வாய்ப்புகளை அவை கொண்டிருக்கின்றன. புதிய இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை மலிவாக்கி, அவைகளுடைய உற்பத்திப் பொருள்களை அதிக இலாபத்திற்கு விற்கவும் இலாபகரமான நிபந்தனைகளின் கீழ் கடனைப் பெறவும் அவர்களுக்கு எளிது. 19ம் நூற்றுண்டின் கடைசி மூன்ருவது பகுதியில் உற்பத்தியை ஒருமுனைப்படுத்துதல் ஏகபோகங்களின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது.

## மூலதனத் திரட்சியும் தொழில் துறையில் ஒதுக்கிவைக்கப்பட்ட உழைப்புச் சக்தியும்

மூலதனத் திரட்சியின் விளைவு மூலதனம் வளர்ச்சி அடைவதும் அதனுடைய உள்ளார்ந்த கட்டமைவு அதிகமாவதுமாகும். மொத்த உற்பத்தி மூலதனத்தில் மாறும் மூலதனத்தின் பங்கு குறைகிறது என்பது இதன் பொருளாகும். மாறும் மூலதனத்தின் அளவால் உழைப்புச் சக்தியின் தேவை தீர்மானிக்கப்படுகிறது. ஆகையால் மொத்த மூலதனம், உற்பத்தி ஆகியவற்றை விட இந்தத் தேவை மெதுவாக அதிகரிக்கிறது. முதலாளித்துவத்தில் தொழில்நுணுக்க முன்னேற்றம், உழைப்பைத் தீவிரப்படுத்துதல் ஆகியவற்றின் விளைவால் வேலையிலமர்த்தப்பட்ட தொழிலாளர்களில் ஒரு பகுதி வெளியே தள்ளப்பட்டு உழைப்பு மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகிறது. இது வேலையில்லாத திண்டாட்டத்தைத் தோற்றுவிக்கிறது. ஒரு பகுதி தொழிலாளர்கள் முதுகெலும்பு

ஓடிய பாடுபட வேண்டும்; மற்ருெரு பகுதி தொழிலாளர்களுக்குக் கட்டாயச் சோம்பேறித்தனம் என்பது இதன் பொருளாகும். உற்பத்திச் செயலிலிருந்து கட்டாயமாகத் தள்ளப்பட்ட சிறு உற்பத்தியாளர்கள் வேலை இல்லாதார் படையை அதிகரிக்கின்றனர். குறிப்பாக வேலையில்லாத திண்டாட்டம் பொருளாதாரப் பின்னடைவு காலங்களில் அதிகமாகிறது. இது முதலாளித்துவத்தின் விளைவு மட்டுமல்ல, அது இருப்பதற்கே ஒரு நிபந்தனையாகும். முதலாளித்துவ உற்பத்தி, மேலே போவதும் கீழே போவதும் என்ற சுழற்சியில், சமமற்றத் தன்மையில் வளர்ச்சி பெறுவதால், உற்பத்தி மேலே போகும் பொழுது ஏற்படும் உழைப்புத் தேவையைச் சமாளிக்க ஒதுக்கி வைக்கப்பட்ட உழைப்புச் சக்தி அவசியமாகும். வேலையின்மையை முதலாளிகள் பயன்படுத்தி வேலையிலமர்த்தப்பட்ட தொழிலாளர்களை வியர்வை சிந்த உழைக்க வைத்து அவர்களுடைய கூலியையும் குறைக்கின்றனர்.

தொழில் துறையில் ஒதுக்கி வைக்கப்பட்ட உழைப்புச் சக்தியின் உருவமைப்பும் வளர்ச்சியும் **முதலாளித்துவ மக்கள் தொகை விதியின்** சாராம்சத்தை அமைக்கிறது. அது ஒப்பியல்பான மக்கள் பெருக்கம் ஆகும். அதாவது தேவைக்கு அதிகமான உபரி உழைப்புச் சக்தியாகும். நவீன உற்பத்திச் சக்திகள், மக்கள் எல்லோரையும் பயனுள்ள வேலையில் ஈடுபடுத்துவதைச் சாத்தியமாக்குகின்றன. இதை முதலாளித்துவத்தில் செய்ய முடியாது. ஏனெனில் முதலாளித்துவத்தில் உற்பத்தி மக்களின் நலன்களுக்காகச் செய்யப்படவில்லை; இலாபத்திற்காகச் செய்யப்படுகிறது.

ஒப்பியல்பான மக்கள் பெருக்கம் உருவத்தில் மாறுபடுகிறது. அது நிலையற்றதாக இருக்கலாம். தொழிலாளர்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுவதும் உற்பத்தியிலிருந்து வெளியே தள்ளப்படுவதும் மாறி மாறி நடக்கிறது. மக்கள் பெருக்கத்தின் மறைந்த வடிவம் இருக்கிறது. நொடித்துப் போய் உண்மையில் வேலையற்றிருக்கும் சிறு உற்பத்தியாளர்கள் நகரங்களில் வேலை கிடைக்காமல் கிராமங்களில் தங்குகிருர்கள் என்பது இதன் பொருள். நாள் கூலி வேலை மட்டும் கிடைக்கும் மக்களைக் கொண்ட தேங்கிய மக்கள்

பெருக்கம் உள்ளது. பகுதி வேலையின்மை, அதாவது ஒரு தொழிலாளி ஒரு நாளின் அல்லது ஒரு வாரத்தின் ஒரு பகுதியில் மட்டுமே வேலை செய்வது தற்கால முதலாளித்துவத்துக்கு வெகு சகஜம். இத்தகையத் தொழிலாளிகள் உண்மையிலேயே பாதி வேலையற்றவர்களாக இருந்தாலும் அதிகாரப் பூர்வ புள்ளி விவரங்களில் அவர்கள் வேலையற்றவர்களாகக் கருதப்படவில்லை. இத்தகைய ஒப்பியல்பான உழைக்கும் மக்கள் பெருக்கம் முதலாளிகளுக்கு மிகவும் இலாபகரமாக இருக்கிறது. தொழில் துறையில் ஒதுக்கிவைக்கப் பட்ட உழைப்பு சக்தியின் வளர்ச்சியும், நிரந்தரமாகக் கிடைக்கும் தன்மையும் நவீன கால முதலாளித்துவத்தின் ஒரு முக்கிய பண்பாகும். பொருளாதாரம் மேல் நோக்கிச் செல்லுகையில் வேலையில்லாமை சற்றே குறைகிறது. ஆனால் அப்பொழுதும் அது ஒழிக்கப்படவில்லை.

## முதலாளித்துவ திரட்சியின் பொது விதி

தொழிலாளர்களின் நிலையின் மீது மூலதன திரட்சியின் தாக்கத்தை ஆய்ந்த மார்க்ஸ் முதலாளித்துவ திரட்சியின் பொது விதியை பின்வருமாறு உருவாக்கினார்: ''சமூக செல்வம், செயல்படும் மூலதனம், அதன் வளர்ச்சியின் சக்தியும் அளவும், அதன் விளைவாக பாட்டாளி மக்களின் மொத்தமும் அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித் தன்மையும் அதிகமாக இருப்பின் தொழில் துறையில் ஒதுக்கிவைக்கப்பட்ட உழைப்பு சக்தி அதிகமாக இருக்கும். ஆனால் அதன் விகிதாச்சாரம், செயல்படும் தொழிலாளர் படையைவிட அதிகமானால் நிரந்தரமான உபரி மக்கள் தொகை அதிகமாக இருக்கும். அத்தகையவர்களின் துன்பம் வேலை செய்பவர்களின் உழைப்பு வேதனைக்கு நேர் விகிதத்தில் இருக்கும். இறுதியாக தொழிலாளர்களின் ஏழ்மைப் பகுதியினரும், ஒதுக்கிவைக்கப்பட்ட பகுதியினரும் மிகுதியாக இருப்பின் அதிகாரப் பூர்வ ஏழ்மைத் தன்மையும் அதிகமாக இருக்கும். இதுவே முதலாளித்துவத் திரட்சியின் பூரண பொது விதியாகும்.*

* Karl Marx, *Capital,* Vol. 1, p. 603.

இவ்விதி எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் செயல்படுகிறது. ஆனால் இது வெவ்வேறு உருவங்களிலும், தரத்திலும் செயல்படுகிறது. அது குறிப்பிட்ட வரலாற்று நிலைகளையும், தொழிலாளி வர்க்கம், அதன் நேச வர்க்கங்களின் நிறுவன ஒழுங்கமைப்பைப் பொறுத்துள்ளது.

### தொழிலாளி வர்க்கத்தின் நிலையின் ஒப்பியல்பான கீழடைவு

சமுதாயச் செல்வம் விரைவாக வளர்ந்து வருகிற போது தொழிலாளர்களின் பங்கு குறைந்து கொண்டிருக்கிறது; அதே நேரத்தில் முதலாளிகள் அதிக விகிதாச்சார அளவில் பணக்காரர்களாகப் பெருகுகிறார்கள். அதில் தொழிலாளி வர்க்கத்தின் நிலையின் ஒப்பியல்பான கீழடைவு புலப்படுகிறது. இந்நிகழ்ச்சிப் போக்கில் பல ஸ்தூலமான வெளிப்பாடுகள் உள்ளன. முதலாவதாக, தேசிய வருமானத்தில் தொழிலாளர்களின் பங்கு குறைகிறது. தேசிய வருமானம் ஓராண்டு காலத்தில் சமுதாயத்தில் உற்பத்தியான மொத்தப் புதிய மதிப்பிற்குச் சமம் (v + m). 19ம் நூற்றாண்டில் 45-50 சதவீதமாக இருந்த தொழிலாளர்களின் பங்கு, 20ம் நூற்றாண்டில் தொழில் துறையில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் 30-50 சதவீதத்திற்குக் குறைந்திருக்கிறது.

இரண்டாவதாக, கூலி, இலாபம் ஆகியவற்றின் வளர்ச்சி விகிதம் ஆகும். தேசிய வருமானத்தில் தொழிலாளி வர்க்கத்தின் பங்கு குறைவது சுரண்டல் அதிகரிப்பதைக் குறிக்கிறது. கூலி, இலாபம் ஆகியவற்றின் இயக்க ஆற்றலில் இது பிரதிபலிக்கிறது. இலாபத்தின் வளர்ச்சி கூலியின் வளர்ச்சியை விட பல மடங்கு அதிகமாக உள்ளது என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. மொத்த சமுதாய உற்பத்திப் பொருளில் தொழிலாளர்களின் பங்கு குறைந்து கொண்டு வருவது இந்நிகழ்ச்சிப் போக்கின் மூன்றாவது வெளிப்பாடாகும். முதலாளியின் பங்கு c + m (மாறாத மூலதனம் + உபரி மதிப்பு); தொழிலாளர்களின் பங்கு —v ஆகும். $\frac{c+m}{v}$ என்ற விகிதம் முதலாளிகளின் பங்கு அதிகரிப்பதையும் தொழிலாளர்களின் பங்கு குறைவதையும் காட்டுகிறது. நான்காவ

தாக, தேசிய செல்வத்தில் தொழிலாளர்களின் பங்கு குறைகிறது. தேசிய செல்வத்தின் பெரும் பகுதி முதலாளிகளின் சிறு கும்பலின் கரங்களில் மேலும் மேலும் குவிகிறது.

## தொழிலாளி வர்க்கத்தின் நிலையின் பூரணக் கீழடைவு

உண்மையான கூலியின் போக்கு, வேலையில்லா நிலைமை, உழைப்பின் தீவிரத் தன்மையின் வளர்ச்சி, மோசமான உணவு, வீட்டு நிலைமைகள் ஆகியவற்றால் தொழிலாளி வர்க்கத்தின் நிலையின் கீழடைவு சுட்டிக்காட்டப்படுகிறது. இப்படிச் சுட்டிக்காட்டுவது வெவ்வேறு வழிகளில் மாறலாம். அவற்றில் சில கொஞ்சம் மேம்பாடடைந்து, மற்றவை மிக மோசமடைந்தால் தொழிலாளர்களின் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்று கூறலாம். பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவதில்லை. தொழில் துறையில் வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளில் கூலியில் ஏற்படும் கொஞ்ச உயர்வினைச் சுட்டிக்காட்டி தொழிலாளர்களின் நிலையின் கீழடைவைப் பற்றிய மார்க்சின் போதனை தவறு என்று அவர்கள் கூறுகிறார்கள். மார்க்ஸ், உண்மையான கூலியில் ஏற்படும் குறைவுதான் தொழிலாளர்களின் நிலையின் சரிவைச் சுட்டிக்காட்டும் ஒரே அம்சமென ஒரு பொழுதும் கூறியதில்லை. மேலும் கூலி அதிகமாகவோ, குறைவாகவோ எப்படியிருப்பினும் மூலதனத்தின் திரட்சியுடன் தொழிலாளர்களின் நிலை கீழடைகிறது என்று எழுதினார். தொழிலாளி வர்க்கத்தின் நிலை சுரண்டப்படும் வர்க்கமாக இருப்பதே இதற்குக் காரணம்.

நவீன முதலாளித்துவத்தில், உழைப்பின் தீவிரத் தன்மையின் விரைவான வளர்ச்சி, தொழிலாளர்களின் நிலை கீழடைய ஒரு முக்கிய காரணமாகும். உழைப்பின் தீவிரத் தன்மையின் வளர்ச்சியைக் காட்டுவதற்கு ஒன்றும் இல்லை. இருப்பினும், தொழிலகத்தில் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரிப்பது, குறைந்த வயதிலேயே வேலை செய்ய இயலாத நிலையை அடைதல் ஆகியவை மறைமுகமாக இதைச் சுட்டிக் காட்டும் அம்சங்களாக உள்ளன. வேலையில்லாத திண்டாட்டமும் மிகப்பெரிய பங்காற்றுகிறது.

பூர்ஷ்வா புள்ளிவிவரங்களில் வேலையில்லாதவர்கள் தொழிலாளர்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்காது. ஆனால் உண்மையில் அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியே. ஒட்டு மொத்தமான தொழிலாளி வர்க்கத்தின் வாழ்வுச் சித்திரத்தில் அவர்களுடைய நிலைமை ஒரு முக்கியமான அம்சமாகும். 1970ம் ஆண்டு முதல் 1980ம் ஆண்டின் மத்திய காலத்தில் உண்மை கூலியின் கீழ்நோக்கிய போக்கிற்கு பண வீக்கமும் பொருளாதார நெருக்கடியின் இன்னல்களுமே காரணம்.

கூலியைப் பொறுத்தளவில் பூர்ஷ்வா புள்ளிவிவரங்கள் பொதுவாக சராசரி கூலியையே கணக்கில் கொண்டுள்ளன. அப்படிச் சராசரி கணக்கிடும் பொழுது அதில் மிக அதிகமாகச் சம்பளம் பெறும் மானேஜர் போன்ற அதிகாரிகள், தொழிலாளர்கள், அலுவலக வேலையாட்கள் ஆகியோர் எண்ணிக்கையுடன் சேர்க்கப்படுகின்றனர். தொழிலாளி வர்க்கத்தில் உள்ள அதிகமான சம்பளம் பெறுகிறவர்கள், குறைவான சம்பளம் பெறுகிறவர்கள் என்று பிரித்து அவர்களிடம் வெவ்வேறான அணுகுமுறையைக் கையாள வேண்டும். குறைந்தது அமெரிக்க குடும்பங்களில் ஐந்தில் ஒரு பங்கினர் வறுமையில் வாழ்கின்றனர் என்பதை இன்று அரசு அதிகாரிகள் கூட மறுக்க முடியாது. இந்நிலை உலகத்திலேயே மிகப்பணக்கார முதலாளித்துவ நாட்டில் உள்ளது!

காவுத்ஸ்கியால் எழுதப்பட்டப் புத்தகத்தை மதிப்புரை செய்த லெனின் இரு விஷயங்களைக் குறிப்பிட்டார். அவை வருமாறு: (a) வறுமையின் வளர்ச்சியை "பௌதிக வறுமையாகப்" பார்ப்பது (b) வறுமையின் வளர்ச்சி "பௌதிக கருத்தில் அல்ல, சமூக கருத்தில்"* உள்ளதாகப் பார்ப்பது. "பௌதிக வறுமை" என்றால் குறைவான உணவு, மோசமான வீட்டு நிலைமை, மிகவும் அவசியமான தேவைகளைத் திருப்தி செய்வதற்கான மிகக் குறைந்த சாத்திய கூறுகள் ஆகியவைகளாகும். இத்தகைய "பௌதிக வறுமை" முதலாளித்துவத்தில் நிலவுகிறது. வேலையற்றவர்கள், தொழிலகத்திலும் அலுவலகத்திலும் குறைவான சம்பளம் கொடுக்கப்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 4, p 201.

பட்டவர்கள் ஆகியவர்களும் எல்லாவற்றிற்கும் மேலாக, இனம், தேசிய இனம், பால், வயது ஆகியவற்ருல் வேறு படுத்தப்பட்டவர்களும் பௌதிக வறுமையால் துன்புறுகிருர் கள். முன்ஞளைய காலனி நாடுகளில் பௌதிக ரீதியான வறுமை கண் கூடாகத் தெரிகிறது. அவை காலனி ஆதிக்கக் காலத்தில் பலாத்காரமாகக் கொள்ளையடிக்கப்பட்டன. இப் பொழுதும் அவை நவீன காலனி ஆதிக்க நாடுகளால் கொள்ளை யடிக்கப்படுகின்றன.

சமூக கருத்தில் வறுமை என்பது கூலிக்கும் உழைக்கும் மக்களின் முக்கிய தேவைகளுக்கும் இடையேயுள்ள முரண் பாட்டைக் குறிக்கும். எல்லா மக்களின் தேவைகளின் அளவையும், அதைப் போலவே பாட்டாளி வர்க்கத் தின் தேவைகளின் அளவையும் தவிர்க்க முடியாமல் அதி கரிப்பதற்கு முதலாளித்துவத்தின் வளர்ச்சி காரணமாக இருக்கிறது என்ற சந்தேகமற்ற கருத்தை லெனின் சுட்டிக் காட்டிஞர். விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சி தொழி லாளர்களின் முக்கிய தேவைகளின் வளர்ச்சியைத் துரிதப் படுத்தியிருக்கிறது. முதலாவதாக, கல்வி, கலாசாரத் தேவை கள், போக்குவரத்து தேவைகள் ஆகியவற்றுக்கான செலவை இது குறிக்கிறது. இருந்த போதிலும் வளர்ந்து கொண் டிருக்கும் தேவைகளுக்குக் கூலி மிகவும் பின்தங்கியுள்ளது.

இவ்வாருக தொழிலாளர்களின் திருப்தியடையாத தேவைகளின் பரிமாணம் கூடுகிறது. குடும்ப வரவு செலவு திட்டம், கூலி ஆகியவற்றின் இயக்க ஆற்றலைப் பற்றிய தோராயமான கருத்தை, இவ்விரண்டையும் ஒப்பிடும் ஓர் ஒப்பீடு அளிக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் அதிக ரித்துக் கொண்டு வரும் வறுமை, அதன் நிலையின் பூர்ண கீழடைவு ஆகியவற்றிற்கு அவை சான்று பகர்கின்றன.

தொழிலாளி வர்க்க நிலையின் கீழடைவை நோக்கிச் செல்லும் போக்கு முதலாளித்துவத்தின் சமூகப்-பொருளாதார விதியாகும். தொழிலாளர்களின் முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்த வர்க்கப் போராட்டம், இவ்விதியின் விளைவைக் குறைக்க உத வும். மேலும் அப்போராட்டம் வாழ்க்கைத் தரத்தை ஓரளவு அதிகரிக்க காரணமாக இருக்க முடியும். இருப்பினும் அதஞல் அவ்விதியை அழிக்க முடியாது. ஏனெனில் அது புறவயமாக,

முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் ஒட்டு மொத்த அமைப்பினால் தீர்மானிக்கப்படுகிறது.

### முதலாளித்துவத் திரட்சியின் வரலாற்றுப் போக்கு

முடிவில் மூலதனத் திரட்சி தான் முதலாளித்துவத்தின் அழிவைக் கொண்டு வருகிறது. ஒரு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் சமூக மயமாக்கப்பட்ட உற்பத்தி முறை அதனுடன் செல்லுகிறது. இவ்வகை உற்பத்தி முறை பெரிய தொழில் நிலையங்களில் ஒருமுனைப்படுத்தப்படுவது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தேர்ந்த உற்பத்தி முறை, கூட்டுறவு என்ற அடித்தளத்தில் அவை நெருக்கமாக பிணைக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்தியையும் உழைப்பையும் சமூக மயமாக்கல் என்ற முதலாளித்துவ முறையானது, சோஷலிசத்திற்கு மாறுவதற்கான பொருளாயத முன்தேவைகளைத் தயாரிப்பதைக் குறிப்பிடுகிறது. முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்ட உற்பத்திச் சக்திகளை, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் எல்லைகளால் இனி மேலும் தடை செய்ய முடியாது. அவற்றிற்கு இடையேயுள்ள முரண்பாடு அதிகரிக்கிறது. அது முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் சோஷலிச உற்பத்தி உறவுகளால் மாற்றீடு செய்யப்படுவதை புறவயமான தேவையாக்குகிறது.

சோஷலிசத்திற்கு மாறுவதற்கான அகவய முன்தேவைகள் கூட ஒரே நேரத்தில் பக்குவமடைகின்றன. இவை தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை, பலம், அதனுடைய ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் வளர்ச்சியில் அடங்கியுள்ளன. ''மத்தியதர பகுதிகளின்'' வளர்ச்சியின் காரணமாக தொழிலாளி வர்க்கம் குறைந்து கொண்டு வருகிறது என்று பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் மதிப்பிடுகின்றனர். எதார்த்தத்தில் மக்கள் தொகையைப் பாட்டாளி வர்க்கமாக்குவதுதான் அதிகரித்திருக்கிறது. எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் மக்கள் தொகையில் வேலை செய்யும் நபர்களின் விகிதாச்சாரம் வளர்ந்திருக்கிறது. தொழில் துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளில் மக்கள் தொகையில் 83-93 சதவீதம் வேலை செய்கின்றனர். பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் கூறு

வதற்கு மாறாக தொழில் துறையிலுள்ள பாட்டாளிகள் அளவில் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள்; பெரிய தொழில் நிலையங்களிலும் முக்கியத் தொழில் துறைகளிலும் திரட்டப்படுகின்றனர்.

அதே நேரத்தில் தொழிலாளர்களின் நிறுவன ஒழுங்கமைப்பும் அவர்களது வர்க்க உணர்ச்சியும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சிகளால் வழி நடத்தப்படும் அவர்கள் முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்து இடைவிடாத போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றவும் போராடி கொண்டிருக்கிறார்கள்.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுவதற்கான புறவய, அகவய முன்தேவைகளின் தயாரிப்பும், மேம்பாடும் தான் முதலாளித்துவத் திரட்சியின் வரலாற்றுப் போக்கின் மொத்த அர்த்தமாகும்.

முதலாளித்துவ முன்னேற்றத்துடன், ''துன்பம், ஒடுக்கப்படுதல், அடிமைத்தனம், இழிவுபடுத்தப்படல், சுரண்டல் ஆகியவற்றின் அளவும் வளர்கிறது. ஆனால் இவற்றுடன் தொழிலாளி வர்க்கக் கிளர்ச்சியும் வளர்கிறது. இந்த வர்க்கம் எப்பொழுதும் எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டே இருக்கிறது; முதலாளித்துவ உற்பத்தி முறையின் இயல் இயக்கத்தாலேயே பயிற்சி பெற்று ஐக்கியப்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்படுகிறது. மூலதனத்தின் ஏகபோகம் உற்பத்தி முறைக்கு ஒரு விலங்காக மாறுகிறது. இந்த உற்பத்தி முறை மூலதனத்துடன் தோன்றி அதனுடனும் அதன் கீழும் செழுமையடைகிறது. உற்பத்திச் சாதனங்களை மையப்படுத்துதல், உழைப்பைச் சமூகமயமாக்கல் என்பது இறுதியாக முதலாளித்துவ முகத்திரையுடன் ஒத்துப்போக முடியாத நிலையை அடைகிறது. இவ்வாறு முகத்திரை கிழிக்கப்படுகிறது. முதலாளித்துவ தனியார் சொத்துக்கு சாவுமணி அடிக்கிறது. உடைமையாளர்களின் உடைமைகள் பறிக்கப்படுகின்றன.''* இவ்வாறு மார்க்ஸ் எழுதினார்.

---

* Karl Marx, *Capital*, Vol. I, p. 175.

அத்தியாயம் 5

# சுரண்டுவோர் குழுக்களுக்கிடையே உபரி மதிப்பின் விநியோகம்

## 1. உபரி மதிப்பை இலாபமாக மாற்றல்

### முதலாளித்துவ உற்பத்திச் செலவும் இலாபமும்

ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பு, அதனுடைய உற்பத்தியில் செலவிடப்பட்ட மாறுத மூலதனம் (c), உற்பத்தி செய்யப்பட்ட புதிய மதிப்பு அல்லது மாறும் மூலதனத்தின் மதிப்பு (v), உபரி மதிப்பு (m) ஆகியவற்றின் மொத்தம். எனவே பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பை $w = c + v + m$ என்று கூறலாம்.

ஒரு முதலாளிக்கு ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பு செலவிடப்பட்ட மூலதனத்தால் அளக்கப்படுகிறது. அதாவது மாறுத மூலதனம், கூலி ஆகியவற்றிற்காகச் செலவிடப்பட்டச் செலவு. ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தை உற்பத்திச் செய்வதற்காகச் செலவிடப்பட்ட மூலதன செலவுகள் முதலாளித்துவ உற்பத்திச் செலவாகும்: $k=c+v$. இது பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பில் ஒரு பகுதியாகும். இது அந்தப் பண்டத்தின் பரிவர்த்தனையால் கிடைக்கக் கூடியதால் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும். பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பின் சூத்திரம் $w = k + m$ என்று இருக்க வேண்டும்.

உற்பத்திச் செலவுகள் என்பன பரிவர்த்தனைப் பண்டத்தின் குறைந்த இறுதி நிலை விலை. ஒவ்வொரு முதலாளியும் அவருடைய பரிவர்த்தனைப் பண்டத்தை, அவருடைய செலவுகளைச் சரிசெய்து அவருக்கு இலாபமும் கிடைக்கும்படியாக விற்க முயலுகிருர்.

மனித உழைப்பின் செலவை உற்பத்திச் செலவு மூடி மறைக்கிறது. மூலதன செலவுடன் வேறு சில செலவும்

சேர்ந்திருப்பதைப் போல் அது தோன்றுகின்றது. மாருத, மாறும் மூலதனம் என்ற பிரிவும் மறைக்கப்பட்டிருக்கிறது. மூலதனத்தின் இரு பிரிவுகளும் உற்பத்திச் செலவில் ஒன்ருகச் சேர்ந்துவிட்டன. உற்பத்திச் செலவு cக்கும் vக்கும் இடையேயுள்ள அடிப்படை வேறுபாட்டை மறைக்கிறது. அதாவது மாருத மூலதன மதிப்பு புதிய உற்பத்திப் பொருளுக்கு மாற்றப்படுகிறது. மாறும் மூலதன மதிப்பு உருவாக்கப்பட்ட புதிய மதிப்பின் ஒரு பகுதியாக மாறுகிறது. அது தவிர உழைப்புச் சக்தியின் மதிப்பு, உற்பத்திச் செலவில் உழைப்பின் விலை என்ற மாற்றப்பட்ட உருவத்தில் தோன்றுகிறது. எல்லா உழைப்பும் கூலி கொடுக்கப்பட்டதாகக் காட்டப்படுகிறது.

இந்தக் காரணத்தால், உபரி மதிப்பானது, செலவழிக்கப்பட்ட எல்லா மூலதனமும் செயல்படுவதின் விளைவாகத் தோன்றுகிறது. மார்க்சின் விளக்கப்படி செலவழிக்கப்பட்ட எல்லா மூலதனமும் தோற்றுவிப்பதாகக் காட்டப்பட்ட உபரி மதிப்பு இலாபம் என்ற மாற்றப்பட்ட உருவத்தைப் பெறுகிறது. இந்த உருவத்தில் உபரி மதிப்பின் மூலாதாரம், அதாவது கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவது மறைக்கப்படுகிறது.

முதலாளித்துவ முறைப்படி உற்பத்தி செய்யப்பட்ட பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பு பின்வரும் சமன்பாட்டின் மூலம் விளக்கப்படுகிறது: $w = c + p$, p என்பது இலாபம்.

## இலாப விகிதாச்சாரம்

செலவழிக்கப்பட்ட மூலதனத்திற்கும் இலாபத்திற்கும் உள்ள விகிதமே **இலாப விகிதாச்சாரமாகும்.** $p' = \frac{p}{c} \times 100$. p' என்பது இலாப விகிதாச்சாரம்; p என்பது மொத்த இலாபம்; c என்பது செலவழிக்கப்பட்ட மூலதனம்.

இலாப விகிதாச்சாரம் எந்த அளவு மூலதனம் அதிகரிக்கிறது என்பதனைக் காட்டுகிறது. அதனை ஒரு தொழில் துறை அல்லது மற்ருெரு தொழில் துறை எதிலாவது செலவிடுவதால் கிடைக்கும் இலாபத் தன்மையையும் அது காட்டு

கிறது. இலாபம் என்பது எல்லா மூலதனத்தின் உற்பத்தித் தன்மையின் விளைவு என்ற எண்ணத்தை உருவாக்க, அது மாருத மூலதனத்திற்கும் மாறும் மூலதனத்திற்கும் இடையே யுள்ள மாறுபாட்டை மழுங்கச் செய்கிறது.

இலாப விகிதாச்சாரம், முதலாவதாக, உபரி மதிப்பின் விகிதாச்சாரத்தைப் பொறுத்துள்ளது. எல்லா விஷயங்களும் சமமாக இருப்பின், உபரி மதிப்பின் விகிதாச்சாரம் அதிக மாஞல் இலாப விகிதாச்சாரமும் அதிகமாகவே இருக்கும். இரண்டாவதாக, அது மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமை வைச் $\left(\frac{c}{v}\right)$ சார்ந்தது. இந்த விஷயத்தில் அது தலைகீழ் உறவி லுள்ளது. அதாவது உள்ளார்ந்த கட்டமைவு அதிகமாஞல் இலாப விகிதாச்சாரம் குறைவாக இருக்கும். ஏனெனில் உபரி மதிப்பு மாறும் மூலதனத்தால் உருவாக்கப்படுகிறது. மூன்ருவதாக, அது மூலதனத்தின் புழக்கத்தைச் சார்ந்துள் ளது. p′ மூலதன புழக்கத்தின் விகிதாச்சாரத்திற்கு நேர் விகிதத்தில் மாறுகிறது. ஓர் ஆண்டு காலக்கெடுவில் மூல தனம் மெதுவாகப் புழங்குவதை விட அது வேகமாக புழங்கு வதால் அதிகமாக உழைப்பைச் சுரண்டுகிறது.

## சராசரி இலாபம் உருவாதல்

இக்காரணிகளின் சேர்க்கை, செயல், எதிர் செயல் ஆகிய வற்றைச் சார்ந்து, தத்துவார்த்த அளவில் இலாப விகிதாச் சாரம் தொழில் நிலையங்களிலும் தொழில் துறைகளிலும் மாறுபட வேண்டும். எப்படியாயினும் உண்மையில் சுதந்திர மான போட்டியில் முதலாளிகள் சமமான மூலதனத்திற்குக் கிட்டத்தட்ட சமமான இலாபத்தைப் பெறுகின்றனர். ஏனென்ருல் இலாப விகிதாச்சாரம் போட்டியில் சமப் படுத்தப்படுகிறது.

இருவிதமான போட்டிகள் உள்ளன. பரிவர்த்தனைப் பண் டங்களின் விற்பனைக்காகவும் உபரி இலாபம் பெறுவதற்காக வும் ஒரே தொழில் துறையிலுள்ள தொழில் நிலையங்களுக்கு இடையே நடைபெறுகிற போட்டியே **உள் தொழில் துறைப்**

போட்டியாகும். அதன் விளைவால் தன்னியல்பாகவே, ஒரே விதமான பரிவர்த்தனைப் பண்டங்களுக்கு மார்க்கெட்டில் ஒரே விலை நிறுவப்படுகிறது. பரிவர்த்தனைப் பண்டத்தின் மார்கெட் அல்லது சமூக மதிப்பு ஒரே விலையின் அடித்தளத்தில் உள்ளது. குறிப்பிட்ட தொழில் துறையில் சராசரி உற்பத்தி நிலைமைகளின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு அது. அந்தத் தொழில் துறை குறிப்பிட்ட விதமான பொருள்களின் பெரும்பான்மையை உற்பத்தி செய்கிறது.

சமூக மதிப்பை விட குறைவான செலவுகளையுடைய தொழில் நிலையங்கள் அதிக இலாபத்தை அடைகின்றன. அது மாற்றப்பட்ட அதிக உபரி மதிப்பின் உருவமாகும். அது தொழில்நுணுக்க முன்னேற்றத்தைத் தூண்டுவதில் முக்கியமான பங்காற்றுகிறது.

பல்வேறு தொழில் துறைகளிலுள்ள தொழில் நிலையங் களுக்கிடையே ஏற்படும் போட்டி தொழில் துறைகளுக்கு இடையே யுள்ள போட்டி எனப்படும். அதிக இலாபகரமான முதலீட்டு வட்டாரங்களுக்கும் இலாபத்தை மறு வினியோகம் செய்யக்கூடியதற்கும் அது ஒரு போட்டியாகும். போட்டியில் குறைந்த இலாபம் கிடைக்கும் தொழில் துறைகளிலிருந்து அதிக இலாபம் கிடைக்கக் கூடிய தொழில் துறைகளுக்கு மூலதனம் மாறுகிறது. இது அளிப்பு, தேவை நிலையையும் அதன் விளைவாக விலைகளையும் பாதிக்கிறது. எடுத்துக்காட்டாக, அதிக இலாபம் தரும் தொழில் துறையில் அதிகமான மூலதனம் போடப்பட்டால், தேவையை விட அளிப்பு அதிகமாகும். விலைகளும் இலாபமும் கீழே இறங்கும். மாறாக மூலதனம் மறுக்கப்பட்ட தொழில் துறைகளில் அளிப்பு குறையும்; விலைகள் உயரும்; இலாபம் அதிகரிக்கும். எனவே மூலதன ஓட்டத்தின் விளைவால் பல்வேறு இலாப விகிதாச்சாரங்கள், ஒரு பொதுவான, சராசரி விகிதாச்சா த்திற்குச் சமப்படுத்தப்படுகின்றன.

சராசரி இலாப விகிதாச்சாரமானது, மொத்த உபரி மதிப்பிற்கும் எல்லா சமூக மூலதனத்திற்கும் உள்ள சதவீத விகிதமாகும். இந்த வீதப்படி செலவழிக்கப்பட்ட ஒவ்வொரு மூலதனத்திலிருந்தும் பெறப்பட்ட மொத்த இலாபத்திற்கு சராசரி இலாபம் எனப் பெயர்.

சராசரி இலாப விகிதாச்சாரத்தின் உருவமைப்பைக் கீழ்க் கண்டவாறு அட்டவணை மூலம் காட்டலாம்:

| மூலதனங்கள் | உபரி மதிப்பு ($m' = 100$) | பரிவர்த்தனை பண்டங்களின் மதிப்பு | தொழில் துறை இலாப விகிதாச் சாரங்கள் | சராசரி இலாப விகிதாச்சாரம் | உற்பத்தியின் விலை | மதிப்பிலிருந்து உற்பத்தியின் விலை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| 90c + 10v | 10 | 110 | 10% | 20% | 120 | + 10 |
| 80c + 20v | 20 | 120 | 20% | 20% | 120 | — |
| 70c + 30v | 30 | 130 | 30% | 20% | 120 | — 10 |
| 240c + 60v | 40 | 360 | | 20% | 360 | |

இங்கே சராசரி இலாப விகிதம்: $\frac{60}{300} \times 100 = 20$ சதவீதம்.

சராசரி இலாப விகிதாச்சாரம் உருவாக்கப்பட்டதும் உபரி மதிப்பின் விதி, சராசரி இலாப விதியின் மூலமாக செயல்பட ஆரம்பிக்கிறது.

ஏகாதிபத்திய யுகத்தில் ஏகபோகங்களின் ஆதிக்கம் சராசரி இலாப விகிதாச்சாரம் உருவாவதைப் பாதிக்கிறது. ஏனெனில் அதிக இலாபம் தரும் தொழில் துறைகளுக்கும் மூலதனம் செல்லுவதை தடைசெய்து, தொழில் துறைகளுக்கு இடையேயுள்ள போட்டியை ஏகபோகங்கள் அரித்தழிக்கின்றன. அதே நேரத்தில் புது விதமான மூலதன இயக்கம் தோன்றுகின்றது. எடுத்துக்காட்டாக, உற்பத்தியைச் சேர்த்தலும், பிரித்தலும். ஏகபோகங்கள் சிறிய, நடுத்தர தொழில் நிலையங்களுக்கு ஆணையிட்டு தங்களுக்கு பெரும் பங்கு இலாபத்தை எடுத்துக் கொள்ளுகின்றன. இதன் விளைவாக இலாபத்தின் சராசரி விகிதாச்சாரம் இரு வெவ்வேறு நிலைகளில் உருவாகிறது. ஏகபோக மூலதனத்திற்கு உயர்வாகவும்; ஏகபோகமல்லாத பொருளாதாரப் பகுதிக்குக் குறைவாகவும் உருவாகிறது.

## உற்பத்தியின் விலை

சராசரி இலாப விகிதாச்சாரம் உருவாதல், மதிப்பு உற்பத்தியின் விலையாக மாறுவதைத் தீர்மானிக்கிறது.

**உற்பத்தியின் விலையானது** உற்பத்திச் செலவும் சராசரி இலாபமும் சேர்ந்ததற்குச் சமம் (k + Pav).

மதிப்பின் உருவம் அதன் பரிமாணம் ஆகிய இரண்டிலிருந்தும் உற்பத்தி விலை மாறுபடுகிறது. உற்பத்தி விலை, மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு சராசரியை விட அதிகமாக இருக்கும் தொழில் துறைகளில் மதிப்பை விட அதிகமாக இருக்கிறது. மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு சராசரியை விட குறைவாக இருக்கும் தொழில் துறைகளில் அது மதிப்பை விட குறைவாக இருக்கும். செலவழிக்கப்பட்ட சமூக-தேவையான உழைப்பு நேரத்தால் மதிப்பு தீர்மானிக்கப்பட்டால் உற்பத்தி விலையானது, செலவான மூலதனம், மூலதனத்திலிருந்து கிடைத்த சராசரி இலாபம் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. பரிவர்த்தனைப் பண்டங்களின் மதிப்பிற்கும் உற்பத்தி விலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்ற எண்ணத்தை இது கொடுக்கிறது. நடைமுறையில் உற்பத்தியின் விலை மதிப்பின் மாற்றப்பட்ட உருவமாகும். உற்பத்திச் செலவுகளாவன c+y, அதாவது மாறாத மூலதனத்தில் உருவான மதிப்பும், மாறும் மூலதனத்தின் புனர் உற்பத்தி மதிப்பும் சேர்ந்தது. சராசரி இலாபமானது ஒவ்வொரு மூலதனத்திலிருந்தும் சராசரியாகச் சேர்க்கப் பெற்ற உபரி மதிப்பாகும். எனவே மூலதன செலவுகள், சராசரி இலாபம் ஆகியவற்றிற்குப் பின்னால் உண்மையில் மனித உழைப்பின் செலவுகளும் உள்ளன.

உற்பத்தி விலை மதிப்பிலிருந்து விலகினாலும், எல்லா முதலாளித்துவ முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பரிவர்த்தனைப் பண்டங்களின் மொத்த உற்பத்தி விலைகள் அவைகளின் மதிப்பிற்குச் சமமாகின்றன. சராசரி நிலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பரிவர்த்தனைப் பண்டங்களின் உற்பத்தி விலைகள் அவைகளின் மதிப்புடன் ஒத்துப் போகின்றன. உற்பத்திச் சாதனங்கள், உழைப்புச் சக்தி ஆகியவற்றின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் உற்பத்தி விலைகளைப் பாதிக்கின்றன.

சராசரி இலாபமும் கூட மதிப்பில் ஏற்படும் மாற்றத்தால் பாதிக்கப்படுகிறது. உபரி மதிப்பின் மொத்தம் அதிகமாக இருந்தால் சராசரி இலாபம் அதிகமாக இருக்கும். இவை எல்லாம் உற்பத்தி விலைகள், மதிப்பு விதியால் ஒழுங்கு படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டுகின்றன.

மொத்த முதலாளித்துவ வர்க்கத்தால் தொழிலாளி வர்க்கம் ஒட்டு மொத்தமாகச் சுரண்டப்படுகிறது என்பதும், ஒவ்வொரு முதலாளியும் தன்னுடைய தொழில் நிலையத்திலும் அதைப்போல் எல்லா மற்ற தொழில் நிலையங்களிலும் தொழிலாளர்களைச் சுரண்டுவதை உயர்த்துவதில் ஆர்வம் கொண்டவராக இருக்கிறார்; ஏன் எனில் அது அதிக சராசரி இலாப விகிதாச்சாரத்தைத் தருகிறது என்பதும் சராசரி இலாபம், உற்பத்தி விலை ஆகியவற்றைப் பற்றிய மார்க்சின் போதனையிலிருந்து அறிய முடிகிறது. மறு புறம், முதலாளித்துவ சுரண்டலை அழிப்பதால் மட்டுமே தங்களுடைய நிலையை மேம்பாடடைய செய்ய முடியும். இக்காரியத்திற்காக தொழிலாளர்களிடம் ஒற்றுமையை வளர்ப்பது அவசியம்.

## இலாப விகிதாச்சாரத்தின் கீழ்நோக்கிய போக்கின் விதி

சராசரி இலாப விகிதாச்சாரம் குறையும் போக்குடையது. தொழில் நுணுக்க முன்னேற்றத்தின் விளைவால் மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவின் வளர்ச்சியால் இது ஏற்படுகிறது. இது முதலாவது காரணம். இரண்டாவதாக, குறைந்த வேகத்தில் புழங்கும் இயந்திரங்கள், ஏனைய தளவாடங்கள் ஆகியவற்றிற்குச் செலவிடும் பங்கு அதிகரித்துக் கொண்டிருக்கும் காரணத்தாலும் சமூக மூலதனத்தின் புழக்கம் மெதுவாக நடைபெறும்; மூன்றாவதாக, பொருள்களை விற்பது கடினமாகிக் கொண்டிருப்பது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்பது காரணமாகும்.

இருப்பினும், எந்த விதத்திலும் சராசரி இலாப விகிதாச்சாரத்தின் கீழ்நோக்கிய போக்கு மொத்த இலாபத்தின் குறைவைக் குறிப்பதாகாது. அது இலாப விகிதாச்சாரத்தை மட்டுமல்லாது, செலவிடப்பட்ட மூலதனத்தின் அளவையும்

பொருத்துள்ளது. மூலதனம் கூடுகிறது; எனவே மாறும் மூல தனமும் அதிகரிக்கிறது. இவ்வாறு மொத்த இலாபமும் வளர்கிறது.

சராசரி இலாப விகிதாச்சாரத்தின் கீழ்நோக்கிய போக்கிற்கு எதிரிடையான சில காரணிகள் உள்ளன. அவையாவன: உழைப்புச் சக்தியை அதிக அளவில் சுரண்டுதல்; உழைப்புச் சக்தியின் மதிப்பிற்குக் கீழாகக் கூலி குறைவது; மக்கள் தொகையின் ஒப்பியல்பான அதிக வளர்ச்சி. இது கூலி நிலையை பாதிக்கும். இந்தக் காரணிகள் எல்லாம் மொத்த உபரி மதிப்பின் வளர்ச்சிக்கும் பங்கு ஆற்றுகின்றன. எனவே இவை சராசரி இலாப விகிதாச்சாரத்தின் கீழ் நோக்கியப் போக்கை எதிர்த்து செயல்படுகின்றன. மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவின் வளர்ச்சியைத் தடை செய்யும் மாறாத மூலதனத்தின் உள்ளார்ந்த உறுப்புக்களை மலிவாக்குவதும் அதே திசையில் செயல்படுகிறது. ஏகாதிபத்திய நாடுகள், பின்தங்கிய நாடுகளுடன் நடத்திடும் வெளிநாட்டு வாணிபம் மூலம் பெறும் அதிக இலாபங்கள்கூட மொத்த இலாபத்தை அதிகரிக்க செயல்படுகின்றன.

எதிர்ச்செயல் காரணிகள் பொருளாதாரத்தின் ஏகபோகத் துறையில் குறிப்பாக ஒரு பலத்த விளைவை உண்டு பண்ணுகின்றன. ஏகபோகத் துறையில் மிக முன்னேறிய தொழில்நுணுக்கம் கையாளப்படுகிறது; மூலதன ஏற்றுமதி, வெளிநாட்டு வாணிபம் ஆகியவை ஒருமுனைப்படுத்தப்படுகின்றன. இது தவிர இத்துறை தன்னுடைய சொந்த நலன்களுக்காக அரசை விரிந்த அளவுக்குப் பயன்படுத்துகின்றது. எனவே இத்துறையில் எதிர்ச்செயல் போக்கு முன் ஆதிக்கம் செலுத்துகிறது. இலாப விகிதாச்சாரம் அதிகமாகவே நிலைத்திருக்கிறது.

இலாப விகிதாச்சாரத்தின் கீழ் நோக்கிய போக்கின் விதி முதலாளித்துவத்தில் உள்ள முரண்பாடுகளைக் குறிப்பிடுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக முதலாளித்துவ உற்பத்தியின் குறிக்கோளுக்கும் அக்குறிக்கோளை அடையும் வழிகளுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டைக் குறிக்கிறது. இலாபத்தை அடைய வேண்டும் என்ற குறிக்கோள் புதிய தொழில்நுணுக்கத்தைப் பயன்படுத்துவதற்கு இட்டுச் செல்லுகிறது. மூலதனத்

தின் உள்ளார்ந்த கட்டமைவில் ஓர் ஏற்றத்தை உண்டாக்குகிறது; இவ்வாறு சராசரி இலாப விகிதாச்சாரத்தின் கீழ் நோக்கிய போக்கைத் தூண்டுகிறது. உற்பத்தியைச் சிறப்புடையதாக்குவதையும் ஒருமுனைப்படுத்துவதையும் இலாப வேட்டை துரிதப்படுத்துகிறது. அதே நேரத்தில் உற்பத்தியின் விளைவுகள் தனியாரால் தனதுரிமையாக்கப்படுவது தொடர்கிறது. எனவே இவ்விதி முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாட்டை அதிகப்படுத்துகிறது.

## 2. வணிக மூலதனமும் வணிக இலாபமும்

### வணிக மூலதனம்

முதலாளித்துவத்திற்கு முந்திய பொருளாதார அமைப்புகளுக்குள்ளேயே வணிக மூலதனம் தோன்றியது. அது முதலாளித்துவ முறை உற்பத்தியை தோற்றுவிப்பதில் பங்காற்றியது. முதலாளித்துவத்தின் கீழ், உபரி மதிப்பை உருவாக்கும் தொழிலக மூலதனத்திற்குக் கீழானது வணிக மூலதனம். வணிக மூலதனத்தின் செயல்பாடு தொழிலக மூலதனத்தின் புழக்க நிகழ்ச்சிப் போக்கிற்குப் பணி செய்வதாகும். வணிகர்கள் கடைகளை நடத்துவதற்கும், தேவையானவற்றை வாங்கி வைக்கவும், வியாபாரம் செய்யும் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்கவும், விளம்பரம் செய்யவும், இது போன்ற பிறவற்றிற்குத் தங்களுடைய பணத்தைச் செலவு செய்கின்றனர். இவ்வாறாக தொழிலக மூலதனத்தின் ஒரு பகுதி வணிக மூலதனமாகத் தனிமைப்படுத்தப்படுகிறது. உற்பத்தியாளர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையே ஒரு விதமான பிரிவு தோன்றுகிறது.

### வணிக இலாபம்

ஒரு வணிகரின் செயல்களின் நோக்கம் வணிக இலாபத்தைப் பெறுவதாகும். மேலெழுந்த வாரியாக இந்த இலாபம், ஒரு பரிவர்த்தனைப் பண்டம் விற்கப்பட்ட விலைக்கும் அது வாங்கப்பட்ட விலைக்கும் உள்ள வித்தியாசமாகத்

தோன்றுகிறது. மதிப்பை விட எவ்வளவு அதிக விலை கிடைக்கிறதோ அது இலாபம் எனத் தோன்றுகிறது.

உண்மையில், உற்பத்தி செய்யும் பொழுது கூலித் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட உபரி மதிப்பே வணிக இலாபத்தின் மூலாதாரமாகும். தொழிலக முதலாளிகள் தங்களுடைய பொருள்களின் விலையைப் பெறுவதற்காக வணிகர்களிடம் உபரி மதிப்பின் ஒரு பகுதியைக் கொடுக்கின்றனர். இவ்வாறாக வணிக மூலதனம் உபரி மதிப்பை உருவாக்குவதில் பங்கு கொள்ளாமல் உபரி மதிப்பை வினியோகம் செய்வதில் பங்கு கொள்ளுகிறது. மூலதனம் தன்னியல்பாக மாறுவதிலும் இலாபங்களைச் சமப்படுத்துவதிலும் அது நுழைகிறது. எல்லா மொத்த உபரி மதிப்பும் மொத்த தொழிலக, வணிக மூலதனத்திற்கு ஒதுக்கப்படுவதால் சராசரி இலாப விகிதாச்சாரம் தோன்றுகிறது. அதன் காரணமாக வணிக மூலதனம் கூட சராசரி இலாபத்தை ஊர்ஜிதப்படுத்துகிறது. நடைமுறையில் இது என்ன முறையில் நடை பெறுகிறது எனில் வணிக முதலாளிகள் பொருள்களை அவற்றின் சமூக உற்பத்தி விலையை விட குறைந்த விலைக்கு வாங்கி உற்பத்தி விலையுடன் ஒத்துப் போகும் விலைக்கு விற்பதன் மூலம் நடைபெறுகிறது.

சராசரி இலாபத்தைச் சமப்படுத்துவதிலும் வணிக இலாபம் உருவாதலில் வணிக மூலதனம் எப்படி பங்கு கொள்கிறது என்று மார்க்ஸ் பின்வரும் உதாரணத்தால் விளக்குகிறார். ஓர் ஆண்டு காலத்தில் செலவழிக்கப்பட்ட எல்லா தொழிலக மூலதனம் 720c+180v-ஐயும் சேர்த்து 900 அலகுகள் எனக் கொள்ளுவோம். உபரி மதிப்பின் விகிதாச்சாரம் 100 சதவீதம் எனில் அதனுடைய மொத்தம் 180m ஆக இருக்கும். வருட மொத்த உற்பத்திப் பொருளின் மதிப்பு 720c+180v+180m=1080 ஆகும். இவ்விஷயத்தில் இலாப விகிதாச்சாரம் $\frac{180}{900} \times 100 = 20$ சதவீதமாகும்.

பொருள்களை விற்பதற்காக 100 அலகுகள் அதிக மூலதனம் தேவை எனவும் வணிகரால் அது முன் பணமாகப் போடப்படுவதாகவும் கொள்வோம். அப்போது மொத்த சமூக மூலதனமானது 1000 அலகுகளாகின்றது. சராசரி

இலாப விகிதாச்சாரம் $\frac{180}{1000} \times 100 = 18$ சதவீதமாகும். இவ்வாறாக தொழிலக முதலாளி 162 அலகுகளையும் வணிகர் 18 அலகுகளையும் இலாபமாகப் பெறுகின்றனர். தொழிலக முதலாளிகள் அவர்களுடையப் பொருள்களை வணிகர்களுக்கு மதிப்பை விட குறைந்த விலையில் விற்பார்கள். அதாவது $720c + 180v + 162p = 1062$. வணிகர்கள் அப்பொருள்களை அவைகளின் மதிப்பிற்குச் சமமான, சமூக உற்பத்தி விலையில் விற்பார்கள். அதாவது $720c + 180v + 162p + 18h = 1080$ (p என்பது தொழிலக இலாபம், h என்பது வணிக இலாபம்).

## புழக்கச் செலவுகள்

பொருள்களை விற்று பணமாக்குவதில் ஆகும் செலவுகளுக்கு **புழக்கச் செலவுகள்** என்று பெயர். மெய்யான செலவுகள், அதிகச் செலவுகள் என இருவகையாக அவை பிரிக்கப் படுகின்றன. பரிவர்த்தனைப் பண்டங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் மட்டுமே ஆகும் செலவுகள் **மெய்யான செலவுகள்** எனப்படும். அவையாவன: விற்பனை செய்பவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம், கடைகளை நடத்துவதற்கு ஆகும் செலவுகள், விளம்பரச் செலவுகள், மற்றும் இது போன்றவைகள். இந்த முறையில் அதிகமான மதிப்பு உற்பத்தி செய்யப்படுவதில்லை. புழக்க வட்டாரத்தில் உற்பத்தியைத் தொடர்வதிலிருந்துதான் **அதிகமான செலவுகள்** தோன்றுகின்றன. அவற்றில், பொருள்களைப் பிரித்தல், கட்டுதல், இருப்பு வைத்தல், வாகனங்களில் அப்பொருள்களை விற்பனை செய்யும் இடத்திற்கு கொண்டு செல்லுதல் இவை அடங்கும்.

இத்தகைய நிகழ்ச்சிப் போக்குகளில் ஈடுபட்டிருக்கும் உழைப்பு உபயோக மதிப்பை உருவாக்குவதைப் பூர்த்தி செய்கிறது. ஒரே நேரத்தில் மதிப்பையும் உபரி மதிப்பையும் உருவாக்குகிறது. அதாவது பொருள்களின் மதிப்பை அதிகரிக்கிறது. இக்காரணத்தால் புழக்கத்தில் ஆகும் அதிகச் செலவுகள் உற்பத்திச் செலவுகளைப் போலவே மாற்றீடு செய்யப்படுகின்றன. மெய்யான செலவுகள் என்பன வேறு விஷயம். அவைகள் மொத்த உபரி மதிப்பிலிருந்து மாற்றீடு செய்யப்படுகின்றன. அதன் விளைவாக பொதுவான

இலாப விகிதாச்சாரம் குறைகிறது. நவீன முதலாளித்துவத்தின் கீழ் வழக்கமாக ஏகபோகங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்கும் வாடிக்கையாளர்களால் மெய்யான செலவுகள் ஈடு செய்யப்படுகின்றன. அத்தகையப் பொருள்கள் அதிக விலைகளுக்கு விற்கப்படுகின்றன. புழக்க வட்டாரத்தில் உழைக்கும் மக்கள் அதிகமாக சுரண்டப்படுவதை இது குறிக்கிறது.

### விற்பனை செய்யும் வேலையாட்கள் சுரண்டப்படுதல்

பொருள்களை விற்பனை செய்யும் வேலையாட்கள் புதிய மதிப்பு எதையும் உருவாக்குவதில்லை; அவர்களுடைய உழைப்பு உற்பத்தி செய்யக் கூடியது அல்ல. இருப்பினும், அவர்களுடைய வேலை நாள் கூட தேவையான உழைப்பு நேரம், உபரி உழைப்பு நேரம் என பிரிக்கப்படுகிறது. தேவையான உழைப்பு நேரத்தில் பொருள்களை விற்பனை செய்யும் வேலையாட்கள் அவர்களுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பிற்குச் சம்பளம் கொடுக்கத் தேவையான அளவு உபரி மதிப்பு அடங்கியிருக்கும் பரிவர்த்தனைப் பண்டங்களை விற்பனை செய்கிறார்கள்; உபரி உழைப்பு நேரத்தில் வணிகர்களுக்குப் போகும் இலாபப் பகுதியான உபரி மதிப்பு அடங்கியிருக்கும் பரிவர்த்தனைப் பண்டங்களை விற்பனை செய்கிறார்கள்.

வணிக மூலதனம் பொருள்களை விற்பனை செய்யும் வேலையாட்களை மட்டும் சுரண்டவில்லை. அதிக விலைகள், பரிவர்த்தனையில் சமமின்மை ஆகியவற்றால் மற்ற பகுதி மக்களையும் சுரண்டுகிறது. இந்தச் சுரண்டலைத் தீவிரப்படுத்தும் ஒரு வழி வாடிக்கையாளர்களுக்குக் கடன் கொடுப்பது. இக்கடன் அதிக வட்டி வீதத்தில் கொடுக்கப்படும்.

## 3. கடன் மூலதனமும் கடன் வட்டியும்

### கடன் மூலதனம்

பணம்படைத்த முதலாளிகளால் தொழிலக முதலாளிகளுக்கும் வணிக முதலாளிகளுக்கும் கடனாகக் கொடுக்கப்படும் மூலதனம் **கடன் மூலதனம்** என அழைக்கப்படுகிறது.

அது கடன் கொடுக்கும் முதலாளிகளுக்கு வட்டி கொண்டு வருகிறது. அது தொழிலக மூலதனத்தின் ஒரு பகுதியாகும். அம் மூலதனத்திலிருந்து அது பிரிக்கப்பட்டு அதனுடைய இயக்கத்திற்கு உதவுகிறது. கடன் மூலதனத்திற்கான சூத்திரம் M=M'. தொழிலக முதலாளிகள், வணிகர்கள் தற்காலிகமாக ஒதுக்கும் பணம், பணம் படைத்த முதலாளிகளிடம் சேர்ந்துள்ள பணம், சேமிப்பு வங்கிகளில் சேர்ந்திருக்கும் பொது மக்களின் ரொக்க வருமானங்களும், சேமிப்புகளும், கடன் மூலதனத்தின் மூல ஆதாரமாகும்.

கடன் மூலதனத்திற்கு தனிப்பட்ட சில பண்புகள் உள்ளன. முதலாவதாக, இந்த மூலதனம் சொத்தாக இருக்கிறது. அதாவது பணம் படைத்த முதலாளி முதலீடு செய்யும் முதலாளிகளுக்கு (பெரும் உற்பத்தியாளர்கள், வணிகர்கள்) அவர்களுடைய தற்காலிக உபயோகத்திற்காகக் கொடுக்கும் சொத்தாகிய பணம். இரண்டாவதாக, இது பரிவர்த்தனைப் பண்டமாகப் பாவிக்கப்படும் மூலதனம். அதைக் கடன் கொடுக்கும் முதலாளிகள் முதலீடு செய்யும் முதலாளிகளுக்கு ''விற்கின்றனர்.'' மூன்றாவதாக, அது பண உருவத்தில் மட்டுமே தோன்றுகிறது. நான்காவதாக, கடன் மூலதனம் என்பது மிக அதிகமான புல்லுருவித் தன்மையையுடைய மூலதனம். அதனுடைய சொந்தக்காரர் அம்மூலதனம் செயல்படுவதைப் பற்றி ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை. ஐந்தாவதாக, அது மூலதனத்தின் மிக அதிகமாய்மால உருவமாகும். அதில் மதிப்பை அதிகப்படுத்துவதின் மூலாதாரம், அதாவது உற்பத்தி வட்டாரத்தில் கூலி உழைப்பைச் சுரண்டுவது முழுக்க மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் சமூக உறவுகள், ஒரு பொருளின் உறவுகள் தனக்குத் தானே இருப்பதைப் போல் காட்சியளிக்கின்றன. மேல் எழுந்தவாரியாக பணம் பணத்தை தோற்றுவிக்கிறது என்ற தோற்றத்தை உண்டாக்குகிறது.

## கடன் வட்டி

கடன் மூலதனத்தை உபயோகிப்பதற்கான கட்டணம் **வட்டி** என அழைக்கப்படுகிறது. தொழிலக முதலாளிகளும், வணிகர்களும் அவர்களுக்குக் கடனைக் கொடுக்கப்பட்ட

மூலதனத்தை இலாபம் சம்பாதிக்கப் பயன்படுத்துகிறார்கள். இந்த இலாபத்தின் ஒரு பகுதியை கடன் கொடுத்த முதலாளிக்கு வட்டியாகக் கொடுக்கிறார்கள். ஆகையால் வட்டி என்பது உபரி மதிப்பின் மாற்றப்பட்ட வடிவமாகும். கூலித் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய உழைப்பிற்குக் கொடுக்கப்படாத கூலியே அதனுடைய மூலாதாரமாகும். முதலீடு செய்யும் முதலாளிகள், இலாபத்தின் ஒரு பகுதியை எடுத்து வைத்துக் கொள்ளுகின்றனர். அதற்கு தொழிலீடு பாட்டு இலாபம் என்று பெயர். மேலெழுந்த வாரியாக அது முதலாளிக்கு அவருடைய காரியங்களின் நடவடிக்கைகளுக்கான கூலியாகத் தோன்றுகிறது. இவ்வாறாக வட்டி, தொழிலீடுபாட்டு இலாபம் ஆகியவற்றின் மூலாதாரம்—கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதன் மூலம் பெற்ற உபரி மதிப்பு—மொத்தமாக மறைக்கப்படுகிறது. மூலதனத்தைச் சொந்தமாகப் பெற்றிருப்பதே வட்டியைத் தோற்றுவிக்கிறது போல் தோன்றுகிறது; தொழிலீடுபாட்டு இலாபம், முதலீடு செய்யும் முதலாளியின் கூலியாகத் தோன்றுகிறது.

## முதலாளித்துவ கடன்

கடன் மூலதன இயக்கத்தின் ஒரு வடிவமே கடனாகும். முதலீடு செய்யும் முதலாளிகளால் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனைப் பண்ட வடிவத்தில் கொடுக்கப்படுவதே **வணிக கடனாகும்**. பணம் படைத்த முதலாளிகளாலும் வங்கிகளாலும் பண வடிவத்தில் முதலீடு செய்யும் முதலாளிகளுக்குக் கொடுக்கப்படுவது **வங்கிக் கடன்** ஆகும். **நுகர்வோர் கடன்** என்பது சொந்த நுகர்விற்கென கருதப்பட்ட பொருள்களுக்கான ஒத்திப் போடப்பட்ட பண வடிவத்தில் மக்களுக்கு கொடுக்கப்பட்டதாகும். **அரசு கடன்** என்பது அரசால் கடன் பத்திரங்கள், கருவூலப் பத்திரங்கள் என வெளியிடப்பட்ட பத்திரங்கள் மூலம் கிடைத்த கடனாகும். இத்தகைய நிதிகள் அடிக்கடி உற்பத்தி செய்யாத செலவினங்களான ஆயுதப் போட்டிக்காகவும் காவல் துறையினர், அதிகாரிகள் ஆகியோரைப் பராமரிக்கவும் செலவிடப்படுகின்றன. இவற்றில் சில, தேசிய கடனுக்காகத் திருப்பிக்

கொடுக்கப்படுகின்றன. கடன்களுக்குரிய வட்டிக்குக் கொடுக்கப்படுகின்றன.

முதலாளித்துவ சமுதாயத்தில் கடன் முக்கிய பங்காற்றுகிறது. அது, மூலதனங்களை உற்பத்தி செய்யும் துறைகளுக்கிடையே மறு வினியோகம் செய்யவும், பொதுவான இலாப விகிதாச்சாரத்தை உருவாக்கவும் உதவி செய்கிறது. ரொக்கத்தை மீதப்படுத்துவதை கடன் சாத்தியமாக்குகிறது. மேலும் அது மூலதனத்தை ஒருமுனைப்படுத்துதல், மையப்படுத்துதல் ஆகியவற்றிற்காகவும் பங்காற்றுகிறது. அதே நேரத்தில் அது முதலாளித்துவ முரண்பாடுகளை ஆழப்படுத்தச் செய்கிறது. அது உற்பத்தியைச் சமூகப்படுத்துதலாக்குவது என்பதைத் துரிதப்படுத்தி முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாட்டின் மீது செயல்படுகிறது. உற்பத்தியை விரிவுபடுத்துவதைத் தூண்டிவிடும் பொழுது அது உற்பத்திக்கும் தீர்க்கப்படக் கூடிய தேவைக்கும் இடையேயுள்ள பிளவை அதிகரிக்கிறது. இது பொருளாதார நெருக்கடிகளை ஆழப்படுத்துகிறது.

### கூட்டுப் பங்குக் கம்பெனிகள்

மூலதனத்தின் செயல்பாடுகளிலிருந்து அதன் மீது உடைமை உரிமை தனியாகப் பிரிக்கப்படுவது கூட்டுப் பங்குக் கம்பெனிகளைத் தோற்றுவித்திருக்கிறது. அவை பங்குச் சீட்டுகளை வெளியிடுவதன் மூலமாகவும் விற்பதன் மூலமாகவும் கிடைக்கும் பல தனிப்பட்டவர்களின் மூலதனங்களைச் சேர்த்து உள்ளடக்கிய மூலதனத்தைக் கொண்டவையாகும். ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனியின் மூலதனத்தின் ஒரு பகுதியைச் சொந்தமாக்கிக் கொடுக்கப்பட்ட பத்திரங்களே **பங்குச் சீட்டுகள்** எனப்படும். ஒரு பங்கை வைத்திருக்கும் சொந்தக்காரருக்கு கம்பெனியின் இலாபத்தில் ஒரு குறிப்பிட்டப் பங்கிற்கு உரிமை உண்டு. அதை இலாப **ஈவு** என்போம். பங்குகள், பங்குமாற்று மார்க்கெட்டில் வாங்கவும் விற்கவும் படுகின்றன. ஒரு பங்கின் மார்க்கெட் விலை பங்கு மதிப்புக் குறியீடு என அழைக்கப்படும். அது ஒவ்வொரு பங்கிற்கும் பிரித்துக் கொடுக்கப்பட்ட இலாப ஈவின் அளவை

யும் கடன் வட்டியின் விகிதாச்சாரத்தையும் பொறுத்துள்ளது.

$$\text{பங்கின் பங்கு மதிப்புக் குறியீடு} = \frac{\text{இலாப ஈவு}}{\text{கடன் வட்டி}} = \times 100.$$

பங்குச் சீட்டுகள் தவிர கூட்டுப் பங்கு கம்பெனிகள் **பத்திரங்களையும்** வெளியிடுகின்றன. அப்பத்திரங்கள் நிலையான வருட வருமானத்தைத் தருகின்றன. அவைகள் ஒப்பந்த காலம் முடிந்த பிறகு மீட்கப்படுகின்றன.

கூட்டுப் பங்குக் கம்பெனிகளை நடைமுறையில் வைத்திருக்கும் பெரும் முதலாளிகள் பங்குச் சீட்டுகளை வெளியிடுவதையும் அவைகளை இலாபத்திற்கு விற்பனை செய்வதையும் தங்களுடைய இலாபத்தை அதிகரிக்கவே உபயோகிப்பார்கள்.

## 4. நில வாடகை.
## முதலாளித்துவ சமுதாயத்தில் விவசாய உறவுகள்

முதலாளிகள் மட்டுமன்றி பெரும் நிலச்சொந்தக்காரர்கள் கூட கூலித் தொழிலாளர்களால் உருவாக்கப் பெற்ற உபரி மதிப்பின் ஒரு பகுதியைப் பெற்று, அவர்களுடைய சம்பளம் கொடுக்கப்படாத உழைப்பால் பணக்காரர்களாகின்றனர். முதலாளித்துவ விவசாயத்தின் தனிப்பட்ட பண்புகள் என்னவெனில் அதில் மூன்று வர்க்கங்கள் அடங்கியுள்ளன. அவையாவன: நிலச்சொந்தக்காரர்கள், முதலாளித்துவக் குத்தகைக்காரர்கள், கூலித் தொழிலாளர்கள்.

ஒரு முதலாளி ஒரு பெரிய நிலச்சொந்தக்காரரிடம் இருந்து நிலத்தை குத்தகைக்கு எடுக்கிறார். கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுகிறார். உபரி மதிப்பின் ஒரு பகுதியை நிலச்சொந்தக்காரருக்கு நிலத்தைப் பயன்படுத்தியதற்காகக் கொடுக்கிறார். உபரி மதிப்பின் இந்தப் பகுதி **நில வாடகை** என அழைக்கப்படும். வேறுபாட்டு நில வாடகை, சார்பற்ற நில வாடகை என இரு அடிப்படை வாடகை விதங்கள் உள்ளன.

## வேறுபாட்டு நிலவாடகை

நிலம் மற்ற உற்பத்திச் சாதனங்களிலிருந்து வேறுபடுகின்றது. அது உழைப்பால் உருவானதல்ல. அதனுடைய பரப்பு வரையறுக்கப்பட்டது. அதை அதிகப்படுத்த முடியாது. இது தவிர எல்லா நிலங்களும் முதலாளித்துவ பண்ணைகளால் பயன்படுத்தப்படுகின்றன. முதல் தரமான நிலங்களையும் இரண்டாம் தரமான நிலங்களையும் குத்தகைக்கு விடுகின்ற பண்ணைகள் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஒரு பொருளாகவுள்ள நிலத்தின் மீது ஒரு விதமான ஏகபோகத்தை வைத்திருக்கின்றன. இந்த ஏகபோகம் வேறுபாட்டு நில வாடகை தோன்றச் செய்கிறது. நுகர்வோர் வாழும் இடங்களுக்கு அருகிலுள்ள வளமான நிலங்களிலிருந்து கிடைத்த மகசூல் அளவு தேவைக்குப் போதுமானதாக இல்லாமல் இருந்தால் வளம் குறைந்ததும் அதிக தூரத்தில் உள்ளதுமான நிலங்களும் பயிரிடத்தக்க தாக்கப்படுகின்றன. இந்தக் காரணத்தால் விவசாயத்தில் மார்க்கெட் விலைகளானது, வளம் மிகவும் குறைந்ததும் மிக தூரத்திலுள்ளதுமான நிலங்களில் விளைந்த விளைச்சல்களின் விலைகளின் அடிப்படையில் உள்ளது. எல்லா பண்ணைகளும் ஒன்று போல் இல்லாததால் விலைகள் எல்லாம் சமூக ரீதியாக சகஜமான உற்பத்தி நிலைகளால் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன.

வளமான நிலங்களில் உழைத்தால் அதிக மகசூலைப் பெற முடியும். தொழிலாளர்கள் அதிக உபரி மதிப்பை உருவாக்குகிறார்கள். வளம் குறைந்த, மோசமான நிலங்களில் உற்பத்திச் செலவால் தீர்மானிக்கப்படும் உற்பத்தியின் சமூக விலைக்கும், முதல் தரமான, இரண்டாம் தரமான நிலங்களின் உற்பத்தியின் தனிபட்ட விலைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடே **வேறுபாட்டு நில வாடகையாகும்.** வேறுபாட்டு நில வாடகை I உருவாவதை கீழ்க் கண்ட அட்டவணைப்படி விளக்கலாம்:

| நிலம் | போடப்பட்ட மூலதனம் (டாலர்களில்) | சராசரி இலாபம் (டாலர்களில்) | உற்பத்தி வெளிப்பாடு (சென்ட்னர்களில்*) | உற்பத்தியின் தனிப்பட்ட விலை (டாலர்களில்) | | உற்பத்தியின் சமூக விலை (டாலர்களில்) | | வேறுபாட்டு நில வாடகை I (டாலர்களில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்த உற்பத்தி | ஒரு சென்ட்னர் | ஒரு சென்ட்னர் | மொத்த உற்பத்தி | |
| மிக மோசமானது | 100 | 20 | 10 | 120 | 12 | 12 | 120 | — |
| சராசரியானது | 100 | 20 | 15 | 120 | 8 | 12 | 180 | 60 |
| மிக நல்லது | 100 | 20 | 20 | 120 | 6 | 12 | 240 | 120 |

வேறுபாடான வளமுடைய நிலங்கள், ஒவ்வொன்றிற்கும் செலவினங்களின் அளவு ஒரே மாதிரியாக செலவிடப்பட்டிருந்தால், வேறுபட்ட அளவு மகசூல்களை கொடுத்திருக்கின்றன என்பதையும் அட்டவணையிலிருந்து நாம் அறியலாம். எனவே ஒரு மெட்ரிக் சென்ட்னரின் உற்பத்தியின் தனிப்பட்ட விலைகள் மாறுபட்டிருக்கும், அதாவது 12, 8, 6 டாலர்களாகும். ஆனால் இந்த மகசூல் உற்பத்தியின் தனிப்பட்ட விலைகளில் விற்கப்படாது; உற்பத்தியின் சமூக விலையில் விற்கப்படும். அதாவது ஒரு மெட்ரிக் சென்ட்னருக்கு 12 டாலர்கள்.

நிலத்தின் வளத்திற்கு ஏற்ப உழைப்பின் உற்பத்தித் திறன் மாறுபடுவதால் உற்பத்தியின் சமூக விலைக்கும் தனிப்

---

* சென்ட்னர் நூறு கிலோகிராமிற்குச் சமமாகும். ஐரோப்பா முழுவதும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் அளவு.—**மொ-ர்.**

பட்ட விலைக்கும் வேறுபாடு இருக்கிறது. நம்முடைய உதாரணத்தில் இந்த வேறுபாடு சராசரி தரமுள்ள நிலத்தில் 60 ஆகவும் மிக நல்ல தரமுள்ள நிலத்தில் 120 ஆகவும் உள்ளது. சராசரி இலாபத்திற்கு மேல் உள்ள உபரி அல்லது அதிகப்படியான இலாபம் வேறுபாட்டு நிலவாடகையாக மாற்றப்படுகிறது.

நிலம் இருக்கும் இடத்தைப் பொறுத்தும் வேறுபாட்டு நில வாடகை தோன்றுகிறது. நிலம் நுகர்வோர் இருக்கும் இடத்திற்கு அருகில் இருக்குமானால் ஓர் அலகு மகசூலுக்கான உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும். அதன் விளைவாக வேறுபாட்டு நில வாடகை உருவாவதற்கான நிலைமைகள் ஏற்படுகின்றன. வேறுபாட்டு நிலவாடகை நிலச் சொந்தக்காரரால் தனதுரிமையாக்கப்படுகிறது.

நிலத்தின் வளமைத் தன்மைக்கும் இடத்திற்கும் தக்கவாறுள்ள வாடகை வேறுபாட்டு நிலவாடகை 1 என அழைக்கப்படுகிறது. மேலும் மேலும் அதிக நிலங்கள் பண்படுத்தப் பட்டு விவசாயத்திற்கு கொண்டுவரப்படுவதை நோக்கமாக கொண்ட விரிவான விவசாயத்துடன் அது சேர்ந்தது.

தீவிர விவசாயத்திற்கு மாறுவதுடன் வேறுபாட்டு நில வாடகை 2 முற்போக்காக வளர்கிறது. அதே நிலத்தில் தொடர்ந்து முதலீடு செய்யப்பட்ட பொழுது அது தோன்றுகிறது. சமூக உற்பத்தி விலையானது, குறைந்த பயனுள்ள மூலதன முதலீடுகளால் விளைந்த உற்பத்தியின் விலையால் தீர்மானிக்கப்பட்டதால் அதிகப் பயனுள்ள செலவு அதிக இலாபத்தைத் தரும். குத்தகைக் காலத்தில் இந்த அதிக இலாபம், குத்தகை எடுத்தவரால் உரிமையாக்கப்படுகிறது. குத்தகையைப் புதுப்பிக்கப்பட வேண்டியிருப்பின், நிலம் மிகவும் பயனுள்ளதாக இருப்பதால் நிலச்சொந்தக்காரர் நில வாடகையை உயர்த்துகிறார். இவ்வாறாக வேறுபாட்டு நிலவாடகை 2ஐ தனதுரிமையாக்குகிறார்:

பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் நிலத்தின் ''விளைவுகள் குறைந்து கொண்டிருக்கும் விதி'' என்ற ஒரு புதிய விதியைக் கண்டு பிடித்துள்ளனர். சுருக்கமாக, ஒரு குறிப்பிட்ட எல்லையை (''ஓர் உயிரியலான உள்ளார்ந்த ஆற்றல்'') அடைந்ததும் மூலதன முதலீட்டுச் செலவுகள் மேலும் மேலும்

குறைந்த பயனைத் தரும். இது நுகரும் பொருள்களுக்கான தட்டுப்பாட்டிற்கும் அவற்றின் உயர்ந்த விலைகளுக்கும் காரணமாகிறது என்று கூறப்படுகிறது. இக்கருத்து மார்க்ஸ், லெனின் ஆகியோரால் தவறு என நிரூபிக்கப்பட்டது. நிகழ்ச்சிகளும் அக்கருத்து தவறு என்பதைக் காட்டி விட்டன.

விவசாயத்தில், விஞ்ஞானம், தொழில்நுணுக்கம் ஆகியவற்றின் சமீபத்திய ஆராய்ச்சி விளைவுகளைப் புகுத்தியதால் மகசூல் உயர்ந்திருப்பதற்கும் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்திருப்பதற்கும் நல்ல ஒரு சான்றுள்ளது.

### சார்பற்ற நிலவாடகை

மிக நல்ல தரமுள்ள நிலம், சராசரி தரமுள்ள நிலம் ஆகியவற்றில் மட்டுமே வேறுபாட்டு நிலவாடகை உருவாக்கப்படுகிறது. மிக மோசமான தரமுடைய நிலம் எவ்வித வாடகையையும் உருவாக்காது. இருப்பினும் விவசாய விளைபொருள்களுக்கான தேவை அதிகரித்துக் கொண்டே வருவதால் தரத்தில் குறைந்த நிலத்தையும் உழுது பயிரிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இத்தகைய நிலச் சொந்தக்காரர்களும் வாடகை பெற வேண்டும். இதை அவர்கள் பெற வேண்டுமானால் அவர்கள் தங்களுடைய உற்பத்தி விலையை விட அதிக விலைக்கு அவர்களுடைய பண்ணைப் பொருள்களை விற்க வேண்டும். சராசரி இலாபத்தை விட அதிகமாக இருக்கும் உபரி மதிப்பு சார்பற்ற நிலவாடகையாகிறது. இது எல்லா பயிரிடப்பட்ட நிலங்களிலிருந்தும் சேருகிறது.

தொழிலக மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவை விட, விவசாய மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு குறைவாக இருக்கும் என்பது தான் சார்பற்ற நில வாடகைக்கான நிபந்தனை. தொழில் துறையில் உற்பத்தி விலையை விட அதிகமாக இருக்கும் மதிப்பை, விவசாயத்தில் சார்பற்ற நில வாடகையாக மாற்ற முடியும்.

கீழ்க் கண்ட அட்டவணையிலிருந்து சார்பற்ற நில வாடகை எப்படி உருவாயிற்று என்பதை காண முடியும்:

| பிரிவுகள் | மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு | உபரி மதிப்பு | உற்பத்திப் பொருளின் விலை | தனிப்பட்ட இலாப விகிதம் | சராசரி இலாப விகிதம் | சராசரி இலாபம் | உற்பத்தியின் விலை | சார்பற்ற நில வாடகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொழில் | 80c + 20v | 20 | 120 | 20% | 20% | 20 | 120 | |
| விவசாயம் | 60c + 4v | 40 | 140 | 40% | 20% | 20 | 120 | 20 |

இந்த உதாரணத்தில் மதிப்பிற்கும் உற்பத்தியின் விலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு 20 அலகுகள் ஆகின்றன.

தனியார் நிலவுடைமையின் ஏகபோகம் இருக்கும் காரணத்தால் சமூக உற்பத்தி விலையை விட அதிகமாக இருக்கும் மதிப்பை சார்பற்ற நில வாடகையாக மாற்ற முடியும். இந்த ஏகபோகம் இல்லாவிட்டால் எல்லா முதலாளிகளுக்கிடையேயும் அதிகமாக இருக்கும் உபரி மதிப்பு மறு வினியோகம் செய்யப்பட்டிருக்கும். பெரும் தனியார் நிலவுடைமை இருப்பதானது தொழிலகத்திலிருந்து மூலதனம் விவசாயத்திற்கு மாறுவதைத் தடை செய்கிறது. எனவே தான் விவசாய விளைபொருள்களின் விலைகள், உற்பத்தி விலையை விட அதிகமாக இருக்கின்றன. விவசாய விளைபொருள்களுக்குக் கிராக்கியை உண்டுபண்ணும் சார்பற்ற நில வாடகையே உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை இழக்கச் செய்கிறது.

இப்பொழுது தொழில் துறையில் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில், விவசாயத்தில் புதிய இயந்திரங்கள் புகுத்தப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு அதிகமாக இருக்கும். இருப்பினும் தொழில் துறைக்கும் விவசாயத்திற்கும் இடையே, இந்த விஷயத்தில் ஒரு கணிசமான இடைவெளி இருக்கிறது. விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு, தொழில் துறை மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவுக்குச் சமமாக இருந்தாலும், தனியார் நிலவுடைமை ஏகபோகம் தொடர்ந்து இருக்கும் வரை, சார்

பற்ற நில வாடகையும் இருக்கும். சார்பற்ற நிலவாடகை யின் மூலாதாரம் மட்டும் மாறும். ஏனெனில் விவசாய விளை பொருள்களை வாங்குவோர்கள் அதன் மதிப்பைக் கொடுப் பார்கள். இவ்வாறாக பெரும் நிலச்சொந்தகாரர்கள், சமு தாயத்திற்கு ஒரு விதமான கப்பம் விதிக்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் பணக்காரர்களாவார்கள்.

நிலத்தை தேசியமயமாக்குவது சார்பற்ற நிலவாடகை யை ஒழிக்க வழிகோலுகிறது. அது விவசாயத்திற்காக வரக் கூடிய மூலதன ஓட்டத்தைத் தடுக்கும் தடங்கல்களை அகற்றி, நிலத்தை வாங்கப் பணத்தைச் செலவழிப்பதை அவசிய மற்றதாக்கி, வேளாண்மை முறைகளை மேம்பாடடையச் செய்வதில் குத்தகைக்காரர்களை ஆர்வம் கொள்ளச் செய்து, விவசாயத்தில் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைய நல்ல நிலைமைகளை அது தயார் செய்கிறது.

## விவசாயத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி

விவசாயத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்பது உண்மையில் தொழில் துறையில் செயல்படும் அதே விதி களுக்கு உட்பட்டது. இருப்பினும் அவை தோன்றும்விதம் குறிப்பிடத்தக்கதாகத் தோன்றுகிறது. அதற்குக் காரணம் விவசாயத்தில் வடிவெடுத்திருக்கும் பொருளாதார உறவு அமைப்பாகும். மேலும் அந்தத் துறையின் இயல்பும் காரண மாகும். தனி நிலவுடைமை ஏகபோகமும் முதலாளித்துவத் திற்கு முந்திய நிலை உறவுகளின் மிச்ச சொச்சங்களும், விவ சாயம் ஏன் தொழில் துறையை விட பின் தங்கியுள்ளது என்று விளக்குகின்றன. முதலாளித்துவத்திற்கு முந்திய நிலை சுரண்டல், முதலாளித்துவ சுரண்டல் ஆகிய இரட்டைச் சுரண்டல்களை விவசாயிகள் தாங்க வேண்டியுள்ளது. அவை அவர்களுடைய நிலைமையை கடினமாக்குகின்றன; உற்பத்திச் சக்திகளின் முன்னேற்றத்தைப் பின்னுக்கு இழுக்கின்றன. விவசாய உற்பத்தியின் சிதறி கிடக்கும் தன்மை, பருவக் காலத்திற்கு மட்டுமே வேலை இருக்கும் விவசாய வேலை, உற்பத்திப் பொருள்களை உடனே விற்க வேண்டும் என்ற

நிலை ஆகியவற்றை ஏகபோகங்கள் விவசாயிகளைக் கொள்ளை அடிக்கச் சாதகமாக எடுத்துக் கொள்ளுகின்றன.

இவ்வாறாக உழைக்கும் விவசாயிகள் ஆலைத் தொழிலாளர்களைப் போல் சுரண்டலுக்கு உட்படுகிறார்கள். அவர்களுடைய பொதுவான எதிரி மூலதனம். அது அவர்களைச் சுரண்ட வேறுபட்ட உருவங்களையும் முறைகளையும் கையாளுகிறது. வெகு காலத்திற்கு முன், அடிமை உடைமை உற்பத்தி முறையின் கீழ் தோன்றிய, நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு முதலாளித்துவத்தின் கீழும் தொடர்ந்து வளர்கிறது. நகர முதலாளிகள், சமமில்லா பரிவர்த்தனை, கடும் வட்டிக்குக் கடன் கொடுப்போரின் கடன், இது போன்ற இன்னும் பிற வழிகள் மூலம் உழைக்கும் விவசாயிகளைச் சுரண்டுகிறார்கள்.

விவசாயத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி விவசாயிகளுக்கிடையே ஒரு வேறுபாட்டுப் போக்கை உண்டாக்குகிறது. அவர்களில் பலரின் அழிவை இது குறிக்கிறது. சிறிய, மத்திய தர விவசாயிகளைக் கூலித் தொழிலாளர்களாக அது மாற்றுகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கு நடைமுறையிலுள்ள விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் போது முக்கியமாக தீவிரப்படுத்தப்படுகிறது. இதன் விளைவால் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை முழுக்க முழுக்கக் குறைகிறது. முதலாளித்துவத்தின் கீழ் இருக்கும் உழைக்கும் விவசாயிகளின் நிலை, அவர்களை முதலாளித்துவ ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடும் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டாளியாக்குகிறது.

அத்தியாயம் 6

# சமூக மூலதனத்தின் புனருற்பத்தி. பொருளாதார நெருக்கடிகள்

## 1. மொத்த சமூக உற்பத்திப் பொருள்

உற்பத்தியைச் சமுதாயம் முழுவதிலும் மீண்டும் மீண்டும் தொடர்ந்து செய்தலும் உற்பத்தியைப் புதுப்பித்தலும் சமூக புனருற்பத்தி என அழைக்கப்படும். அதன் பொழுது சமூக மூலதனமும் சமூக மொத்த உற்பத்திப் பொருளும் புனருற்பத்தி செய்யப்படுகின்றன.

தனிப்பட்ட மூலதனங்களின் மொத்தம் சமூக மூலதனத்தை உருவாக்குகிறது. மொத்த சமூக உற்பத்திப் பொருள் என்பது ஒரு குறிப்பிட்டக் காலத்தில், பொதுவாக ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பொருளாயதப் பொருள்களாகும். முதலாளித்துவ சமுதாயத்தில் மொத்த சமூக உற்பத்திப் பொருள் பரிவர்த்தனைப் பண்ட வடிவத்தில் தோன்றுகின்றது. மதிப்பின்படி அது மூன்றுபாகங்களாகப் பிரிக்கப்படுகிறது: மாறுத மூலதனம் (c), மாறும் மூலதனம் (v), உபரிமதிப்பு (m) என்பன. முதல் பகுதி (c) என்பது சமூக உற்பத்திப் பொருளை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட உற்பத்திச் சாதனங்களில் அடங்கியிருக்கும் மதிப்பாகும். அறிந்தது போல் இம்மதிப்பு ஸ்தூலமான உழைப்பால் பாதுகாக்கப்பட்டு புதிய உற்பத்திப் பொருளுக்கு மாற்றப்படுகிறது. இரண்டாவது, மூன்ருவது பகுதிகள் உற்பத்தி செய்யப்பட்ட புதிய மதிப்பாகும். அதாவது

சூட்சும உழைப்பின் விளைவு. எனவே ஒரு தனி பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பு, மொத்த சமூக உற்பத்திப் பொருளின் மதிப்பு ஆகிய இரண்டும் c+v+mஐ உள்ளடங்கியுள்ளன. மொத்த சமூக உற்பத்திப் பொருளில் உற்பத்தி செய்யப் பட்ட புதிய மதிப்பு தேசிய வருமானம் என அழைக்கப்படும்.

## சமூக உற்பத்தியின் இரு பகுதிகள்

சமூக உற்பத்திப் பொருள் அதன் இயல்பான வடிவத்தில் உபயோக மதிப்புகளைக் கொண்டுள்ளது. பொருளாதார நோக்க ரீதியில் அவை உற்பத்திச் சாதனங்கள், நுகர்வுப் பொருள்கள் எனப் பிரிக்கப்படு கின்றன. உற்பத்திச் சாதனங்கள்—உழைப்புச் சாதனங் கள், கச்சாப் பொருள்கள், துணைப் பொருள்கள்—பிற் படும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன. நுகர்வுப் பொருள்கள் முதலாளித்துவத்திலுள்ள எல்லா வர்க்கங் களுக்கும் சொந்த நுகர்விற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

மொத்த சமூக உற்பத்திப் பொருளின் இந்த உறுப்பு களின் இறுதிப் பயன்படி எல்லா சமூக உற்பத்தியும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவையாவன: பிரிவு 1: உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி; பிரிவு 2: நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி.

சமூக உற்பத்திப் பொருளை விற்று பணமாக்கத் தேவை யான நிபந்தனைகளைக் காணுவதற்காக, நாம் சமூக உற் பத்திப் பொருளை அதன் மதிப்பு வடிவிலும் இயல்பான வடிவிலும் பரிசீலனை செய்ய வேண்டும். விலையைப் பெறு வதிலுள்ள பிரச்சினை, எவ்வாறு எல்லா சமூக உற்பத்திப் பொருளின் பாகங்களையும் மதிப்பாகவும், பண்ட வகையாக வும் மாற்றீடு செய்ய முடியும் எனக் காணுவதிலும், எவ்வாறு எல்லா சரக்குகளுக்கும் விலை பெறப்படுகின்றன, அதாவது அவை எவ்வாறு நுகர்வோரை அடைகின்றன என காணுவதி லும் சமுதாயத்தின் உற்பத்திச் சாதனங்களின் தேவை யும் நுகர்வு பொருள்களின் தேவையும் எவ்வாறு திருப்திப் படுத்தப்படுகின்றன என காணுவதிலும் அடங்கியுள்ளது.

## 2. முதலாளித்துவ புனருற்பத்தி: சாதாரணமானதும் விரிவுபடுத்தப்பட்டதும்

மார்க்ஸ் அவருடைய ஆய்வு முழுவதிலும் இப்பிரச்சினையைச் சோதிக்கும்பொழுது சில விஞ்ஞான முறை பாகுபடுத்தல்களைக் கையாளுகிறார். அவை அப்பிரச்சினைகளின் தீர்விற்குத் தேவை. முதலாளித்துவத்திற்கு முந்திய பொருளாதார உருவங்களிலிருந்து பிரித்ததாகவும், எல்லா பரிவர்த்தனைப் பண்டங்களும் அவற்றின் மதிப்பிற்கே விற்கப்பட்டதாக கருதி, மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவிலும் உபரி மதிப்பு விகிதத்திலும் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்தும் அன்னிய வாணிகத்திலிருந்தும் பிரித்தெடுத்ததாகவும் அவர் முதலாளித்துவ புனருற்பத்தியைப் பரிசீலிக்கிறார்.

### சாதாரண புனருற்பத்தியின் கீழ் பண்டங்களை விலையாக்குதல்

சாதாரண புனருற்பத்தி முதலாளித்துவத்திற்கு தனி மாதிரியாக இருப்பதல்ல. எவ்வாறுயினும் அது விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியின் மிக முக்கியமான உறுப்பாகும். எனவே சமூக மூலதனத்தின் புனருற்பத்தியின் பகுத்தாய்வு சாதாரண புனருற்பத்தியிலிருந்து ஆரம்பமாகிறது.

சாதாரண புனருற்பத்திக்கு மார்க்ஸ் சம்பிரதாயமாக கொடுக்கும் மாதிரியைக் கவனிப்போம். இந்த உதாரணத்தில் சமூக மூலதனத்தின் மொத்தம் 7500 அலகுகளாகும். இவற்றில் 5000 அலகுகள் (4,000c + 1,000v) பிரிவு 1ன் கிளைகளிலும் 2500 அலகுகள் (2,000c + 500v) பிரிவு 2ன் கிளைகளிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. உபரி மதிப்பின் விகிதம் 100 சதவீதம் எனில் மொத்த சமூக உற்பத்திப் பொருள் 9000 அலகுகளாக இருக்கும்:

உற்பத்திச் சாதனங்கள் (1) 4,000c + 1,000v + 1,000m = 6,000;

நுகர்வுப் பொருள்கள் (2) 2,000c + 500v + 500m = 3,000.

பிரிவு 1ன் 6,000 அலகுகள் உற்பத்திப் பொருளில் 4,000 அலகுகள், உற்பத்தி செய்யும் பொழுது செலவான மாறாத மூலதனத்தை மாற்றீடு செய்ய அதே பிரிவில் செலவு

செய்யப்பட வேண்டும். மீதியுள்ள 1,000v + 1,000m ஆகிய வற்றை பிரிவு 1ல் விலையாக்க முடியாது. அதில் உற்பத்திச் சாதனங்கள் அடங்கியுள்ளன. எனவே இந்தப் பகுதியைத் தொழிலாளர்கள், முதலாளிகள் ஆகியோரின் சொந்த நுகர் விற்குப் பயன்படுத்த முடியாது. எனவே பகுதி 1 (v + m) நுகர்வுப் பொருள்களுக்காக பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும்.

பிரிவு 2ல் உற்பத்திப் பொருளில் 1,000 அலகுகள் (v+m) விலையாக்கப்படுகின்றன. ஆனால் மற்ற 2,000 அலகுகளை விலையாக்க முடியாது. ஏனெனில் செலவழிக்கப்பட்ட மாறாத மூலதனத்திற்கு ஈடு செய்ய உற்பத்தி சாதனங்களுக்காக அவை பரிவர்த்தனை செய்யப்பட வேண்டியுள்ளது. அக்காரணத்தால் தான் பகுதி 1 (v+m) பகுதி 2cக்காக பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

எனவே, சாதாரண புனருற்பத்தியில் மொத்த சமூக உற்பத்திப் பொருள் விலையாக்குவதற்கான ஒரு நிபந்தனை 1(v+m)=2c என்ற சமன்பாடு.

இரண்டாவது நிபந்தனை பகுதி 1ன் மொத்த உற்பத்திப் பொருள் பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றின் மாறாத மூலதனத்திற்கு சமமாக வேண்டும் என்பதாகும். 1(c+v+m)=1c+2c. மூன்றாவது நிபந்தனை பகுதி 2ன் மொத்த உற்பத்திப் பொருள், இரு பிரிவுகளிலும் உள்ள மாறும் மூலதனம், உபரி மதிப்பு ஆகியவற்றின் மொத்தத்திற்குச் சமமாக வேண்டும் என்பதுதான். 2 (c + v + m) = 1 (v + m) + 2 (v + m).

## விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியின் கீழ் உற்பத்திப் பொருளை விலையாக்குவதற்கான நிபந்தனைகள்

விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியில் உபரி மதிப்பின் ஒரு பகுதி மூலதனமாகிறது. அதாவது அது மாறாத மூலதனம், மாறும் மூலதனம் ஆகியவற்றுடன் சேர்க்கப்படுகிறது.

விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியின் மாதிரியில் பிரிவு 1ல் உள்ள மூலதனம் 5,000 அலகுகள்: 4,000c + 1,000v; பிரிவு 2ல் 2,250 அலகுகள்: 1,500c + 750v. m 100 சதவீதத்

திற்குச் சமமானுல் உற்பத்திப் பொருள்

$$\left.\begin{array}{l} 1\ \ 4{,}000c + 1{,}000v + 1{,}000m = 6{,}000 \\ 2\ \ 1{,}500c + 750v + 750m = 3{,}000 \end{array}\right\} 9000$$ அலகுகளாக இருக்கும்.

பிரிவு 1ல் பாதி உபரி மதிப்பு (500 அலகுகள்) அதிகப் படியான மூலதனமாக மாறுவதாக நாம் கொள்ளுவோம். மூலதனப்படுத்தப்பட்ட உபரி மதிப்பானது, மாருத மூல தனம் மாறும் மூலதனம் ஆகியவற்றிற்கு இடையே, செயல் பட்டுக் கொண்டு இருக்கும் மூலதனத்தைப் போல் அதே விகிதாச்சாரத்தில் வினியோகிக்கப்படுகிறது. அதாவது $\frac{4000c}{1000v}=\frac{4}{1}$. அப்போது 400 அலகுகள் மாருத மூலதனத்துடன் சேர்க்கப்படும்; 100 அலகுகளும் மாறும் மூலதனத்துடன் சேர்க்கப்படும். எனவே பிரிவு 1ல் உற்பத்திச் சாதனங்களின் நுகர்வு 4400 அலகுகளாக இருக்கும். அது 1,600 அலகு களை (1,100v + 500m) விலைபோகாத உற்பத்திப் பொருளாக விட்டு விடுகிறது. அவற்றை நுகர்வுப் பொருள்களுக்காக பரிவர்த்தனை செய்ய வேண்டும்.

பிரிவு 2ல் செலவழிக்கப்பட்ட மாருத மூலதனம் (1,500c) புதிய உற்பத்திச் சாதனங்களால் மாற்றீடு செய்யப்பட வேண்டும். இத்துடன் பிரிவு 1, உற்பத்திச் சாதனங்களுக் காகப் பரிவர்த்தனை செய்வதற்காக 100 அலகுகள் நுகர்வுப் பொருள்கள் தேவை எனக் கேட்டுள்ளது. அது பிரிவு 2ல் மூலதனம் திரள்வதற்கு வகை செய்கிறது. பிரிவு 2ல் உள்ள உபரி மதிப்புமூலம் (m) மாருத மூலதனத்துடன் 100 அலகு கள் அதிகமாகச் சேர்க்கப்படுகின்றன. இவ்வாருக 2cயானது 1,500+100=1,600 அலகுகளை அடக்கியுள்ளது. இதனுல் பிரிவு 2ல் உள்ள மாறும் மூலதனத்தை அதிகப்படுத்துவது அவசியமாகிறது. பிரிவு 2ல் மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவு $\frac{2}{1}\left(\frac{1500c}{750v}\right)$ ஆகும். அதனுல் உபரி மதிப்பிலிருந்து எடுக்கப்பட்ட 50 அலகுகளை மாறும் மூலதனத்துடன் சேர்த்து அதை அதிகப்படுத்த வேண்டும். அதன் விளைவால் பிரிவு 2ல் உபரி மதிப்பில் (m) 150 அலகுகள் மூலதனம் திரள் வதற்குப் பயன்படுத்தப்பட்டன: 600 அலகுகள் முதலாளி யின் சொந்த நுகர்விற்காக ஒதுக்கப்படுகின்றன.

மொத்த சமூக உற்பத்திப் பொருளின் விலையைப் பெறுவதற்கான அடிப்படை நிபந்தனை பிரிவு 2ல் உள்ள மாறாத மூலதனத்தை விட (c), பிரிவு 1ல் உள்ள மாறும் மூலதனம், உபரி மதிப்பு (v + m) ஆகியவற்றின் மொத்த மதிப்பு அதிகமாக இருக்க வேண்டும். அப்படி இல்லை எனில், உபரி மதிப்பைச் சேர்ப்பதால் பிரிவு 1ல் மூலதனத்தை அதிகரிக்க முடியாது. பிரிவு 1ன் மொத்த உற்பத்திப் பொருள் இரு பிரிவுகளிலும் செலவு செய்யப்பட்ட மாறாத மூலதனத்தின் மொத்தத்தை விட அதிகமாக இருக்க வேண்டும். புதிதாக உருவாக்கப்பட்ட எல்லா புதிய மதிப்பும் பிரிவு 2ன் உற்பத்திப் பொருளின் மதிப்பை விட அதிகமாக இருக்க வேண்டும்.

இவ்வாறாக சமூக உற்பத்தி, அதனுடைய எல்லா பகுதிகளின் ஒரு சிக்கலான பின்னலாலும் உறவுகளாலும் குணும்சப்படுத்தப்படுகிறது. உற்பத்திச் சாதனங்களுக்கும் நுகர்வுப் பொருள்களுக்கும் இடையிலும் இந்தப் பிரிவுகளில் உள்ள பல்வேறு கிளைகளுக்கிடையேயும் குறிப்பிட்ட சம நிலை தேவைப்படுகிறது. ஆனல் முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தியில் நிலவி வரும் போட்டி, அராஜகம் ஆகியவற்ருல் இந்த சம நிலை நிலைகுலைந்து விடுகிறது. அதனுல் பொருள்களை விற்பது மிகக் கடினமாகிறது.

## உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி வளர்ச்சியின் முன்னுரிமை விதி

மார்க்சின் சமூக மூலதனத்தின் புனருற்பத்தியைப் பற்றிய போதனையை லெனின் வளர்த்தார். அவர் மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவின் வளர்ச்சியினை, விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்திக்கான மார்க்சின் திட்டத்தில் புகுத்தினர். மூலதனத்தின் உள்ளார்ந்த கட்டமைவின் வளர்ச்சி, தொழில்நுணுக்க முன்னேற்றத்திற்கு இசைவாக இருக்கிறது. இந்த அடிப்படையில் அவர், நுகர்வுப் பொருள்களின் உற்பத்திக்கு உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியின் வளர்ச்சியின் முன்னுரிமை விதியை உருவாக்கினர். வளர்ச்சி விகிதத்திலுள்ள இடைவெளி பெரிதாகவும் இருக்கலாம், சிறியதாகவும் இருக்கலாம். அது தொழில் துறை வளர்ச்சியின்

பல்வேறு கட்டங்களில் பல்வேறு வித அளவில் பலனைத் தரக் கூடிய பல காரணிகளைப் பொறுத்தது. தற்காலத்தில் இரு பிரிவுகளிலும் வளர்ச்சி விகிதங்கள் ஒன்றை ஒன்று நெருங்கி கொண்டிருக்கின்றன. இருப்பினும் பிரிவு 1ன் வளர்ச்சி முன்னுரிமைதான் இன்னமும் ஆதிக்கத்தில் உள்ளது.

## 3. முதலாளித்துவப் புனருற்பத்தியின் எதிரும் புதிருமான முரண்பாடுகளும் பொருளாதார நெருக்கடிகளும்

### முதலாளித்துவத்தின் முக்கிய முரண்பாடு—பொருளாதார நெருக்கடிகளுக்கான அடிப்படைக் காரணம்

முதலாளித்துவ உற்பத்தி முறை ஏற்றத்தாழ்வுடன் வளர்கிறது. அதாவது உற்பத்தியின் வளர்ச்சியை மாற்றி உற்பத்தியின் வீழ்ச்சி ஏற்படுகிறது; செயலூக்கமான வளர்ச்சிக்குப் பதிலாகத் தேங்கிய நிலை ஏற்படுகிறது. இதற்கான காரணம், முதலாளித்துவத்தின் எதிரும் புதிருமான முரண்பாடுகள், முதல் முதலாக அதனுடைய பிரதான முரண்பாடு தான். மூலதன திரட்சி, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி ஆகியவற்றின் விளைவால் உற்பத்தி சமுதாயமயமாக்கப்படுவது அதிகரித்துக் கொண்டேயுள்ளது. பெரும் தொழில் நிலையங்களும் தொழில் துறை மையங்களும் தோன்றுகின்றன. அவற்றில் பூர்ஷ்வா சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளின் பெரும் பகுதி ஒருமுனைப்படுத்தப்படுகிறது. அதே நேரத்தில் சமூக உழைப்புப் பிரிவினை, உற்பத்தியில் ஒத்துழைப்பு தனிச் சிறப்புடையதாக்கல் ஆகியவை தீவிரமாகின்றன. உற்பத்தியாளர்களிடையேயுள்ள தொடர்புகள் விரிவுபடுத்தப்படுகின்றன. அவர்கள் மேலும் அதிகமாக ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கின்றனர். இறுதியாக, துண்டு துண்டாக இருந்த உற்பத்தியின் நிகழ்ச்சிப் போக்குகள் ஒரே சமூக நிகழ்ச்சிப் போக்காக இணைகின்றன. முதலாளித்துவம் முன்னேற முன்

னேற பிழைப்பிற்கான பொருளாதாரம் மறைகிறது. உள்நாட்டு,வெளிநாட்டு வாணிகம் வளர்கிறது. உலக மார்க்கெட் உருவாக்கப்படுகிறது. பரிவர்த்தனைப் பண்டங்கள் ஆயிரமாயிரமானவர்களின் உழைப்பின் விளைவால் உருவானவையாகின்றன. இருப்பினும் உற்பத்திப் பொருள்களை தனி முதலாளி தனதுரிமை ஆக்குவதும் தொடர்கிறது. சமூக குணும்சம் படைத்த உற்பத்தி பெரும் முதலாளிகளின் வளத்திற்காக நடைபெறுகிறது. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு மற்ற எதிரும் புதிருமான முரண்பாடுகள் தோன்ற வழி செய்கிறது. அவை எல்லாம் சேர்ந்து பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிக்கின்றன.

தனிப்பட்ட தொழில் நிலையங்களில் உள்ள உற்பத்தி ஒழுங்கமைப்புக்கும் முழு சமுதாயத்தில் உள்ள அராஜக உற்பத்தி முறைக்கும் இடையேயுள்ள முரண்பாட்டில் முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடு வெளிப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு தொழில் நிலையத்திலும் அதனுடைய பிரிவுகளின் வேலை ஒன்றுடன் ஒன்று ஓரளவு ஒத்திசைந்திருக்கச் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி முறையாலேயே ஓரளவு ஒழுங்கு முறை சுமத்தப்படுகிறது. சமுதாயம் முழுவதிலே தனியார் உடைமையில் அமைந்த உற்பத்தி இலாப வேட்டையை நோக்கிச் செலுத்தப்படுகிறது. அது தன்னியல்பாக வளர்கிறது; அராஜகத்தால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. அதன் விளைவால் அளவுப் பொருத்தம் இடைவிடாது நிலைகுலைக்கப்படுகிறது. சமமற்ற நிலை பொதுவான நிலையாக மாறினுல் சமூக உற்பத்திப் பிரிவுகளுக்கும் அதனுடைய பல்வேறு துறைகளுக்கும் இடையே கடுமையான ஏறுமாருன தன்மைகள் எழுகின்றன. எனவே நெருக்கடி தோன்றுகிறது.

எல்லையற்று விரிவுபடுத்துவதை நோக்கிச் செல்லும் முதலாளித்துவ உற்பத்திப் போக்கிற்கும், எல்லைக்குட்பட்ட தீர்க்கப்படக் கூடிய தேவைக்கும் இடையேயுள்ள முரண்பாட்டில் கூட முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடு வெளிப்படுகின்றது. உச்ச பட்ச இலாப ஆசையாலும் போட்டியாலும் முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சி தூண்டிவிடப்படுகிறது. இலாப வேட்டையின் விளைவில் அதிக அளவில்

உழைப்பு சுரண்டப்படுதலாகும். அது உழைக்கும் மக்களின் நிலையில் பின்னடைவை ஏற்படுத்தக் காரணமாகிறது. அவர்களுடைய தீர்க்கப்படக்கூடிய தேவை உற்பத்தியின் வளர்ச்சியைவிட பின்தங்குகிறது. பிரிவு 1, பிரிவு 2 ஆகியவற்றிற்கு இடையே உள்ள பொருத்தத்தை இது பாதிக்கிறது. பிரிவு 2ஐச் சார்ந்திராமல் பிரிவு 1 ஓரளவு சுதந்திரமாக விரிவடைய முடியும். ஆனால் இச்சுதந்திரம் வெறும் சார்புடையது. வாங்கும் சக்தியின் பற்றாக்குறை பிரிவு 2ன் வளர்ச்சிக்குத் தடையாகச் செயல்படுகிறது. இறுதியில் அது பிரிவு 1ன் வளர்ச்சியைப் பாதிக்கிறது. ஏன் எனில் பிரிவு 1, உற்பத்திச் சாதனங்களை பிரிவு 2க்கு அளிக்கிறது. அதன் விளைவால் உற்பத்திப் பொருளை விலையாக்குவதற்கான நிலைகள் தொந்தரவுக்குள்ளாக்கப்படுகின்றன. திரும்பத் திரும்ப நிகழ்கிற பொருளாதார நெருக்கடிகள் தோன்றுகின்றன.

முதலாளித்துவ பிரதான முரண்பாடு, உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையே எதிரும் புதிருமான உருவத்தில் தோன்றி, கூர்மையான வர்க்க முரண்பாடுகளுக்கும் பூர்ஷ்வா சமுதாய வர்க்கங்களின் முழுக்க வேறுபாடான நலன்களுக்கும் குறிக்கோள்களுக்கும் காரணமாக இருக்கிறது. முதலாளித்துவ உற்பத்தியின் திட்டமிட்ட வளர்ச்சியின் சாத்தியக் கூற்றை அது தள்ளும்படி செய்கிறது.

இவ்வாறாக, முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு பொருளாதார நெருக்கடிகளைத் தவிர்க்க முடியாததாக்குகிறது.

முதலாளித்துவ பொருளாதாரக் கட்டுப்பாட்டைப் பயன்படுத்தி, முதலாளித்துவத்தின் கீழ் உள்ள பொருளாதார நெருக்கடிகளை அகற்ற முடியும் என்று பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் அடிக்கடி கூறுகிறார்கள். ஆனால் அத்தகைய எல்லா முயற்சிகளும் தவிர்க்க முடியாதபடி தோல்வியில் முடிவடைகின்றன என்று நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. முதலாளித்துவ உறவுகளை அழித்து, உற்பத்தியை சோஷலிச முறையில் சமூகமயமாக்குவதால் மட்டுமே பொருளாதார நெருக்கடிகளுக்கு முடிவு கட்ட முடியும்.

## முதலாளித்துவப் புனருற்பத்தியின் சுழற்சித் தன்மை

பொருளாதார நெருக்கடிகள் குறிப்பிட்ட இடைவெளியில் மீண்டும் மீண்டும் நடைபெறுகின்றன. பிரிட்டனில் 1825ம் ஆண்டு முதல் தொழில் துறைச் சிக்கல் ஏற்பட்டது. அப்பொழுது முக்கியத் தொழில் துறைகளில் இயந்திர உற்பத்தி மேலாதிக்கம் செலுத்தியது. 1836ம் ஆண்டு நெருக்கடி பிரிட்டனையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் தாக்கியது. 1847ம் ஆண்டு நெருக்கடி, முதலாவது உலகப் பொருளாதார நெருக்கடியாகும். ஏகாதிபத்திய யுகத்தில் நெருக்கடிகள் அடிக்கடி நிகழலாயின. ஏகபோகத்திற்கு முந்திய சகாப்தத்தில் அவை ஒவ்வொரு 10 அல்லது 11 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடந்தன. ஏகாதிபத்திய யுகத்தில், ஒவ்வொரு 7—9 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது அதை விட குறைந்த காலத்தில் நடந்தன. முக்கியமாக முதலாளித்துவப் பொருளாதாரம் அழியக் கூடிய அளவான நெருக்கடிகள் 1920-21, 1929-33, 1937-38 ஆகிய ஆண்டுகளில் நடந்தன. முதலாளித்துவத்தின் பொதுவான நெருக்கடி நிலை காலத்திலேயே இந்த நெருக்கடிகள் தோன்றின.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு முக்கியமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் அடிக்கடி ஏற்படலாயின. 1957-58ம் ஆண்டுகளில் ஒரு பொருளாதார நெருக்கடி பல வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளை ப்பிடித்தது. 1974-75ம் ஆண்டுகளில் உலகப் பொருளாதார நெருக்கடி ஒன்று வெடித்தது. அது எல்லா தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளையும் தாக்கியது. போருக்குப் பின் ஏற்பட்ட எல்லா பொருளாதார நெருக்கடிகளிலும் அது கடுமையானதும் மிக நீண்ட நாட்களுக்கு இருந்ததுமாகும்.

நெருக்கடிகள் மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன என்றால் முதலாளித்துவ புனருற்பத்தி சுழலும் தன்மையுடையது என்று பொருள். ஒரு நெருக்கடியிலிருந்து மறு நெருக்கடிக்குச் செல்லும் முதலாளித்துவ பொருளாதார இயக்கம் தொழில் சுழற்சி என அழைக்கப்படும். அது, நெருக்கடி, மந்தம், மறு

மலர்ச்சி, பொருளாதார வீக்கம் என்ற அடுத்தடுத்த நான்கு கட்டங்களைக் கொண்டது.

தொழில் சுழற்சியின் முக்கியக் கட்டம் நெருக்கடி தான். அது ஒரு சுழற்சியின் முடிவிலும் அடுத்ததின் ஆரம்பத்திலும் வருகிறது. ஒரு நெருக்கடியின் போது முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளும் குறிப்பாக கூர்மையாகவும் அழிக்கக் கூடியதாகவும் மாறுகின்றன. நெருக்கடியின் கால அளவும், வீச்சும் தொழிற் சுழற்சியின் அடுத்த மூன்று கட்டங்களையும் தீர்மானிக்கின்றன.

பரிவர்த்தனைப் பண்டங்கள் ஒப்பியல்பாக தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுதலிலும் அவற்றை விற்பது கடினமாவதிலும் நெருக்கடி வெளிப்படுகிறது. பொருள்களை விற்பது கடினம் என்றால் மக்கள் எல்லோருடைய தேவைகளும் பூர்த்தியாகிவிட்டன என்பது பொருளல்ல. ஆனால் மக்களின் வாங்கும் சக்தி உற்பத்தியின் வளர்ச்சியை விட பின்தங்கியுள்ளது என்று பொருள். ஒரு நெருக்கடியின் போது உற்பத்தி சுருங்குகிறது; வேலையில்லாமை மிக அதிகமாகிறது; வழக்கத்திற்கு அதிகமான சிறு உற்பத்தியாளர்கள் அழிக்கப்படுகிறார்கள்.

அதிக உற்பத்தி என்ற ஒரு நெருக்கடி கடன், பணமுறை நெருக்கடியை உண்டாக்குகிறது. கடனைத் திருப்பித்தருவது நின்று விடுகிறது. வங்கிகளுக்குள் பணம் வருவது குறைகிறது. வட்டி வீதம் அதிகரிக்கிறது, வங்கிப் பத்திரங்களின் விகிதம் குறைகிறது.

எல்லோரையும் விட பொருளாதார நெருக்கடிகள் உழைக்கும் மக்களை மிகவும் பாதிக்கின்றன. முதலாளிகள் பெரும் வேலையின்மையைக் கூலியைக் குறைக்க சாதகமாக்கிக் கொள்ளுகின்றனர். இவ்வாறாக தொழிலாளி வர்க்கத்தின் நிலை ஒப்பியல்பான வகையிலும் தனிமுதல் வகையிலும் பின்னடைகிறது.

உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையேயுள்ள முரண்பாட்டிற்கு ஒரு தற்காலிகத் தீர்வைக் கொடுப்பதில் ஒரு நெருக்கடி முடிகிறது. தீர்க்கப்படக் கூடிய தேவைக்கு ஏற்ப உற்பத்தி கட்டாயமாகக் குறைக்கப்படுகிறது. பரிவர்த்தனைப் பண்டங்களின் அளிப்புகள் குறைக்கப்பட்டு குறைவான

பொருள்கள் மட்டுமே விற்கப்படுகின்றன (அவற்றில் சில வேண்டுமென்றே அழிக்கப்படுகின்றன). இவ்வாறாக பொருளாதார மந்தம் என்ற கட்டத்திற்குச் செல்ல நிலைமைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

பொருளாதார **மந்தம்** ஏற்படும் பொழுது உற்பத்தியின் வீழ்ச்சி நிறுத்தி வைக்கப்படுகிறது. பரிவர்த்தனைப் பண்டங்களின் அளிப்புகள் குறையத் தொடங்குகின்றன. சேம இருப்பு பண முதல்கள் தோன்றுகின்றன. வட்டி விகிதம் குறைக்கப்படுகிறது. மாறாத மூலதனம் புதுப்பிக்கப்படுதல் ஆரம்பிக்கிறது. இது பிரிவு 1ன் நடவடிக்கையைத் தூண்டுகிறது; வேலை வாய்ப்பில் ஒரு ஏற்றத்தைத் தோற்றுவிக்கிறது; இதன் விளைவாகப் பிரிவு 2ன் நடவடிக்கையைத் தூண்டுகிறது.

**மறுமலர்ச்சி** என்பது உற்பத்தியிலும் வாணிகத்திலும் கணிசமான வளர்ச்சியைக் குறிப்பிடுகிறது. பரிவர்த்தனைப் பண்டங்களின் விலைகள் உயருகின்றன. சிறுகச் சிறுக உற்பத்தி நெருக்கடிக்கு முந்திய நிலையை அடைகிறது.

பொருளாதார **விக்கம்** என்ற கட்டத்தில் உற்பத்தி நெருக்கடிக்கு முந்திய நிலையை விட மேல்நிலைக்குச் செல்லுகிறது. உற்பத்தி, வணிகம், கடன் மூலதனத்திற்கான தேவை அதிகரிக்கின்றன. வட்டி வீதம் உயருகிறது. சிறுகச் சிறுக, இலாப வேட்டையால் தூண்டப்பட்ட உற்பத்தி தீர்க்கப்படக் கூடிய தேவைக்கு மேல் அதிகமாகிறது. மார்க்கெட் விற்க முடியாத அதிக அளவு பொருள்களால் நிறைகிறது. மார்க்கெட் பிடிக்கும் சிரமம் தொடங்குகிறது. அடுத்த பொருளாதார நெருக்கடி ஆரம்பமாகிறது.

முதலாளித்துவ புனருற்பத்தியின் சுழலும் குணம்சம், முதலாளித்துவத்தின் தன்மையிலிருந்து புறவயமாக ஏற்பட்ட விளைவாகும். இந்தத் தொழில் சுழற்சியை அகற்ற பூர்ஷ்வா அரசாங்கங்கள் எடுத்த முயற்சிகள் எப்பொழுதும் தோல்வியில் முடிகின்றன.

அப்படி இருப்பினும் ஒவ்வொரு நெருக்கடியும் சுழற்சியும் ஒரு குறிப்பிட்ட மாதிரியைப் பின்தொடர்கின்றன. அது, அந்த நேரத்தில் ஒவ்வொரு நாட்டிலும் முதலாளித்துவ உலகிலும் குறிப்பிட்ட நிலைமையைச் சார்ந்திருக்கிறது. எனவே இரண்டாம் உலகப் போருக்கும் 1974-75க்கும்

இடையே உலக தொழில் சுழற்சி அதிகமான ஏற்றத்தாழ்வுடனும் கால முரண்பாட்டுடனும் இருந்தது. சுழற்சியின் கட்டங்கள் வெவ்வேறு நாடுகளில் ஒன்றுபோல் இல்லை என்பது இதன் பொருள்.

பகுதியான நெருக்கடிகளும் ஸ்தல நெருக்கடிகளும் கூட போருக்குப் பிற்பட்ட காலத்தின் ஒரு பண்பு. உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் தனிப்பட்ட கிளைகளில், நீடித்த நெருக்கடிகள் முதலாளித்துவத்திற்கே தனி மாதிரியாக ஆயின. நெருக்கடியின் ஒரு வடிவம் காலம் கடத்தப்பட்ட பண நெருக்கடி.

நெருக்கடிகளின் வேறுபாடான வடிவங்கள் ஒன்றுடன் ஒன்று உறவுடையவை. அவற்றின் பொது மூலாதாரம் முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாட்டினை ஆழப்படுத்துவதாகும்.

## 1974—1975ம் ஆண்டுகளின் நெருக்கடியின் குறிப்பிட்ட பண்புக் கூறுகள்

1974-75ம் ஆண்டுகளின் பொருளாதார நெருக்கடி எல்லா வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளையும் இறுகப் பிடித்துக் கொண்டது. மேலும் அதிகப்படுத்தப்பட்ட சர்வதேசிய உழைப்புப் பிரிவினையாலும் உலகப் பொருளாதார உறவுகளின் விரைவான வளர்ச்சியாலும் சர்வதேசிய ஏகபோகங்களின் வளர்ச்சியாலும் அது ஏற்பட்டது. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தீவிரப்படுத்தப்பட்ட சர்வதேசியமயமாக்கல் பொருளாதார நெருக்கடியின் கட்டங்களின் ஒரே காலத்திற்குரிய நிகழ்ச்சிக்குச் சாதகமானதாக மட்டும் அல்லாமல், நெருக்கடி அதிகமாக நீடிப்பதற்காக அது சாதகமானதாக உள்ளது. பொருளாதாரத்தைச் சர்வதேசியமயமாக்கியதானது, நாடுகள் தங்களுடைய பொருளாதார நிலையை, மற்ற நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வது மூலம் மேம்பாடடையச் செய்வதை மிகவும் கஷ்டமாக்குகிறது.

1974-75ம் ஆண்டுகளின் நெருக்கடி உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மற்ற வட்டாரங்களில் உள்ள

நெருக்கடிகளுடன் பொருந்தியது என்பது இந்த நெருக்கடியின் இன்னொரு விசேஷம். அதாவது ஒரே நேரத்தில் உணவு, பொருளாதாரம், ஆற்றல், பணம் ஆகியவற்றிலும் நெருக்கடிகள் ஏற்பட்டன. முதலாளித்துவ நாடுகளில் வங்கி கடன், பண முறையில் இதுவரை கண்டிராத சீர்குலைவு, அதனுடன் உயர்ந்து கொண்டே போகும் பண வீக்கம் ஆகிய நிலைமையின் கீழ் அது வளர்ந்தது.

போர் முடிவுற்ற காலத்திலிருந்து, எல்லாவற்றையும் விட இந்த நெருக்கடி மிக அதிகமான கூர்மையுடையதாகவும், நீடித்ததாகவும் இருந்தது. 1974ல் தொழில் துறை உற்பத்தி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் நின்றுவிட்டது. 1975ல் 5.9 சத வீதம் குறைந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அது 8.9 சதவீதம், ஜப்பானில் 10.6 சதவீதம், இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் 10 சதவீதம், மேற்கு ஜெர்மனியில் 6.2 சதவீதம் ஆகும். இந்த நெருக்கடி சுமார் இரு ஆண்டுகளுக்கு நீடித்தது. இதற்கு முந்திய போருக்குப் பிறபட்ட காலத்தில் பொருளாதார நெருக்கடிகள் 7 மாதங்களுக்கும் 16 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் நீடித்தன.

உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி அழிவுக்குரிய வேலையில்லாமையின் வளர்ச்சியில் முடிந்தது. அதிகார பூர்வமான எண்ணிக்கைப்படி, வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் வேலையே கிடைக்காதவர்களின் எண்ணிக்கை 1.5 கோடிக்கும் அதிகமாக இருந்தது. வாழ்க்கைச் செலவின் உயர்வின் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிற முதலாளித்துவ நாடுகளிலும் உழைக்கும் மக்களின் உண்மையான வருமானம் வீழ்ச்சியடைந்தது.

1974-75 ஆண்டுகளின் நெருக்கடி வளர்ச்சியுற்ற அரசு-ஏகபோகப் பொருளாதாரத்தை மிகவும் தாக்கியது. பூர்ஷ்வா அரசுகள், பொருளாதார வளர்ச்சியைத் தூண்ட எல்லாவிதப் பொருளாதார ஒழுங்குபடுத்தலின் முறைகளையும் பயன்படுத்தின. ஆனால் எதிர்பார்த்தபடி இந்த நடவடிக்கைகள் முதலாளித்துவ முரண்பாடுகளை அகற்றுமல் அவற்றை அதிகப்படுத்தின. சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரசில் லியோனித் பிரேஷ்னெவ், சீர்திருத்த

வாதிகளாலும், பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளாலும் கண்டு பிடிக்கப்பட்ட கட்டுக் கதைகளில் ஒன்று, அதாவது முதலாளித்துவம் இப்பொழுது இருக்கும் நிலையிலேயே அதனுடைய நெருக்கடிகளைத் தானே போக்கிக் கொள்ள முடியும் என்பது தவறென நிரூபிக்கப்பட்டது என்று கூறினர். முதலாளித்துவத்தின் நிலையற்ற தன்மை மேலும் மேலும் தெளிவாகிக் கொண்டிருக்கிறது.

## பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகள்

முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளையும் மிக தெளிவாக வெளிப்படுத்தும் பொருளாதார நெருக்கடிகள், அவற்றை மிக ஆழப்படுத்தின. அவை, புதிய தொழில் நிலையங்களின் வளர்ச்சிக்கும் புனர்நிர்மாணத்திற்கும், உற்பத்தியை அதிகமாக ஒருமுனைப்படுத்துவதற்கும் தூண்டும் விசையாக இருக்கின்றன. இவ்வாறாக அவை, பெரும் முதலாளிகளின் கைகளில் உடைமை அதிகமாக ஒருமுனைப்படுத்தப்படுவதற்குக் காரணமாக இருக்கின்றன. இது முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாட்டின் அதிகரிப்பைக் குறிக்கிறது.

பொருளாதார நெருக்கடிகள் உற்பத்திச் சக்திகளின் அழிவிலும் உற்பத்தி ஆற்றலை முழு அளவில் பயன்படாமையிலும் பொருளாயத பொருள்களை அகற்றுவதிலும் முடிகின்றன. பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைத் தரத்தின் சீரழிவு ஆகியவை பிரதான உற்பத்திச் சக்தியான, உழைக்கும் மக்களை வேண்டுமென்றே அழிப்பவை என்பதற்குச் சான்றாகும். பொருளாதார நெருக்கடிகள் முதலாளித்துவத்தின் வரலாற்றுப் பூர்வமாக வரையறுக்கப்பட்ட இயல்பைத் தெளிவுபடுத்தி, சோஷலிசப் புரட்சிக்கான தேவையை விளக்குகின்றன.

அத்தியாயம் 7

# ஏகாதிபத்தியத்தைப் பற்றிய லெனினின் தத்துவமும் தற்காலத்திய ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியும்

முதலாளித்துவ அமைப்பின் வரலாற்றுப் பூர்வமான வளர்ச்சியின் விளைவுதான் நவீன முதலாளித்துவம். இவ் வளர்ச்சியின் போக்கில் முதலாளித்துவ சமுதாயம் இரு முக்கிய கட்டங்களைக் கடக்கிறது. முதலாவது, சுதந்திரமான போட்டி முதலாளித்துவம், அல்லது ஏகபோக முதலாளித்துவத்திற்கு முந்திய முதலாளித்துவம் என்பதாகும். இதை மார்க்சும் எங்கெல்சும் முழுமையாக ஆய்ந்தார்கள். அவர்களுடைய நூல்கள், முக்கியமாக மார்க்சின் மூலதனம், முதலாளித்துவ உற்பத்தி முறையின் பொதுத் தத்துவத்தை வகுத்தன.

20ம் நூற்றுண்டின் திருப்பத்தில் முதலாளித்துவம் ஒரு புதிய கட்டத்தில் நுழைந்தது. அதாவது ஏகாதிபத்தியம் அல்லது ஏகபோக முதலாளித்துவம் என்ற கட்டத்தை அடைந்தது. லெனின் அதை அலசி ஆய்ந்தார். மார்க்ஸ், எங்கெல்சால் நிறுவப்பட்ட விஞ்ஞானமான இயக்க இயல் பொருள்முதல்வாதம், அரசியல் பொருளாதாரம், சோஷலிசப் புரட்சி, கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவது ஆகியவற்றைப் பற்றிய தத்துவத்தை லெனின் வளர்த்தார்.

# 1. மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் தத்துவ போதனையை லெனின் தொடர்கிறார்

*லெனின் ஏகாதிபத்தியத்தின் தத்துவத்தை உருவாக்கினார். அது பொருளாதாரச் சிந்தனையின் முன்னேற்றத்தில் ஒரு மைல் கல்லாகும்.*

## ஏகாதிபத்தியத்தைப் பற்றிய போதனை

லெனினுடைய ஏகாதிபத்தியத்தைப் பற்றிய போதனை ஒரு பெரிய விஞ்ஞான அருஞ்செயலாகும். பல ஆண்டுகளாக அவர் வெவ்வேறான முதலாளித்துவ நாடுகளில் உள்ள பொருளாதார, சமூக, அரசியல் உறவுகளின் ஸ்தூலமான வளர்ச்சியை ஆராய்ந்தார். இத்தகைய பிரச்சினைகளைப் பற்றிய அவருடைய முக்கிய நூலான ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என்பதைத் தயார் செய்யும் பொழுது லெனின் அவர் காலத்திய எல்லா பூர்ஷ்வா, மிதவாத, சீர்திருத்தவாதிகள் மற்றும் பலருடைய பிரசுரங்களையும் ஆராய்ந்தார். அவர் ருஷ்ய மொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளிலுள்ள 148 புத்தகங்களையும், 232 கட்டுரைகளையும் கற்றுக் குறிப்பெடுத்தார். இந்தக் குறிப்புகள் அச்சிடப்பட்ட பொழுது, அது ஏகாதிபத்தியத்தைப் பற்றிய குறிப்புப் புத்தகங்கள் என்ற ஒரு கனத்த தொகுப்பாயிற்று. ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என்ற நூலில் நிறுவப்பட்ட கருத்துக்கள், லெனினால் அவருடைய குறிப்பிடத்தக்க நூல்களான நெருங்கி வரும் பெரும் விபத்து அதை எதிர்த்துப் போராடுவது எப்படி, அரசும் புரட்சியும், சோஷலிசமும் போரும், ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் வேண்டும் எனும் முழக்கத்தைப் பற்றி, போல்ஷிவிக் கட்சியின் இரண்டாவது திட்டத்தின் நகலைப் பற்றிய விஷயங்கள், போன்றவற்றில் மேலும் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

லெனினுடைய வரலாற்றுச் சிறப்புள்ள பங்கு, எல்லாவற்றையும் விட, சுதந்திரமான போட்டி முதலாளித்துவத்

திலிருந்து ஏகபோக முதலாளித்துவத்திற்கு மாறுவதை ஆட்கொண்ட புறவய விதியை அவர் வெளிப்படுத்தியதாகும்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோர்களின் நூல்கள் பிரசுரமானதிலிருந்து முதலாளித்துவ சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விரிவாக ஆராய்ந்த பிறகு புதிய கட்டத்தின் அடிப்படைக் கூறுகளை லெனின் வரையறுத்தார். அவற்றின் இணைப்பு, இயக்க இயல் ரீதியாக ஒரே சீரான ஏகாதிபத்திய அமைப்பை உருவாக்கியது. லெனினுடைய ஏகாதிபத்திய தத்துவமானது ஏகாதிபத்திய அமைப்பின் பொருளாதார சாரம் வெளிப்படுத்தப்படுகிற அடித்தளத்தைத் தனியாகப் பிரித்தது. லெனின் கருத்தில் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஏகபோகங்கள், நிதி ஆதிக்கக்குழு ஆகியவை நிறுவப்படுதலும் வளர்ச்சியடைவதும் இந்த அடித்தளமாகிய அமைப்பு-உருவாக்கும் காரணியாகும்.

ஆனால் லெனினின் பகுத்தாய்வு ஏகாதிபத்தியத்திற்கு மாறும் இயல்பான வளர்ச்சியைத் தெளிவுபடுத்துவதும் அதனுடைய சாராம்சத்தை விளக்குவதும் என்ற எல்லைக்குள் மட்டும் எவ்விதத்திலும் அடக்கப்படவில்லை. புதிய கட்டத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி, ஏகாதிபத்தியத்தின் ''சுய இயக்கத்தின்'' விதிகளின் விளக்கம், அதனுடைய முரண்பாடுகளின் இயக்க இயல் ஆகியவற்றைப் பற்றிய லெனினின் ஆய்வு முக்கியத்துவம் குறைந்ததல்ல.

லெனினின் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய தத்துவத்தின் அடுத்த முக்கிய சாதனை ஏகாதிபத்தியத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரத்தால் ஆராய்ந்த பொருளாதார உறவுகளின் வரம்புகளைப் பரப்பியதாகும். மாறிய நிலைமைகளின் கீழ், லெனின், கூலி உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான உறவுகளை மட்டுமல்ல, ஏகபோகங்களுக்கும் முதலாளித்துவ சமுதாயத்தின் மற்ற பிரிவுகளுக்கும் இடையேயுள்ள உறவுகளையும், மூலதனத்தை ஏற்றுமதி செய்தல், சர்வதேசிய ஏகபோகங்களை நிறுவுதல், உலகத்தைப் பொருளாதார ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் பிரித்தல் போன்ற வேறு வழிகளில் ஏகாதிபத்திய அமைப்பால் மனித குலத்தின் மிகப் பெரும்

பான்மையினரை சுரண்டும் உலகளவிலான உறவுகளையும் லெனின் ஆராய்ந்தார்.

ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாராம்சத்தை மட்டு மன்றி அரசியல் சாராம்சத்தையும் லெனின் தோல் உரித்துக் காட்டினர். ஏகாதிபத்திய யுகத்தில் ஏகபோகங்களின் ஆதிக் கமும் முரண்பாடுகளின் அதிகரிப்பும் சமுதாயத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் தவிர்க்க முடியாத முறையில், பிற்போக்குத் தன்மை, வன்முறை ஆகியவற்றிற்கு இடமளிக்கும்.

## சோஷலிசப் புரட்சியின் தத்துவம்

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய லெனினின் பகுத்தாய்வு வரலாற்றில் புதிய கட்டமான ஏகாதிபத்தியத்திற்கான இடத்தை தீர்மானிக்கச் செய்தது. ஏகாதிபத்தியம் முத லாளித்துவ வளர்ச்சியின் உச்சக் கட்டமும், இறுதியான கட்ட மும் ஆகும் என்று அவர் முடிவெடுத்தார். லெனின் அழுத்திக் கூறியபடி முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடு, மற்ற எல்லா முரண்பாடுகளின் அதிகரிப்பும், ஏகபோக முதலாளித் துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்வதும், முதலாளித்துவத்தின் பொதுவான நெருக்கடியும் உலக முத லாளித்துவ அமைப்பு முழுவதும் ஒரு சோஷலிசப் புரட்சிக் காகப் பழுத்துப் பக்குவமடைந்துள்ளது என்று குறிக்கின்றன.

மார்க்சியத்தின் ஆக்கபூர்வமான வளர்ச்சியில் ஈடுபட்ட பொழுது லெனின் ஏகாதிபத்திய யுகத்தில் முதலாளித்து வத்தின் ஏற்றத்தாழ்வான பொருளாதார, அரசியல் வளர்ச்சி யின் விதியைக் கண்டுபிடித்தார். பிறகு அவர், ஒரே நேரத் தில் பல நாடுகளில் சோஷலிசத்தை அடைய முடியாது என்றும், ஏகாதிபத்தியம் மிக வளர்ச்சியடைந்த நாட்டில் தகர்க்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றும் அவர் முடிவு எடுத்தார்.

உலக முதலாளித்துவத்தின் பலவீனமான இடங்களில், தொடர்ச்சியான புரட்சிகரப் போராட்டங்களின் தகர்வு களால் மேலும் மேலும் அதிகமான நாடுகள் முதலாளித்து வத்திலிருந்து பிரிந்து வெளியே வருவதாலும் ஏகாதிபத்தியம்

அழியும் என்று லெனின் தன்னுடைய தத்துவ ரீதியானதும் வரலாற்றுப் பூர்வமானதுமான பகுத்தாய்வில் நிரூபித்தார். இவ்வாறாக ஏகாதிபத்தியத்தைப் பற்றிய அவருடைய பகுத்தாய்வின் அடிப்படையில் லெனின் சோஷலிசப் புரட்சியின் ஒரு புதிய தத்துவத்தை உருவாக்கினர். மார்க்சின் தத்துவத்திற்கு இது ஒரு பெரிய பங்களிப்பாகும். தொழிலாளி வர்க்கத்திற்கும் எல்லா உழைக்கும் மக்களுக்கும் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடும் அவர்களுடைய புரட்சிகரமான போராட்டத்தில் அது ஒரு புதிய சித்தாந்த ஆயுதமாகும்.

### லெனினிசத்தைப் பொய்யாக்குவதைப் பற்றிய விமரிசனம்

லெனினின் ஏகாதிபத்திய தத்துவம் பூர்ஷ்வாக்கள், சந்தர்ப்பவாதிகள் ஆகியோரின் பொய்மைகளை எதிர்த்து விடாப்பிடியாகத் தொடர்ந்து நடத்திய போராட்டத்தில் உருவாக்கப்பட்டது. ஏகாதிபத்தியத்தின் சுரண்டும் தன்மையை மூடிமறைக்கும் ஏகாதிபத்தியத்திற்கான சாக்குபோக்குகளை லெனின் மிகக் கடினமான விமரிசனத்திற்கு உட்படுத்தினர். அவர், ஏகாதிபத்தியத்தைப் பற்றிய சமூக-மிதவாதியினர் குட்டி பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் விமரிசனம் சரியானதல்ல என்பதனையும் அம்பலப்படுத்தினர். அவர்களுடைய விமரிசனம் அதை ஒரு வகையான ''கொள்கை'' என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு உற்பத்தி வட்டாரத்திலுள்ள ஏகாதிபத்தியத்தின் அடிப்படைகள் அலட்சியப்படுத்தப்படுகின்றன அல்லது அதிகமாக குறைத்து மதிப்பிடப்படுகின்றன.

இன்றைய பூர்ஷ்வா விஞ்ஞானமும் பிரச்சாரமும் வெவ்வேறு வகை கம்யூனிஸ்ட் எதிர்ப்புவாதிகளும் சோவியத் எதிர்ப்புவாதிகளும் வலது, ''இடது'' சந்தர்ப்பவாதத்தின் பிரதிநிதிகளும் லெனினுடைய வரலாற்று முக்கியத்துவத்தையும் அவருடைய ஏகாதிபத்தியத் தத்துவத்தையும் குறைத்து மதிப்பிட எவ்விதத்திலும் முயலுகின்றனர். அவர்களில் அநேகர், லெனினியம், அவர் காலத்திற்குப் மட்டுமே பணிபுரிந்தது என்றும் அது முழுக்க முழுக்க பிராந்திய முக்கியத்

துவம் வாய்ந்தது, அதாவது ருஷ்யாவிற்கு மட்டுமே நல்லது என்றும் வலியுறுத்தினர். அவர்கள் லெனினியத்தை மார்க்சியத்திலிருந்து தனிமைப்படுத்த முயலுகின்றனர். மார்க்ஸ், எங்கெல்சுக்கு நேர்மாறாக லெனினைத் திருப்ப முயலுகின்றனர்; லெனினுடைய தத்துவ, அரசியல் நடவடிக்கைகளின் சாராம்சத்தைத் திரித்துக் கூற முயலுகின்றனர்.

உண்மையில் லெனினது ஏகாதிபத்திய கொள்கை இன்றைய நிலைமைகளிலும் இன்னமும் பெருமளவு முக்கியத்துவம் உடையதாக உள்ளது.

20ம் நூற்றாண்டில் முதலாளித்துவத்தின் மிக முக்கிய பண்பு கூறுகளைப் புரிந்து கொள்ள லெனினுடைய போதனைகள் வழிகாட்டியாக உள்ளன. அவை தற்காலத்தில் மகத்தான புரட்சிகர நிகழ்ச்சிப் போக்குகளால் மிக உன்னதமான முறையில் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றின் முக்கிய உள்ளடக்கம் உலக அளவில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுவதாகும்.

லெனினது ஏகாதிபத்தியத் தத்துவம், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தஸ்தாவேஜுகளிலும் சோவியத் யூனியனிலும் வெளிநாடுகளிலும் மார்க்சிய-லெனினிய பொருளாதாரவாதிகளின் நூல்களிலும் மேலும் விருத்தி செய்யப்படுகின்றன.

## 2. ஏகாதிபத்தியத்தின் முக்கிய பண்புக் கூறுகள்

ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என்ற அவருடைய நூலில் மார்க்சிய இயக்க இயல் முறையைப் பயன்படுத்தி லெனின் பின்வரும் ஐந்து முக்கிய பண்புக் கூறுகளைச் சுட்டிக்காட்டுகிறார். அவைகளில் ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரச் சாராம்சம் வெளிப்படுத்தப் படுகிறது. அவையாவன: 1) பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களைத் தோற்றுவிக்கும்படியான உயர்ந்த கட்டத்துக்கு உற்பத்தியின், மூலதனத்தின் ஒன்றுகுவிப்பு வளர்ந்து விடுதல்; 2) வங்கி மூலதனம் தொழில் துறை மூலதனத்துடன் ஒன்றுகலத்தலும் இந்த ''நிதி மூலதனத்தின்'' அடிப்படையில் நிதியாதிக்கக் குழு உருவாதலும்; 3) பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறு

படுத்தப்பட வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல்; 4) சர்வதேச ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகள் உருவாகி, உலகையே இவை தமக்கிடையே பங்கிட்டுக்கொள்ளுதல்; 5) மிகப்பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப்படுதல் நிறைவுறுகிறது.''*

முதலாளித்துவத்தின் புதிய கட்டத்தின் இந்த ஐந்து அடிப்படைப் பண்புக் கூறுகளையும் சேர்த்து அவற்றை ஒரே ஓர் அமைப்பாக மாற்றக்கூடிய முக்கியமான ஓர் அம்சம் ஏகபோகமாகும். ஏகபோகம் ஒவ்வொரு பண்புக் கூறின் சாராம்சம் ஆகும். அதே நேரத்தில் அது ஏகாதிபத்தியத்தின் மிக முக்கிய பொருளாதாரக் குணம்சம் ஆகும். ''உற்பத்தி ஒன்றுகுவிப்பின் விளைவாக ஏகபோகங்கள் உதிப்பதானது முதலாளித்துவ வளர்ச்சியின் இன்றைய கட்டத்தின் பொதுவான அடிப்படை விதியாகும்''** என்று லெனின் வலியுறுத்தினர்.

### ஏகபோகத்தின் சாராம்சம்

உற்பத்தி வட்டாரத்தில் முதலாளித்துவ ஏகபோகம் தான் ஏகாதிபத்தியத்தின் பண்புக் கூறுகளில் மிகவும் முக்கியமானது. அதன் சாராம்சம் என்ன என்றால், பெரும் தொழில் நிலையங்கள் அல்லது அவைகளின் இணைப்பு உற்பத்தியின் பெரும் பங்கைக் கைப்பற்றுகின்றன. இந்தப் பங்கு அவைகளுக்கு ஒன்று அல்லது பல பொருளாதாரத் துறைகளைக் கட்டுப்படுத்த உறுதிப்படுத்துகிறது. இந்தக் கட்டுப்பாட்டினால் ஏகபோகங்கள் மிக அதிக விகிதாச்சார இலாபத்தைத் தனதுரிமையாக்க முடிகிறது.

இத்தகைய ஏகபோகங்கள் பல விதமானவை. நடைமுறையில் மிகப் பரவலாக இருக்கும் சங்கங்களாவன: கார்ட்டெல்கள், சிண்டிகேட்டுகள், டிரஸ்டுகள், கன்ஸெர்ன்கள். அவை தொழில் நிலையங்களுக்கு இடையேயுள்ள சங்கங்களின்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 171.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 58.

நெருக்கங்களில் வேறுபடலாம். கார்ட்டெலில் தனிப்பட்ட தொழில் நிலையங்கள் உற்பத்தி, வர்த்தக ரீதியில் சுதந்திரமானவை. இருந்த போதிலும் அவை மார்க்கெட்டைத் தீர்மானித்துப் பிரித்துக் கொள்வதிலும் உற்பத்தி அல்லது விற்பனை ஆகியவற்றின் பங்குகளை நிச்சயிப்பதிலும் ஒன்றுடன் ஒன்று உடன்படிக்கைச் செய்கின்றன. ஒரு சிண்டிகேட்டானது மார்க்கெட்டுடன் உள்ள தொழில் நிலையங்களின் நேரடியான தொடர்புகளைத் துண்டித்து விடும். எல்லா உற்பத்திப் பொருள்களும் தனிச்சிறப்பான ஸ்தாபனங்கள் மூலம், சிண்டிக்கேட்டால் அதனுடைய சொத்தாகப் பாவிக்கப்படுகின்றன. மிக நெருக்கமான சங்கம் டிரஸ்டாகும். அதனுடைய உறுப்பினர்களுக்கு உற்பத்தியிலும் மார்க்கெட் பிடிப்பதிலும் சுதந்திரம் கிடையாது. தற்காலத்திய நிலைகளில் டிரஸ்டுகள் ஒன்றுடன் ஒன்று சம்பந்தமில்லாத பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்களை மேலும் மேலும் அடிக்கடி இணைக்கின்றன. கன்ஸெர்ன் என்பது வழக்கமாக சுதந்திரமானவை எனக் கருதக்கூடிய, ஆனுல் உண்மையில் தாய்க் கம்பெனிக்கு உள்ளடங்கிய தொழில் நிலையங்களைக் கொண்ட மிக அதிகச் சிக்கலையுடைய ஏகபோக வடிவமாகும். இந்தத் தாய்க் கம்பெனி அவற்றின் மீது நிதி கட்டுப்பாட்டை விதிக்கிறது.

லெனின் குறிப்பிட்டது போல் ஏகபோகத்தன்மையைப் புறவயமாகச் சுட்டிக்காட்டுவது, தொழில்துறை உற்பத்தி வெளிப்பாட்டின் மொத்த பரிமாணத்தில் மிகப்பெரிய தொழில் நிலையங்களின் வேலையிலமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை, உபயோகிக்கப்பட்ட மொத்த தளவாடங்கள், பயன்படுத்தப்பட்ட ஆற்றல் ஆகியவற்றில் மிக அதிகமான பங்காகும்.

ஏகபோகப்படுத்துவதின் நோக்கம் ஏகபோக அதிக இலாபத்தை அடைவதுதான். அந்த நோக்கம் பல வழிகளில் அடையப்படுகிறது. அதில் மிக முக்கியமானது ஏகபோக விலைகள் நிர்ணயிக்கப்படுவது. ஏகபோகங்கள் அவற்றின் உற்பத்திப் பொருள்களை ஏகபோக மிகை விலைகளுக்கே விற்கின்றன. ஆனுல் வழக்கம்போல் அவைகளுக்குத் தேவையான எல்லா பொருள்களையும் குறைந்த விலைகளுக்கு வாங்கு

கின்றன. இதனுல் முதலில் துன்பத்திற்குள்ளாகிறவர்கள் உழைக்கும் மக்களே.

## ஏகபோகமும் போட்டியும்

சுதந்திரமான போட்டியிலிருந்துதான் ஏகபோகங்கள் தோன்றுகின்றன. ஆனுல், அவை போட்டியை அழிக்கின்றன என்பது இதன் பொருள் எனக் கொள்ள முடியுமா? இக்கேள்விக்கு ஆமாம் என்று கூறுகிருர்கள் பல பூர்ஷ்வா பொருளாதாரவாதிகளும் வலதுசாரிச் சந்தர்ப்பவாதிகளும். ஏகபோகங்களின் தோற்றம் முதலாளித்துவத்தின் தன்மையை முழுமையாக மாற்றுகிறது; அதனுடைய தன்னியில்பான வளர்ச்சியை ஒரு முடிவிற்கு கொண்டு வருகிறது; சுதந்திரமான போட்டியால் ஏற்பட்ட இழப்பிலிருந்து சமுதாயத்தைக் காக்கிறது என்று அவர்கள் நிரூபிக்க முயலுகிருர்கள். ஆனுல் இது உண்மையல்ல.

ஏகபோகங்கள் உற்பத்தியில் புதிய பண்புக் கூறுகளைக் கொண்டு வந்தாலும் அவை முதலாளித்துவ உற்பத்தியில் போட்டியையோ அல்லது அராஜகத்தையோ ஒழிப்பதில்லை. மேலும், பூர்ஷ்வா அரசின் அதிகார அமைப்புகளைப் பயன்படுத்தும் மிகப்பெரிய தொழிற்சாலைகள் அதில் அடங்கியிருப்பதால் போட்டி மிக அதிகமாக கூர்மையடைகிறது; எங்கும் பரவுகிறது. போட்டி ஏகபோகங்களுக்கும் ஏகபோகமற்ற தொழில் நிலையங்களுக்கு இடையேயும், ஏகபோகங்களுக்கு உள்ளேயும் ஆகிய இரு விதங்களிலும் போட்டி வளர்ச்சியடைகிறது. போட்டிக்குப் புறவயமான தேவை அப்படியே உள்ளது. ஏனெனில் ஏகபோகங்கள் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

லெனின் மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டியபடி முதலாளித்துவத்தின் கீழ் போட்டியானது இது வரை இல்லாத அளவு சக்தி, முன்முயற்சி, தொழில் துணிவு ஆகியவற்றை அமுக்கி நியாயமான போட்டிக்குப் பதிலாகப் பணத் தந்திரமுறை, தாறுதிக்கம் ஆகியவற்றை ஈடு செய்வதைக் குறிக்கிறது. ஆரோக்கியமான போட்டி இருந்த இடத்தில்,

சில ராட்சச முதலாளிகள் ஏனையோர்களுக்கு எதிராக ஒருங்கிணைவது வழக்கமாகிறது என்று லெனின் கூறினர்.

ஏகாதிபத்திய யுகத்தில் ஏகபோகமல்லாத தொழில் நிலையங்களிடையே உள்ள போட்டி ஏகபோக போட்டியுடன் நடைபெறுகிறது. ஆனல் அப்போட்டி ஏகபோகங்களின் ஆதிக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாருக, ஏகபோகம், போட்டி ஆகியவற்றின் கலவையால் ஏகாதிபத்தியம் குணும்சப்படுத்தப்பட்டுள்ளது. இக்கலவை நவீன முதலாளித்துவத்தில் முக்கியமாக கூர்மையான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது.

பல வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் ஏகபோகம், ஏகாதிபத்திய யுகத்தில் முதலாளித்துவ சமுதாயத்திற்கான பொருளாதார அடிப்படையை அமைக்கிறது. ஆனல் அதனுடைய ஆதிக்கத்தின் அளவு, அதன் ஸ்தாபன அமைப்பு, நடவடிக்கைகளின் குறிப்பிட்ட பண்புக் கூறுகள் ஆகியவை உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியாலும் பொருளாதார, சமூக-வர்க்க உறவுகளின் வளர்ச்சியாலும் பெருமளவில் மாற்றியமைக்கப்படுகின்றன.

ஏகபோகங்களின் வளர்ச்சியில் முக்கியமாக குறிப்பிடத்தக்க மாற்றங்கள் சமீபகாலத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மாற்றங்களில் நவீன முதலாளித்துவப் பொருளாதாரப் பண்புக் கூறுகள் சிலவற்றைப் பார்க்கலாம்.

## 3. முதலாளித்துவ பொருளாதாரத்தின் புதிய பண்புக் கூறுகள்.
## விஞ்ஞான-தொழில் நுணுக்கப் புரட்சி

இரண்டாம் உலகப் போருக்குப் பின் குறிப்பாக கடந்த இருபது ஆண்டுகளில் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியில் சில புதிய பண்புக் கூறுகள் தோன்றியுள்ளன.

உலகச் சோஷலிச அமைப்பின் தோற்றம், காலனி ஆட்சி முறைகளின் ஒழிப்பு, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முன்னேற்றம் ஆகியவற்றின் தாக்கத்தால் அவை தோன்றின.

வரலாற்றுப் பூர்வமான, உலகளாவிய சோவியத் யூனியனின் சாதனைகள், உலக சோஷலிச அமைப்பின் வளர்ந்து வரும் அரசியல், பொருளாதார, ராணுவ பலம் ஏகாதிபத்திய வாதிகளின் கைகளைக் கட்டிப்போட்டுள்ளன; உலகம் முழு வதும் சமூக முன்னேற்றத்தின் மீது மேலும் அதிக செல் வாக்கை அவை செலுத்துகின்றன.

### ஏகாதிபத்தியம் தன்னைத்தானே தக அமைத்துக் கொள்ளுகிறது

தம்முடைய பிடியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஏகபோக பூர்ஷ்வாக்கள் தற்கால நிலமைகளுக்குத் தக அமைத்துக் கொள்ள முயலுகிறார்கள். இந்தத் தக அமைவு சமூக உற்பத்தியின் புறவய வளர்ச்சி, பொருளாதார உறவு கள், அரசியல் துறைகளின் வளர்ச்சி ஆகிய இரண்டிற்கும் விரிவடைகிறது.

இரு அமைப்புகளுக்கும் இடையேயுள்ள வரலாற்றுப் பூர்வமான எதிர்ப்பு, சோஷலிச முகாமின் வளர்ச்சி ஆகியவற் றின் தாக்குதலின் கீழ் முதலாளித்துவமானது, அதனுடைய இயல்புக்கும் சாரத்திற்கும் முரணான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளாயிற்று. நவீன ஏகாதிப் பத்தியத்தை பழைய முதன்மையான முதலாளித்துவத்திலி ருந்து மட்டுமல்லாது 20ம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்திய ஏகாதிபத்தியத்திலிருந்தும் வேறுபடுத்திக் காட்டும் முக்கிய பண்புக் கூறாக மார்க்சியவாதிகள் இதைப் பார்க் கிறார்கள். ஆனால் இப்படித் தக அமைவது ஏகாதிபத்தியத்தின் சாராம்சம் மாறியிருக்கிறது என்று எவ்விதத்திலும் கொள்ள முடியாது. அதனுடைய மாறும் சாத்தியக்கூறைத் தடை செய்வது ஏகாதிபத்தியத்தின் இயல்பு தான். முதலாளித் துவம் அதனுடைய இறுதி கட்டமான ஏகாதிபத்தியத் தியக் கட்டத்திலேயே இன்னமும் முதலாளித்துவமாக இருக்கிறது.

அப்படி இருப்பினும், ஏகாதிபத்திய அமைப்பு நிலவி செயல்படும் மாறிய நிலைகள், முதலாளித்துவ நாடுகளில் ஏகபோகங்களின் வளர்ச்சியுட்பட நடைபெறும் எல்லா

நிகழ்ச்சிப் போக்குகளின் மீதும் ஆழமான முத்திரையைப் பதிக்கின்றன. மற்ற எல்லாவற்றையும் விட முக்கிய காரணிகளாவன: விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் விளைவால் சில முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட மிக விரைவான தொழில் வளர்ச்சி, அரசும் ஏகபோகங்களும் ஒன்றாக இணைந்தது, ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்ந்தது, தொழிலையும் மூலதனத்தையும் விரைவாக சர்வதேசியமயமாக்கியது ஆகியவையாகும்.

உலகப் போர்களிடையே நடந்த காலத்துடனும் 20ம் நூற்றுண்டின் ஆரம்பக் காலத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இரண்டாவது போர்க் காலத்திலிருந்து முதலாளித்துவ தொழில் உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது. 1949க்கும் 1974ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் சராசரி ஆண்டுத் தொழில் வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக இருந்தது அல்லது போருக்கு முந்திய விகிதத்தை விட இரு மடங்கு அதிகமாக உயர்ந்தது. 1950க்கும் 1980க்கும் இடையே தொழில்துறையின் உற்பத்தி கிரேட் பிரிட்டனில் 2 மடங்கும் இத்தாலியில் 6.6 மடங்கும் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் 5.3 மடங்கும் பிரான்சில் 3.9 மடங்கும் ஜப்பானில் 24 மடங்கும் அதிகரித்தது.

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்திப் பொருள் 1974ம் ஆண்டில் 1939ம் ஆண்டு எண்ணிக்கையை விட கிட்டத் தட்ட நான்கு மடங்கு அதிகமாக இருந்தது; தொழில் உற்பத்தியின் பரிமாணம் ஆறு மடங்கு அதிகமாயிற்று. 1950ம் வருடத்தோடு ஒப்பிடுகின்ற பொழுது 1979ம் வருடத்தில் அமெரிக்காவின் தேசிய வருமானம் 2.6 மடங்குக்கு அதிகமாகவும் தொழில்துறையின் உற்பத்தி 3.4 மடங்கும் வளர்ச்சியடைந்தது.

### விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் தாக்கம்

இந்த விரிவு முதல் முதலாக, வளர்ந்து வரும் விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியிலிருந்து முளைவிட்டது. இரண்டு அமைப்புகளுக்கும் இடையேயுள்ள போட்டியில் ஏகபோகங்

கள் தங்களுடைய நிலையை வலுப்படுத்த, உற்பத்தியின் மேம்பாட்டினையும் வளர்ச்சி விகிதத்தையும் அதிகரிக்க, உழைக்கும் மக்களைச் சுரண்டுவதை அதிகரிக்க, விஞ்ஞானத்-தொழில் நுணுக்கச் சாதனைகளைப் பரந்த அளவில் பயன்படுத்துகின்றன.

விஞ்ஞானம்-தொழில் நுணுக்கம்-உற்பத்தி தொகுப்பின் வளர்ச்சி, விஞ்ஞானத்தை தொழில்மயமாக்கல், தொழிலை விஞ்ஞானமயமாக்கல், உழைப்புக் கருவிகளிலும் சாதனங்களிலும் புரட்சிகரமான மாறுதல்களை செய்தல் ஆகியவை உற்பத்திச் சாதனங்களின் தீவிரத் தேவையை உருவாக்குகின்றன. அது உள்நாட்டு மார்க்கெட்டை விரிவடைய உதவுகிறது. தீவிரமாக கம்பியூட்டர்களைப் புகுத்தியது இதற்கு ஒரு தெளிவான எடுத்துக் காட்டாகும். இது அவைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் விரிவான வளர்ச்சியில் பிரதிபலிக்கப்படுகிறது.

முதலாளித்துவ நாடுகளில் பொருளாதாரத் துறை அமைப்பும் பொருளாதார விகிதாச்சாரமும் விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சி, மற்றும் பிற காரணிகளாலும், குறிப்பிடத்தக்க மாற்றத்திற்குள்ளாகியுள்ளன. புதிய தொழில்நுணுக்க நிலைக்கு மாறுவதைப் பிரதிபலிக்கும், உறுதிப்படுத்தும் அநேகப் புதிய தொழில் துறைகள் பெருமளவில் வளர்க்கப்பட்டிருக்கின்றன. விவசாயத்தின் தனிமுதலான சுட்டிக்காட்டுதல்களும் தொழில்மயமாக்கப்படுதலும் அதிகரித்துள்ள போது பங்கு குறைந்துள்ளது. உற்பத்தி செய்யாத வட்டாரத்தின் முக்கியத்துவம் திடீரென உயர்ந்துள்ளது. இந்த வட்டாரத்தின் பங்கு மொத்தச் சமூக உற்பத்திப் பொருளில் சில முதலாளித்துவ நாடுகளின் தொழிலைவிட மிஞ்சியுள்ளது.

போருக்குப் பிந்திய சில ஆண்டுகளில் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியில் மேலே கூறப்பட்டுள்ள பண்புக் கூறுகள் எவ்விதத்திலும் முதலாளித்துவத்திற்குள்ள நிலையற்ற தன்மையை அல்லது சிதைவை நோக்கிச் செல்லும் போக்கை நீக்கவில்லை.

மாறாக, நல்ல நேரங்களில் கூட முதலாளித்துவத்தால் கிடைக்கக் கூடிய உற்பத்திச் சக்திகளை முழுமையாகப் பயன்

படுத்த முடியவில்லை. மேலும் அபரிமிதமான உற்பத்தி மூலாதாரங்களை வீணாக்கியப் பொறுப்பும் அதைச் சார்ந்ததே. ''முதலாளித்துவ சமூகத்தில் மிகவும் நவீனமான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் சாதனைகளை உற்பத்தியில் பயன்படுத்தும்பொழுது அது உழைக்கும் மக்களுக்கு எதிராகத் திரும்புகிறது, தொழிற்சாலைகளில் பாடுபடும் லட்சக்கணக்கான தொழிலாளர்களை வீதிகளில் நிறுத்துகிறது'' என்று 1981ல் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசில் லி. இ. பிரேஷ்னெவ் சுட்டிக் காட்டினார். விரைவான வளர்ச்சியை மேம்படுத்தும் அநேக அம்சங்கள் விரைவில் அவற்றின் தூண்டும் ஆற்றலை இழந்து நவீன முதலாளித்துவத்தின் நெருக்கடியான நிகழ்ச்சிப் போக்குகளை அதிகமாக்க ஆரம்பித்தன.

அப்படி இருப்பினும் பெரிய மூலதனம் உற்பத்தி சக்திகளின் பெரும் வளர்ச்சியையும் விஞ்ஞான-தொழில் நுணுக்க முன்னேற்றத்தையும் அதனுடைய ஆதிக்கத்தை அதிகரிக்கப் பயன்படுத்திக் கொண்டது. இந்தக் காரணிகள் முதலாளித்துவ பொருளாதாரத்தை ஏகபோகமயமாக்குவதின் கூர்மையான வளர்ச்சிக்குத் துணையாயிருந்தன.

## 4. தற்காலத்திய ஏகபோக வளர்ச்சியின் குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகள்

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வளர்ச்சியடைந்த நாடுகளில் சில தொழில்துறைகளில் மட்டும் ஏகபோகங்கள் முக்கிய இடங்களைக் கைப்பற்றின. சமீபத்திய பத்தாண்டுகளில் அவை ஒவ்வொரு உலக முதலாளித்துவப் பொருளாதார வட்டாரத்திலும் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளன.

### ஏகபோக வளர்ச்சி

முதன் முதலாக அதிகரித்துக் கொண்டிருக்கும் ஏகபோக தொழில் நிலையங்களின் அளவை நாம் கவனித்தாக வேண்டும். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மனியிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் 50 வேலையாட்களைக் கொண்ட

ஒரு தொழில் நிலையம் பெரிய தொழில் நிலையமாக கருதப் பட்டது. தற்போது ஒரு பெரும் தொழில்சாலையில் 10,000 மக்களுக்கு மேல் வேலை செய்கின்றனர்.

கோடிக்கணக்கான சொத்துக்களையுடைய ஏகபோகங் களின் எண்ணிக்கை திடீரென உயர்ந்துள்ளது. இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் 'ஐக்கிய அமெரிக்க உருக்குக்' கம்பெனி ஒன்றுமட்டும் தான் இத்தகைய கம்பெனியாக இருந்தது. 1950களின் ஆரம்பத்தில் இத்தகைய கம்பெனிகள் நான்கு இருந்தன. அவையாவன: 'நியூ ஜெர்ஸி அமெரிக்க ஸ்டாண்டர்டு எண்ணெய்க்' கம்பெனி, 'ஜெனரல் மோட் டார்ஸ்,' 'ஐக்கிய அமெரிக்க உருக்குக்' கம்பெனி, பிரிட் டிஷ்-டச் 'ராயல்-டச் ஷெல்' கம்பெனி. 1963ல் இத்தகைய கம்பெனிகளின் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்தது. 1974ல் 344 ஆக உயர்ந்தது.

சோவியத் பொருளாதாரவாதிகள் செய்த மதிப்பீட்டின் படி இந்த 344 ஏகபோகங்கள், முதலாளித்துவ கம்பெனி களின் எண்ணிக்கையில் மிகமிகச் சிறிய சதவீதமே (0.002) ஆகும். இருப்பினும் அவை இராட்சச உற்பத்திச் சாதனங் களைக் கட்டுப்படுத்துகின்றன, எல்லா உழைப்புச் சக்தியில் சுமாராக மூன்றில் இருபங்கும் 70 சதவீதச் சொத்துக்களும் இலாபங்களும் அடங்கும்.

'ஜெனரல் மோட்டார்ஸ்' கம்பெனியின் 130 ஆலைகள் மட்டுமே தற்பொழுது 7.34 இலட்சம் மக்களை வேலையில மர்த்தியுள்ளன. அதனுடைய பொருள்களையும் பணிகளையும் விற்பதால் கிடைக்கும் ஆண்டு வருமானம் 3,300 கோடி டாலர்களை மிஞ்சுகிறது. இது ஆஸ்ட்ரேலியா, டென்மார்க் அல்லது நார்வே போன்ற முதலாளித்துவ நாடுகளில் உள்ள மொத்த தேசிய உற்பத்திப் பொருளை விட மிக மிக அதிக மானது.

### விரிந்து வரும் செல்வாக்கு வட்டாரங்கள்

அதே நேரத்தில் ஏகபோக மூலதனத்தின் ஆதிக்க வட் டாரம் விரிவடைந்து கொண்டிருக்கிறது. ஏகபோகமாக்கு தல் கனரகத் தொழிலுக்கு அப்பால் இலேசான தொழில் கள், போக்குவரத்து, வாணிகம் ஆகியவற்றிற்கும் விரிவடைந்

துள்ளது. ஏகபோக மூலதனம் விவசாயத்தில் நுழைவது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. உணவு தொழில் துறையில் பெரிய ஏகபோகங்கள் அநேகம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, ‘யுனிலெவர்ஸ்’ மார்கரைன் டிரஸ்ட், அமெரிக்க ‘ஸ்விப்ட்’ போன்ற பால் பண்ணை ஏகபோகங்கள் (இந்தக் கம்பெனி அமெரிக்க பால் பண்ணைத் தொழிலாளர்களில் ஆறில் ஒரு பங்கை வேலைக்கு அமர்த்தியுள்ளது), ஸ்விஸ் ‘நெஸ்டில்’ ஆகியவையாகும். பல்வேறு இலேசான தொழிற் துறைகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஏகபோகங்கள் பல உள்ளன. உதாரணத்திற்குச் சில: ‘புரெக்டரும் கேம்பிலும்’ ‘ரெய்னுல்ட்ஸ் டொபாக்கோ’ ஆகியவை. ஒவ்வொன்றும் 300 கோடி டாலர்களுக்கும் மேல் மதிப்புடைய சொத்துகளை உடையது. தற்காலத்திய ஜவுளி மன்னனாகத் திகழும் பிரான்ஸ் நாட்டு மார்ஸல் புஸ்ஸாக் என்பவன் தலைமையில் நடைபெறும் ஏகபோகம் அந்த நாட்டிலுள்ள மிக பலம் வாய்ந்த ஏகபோகக் குழுக்களில் ஒன்று. முக்கியமாக வாணிகத்திலும் விவசாயத்திலும் முக்கியமான மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பேரங்காடிகளும் பிற பெரிய வாணிக நிறுவனங்களும் இப்பொழுது, ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜப்பான், பல மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகிய நாடுகளின் உள்நாட்டு வாணிக விற்பனைப் புரள்வில் முதன்மையான பங்காற்றுகின்றன.

கடந்த சில ஆண்டுகளில் ஏகபோகமாக்கும் முறையின் அடுத்த பண்புக் கூறு என்னவெனில் அதனுடைய வேகத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உயர்வாகும். கம்பெனிகளை இணைத்தலும் மேற்கொள்ளுவதும் பத்து மடங்கு அதிகரித்துள்ளன. மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் இரும்பு தொழில் துறையிலுள்ள கம்பெனிகள் ஒன்றாக இணைக்கப்பட்டதன் விளைவால் இப்பொழுது அதன் முக்கிய பதவி இரண்டு அல்லது மூன்று ஏகபோக குழுக்களுக்குச் சொந்தம். இது குறிப்பிடத்தக்க ஓர் எடுத்துக்காட்டாகும். முதலாளித்துவ இரசாயன தொழிலில் பத்து ஏகபோகங்கள் உற்பத்தியில் பாதிக்கு மேலானவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. முதலாளித்துவ உலகிலுள்ள

மின்சாரப் பொறியியல் சாதனங்களின் உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கை ஐந்து முதன்மையான மின்சார பொறியியல் ஏகபோகங்கள் செய்கின்றன. அமெரிக்க 'ஐ. பி. எம்' என்ற ஏகபோகங்களில் ஒன்று முதலாளித்துவ உலகில் உற்பத்தி செய்யப்படும் கம்பியூட்டர்களில் 70 சதவீதத்தைச் செய்கிறது.

முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஏற்பட்ட கட்டமைப்பு மாற்றங்கள், தொழில்நுணுக்க முன்னேற்றம், பொருளாதாரத்தை இராணுவமயமாக்கல் ஆகியவற்றின் செல்வாக்கின் கீழ் தனிப்பட்ட ஏகபோகங்களின் சமநிலை சக்திகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக 100 பிரெஞ்சு தொழில் ஏகபோகங்களின் ஒரு மதிப்பீடு, முக்கியமாக மிகப் புதிய இரசாயன தொழில்துறைகளில், எண்ணெய், எரிவாயு தொழில், ரேடியோ-எலக்டிரானிக், ஆகாயவிண்வெளி தொழில் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தும் ஏகபோகங்களின் நிலைகள் கணிசமான பலத்தைப் பெற்றுள்ளதைக் காட்டுகிறது.

## ஏகபோகங்களின் வடிவங்கள்

மூலதனத்தை ஒருமுனைப்படுத்துதல், மையப்படுத்துதல் ஆகியவையும் ஏகபோக சங்கங்களும் வடிவத்தில் கணிசமான அளவு மாறுகின்றன. தனிப்பட்ட தொழில் துறைகளிடையே உள்ள தொழில்நுணுக்க உறவுகள் அதிகச் சிக்கல் அடையும் பொழுது ஒன்றுடன் ஒன்று சேர்வது எப்படி என்பதின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது. எவ்வாறுயினும் அதே நேரத்தில் ஏகபோகத்தின் முக்கிய உற்பத்தியுடன் தொழில்நுணுக்க ரீதியாகச் சம்பந்தமில்லாத உற்பத்திகளை ஓர் ஏகபோகம் இணைத்தல், அதாவது பல்வகையாகப் பிரிக்கும் போக்கு தீவிரப்படுத்தப்படுகிறது.

இத்தகைய ஏகபோகங்களுக்கு எடுத்துக்காட்டு கன்கிலோமிராட்ஸ் ஆகும். இவை ஐக்கிய அமெரிக்க நாடுகளில் 1960ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் விரிவாகப் பரவின. பிறகு மேற்கு ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் வேகமாக வளர்ந்தன.

பெரிய ஏகபோகங்கள் கார்ட்டெல்களில் பங்கு கொள்ளும் பொழுது கார்ட்டெல்களும் புதிய பண்புக் கூறுகளைப் பெற்றன. தற்சமயம் மார்க்கெட்டையும் விலைகளையும் ஒழுங்குபடுத்துதலை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களின் நிறுவனங்களால் கார்ட்டெல்களின் செயல்கள் அடிக்கடி நிறைவேற்றப்படுகின்றன. விலையைத் தீர்மானிக்கும் தலைமை என்றழைக்கப்படுவதை பயன்படுத்தி ஏகபோகங்கள் கார்ட்டெல்களுடன் சேராமல் விலைகளை அடிக்கடி ஆணையிடுகின்றன. ஓர் ஏகபோகம் விற்பனை விலையைக் குறித்ததும் மற்றவை அந்தத் தலைமை ஏகபோகத்தைப் பின்தொடர்கின்றன.

டிரஸ்டுகளும் பெருமளவிற்கு மாறிவிட்டன. நவீன டிரஸ்டு மரபு வழி கன்ஸெர்னைப் போல் அதிகமாக மாறிக் கொண்டிருக்கிறது. இந்தமாதிரியான இரு ஏகபோகங்களுக்கும் இடையேயுள்ள எல்லைகள் மேலும் மேலும் மங்கிக் கொண்டு வருகின்றன. சமீபத்தில் பரவலாகியிருக்கும் மற்ற ஏகபோக வடிவங்கள், முன்னணி கார்ப்பரேஷன்களுக்கு இடையே கூட்டு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பெரும் திட்ட நிலையங்களைக் கட்டுதல் மற்றும் இன்ன பிறவற்றைப் பற்றிய ஒப்பந்தங்களை உள்ளடக்கியுள்ளன.

## 5. நிதி மூலதனத்தைப் பற்றிய லெனினின் தத்துவம். இன்றைய நிதி மூலதனம்

தொழிலில், மூலதனமும் உற்பத்தியும் வளர்வதுடன் வங்கிகளின் ஒருங்கிணைப்பு தொடர்ந்தது. வங்கி மூலதனத்தை ஒருமுனைப்படுத்துதல், மையப்படுத்துதல் ஆகியவற்றின் விளைவாக வங்கி ஏகபோகங்கள் தோன்றின.

வங்கி மூலதனம் ஒருமுனைப்படுத்தப்படுதல், பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சி, தொழிலில் ஒருமுனைப்படுத்தப்படுதல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. உற்பத்தியை ஒருமுனைப்படுத்துதல் பண மார்க்கெட்டின் வளர்ச்சியை மேம்படுத்தி, அதே நேரத்தில் கடனுக்கான தேவையை உருவாக்கி, வங்கி நடவடிக்கைகளின் விரிவை தூண்டி விட்டது.

வங்கி ஏகபோகங்கள் வளர்ச்சியுடன் அவை சாதாரண கடன் ஏஜெண்டுகளாக இருந்ததிலிருந்து அவற்றின் இஷ்டத்திற்குச் செலவழிக்கக் கூடிய பெரும் நிதியுடைய பெரிய கன்ஸெர்ன்களாக மாறின. தொழிலில் வங்கிகள் நுழைவது அதிகரித்துக் கொண்டேயுள்ளது. அவை தொழில் நிலையங்களின் சக-சொந்தக்காரர்களாக மாறிக் கொண்டுள்ளன.

அதனுடன் எதிர்நோக்கிச் செல்லும் போக்கு இருந்தது. தொழில் ஏகபோகங்கள் பிரதான வங்கிகளின் பங்குகளைப் பெருமளவில் வாங்கின; அல்லது அவைகளே சொந்தமான வங்கிகளை திறந்தன.

இவ்வாருக, வங்கி மூலதனமும் தொழில் மூலதனமும் ஒன்ரேடு ஒன்று சேர்ந்ததன் விளைவால் ஒரு புது வடிவ ஏகபோகம் தோன்றியது. இது நிதி மூலதனமாகும். வங்கி மற்றும் தொழில் ஏகபோகங்கள் ஆகியவற்றின் நலன்களின் ஓர் இணைப்பை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## நிதி மூலதனத்தின் வரையறை

நிதி மூலதனத்தின் சாராம்சத்தை வர்ணித்த லெனின் எழுதிஞர்: ''உற்பத்தியின் ஒன்றுகுவிப்பு; அதிலிருந்து ஏகபோகம் எழுதல்; வங்கிகள் தொழில் துறையுடன் இணைதல் அல்லது ஒன்றுகலத்தல்—இதுதான் நிதி மூலதனத்தின் உதயத்தினுடைய வரலாறு; இதுதான் நிதி மூலதனம் என்ற கருத்தினத்தின் உள்ளடக்கம்.''*

அர். ஹில்பெர்டிங் என்பவரின் **நிதி மூலதனம்** என்ற நூலில் அவரால் கொடுக்கப்பட்ட வரையறையிலிருந்து, லெனினின் நிதி மூலதன வரையறை நேர் எதிராக மாறுபடுகிறது. ஹில்பெர்டிங் வரையறைபடி, நிதி மூலதனம் என்பது வங்கிகள் உடையதாகிய, தொழிற் துறையாளர்களால் பயன்படுத்தப்படும் மூலதனம். இத்தகைய வரையறை, உண்மையில் நிதி மூலதனம் வங்கி மூலதனம் ஆகியவற்றிற்கு இடையே எந்த வேறுபாட்டையும் குறிக்கவில்லை.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 102.

உற்பத்தியை ஒருமுனைப்படுத்துதல் என்ற அடித்தளத்தை அலட்சியப்படுத்தி விட்டு உற்பத்தியை விட புழக்கத்திற்கு முதன்மை அளித்து போலி முன்னுரையுடன் அது தொடங்கு கிறது. இவ்வாறாக சீர்திருத்தவாத சித்தாந்தம், கொள்கை ஆகியவற்றின் ஒரு முக்கிய கோட்பாட்டை ஏற்படுத்திக் கொடுக்கிறது. நிதி மூலதனம் புழக்க வட்டாரத்தின் உள் ளார்ந்த கருதுகோள் எனில் இத்தகைய உறவுகளை சமா ளிக்க உற்பத்தியைத் தொட வேண்டிய அவசியமில்லை.

உண்மையில் வங்கி, தொழில் ஏகபோகங்கள் ஆகிய வற்றின் மூலதனத்தின் ஒருங்கிணைப்பின் விளைவால் ஏற்பட்ட ஒரு புதிய மாதிரியான மூலதனமே நிதி மூலதனமாகும். ஏகாதிபத்திய யுகத்திலே முதலாளித்துவ பொருளாதாரத் தில் நிதி மூலதனம் ஆதிக்கச் சக்தியாக மாறியுள்ளது.

## புதிய பண்புக் கூறுகள்

சமீப பத்து ஆண்டுகளில் நிதி மூலதனத்தின் வளர்ச்சி பல புதிய பண்புக் கூறுகளைப் பெற்றுள்ளது. வங்கி மூல தனம், வங்கி ஏகபோகங்கள் ஆகியவற்றின் மிகச் சிக்கலான கட்டமைவும் பங்கும் முதலில் குறிப்பிடத்தக்கவை. அதி வேகமான தொழில் வளர்ச்சி, சுயபண முதலீட்டிற்கும் அவைகள் கடன்களைச் சார்ந்து இராத நிலைக்கும் அடிக்கடி இட்டுச் செல்லும் தொழில் ஏகபோகங்களின் வளர்ச்சி ஆகிய அம்சங்களை மேற்கோள் காட்டி, சில பூர்ஷ்வா பொரு ளாதாரவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் வங்கிகளின் பங்கு குறைந்து கொண்டு வருவது பற்றியும், வங்கிகள், தொழில் துறையில் இருந்து ''பிரிவது'' பற்றியும், எனவே நிதி மூல தனம் தானே-அழிவது பற்றியும் பேசுகிறார்கள்.

உண்மையில் தொழில் துறை ஏகபோகத்தின் வளர்ச்சி, கடன் மூலதன ஏகபோகங்களின் பங்கினை குறைப்பது இல்லை, அதிகரிக்கிறது. வங்கிகளுக்கும் தொழில் நிலையங்களுக்கும் இடையேயுள்ள பிணைப்பு எப்பொழுதும் விரிந்து கொண்டும், பல வகையாகிக் கொண்டும் இருக்கிறது. கடனைத் தவிர இன்று வங்கிகள் தொழில் துறை கம்பெனிகளுக்குப் பலவித தொண்டுகள் செய்கின்றன. அவற்றின் பண மூலதனத்தை

இருப்பில் வைத்துக் கொள்ளுவது; மூன்றுவது மூலாதாரத்தி லிருந்து பண ஏற்பாடுகள் செய்வது; நிதி வரவு செலவு பார்த் தல்; நிதியை நிர்வகிக்கும் செயல்களைச் செய்வது; தொழில் துறைக் கம்பெனிகளின் வாடிக்கைக்காரர்களுடன் கணக்கு களைத் தீர்ப்பது; வாடிக்கைக்காரர்களின் பங்குகளுக்கு ஏற்ற இலாப ஈவைக் கொடுப்பது; அவர்களிடமிருந்து கடனை வசூ லிப்பது; வரிகளையும் அரசுக்குரிய மற்ற செலுத்தினங்களை யும் செலுத்துவது; தொழில் துறைக் கம்பெனிகளின் ஓய்வு கால நிதிகளை மேற்பார்வை இடுவது; ஒவ்வொரு விதத்தி லும் நிதி, பொருளாதார செய்திகளை அளிப்பது; புனர் அமைப்பு சம்பந்தமான ஆலோசனைகளைக் கூறுவது; பொரு ளாதாரத் செயல் திட்டங்களை வகுப்பது; கம்பெனிகளின் வெளிநாட்டுப் பொருளாதார விரிவுபடுத்தலுக்கு உதவுவது, மற்றும் இது போன்ற பிற தொண்டுகளைச் செய்கின்றன.

கடந்த சில பத்தாண்டுகளில் வங்கி மூலதனத்தை ஏக போகமயமாக்குவது தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக் கிறது. அநேக முதலாளித்துவ நாடுகளில், கோடிக்கணக் கான டாலர்களைச் சொத்துகளாகக் கொண்ட சில பெரும் ஏகபோகங்களால் கடன் முறைகளின் முக்கிய பொறுப்புகள் வகிக்கப்பட்டுள்ளன. பெரிய வங்கிகளின் கிளை அலுவலகங் களும் கிளைகளும் பெருகி வருவது, வங்கி ஏகபோகம் பெருகி வருவதைச் சுட்டிக் காட்டுகிறது.

மேலும் நிதி மூலதனத்தின் வளர்ச்சியில் அதிகப் பங் காற்றும் தனித்தன்மையுடைய நிதி நிறுவனங்களின் அதி கரிப்பு சமீபத்திய பத்து ஆண்டு காலத்திய குணும்சமாகும். நாம் பொருள் கொள்வது, இன்ஷுரன்ஸ் கம்பெனிகள், சேமிப்பு வங்கிகள், ஓய்வு கால நிதிகள், முதலீடு செய்யும் கம்பெனிகள் மற்றும் இன்ன பிறவற்றின் விரைவான பெருக் கமாகும். தொழில் துறை ஏகபோகங்கள் வங்கி ஏகபோகங் கள் ஆகிய இரண்டும் இவற்றை நிறுவுவதில் மிகவும் சுறு சுறுப்பாக உள்ளன. அதன் விளைவால் அவற்றில் பல, தொழில் மூலதனமும் வங்கி மூலதனமும் ஒன்றுடன் ஒன்று பின்னி கலந்த புதிய வடிவங்களையும் இந்த அடித்தளத்தில் நிதி மூலதனம் மேலும் வளர்ச்சியடைவதின் புதிய வடிவங் களையும் அமைக்கின்றன. புது மாதிரியான கடன்-நிதி நிறு

வனங்களின் கரங்களில் திரண்ட மூலதனத்தின் ஒரு கணிச மான விகிதம் ஒருமுனைப்படுத்தப்படுகிறது. இத்தகைய நிதி கள், ஏகபோகங்களால் முதலாளித்துவ மூலதன திரட்சியின் மூலாதாரங்களை விரிவுபடுத்தவும் சமுதாயத்தின் எல்லா பிரிவுகளின் பண வளத்தை மையப்படுத்தி தங்களுடைய கரங்களில் வைத்துக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றன.

வங்கி-கடன் அமைப்பை ஏகபோகப்படுத்துவது வங்கி ஏகபோகங்கள், தொழில் துறை ஏகபோகங்கள் ஆகியவற்றிற் கிடையேயான பரஸ்பர பிணைப்புகள் பின்னிப் பிணைந்த வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்துகிறது. நிதி மூலதன குழுவான ஒரு புதிய வகை ஏகபோகம் இதற்கு மிகத் தெளி வான எடுத்துக் காட்டாகும்.

## நிதிக் குழுக்கள்

நிதிக் குழு என்பது வங்கி மூலதனம் தொழில் துறை மூலதனம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு பொருளாதார வகையாகும். இத்தகைய குழு விரல் விட்டு எண்ணக்கூடிய நிதி படைத்த பெருஞ்செல் வந்தர்களின் ஆதிக்கத்தை தொழில் துறை, நிதித் துறை, மற்றும் பிற நிறுவனங்களின் பரந்த தொகுப்பின் மீது விரிவுபடுத்தச் செயல்படுகிறது.

ஒரு நிதிக் குழுவிற்கு கீழ்க்கண்ட அடிப்படைப் பண்புக் கூறுகள் உள்ளன: (1) தொழில் ஏகபோகம், வங்கி ஏகபோகம் ஆகியவற்றின் நெருக்கமான இணைப்பால் உருவான ஒரு மையக்கருவை அது கொண்டிருக்கிறது; (2) பல வித முறை களாலும் வழிநிறைவேற்றப்பட்ட ஒன்றுசேர்ந்த தலை மைக்கு உட்பட்டது அது; (3) கட்டுப்பாட்டு உறவுகளால் அது குறிக்கப்படுகிறது. இதைக் கொண்டு பெருஞ்செல்வந்தர் கள் அதனுடைய ஒற்றுமையை வலுப்படுத்திக்கொண்டு, இடைவிடாது அதனுடைய எல்லைகளை விரிவாக்குகின்றனர்.

மற்ற ஏகபோகங்களுடன் ஒப்பிடும் பொழுது ஒரு நிதிக் குழு கட்டமைப்பில் சற்று குறைவான இறுக்கமுடையதா கும். பல குழுக்களின் செல்வாக்கு வட்டாரத்திற்குள் ஒரு பெரும் எண்ணிக்கையிலான தொழில் நிலையங்கள் இருக்

கின்றன. ஆனால் இது, நவீன முதலாளித்துவ பொருளாதாரத்தில் நிதிக் குழுக்களால் ஆற்றப்படும் பெரும் பங்கைக் குறைக்காது.

பங்கு கொள்ளும் முறையின் (அதாவது மற்ற கம்பெனிகளின் மூலதனத்தின் ஒரு பங்கை வாங்குவது) உதவியுடன், ஆளுக்குரிய உறவுகள், நீண்ட கால நிதி, அமைப்பு, தொழில்நுணுக்க தொடர்புகள், விசேஷ ஒப்பந்தங்கள் மேலும் மற்ற முறைகள் ஆகியவற்றைக் கொண்டு நிதிக் குழுக்கள் தங்களுடைய ஆதிக்கத்தைத் தொடர்ந்து அதிகரிக்கின்றன.

உலக முதலாளித்துவத்தின் முன்னணிச் சக்தியாக மாறிக் கொண்டிருக்கும் ஒரு சிறிய எண்ணிக்கையிலுள்ள நிதிக் குழுக்களின் வளர்ந்து வரும் பொருளாதார பலத்தை, போருக்குப்பின் நிதி மூலதனத்தின் வளர்ச்சியின் மிக முக்கிய விளைவாகக் கருதலாம்.

## நிதிக் குழுக்களின் ஆதிக்கம்

சோவியத் கணக்கீடுகளின்படி வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் உபரி மதிப்பின் 50 சதவீதத்தை மிகப்பெரிய ஐம்பது நிதிக் குழுக்கள் நடப்புக் காலத்தில் கட்டுப்படுத்துகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கிட்டத்தட்ட 200 ஏகபோகங்களைச் சேர்த்த பதினெட்டு நிதிக் குழுக்கள் அந்நாட்டின் தொழில் உற்பத்தியின் 60 சதவீதத்தைக் கட்டுப்படுத்துகின்றன. அவை 70,000 கோடி டாலர்களுக்கும் மேற்பட்ட மதிப்புள்ள சொத்தைக் கட்டுப்படுத்துகின்றன. அவற்றில் மிகப் பெரியவைகளாவன: 1970ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் 17,000 கோடி டாலர்களுக்கும் மேலான மதிப்புள்ள சொத்துகளை உடைய மார்கன் குழு, ராக்பெல்லர் குழு (13,000 கோடிக்கு மேல்), கலிபோர்னியக் குழு (7,000 கோடிக்கு மேல்), சிக்காக்கோக் குழு (5,500 கோடி டாலர்கள்). ஐந்து நிதிக் குழுக்கள் ஜப்பானில் முக்கிய பொறுப்புக்களை வகிக்கின்றன. மூன்று நிதிக் குழுக்கள் மேற்கு ஜெர்மனியில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. பிரெஞ்சு நாட்டிலுள்ள பத்து மிகப்

பெரிய நிதிக் குழுக்கள் 24,000 கோடி புதிய பிராங்குகளுக்கு மேல் உள்ள சொத்துக்களை அல்லது நாட்டில் தனியார் சொத்தில் 40 சதவீதத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

நிதி மூலதன ஸ்தாபன அமைப்பிலும் நடப்புக் காலத்தில் புதிய பண்புக் கூறுகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுடனும் ஏகாதிபத்தியத் திற்கிடையிலான போட்டியின் வளர்ச்சியுடனும். முக்கிய மாக குடும்ப நிறுவனங்களாக இருந்து வந்த நிதிக் குழுக்கள் இப்பொழுது பொதுவாக பல லட்சாதிபதி குடும்பங்கள், கோடீஸ்வரக் குடும்பங்கள் ஆகியவற்றின் கூட்டிணைவை ஒரு முகாமின் நலன்களால் ஒருங்கிணைக்கின்றன. கூட்டுப் பங்கு மூலதனத்தின் வளர்ச்சி, ஏகபோகங்களும் முதலாளித்துவ அரசும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைவது ஆகியவை கூட இதற்கு உதவி செய்கின்றன.

இரண்டாவது உலகப் போரிலிருந்து மிகப் பெரிய நிதிக் குழுக்களிக்கிடையே உள்ள சக்திகளின் ஒப்புநிலை மாறிக் கொண்டே இருக்கின்றது. மேலே கூறிய 18 அமெரிக்க நிதிக் குழுக்கள் இப்பொழுது முதலாளித்துவ உலகத்தின் மிகப் பெரிய ஐம்பது நிதிக் குழுக்களுக்குச் சொந்தமான மொத்த சொத்துக்களில் சுமார் பாதியை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அவற்றுடன் அமெரிக்க ஐக்கிய நாடு களின் நிதி மூலதனத்தின் பிடி அதிக வலிமையுடையதாக மாறியிருக்கிறது.

அமெரிக்காவின் மகத்தான நிதி மூலதனத்தின் பங்கினைப் பற்றி குறிப்பிடும் பொழுது, கடந்த 10—15 ஆண்டுகளில் அமெரிக்க நிதிக் குழுக்களின் வளர்ச்சி விகிதம் ஜப்பான், மேற்கு ஜெர்மனி, மற்றும் வேறு சில நாடுகளின் ஏகபோகங் கள் ஆகியவற்றின் வளர்ச்சி விகிதத்தை விட குறைந்து விட்டது என்பதை அழுத்திக் கூற வேண்டும். பிரிட்டிஷ், பிரெஞ்சு நாடுகளின் ஏகபோகக் குழுக்கள் அவற்றின் மகத் தான நிதி மற்றும் பொருளாதார பலத்தைத் தக்க வைத் துள்ளன. ஒரு முக்கியப் பங்கு பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்து, நெதர்லாண்டு, ஸ்வீடன், மற்ற சிறு நாடுகளில் உள்ள நிதிக் குழுக்களைச் சார்ந்திருக்கிறது.

நிதி மூலதனம் தானே-அழிதல் என்பது சம்பந்தப்பட்ட பூர்ஷ்வா பிரச்சாரக் கட்டுக்கதையை தற்காலத்திய முதலாளித்துவ எதார்த்தங்கள், உண்மையல்ல என்று நிரூபித்து வருகின்றன. நிதி மூலதனத்தின் ஆதிக்கம் முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தில் இதுவரை இல்லாத அளவு இப்பொழுது மிக விரிவாக எங்கும் பரவியுள்ளது.

## 6. நிதி ஆதிக்கக் குழுவின் ஆதிக்கம்

நிதி மூலதனத்தின் தோற்றம், எல்லா நிதி மூலதனச் சொந்தக்காரர்களேயும் கொண்ட நிதி ஆதிக்கக் குழு என்று உருவகப் படுத்துவதற்கு அது இட்டுச் சென்றிருக்கிறது.

### நிதி ஆதிக்கக் குழுவின் செல்வமும் கலவையும்

பூர்ஷ்வாக்களுக்குள்ளே கூட மிகக் குறைந்த சிறுபான்மையினரைக் கொண்டது இந்த நிதி ஆதிக்கக் குழு. ஆனல் இந்த விரல் விட்டு எண்ணக் கூடிய பெரும் செல்வர்கள், ஏகாதிபத்திய நாடுகளின் அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் மொத்தமாக ஆதிக்கம் செலுத்துகின்றனர். எடுத்துக் காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு சதவீத சொத்துக்கு மட்டுமே சொந்தக்காரர்கள் நாட்டிலுள்ள எல்லா சொத்துக்களிலும் 59 சதவீதச் சொத்துக்களேத் தங்கள் வசம் வைத்துள்ளனர். அதற்கு மேல் மிகுந்த பணம் படைத்த இந்த நபர்களிடையே மிதமிஞ்சிய செல்வாக்கு 250 முதல் 300 குடும்பங்களால் மட்டுமே செலுத்த முடிகிறது. நிதி ஆதிக்கக் குழு உறுப்பினர்களின் செல்வம் நிரந்தரமாகக் கூடிக் கொண்டே இருக்கிறது. மதிப்பீடுகளின்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1920ம் ஆண்டுகளில் ரோத்சைல்டு ஐக்கிய குடும்பத்திற்கு மட்டும் 66 கோடி டாலர்களுக்குச் சமமான சொத்து இருந்தது. இப்பொழுது அவர்களுடைய சொத்தின் மதிப்பு குறைந்தது 400 கோடி டாலர்களாகும். அதே காலத்தில் போர்டு குடும்பத்தின் சொந்த சொத்து 66 கோடி டாலர்களிலிருந்து 380 கோடி டாலர்களாகவும், மெல்லான்

குடும்பச் சொத்து 45 கோடியிலிருந்து 460 கோடியாகவும், டியூபான் குடும்பத்தினரின் சொத்து 23.9 கோடியிலிருந்து 500 கோடி டாலர்களாகவும் உயர்ந்துள்ளது. முக்கியமாக அரசு ஒழுங்கு முறைகளைப் பயன்படுத்துதல், பொருளாதாரத்தை இராணுவமயமாக்குதல் ஆகியவற்றின் விளைவாக சமீபத்திய பத்தாண்டு காலங்களில் புதிய இராஜ வம்சங்கள் தோன்றியுள்ளன.

நிதி ஆதிக்கக் குழு இயல்பாகவே அதனுடைய கலவையில் மாறுதல்களுக்கு உட்படுகிறது. சில நிதி இராஜ வம்சங்கள் போட்டியாளர்களால் கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றன. அவற்றின் இடத்தில் புதியவை தோன்றுகின்றன. இவ்விஷயத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு ஜப்பானுடைய நிதி ஆதிக்கக் குழுவாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் பழைய ''சாய்பாட்சு'' வம்சக் குடும்பங்களைத் தவிர புதிய தொழில் துறைகளிலிருந்தும் வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்தும் தோன்றிய புதிய செல்வந்தர் கோஷ்டி ஜப்பான் ஆதிக்கக் குழுவில் சேர்க்கப்பட்டது. தற்பொழுது ஜப்பானிய பொருளாதாரத்தில் முக்கியமான நிலைகள் கிட்டத்தட்ட 300 மிகப்பெரிய பணக்கார குடும்பங்களைச் சார்ந்திருக்கின்றன.

நிதி ஆதிக்கக் குழு கலவையில் ஏற்பட்ட மாற்றங்கள், பூர்ஷ்வா பொருளாதாரம், பிரச்சாரம் ஆகியவற்றில் பரப்பப்பட்ட கருத்துக்களுக்குச் சம்பந்தமே இல்லை.

### பூர்ஷ்வா மற்றும் சந்தர்ப்பவாதக் கருத்துக்களின் விமரிசனம்

ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் நிதி ஆதிக்க குழு இருப்பதையே மறைக்க முயலுகின்றனர். அல்லது குறைந்தது அதனுடைய ஆதிக்கத்தை உருமாற்ற முயலுகின்றனர். இந்த நோக்கத்துடன் அவர்கள் ''மூலதனத்தை ஜனநாயகப் படுத்துதல்'' என்பது பற்றி பேசுகிறார்கள். கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் ''சொத்துக்கள் மறைவது'' அல்லது ''சமூகம் எளிதில் இயங்கும் தன்மை'' ஆகியவற்றின் வளர்ச்சியின் விளைவால் பெரிய செல்வங்கள் ''மறைவதாகக்'' கருதப்படு

வது, மற்றும் பூர்ஷ்வாக்களே இனிமேல் இல்லை என்பது பற்றி பேசுகிறார்கள். பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகள் 20ம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் ''மூலதனத்தை ஜனநாயகப் படுத்துதல்'' பற்றிப் பேசினர். அப்பொழுதே இந்த துணிபுரைகளின் பொய்மையை லெனின் அம்பலப்படுத்தினார். ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனி சொத்தை சிறு அலகுகளாக உடைப்பதில் ஈடுபடாது. அதற்கு மாறாக, மூலதனத்தை மையப்படுத்துவதற்கும், எண்ணற்ற சிறு பங்கு உரிமையாளர்களின் செலவில் ஒரு சில முதலாளிகளைப் பணக்காரர்களாக்கவும் கவர்ச்சிகரமான ஒரு லட்சிய முறையை அது உருவாக்குகிறது.

''சொத்துக்கள் மறைகின்றன'' என்பதைப் பொறுத்த அளவில் அதற்குப் புள்ளிவிவர அடிப்படைக் கிடையாது என்பதனை அழுத்தமாகக் கூற வேண்டும். கிடைத்த புள்ளி விவரங்களின் பகுத்தாய்வு, உதாரணமாக, வாரிசு உரிமை மூலம் கிடைத்தச் சொத்துக்களைப் பற்றிய புள்ளிவிவரங்கள், இத்தகைய துணிபுரைகளை மிகத் தீர்மானமாக மறுக்கிறது. உதாரணமாக, பிரெஞ்சு நாட்டில், ஆவணப்பதிவு அலுவலகங்களின் கணக்குப்படி வாரிசாக வந்த சொத்துக்கள் 80 சதவீதமான சந்தர்ப்பங்களில் 5000 பிராங்குகளுக்கு அல்லது அதை விட குறைவான பிராங்குகளுக்குத் தான் சமமாகும். உழைக்கும் மக்களைக் கொண்ட—தொழில் துறை தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் உழைக்கும் அறிவாளிகள்—பிரான்சை, மக்கள் தொகையில் மிகக் குறைந்த சிறுபான்மையினரால் தனியார் சொத்தில் 70 சதவீதத்தைத் தனதுரிமையாக்கப்பட்டவர்களை கொண்ட பிரான்சு எதிர்க்கிறது.

''சமூகம் எளிதில் இயங்கும் தன்மை'' தத்துவம் அல்லது அதனுடைய மாற்றுருவமான ''நிர்வாக அதிகாரப் புரட்சி'' தத்துவம், முதல் எடுப்பில் நன்றாக ஸ்தாபிக்கப்பட்டது போல் தோன்றும். மக்களுக்குப் பல்கலைக்கழகப் படிப்பு எளிதில் இன்று கிடைக்கக் கூடிய நிலையிலுள்ளது என்பது உண்மை. நிர்வாகிகளின் பங்கு அதிகரித்துக் கொண்டுள்ளது. சில உயர் நிர்வாகிகள் ''பெரும்'' நிர்வாகிகள் வரிசையில் சேருகின்றனர்.

எவ்வாருயினும் எதார்த்தத்தில் இத்தகைய விஷயங்கள், முதலாளித்துவ ''சமூகம் எளிதில் இயங்கும் தன்மையை'' உறுதிப்படுத்தாது. பெரிய சமூக குழுக்களும் வர்க்கங்களும் அதே மாதிரியாகவே உள்ளன. நிர்வாகப் பதவி வகிக்கும் மிகப் பெரும் பான்மையினர் மூலதனத்தின் சொந்தக்காரர் களுக்காகவே வேலை செய்கிருர்கள். அவர்கள் இவர்களுக்கு கூலிக் கொடுக்கின்றனர். அவர்களில் சிலர்—உண்மையில் மிகச் சிலர்—நிதி ஆதிக்கக் குழுவில் சேர்ந்தால், இது அத னுடைய இயல்பில் ஒரு மாற்றமும் செய்யாது.

## நிதி ஆதிக்கக் குழுவின் குறிப்பிடத்தக்க பண்புக் கூறுகள்

தனித்தனி முதலாளித்துவ நாட்டிலுள்ள அரசாங்க வடிவம் எப்படியிருப்பினும், குடியாட்சியாகவோ, முடி யாட்சியாகவோ இன்று நிதி ஆதிக்கக் குழு, முதலாளித்துவ பொருளாதாரத்தின் முழுமையான எஜமானனுக இருக்கிறது. நிதி ஆதிக்கக் குழுவிற்கும் உற்பத்திக்கும் சம்பந்தம் இல்லை. மேலும் அது முதலாளித்துவ நாடுகளின் புல்லுருவி.

நிதி ஆதிக்கக் குழுவின் அடுத்தப் பண்புக் கூறு அதிகரித் துக் கொண்டே வரும் அதனுடைய உலகளாவிய சர்வதேச குணும்சமாகும். லெனினுல் குறிப்பிடப்பட்ட நிதி மூலதனத் தின் தன்னலக் கும்பல்களின் சர்வதேசிய ரீதியாக ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைவை நோக்கிச் செல்லும் போக்கு இன்று இதற்கு முன் இல்லாத அளவில் நடை பெற்றுள்ளது.

அரசு நிர்வாகத்துடன் வளர்ந்து வரும் அதனுடைய பிணைப்புகளாலும், அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் தோற்றம் வளர்ச்சி ஆகியவற்ருலும் நிதி ஆதிக்கக் குழுவின் சர்வ வல்லமை உயர்த்தப்படுகிறது. பெரும் புத்தகப் பதிப் பக நிறுவனங்கள், பத்திரிகைகள், பூர்ஷ்வாக்களின் நலன் களுக்காக உழைக்கும் மக்களைத் தொடர்ந்து மூளைச் சலவை செய்யும் வானெலி, தொலைக் காட்சி ஆகிய எல்லா சித் தாந்தச் சாதனங்களையும் இந்த நிதி ஆதிக்கக் குழு கட்டுப் படுத்துகிறது.

சிறப்பாக, ஏகாதிபத்தியப் போர்களைத் தயாரிப்பதிலும் நடத்துவதிலும் அதனுடைய சொந்த ஆதிக்கத்தை உயர்த்து

வதற்காகவும் தொழிலாளர்கள் மற்றும் முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள ஏகபோகமற்ற பிற பகுதியினர்களைச் சுரண்டுவதைத் தீவிரப்படுத்துவதற்காகவும் அரசின் முழு பலத்தையும் பயன்படுத்துவதிலும் நிதி ஆதிக்கக் குழு ஆற்றிய பிற்போக்கான பங்கு வெளிப்படுகிறது.

## 7. ஏகபோக இலாபமும் ஏகபோக பூர்ஷ்வாவின் சேமிப்பும். முதலாளித்துவ நாடுகளில் நடைபெறும் ஏகபோக-எதிர்ப்புப் போராட்டத்தின் பொருளாதாரக் கோட்பாடுகள்

சுதந்திரமான போட்டி ஏகபோகங்களின் ஆதிக்கத்தால் அகற்றப்படும் பொழுது முதலாளித்துவப் பொருளாதார விதிகளின் செயல் அழிக்கப்படுவதில்லை. ஆனால் அவை வெளிப்பட்ட வடிவங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. முதலாளித்துவ அமைப்பில் அதனுடைய எல்லாக் கட்டங்களிலும் செயல்படுகின்ற முக்கியமான பொருளாதார விதியானது, நிச்சயமாக, உபரி மதிப்பின் விதியாகும். சுதந்திரமான போட்டியுள்ள முதலாளித்துவத்தில் இந்த விதி சராசரி இலாப விதி வடிவத்தை எடுக்கிறது. ஏகபோக முதலாளித்துவத்தில் ஏகபோக இலாப விதியாக அது செயல்படுகிறது.

### ஏகபோக இலாபத்தின் சாராம்சம்

சராசரி இலாபத்தை விட அதிகமாக இருக்கும் இலாபமான ஏகபோகங்களின் இலாபமே ஏகபோக இலாபம் எனப்படும். இந்த இலாபம், உற்பத்தியிலும் புழக்கத்திலும் உள்ள ஏகபோகங்களின் முன் ஆதிக்க நிலையின் வெளிப்பாடாகும். சராசரி இலாபத்திற்கு மேல் அதிகமாக உள்ள ஏகபோகத்தின் இலாபமானது அதீத-இலாபம் என அழைக்கப்படுகிறது.

தனிப்பட்ட முதலாளிகள், சுதந்திரமான போட்டியுள்ள முதலாளித்துவத்திலும் கூட அதீத இலாபத்தைப் பெறமுடி

யும். ஆனால் போட்டி இதை வெகுகாலத்திற்குத் தொடர அனுமதியாது. இந்த நிலைமை ஏகாதிபத்தியத்தில் அடிப்படையாக மாறுபடுகிறது. ஏகபோகங்கள் சமுதாயத்தின் ஒவ்வொரு வட்டத்திலும் ஆதிக்க நிலையைக் கைப்பற்றி எல்லாக் காலங்களிலும் அதீத இலாபத்தை வருவிக்கின்றன.

சராசரி இலாபத்தோடு இந்த அதீத இலாபம் எங்கிருந்து வருகிறது? பல்வேறு விதமான பொருளாதார வட்டாரங்களில்—தொழில் துறையில், போக்குவரத்தில், வணிகத்தில், சேவை துறையில், வங்கிகளில், விவசாயத்தில் மூதலீடு செய்யப்பட்ட பெரிய பொருளாதார வளங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த ஏகபோக பூர்ஷ்வாக்கள் முதலாளித்துவ சமுதாயம் முழுவதையும் சுரண்டுகின்றன. எனவே ஏகபோக இலாபம் எல்லாப் பொருளாதார வட்டாரங்களிலிருந்தும் பெறப் பெற்ற ஏகபோக வருவாயின் ஒரு சிக்கலான கூட்டு வடிவமாகும்.

ஏகபோக இலாபம், ஏகாதிபத்திய யுகத்தில் உள்ள மொத்த உற்பத்தி உறவுகளை வெளிப்படுத்துகிறது. சுதந்திரமான போட்டி முதலாளித்துவத்தில் சராசரி இலாபமானது, மொத்த முதலாளித்துவ வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையேயுள்ள உறவுகளையும், உபரி மதிப்பில் சாத்தியமான மிகப் பெரும் பங்கைப் பெறும் ஆவலில் ஈடுபட்டிருக்கும் தனிப்பட்ட முதலாளிகளிடையேயுள்ள உறவுகளையும் வெளிப்படுத்துகிறது. ஏகபோக இலாபம், ஏகபோகப் பூர்ஷ்வாக்களுக்கும் நவீன முதலாளித்துவ சமுதாயத்தின் மற்ற எல்லா வர்க்கங்கள் சமூகப் பகுதிகள் ஆகியவற்றிற்கும் இடையேயுள்ள உற்பத்தி உறவுகளை வெளிப்படுத்துகிறது. முதல் முதலில் ஏகபோகப் பூர்ஷ்வாக்களுக்கும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம், மத்தியத் தரப் பகுதியினர் ஆகியோருக்கும் காலனி நாடுகள், சார்ந்துள்ள நாடுகள் அவற்றில் இருக்கும் உழைக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள உறவுகளையும், ஏகபோகப் பூர்ஷ்வாக்களுக்கும் ஏகபோகமற்ற பூர்ஷ்வாக்களுக்கும் இடையேயுள்ள உறவுகளையும், ஏகபோகங்களுக்கிடையே உள்ள உறவுகளையும் ஏகபோக இலாபம் வெளிப்படுத்துகிறது.

## ஏகபோக இலாபத்தின் மூலாதாரங்கள்

ஏகபோக இலாபத்தின் மூலாதாரங்கள் பல வகையானவை. முக்கியமானது நிச்சயமாக, ஏகபோகத் தொழில் நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களைச் சுரண்டுவதாகும். ஏகபோகத்தின் ஆதிக்கம் உற்பத்தி வட்டாரத்திலேயே அதிகமான சுரண்டலுக்கு வழி வகுக்கிறது. ஏகபோகத் தொழில் நிலையங்களின் உயர்ந்த தொழில்நுணுக்கத் தரமும் சிறந்த உழைப்பு ஒழுங்குப்பாடும் ஏகபோகங்கள் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும், தொழில் நுணுக்கச் சாதனங்கள் குறைவாக உள்ள தொழில் நிலையங்களுடன் ஒப்பிடும் பொழுது உற்பத்திச் செலவுகளில் உள்ள வித்தியாசத்தின் விளைவால் அதீத இலாபத்தை தனதுரிமையாக்கவும் சாத்தியமாக்குகின்றன.

ஏகபோக அதீத இலாபத்தைப் பெற உழைப்பைத் தீவிரப்படுத்துதல் சிறந்த ஒரு வழியாகும். எல்லா உற்பத்தித் துறைகளிலும் பொதுவான வேலை ஒழுங்கு இயல்பைத் துரிதப்படுத்துவதன் மூலம் ஏகபோகங்கள் உழைப்பின் தீவிரத் தன்மையை உயர்த்துகின்றன. அவைகள் பரவலாக உழைப்பின் காலம், இயக்கம் ஆகியவற்றின் ஆய்வுகளைப் பயன்படுத்துகின்றன. உழைப்பிற்கு அவைகள் ஊதியமாக வியர்வை சிந்தும் முறைகளைப் புகுத்துகின்றன. இம்முறைகள் தொழிலாளர்களை அவர்களுடைய எஜமானர்களைச் சார்ந்திருக்கும்படி செய்கின்றன.

உழைப்பை நவீனமாக தீவிரப்படுத்துதல் மிக அதிகமான நரம்பு மண்டல சக்தியை ஈடுபடுத்துகிறது. இது உழைப்புச் சக்தியை அழிக்கும் விளைவை ஏற்படுத்தும். வேலையைத் தீவிரப்படுத்துவது, தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளில் எந்த மேம்பாடும் அதற்கு ஈடு செய்ய முடியாத அளவை அடிக்கடி அடைகிறது. இதன் விளைவு உழைப்புச் சக்தியின் அழிவாகும்.

ஏகபோக இலாபத்தின் அடுத்த மூலாதாரம் ஏகபோகங்களால் சுரண்டப்படும் வெளிநாட்டு உழைப்புச் சக்தியாகும். 1970ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு முன் மேற்கு ஐரோப்பிய நாடுகள் 1,5 கோடி குடியேறிய

தொழிலாளர்களைக் கொண்டிருந்தன. அவர்களை மேற்கத்திய செய்தித் தாள்கள் கூட "ஒதுக்கப்பட்டவர்கள்" என்று கூறின. வெளி நாட்டுத் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த விகிதத்திலேயே சம்பளம் வழக்கமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு சமூக இன்ஷூரன்ஸ் கிடையாது. அவர்கள் மலைக்கச் செய்யும் நிலைமைகளில் வாழ்கின்றனர்.

தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட உபரி மதிப்பைத் தவிர, உழைப்புச் சக்தியின் மதிப்பின் கணிசமான பகுதியும் ஏகபோக இலாபத்தின் மூலாதாரமாகும். உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கும் ஏகபோகங்களால் கொடுக்கப் படும் கூலிகளின் அளவிற்கும் இடையேயுள்ள பிளவில், உழைப்புச் சக்தியின் மதிப்பின் ஒரு பகுதி ஏகபோகங்களால் தனதுரிமையாக்கப்படுகிறது என்ற உண்மை சுட்டிக்காட்டப் படுகிறது.

மற்ற தொழில் நிலையங்களில் உற்பத்தியான உபரி மதிப்பையும் கூட ஏகபோகங்கள் தங்களுடைய இலாபங்களை உயர்த்தப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. இது ஏகபோக விலை முறை மூலமாகச் செய்யப்படுகிறது. அதனால் சமுதாயத்தில் உற்பத்தியான உபரி மதிப்பு ஏகபோகங்களின் நலனுக்காக மறுவினியோகம் செய்யப்படுகிறது.

ஏகபோக விலைகள் அடிக்கடி பொருள்களின் மதிப்பை விட மிக உயர்ந்தே இருக்கும். விற்பனை விலைகளை உயர்ந்த ஏகபோக நிலையிலேயே வைத்திருக்க, ஏகபோகங்கள் மார்க்கெட் எப்பொழுதும் இறுக்கம் வாய்ந்ததாக இருக்குமாறு உற்பத்தியை ஒழுங்குபடுத்துகின்றன. அவற்றின் பொருள்களின் விலைகள் முழுமையாகவும் தொடர்ந்தும் உயர்ந்து கொண்டே இருக்க ஒவ்வொரு வழியையும் உபயோகிக்கின்றன. அதனால் தான் முதலாளித்துவ உலகில் வாழ்க்கைச் செலவு நிரந்தரமாக உயர்ந்து கொண்டே இருப்பதற்கு ஏகபோக ஆதிக்கம் ஒரு பெரிய காரணமாக இருக்கிறது.

ஏகாதிபத்தியத்தின் கீழ் இதைப் போல் பரவலாக இருப்பது குறைவான ஏகபோக விலைகள். அவ்விலைகள் பொருள்களின் மதிப்பை விட குறைவாகவே அமைக்கப்படுகின்றன. ஏகபோகங்கள் பொருள்களை அந்த விலைகளுக்கு சிறிய பரிவர்த்

தனைப் பண்ட உற்பத்தியாளர்களிடமிருந்தும் ஏகபோகமல்லாத முதலாளிகளிடமிருந்தும் வாங்குகின்றன.

ஏகபோக விலைகள் தொழிலாளர்களை மேலும் அதிகமாகச் சுரண்ட ஒரு வழியாகும். ஏன் எனில் ஏகபோகங்களின் பொருள்களை வாங்குகிறவர்களாகத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

விலை நிர்ணய முறையின் உதவியால் ஏகபோகங்கள் முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள மத்திய தர வர்க்கத்தினரைக் கொள்ளையடித்து அழிக்கின்றன. நகரத்திலும் நாட்டுப்புறங்களிலும் உள்ள சிறிய உற்பத்தியாளர்களின் உபரி உற்பத்திப் பொருளின் மதிப்பையும் தேவையான உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியையும் அவைகள் கைப்பற்றுகின்றன. ஏனென்றால் தங்களுடைய பொருள்களை அவர்களுக்கு மிதமிஞ்சிய விலைகளுக்கு விற்று அவர்களுடைய பொருள்களைச் செயற்கையாகக் குறைக்கப்பட்ட விலைகளுக்கு வாங்குகின்றன. முக்கியமாக ஏகபோக விலை முறை விவசாயிகளிடம் தான் பிரயோகிக்கப்படுகிறது. ஏகபோகங்கள் விவசாயிகளை உற்பத்தியாளர்கள் நுகர்வோர்கள் என்ற இரு விதத்திலும் கொள்ளையடிக்கின்றன.

காலனி நாடுகளையும் சார்பு நாடுகளையும் கொள்ளையடித்ததும் ஏகபோக இலாபத்திற்கு மிகப்பெரிய ஒரு மூலாதாரம். ஏகாதிபத்திய நாடுகளுக்கும் வளர்ந்து வரும் நாடுகளுக்கும் இடையேயுள்ள மொத்த பொருளாதார, அரசியல் உறவுகளின் அமைப்பு அதற்குத் தொண்டாற்றுகிறது. மூலதன ஏற்றுமதி, சமமற்ற பரிவர்த்தனை, வளரும் நாடுகளின் மக்களைச் சுரண்டுவது ஆகியவை இந்த நிகழ்ச்சிப் போக்கில் விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஏகபோகங்கள், அவைகள் முதலீடு செய்த நாடுகளில் அவைகளுடைய தொழில் நிலையங்களில் உற்பத்தியான உபரி மதிப்பைத் தங்கள் உரிமையாக்கிக் கொள்ளுகின்றன. உள்நாட்டுத் தொழில் நிலையங்களில் முதலீடு செய்வதால் அவைகள் சுரண்டல் வட்டாரத்தைத் தொடர்ந்து விரிவுபடுத்திக் கொண்டே இருக்கின்றன. வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள பரிவர்த்தனைப் பண்ட சிறு உற்பத்தியாளர்களால் உற்பத்தி

செய்யப்படும் தேவையான பொருளின் மதிப்பில் ஒரு பகுதிக்கு ஏகபோகங்கள் சொந்தக்காரர்களாகக் கூட ஆகின்றன.

நிதி ஆதிக்க குழு பெருஞ்செல்வர்கள் பல்வேறு நிதி நடவடிக்கைகள் மூலமும் இலாபத்தைப் பெறுகிறார்கள். ஏகபோக இலாபங்களை வலிந்து பெற அநேக வழிகள் உள்ளன: மற்ற மக்களுடைய மூலதனத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், விருத்தியடைந்து வரும் இலாபத்தை (பங்கு விலைக்கும் கூட்டுப் பங்கு கம்பெனியில் முதலீடு செய்த மூலதனத்திற்கும் இடைபட்ட வேறுபாடு) தனதுரிமையாக்குவதன் மூலமும், பங்குப் பரிவர்த்தனையில் வர்த்தக சூதாட்டம் செய்வதன் மூலமும் இலாபம் பெற முடியும். அரசாங்கப் பத்திரங்கள் உள்ளிட்ட பணப்புழக்க நடவடிக்கைகளிலிருந்து நிதி மூலதனமிடுவோர்கள் மேலும் மேலும் அதிக இலாபம் பெறுகின்றனர். ''நிதி மந்திரவாதி'' கடைப்பிடிக்கப்பட்ட பல்வேறு வழி முறைகள் இறுதியாக, சமுதாயத்தில் செய்யப்பட்ட உபரி உற்பத்திப் பொருளையும், தேவையான உற்பத்திப் பொருளின் பகுதியையும் மறுவினியோகம் செய்வதாகும் என்பது தெரிகிறது.

நவீன முதலாளித்துவத்தின் கீழ் ஏகபோக இலாபம் உருவாவதும், ஏகபோகங்களால் அது தனதுரிமையாக்கப்படுவதும் பூர்ஷ்வா அரசுடன் இணைக்கப்படுவது அதிகரித்துக் கொண்டே வருகிறது.

## ஏகபோகமும் சமுதாயமும்

இவ்வாறாக, ஏகபோக இலாபத்தைத் தனதுரிமையாக்குவதன் சாராம்சம், மூலாதாரங்கள், வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றிய ஒரு பகுத்தாய்வு, ஏகபோகங்களின் ஆதிக்கம் பெரும் பகுதியான மக்களின் நலன்களுடன் முரண்படுகிறது என்பதைக் காட்டுகிறது. முதலாளித்துவ ஏகபோகங்கள் தொழிலாளி வர்க்கத்தின் முதன்மையான விரோதிகள். அவைகள் விவசாயிகள், கைவினைஞர்கள், மற்ற நகர்புற சிறிய சொத்துச் சொந்தக்காரர்கள், அலுவலக ஊழியர்களிலும் அறிவு ஜீவிகளிலும் பெரும்பகுதியினர் ஆகியோர்களுக்குக் கூட எதிரிகளே. லெனினின் ஏகபோக

இலாபத்தைப் பற்றிய தத்துவம், எல்லா ஏகபோகமற்ற பகுதிகளும் கூட்டுச் சேர்வதற்கான பரந்த புறவயமான அடிப்படையைக் காட்டுகிறது. இந்தக் கூட்டணியில் முன்னணிப் பங்கு தொழிலாளி வர்க்கத்தைச் சார்ந்தது. சமுதாயம் முழுவதிலிருந்தும் ஏகபோக இலாபத்தைக் கடைந்து எடுக்கக் கூடிய நிதி ஆதிக்கக் குழுவை அழிப்பதில் ஏகபோகமற்ற பகுதியினருக்கு ஆர்வம் உள்ளது. இது தொழிலாளி வர்க்கத்திற்கு அவர்களுடைய முயற்சிகளை ஒன்றிணைத்து, ஏகபோக ஆட்சியை ஒழித்து, ஆழ்ந்த சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களை நிறைவேற்ற கூடிய ஒரு பரந்த ஏகபோக-எதிர்ப்பு முன்னணியை அமைக்க சாத்தியமாக்குகிறது.

*அத்தியாயம் 8*

# அரசு-ஏகபோக முதலாளித்துவம்

*ஏகபோகத் தன்மையுடன் இருக்கும் பொழுது நவீன முதலாளித்துவம், 20ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இருந்ததுடன் ஒப்பிடும் பொழுது புதிய பண்புக் கூறுகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. அதனுடைய அரசு-ஏகபோக குணும்சம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. மேலும் ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்ச்சியுறுவது வேகமாக நடைபெறுகிறது.*

அரசு-ஏகபோக முதலாளித்துவம் என்பது முதலாளித்துவ ஏகபோகங்களின் சக்தியும் அரசின் சக்தியும் ஒன்றிணைவதால் குணும்சப்படுத்தப்பட்ட ஏகபோக முதலாளித்துவமாகும்.

## 1. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் சாராம்சம், அதனுடைய வளர்ச்சியின் புறவய விதிகள் ஆகியவற்றைப் பற்றிய லெனினுடைய போதனை

*அரசு-ஏகபோக முதலாளித்துவத்தைப் பற்றிய போதனை (''அரசு-ஏகபோக முதலாளித்துவம்'' என்ற வகை சொற்றெடரும்) லெனினுல் உருவாக்கப்பட்டது. இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அவருடைய நூல்களில், ஏகபோகங்கள் தோன்றி வளர்ந்ததால் ஏற்பட்ட அரசினுடைய மாறி வரும் பங்கைப் பற்றி, அவற்றிடையே பரஸ்பரப் பிணைப்புகள் அதிகரிப்பதைப் பற்றி, ஏகபோக*

பூர்ஷ்வாக்களால் மிக அதிக அளவில் அரசைப் பயன்படுத்துவது பற்றி பல புதுக்கருத்துக்களை வழங்கி, லெனின் மார்க்சின் தத்துவத்தை வளர்த்தார். அவருடைய ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என்ற நூலில், ஏகபோகங்கள் பூர்ஷ்வா அரசாங்கங்களுடன் இணைவதைக் காட்டி லெனின் அரசு-ஏகபோகத்தின் சாராம்சத்தை வெளிப்படுத்தினார். லெனினுடைய நூல்களான நெருங்கி வரும் பெரும் விபத்து, அதை எதிர்த்துப் போராடுவது எப்படி, அரசும் புரட்சியும் ஆகியவை மிக முக்கியமானவையாயின. இவை லெனினுடைய அரசு-ஏகபோக முதலாளித்துவத் தத்துவத்தின் அடிப்படைப் பண்புக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன.

## ஒரே ஒரு பொறியமைவு

ஏகபோகமும் அரசும் ஒரே ஒரு பொறியமைவை இணைக்கின்றன என்ற கருத்துத்தான் லெனினின் பகுப்பாய்வின் மையமாகும். தனிப்பட்ட ஏகபோகங்கள் அல்லது ஏகபோகக் குழுக்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் ஏகபோக சக்தியும் அரசு சக்தியும் ஒன்றாக இணைவது, பூர்ஷ்வா அரசின் சுய ஆட்சிக்கு எந்த வித இழப்பையும் குறிப்பிடவில்லை. எவ்வாறாயினும் ஏகபோகமும் அரசும் ஒன்றை ஒன்று நெருங்குவதற்கு, அரசியல்-பொருளாதார வகையில் குறித்த அர்த்தம் உண்டு. லெனினால் தெளிவாக விளக்கப்பட்ட, நன்றாகத் தன்மைப்படுத்தப்பட்ட அதனுடைய வர்க்க உள்ளடக்கம், முதலாளித்துவ அமைப்பைக் காத்து வலுவடையச் செய்வதிலும், ஏகபோக இலாபங்களை அதிகரிப்பதிலும் உள்ள ஏகபோக பூர்ஷ்வாவின் பொதுவான ஆர்வத்தைப் பாதுகாப்பது ஆகும்.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் சாராம்சத்தை விவரித்து லெனின் ஏகபோக முதலாளித்துவம் புறவய, தவிர்க்க முடியாத முறையில் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளரும் என்று காட்டினார். அரசு-ஏகபோக முதலாளித்துவம் என்பது முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஏகபோகமயமாக்குவதின் உச்ச வடிவமாக லெனின் கருதினார். இந்த நிகழ்ச்சிப் போக்கின் அடுத்தடுத்தக் கட்டங்கள் பின்வருவன: உற்

பத்தியை ஒருமுனைப்படுத்துதல், தொழில் ஏகபோகங்கள் தோன்றுதல், வங்கிகளை ஏகபோகமாக்கல், நிதி மூலதனமும் நிதி ஆதிக்கக் குழுவும் உருவாதல், அரசு-ஏகபோக முதலாளித் துவத்தின் வளர்ச்சி ஆகியவை. 1917ல் அனைத்து ருஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி மாநாட்டில் ஏப்ரல் 7ம் தேதி பேசிய லெனின் பின்வருமாறு கூறினார்: "மூலதனத்தை ஒரு முனைப்படுத்துதலும் சர்வதேசியமயமாக்கலும் மிகப் பெரிய அளவில் முன்னேறுகின்றன; ஏகபோக முதலாளித் துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்ந்து கொண்டிருக்கிறது; பல நாடுகளில் சூழ்நிலைகளின் நிர்பந்தங் களால், உற்பத்தியை சமூகம் கட்டுப்படுத்துதல், வினியோகம் செய்தல் ஆகியவை ஒழுங்குப்படுத்தப்படுகின்றன."*

### காரணங்களும் வளர்ச்சிக்குரிய பண்புக் கூறுகளும்

ஏகபோகமும் அரசும் ஒன்றுடன் ஒன்று இணைவதற்கான காரணங்களை லெனின் விவரித்தார். அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சி, முதலாளித்துவ உற்பத்தி முறையின் உள் முரண்பாடுகளின் அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டது என்று மீண்டும் மீண்டும் லெனின் வலியுறுத் தினார். எல்லாவற்றிற்கும் மேலாக அதனுடைய பிரதான மான ஒன்று, உற்பத்தியின் சமூக குணம்சத்திற்கும் தனியார் தனதுரிமையாக்கும் முறைக்கும் இடையே உள்ளதாகும். உற்பத்தி சக்திகள், முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் ஆகிய வற்றிற்கு இடையேயுள்ள முரண்பாட்டை, தொடர்ந்து தனிப்பட்ட முதலாளித்துவச் சொத்துரிமையின் கீழ் என்றும் காணாத அளவு உற்பத்தியைச் சமுதாயமயமாக்குவதில் அடைந்திருக்கும் வளர்ச்சியானது தீவிரப்படுத்துகிறது. அரசின் தலையீடு இல்லாமல் மூலதன புனர் உற்பத்தி விரிவுபடுத் தப்பட முடியாததாகும். அரசின் உதவியால், சாகும் தறு வாயிலுள்ள முதலாளித்துவ அமைப்பின் முரண்பாடுகளைக் குறைக்க முடியும் என்று ஏகபோக முதலாளி வர்க்கம் நம்பு கிறது.

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 24, p. 305.

அரசு-ஏகபோக மூலதனத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்த மற்ற காரணிகளையும் லெனின் பகுத்தாய்ந்தார். அவையாவன: இலாபம் இல்லாத, ஆனால் ஏகபோகங்களுக்குத் தேவையான தொழில் நிலையங்களை அரசு எடுத்து நடத்தும்படி செய்வது; அரசை ஏனைய ஏகபோகங்களுடன் இருக்கும் போட்டியில் பயன்படுத்துவது; ஏகாதிபத்தியப் போர்கள்; இன்னோரன்னவை.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் ஸ்தூலமான வடிவங்களை வர்ணித்த முதல் நபர் லெனின் தான். லெனின் முழுமையாக ஆராய்ந்து தன்னுடைய நூல்களில் விவரிக்காத மிகப்பரவலான எந்த வித அரசு-ஏகபோக பொறியமைவையும் காண்பது மிகக் கடினம். அரசு உடைமையையும் வரவு செலவுத் திட்டம், அரசிறை முறை, விலைகளையும் கூலிகளையும் நிர்ணயம் செய்வது ஆகியவற்றின் மூலம் அரசுப் பொருளாதார ஒழுங்கு முறையின் பங்கையும், பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுதலையும் நாடுகளுக்கு இடைப்பட்ட ஏகாதிபத்தியக் கூட்டணிகளை அமைப்பதையும் அவர் விவரித்தார்.

லெனினது அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் தத்துவமானது, அதனுடைய சாராம்சம், அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்கான புறவய விதிகள் ஆகியவற்றை அம்பலப்படுத்தியது மட்டுமல்லாமல், பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியில் அதனுடைய பங்கினையும் காட்டியது என்பது முக்கியமாக குறிப்பிடத் தக்கது. அறிவு கூர்மையான நெடுந்து நோக்கும் பார்வையுடன், அரசு-ஏகபோக முதலாளித்துவம் என்பது மிக முழுமையான "சோஷலிசத்திற்கான பொருளாயத தயாரிப்பு" என்று லெனின் விளக்கினார். அதனுடைய வளர்ச்சியின் இயக்க இயல், முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளையும் மேலும் ஆழப்படுத்துவதில் அடங்கியுள்ளது.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தைப் பற்றிய லெனினின் போதனை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தஸ்தாவேஜுகளிலும் தீர்மானங்களிலும், சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்க தஸ்தாவேஜுகளிலும், தற்காலத்திய மார்க்சிய-லெனினிய நூல்களிலும் முன்னேக்கி எடுத்துச் சொல்லப்படுகிறது.

இந்த நூற்ருண்டின் ஆரம்பத்தில் இடம் பெற்ற அரசு-ஏகபோக போக்குகளை லெனின் ஆய்ந்தார். முதல் உலகப் போர் ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்ச்சியடையத் தூண்டும் விசையாக இருந்தது.

1929-33ம் ஆண்டு உலகப் பொருளாதார நெருக்கடியினுல் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் மேற்கொண்ட வளர்ச்சி அதிகரிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் அரசு-ஏகபோகப் பொருளாதார ஒழுங்கு முறையில் இரு புதிய வடிவங்கள் தோன்றின: அமெரிக்க ஜனுதிபதி எப். டி. ரூஸ்வெல்ட்டினுடைய புதிய நடவடிக்கையான ''லிபரல்'' வடிவம், நாஜி ஜெர்மனியில் தோன்றிய பாசிச வடிவம். போர் தயாரிப்பிற்காகப் பொருளாதாரத்தை ராணுவமயமாக்குவதற்காக அரசு தலையீடு துரிதப்படுத்தப்பட்டது அங்கு.

இரண்டாவது உலகப் போரின் போது அரசு-ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சி ஒரு புதிய கட்டத்தில் நுழைந்தது.

ஆனுல் இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட ஆண்டுகளிலே அந்த வட்டாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன.

## 2. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் தற்காலக் கட்டம். அரசு-ஏகபோக அமைப்பு உருவாதல்

போருக்குப் பிற்பட்ட காலத்தில் ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்ச்சியடைந்தது சில புதிய பண்புக் கூறுகளைப் பெற்றது.

### அரசு-ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சியின் புதிய பண்புக் கூறுகள்

இந்த நிகழ்ச்சிப் போக்கு கணிசமான அளவு தூண்டு விசையைப் பெற்றது. அரசு-ஏகபோக முதலாளித்துவம், சமூக உற்பத்தி, புழக்கம், வினியோகம், நுகர்வு ஆகிய வட்டாரங்களுக்கு எப்பொழுதும் இல்லாத அளவு விரிந்து பரவு

கிறது. ஏகபோகமும் பூர்ஷ்வா அரசும் ஒன்றுடன் ஒன்று இணைவதின் விரிவான விளைவு, பல முதலாளித்துவ நாடுகளில் ஒரு ஒருங்கிணைந்த, தொடர்ந்து செயல்படும் அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பின் தோற்றமாகும். இது உண்மையில் ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக மாறுவதைக் குறிப்பிடுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக நவீன முதலாளித்துவம் என்பது, இரண்டு உலக அமைப்புகளுக்கு இடையேயுள்ள போராட்ட நிலைமைகளுக்குத் தக அமைத்துக் கொள்ளும் அரசு-ஏகபோக முதலாளித்துவமாகும்.

நவீன முதலாளித்துவத்தின் அரசு-ஏகபோக குணம்சம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஏகபோக மூலதனம், உற்பத்தி ஆகியவற்றை ஒருமுனைப்படுத்துதல் அரசால் தூண்டப்படுவது, தேசிய வருவாயின் அதிகரித்துக் கொண்டே இருக்கும் பங்கை அரசு புனர் வினியோகம் செய்தல், ஏகபோகங்களுக்கு ராணுவ ஒப்பந்தங்களை வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சித் துறைத் திட்டங்களுக்கு அரசாங்கம் நிதி அளித்தல், தேசிய பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுதல், ஏகாதிபத்திய ஒருமைப்பாடு, மூலதன ஏற்றுமதியின் புதிய வடிவங்கள் ஆகிய தூண்டு கோல்கள் எப்பொழுதும் இல்லாத அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

### அரசு-ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சியின் மீது செல்வாக்கு செலுத்தும் அம்சங்கள்

எல்லாவற்றிற்கும் மேலாக, இரு உலக அமைப்புகளுக்கு இடையேயுள்ள போராட்டம், முதலாளித்துவ நாடுகளிலுள்ள வர்க்கப் போராட்டம் ஆகியவற்றின் தாக்கத்தின் கீழ் விரைவுபடுத்தப்பட்ட, ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக மாறும் வளர்ச்சி நடைபெறுகிறது. மாறுகின்ற நிலைமைகளுக்குத் தக்கத் தன்னை மாற்றிக்கொள்ள முதலாளித்துவததிற்கான பிரதான வழி அரசு-ஏகபோக முதலாளித்துவமாகும்.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் பிரதான முரண்

பாட்டை ஆழப்படுத்துவதே ஏகபோகமும் அரசும் ஒன்றுடன் ஒன்று இணைவதற்கான அதிகப் பொருளாதாரத் தேவையை உண்டாக்குகிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதில் இன்றைய விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சி மகத்தான அளவு பங்காற்றுகிறது.

விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் கீழ், போட்டி, இலாப வேட்டை ஆகியவை முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் அளவு, உற்பத்தியின் அளவு ஆகியவற்றின் நிரந்தரமான உயர்வை அவசியமாக்குகின்றன. முதலாளித்துவ ஒருமுனைப்படுதலின் வளர்ச்சி மிக அதிகமாக இருப்பினும் தனிப்பட்ட ஏகபோக மூலதனம், முன்னேற்றமடைந்துள்ள தொழில்நுணுக்கத்தின் அடிப்படையில் உற்பத்தியை விரிவுபடுத்தப் போதுமானதாகாது. விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் முன்னேற்றத்திற்கு ஏகபோகமும் அரசும் ஒன்றாக இணைந்து ஒரே பொறியமைவாக மாறுவது மிக அவசியம். அரசாங்க நிறுவனங்களில் ஆராய்ச்சி நடத்துவதற்காகவும் தனிப்பட்ட ஆராய்ச்சிக்கும் ஏகாதிபத்திய அரசு பெருமளவு நிதியை ஒதுக்குகிறது. நவீன முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சிக்குத் தேவையான மற்றவற்றை அளிப்பதில் அரசின் பங்கு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எடுத்துக்காட்டாக: தனியார் ஏகபோகங்களுக்கு கச்சாப் பொருள்கள், எரிபொருள்கள், ஆற்றல் ஆகியவற்றை அது அளிக்கிறது; அவைகளுக்காகத் திறமையுள்ள தொழிலாளர்களைத் தயாரிக்கிறது; உழைப்பு மார்க்கெட்டை ஒழுங்குபடுத்துகிறது; முதலீடு செய்ய ஏகபோகங்களுக்கு கடன் கொடுக்கிறது; அவற்றின் பொருள்களின் விற்பனைக்கு உத்திரவாதமளிக்கிறது; இப்படிப்பட்ட பல்வேறு தேவைகளுக்கு உதவுகிறது.

மார்க்ஸ் கண்டுபிடித்து, சராசரி இலாப விகிதத்தின் கீழ் நோக்கிச் செல்லும் போக்குடன் இணைத்த, மூலதன வளர்ச்சிக்கேவுரிய உள் முரண்பாடு, ஏகபோகமும் அரசும் இணையும் பரிணும வளர்ச்சியில் குறைந்த முக்கியத்துவமுடையதல்ல. தொழிலாளர்கள், விவசாயிகள் அறிவு ஜீவிகள், வளரும் நாடுகளின் மக்கள் ஆகியோரை அதிகமாகச்

சுரண்டுவதன் மூலம் ஏகபோக மேலோர் உயர்ந்த அளவிலான இலாபத்தையடைய அரசு-ஏகபோக முதலாளித்துவம் ஒரு கருவியாகும்.

உள்ளமைப்பைக் கட்டி விரிவுபடுத்துதலையும், நவீன உற்பத்திக்குத் தேவையான ஆனல் இலாபம் தராத தொழில் நிலையங்களையும் முழு தொழில் துறைகளையும் பராமரிக்க ஆகும் செலவுகளையும் அரசு ஏற்குமாறு செய்வதை ஏகபோகங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

உலக மார்க்கெட்டில் ஏகபோகங்களுக்கு இடையேயுள்ள போட்டித் தீவிரப்படுவது, ஏகாதிபத்தியத்தின் காலனி ஆட்சி முறை சிதறுவது, ஏகாதிபத்திய நாடுகளின் சர்வதேச நிலையில் உள்ள மற்ற மாற்றங்கள் ஆகியவையும் ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக மாறி வளர்வதற்குக் காரணிகளாகும்.

ஏகபோக முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் அரசு-ஏகபோக முதலாளித்துவம், முதலாளித்துவத்தின் புதியதொரு கட்டமுமல்ல, எந்த விதமான ''அதீத ஏகாதிபத்தியமும்'' அல்ல. பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளும் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளும் கூறுவதற்கு மாருக, அது முதலாளித்துவத்தை வெற்றி கொண்டதை எந்த விதத்திலும் குறிப்பிடவில்லை.

## அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் அமைப்பு

அதே நேரத்தில் பக்குவமடைந்த அரசு-ஏகபோக முதலாளித்துவம் உருவானதால் உண்டுபண்ணப்பட்ட புதிய பண்புக் கூறுகளை அலட்சியப்படுத்துவது அபாயகரமானது. வளர்ச்சியடைந்த அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் குணும்சமான இத்தகைய பண்புக் கூறுகள், உற்பத்தியின் சமூக குணும்சத்தின் மேற்கொண்ட வளர்ச்சி, அரசியல் பொருளாதாரம் ஆகியவற்றில் அதிகமான அளவில் ஏகபோகங்களின் ஆதிக்கம், மேலும் அதிகமாக ஏகபோகங்கள் பூர்ஷ்வா அரசுடன் இணைவது ஆகியவற்றின் விளைவாகும். அரசு-ஏகபோக அமைப்பு உருவானது ஏகாதிபத்தியத்தின் எல்லா முக்கியப் பண்புக் கூறுகளையும் பாதிக்கிறது.

உதாரணமாக, ஏகாதிபத்தியத்திற்கான பொருளாதார அடிப்படையான ஏகபோகத்தில் பெரும் மாறுதல்கள் நடைபெறுகின்றன. பூர்ஷ்வா அரசின் தாக்கத்தின் கீழ் கூட ஏகபோகமயமாக்கலின் பரந்த நிகழ்ச்சிப் போக்கினை ஏற்கெனவே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். எப்படியாயினும் விஷயம் என்னவெனில் அரசுடன் ஏதாவது ஒரு வடிவத்தில் அல்லது அளவில் ஏகபோகம் இணையாமல், தனிப்பட்ட ஏகபோகங்கள் இருப்பது முடியாத ஒன்றாகும். இப்பொழுது இருந்தே, ஏகபோக மூலதனத்தின் புனருற்பத்தியில், பூர்ஷ்வா அரசு ஒரு தேவையான நேரடி பங்கு கொள்ளுகிறது. அது இல்லாமல் எந்த முதலாளித்துவப் பொருளாதார வட்டத்திலும் எந்த ஏகபோக நடவடிக்கையும் முடியாது. நிதி மூலதனம் அரசுடன் இணைவதானது, நவீன நிதி மூலதனத்திற்கு அரசு-ஏகபோக குணும்சத்தை அளிக்கிறது, ஏகபோகங்கள் தங்களுக்கே இலாபம் தரக்கூடிய அரசாங்க ஒப்பந்தங்கள், கடன்கள், உதவி நிதிகள், வரிச் சலுகைகள், மற்றும் அரசு நிதி மூலம் கிடைக்கக்கூடிய ஏனைய எல்லா செல்வம் தரும் வடிவங்களையும் பயன்படுத்திக் கொள்கின்றன. இதன் விளைவாக, நிதி ஆதிக்கக் குழுவில் முன்னுளைய அரசு அலுவலர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது. இந்த முன்னுளைய அரசு அலுவலகர்கள் தங்களுடைய அலுவலக நிதியை தாங்கள் பணக்காரர்களாக வேண்டும் என்பதற்காகவும், செல்வர்கள் ஆட்சியில் உறுப்பினர்கள் ஆவதற்கும் பயன்படுத்தியவர்கள்.

ஏகபோகங்களும் நிதி ஆதிக்கக் குழுவின் பல்வேறு வித பிரிவுகளும் அரசாங்கப் பதவிகளுக்காகவும் அரசு நிறுவனங்கள் மீது செல்வாக்கு செலுத்தவும் எப்பொழுதும் போட்டி போட்டுக் கொண்டே இருக்கின்றன. அவற்றிலிருந்து நேரடி பலனைப் பெற முடியும் என அவைகள் நம்புகின்றன. இந்த நிகழ்ச்சிப் போக்கில் அரசும் தனிப்பட்ட ஏகபோகங்களும் அடிக்கடி ஒன்றுடன் ஒன்று முரண்படுகின்றன. ஒரு பிரிவு அல்லது மற்ற பிரிவின் நலன்களை மீறி நடப்பதாலும், ஏகபோக பூர்ஷ்வாக்களின் தனிப்பட்ட நலன்களுக்கும் பொது நலன்களுக்கும் இடையேயுள்ள பிரிவாலும் இந்த மோதல் தோன்றுகிறது. அதனுடைய அடிப்படை நலன்கள் பாது

காக்கப்படுமானுல் நிதி ஆதிக்கக் குழு அரசு இயந்திரத்தின் சுதந்திரத்தை மதிக்கிறது. நிதி ஆதிக்கக் குழுவிற்கு முக்கிய மான விஷயம் என்னவெனில் முதலாளித்துவ அமைப்பின் ஸ்திரத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்; புனருற் பத்தி, ஏகபோக மூலதனத் திரட்சி ஆகியவற்றிற்குச் சாதக மான நிலைமைகள் பராமரிக்கப்பட வேண்டும்.

ஏகபோகமும் அரசும் இணைந்ததானது, ஏகாதிபத்தியத் தின் மற்ற பண்புக் கூறுகளின் மீது ஒரு தாக்கத்தையும் ஏற் படுத்துகிறது. வளர்ச்சியடைந்த அரசு-ஏகபோக முதலாளித் துவத்தில் மூலதனம் அரசாங்கத்தாலேயே ஏற்றுமதி செய்யப் படுவது அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஏகாதிபத்திய ஒருமைப்பாடு, சர்வதேசிய கார்ப்பரேஷன்கள் என்ற உலகப் பொருளாதாரப் பிரிவினையான புது வடிவங்களை அரசு-ஏக போக முதலாளித்துவம் உண்டுபண்ணுகிறது. உலகப் பிராந் தியப் பிரிவினையானது நவீன காலனி ஆதிக்க முறையின் வடி வத்தை மேற்கொள்ளுகிறது. பழைய காலனிச் சாம்ராஜ்யங் கள் சிதறி அடிக்கப்படும் பொழுது, வளரும் நாடுகளில் ஏகாதிபத்தியத்தின் அரசியல், பொருளாதாரப் பிடிப்புகளைக் காக்க அரசு-ஏகபோக அமைப்பு எடுக்கும் ஒரு முயற்சி இது.

நவீன முதலாளித்துவத்தின் அரசு-ஏகபோக குணும்சம் அதிக முனைப்படைகிறபோது அதனுடைய எல்லா முரண் பாடுகளும் அதிகப்படுகின்றன. அரசு-ஏகபோக முதலாளித் துவம் உற்பத்தியை மிகப் பெரிய அளவில் சமுதாயமய மாக்கி அதனுடைய நிர்வாகத்தை மையப்படுத்துகிறது. இதனுல் முதலாளித்துவ அமைப்பின் பிரதான முரண் பாடான, உற்பத்தியின் சமூக குணும்சத்திற்கும் தனியார் தனதுரிமையாக்கும் முறைக்கும் இடையேயுள்ள முரண்பாடு கூடிய அளவில் ஆழப்படுத்தப்படுகிறது. தொழில் துறையின் (அடிக்கடி சில நாடுகளுக்குப் பணி செய்யும்) பல பகுதிகள் ஒரு சில விரல் விட்டு எண்ணக் கூடிய லட்சாதிபதி, கோடீஸ் வரர்களின் சொந்த சொத்தாக இருக்கும் இந்த நிலைமை செயற்கைக்கு மாருக இருப்பதை மக்கள் உணர்வது அதிகரித் துக்கொண்டே வருகிறது. முதலாளித்துவ உற்பத்தி உறவு களைச் சோஷலிச உற்பத்தி உறவுகளால் மாற்றீடு செய்ய வேண்டிய அவசியம் அவசரமாகிறது.

## 3. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் அடிப்படை வடிவங்கள்

பலவகையான சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளின் தாக்குதலின் கீழ் அரசு-ஏகபோக முதலாளித்துவம், ஒவ்வொரு ஏகாதிபத்திய நாட்டிலும் விசேஷ பண்புக் கூறுகளைப் பெறுகிறது. ஆனால் அதனுடைய முக்கியப் பண்பு கூறுகளும் வடிவங்களும் மிக அதிகமான பெரும்பான்மையான நாடுகளில் காணப்படுகின்றன. இன்றைய நிலைமையிலுள்ள குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகள் வருமாறு: ஏகபோக மூலதனம் பூர்ஷ்வா அரசாங்கங்கள் ஆகியவற்றின் தனிநபர் முறையான யூனியன், அரசு-ஏகபோக உடைமை, அரசு பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துதலும் திட்டமிடுதலும், உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையேயுள்ள உறவுகளின் ஒழுங்கு முறை, அரசினால் அமைக்கப்பட்ட நுகர்வு, ஏகபோக மூலதனத்தின் வெளிநாட்டு பொருளாதார விரிவிலும் ஏகபோகங்களின் சர்வதேசக் கொள்கையின் பிற வட்டாரங்களிலும் அரசு-ஏகபோக அமைப்பு பங்கு பெறுதல் ஆகியவை.

### தனிப்பட்டவர் யூனியன்

லெனின் விளக்கியபடி ஏகபோகவாதிகள் அதிகார வர்க்கம் ஆகியவற்றின் தனிப்பட்டவர் யூனியன் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் ஆரம்பகால வடிவங்களில் ஒன்றாகும். அது ஏகபோகங்கள் தோன்றியவுடனே காட்சி அளித்தது. வளர்ச்சியுற்ற அரசு-ஏகபோக முதலாளித்துவத்தில் பரவலாகவும் நிலையானதாகவும் மாறிவிட்டது. பூர்ஷ்வாப் பத்திரிகையாளர்கள் அதற்கு ''பேன்டோஃளாஷ்'' என்று பெயர் சூட்டினார்கள். ஒரு புறம், அரசாங்க நிர்வாகிகள் தனியார் தொழில், வங்கி கம்பெனிகளின் நிர்வாகத்தில் நுழைவது, மற்றொரு புறம், ஏகபோக ஏஜெண்டுகளும் ஏகபோகவாதிகளும் அரசாங்க மந்திரிகளாகவும் ஜனாதிபதிகளாகவும் ஆவது. இந்த இரு வழி நிகழ்ச்சிப் போக்கின் விளைவு, ஒரே ஒரு அரசு-ஏகபோக ஆளும் சக்தியின் தோற்றமாகும். ஏகாதிபத்தியக் கொள்கையை உருவாக்கி

நடத்துவதில் முன்னணிப் பங்கை இது ஆற்றுகிறது. இராணுவ வட்டாரங்களும், ஆயுதங்களைப் உற்பத்தி செய்யும் ஏக போகங்களும் ஒன்றிணையும் இணைப்பின் விளைவான இந்த வகை தனிப்பட்டவர் யூனியன் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. இது ராணுவ-தொழில் தொகுதியாகும். இன்று இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மற்றும் சில ஏகாதிபத்திய நாடுகளின் அரசியல் கொள்கையின் மீது பெருமளவு தாக் கத்தை உண்டாக்குகிறது.

தொழில் துறையாளர்களின் சங்கங்களுக்கும் பூர்ஷ்வா அரசு இயந்திரத்துக்கும் இடையிலுள்ள நெருங்கிய உறவு கள், சமீபத்திய பத்தாண்டுகளில் நடப்பில் உள்ள தனிப் பட்டவர் யூனியனின் மற்றொரு வடிவமாகும். இந்தச் சங்கங் கள் ஒரு வகையான ஏகபோக மூலதனத்தின் தலைமை நிலை யமாக மாறிக் கொண்டு இருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெரும் உற்பத்தியாளர்களின் தேசிய சங்கம், மேற்கு ஜெர்மனியில் ஜெர்மன் தொழில்துறைக் கூட்ட மைப்பு, பிரான்சில் பிரெஞ்சு பணி அமர்வாளர்களின் தேசியக் கவுன்சில், இத்தாலி தொழில் துறையின் பொது கூட்டமைப்பு மற்றும் இதைப் போன்ற பிற சங்கங்கள் ஆகி யவை தேசிய அரசியல் கொள்கையை உருவாக்குவதிலும் உழைக்கும் மக்கள், தன் நாட்டிலுள்ள மற்ற எல்லா ஏக போகமல்லாத பகுதியினர், வெளிநாட்டுப் போட்டியாளர் கள் ஆகியோருக்கு எதிர் எதிராக ஏகபோக பூர்ஷ்வாக் களின் நலன்களைப் பாதுகாப்பதிலும் சுறு சுறுப்பாகப் பங்கு கொள்ளுகின்றன.

## அரசின் அலுவல் நடவடிக்கைகள்

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் ஒரு முக்கிய வடி வம், தனிப்பட்டவர் யூனியனுடன் நெருக்கமாகப் பிணைக்கப் பட்ட அரசின் அலுவல் நடவடிக்கைகளாகும்.

முதலாளித்துவத்தின் ஆரம்பக் கட்டங்களில் கூட அரசு சொத்தான அரசு நிலம், நிர்வாகக் கட்டிடங்கள், அஞ்சல் அலுவலகங்கள், ரயில் தலங்கள், புகையிலை மற்றும் சாராயப் பானங்களுக்கான ஏகபோகம் தனிப்பட்ட

அரசு உடைமை தொழில் நிலையங்கள் ஆகியவை இருந்தன.

ஏகாதிபத்திய யுகத்தில் முக்கியமாக கடந்த போரிலிருந்து இத்தகைய சொத்து கணிசமான அளவில் விரிவடைந்துள்ளது. அதனுடைய பங்கு மாறியிருக்கிறது. ஏகபோக ஆதிக்க முறையைப் பராமரிப்பதற்காகவும் வலுப்படுத்துவதற்காகவும் அது அதிக முக்கியத்துவம் உடையதாக ஆகியுள்ளது.

தற்பொழுது, வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் அரசுக்கும், ஸ்தல அரசாங்க ஸ்தாபனங்களுக்கும் முதலாளித்துவ செல்வத்தில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கு (15 முதல் 25 சதவீதம் வரை) உரியதாகும். முதலாளித்துவ உலகில் அரசு பெரிய தொழில் துறையில் மிக பெரிய சொந்தக்காரனுக என்று மாறியிருக்கிறது. மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி போன்ற நாடுகளில் அரசு உடைமை மற்றும் கலப்புத் தொழில் நிலையங்கள் தொழில் துறை உற்பத்திப் பொருள்களில் 15—20 சதவீதம் தருகின்றன. பிரிட்டனில் அரசாங்கம், நிலக்கரிச் சுரங்கத் தொழில், வாயு தொழிற்சாலைகள், மின்சார உற்பத்தி ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிறது. பிரான்சில் கிட்டத் தட்ட 80 சதவீத எரிபொருள் மற்றும் மின்சார வசதிகள் (கிட்டத்தட்ட நிலக்கரி மற்றும் வாயு தொழில்கள் முழுமையையும், மின்சார உற்பத்தி, எண்ணெய்த் தொழில் துறையில் ஒரு பகுதி) இயந்திர நிர்மாணத் தொழில் துறையிலும் உலோக-வேலைத் தொழில் துறையிலும் சில பெரிய தொழில் நிலையங்கள் (மோட்டார் கார்கள், டிராக்டர்கள், விமானங்கள் ஆகியவற்றின் உற்பத்தி) சில இரசாயன ஆலைகள் இது போன்ற பிறவற்றை அரசுத்துறை கட்டுப்படுத்துகிறது. மேற்கு ஜெர்மனியில், நிலக்கரி, இரும்பு தாது, சுரங்கத் தொழில், அலுமினியம், மின்சார உற்பத்தி ஆகியவற்றின் ஒரு பெரும் பங்கை உள்ளிட்ட நாட்டின் கூட்டுப் பங்கு மூலதனத்தின் 25 சதவீதத்தை அரசு கட்டுப்படுத்துகிறது. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அரசு உடைமை சொத்து (கூட்டாட்சி, அரசு மற்றும் உள்ளாட்சித் துறை ஆகியவற்றின் சொத்து) தேசிய செல்வத்தின் 23 சதவீதமாக உள்ளது.

வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் தற்காலத்திய போக்குவரத்து வசதிகளில் பெரும் பகுதியை பொதுத் துறை கட்டுப்படுத்துகிறது. உதாரணமாக, மேற்கு ஐரோப்பாவில் மொத்தப் போக்குவரத்தில் பாதிக்கு மேல் அரசுடமை தொழில் நிலையங்களால் வகை செய்யப்படுகின்றது.

இப்பொழுது அரசு-ஏகபோகச் சொத்து, ஏகாதிபத்திய வங்கி-கடன் முறையின் முக்கிய ஆதாரங்களில் ஒன்று. நோட்டுகளை வெளியிடும் மத்திய வங்கிகள், கலப்பு நிதி நிறுவனங்கள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அரசு எல்லா வங்கிகளின் சொத்திலும் சுமாராக மூன்றில் ஒரு பங்கைச் சொந்தமாகக் கொண்டுள்ளது என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த எண்கள் சில நாடுகளில் இதை விட இன்னும் அதிகம். உதாரணமாக பிரான்சில் நாட்டின் மொத்த வங்கி சொத்தில் மூன்றில் இரு பங்கை சமீபத்தில் அரசு சொந்தமாக்கியுள்ளது. இத்தாலியில் மொத்த வைப்புத் தொகையில் 55 சதவீதத்தையும், மேற்கு ஜெர்மனியில் 52.2 சதவீதத்தையும் பெல்ஜியத்தில் 50 சதவீதத்தையும், லக்ஸம்பர்க்கில் 26 சதவீதத்தையும், நெதர்லாண்டில் 29 சதவீதத்தையும் பொதுத்துறை சொந்தமாக்கியுள்ளது.

பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளும் சில வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்களும் அரசு-ஏகபோகச் சொத்தை ஒரு வகை சோஷலிச சொத்தாகக் கருதும்படி செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் அது மொத்த ஏகபோக பூர்ஷ்வாக்களின் சொத்து. பூர்ஷ்வாக்கள், தங்களை வளப்படுத்திக் கொள்ள அதனைப் பயன்படுத்துகிறார்கள். அரசு உடைமை தொழில் நிலையங்கள் வழக்கமாக அவற்றின் உற்பத்திப் பொருள்களை தனிப்பட்ட ஏகபோகங்களுக்கு குறைந்த விலைகளுக்கு விற்று அவைகளிடமிருந்து அதிக விலைகளுக்கு வாங்குகிறார்கள். இது, தனிப்பட்ட ஏகபோகங்களுக்கு, அரசு உடைமை தொழில் நிலையங்களில் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட உபரி மதிப்பைத் தங்களுடைய இலாபத்திற்குள் அடக்க சாத்தியமாக்குகிறது. அரசு உடைமை தொழில் நிலையங்களில் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உபரி மதிப்பை, தனிப்பட்ட ஏகபோகங்களின் பணப் பெட்டியில் வடித்தெடுப்பதானது

பொதுத் துறையின் பற்றுக்குறைக்கு இட்டுச் செல்லுகிறது. இந்தப் பற்றுக்குறை அரசு வரவு செலவு திட்டத்தின் மூலம் சரி செய்யப்படுகிறது. அதாவது வரி கொடுப்போரின் செலவில் தான்.

அரசு-ஏகபோக உடைமையின் முதலாளித்துவத் தன்மையை அம்பலப்படுத்தும் போது தொழிலாளி வர்க்கம், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் ஆகியவை, ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதிகளால் ஆலோசனைக் கூறப்பட்ட மாற்று வழிகளை மறுக்கின்றன. இந்த ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதிகள், பொதுத்துறைக்கும், தனியார் துறைக்கும் எவ்வித வேறுபாட்டையும் காண்பதில்லை. குறிப்பிட்ட சில நிலைமைகளில் அரசுடைமை என்பது தனியார் ஏகபோகங்களை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் ஒரு ஆயுதமாக இருக்கலாம் என்று கம்யூனிஸ்டுகள் அழுத்திக் கூறுகிறார்கள். இதனால் தான் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் மிகப் பெருவாரியான மார்க்சிய-லெனினிய கட்சித் திட்டங்கள் தேசியமயமாக்குவதைக் கோருகின்றன. ஆனால் அப்படித்தேசியமயமாக்குவதில் திரளான உழைப்பாளி மக்கள் சுறுசுறுப்பாகக் பங்கெடுப்பதும், தேசியமயமாக்கப்பட்ட தொழில் நிலையங்களின் மீது ஜனநாயகக் கட்டுப்பாடும் அவசியமாகும் என்றும் கோருகின்றன. ஜனநாயக தேசியமயமாக்கல், சோஷலிசத்திற்கான மாற்றத்தைக் குறிக்காது. ஆனால் அது நிதி ஆதிக்கக் குழுவிற்கு நிர்பந்தம் கொடுத்து, அதை பொருளாதாரத்தில் முக்கிய இடத்திலிருந்து வெளியே தள்ளமுடியும் என்று முன்னனுமானம் செய்கிறது. ஏகாதிபத்திய நாடுகளின் அரசியல் மேல்கட்டுமானத்தில் அடிப்படையான மாற்றம் இருந்தால் மட்டுமே ஜனநாயக ரீதியான தேசியமயமாக்கல் சாத்தியமாகும்.

## அரசு பொருளாதார ஒழுங்கு முறை

முதலாளித்துவப் பொருளாதாரத்தினை ஒழுங்குபடுத்துவதில் அரசு எடுக்கும் பலவிதமான நடவடிக்கைகள் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் முக்கியமான ஒரு வடிவமாகும்.

அரசு வரவு செலவு திட்டத்தின் மூலம் தேசிய வருமானத்தின் புனர்வினியோகமானது அரசு நிதி பொருளாதார ஒழுங்கு முறையின் மொத்த அமைப்பின் முக்கிய கூறுகும். 20ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இந்த வரவு செலவு திட்டம் தேசிய வருமானத்தின் மிகக் குறைந்த அளவையே கணக்கிட்டது. இன்று, ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரிட்டன், ஜப்பான், மேற்கு ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி மற்றும் சில முதலாளித்துவ நாடுகள் ஆகியவற்றில், தேசிய வருமானத்தின் 26 முதல் 55 சதவீதம் அரசு வரவு செலவு திட்டத்தில் அடங்கியுள்ளது. வரிச்சுமை மிக அதிகமாக உயர்ந்துள்ளது. முதலாளித்துவ நாடுகளில் உழைக்கும் மக்கள் அவர்களுடைய கூலிகளில் நேர்முக, மறைமுக வரிகள் மூலம் கணிசமான அளவு கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாருக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கூட்டாட்சி வரவு செலவு திட்டம், மாநில வரவு செலவு திட்டம், உள்ளாட்சித்துறையின் வரவு செலவு திட்டம் ஆகியவை மொத்தத் தேசிய உற்பத்திப் பொருளில் சுமாராக மூன்றில் ஒரு பகுதியாகும். கடந்த 10 ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வரிகள் இரு மடங்காகியுள்ளன. இந்தப் பொருளாதார மூலாதாரங்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசு-ஏகபோக அமைப்பின் சக்தி மிக்க நெம்புக் கோல்களாக உள்ளன.

முதலாளித்துவ நாடுகளில் முதலீட்டில் அரசின் பங்கு அதிகரித்துக் கொண்டே உள்ளது. உதாரணமாக, பிரான்சில் இப்பொழுது அரசு, மொத்த முதலீட்டில் 30 சதவீதத்திற்கு மேல் முதலீடு செய்கிறது. ஆனல் போருக்குச் சற்று முன்னல் 5 சதவீதம் தான் முதலீடு செய்தது.

அரசு செலவு, முதலீட்டுத் திட்டங்கள், தொழில் துறைகளுக்கும் தொழில் நிலையங்களுக்கும் நிதி உதவி செய்தல்ஆகியவற்றைக் குறைத்தலை அல்லது அதிகரித்தலைஅடங்கிய அரசிறை ஒழுங்குமுறையை நிறைவேற்ற அரசு இந்த வரவு செலவு திட்டத்தைப் பயன்படுத்துகின்றது. வரி விகிதத்தில் மாற்றம், வரி செலுத்தும் விதிகளில் மாற்றம், வரிச் சலுகைகளைப் புகுத்துவது அல்லது திரும்பப் பெறுவது போன்ற

சூழ்ச்சியான வரி முறையின் அடித்தளத்தில் அரசிறைக் கொள்கை அமைந்துள்ளது.

அரசு விலைக் கட்டுப்பாடு, அரசு கடன் வகைகள் ஆகியவை குறைந்த முக்கியத்துவமுள்ளவை அல்ல. கடன் கிடைப்பதை கடினமாக்க அல்லது எளிமையாக்க நோட்டுகளை வெளியிடும் வங்கி கழிவு விகிதத்தை மாற்றுவதில், தனிப்பட்ட வங்கிகளின் கடன் மூலாதாரங்களை அதிகரிக்க அல்லது குறைக்க நோட்டுகளை வெளியிடும் வங்கியில் கடைபிடிக்கப்படும் கண்டிப்பான குறைந்த வைப்பு நிதியை உயர்த்துவதில், கடன் முறை மூலம் பண மார்க்கெட் மற்றும் புனருற்பத்தி மீது செல்வாக்கு செலுத்த பத்திரங்களை விற்பதில் அல்லது வாங்குவதில் மிகப் பயன்படக்கூடிய கடன் கட்டுப்பாட்டு முறைகள் அடங்கியுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்ட அரசு நடவடிக்கைகள் பொதுத் துறையில் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும். ஒட்டு மொத்தமான முதலாளித்துவ பொருளாதாரத்தைப் பொறுத்த மட்டில் அரசு நடவடிக்கைகள், தன்னியல்பான வளர்ச்சி உற்பத்தியின் அராஜகத் தன்மை ஆகியவற்றின் விதிகளை எதிர்த்து செயலாற்ற முடியாது.

பூர்ஷ்வா அரசு பொருளாதாரத்தை மற்ற நிதி தூண்டு கோல்கள் மூலம் கூட ஒழுங்குபடுத்த முயற்சிக்கிறது—எடுத்துக்காட்டாக, இயந்திரங்கள் தளவாடங்கள் ஆகியவற்றின் தேய்மானத்திற்கான விதிகளைப் புகுத்தல்—நிர்வாக ஒழுங்கு முறையால், அதாவது பொது மக்கள் பயன்படுத்துவதற்கான துறைகளைக் கட்டுப்படுத்துதல், வங்கி மற்றும் கடன் முறைகளின் மீது கட்டுப்பாட்டை கொணர்தல் ஆகியவை.

இந்த ஒழுங்கு முறை வழிகளெல்லாம் ஆரம்பத்தில் தனியாகப் பயன்படுத்தப்பட்டன. வளர்ச்சியுற்ற அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ், அவை பல்வகைப் பொருளாதார திட்டங்களில் சேர்க்கப்படுவது அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

நிதி-பொருளாதார ஒழுங்கு முறையில் அரசு ஏற்கும் பெரும் பங்கும் பொதுத்துறையின் வளர்ச்சியும் முதலாளித்துவ பொருளாதார வேலைத்திட்ட முறை தோன்றுவதற்கான அடித்தளத்தை வகுக்கின்றன.

## முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதார வேலைத்திட்டமிடுதல்

முதலாளித்துவ சமுதாயத்தில் பொருளாதார வேலை திட்டங்கள் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன. அதனுல் அவை சுட்டிக் காட்டுகிற (ஆலோசனை கூறுகிற) குணும்சமுடையவை. அவை சுட்டிக் காட்டுவது முதலாளித்துவத் தொழில் நிலையங்களைக் கட்டாயப்படுத்தக் கூடியதல்ல. அவற்றின் உள்ளடக்கம், ஏக போக முதலாளிகளின் நலன்களுக்கு உட்பட்டது. தேசிய பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் இணைத்து உருவாக்கப்பட்ட பூர்ஷ்வா அரசின் பொருளாதாரக் கொள்கை முக்கியமாக நிதி ஆதிக்கக் குழுவின் நடைமுறைத் தந்திர நலன்களை பிரதிபலிக்கிறது.

அரசு, ஏகபோகங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பலத்தைச் சார்ந்துள்ள முதலாளித்துவ திட்டமிடுதல், ஒரு குறிப்பிட்ட அளவு பயன் விளைவிக்கக் கூடிய நிலையை அடைகிறது. இருப்பினும் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் மற்ற எல்லா வடிவங்களைப் போல், முதலாளித்துவ பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வுடைய வளர்ச்சியையும், தொழில் துறைகளுக்கு இடையேயுள்ள சம விகிதமற்ற நிலையையும் தொழில் நிலையங்களுக்கிடையேயுள்ள போட்டியையும் ஒழிக்க அதனுல் முடியாது. தன் இயல்பான வளர்ச்சியையுடைய உற்பத்திக்கு சரிசம தன்மையுடைய சில கூறுகளைக் கொண்டுவருவதைப் பொருளாதாரத் திட்ட மிடுதல் குறிப்பிட்டாலும் தனியாருடையதும் அராஜக இயல்புடையதுமான முதலாளித்துவ உற்பத்தி அனுமதிக்கக் கூடிய அளவை விட அதிகமான அளவை இக்கூறுகள் அடைய முடியாது. நவீன முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் மேலும் அதிகரிப்பதால் ஏற்பட்ட பொருளாதாரத் திட்ட மிடுதல், பொதுவாக அரசு-ஏகபோக முதலாளித்துவத்தைப் போல், இந்த முரண்பாடுகளையும் அகற்ற சக்தியற்றது.

முதலாளித்துவத்தின் கீழ், உண்மையான சரிசமநிலை பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத் தடை, உற்பத்திச் சாதனங்கள் தனியாருடைமையாக இருப்பதாகும். சமுதாயத்

தின் எல்லா உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சமூக உற்பத்தியைத் திருப்புவதை அது சாத்தியமற்றதாக்குகிறது. அது சமூக உற்பத்தியைத் தவிர்க்க முடியாமல் சமநிலையற்றதாக்கி இறுதியில் அதீத உற்பத்தி நெருக்கடிக்குக் கொண்டுவருகிறது. ''முழுநிறைவாய்த் திட்டமிடுவதற்கு டிரஸ்டுகள் என்றுமே ஏற்பாடு செய்ததில்லை, இப்பொழுதும் செய்யவில்லை, செய்யவும் முடியாது.''* என்பது இதன் பொருள் என்று லெனின் கூறினார்.

சிறந்த ஓர் எடுத்துக்காட்டு, உலக முதலாளித்துவத்தின் எல்லா மையங்களையும் இறுகப் பிடித்திருக்கும் பொருளாதார நெருக்கடியாகும். மிக வளர்ச்சியுற்ற அரசு-ஏகபோக பொருளாதாரத்தை அது மிக மோசமாகத் தாக்கியது. காலத்துடன் நடைபோடவும், பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த என்ன முடியுமோ அதைச் செய்யவும் முதலாளித்துவம் எந்த முயற்சியையும் விட்டுவைக்கவில்லை. இது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டியது. ஆனால் கம்யூனிஸ்டுகள் முன்னதாகவே அறிந்தபடி அது முதலாளித்துவ முரண்பாடுகளை அகற்ற எதுவும் செய்யவில்லை.

1981ல் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசில் பொதுச் செயலாளர் லியனீத் பிரேஷ்னெவ் சமர்ப்பித்த மத்திய கமிட்டியின் அறிக்கை பின்வருமாறு வலியுறுத்தியது: ''முதலாளித்துவப் பொருளாதாரத்தை அரசு ஒழுங்குபடுத்துதல் வெற்றி பெறவில்லை என்பது மிகவும் வெளிப்படையாகும். முதலாளித்துவ அரசாங்கங்கள் பணவீக்கத்துக்கு எதிராக எடுக்கின்ற நடவடிக்கைகள் உற்பத்தித் தேக்கத்தைப் பெருக்கி வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்க்கின்றன. உற்பத்தி நெருக்கடியான அளவுக்குக் கீழே இறங்குவதைத் தடுக்க அவைகள் எடுக்கும் நடவடிக்கைகள் பணவீக்கத்துக்கு முன்னிலும் அதிகமான வேகத்தைக் கொடுக்கின்றன.

''சமூக முரண்பாடுகள் அதிகமான கூர்மையோடு வளர்ச்சியடைந்திருப்பது நன்கு தெரிகிறது.''

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, மாஸ்கோ, 1980, பக்கம் 105.

### ''வருமானக் கொள்கை''

சமீபத்தில் முதலாளித்துவ அரசாங்கங்கள், உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையேயுள்ள உறவுகளை ஏகபோகங்களுக்குச் சாதகமாக ஒழுங்குபடுத்த, சோம்பலில்லாமல் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் அதிகரித்து வருவதின் முக்கியத்துவத்திற்குக் காரணம், அரசு தொழில் நிலையங்களிலும் பிற நிறுவனங்களிலும் தொழிலாளர்கள், அலுவலக வேலையாட்கள் ஆகியோரின் எண்ணிக்கை உயர்வதும், முதலாளித்துவ உலகில் அதிகரித்துக் கொண்டே வரும் வர்க்கப் போராட்டமுமாகும். இவ்வாறாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசு தொழில் நிலையங்களிலும் நிறுவனங்களிலும் வேலை செய்யும் தொழிலாளர்கள், அலுவலக வேலையாட்கள் ஆகியோரின் விகிதாச்சாரம், மொத்த கூலி உழைப்பில் 1929 முதல் 1970க்கும் 1980க்கும் இடைப்பட்ட ஆண்டுகள் வரை 6 முதல் 18 சதவீதம் உயர்ந்தது (மேலும் தற்சமயம் இராணுவ பணியாளர்களின் விகிதாச்சாரம் 4 சதவீதத்திற்கு மேல் அதிகம்). பொதுத் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்கள், அலுவலக வேலையாட்கள் ஆகியோரின் வருமானங்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள மொத்தக் கூலி நிதியில் 20 சதவீதம் ஆகின்றன.

மிக நீண்ட விடாப்பிடியான வர்க்கப் போராட்டத்தின் விளைவால், பல முதலாளித்துவ நாடுகளில் அரசு பங்குடன் சமூக இன்ஷூரன்ஸ் முறை தோன்றியுள்ளது. அதனுடைய புறவய அரசியல் பொருள் என்னவெனில், உழைப்புச் சக்தியைப் புனருற்பத்தி செய்வதில் ஈடுபடுத்தப்பட்ட செலவுகளில் ஒரு பகுதியைச் செலுத்த அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்பதாகும். தனிப்பட்ட ஏகபோகங்கள் அதைச் செலவழிக்காது.

அரசு ''வருமானக் கொள்கை'' தெளிவான வர்க்கக் குணாம்சமுடையது. கீழேயிருந்து கொடுக்கப்பட்ட நிர்பந்தத்தால் பூர்ஷ்வா அரசு மக்களுக்குக் கொடுக்கும் நன்மைகள், வரிகள், அதிக விலைகள், அதிக வாடகை, பயணச் செலவு போன்ற வருமானத்தைத் திரும்பப் பெறும் வடி

வங்களால் அடிபட்டுப் போகின்றன. ''கூலி முடக்கம்'' என்பது முக்கியமாகப் பொருளாதார நெருக்கடியின் போது பரந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது. கூலி உயர்விற்கு வரம்பு விதித்தல், சேமநல செலவுகளைக் குறைத்தல் என்பது போன்ற ''கண்டிப்பான'' கொள்கையினால் ஏகபோகங் களுக்கு அதிக இலாபங்கள் கிடைக்கின்றன.

## பொருளாதாரத்தை இராணுவமயமாக்கல்

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் ஒரு வடிவம் அரசு நுகர்வு என்பதாகும். கடந்த காலத்தில் போர் காலங்களிலே மட்டும் அரசு நுகர்வு அளவற்ற விகிதாச்சாரத்தைப் பெற்றது. இப்பொழுது அமைதியான காலத்தில் கூட நாட்டின் சமூக உற்பத்திப் பொருளின் பெரும் பங்கை அது விழுங்கி விடுகிறது. அரசு கொள்முதலின் ஒரு பெரிய பகுதி பொருளாதாரத்தை இராணுவமயமாக்கலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை இராணுவமயமாக்கல், ஆயுதப் போட்டி ஆகியவை நவீன அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் மிகக் குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகளாகும்.

பொருளாதாரத்தை இராணுவமயமாக்குவதன் மூலம் ஏகாதிபத்திய அரசுகள் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆக்கிரமிப்பு மற்றும் பிற்போக்கு சக்திகளை ஆதரிக்கவும் முயற்சி செய்கின்றன. 20ம் நூற்றுண்டின் தொடக்கப் பாதியில் நடந்த போர்களுக்கு மட்டும் 400,000 கோடி டாலர்கள் செலவாகியுள்ளன. தற்பொழுது முதலாளித்துவ உலகில், இராணுவத்தில் சேவை செய்பவர், போருக்காக வேலை செய்பவர், ஆயுதம் தாங்கிய படைகளின் தேவைகளை நிரப்புகிறவர்கள் ஆகியோர்களின் எண்ணிக்கை 10 கோடியாகும். மிகப் பெரிய அரசாங்கக் கொள்முதல்கள், ஆயுதம் தாங்கிய படைகளைப் பராமரிக்க அபரிமிதமான செலவுகள், போர்த் திட்ட தளவாட இருப்புகளின் திரட்சி ஆகியவை இராணுவ பொருளாதாரத்தின் தொடர்ந்த வளர்ச்சிக்கு உதவுகின்றன. முதன்மையான முதலாளித்துவ நாடுகளில் இராணுவ-

தொழில்துறை பல் கூட்டு ஒன்று உருவாகி கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டு மிகப்பெரிய ஏகபோகங்களாலும் இராணுவத்தின் மேல் தட்டாலும் ஆனதாகும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இந்த இராணுவ-தொழில் துறை பல் கூட்டு மிக வலிமை வாய்ந்த ஓர் ஐக்கியமான பகுதியாகும். அமெரிக்க அரசின் இராணுவச் செலவுகள் அதன் அழுத்தத்தால் விண்ணை முட்டுமளவு உயர்ந்து விட்டன. இவ்வாருக 1977-78 அரசிறை ஆண்டில், அதிகாரப் பூர்வமான புள்ளி விவரப்படி அமெரிக்காவின் இராணுவ ஒதுக்கீடு 116,70 கோடி டாலர்களாக இருந்தது. இது 1978-79ம் அரசிறை ஆண்டில் 128,40 கோடி டாலர்களாக உயர்த்தப்பட இருந்தது. புதிய போர் முறைத் தந்திர ஆயுதங்களைப் பெருக்குவது ஐரோப்பா மற்றும் பிற இடங்களில் அமெரிக்க ராணுவப் படைகளை அதிகரிப்பது ஆகியவற்றிற்கான ஒரு விரிந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

அரசு ராணுவச் செலவுகள், பெரிய ஏகபோகங்கள் மேலும் செழிப்படைய ஒரு மிகப் பெரிய மூலாதாரங்களாக உள்ளன.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தில் விஞ்ஞானத்தை இராணுவமயமாக்குவதானது மனிதகுல எதிர்காலத்திற்கு ஒரு பயங்கர அச்சுறுத்தலாகும். அரசு செலவுகளில் தற்பொழுது விஞ்ஞானத்திற்காக மிக அபரிமிதமான அளவு உயர்ந்திருக்கும் செலவில் 70 சதவீதத்திற்கு மேல் இராணுவ ஆராய்ச்சிக்குப் போகிறது.

பொருளாதாரம் இராணுவமயமாக வளர்வதானது, அதனுடைய எல்லா துறை முன்னேற்றத்திற்கும் அழிவாகும். சில தொழில் துறைகள் மட்டுமே வளரக் கூடிய ஒரு பக்க வளர்ச்சியுடன் கூடிய ஆயுதப் போட்டி நிலையற்ற முதலாளித்துவ பொருளாதாரத்தை மேலும் சரிசமமற்ற நிலையுள்ளதாக்கும். இராணுவமயமாக்கல் என்ருல் அதிக வரிகள், குறைந்த வாழ்க்கை தரம் என்று பொருளாகும். இந்த ஆயுதப் போட்டி நிறுத்தப்பட்டால், மிகப் பெரிய பொருளாதார வளங்களை, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வளரும் நாடுகளுக்கு உதவவும், சூழ்நிலையைக் காக்க

வும், மனித குலத்தை எதிர்நோக்கும் மற்ற பிரச்சினைகளைத் தீர்க்கவும் செலவழிக்க முடியும்.

மேலும் ஏகபோக-மூலதனம் சர்வதேச அரங்கில் அதனுடைய ஆதிக்கத்தை வலுப்படுத்தி விரிவுபடுத்த பூர்ஷ்வா அரசைப் பயன்படுத்துகிறது.

பூர்ஷ்வா அரசு உள்நாட்டு தனிப்பட்ட ஏகபோகங்களின் வெளி நாட்டு பொருளாதார விரிவை மேம்படுத்துகிறது. அவைகளை உலக மார்க்கெட்டில் அதிக அளவு போட்டியில் கலந்து கொள்ளக் கூடியதாக்க நடவடிக்கைகள் எடுக்கிறது. காலனி நாடுகளுக்கும் சார்புடைய நாடுகளுக்கும் மூலதனத்தை ஏற்றுமதி செய்யத் தனிப்பட்ட ஏகபோகங்களுக்கு அரசு உத்தரவாதமளிக்கிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சியினால் சர்வதேச ஏகபோக கார்ப்பரேஷன்கள் தோன்றுகின்றன.

## 4. அரசு-ஏகபோக முதலாளித்துவமும் சோஷலிசத்திற்கான முன்தேவைகளைத் தயாரித்தலும்

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் முதலாளித்துவ சமுதாயத்தின் சமூக-பொருளாதார முரண்பாடுகளும் அரசியல் முரண்பாடுகளும் மேலும் வளர்ச்சியுற்று ஆழப்படுத்தப்படுகின்றன.

### முரண்பாடுகள் ஆழப்படுதல்

இது தொடர்பாக குறிப்பிடப்பட வேண்டிய முதல் விஷயம் முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடாகும். உற்பத்திச் சாதனங்கள் தனியார் உடைமையாக இருக்கும் அதே நேரத்தில், தேசிய, சர்வதேச அளவில் பொருளாதாரத்தை மையப்படுத்துதல், முதலாளித்துவ சமுதாயத்தின் எதிரும் புதிருமானத் தன்மையைத் தவிர்க்க இயலாத அளவு அதிகப்படுத்துகிறது. அரசு-ஏகபோக வளர்ச்சி, அதிகரித்துக் கொண்டிருக்கும் உற்பத்தியை சமூகமயமாக்கலுக்கும் அதனை ஒழுங்குபடுத்தும் அரசு-ஏகபோக முறைக்கும்

இடையேயுள்ள முரண்பாடு போன்ற முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாட்டினைப் புதிய வடிவங்களில் தோன்றும்படி செய்கிறது.

அரசு-ஏகபோக அமைப்பு தொழிலாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் ஆகியோர்களின் நலன்களுக்கு எதிரான முன்னணித் தாக்குதலாகும். எனவே அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சி, உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாட்டினைக் கூர்மையாக்குகிறது.

அதன் விளைவாக இன்றைய நிலைகளில், பாட்டாளிகள் முதலாளிகள் என்று இரு முக்கிய எதிரும் புதிருமான வர்க்கங்களாக சமுதாயம் பிரிவதானது தூண்டப்படுகிறது. வர்க்கங்களுக்கு இடையிலான விகிதத்திலும் அவற்றின் கட்டமைவிலும் போதுமான அளவு மாற்றங்கள் ஏற்படுகின்றன. தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் மேலும் அதிகரிக்கிறது. உற்பத்தியில் அதனுடையப் பங்கு அதிகரிக்கிறது. அதே நேரத்தில் அதனுடைய பெரும் பகுதியினருக்கு அடிப்படைத் தேவைகளின் குறைவும் அதனுடைய எஜமானர்களைச் சார்ந்திருக்கும் நிலையும் அரசியல் உரிமைகளின் குறைவும் அதிகரிக்கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் கட்டமைவு மாறுதலுக்கு உட்படுகிறது. தொழில்துறைகளில் மட்டுமே பணிபுரியும் பாட்டாளிகளின் வளர்ச்சி மெதுவாகக் குறையும் பொழுது, புதிய தொழில் துறைகளிலும் உற்பத்திகளிலும் ஈடுப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் விகிதாச்சாரம் உயருகிறது. விஞ்ஞான-தொழில் நுணுக்கப் புரட்சி பாட்டாளிகளின் எல்லாத் திறமைகளையும் உயர்த்தும் போக்கில் இருக்கிறது. ஆனல் முதலாளித்துவச் சுரண்டல் இந்தப் போக்கைத் தடுத்து, முதலாளிகளுக்கு இலாபம் ஈட்டித் தரும் கருவியாக அதை ஆக்குகிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவம், விவசாய மக்கள், விவசாயிகள், நகர்ப்புற சிறு பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் அழிவு, வறுமை ஆகியவற்றைத் துரிதப்படுத்துகிறது. பூர்ஷ்வாக்களின் மத்தியப் பிரிவினர்களின் ஒப்புநிலை குறைகிறது. முதலாளி வர்க்கம் தானே வேறுபாடுடையதாக்கப்படுகிறது. அரசு-ஏகபோக ஆதிக்கக் குழு அதனின்று பிரிந்து, சமுதாயத்தின் பிற பகுதிக்கு எதிராக நிலைக்கிறது.

## புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் மீதான தாக்கம்

தங்களுடைய பொருளாதார, அரசியல் நலன்களுக்காக நடத்தும் போராட்டத்தில் இப்பொழுது உழைக்கும் மக்கள் தனிப்பட்ட முதலாளிகளால் மட்டுமன்றி பூர்ஷ்வா அரசு, ஏகபோகங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வலுவாலும் எதிர்க்கப்படுகின்றனர். எனவே வர்க்கப் போராட்டத்தை வளர்த்து அதைக் கூர்மையாக்குவதும், தொழிலாளி வர்க்கம் அதனுடையச் சக்திகளை முறைப்படுத்திக் கட்ட வேண்டிய அவசியமும் தவிர்க்க முடியாததாகும்.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் பாட்டாளிகளின் பொருளாதாரப் போராட்டமானது ஒட்டு மொத்தமாக அரசு-ஏகபோக அமைப்புக்கு எதிரான அரசியல் போராட்டமாக மாறுகிறது. தொழிலாளி வர்க்கம் ஏகபோக ஆட்சியின் பிரதானமான, வலுவான எதிரியாகும். மேலும் அது ஏகபோக-எதிர்ப்புச் சக்திகள் எல்லாவற்றிற்கும் கவர்ச்சி மையமாகவும் இருக்கிறது.

ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாகப் பெற்ற வளர்ச்சி, அரசு-ஏகபோக அமைப்பு உருவானது ஆகியவை புரட்சிகரமான இயக்கத்தின் போர்த்திட்டம் மற்றும் போர் தந்திரங்களின் மீது கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது அரசு-ஏகபோக ஒழுங்கு முறைக்கு மாற்றாக ஜனநாயகத்திற்காகவும், இந்த அடிப்படையில் சோஷலிசத்திற்கான மாற்றத்திற்காகவும் போராட ஒரு புறவயத் தேவையை உண்டாக்குகிறது.

முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகரமான சக்திகள் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் இயக்க இயல் ரீதியான முரண்பாட்டுத் தன்மையிலிருந்து முன்செல்லுகின்றன. ஏகபோக பூர்ஷ்வாவின் விருப்பம், உணர்வு ஆகியவற்றைச் சார்ந்திராமல், அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சி, சோஷலிசப் புரட்சிக்கான எல்லா பொருளாயத முன்தேவைகள், எதிர்கால சோஷலிச சமுதாயத்திற்கான அடிப்படைத் தயாரிப்புகள் ஆகியவை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிடுகிறது. ''அரசு-ஏகபோக முதலாளித்துவம் சோஷலிசத்திற்கான முழுமையான

பொருளாயதத் தயாரிப்பாகும், சோஷலிசத்தின் நுழை வாயிலாகும், வரலாற்று ஏணியில் ஒரு படியாகும். இந்தப் படிக்கும் சோஷலிசம் என்றழைக்கப்படும் படிக்கும் இடையே இடைப்பட்ட படிகள் எதுவும் கிடையாது.''* என்று லெனின் எழுதினர்.

அரசு-ஏகபோக முதலாளித்துவம் பொருளாதார விவகாரங்களை நிர்வகிப்பதற்காக பல கிளைகளாகவுள்ள ஒரு நிர்வாக அமைப்பைக் கட்டுகிறது. லெனின் அதை ''சமூக நிர்வாகத்தின் கட்டமைவு''** என அழைத்தார். பாட்டாளிகளும் மற்ற ஏகபோக-எதிர்ப்புச் சக்திகளும், ஒரு புதிய சமுதாயத்தை அமைக்க இதைப் பயன்படுத்த முடியும், பயன்படுத்த வேண்டும்.

இன்று ''சமூக மேலாண்மையின் பொறியமைவு'' வர்க்க உள்ளடக்கத்தைத் தீர்மானிக்கும் ஏகபோகங்களின் ஆதிக்கத்தை இந்த நிகழ்ச்சிப் போக்கில் அழிப்பது நிச்சயமாக அவசியமாகிறது. அரசு-ஏகபோக முதலாளித்துவம் தானுகவே சோஷலிசமாக வளர்ச்சி பெற முடியாது என்பது பொருளாகும். அரசு அதிகாரம் பூர்ஷ்வாவிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பிடுங்கப்பட்டு, அடிப்படையான சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டால் மட்டுமே அரசு-ஏகபோகத்தை மக்களுக்குச் சேவை செய்யும்படி மாற்ற முடியும்.

இதை ஒப்பீட்டுரீதியாக அமைதியான வழியில் நிறைவேற்றுவதா அல்லது ஆயுதம் தாங்கிய போராட்டம் மூலம் நிறைவேற்றுவதா என்பது ஒவ்வொரு நாட்டின் குறிப்பிட்ட நிலைகளைப் பொறுத்துள்ளது. பாட்டாளிகளுக்கும் பூர்ஷ்வாக்களுக்குமிடையேயுள்ள சரிசமநிலையான சக்திகள், தொழிலாளி வர்க்கம், அதனுடைய புரட்சிகரமான முன்னணிப்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 5, மாஸ்கோ, 1980, பக்கங்கள் 377-378.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, மாஸ்கோ, 1980, பக்கம் 79.

படை ஆகியவற்றின் ஒழுங்கமைப்பு, புரட்சிகர விழிப் புணர்ச்சி, மற்ற மக்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் தொழிலாளி வர்க்கத்தின் திறமை ஆகியவற்றைப் பொறுத்துள்ளது அது. இவ்வாருக அரசு-ஏகபோக முதலாளித்துவம் முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளையும் கூர்மையாக்கும் போக்கிலுள்ளது. ஏகபோக-எதிர்ப்புப் போராட்டத்தை ஏற்படுத்தும் ஒரு எழுச்சியை உண்டாக்குகிறது.

அத்தியாயம் 9

# உலக முதலாளித்துவப் பொருளாதாரமும் இன்றைய கட்டத்தில் அதனுடைய முரண்பாடுகளின் பெருக்கமும்

சுதந்திரமான போட்டியையுடைய முதலாளித்துவத்தின் கீழ் பரிவர்த்தனைப் பண்டங்களின் ஏற்றுமதியானது சர்வ தேசப் பொருளாதார உறவுகளின் பிரதான வடிவமாக இருந்தது. முதலாளித்துவ நாடுகளில் வெளிநாட்டு வணிக வளர்ச்சி ஓர் உலக முதலாளித்துவ மார்க்கெட்டின் தோற்றத்தை ஊக்குவித்தது.

## 1. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தோற்றமும் அதன் சாராம்சமும்

ஏகபோகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், சர்வதேச உறவுகளின் மற்ற வகைகளைப் பரப்பத் தீர்மானித்தது. அவை ஏகபோக முதலாளித்துவ சகாப்தத்தின் முன்மாதிரியாகும். மூலதன ஏற்றுமதி அபரிமிதமான முக்கியத்துவத்தைப் பெற்றது. சர்வதேச ஏகபோக சங்கங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அது ஓர் உலகப் பொருளாதாரப் பிரிவினையைத் தோற்றுவித்தது. ஏகாதிபத்திய நாடுகள் காலனி நாடுகளை நிறையப் பெற்றிருந்தன. அது உலகத்தைப் பிராந்திய ரீதியில் பிரிக்க இட்டுச் சென்றது.

இவ்வாறாக ஏகாதிபத்தியத்தின் வருகையானது உலக முதலாளித்துவப் பொருளாதாரம் உருவம் எடுத்துள்ளது என்று பொருள். லெனின் அதை இவ்வாறு வர்ணித்தார்: ''உலகின் மிகப் பெரும் பகுதி மக்களை ஒரு சில ''முன்

னேறிய'' நாடுகள் காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கும் நிதித் துறை நசுக்குதலுக்கும் உள்ளாக்கும் உலக அமைப்பாக முதலாளித்துவம் வளர்ந்து விட்டது.''*

தனது வர்க்க நலன்களைக் காக்கும் மிகப் பெரிய ஏகாதிபத்தியப் பேரரசுகளின் நிதி ஆதிக்கக் குழுவின் ஆதிக்கத்தால், ஏகாதிபத்திய சர்வதேச உறவுகளின் ஒட்டுமொத்தம் என்ற வகையில் உலக முதலாளித்துவப் பொருளாதாரம் குணும்சப்படுத்தப்படுகிறது. மற்றொருபுறம் உலகப் பொருளாதாரம், உற்பத்திச் சக்திகள், தொழில் மயமாக்கல், உழைப்பின் சர்வதேசப் பிரிவினை ஆகியவற்றின் புறவய வளர்ச்சியின் விளைவாகும். உற்பத்திச் சக்திகளை, பொதுவாகப் பொருளாதாரத்தைச் சர்வதேசமயமாக்கல், நாடுகளுக்கு இடையே நெருங்கிய உறவுகள் ஆகியவற்றை நோக்கிச் செல்லும் போக்கு முற்போக்கான ஒன்றுகும். அது சமூக உழைப்பின் உற்பத்தித்திறனை மிக அதிகமாக உயர்த்துகிறது. மேலும் சோஷலிசத்திற்கான, புறவய அகவய முன்தேவைகள் உருவாவதற்குக் காரணமாக இருக்கிறது. உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையின் ஆதிக்கம், ஏகபோகங்களின் மேலாண்மை ஆகியவை இப்போக்கை வர்மப்பிடியாகப் பிடித்து உருக்குலைக்கின்றன; அதைப் பிற்போக்கானதாகச் செய்கின்றன. உற்பத்தியைச் சர்வதேசமயமாக்கல் என்பது, சார்பு நாடுகளைச் சுரண்டுவது, கொள்ளையிடுவது ஆகியவற்றின் மூலமும், பலவீனமான போட்டியாளர்களை அகற்றுவதன் மூலமும் நிறைவேற்றப்படுகிறது.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் எல்லா விதிகளும் முரண்பாடுகளும் உலகப் பொருளாதாரத்தில் வெளிப்படுகின்றன. ஆனல் அவை ஒரு தனிப்பட்ட வழியில் வெளிப்படுகின்றன. இவ்வாறு முதலாளித்துவ உற்பத்தியின் பிரதான முரண்பாடு, வளர்ந்துவரும் பொருளாதாரத்தைச் சர்வதேசமயமாக்கல் என்பதற்கும், சர்வதேசப் பொருளாதாரப் பிணைப்புகளின் வளர்ச்சியின் விளைவாக இருக்கும் நன்மைகளையும் பலன்களையும் ஏகாதிபத்திய ஏகபோகங்களால் தன

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 43.

துரிமை ஆக்கப்படுவதற்கும் இடையே முரண்பாட்டில் காட்டப்படுகிறது. பொருளாதாரத்தைச் சர்வதேசமயமாக்கல் என்பது மேலும் தன்னை சமுதாயமயமாக்கவும் வகை செய்து கொள்ளுகிறது.

இலாபத்திற்காகவும் தங்களுடைய செல்வாக்கு வட்டாரத்திற்காகவும், ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு ஏகபோகக் கூட்டங்களுக்கு இடையே, ஒரு புறத்தில் காலனி நாடுகள், புதிதாக விடுதலைப் பெற்ற நாடுகளுக்கும் மறுபுறம் முன்னுளைய காலனி நாடுகளின் மீது தன்னுடையப் பிடியைத் தொடர்ந்து வைத்திருக்க முயலும் ஏகாதிபத்திய அமைப்புக்கும் இடையேயுள்ள மேலும் மேலும் தீவிரமாகும் முரண்பாடுகளால் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சி குறும்சப்படுத்தப்படுகிறது.

இப்பொழுது சில பத்தாண்டுகளில் உலக முதலாளித்துவப் பொருளாதாரம் பெரும் மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது. மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ அமைப்பு என்பது உலகம் முழுவதையும் தழுவியதாக இல்லை. பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளிலும் கியூபாவிலும் சோஷலிசப் புரட்சிகள் ஏற்பட்டதன் விளைவால் ஓர் உலக சோஷலிச அமைப்பு தோன்றியுள்ளது. அதனுடைய பொருளாதார, அரசியல் உள்ளாற்றல் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டுள்ளது. இத்தகையச் சூழ்நிலைகளில் நிதி ஆதிக்கக் குழு அதனுடைய சர்வதேச ஆதிக்கத்தைப் பயன்படுத்தும் பொறியமைவு முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களுக்கு உள்ளாகிறது. அவை உலக முதலாளித்துவப் பொருளாதாரம் மற்றும் சர்வதேசப் பொருளாதார உறவுகள் ஆகியவற்றின் எல்லா பிரதான அம்சங்களையும் பாதிக்கின்றன.

## 2. மூலதனத்தின் ஏற்றுமதி

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மூலதனத்தை மாற்றுவது உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மிக முக்கியப் பண்புக் கூறு ஆகும். மற்ற நாடுகளில் உற்பத்தியாகும் உபரி மதிப்பை அபகரிப்பதற்காக மதிப்பை ஏற்றுமதி செய்வது ஏகாதிபத்தியத்திற்கு முன்பும் பழக்கத்தில் இருந்தது. ஆனால்

அது ஏகாதிபத்தியக் கட்டத்திலேயே நிரந்தரமானதாகவும் பெரும் அளவிற்கு அதிகரித்துக் கொண்டிருப்பதாகவும் ஆகிறது. லெனின் கூற்றுப்படி மூலதனத்தின் ஏற்றுமதி யானது ''ஏகாதிபத்தியத்தின் மிகவும் முக்கியமான பொரு ளாதார அடித்தளங்களில் ஒன்றாகும்...''*

## மூலதன ஏற்றுமதியின் சாத்தியமும் அவசியமும்

ஏகபோகக் கட்டத்தில் ஏன், மூலதன ஏற்றுமதி முத லாளித்துவத்திற்குரிய ஒன்றாக உள்ளது?

மூலதன ஏற்றுமதியின் வளர்ச்சி ஏகபோக ஆதிக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. மிக அதிகமான இலாபத் தைப் பெற்று, பரிமாணத்திலும் வளர்ச்சி விகிதத்திலும் மூலதனத் திரட்சியை அளவிட முடியாத அளவு ஏகபோகங் கள் அதிகரித்துக் கொள்ளுகின்றன. அதே நேரத்தில், போட் டிக்கு வரம்பு கட்டவும், உயர்ந்த இலாபத்தைப் பெறுவதை நிலையாக்கவும் அவை தமது துறைகளில் மூலதனம் சுதந்திர மாகப் பாய்வதைத் தடுக்கின்றன. இதன் விளைவாக மூல தனத்தின் ஒரு பகுதியை உள்நாட்டில் இலாபகரமாக முதலீடு செய்ய முடியவில்லை. உபரி மூலதனம் இலாப விகிதாச்சாரத் தைப் பாதிக்கக் கூடும். ஏகாதிபத்திய நாடுகளிலேயே சில தொழிற் துறைகளை அல்லது பிராந்தியங்களை மேம்பாட டையச் செய்ய, நிச்சயமாக இந்தச் சார்பு உபரியைத்தான் மிக நன்றாகப் பயன்படுத்த முடியும். ஆனால் உள்நாட்டில் மூலதனம் முதலீடு செய்யப்பட்டால் அந்த மூலதனம் தரும் இலாபமானது மிக அதிகமான ஏகபோக இலாபமாக இருக் காது. இவ்வாறாக, பிற நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்தல் என்ற ஏகபோகத்தின் இயல்பிலிருந்தே தோன்றக் கூடிய அவசியத்தை இது தீர்மானிக்கிறது.

மறு புறம், மூலதன தட்டுப்பாட்டுள்ள வளர்ச்சிகுன்றிய நாடுகளில் மூலதனத்தை முதலீடு செய்யச் சாதகமான நிலை மைகளான, மலிவான உழைப்பு, மலிவான நிலம், மலிவான கச்சாப் பொருள்கள் ஆகியவைகள் உள்ளன. உலக மூல

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 189.

தனத்தின் விற்பனைப் புரள்வில் இந்த நாடுகள் இழுக்கப்படுவதாலும், முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கான ஆரம்ப நிலைகள் அதற்குள்ளேயே அமைந்துள்ளதாலும், பிறநாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்ய வேண்டிய அவசியத்தோடு, சாத்தியமாகவும் தோன்றுகிறது.

## மூலதன ஏற்றுமதியின் வடிவங்கள்

மூலதன ஏற்றுமதி முன்னேற்றமடைய அது பல்வேறு வடிவங்களை மேற்கொள்ளுகிறது. பணிபுரியும் மூலதனம் அல்லது கடன் மூலதனம் என்ற வடிவங்களில் மூலதனம் ஏற்றுமதி செய்யப்படலாம். பணிபுரியும் (தொழிலில் ஈடுபடுகிற) மூலதனம் அதனுடையச் சொந்தக்காரர்களால் தொழில்துறை, விவசாயம், போக்குவரத்து அல்லது வணிகம் ஆகியவற்றில் முதலீடு செய்யப்படுகிறது. பணிபுரியும் மூலதனத்தின் ஏற்றுமதியின் குறிப்பிடத்தக்கப் பண்புக்கூறு, தொழில் ஈடுபாட்டு இலாபத்தைப் பெறுவது ஆகும். பணிபுரியும் மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் ஏகபோகங்கள், வெளிநாடுகளில் கிளை நிறுவனங்களைத் திறக்கின்றன. அல்லது உள்நாட்டு, வெளிநாட்டு மூலதனங்களின் பங்குகளை ஈடுபடுத்தி கலப்பு நிறுவனங்களை அமைக்கின்றன.

பணிபுரியும் மூலதனத்தின் ஏற்றுமதி, நேரடியான அல்லது போர்ட்ஃபோலியோ வடிவத்தில் இருக்கலாம். நேரடி முதலீடுகள் என்பவை அயல்நாட்டு தொழில் நிறுவனங்களின் மேல் கட்டுப்பாட்டை உறுதி செய்யக் கூடியன. மேற்கத்திய நாடுகளின் புள்ளிவிவரங்களில் நேரடி முதலீடுகளை வரையறுக்கப் பல அளவுகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன. பல முதலாளித்துவ நாடுகளில், எடுத்துக்காட்டாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில், ஒரு தொழில் நிறுவனத்தின் மூலதனத்தில் 25 சதவீதத்திற்கு மேல் ஒரு வெளிநாட்டு மூலதன முதலீடு செய்பவர் பெற்றிருந்தால் அத்தகைய முதலீடு நேரடியான முதலீடு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நேரடி முதலீட்டு விஷயத்தில் மூலதன ஏற்றுமதி செய்யும் ஏகபோகங்கள் தொழில் ஈடுபாட்டு இலாபத்தைத் பங்கிற்கான இலாப ஈவுகளைத் தனதுரிமையாக்கிக்

கொள்ளுகின்றன. மேலும் ஓர் அயல்நாட்டுக் கம்பெனியின் உண்மையான மூலதனத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு நிலையில் அவை உள்ளன. போர்ட்ஃபோலியோ விஷயத்தில் முதலீடு செய்பவர்கள் அவர்களுடைய பங்குகளுக்குத் தக்க இலாப ஈவுகளை மட்டுமே பெறுகின்றனர்.

மூலதன ஏற்றுமதியாளர் ஒருவர் அவர் முதலீடு செய்யும் நாட்டின் தொழிலில் தானே ஈடுபட வேண்டாம். அவர் வெறுமனே தன்னுடைய மூலதனத்தை ஒரு வெளிநாட்டு தொழிலதிபர்கள் அல்லது அரசாங்கங்கள் ஆகியவற்றிற்குக் கடன் கொடுக்கிறார். இந்த விஷயத்தில் கடன் மூலதன ஏற்று மதி ஈடுபட்டுள்ளது. குறிப்பிட்ட அளவு வட்டியைப் பெற கடன் மூலதனம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அது நீண்ட காலத் தவணையாக இருக்கலாம் அல்லது குறுகிய காலத் தவணையாக இருக்கலாம் (ஓர் ஆண்டிற்கு அதிகமான அல்லது குறைந்த தவணைக்காக).

ஏகாதிபத்தியம் வளர்ச்சியடைய அடைய மூலதன ஏற்று மதி செய்யும் நாடுகளின் சார்பு பலத்திலும், மூலதன ஏற்று மதியின் பரிமாணம், அமைவு, வடிவங்கள், தனிப்பட்ட நோக்கங்கள் மற்றும் அதன் உலக வினியோகம் ஆகியவற்றி லும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் இரண் டாவது உலகப் போருக்குப் பிறகு தனிச்சிறப்புடையதாகக் காணப்பட்டன.

## இன்றைய நிலைமைகளின் கீழ் மூலதன ஏற்றுமதியிலான மாற்றங்கள்

முதலில் மூலதன ஏற்றுமதியில் ஒரு பெரிய அதிகரிப்பு உள்ளது. முதல் உலகப் போருக்குச் சற்று முன்னால் மூன்று மிகப் பெரிய மூலதன ஏற்றுமதி செய்த நாடுகள் (பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி) 3,500 கோடி டாலர்களை ஏற்றுமதி செய்தன. இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் வெளி நாடுகளில் ஏகாதிபத்திய நாடுகளின் மொத்த முதலீடுகள் 5,300 கோடி டாலர்களாகும்.

1970ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் (1972) பிரதான முதலாளித்துவ நாடுகளின் மொத்த அயல்நாட்டு மூலதன

முதலீடுகள் 29,250 கோடி டாலர்களாக இருந்தன. இதில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் 18,900 கோடி டாலர்களையும், பிரிட்டன் 5,600 கோடி டாலர்களையும், மேற்கு ஜெர்மனி 2,900 கோடி டாலர்களையும், பிரான்ஸ் 2,360 கோடி டாலர்களையும், ஜப்பான் 0,270 கோடி டாலர்களையும் அயல் நாடுகளில் முதலீடு செய்தன.

இவ்வாறாக மூலதன ஏற்றுமதியில் போருக்குப்பின் ஏற்பட்ட வேகமான அதிகரிப்புடன் ஏகாதிபத்திய நாடுகள் இடையே உள்ள சக்திகளின் ஒப்புநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் ஏற்பட்டன. அமெரிக்க ஏகபோகங்கள் முதலாளித்துவ உலகில் மிகப் பெரிய நிதி சுரண்டல்வாதிகளாக மாறியதும் மூலதன ஏற்றுமதி இன்னும் அதிக சமமற்ற நிலையை அடைந்தது. அவைகளின் நடவடிக்கையில் நேரடி முதலீடுகள் முதல் இடம் பெறுகின்றன.

ஏனைய முதலாளித்துவ நாடுகள், முக்கியமாக பிரிட்டன், பிரான்ஸ் போன்ற பரம்பரையான மூலதன ஏற்றுமதியாளர்களும் 1950ம் ஆண்டுகளின் ஆரம்ப காலம் முதல் மேற்கு ஜெர்மனியும் ஜப்பானும் மூலதன ஏற்றுமதியை மீண்டும் செய்துக் கொண்டன. அது முதலீட்டு வட்டாரங்களுக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது.

20ம் நூற்றுண்டின் முதற் பாதியில் மூலதனமானது முக்கியமாக ஏகாதிபத்திய நாடுகளில் இருந்து காலனி நாடுகளுக்கும் ஏகாதிபத்திய நாடுகளைச் சார்ந்துள்ள நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1950 முதல் 1960 வரை உள்ள ஆண்டுகளில் கூட வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு நடப்பு மூலதன ஏற்றுமதிகளில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1960 முதல் கணிசமான அளவு மூலதனம் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிடையே செல்லலாயிற்று. இன்று வளர்ச்சியுற்ற நாடுகளில், குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் அமெரிக்க ஏகபோகங்களால் செய்யப்படும் வெளிநாட்டு முதலீடுகள் 70 சதவீதத்திற்கு மேல் உள்ளன.

மூலதன ஏற்றுமதித் திசையில் ஏற்பட்ட இந்த மாற்றம், வளர்ச்சி குறைந்த நாடுகளில் இலாப விகிதம் குறைந்து விட்டது என்ற அர்த்தத்தைக் கொடுப்பதாகக் கருதக்

கூடாது. அவை இன்றளவும் நம்பற்கரிய இலாபங்களின் மூலாதாரமாக உள்ளன.

ஏன் மூலதன ஏற்றுமதி திசையை மாற்றிக் கொண்டது? அதற்கு முக்கிய காரணம் காலனி முறை தகர்ந்ததுதான். பல இளம் நாடுகளில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள், முந்திய நிபந்தனைகளின் பேரில் மூலதன ஏற்றுமதிக்கான வாய்ப்புகளுக்கு வரம்பு விதித்தன.

விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் தாக்கத்தின் கீழ் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கட்டமைப்பு மாற்றங்களும் கூட ஒரு பெரிய பங்கை ஆற்றுகின்றன. புதிய உற்பத்தித் துறைகளுடனும் தொழிற் கிளைகளுடனும் இணைக்கப்பட்ட ஏகபோகங்கள் அவற்றின் செயற்பாட்டை அதிகரித்திருக்கின்றன. இந்தப் புதிய தொழில் துறைகள், பெரிய மார்க்கெட் ஏராளமான திறமை உள்ள உழைப்பு, ஓரளவு உயர்ந்த விஞ்ஞான-தொழில்நுணுக்க உள்ளாற்றல் ஆகியவற்றுடன் கூடிய நாடுகளில் அமைக்கப்படுகின்றன.

பெரும் அளவிலான மூலதன ஓட்டம் ஒரு வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாட்டில் இருந்து மற்றொன்றிற்குச் செல்வதால் அவற்றுக்கு இடையே முரண்பாடுகள் தீவிரப்படுத்தப்பட ஆரம்பித்துள்ளன. அதற்குத் தெளிவான உதாரணம், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இடையே உள்ள உறவுகளாகும். மேற்கு ஐரோப்பிய ஏகபோகங்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு உள்ளே பாயும் அமெரிக்க மூலதனத்திற்கு, அமெரிக்க நிதி மார்க்கெட்டில் நுழைவதன் மூலம் பதிலளிக்கின்றன.

நடப்பு நிலையின் வருணிப்பில், மூலதன முதலீட்டின் வட்டாரங்களாக வளரும் நாடுகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவது தவறாகும். இன்று கூட லத்தின் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகியவற்றில், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜெர்மனி, ஜப்பான் மற்றும் பிற முதலாளித்துவ நாடுகள் ஆகியவற்றின் முதலீடுகளில் மூன்றில் ஒரு பங்கு முதல், பாதி பங்கு வரை உள்ளன. இலாபத்தின் மூலாதாரமாக அவை ஆற்றும் பங்கு இன்னும் அதிகமாக உள்ளது.

போர்க் காலத்திலிருந்து, அரசாங்க முதலீடுகள், கடன்கள் என்ற வடிவங்களில் மூலதன ஏற்றுமதியின் வேகமான வளர்ச்சியானது மூலதன ஏற்றுமதியின் முக்கியமான ஒரு பண்புக் கூறாகும். முன்னதாக அரசு மூலதன ஏற்றுமதியின் இடையீட்டாளராக அல்லது உத்திரவாதம் கொடுப்போராக பெரும்பாலும் இருந்தது. இப்பொழுது அது அதில் உடனடியானதாகவும், சுறுசுறுப்பானதாகவுமான பங்குதாரராக மாறியுள்ளது. தனியார் முதலீடு எங்கெல்லாம் இலாபமற்றதாகவும் இடையூறுயுள்ளதாகவும் இருக்குமோ, அங்கெல்லாம் அரசின் மூலதனம் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. அரசால் செய்யப்படும் மூலதன ஏற்றுமதி, ஏகாதிபத்திய நாடுகளின் அரசியல் நலன்களுக்காக மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

அரசு மூலதன ஏற்றுமதிகளின் உண்மையான நோக்கங்கள், சுரண்டும் தன்மை ஆகியவற்றை மறைக்க, அவை வெளிநாடுகளுக்கு ''உதவி'' என்ற தோற்றத்தில் கொடுக்கப்படுகின்றன. எதார்த்தத்தில் இத்தகைய ''உதவி'' ஏகாதிபத்தியத்தின் இராணுவ, அரசியல் மற்றும் பிற நலன்களால் ஆணையிடப்படுகின்றது. மேலும் அது அந்த ''உதவியைப்'' பெறும் நாடுகள் பொருளாதார ரீதியாக ஏகபோகங்களைச் சார்ந்திருப்பதை அதிகரிக்கிறது.

தனியார் மூலதனத்தின் உலகம் தழுவிய இயக்கத்தினை அரசு-ஏகபோகம் ஒழுங்குபடுத்துவதில் வளர்ச்சியானது, மூலதன ஏற்றுமதியில் பூர்ஷ்வா அரசின் வளர்ந்துவரும் நடவடிக்கையின் மற்றொரு அறிகுறியாகும்.

தற்கால உலக முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குரிய ஒருமைப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்குகள், சர்வதேசக் கடன் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் மூலதன ஏற்றுமதியின் வேகமான வளர்ச்சிக்கு உதவின.

இரண்டாவது உலக போருக்குப் பின் உண்டான புதிய நிலைமைகள், மூலதன ஏற்றுமதிகளின் தொழில் துறை அமைப்பில் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணின. சமீபத்தில் தயாரிப்புத் தொழிலில் செய்யும் முதலீடுகள் மிக வேகமான வளர்ச்சி பெற்றுள்ளன. அதே நேரத்தில் கச்சாப் பொருள்களை அளிக்கும் அநேகத் தொழில் துறைகளிலும் ஆற்றல் தொழிலிலும் முதலீடு செய்வது உயர்ந்த அளவிலேயே உள்ளது. பணிபுரி

யும் மூலதன ஏற்றுமதி ஆற்றும் பங்கு அதிகரித்துக் கொண்டே உள்ளது. ஏனெனில் முதலாளித்துவ உலகில் நிலையற்ற நிதி நிலைமைகள் உள்ள தற்காலத்தில் அதிகமான நிலையான இலாபத்தை அது தருகிறது. இப்பொழுது நேரடி முதலீடு கள் பேராதிக்கம் செலுத்துகின்றன. தொழில் அனுமதிகள், பல்வகையான விஞ்ஞானத் தகவல்கள், தொழில்நுணுக்கப் பணிகள் ஆகியவற்றை விற்பது இப்பொழுது மூலதன ஏற்றுமதியின் மிக முக்கியமான அம்சமாகும்.

போருக்குப் பிற்பட்ட கால வளர்ச்சியின் விளைவால், பொருளாதார ரீதியாக முதலாளித்துவ உலகத்தைப் பிரிப் பதற்கான போராட்டத்தின் பிரதான ஆயுதமாக மூலதன ஏற்றுமதி உள்ளது. வளர்ந்து வரும் நாடுகளின் பால் நவீன காலனி ஆதிக்கக் கொள்கையை மேற்கொள்ளவும் மேலும் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் அரசியல் கொள் கைகள் மீது நிர்பந்திக்கவும் இது ஒரு சாதனமாக உள்ளது.

## 3. சர்வதேச ஏகபோகங்களால் உலகம் பொருளாதார ரீதியாகப் பிரிக்கப்படல். சர்வதேச ஏகபோகங்களின் புதிய பண்புக் கூறுகள்

முதலாளித்துவ சங்கங்களால் உலகத்தைப் பொருளா தார ரீதியாகப் பிரிவினை செய்வதற்கும் மறுபிரிவினை செய் வதற்கும் ஆன போராட்டத்தினால் முதலாளித்துவ உலகப் பொருளாதாரம் இன்று குணாம்சப்படுத்தப்படுகிறது.

முதலாளிகளின் சர்வதேச சங்கங்கள் ஏகாதிபத்தியத் திற்கு முன்பும் கூட இருந்தன என்று லெனின் கூறினார். அவர் பின்வருமாறு எழுதினார்: ''பல நாடுகளிலிருந்து முத லாளிகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஒவ்வொரு கூட்டுப் பங்கு கம்பெனியும் 'சர்வதேச ரீதியாக அமைக்கப்பட்ட முதலாளிகளின் சங்கம்' ''. ''உலகத்தைச் சர்வதேசிய டிரஸ்டுகளுக்கு இடையே பொருளாதார ரீதியாகப் பிரிப் பது, மார்க்கெட் வட்டாரங்களாக ஒப்பந்தம் மூலம் நாடுகளைப் பிரிப்பது''* ஆகியவற்றால் ஏகாதிபத்தியம் குணாம்சப்படுத்தப்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 26, p. 167.

படுகிறது. மிகப் பெரிய ஏகபோகங்களுக்கிடையே உலக மார்க்கெட்டைப் பிரிப்பதற்கான உடன்பாட்டை லெனின் அதீத ஏகபோகம் என்றழைத்தார்.

சர்வதேசிய ஏகபோகங்கள் வளர்ச்சியடைவதைத் தீர் மானிக்கும் காரணிகளை லெனின் தன்னுடைய நூல் களில் பகுத்தாய்ந்தார். உற்பத்தியை ஒருமுனைப்படுத்தல் மூலமும் தேசிய ஏகபோகங்களின் வளர்ச்சியின் அடிப்படை யிலும் அது நடைபெறுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மூலதனத்தை ஏற்றுமதி செய்தல், தேசிய ஏகபோகங்களின் வெளிநாட்டுப் பொருளாதார உறவுகள், செல்வாக்கு வட் டாரங்கள் ஆகியவற்றை விரிவாக்குதல், மூலதனத்தையும் பொதுவாகப் பொருளாதார உறவுகளையும் பரந்த அளவில் சர்வதேசியமயமாக்குதல் ஆகியவற்றால் சர்வதேசிய ஏக போகங்களுக்கு வழி வகுக்கப்பட்டது.

## சர்வதேசிய ஏகபோகங்களின் சாராம்சம்

சர்வதேசிய ஏகபோகங்கள் என்பன ''மூலதனத்திலும் உற்பத்தியிலும் உலக அளவிலான ஒன்று குவிப்பில் இது ஒரு புதிய கட்டமாகும், முந்திய கட்டங்களைக் காட்டிலும் ஒப்புயர்வில்லாதபடி மிகவும் உயர்ந்த கட்டமாகும்.*

சர்வதேசிய ஏகபோகங்கள் 1860ம் ஆண்டு முதல் 1880ம் ஆண்டு வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் உருவாகத் தொடங்கினாலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பக் காலம் வரை அவை முதலாளித்துவதற்கு உதாரண மாதிரியான ஒரு பண்புக் கூறாக மாறவில்லை. 19ம் நூற்றாண்டு இறுதியில் சுமாராக 40 சர்வதேசிய ஏகபோகங்கள் இருந்தன என மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1910ம் ஆண்டு வாக்கில் அந்த எண்ணிக்கை 100 ஆக உயர்ந்தது. இரண்டாவது உலகப் போருக்கு சற்று முன்னால் 1,000க்கும் மேற்பட்ட சர்வதேசிய ஏகபோகங்கள் முதலாளித்துவ உலகில் இருந்தன.

20ம் நூற்றாண்டின் ஆரம்ப பத்தாண்டு காலத்தில் சர்வ தேசிய ஏகபோகங்கள் முக்கிய கவனத்தைப் புழக்க வட்டா

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 135.

ரத்தில் செலுத்தின. அடிக்கடி அதிகமான வடிவம் சாதாரண கார்ட்டெல்கள் ஆயின. தேசிய ஏகபோகங்கள் சர்வதேசிய கார்ட்டெல்களில் சேர்ந்தன. அவை விற்பனை விலைகள், மார்க்கெட்டுகளைப் பிரித்தல், உற்பத்தி மற்றும் விற்பனைப் பங்களவுகள் ஆகியவற்றைப் பற்றித் தங்களுக்குள் ஒப்புக் கொண்டு சேர்ந்தன. டிரஸ்டுகள், கன்ஸேர்ன்கள் போன்ற சர்வதேசிய ஏகபோகங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தன.

## சர்வதேசிய ஏகபோகங்களின் இன்றைய நிலை

இரண்டாவது உலகப் போரின் பின்னர், முக்கியமாக கடந்த 10-15 ஆண்டுகளில் சர்வதேசிய ஏகபோகங்களின் வளர்ச்சியில் புதிய பண்புக் கூறுகள் தோன்றியுள்ளன.

தற்கால அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் சர்வதேசிய ஏகபோகங்கள் இதுவரை கண்டிராத அளவு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. இன்று உள்ளபடியே எல்லா பெரும் ஏகபோகங்களும் கிட்டத்தட்ட சர்வதேசத் தன்மையுடையனவாக உள்ளன. அவற்றின் பிடியில் டஜன் கணக்கான நாடுகள் வைக்கப்பட்டுள்ளன. அந்நாடுகளை அவை கச்சாப் பொருள்களின் அடித்தளங்களாகப் பயன்படுத்துகின்றன; அந்நாடுகளில் அவை விஞ்ஞான-தொழில்நுணுக்க ஆராய்ச்சிகளைச் செய்கின்றன; மேலும் உள்நாட்டு மார்க்கெட் நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்கின்றன.

சர்வதேசிய ஏகபோகங்களின் வளர்ச்சி முதலாளித்துவ நிலையில் ஏற்பட்ட பொதுப்படையான மாறுதல்களால் துரிதப்படுத்தப்படுகிறது. உலக சோஷலிச அமைப்பின் தோற்றம், அது வலுப்படுதல் ஆகியவற்றின் விளைவாக அதனுடைய செல்வாக்கு வட்டங்கள் சுருங்கிக் கொண்டு வருகின்றன. ஏகபோகங்களின் சர்வதேசிய சங்கங்கள் மூலம், இரு சமூக அமைப்புக்களுக்கும் இடையே தற்காலத்தில் உள்ள போராட்ட நிலைமைகளுக்கு, முதலாளித்துவம் தன்னைத் தகவமைத்துக் கொண்டிருக்கிறது.

விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சி சர்வதேசிய ஏக போகங்களின் வளர்ச்சியின் மீது மகத்தான செல்வாக்குச் செலுத்துகிறது. ஏனெனில் அது சர்வதேசிய மூலதன இணைப் பிற்கான புறவய முன்தேவைகளையும் அவசியத்தையும் அதிகப்படுத்துகிறது. மூலதனத்தை உபயோகமாகப் பயன் படுத்த் முடியாத அளவு தேசிய எல்லைகள் அடிக்கடி மிகவும் குறுகலாக இருக்கின்றன. உற்பத்தி, வினியோகம் ஆகிய வற்றைச் சர்வதேசியமயமாக்குவது, உற்பத்திச் சக்திகளின் மேற்கொண்ட வளர்ச்சிக்குத் தவிர்க்க முடியாததாகிறது. ஏகபோகங்கள் இந்த முன்னேற்றப் போக்கைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அதை ஒரு இலாப மூலாதாரமாக வும், பொருளாதார, அரசியல் நிலைகளை வலுப்படுத்த கூடிய ஒரு சாதனமாகவும் மாற்றுகின்றன.

போருக்குப் பிற்பட்ட கால வளர்ச்சியின் விளைவால் ஏக போகங்களின் பொருளாதார உள்ளாற்றல் வளர்ந்துள்ளது. அவற்றின் முக்கியத்துவம் அதிகரித்தது. அவை ஏகபோக மூலதனத்தின் முன்னணிப் படையாக மாறிக் கொண்டிருக் கின்றன. இப்பொழுது 500 பெரிய சர்வதேசிய ஏகபோகங் கள், முதலாளித்துவ நாடுகளின் மொத்த தேசிய உற்பத்திப் பொருளின் மதிப்பில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளன. சுமாராக முதலாளித்துவ உலக உற்பத்திப் பொருள்களில் பாதி அவற்றின் தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. அவை முதலாளித்துவ உலக வணிகத்தில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தைக் கட்டுப் படுத்துகின்றன. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளி லிருந்து 90 சதவீத மூலதன ஏற்றுமதிகளை அவை செய் கின்றன. இத்தகைய ஏகபோகங்கள் பலவற்றின் பொரு ளாதாரப் பரிமாணம் அநேக நாடுகளினுடையதை விட பெரியதாகும். இத்தகைய மாபெரும் ஏகபோகங்கள் ஒரு சக்தி வாய்ந்த ஸ்தாபன அமைப்பையும் நிர்வாக முறையை யும் விருத்தி செய்கின்றன. அவற்றுக்கென்று சொந்தப் போக்குவரத்து வசதிகள், செய்தித் தொடர்புகள், உளவுத் துறை, ஆயுதப் படை ஆகியவற்றைப் பெற்றுள்ளன. இன்று சர்வதேசிய ஏகபோகங்கள், நவீன தொழில் துறையின் எல்லா முக்கியக் கிளைகளையும் உள்ளடக்கி, முக்கியமாகத்

தொழில் துறை உற்பத்தியில் செயல் புரிகின்றன. டிரஸ்டு கள் அல்லது கன்ஸெர்ன்கள் போன்ற சங்கங்கள் மிகப் பொதுவான ஏகபோகங்களின் மாதிரியாகும்.

இன்று நிலவும் சர்வதேச ஏகபோகங்களுக்கு இடையே வழக்கமாக இரு வகைகள் காணப்படுகின்றன. பல தேசிய இனங்களின் மூலதன இணைப்பிலிருந்து உருவானது பன்னாட்டு கன்ஸெர்ன்கள் என்று அழைக்கப்படுவது. மூலதனத்தின் கட்டமைப்பிலும் கட்டுப்பாட்டிலும் தேசியமாகவும், அத னுடைய வட்டாரங்கள், நடவடிக்கைகளில் சர்வதேசிய மாகவும் உள்ளவை பலநாடுகள் சேர்ந்த கன்ஸெர்னாகும். இத் தகையப் பல நாடுகள் சேர்ந்த கம்பெனிகள் இப்பொழுது மிகவும் பரவலாகி உள்ளன.

அமெரிக்கா, பிரான்சு, பெல்ஜியம் மற்றும் பிற நாடு களைச் சேர்ந்த ஏகபோகங்கள் பங்கு கொள்ளும் பிரிட்டிஷ்-டச் 'ராயல் டச் ஷெல்' கம்பெனி ஒரு பன்னாட்டு கன்ஸெர் னுக்கு எடுத்துக்காட்டாகும். அமெரிக்க 'எக்சன்' (முன்னாளைய 'நியு ஜெர்ஸி ஸ்டாண்டர்டு ஆயில்' கம்பெனி), 'ஜெனரல் மோட்டார்ஸ்', 'ஜெனரல் எலெக்டிரிக்' ஆகிய கன்ஸெர்ன் கள் இத்தியாதி பல நாடுகள் சேர்ந்த ஏகபோகங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

சர்வதேசிய ஏகபோக மூலதன எல்லைக்குள், முக்கிய நிலைகள் அமெரிக்க ஏகபோகங்களுக்கு உரியவை. அமெரிக்க முதலாளிகள் எல்லா பல நாட்டுக் கம்பெனிகளில் குறைந்தது பாதியைக் கட்டுப்படுத்துகின்றனர். சமீபத்தில் மற்ற முத லாளித்துவ நாடுகளிலுள்ள ஏகபோகங்கள், முதன்முதலில் மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகியவற்றின் ஏகபோகங்கள் தமது செயற்பாட்டை தீவிரப்படுத்தி அச்சர்வதேசிய சங்கங்கள் அமெரிக்க கன்ஸெர்ன்களுடன் கோரமான போட்டியில் ஈடுபட்டுள்ளன. வளரும் நாடுகளில் அவை விரிவடைந்து உள்ளன.

## சர்வதேசிய ஏகபோகங்கள் பற்றிய பூர்ஷ்வாத் தத்துவங்களின் விமரிசனம்

ஏகபோகங்களை முன்னேற்றத்தின் ஊற்றுகள் என்று பிரதிநிதித்துவப்படுத்த பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் முயற்சிக்

கின்றனர். அவற்றைப் பொருளாதார முன்னேற்றத்தை துரிதப்படுத்தும் ஒரு காரணியாகவும் காட்ட முயற்சி செய்கின்றனர்.

உற்பத்தியைச் சர்வதேசிய ரீதியாக மேலும் தனிசிறப்புடையதாகவும், கூட்டுறவுடையதாகவும் செய்ய உண்மையில் சர்வதேசிய ஏகபோகங்களின் வளர்ச்சி உதவக் கூடியதாக இருந்தாலும் அவற்றின் பொதுவான சமூகப்-பொருளாதார மற்றும் அரசியல் பங்கு முதலாளித்துவத்திற்காகப் பரிந்து பேசுகிறவர்கள் கூறுவதிலிருந்து வெகு தூரத்தில் உள்ளது.

முதலாவதாக சர்வதேசிய ஏகபோகங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பகுதியை இரக்கமற்றதும் நுட்பமானதுமான சுரண்டலுக்கு உட்படுத்துகின்றன. அவற்றின் தொழில் நிலையங்களில் இரு கோடி மக்களுக்கு மேல் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

சர்வதேசிய ஏகபோகங்கள் பல நாடுகளில் அவற்ருல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்று நுகரும் மக்களைச் சுரண்டுகின்றன. அவை உண்மை மார்க்கெட் விலைகளுக்குப் பதிலாக உள் கம்பெனி விலைகளை உபயோகிக்கின்றன. இது, ஸ்தல நுகர்வோர்களின் செலவில் அவை உச்ச இலாபத்தைப் பெறுவதற்காக விலைகளைக் கையாள அனுமதிக்கிறது. அவை அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் இதர வசூல்கள் ஆகியவற்றைக் குறைக்கப் பல தந்திரங்களைக் கையாளுகின்றன. ஏகபோகங்களின் தொழில் நிலையங்கள் எந்த நாட்டில் நிறுவப்பட்டுள்ளனவோ அந்த நாட்டின் அரசுரிமைக்கு அவற்றின் செயற்பாடுகள் ஓர் அபாயமாக உள்ளன.

சர்வதேசிய ஏகபோகங்களின் நடவடிக்கைகள், வளர்ந்து வரும் நாடுகளுக்குத் தனிச் சிறப்பான அபாயங்களை விளைவிப்பவை. சர்வதேசிய ஏகபோகங்கள், காலனி நாடுகள், சார்ந்துள்ள நாடுகள் ஆகியவற்றின் பொருளாதாரங்களுக்குள் பலவந்தமாக நுழைந்து, அவற்றை தமது செல்வாக்கிற்குள் உட்படுத்தி, இந்த நாடுகளின் மனிதச் சக்தி, இயற்கை வளங்கள் ஆகியவற்றைச் சுரண்டி கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் நவீன காலனி ஆதிக்கக் கொள்கையை

வரைவதிலும் அமுலாக்குவதிலும் அவை முக்கிய பங்கு ஆற்றுகின்றன.

பொருளாதார ரீதியாக உலகத்தைப் பிரிப்பதற்கான தற்போதைய போராட்டத்தின் முக்கியப் பண்புக் கூறுகளில் சர்வதேசிய அரசு-ஏகபோக ஒப்பந்தங்கள் உள்ளடங்குகின்றன.

## 4. ஏகாதிபத்திய பொருளாதார ஒருமைப்பாடு

### அதனுடைய சாராம்சமும் வளர்ச்சிக்கான காரணிகளும்

சுதந்திரமான போட்டி நிறுவிய முதலாளித்துவத்தின் கீழ் கூட, நாடுகளுக்குள் பொருளாதார ரீதியாக ஒன்றுடன் ஒன்று சேர்வதற்கு ஆன போக்கும், பொருளாதார ஒருமைப்பாட்டை நோக்கிச் செல்லும் போக்கும் நிலவின. ஆனால் ஏகாதிபத்தியத்தின் கீழே மட்டும், சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சத்தைத் தழுவியும், முதலாளித்துவ நாடுகளின் அரசுகளுக்கிடையேயுள்ள பொருளாதார சங்கங்களின் வடிவத்தை மேற்கொண்டும், உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றைச் சர்வதேசிய மயமாக்கும் மிகப்பரந்த நிகழ்ச்சிப் போக்காக அது வளர்ச்சியடைந்துள்ளது. இருப்பினும் இந்த நிகழ்ச்சிப் போக்கு வடிவத்தில் முதலாளித்துவமானது. அதாவது, சில நாடுகள் பிற நாடுகளால் சுரண்டப்படுவது, அடிமையாக்கப்படுவது, முதன்மையான ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் ஏகபோகங்களுக்கும் இடையில் போட்டி ஆகியவை அதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் ஏகாதிபத்திய பொருளாதார ஒருமைப்பாடு வேகம் பெற்றது. உலகத்தில் இருக்கும் இரு எதிரும் புதிருமான அமைப்புகளுக்கிடையே உள்ள சக்திகளின் ஒப்புநிலையில் ஏற்பட்ட மாற்றம், ஏகாதிபத்தியத்தின் காலனி ஆதிக்க முறையின் தகர்வு, விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியினால் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான அதிகரித்துக் கொண்டே வரும் நிர்ப்பந்தம் ஆகியவற்றால் ஏகாதிபத்தியப் பொருளாதார ஒருமைப்பாடு தூண்டப்படுகிறது. முதலாளித்துவப் பொரு

ளாதாரத்தை ஏகபோகமாக்குவது வளர்ந்து கொண்டே வருவது, ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்ச்சியுறுவது ஆகியவற்ருல் அளவிட முடியாத அளவு செல்வாக்கிற்கு அது உட்படுத்தப்படுகிறது. அரசுகளுக்கு இடையேயுள்ள சங்கங்கள் என்ற வடிவத்தில் தற்காலத்திய அரசு-ஏகபோக முதலாளித்துவம் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

## மேற்கு ஐரோப்பாவில் பொருளாதார ஒருமைப்பாடு

பொருளாதார ஒருமைப்பாடு, முக்கியமாக மேற்கு ஐரோப்பாவில் பரந்த அளவில் வளர்ச்சிப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு தான் உலகத்திலுள்ள இரு அமைப்புகள் நேருக்கு நேர் சந்திப்பதும், ஜனநாயக சக்திகள், சோஷலிச சக்திகள் ஆகியவற்றின் வளர்ந்து வரும் தாக்கமும் குறிப்பாக வலிமையாக உள்ளன. மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்தியம் அதனுடைய காலனி ஆதிக்க உரிமையை இழந்து கொண்டுள்ளது. மறு புறம், மேற்கு ஐரோப்பா அரசியல் மாதிரியாக பிரிக்கப்பட்டுள்ளது; அதன் உள்நாட்டு மார்க்கெட்டுகள் ஒப்பீட்டடிப்படையில் குறுகியுள்ளன. இக்காரணங்களால் புதிய உற்பத்திச் சக்திகளுக்கான புறவயத் தேவை தெளிவாகக் காண்பிக்கப்படுகிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஏகபோக வட்டாரங்கள் தங்களுடைய சக்திவாய்ந்த போட்டியாளரான அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தங்களுடைய நிலையை வலுப்படுத்த ஆசைப்படுகின்றன. இந்த ஆசையும் மேற்கு ஐரோப்பாவில் பொருளாதார ஒருமைப்பாட்டைத் தூண்டுகிறது.

முதல் உலகப் போருக்கு முன்னுலேயே மேற்கு ஐரோப்பிய நாடுகளை அரசியல்-பொருளாதார அடிப்படையில் ஒன்றிணைக்கும் முயற்சிகளும், ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் என்றழைக்கப்படும் அமைப்பை, அமைப்பதற்கான திட்டங்களும் இருந்தன. லெனின் இத்திட்டங்களின் ஏகாதிபத்தியத் தன்மையை அம்பலப்படுத்திஞர். இத்திட்டங்கள் ஏகாதிபத்தியத்திற்கு இடையிலான முரண்பாடுகளின் அதிகரிப்பால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

## பொது மார்க்கெட். அதனுடைய முரண்பாடுகள்

1957ல் அமைக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார முகாம் அல்லது பொது மார்க்கெட் என்பது ஏகாதிபத்திய பொருளாதார ஒருமைப்பாட்டின் மிகவும் பக்குவமடைந்த வடிவமாகும். ஆரம்பத்தில், பிரான்சு, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாண்டு, லக்ஸம்பர்க் ஆகிய ஆறு உறுப்பினர்களை இது கொண்டிருந்தது. 1973ல் பொது மார்க்கெட்டில் பிரிட்டன், டென்மார்க், அயர்லாந்து ஆகிய நாடுகள் இணைந்தன. அதில் நிரந்தர உரிமையில்லாத சில துணை உறுப்பு நாடுகளும் (கிரீஸ், துருக்கி, சில ஆப்பிரிக்க நாடுகள்) உள்ளன.

கடந்த ஆண்டுகளில் பொது மார்க்கெட் முக்கியமாக வணிக-பொருளாதார முகாமாகத் தோன்றியது. அதனுடைய உறுப்பு நாடுகள் ஒன்றுக்கொன்றிடையேயுள்ள அநேக சுங்கவரிகளையும் மற்ற தடைகளையும் அழித்துக் கொண்டன. மூன்றுவது நாடுகளைப் பொறுத்த மட்டில் அந்நாடுகள் ஒரே சுங்க வரி முறையை அமைத்துக் கொண்டுள்ளன. மூலதனம் உழைப்புச் சக்தி ஆகியவற்றின் இயக்கத்திற்கான தடைகள் பொது மார்க்கெட் நாடுகளிடையே பெரும்பகுதி நீக்கப்பட்டுள்ளன. உறுப்பு நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பொது மார்க்கெட் நிறுவுவது அதனுடைய உறுப்பினர் களிடையே வணிக தொடர்புகளை வலிமையாக்க உதவியது. முதலாளித்துவ ஒருமுனைப்படுத்துதலை அதிகப்படுத்தியது. உற்பத்தியைத் தனி சிறப்புடையதாகவும் கூட்டுறவுடைய தாகவும் மேம்படுத்தியது.

ஐரோப்பியப் பொருளாதார முகாமின் உதாரணம் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அரசுகளுக்கிடையேயான பொரு ளாதார ஒருமைப்பாடு, பொருளாதார நிலையின் மீதும், முதலாளித்துவ திரட்சியின் போக்கின் மீதும் எழுச்சியூட்டும் விளைவை ஏற்படுத்த முடியும் என்று காட்டுகிறது.

எவ்வாறுயினும், முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியை ஆளுகின்ற உள்ளார்ந்த விதிகள் உற்பத்தியில்

அராஜகம், முதலாளித்துவப் போட்டி, ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே முரண்பாடுகள் ஆகியவற்றை இந்தப் பொருளாதார ஒருமைப்பாட்டுக் குழுக்களால் அழிக்க முடியவில்லை என்பதை அனுபவம் காட்டியுள்ளது.

பொது மார்க்கெட் வரலாறு முழுவதும் அதனுடைய உறுப்பினர்களிடையேயுள்ள தீவிரமான போட்டியே ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக மேற்கு ஜெர்மனி, பிரான்சு ஏகபோகங்களுக்கு இடையேயும் பின்னல் பிரிட்டன் ஏக போகங்களுக்கு இடையேயும் போட்டி உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், மற்றும் பிற முதலாளித்துவ நாடுகளை எதிர்க்கும் மேற்கு ஐரோப்பிய ஏகபோகங்களின் போட்டி அரங்கமாகவும் அது ஆகியது.

## பொருளாதார ஒருமைப்பாட்டைப் பற்றிய பூர்ஷ்வா தத்துவங்களின் விமரிசனம்

அரசுகளுக்கு இடையேயான சங்கங்களும் தனிப்பட்ட ஏகபோக சங்கங்களும் தோன்றியது முதல் இத்தகைய சங் கங்கள் பல நாட்டு மக்களிடையே நிரந்தரமான சமாதா னத்தைச் சாத்தியமாக்கும் என்று பூர்ஷ்வா சித்தாந்த வாதிகள், வலதுசாரி சந்தர்ப்பவாதிகள், திரிபுவாதிகள் ஆகி யோர் வாதிட்டனர். இரண்டாவது அகிலத்தின் தத்துவ வாதியான காவுத்ஸ்கி ஏகபோகவாதிகளுக்கு இடையே உள்ள ஒப்பந்தங்களின் விளைவாக ஏகாதிபத்திய முரண்பாடுகள், போர்கள் ஆகியவற்றுடனை ஏகாதிபத்திய யுகமானது ''அதீத ஏகாதிபத்தியம்'' என்ற சமாதான யுகத்தால் மாற்றீடு செய்யப்படும் என்று கூறினர்.

இத்தகையத் தத்துவங்களை விமரிசித்து லெனின் பின் வருமாறு எழுதினர்: ''வளர்ச்சியின் போக்கு விதிவிலக்கு இல்லாமல் எல்லாத் தொழில் நிலையங்களையும் ஈர்த்துக் கொண்டும் விதிவிலக்கில்லாமல் எல்லா அரசுகளையும் ஈர்த்துக் கொண்டும் ஒரே ஒரு உலக டிரஸ்டை உருவாக்கு வதை நோக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனல் இந்த வளர்ச்சி இத்தகைய சந்தர்ப்பங்களிலே, இத்தகைய வேகத் திலே, இத்தகைய பொருளாதார முரண்பாடுகள், மோதல்

கள், கிளர்ச்சிகள் மூலம் மட்டுமல்லாமல், அரசியல், தேசிய முரண்பாடுகள், மோதல்கள், கிளர்ச்சிகள் மூலமும் முன்னேறுகிறதால் ஒரு உலக டிரஸ்டு நிறைவேறுவதற்கு வெகு நாட்களுக்கு முன்பாக, தேசிய நிதி மூலதனங்களின் உலகளாவிய இணைப்பான 'அதீத ஏகாதிபத்தியம்' ஏற்படுவதற்கு முன்பாக, ஏகாதிபத்தியம் தவிர்க்க முடியாத முறையில் வெடிக்க வேண்டியிருக்கும்; முதலாளித்துவம் அதனுடைய நேர் எதிர் நிலைக்கு மாற்றப்படும்.''*

பொருளாதார ஒருமைப்பாடு என்பது சமூக அல்லது வர்க்க அர்த்தம் முற்றிலும் இல்லாத முழுக்க முழுக்க ஒரு தொழில்நுணுக்க நிகழ்ச்சிப் போக்கு என்று நிரூபிக்க ஏகாதிபத்தியத்திற்காக பரிந்து பேசுகிற நவீனவாதிகள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். தேசிய பொருளாதாரங்களின் இசைந்த ஒருங்கிணைவு, குறுகிய தேசிய மனப்பான்மையை அகற்றுவது, அவற்றின் அடிப்படையில் சமுதாயத் தேவைகளை அதிகமாக திருப்தி செய்தல் ஆகியவற்றின் ஓர் இணக்கமாக அவர்கள் அதைச் சித்தரிக்கிறார்கள்.

எதார்த்தத்தில், முதலாளித்துவப் பொருளாதார உறவுகளின் ஆதிக்கத்தின் கீழ், தவிர்க்க முடியாமல், பொருளாதார ஒருமைப்பாடு, சார்ந்திருத்தல், அடிமையாக இருத்தல் ஆகியவற்றின் உறவுகளை அதிகரிப்பதைக் குறிக்கிறது. ஏகபோகங்கள் முற்போக்குத் தொழில்நுணுக்க மற்றும் பொருளாதாரப் போக்கை தங்களுடைய சொந்த சுயநல தேவைகளுக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கின்றன.

ஏகபோக மூலதனத்தின் ஆதிக்கத்திற்குள் உலக மார்க்கெட்டுகள் மற்றும் பொருளாதார ஆதிக்கம் ஆகியவற்றிற்கான போராட்டத்தை அழிக்க முடியாது. ஏன் எனில் சர்வதேச ஏகாதிபத்திய உறவுகளின் சாராம்சம் வெளிப்படுத்தப்படும் வட்டாரமாக அது உள்ளது.

ஏகாதிபத்தியவாதிகள் உலகத்தைப் பொருளாதார ரீதியாகப் பிரிப்பதில் திருப்தியடையவில்லை. சர்வதேசிய ஏகபோக சங்கங்கள், ஏகாதிபத்தியத்தின் காலனி ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதில் சுறுசுறுப்பாகப் பங்குகொள்ளுகின்றன.

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 22, p. 107.

பொது மார்க்கெட் இதற்கு ஒரு தெளிவான உதாரண மாகும். அது மேற்கு ஐரோப்பிய ஏகபோகங்களின் கூட்டு காலனி ஆதிக்கத்திற்கான ஒரு கருவியாகவுள்ளது.

லெனின் பின்வருமாறு எழுதினார்: ''முதலாளித்துவத் தின் மிகவும் அண்மைய கட்டத்துக்குரிய இந்தச் சகாப்தம் நமக்குத் தெளிவுபடுத்துவது என்னவெனில்: உலகின் பொருளாதாரப் பங்கீட்டின் அடிப்படையில் முதலாளித்துவக் கூட்டுகளிடையே குறிப்பிட்ட சில உறவுகள் வளருகின்றன; அதேபோது இதற்கு இணைவாகவும் இதனுடன் தொடர்பு கொண்டும் உலகின் பிரதேசப் பங்கீட்டின் அடிப்படையில், காலனிகளுக்கான போராட்டத்தின், 'செல்வாக்கு மண்ட லங்களுக்கான போராட்டத்தின்' அடிப்படையில் அரசியல் கூட்டணிகளுக்கிடையில், அரசுகளுக்கிடையில் குறிப்பிட்ட சில உறவுகள் வளருகின்றன என்பதுதான்.''*

## 5. உலகத்தைப் பிராந்திய ரீதியாகப் பிரித்தல்

### ஏகாதிபத்தியத்தின் காலனி ஆதிக்கமுறை. அதனுடைய அழிவு

20ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஏகாதிபத்திய வல்லரசு களால் உலகம் பிராந்திய ரீதியாகப் பிரிக்கப்படுவது முடிவு பெற்றது.

அதன் விளைவால் ஏகாதிபத்திய காலனி ஆட்சிமுறை தோன் றியது. அதாவது, அரசியல் மற்றும் தேசிய ஒடுக்குமுறையின் அடிப்படையில் ஏகாதிபத்திய அரசுகளால் சுரண்டப்படும் பின்தங் கிய மற்றும் பலவீனமான நாடுகளைச் சுரண்டும் ஒரு பொருளாதார அமைப்புத் தோன்றியது.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் னும் முதல் உலகப் போருக்குப் பின்னும் ஏகாதிபத்தியக் காலனி ஆதிக்க முறையின் நெருக்கடி ஒன்று ஏற்பட்டது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் இந்த நெருக்கடி காலனி ஆதிக்க முறையின் அழிவில் முடிந்தது. 1919ல்

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 149.

உலக மக்கள் தொகையில் 69.4 சதவீதத்தினர் காலனி அல்லது அரைக் காலனி நாடுகளில் வாழ்ந்தனர். உலகப் பரப்பில் 72 சதவீதத்தை இந்த காலனி நாடுகள் அளந்துக் கொண்டன.

1945ல் காலனி நாடுகளின் பரப்பு 3.86 கோடி சதுரக் கிலோமீட்டரை எட்டியது. அதில் 67 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்தனர். அதாவது உலகப் பரப்பிலும் உலகின் மக்கள் தொகையிலும் அது 30 சதவீதமாக இருந்தது. 1976ல் அதாவது பெரிய காலனி ஆதிக்கச் சாம்ராஜ்யம் (போர்ச்சுகீசிய) அழிந்ததிற்குப் பின் சுய-ஆட்சி இல்லாத பிராந்தியங்கள் எல்லாம் 0.15 கோடி சதுர கிலோமீட்டர் பரப்பை நிரப்பின. அதில் 1.1 கோடி மக்கள் வாழ்ந்தனர். அது உலகத்தின் மக்கள் தொகை, பரப்பு ஆகியவற்றில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான அளவு ஆகும். மிகவும் குறைவான பரப்பில் மட்டுமே காலனி நாடுகள் இன்னமும் உள்ளன. அவற்றில் மிகப்பெரியது ஹாங்காங்கும் (பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் உள்ளது), பூயெர்ட்டோ ரிக்கோவும் (அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கட்டுப்பாட்டில் உள்ளது) ஆகும். இது தவிர பல லட்சக் கணக்கானவர்களுக்கும் மேற்பட்டவர்கள் காலனி ஆதிக்க நிலைகளில் தென் ஆப்பிரிக்கா, ரொடீஷியா நாடுகளில் நிற வெறி ஆட்சியின் கீழ் வாழ்கின்றனர்.

காலனி சாம்ராஜ்யங்களின் அழிவுகளில் நூறுக்கு மேலான புதிய அரசுகள் தோன்றின. ஏகாதிபத்தியக் காலனி ஆதிக்க முறை ஒழிந்து, சுதந்திரமான நாடுகள் தோன்றியது தேசிய விடுதலைப் புரட்சியின் ஒரு விளைவாகும். இந்தத் தேசிய விடுதலைப் புரட்சி உலக சோஷலிச அமைப்பு, சர்வதேசிய தொழிலாளர் இயக்கம் ஆகியவற்றின் ஆதரவைப் பெற்று கடந்த 15-20 ஆண்டுகளில் மிக அதிகமான அளவு வளர்ந்துள்ளது.

## நவீன காலனி ஆட்சி முறையின் சாராம்சம்

காலனி ஆதிக்க முறையின் ஒழிப்பு, வளர்ந்து வரும் நாடுகளின் சமூக-பொருளாதார, அரசியல் பிரச்சினைகள்

எல்லாவற்றையும் தீர்த்துவிட முடியாது. ஏன் எனில் ஏகாதிபத்தியம் அத்தகைய நாடுகளை இன்னமும் தன்னுடைய சார்பு நாடுகளாக, மாறிய நிலைமைகளில் வைத்துக் கொள்ள விரும்புகிறது. ஏகபோகங்கள் புதிய முறைகளை முக்கியமாக புதிய பொருளாதார முறைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனல் இந்த முறைகளின் சாராம்சம் பழமையானது. அவை, வளர்ந்துவரும் நாடுகள், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்திருக்கும் நிலையையும், அந்நாடுகளின் ஏகபோகங்கள் செழுமை அடைவதற்கான மூலாதாரமாக இருக்கும் நிலையையும் நீடிக்க உதவுகின்றன.

மறு புறம், விடுதலைப் பெற்ற இளம் நாடுகள் ஒரு தொடர்ச்சியான புறவய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளன. இச்சிக்கல்கள் பொருளாதார பின்னடைவிலிருந்து தோன்றியவை. இவை அவற்றின் கடந்த கால காலனி ஆட்சி விட்டுச் சென்றப் பரம்பரைச் சொத்தாகும்.

பாரம்பரிய காலனி ஆதிக்க முறையானது நவீன காலனி ஆதிக்க முறையால் மாற்றீடு செய்யப்படுவது என்பது ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலைப் பெற்ற இளம் நாடுகள் வலிந்து பெற்ற சலுகையாகும். ஆனல் நவீன காலனி ஆதிக்கம் என்பது நயவஞ்சக, மறைமுக ஏகாதிபத்திய சுரண்டல் முறைகளின் ஒரு மொத்தமாகும். அது வளரும் நாடுகளை உலக முதலாளித்துவ அமைப்பின் கீழ் வைத்திருக்க முயற்சிக்கிறது. நவீன காலனி ஆதிக்கத்தின் பொருளாதார அடித்தளம் ஏகபோக மூலதனமும் அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பும் ஆகும். சமூக ஆதரவைப் பெறும் முயற்சியில் நவீன காலனி ஆதிக்கவாதிகள் வளரும் நாடுகளில் உள்ள பூர்ஷ்வாக்களுடன் பேரம் பேசத் தயாராக இருக்கின்றனர்; வளர்ந்துவரும் நாடுகளின் அரசாங்கங்களில் பிற்போக்குச் சக்திகளைப் பயன்படுத்தவும் தயாராக இருக்கின்றனர். வளரும் நாடுகளைப் பொருளாதார ரீதியில் அவற்றின் முன்னுளைய காலனி ஆதிக்க எஜமானர்களுடன் இணைக்க விரும்பி, நவீன காலனி ஆதிக்கவாதிகள் அந்நாடுகளில் முதலாளித்துவ உறவுகளை ஊட்டி வளர்க்கின்றனர். அந்நாடுகளை ஏகாதிபத்திய அமைப்பின் தொங்கு

சதையான விவசாய-தொழில் துறையாக மாற்ற விரும்புகின்றனர்.

வளரும் நாடுகளில், பொம்மை அரசாங்கங்களை அமைப்பது, அந்நாடுகளை ஆக்கிரமிப்பு ராணுவ கூட்டுக்களில் இழுப்பது தங்களுடைய பொருளாதார, அரசியல் பிடிப்பை வளர்ந்துவரும் நாடுகளின் மீது வைத்திருப்பதற்காக, காலனி வல்லரசுகளுக்கும் அவற்றின் முன்னுளைய காலனி நாடுகளுக்கும் இடையே பலவித "கூட்டுப் பங்காளிகள்", "காமன் வெல்த்", "கூட்டணிகள்" ஆகியவற்றை ஏற்பாடு செய்வது ஆகியவை நவீன காலனி ஆதிக்கவாதிகளின் பிடித்தமான முறைகளாகும்.

மூலதன ஏற்றுமதி, வளரும் நாடுகளுக்கு உதவி என்றழைக்கப்படும் மாற்றுருவில் செல்லுவது நவீன காலனி ஆதிக்கவாத கொள்கையின் ஒரு முக்கிய பகுதியாகும். எதார்த்தத்தில் நவீன காலனி ஆதிக்கவாதிகளின் "உதவி" ஏகாதிபத்தியவாதிகளின் அரசியல், பொருளாதார குறிக்கோள்களுக்குச் சேவை செய்கிறது. அதில் பெரும்பகுதி பிற்போக்கு ஆட்சி முறைகளைக் கட்டிக் காப்பதிலும் ராணுவ-தந்திரக் காரியங்களுக்காகவும் போகின்றது. மீதிப் பகுதி இத்தகைய நாடுகளை ஏகாதிபத்திய ஏகபோகங்களை இன்னும் அதிகமாகச் சார்ந்திருக்கும்படி செய்கின்றது. இந்த ஏகபோகங்கள் அந்நாடுகளைத் தொடர்ந்து சுரண்டுகின்றன.

புதிதாக விடுதலைப் பெற்ற இளம் நாடுகளின் பொருளாதாரத்தின் மீது மேற்கத்திய நாடுகளின் "புதிய பங்கு" அல்லது "நன்மை பயக்கும் செல்வாக்கு" ஆகியவற்றைப் பற்றிய எந்தக் கற்பனைப் பேச்சும் இந்த உண்மையை மாற்ற முடியாது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அதிகாரப் பூர்வ புள்ளி விவரப்படி 1974, 1975 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் சர்வதேசிய ஏகபோகங்களின் கிளைகள், இலாபங்களாக, இலாபப் பங்கு ஈவுகளாக, வட்டிகளாக வளரும் நாடுகளிலிருந்து 2,330 கோடி டாலர்களைக் கறந்தன. அதே நேரத்தில் அவற்றின் தொழில் நிலையங்களில் அவைகள் முதலீடு செய்த மூலதனம், முக்கியமாக வினியோகம் செய்யப்படாத இலாபத்திலிருந்து அதா

வது ஸ்தல நிதிகளிலிருந்து வந்த மூலதனம் 1,300 கோடி டாலர்கள் மட்டும்தான். இது மேற்கூறப்பட்ட இலாபத்தின் பாதிக்கும் சற்று மேற்பட்டது. இது, வளரும் நாடுகளை கொள்ளையடிக்கும் சுரண்டலாகும்.

இத்தகைய நாடுகளின் இழப்புகள், வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் அரசு நிதிகளிலிருந்து பெறும் நிதியால் எவ்விதத்திலும் ஈடு செய்யப்பட மாட்டா. மேற்கத்திய நாடுகளிலிருந்து ''உதவி'' என்று வளரும் நாடுகளுக்கு மீண்டும் வரும் நிதிகள், அயல்நாட்டு முதலீடுகளுக்குச் செலுத்த வேண்டிய செலுத்தினங்களைக் கூட ஈடு செய்ய முடியாது. இது தவிர அந்த நிதிகளில் பலவகையான ஒப்பந்த விதிகள் இணைக்கப்பட்டிருக்கும்.

நவீன காலனி ஆதிக்கத்தின் அடுத்தக் குறிப்பிடத் தக்கப் பண்புக் கூறு, ஏகாதிபத்திய நாடுகளால் செய்யப் படும் கூட்டு நடவடிக்கையான அரசுகளுக்கிடையேயான பொருளாதார நிறுவனங்களை ('புனர் நிர்மாணம், வளர்ச்சிக் கான சர்வதேசிய வங்கி', 'சர்வதேசிய பண நிதிகள்' இத்தியாதி) அமைப்பதும், விடுதலைப் பெற்ற நாடுகளை பொது மார்க்கெட் மாதிரியான அரசுகளுக்கிடையேயுள்ள பொருளாதார சங்கங்களுடன் இணைப்பதும் ஆகும்.

வளரும் நாடுகளுக்கு எதிராகப் பயிற்றிவிக்கப்பட்ட ஒரு தலைப்பட்சத்தை நவீன காலனி ஆதிக்கம் ஒழிக்காது. பல விதத்திலும் அது அதை மோசமாக்குகிறது. அயல் நாட்டு வாணிபம், செலாவணி உறவுகள், இளம் நாடுகள் விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் விளைவுகளை தனதாக்கிக் கொள்ளும் வழிவகைகள் ஆகியவற்றில் இது தெளிவு படுத்தப்படுகிறது.

ஒரு எடுத்துக்காட்டு, உலக மார்க்கெட்டில் வளரும் நாடுகள் அவற்றின் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதிலிருந்து தடுத்து அவற்றின் பொருளாதாரத்தை கச்சாப் பொருள்களை உற்பத்தி செய்வதை நோக்கித் திருப்பும் காப்பு வரிகள் மற்றும் பிற தடைகளை எதிர்த்து நிற்கின்றன. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் சராசரி காப்பு வரி விகிதம் கச்சாப் பருத்திக்கு 2 சதவீதம், உலோகத் தாதுப் பொருள்களுக்கு 3.5 சதவீதம், மரத்திற்கு 1 சதவீ

தம் ஆகும். ஆனால் பருத்திப் பொருள்களுக்கு 22 சதவீதமும் உலோகப் பொருள்களுக்கு 15 சதவீதமும் மரச் சாமான்களுக்கு 17 சதவீதமும் ஆகும்.

''சர்வதேசப் பொருளாதார உறவுகளின் மறுகட்டமைப்புப்'' பற்றிய சோவியத் அரசாங்கத்தின் 1976ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் தேதிய அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல் முதலாளித்துவ நாடுகளின் ஒருதலைபட்சத்தால் வளர்ந்துவரும் நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைகள், தீர்க்கப்படாமலேயே தொடர்கின்றன. அவற்றிற்கும் தொழில்துறையில் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி இன்னும் விரிந்து கொண்டே உள்ளது.

1981ல் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசில் லி. இ. பிரேஷ்னெவ் பின்வருமாறு வலியுறுத்தினர்: ''1970க்களின் மத்தியில் முன்பு காலனிகளாக இருந்த நாடுகள் ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பைப் பற்றிய பிரச்சினையை எழுப்பின. சர்வதேசப் பொருளாதார உறவுகளை ஜனநாயக அடிப்படையில், சமத்துவ வழியில் திருத்தியமைப்பது வரலாற்றுக் கருத்து நிலையின்படி இயற்கையானதே. இந்தத் துறையில் இன்னும் அதிகமானவற்றைச் செய்ய முடியும், செய்ய வேண்டும்.''

## 6. வளரும் நாடுகளின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகள். விடுதலைப் பெற்ற இளம் தேசிய அரசுகளின் வளர்ச்சிக்கான இரு வழிகள்

விடுதலையடைந்த நாடுகள் அவற்றின் கடந்து போன காலனி ஆதிக்கத்திடமிருந்து பொருளாதாரப் பின்னடைவை வாரிசாகப் பெற்றுள்ளன. ஒரே நேரத்தில் சில பொருளாதார அமைப்புகள் நிலவுவதில் இது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பிழைப்பிற்கான பொருளாதாரம், சிறு-பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி முறை, முதலாளித்துவ உற்பத்தி முறை, நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்கள், புரா

தன-கூட்டுவாழ் அமைப்பின் மிச்ச சொச்சங்கள் கூட ஆகியவை இத்தகைய நாடுகளில் காணப்படுகின்றன.

## பொருளாதாரத்தின் நிலை

அரசியல் சுதந்திரமானது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுவிசையாக செயல்பட்டது. பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஓரளவு ஊக்கம் கொடுத்தது. இருப்பினும் வளரும் நாடுகளில் அநேகம் இன்னமும் மிகவும் பின்தங்கியும் விவசாயத் துறையை மட்டும் கொண்டுள்ளதாகவும் உள்ளன. தொழில் துறைகளில் சுரங்கத் தொழில்கள் தான் முன்னணியில் உள்ளன. பொறியியல் மற்றும் செய்பொருள் உற்பத்தித் தொழில்கள், முக்கியமாக தொழில் நுணுக்க முன்னேற்றத்துடன் இணைக்கப்பட்ட தொழில்கள் அனேகமாக இல்லை என்றே கூறலாம். அநேக வளரும் நாடுகள் ஒரே ஒரு பொருள் அல்லது சில வகைப் பொருள்களை உற்பத்திச் செய்வதில் ஒரே வகையான தனிச் சிறப்புத் தன்மையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. அதன் விளைவால் உலக முதலாளித்துவத் தொழில் துறை உற்பத்தியில் அவற்றின் பங்கு இன்னமும் மிகச் சிறியது. 1970 களின் மத்தியில் முதலாளித்துவ உலகின் மக்கள் தொகையில் 70 சதவீதம் மக்கள் வாழ்ந்த வளரும் நாடுகள் வெறும் 13-14 சதவீதம் தொழில் உற்பத்தியைத்தான் செய்தன. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையேயுள்ள தேசிய தலா வருமானத்தில் உள்ள இடைவெளியின் நிலை 1 : 100. அது இன்னமும் அதிகரித்துக் கொண்டே போகிறது.

பொருளாதாரப் பின்னடைவு, வளரும் நாடுகளில் மிகப் பெரும்பான்மையான மக்களின் மிகக் கீழான வாழ்க்கைத் தரத்துக்குக் காரணமாகும். பசி, மிகக் குறைவான சுகாதாரப் பணி, மிக அதிக அளவிலான தொத்து நோய்கள் ஆகியவற்றால் சாவு விகிதம், முக்கியமாகக் குழந்தைகளிடையே மிகவும் அதிகம். வளரும் நாடுகள் ஆசிரியர்கள், மற்றும் பயிற்சிப் பெற்ற நபர்களின் பற்றாக் குறைவால் பாதிக்கப்படுகின்றன.

முற்போக்கான புரட்சிகர-ஜனநாயக சக்திகளைத் தலைமை

யாகக் கொண்ட நாடுகளின் மக்கள் இடைவிடாது அவர்களுடைய நாடுகளின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்காகவும் பின்தங்கிய நிலையை நீக்கி, முன்னேற்றமான பொருளாதார அடித்தளத்தைக் கட்டவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

## ஒரு வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்து எடுத்தல்

புதிதாக விடுதலைப் பெற்ற இளம் தேசிய அரசுகளை எதிர் நோக்கி இருக்கும் கஷ்டங்கள், அவற்றின் சமூக-பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு ஒரு பாதையை அவசரமாகத் தேர்ந்தெடுக்கச் செய்கின்றன.

பல வளரும் நாடுகள் இன்னமும் கடைபிடிக்கும் ஒரு வழி முதலாளித்துவ வழியாகும். அது அந்நாடுகளில் பெரும் பகுதிக்கு, உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தொடர்ந்து சார்ந்திருக்கும் நிலையைக் குறிக்கிறது. இத்தகைய நாடுகளில் முதலாளித்துவ உறவுகளின் முன்னேற்றம், உற்பத்திச் சக்திகள் ஒரு பக்க வளர்ச்சியுடன் இருப்பினும், அது அதிகரித்துக் கொண்டிருக்கும் மக்களின் வறுமை, மிகுந்த சமூக வேறுபாட்டுப் போக்கு, அதிகரித்துக் கொண்டே வரும் வர்க்கப் போராட்டம் ஆகியவற்றிற்கு இட்டுச் செல்லுகிறது. அரசு முதலாளித்துவ நடவடிக்கைகள் மூலம், விவசாயம் மற்றும் தொழில் துறைகளில், சில சீர்திருத்தங்கள் இத்தகைய நாடுகளில் நிறைவேற்றப்பட்டாலும் ஏகாதிபத்திய நாடுகள் இத்தகைய நாடுகளின் மீது கொண்டிருக்கும் கட்டுப்பாடு குறையாது, மேலும் அதிகரித்து விடும் என்று நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

இருப்பினும் மற்ற ஒரு சாத்தியமான வழி உள்ளது: தேசிய விடுதலைப் புரட்சியை ஒரு சோஷலிஸ்டு திசையை நோக்கிய வளர்ச்சியாக்குவது.

பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள நாடுகளை இந்தப் பாதையில் வளர்ச்சியடையச் செய்யும் கோட்பாட்டளவிலான சாத்தியத்தை சோவியத் தேசிய இன குடியரசுகளும் மங்கோலியாவும் நிரூபித்திருக்கின்றன. தற்காலத்தில் முதலாளித்துவ கட்டத்தைத் தாண்டி கடந்து, சில மக்கள் சோஷலிசத்திற்குப் போவது புறவயமாக சாத்தியம் என்று

லெனின் நிலைநாட்டினர். வளர்ச்சியுற்ற நாடுகளின் பாட்டாளிகளுடைய உதவியால் பின்தங்கிய நாடுகள் சோஷலிசத்திற்குப் போக முடியும். மேலும் ''முதலாளித்துவக் கட்டத்தைக் கடக்காமலேயே குறிப்பிட்ட சில வளர்ச்சிக் கட்டங்கள் மூலம் கம்யூனிசத்திற்குப்''* போகலாம் என்று லெனின் எழுதினர்.

சோஷலிச திசையை நோக்கிய வழி பழைய காலனி பொருளாதாரக் கட்டமைப்பைப் பூரணமாக ஒழித்தல், அயல்நாட்டு ஏகபோகங்களின் ஆதிக்கப்பிடியை அழித்தல், நவீன கால ஆதிக்கவாதிகளைச் சார்ந்திருப்பதை ஒழித்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. பொதுத் துறைக்கு முன்னுரிமை அளிக்கும் அடிப்படையில் எடுக்கப்படும் ஒரு தீவிரமான விவசாய சீர்திருத்தம், தொழில்மயமாக்குதல் ஆகியவை உள்நாட்டு பிற்போக்குவாதிகளின் பொருளாதார நிலைகளை அரித்தழிக்கவும் நாட்டின் சமூக-அரசியல் வாழ்க்கையை ஜனநாயகமயமாக்கவும் கூடிய சாத்தியத்தை உண்டுபண்ணுகின்றன. இந்த நிகழ்ச்சிப் போக்கில் உழைக்கும் மக்களின் கட்டுப்பாடு அரசாங்க அமைப்புகளின் மீது இருக்க வேண்டியது அவசியம். ஏன் எனில் இது ஜனநாயக சுதந்திரத்தை உத்திரவாதப்படுத்தும். பரந்த செயல்வினையுடைய சமூக-பொருளாதார அரசியல் சீர்திருத்தங்களை நிறைவேற்ற கூடிய புரட்சிகரமான ஜனநாயக ஸ்தாபனங்களை அமைக்க வேண்டும்.

சோஷலிச திசையை நோக்கிய வழியில், மூலதன திரட்சி உட்பட, மிகக் குறுகிய உள்நாட்டு மார்க்கெட்டுகள், வளரும் நாடுகளின் குறைந்த கலாசார தரம், தொழில் பயிற்சியில் குறைந்த தரம் போன்ற சங்கடங்கள் உள்ளன.

இருப்பினும் சோஷலிச திசையை நோக்கிய வழியின் அடிப்படையில் மட்டும் தான் வளரும் நாடுகளின் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரசில் லியோனித் பிரேஷ்னெவ் பேசிய பொழுது, சோஷலிச திசைவழியைப் பின்பற்றும் நாடுகளில் ஏற்படும் ஆழ்ந்த முற்போக்கு மாற்றங்களைக் குறிப்பிட்டார். சமீப ஆண்டு

* V. I. Lenin, *Collected Works*, Vol. 31, p. 244.

களில் பல விடுதலைப் பெற்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள முக்கிய மாறுதல் போக்குகளான, தொழில் துறை வளர்ச்சியை பொதுத்துறைக்கு மாற்றுவதிலுள்ள முக்கியத்துவம், நிலப் பிரபுத்துவ நிலவுடைமையை ஒழித்தல், புதிய இளம் அரசுகள் அவற்றின் சொந்த இயற்கை வளங்களின் மீது பயனுள்ள ஆட்சியுரிமை கொண்டாடுவதை உறுதிப்படுத்துவதற்காக அயல் நாட்டுத் தொழில் நிலையங்களைத் தேசியமயமாக்குவது, அவற்றின் சொந்த நபர்களுக்குப் பயிற்சி அளிப்பது போன்ற போக்குகளை அவர் குறிப்பிட்டார். உலகின் அந்தப் பகுதியில் சங்கடங்கள் இருப்பினும் பரந்த செயல் வினையுடைய முன்னேற்ற மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது நிச்சயமாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சிப் போக்காகும்.

1981ல் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசில் நிகழ்த்திய உரையில் லி. இ. பிரேஷ்னெவ் சோஷலிஸ்ட் திசையில் முன்னேறும் நாடுகளின் வளர்ச்சியின் முக்கியமான போக்குகளை ஆராய்ந்து கூறினார்: ''முற்போக்கான பாதையில் தொடர்ந்து வளர்ச்சி அடைவதென்பது நாட்டுக்கு நாடு ஒரே மாதிரியானதல்ல என்பது திண்ணம் அது கடினமான நிலைமைகளில் நடைபெறுகிறது. ஆனால் முக்கியமான திசைவழிகள் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. ஏகாதிபத்திய ஏகபோகம், ஸ்தல பெரிய முதலாளி வர்க்கம் மற்றும் நிலப்பிரபுத்துவ சக்திகளின் ஏகபோகத்தைப் படிப்படியாக அகற்றுதல், அந்நிய மூலதனத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை இவற்றில் அடங்கும். மக்களுடைய அரசு அந்த நாட்டுப் பொருளாதாரத்தின் தலைமையான சிகரங்களைக் கைப்பற்றி உற்பத்திச் சக்திகளின் திட்டமிடப்பட்ட வளர்ச்சிக்கு மாறுவதும் கிராமப்புறங்களில் கூட்டுறவு இயக்கத்துக்கு ஊக்கமளிப்பதும் அவற்றிலடங்கும். உழைக்கும் பெருந்திரளான மக்கள் சமூக வாழ்க்கையில் வகிக்கும் பாத்திரத்தை அதிகப்படுத்துவதும் மக்களிடம் உண்மையோடிருக்கும் தேசிய உணர்ச்சியுள்ள ஊழியர்களைக் கொண்டு அரசு இயந்திரத்தைப் படிப்படியாக வலுப்படுத்துவதும் அவற்றிலடங்கும். ஏகாதிபத்திய-எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கை அவற்றிலடங்

கும். பெருந்திரளான உழைக்கும் மக்களின் நலன்களை வெளிப்படுத்துகின்ற புரட்சிகரமான கட்சிகள் அங்கே பலமடைந்து கொண்டிருக்கின்றன.''

ஏகாதிபத்தியக் காலனி ஆதிக்க முறையின் அழிவு, பல இளம் நாடுகள் சோஷலிச திசையை நோக்கியப் பாதையில் அடையும் வளர்ச்சி ஆகியவை, உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நெருக்கடியை மேலும் அதிகரிக்கச் செய்யும் பிரதான காரணிகளாக மாறியுள்ளன.

## 7. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தற்போதைய வளர்ச்சிக் கட்டமும், அதனுடைய நெருக்கடி ஆழப்படுதலும்

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நெருக்கடியை அதிகரிக்கும் போக்குடைய காரணிகளாவன: பல நாடுகளில் முதலாளித்துவ அமைப்பு ஒழிந்தது, உலக சோஷலிச அமைப்பின் வளர்ச்சியும் வலுப்பெறுதலும், காலனி ஆதிக்க முறையின் வீழ்ச்சி, பழைய சாம்ராஜ்யங்களின் வீழ்ச்சி, புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளில் காலனி ஆதிக்கப் பொருளாதாரக் கட்டமைப்பு உடைதல், இத்தகைய நாடுகளுக்கும் உலகிலுள்ள பிற நாடுகளுக்கும் இடையேயுள்ள பொருளாதாரப் பிணைப்புகளின் வளர்ச்சி.

### உலகப் பொருளாதார உறவுகளின் சீர்குலைவு

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நெருக்கடி தற்காலிக ஒழுங்கற்ற நிலையல்ல. ஆனல் அது ஒரு நெடுநாளையதும் மீண்டும் திருப்ப முடியாததுமான முதலாளித்துவ உலகப் பொருளாதார உறவுகளின் சீர்குலைவு. இது ஏகாதிபத்திய சகாப்தத்திற்கே உரிய தனிமாதிரி. இதை முதலில் குறிப்பிட்டது லெனின் தான். 1920களின் தொடக்கத்தில் இருந்த முதலாளித்துவத்தை விவரிக்கும் பொழுது, அவர் ''உலகப் பொருளாதாரத்தின் மொத்த அமைப்பின் 'சீர்குலைவு', தகர்வு ஆகியவற்றைச் சுட்டிக் காட்டினர்.''*

* V. I. Lenin, *Collected Works*, Vol. 35, p. 451.

சோஷலிசத்தின் வளர்ச்சி, காலனி ஆதிக்கத்தின் வீழ்ச்சி ஆகியவற்றின் விளைவாக உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வட்டாரம் சுருங்குவது தவிர, உலக முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடியின் முக்கியமான மற்ெருரு வெளிப்பாடு, ஏகாதிபத்திய நாடுகளிடையே உள்ள முரண்பாடுகளின் அதிகரிப்பு ஆகும்.

இதற்கான காரணம் என்னவெனில் முதலாளித்துவ நாடுகளில் அதிகரித்துக் கொண்டுவரும் சமமற்ற பொருளாதார, அரசியல் வளர்ச்சியாகும். ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சி இன்னமும் அதிக சமமற்றதாக மாறுகிறது என்றும் சக்திகளின் நிலை வேகமாகவும் ஏற்றத்தாழ்வுடனும் மாறுகிறது என்றும் லெனின் கண்டறிந்தார்.

இதற்குக் காரணம் ஏகபோகங்களின் வளர்ச்சியாகும். ஏகபோகங்கள் புதிய மார்க்கெட்டுகளையும் முதலீடு செய்யும் வட்டாரங்களையும் கைப்பற்றி அவற்றின் வளர்ச்சி விகிதத்தைக் காத்துக்கொள்ள இன்னமும் அதிகமான சந்தர்ப்பங்களைப் பெற்றுள்ளன. மேலும் முக்கியத்துவம் வாய்ந்தது விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியும் அரசு-ஏகபோக முதலாளித்துவமும் ஆகும். விஞ்ஞானத்-தொழில்நுணுக்கப் புரட்சியானது தனிப்பட்ட நாடுகள் அல்லது ஏகபோக குழுக்கள் முதன் நிலை அடைவதை சாத்தியமாக்குகிறது. அரசைப் பயன்படுத்தி சில நாடுகளில் ஏகபோகங்கள் அதிக வீத வளர்ச்சியை அடையலாம். உதாரணமாக மேற்கு ஜெர்மனி, ஜப்பான், மற்றும் பிரான்சில் இரண்டாவது உலகப் போருக்குப் பின் அரசு ஒழுங்கு முறையும் முக்கியமாகப் பொருளாதாரத் திட்டமிடுதலும் தேசிய ஏகபோகங்களின் வளர்ச்சிக்குப் பங்காற்றின. உலகப் பொருளாதாரத்தில் அவற்றின் பங்கினை அதிகரித்தன.

சமமற்ற, ஏற்றத்தாழ்வுடன் கூடிய வளர்ச்சியின் விளைவால் முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலும் ஏகபோகங்களுக்கு இடையிலும் சக்திகளின் ஒப்புநிலை மாறி கொண்டே இருக்கிறது. மார்க்கெட்டுகள், செல்வாக்கு வட்டாரங்கள், பிராந்தியங்கள் ஆகியவை தொடர்ந்து மறுபிரிவினை செய்யப் படுகின்றன. கடந்த காலத்தில் முதலாளித்துவ நாடுகளின்

அதிகரித்துக் கொண்டிருக்கும் சமமற்ற பொருளாதார அரசியல் வளர்ச்சி உலகப் போர்களில் தான் முடிந்தது.

உலக சோஷலிச அமைப்பு வலுப்படுவது, தேசிய-விடுதலைப் புரட்சிகள், முதலாளித்துவ நாடுகளில் அதிகரித்துக் கொண்டிருக்கும் முற்போக்கு, ஜனநாயக சக்திகள் ஆகியவைகளின் விளைவால் இன்றைய நிலைமைகளில் மனித குலம் எப்பொழுதையும் விட இப்பொழுது உலகப் போர்களைத் தவிர்க்க முதல் வாய்ப்பைப் பெற்றுள்ளது. எல்லா ஏகாதிபத்திய-எதிர்ப்புச் சக்திகளின் ஒற்றுமையும் இதற்குத் தேவை.

மார்க்கெட்டுகளை மறுபிரிவினை செய்வதற்காக ஒரு உலகப் போர் இப்பொழுது நடப்பது அரிது என்ற உண்மை, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையேயான கொடூர முரண்பாடுகளில் ஒரு தளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடுவதாக எவ்விதத்திலும் கொள்ளலாகாது. இந்த முரண்பாடுகள், நயவஞ்சகமானப் போட்டி, உண்மையான வாணிக, செலாவணிச் சண்டைகள், சுரண்டல், இலாபம் ஆகியவற்றைச் சாத்தியமாக்கும் குறுகி கொண்டே இருக்கும் வட்டாரங்களுக்கான கொடுமையான போராட்டம் ஆகியவற்றில் தங்களைக் காட்டிக் கொள்ளுகின்றன.

### சக்திகளின் சமநிலை மாறுவது

முதலாளித்துவ நாடுகளின் சமமற்ற வளர்ச்சியின் விளைவுகள், முதலாளித்துவ உலகின் தொழில் உற்பத்தியில் ஒவ்வொரு நாட்டின் பங்கின் அளவைக் கொண்டு அளக்கப்படுகின்றன. பிரதான முதலாளித்துவ நாடுகள் சமீப காலத்தில் அடைந்த வளர்ச்சியை நாம் பார்ப்போம்.

இரண்டாவது உலகப் போரின் விளைவால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பலம் கணிசமான அளவு அதிகரித்தது. போருக்குப் பின் ஆரம்பக் காலத்தில் முதலாளித்துவ நாடுகளின் தொழில் உற்பத்தியில் 55-56 சதவீதத்தை அல்லது எல்லா மேற்கு ஐரோப்பிய நாடுகளும் உற்பத்தி செய்ததை விட இருமடங்கு உற்பத்தியை அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்தன. மேற்கு ஜெர்மனியும் ஜப்பானும் பின் தள்ளப்பட்டன. 1948ல் உலக முதலாளித்துவத் தொழில்

துறையில் அவற்றின் பங்கு முறையே 4.2 சதவீதத்திற்கும், 1.3 சதவீதத்திற்கும் குறைந்து போயிற்று. பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் நிலைகள் பலவீனப்படுத்தப்பட்டன.

காலம் செல்லச் செல்ல மேற்கு ஐரோப்பிய, ஜப்பானிய ஏகபோகங்கள் சிறுகச் சிறுக மீண்டும் வலுப்பெற்றன. அதே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிலைகள் பலவீனமாயின. 1960களின் ஆரம்ப ஆண்டுகளில் உலக முதலாளித்துவ உற்பத்தியில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் 44 சதவீத உற்பத்தியைச் செய்தன. 1929லும் இதே அளவு உற்பத்தியைத் தான் செய்தன. 1970களின் மத்தியில் அமெரிக்காவின் உற்பத்தியின் பங்கு 39 சதவீதமாகச் சரிந்தது. அதற்கு மாறாக உலக முதலாளித்துவ நாடுகளின் உற்பத்தியில் பொது மார்க்கெட் நாடுகளின் பங்கு, 1948ல் இருந்த 11.6 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாக உயர்ந்தது. முக்கியமாக, மேற்கு ஜெர்மனியிலும் ஜப்பானிலும் உற்பத்தி வேகமாக வளர்ந்தது. 1960களின் பிற்பகுதியில் ஜப்பான் மூன்றாவது இடத்தில் இருந்தது. 1970களின் ஆரம்ப காலத்தில் மேற்கு ஜெர்மனியை 3வது இடத்திற்கும் பிரிட்டனை 4வது இடத்திற்கும் பிரான்சை 5வது இடத்திற்கும் பின் தள்ளிவிட்டு 2வது இடத்தை ஜப்பான் அடைந்தது. சமீபத்தில் முதலாளித்துவ தொழில் துறையில் ஜப்பான் சுமாராக 10 சதவீத உற்பத்தியையும் மேற்கு ஜெர்மனி 9 சதவீத உற்பத்தியையும் செய்கின்றன. போருக்குப் பின் பிரிட்டன் தொடர்ந்து தளர்ந்து விட்டது. இன்று முதலாளித்துவ தொழில் உற்பத்தியில் அது 5 சதவீத உற்பத்தியைத்தான் செய்கிறது. 1948ல் 10 சதவீதத்தையும் 1913ல் 13 சதவீதத்தையும் உற்பத்தி செய்தது. பிரான்ஸ் தனது நிலையைப் பாதுகாக்க சமாளித்துவிட்டது. கடந்த போருக்கு முன் இருந்த மிகச் சிறந்த காலங்களைப் போல் அவ்வளவு உயர்வாக இல்லாவிடினும் தன் நிலையைப் பாதுகாத்துக் கொண்டுள்ளது.

சமமற்ற பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் விதி செயல்படுவதன் விளைவாகவும், முதலாளித்துவ உலகில் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையேயான போட்டியின் விளைவாகவும் போருக்குப் பின்னால் ஆரம்ப காலத்தில் இருந்த ஒரு

மையம் மூன்று மையங்களால் மாற்றீடு செய்யப்படுகிறது. அவையாவன: (1) அமெரிக்க ஐக்கிய நாடுகள்; (2) மேற்கு ஐரோப்பா (நாடுகளுக்கிடையே முரண்பாடுகள் இருப்பினும் அமெரிக்காவிற்கு எதிராகப் பொதுவாக எதிர்த்து நிற்கிறது); (3) ஜப்பான். இது பசிபிக் பிரதேசத்தில் முதலாளித்துவ நாடுகளை தன்னைச் சுற்றி அணி திரட்டுவதை ஒரு பொழுதும் நிறுத்தாது.

## மூர்க்கத்தனமான போட்டி. வெளி நாட்டு வாணிக நெருக்கடி

மூலதன ஏற்றுமதி வட்டாரங்கள், முக்கியமான கச்சாப் பொருள்களின் மூலாதாரங்களையும் எரிபொருள்களின் மூலாதாரங்களையும் கட்டுப்படுத்துவது, மார்க்கெட்டுகள் ஆகியவற்றிற்காக இந்த மூன்று கோஷ்டிகளிடையேயும் பொருளாதாரப் போட்டி வளர்ந்து கொண்டே உள்ளது.

தற்காலத்தில் இது குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. முதலாளித்துவப் பொருளாதாரச் சுழற்சி நெருக்கடியின் தாக்கத்தின் கீழ் பிரதான முதலாளித்துவ நாடுகளுக்கும் ஏகாதிபத்திய ஏகபோகங்களுக்கும் இடையேயுள்ள போட்டி மூர்க்கத்தனமாக மாறியுள்ளது. அதிக சக்தி வாய்ந்த் சர்வதேசிய ஏகபோகங்கள் போட்டிப் போராட்டத்தை இன்னமும் கொடியதாக்குகின்றன. முதலாளித்துவ நாடுகளின் அரசாங்கங்கள் முரண்பாடுகளை மட்டுப்படுத்தவும் நெருக்கடிக்கு எதிரான நடவடிக்கைகள் எடுப்பதில் கூட்டுச் சேர்வதற்கான பேரம் பேசவும் மீண்டும் மீண்டும் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் அடுத்தவர்களின் செலவில் நன்மைகளைப் பெறவும் தன்னுடைய சொந்த விருப்பத்தைத் திணிக்கவும் ஒவ்வொரு முயற்சியையும் செய்வதே ஏகாதிபத்தியத்தின் இயல்பாகும். வேற்றுமைகள் புதிய வடிவங்களில் மேலே வருகின்றன. முரண்பாடுகள் புதிய சக்தியுடன் வெடித்துக் கிளம்புகின்றன.

நடப்பு நிலைமை முதலாளித்துவ உலகப் பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்துவதைக் காட்டுவதாக உள்ளது.

வெளி நாட்டு வாணிபம் போதுமான அளவு குறைந்தது, வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் வாணிபச் சமநிலையிலும் செலுத்தினங்களின் சமநிலையிலும் ஏற்பட்டவீழ்ச்சி ஆகியவற்ருல் இது தெளிவுபடுத்தப்படுகிறது. 1975ல், 1974ம் ஆண்டை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, தொழில் துறையில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் மொத்த வெளிநாட்டு வாணிபம் நிலையான விலைகளில் சுமாராக 10 சதவீதம் குறைந்து விட்டது. வெளிநாட்டு வாணிபத்தின் பரிமாணம், எல்லா முதன்மையான முதலாளித்துவ நாடுகளிலும் அந்த நேரத்தில் குறைந்தது. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிடையே வாணிபம் பெரும் அளவில் குறைந்தது. அதே நேரத்தில் வளரும் நாடுகள், சோஷலிச நாடுகள் ஆகியவற்றுடன் அவற்றின் வாணிபம் தொடர்ந்து அதிகரித்தது.

1970களின் மத்தியில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் வெளிநாட்டு வாணிபத்தில் ஏற்பட்ட பற்ருக்குறை அதுவரை கண்டறியாத விகிதாச்சாரத்தை அடைந்தது. உதாரணமாக அவற்றின் வாணிபப் பற்ருக்குறையின் மொத்தம் 1974ல் 2,700 கோடி டாலர்களானது. நடைமுறை வாணிகக் காரியங்களில் அவற்றின் செலுத்தினங்களின் சமநிலை 3,320 கோடி டாலர்களானது. 1975, 1976ல் ஆண்டுகளில் ஓரளவு நிலைமை விருத்தியடைந்தது. இதற்கு முக்கிய காரணம் கிட்டத்தட்ட எல்லா வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிலும் வாணிபத்தினைக் குறைத்தது, ஏற்றுமதியை விட இறக்குமதியை குறைத்தது ஆகியவையாகும்.

முதலாளித்துவ சர்வதேசப் பொருளாதார உறவுகளின் நெருக்கடியின் விளைவால் முதலாளித்துவ நாடுகளின் அயல் நாட்டு வாணிகம், எல்லாவற்றையும் உள்ளிட்ட பொருளாதார நிலையைப் பாதுகாக்கும் ஒரு காரணியாக இருப்பதற்குப் பதிலாகவும் பொருளாதாரச் சுழற்சி ஏற்றத் தாழ்வுகளை மட்டமாக்கும், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் காரணியாக இருப்பதற்குப் பதிலாகவும், 1970களில் உற்பத்தியைக் குறைப்பது, பண வீக்கம், வேலையில்லாமை மற்றும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பிற நோய்

களையும் ஒரு நாட்டிலிருந்து மற்றதற்குப் பரப்பும் வாய்க்காலாக மாறியது.

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இன்றைய அதிகரித்துக் கொண்டிருக்கும் நெருக்கடியின் தெளிவான வெளிப்பாடுகளில் ஒன்று முதலாளித்துவப் பண நெருக்கடியாகும்.

## 8. பண நெருக்கடி

பல ஆண்டுகளாக பண நெருக்கடி என்பது முதலாளித்துவ உலகின் நீண்ட நாளைய கேடாகவே உள்ளது.

முதல் உலகப் போரிலிருந்து முதலாளித்துவத்தின் முழு வளர்ச்சிக்குத் தனி மாதிரியான பண நெருக்கடியின் பிரதான வடிவங்கள் வருமாறு: தங்கத்தின் தரத்தின் வீழ்ச்சி, அதாவது தங்கத்திற்காக வங்கி நோட்டுகளைச் சுதந்திரமாகப் பரிமாற்றுவதை நிறுத்துவது; முன்னணி ஏகாதிபத்திய நாடுகளின் காகிதப் பணத்தை சர்வதேச இருப்பு நிதி செலாவணிகளாகப் பயன்படுத்த முயற்சிகள்; பலவகை தனி உரிமையுள்ள செலாவணி மண்டலங்களும் கோஷ்டிகளும் தோன்றுவது; சர்வதேச செலுத்தினங்களின் சகஜமான போக்கிற்கு இடைஞ்சல் தரும் எல்லாவித செலாவணித் தடைகளையும் புகுத்துதல்; பெரும்பான்மையான முதலாளித்துவ அரசுகளுக்கிடையே செலுத்தின காரியங்களின் நிலையற்ற தன்மை; செலாவணியிலுள்ள தங்க உள்ளடக்கத்தை அடிக்கடி மாற்றுதல், அவற்றின் மார்க்கெட் பரிவர்த்தனை விகிதத்தில் கூர்மையான ஏற்ற இறக்கங்கள்; ஏகாதிபத்திய முகாமிற்குள்ளும், பின்னால் ஏகாதிபத்திய நாடுகள், வளரும் நாடுகள் ஆகியவற்றிற்கு இடையிலும் செலாவணி முரண்பாடுகளை அதிகரித்தல்.

ஆனால் 1970களில் முதலாளித்துவப் பண நெருக்கடியின் அடிப்படையான புதிய கட்டம் ஆரம்பித்தது.

### பிரட்டன்-வுட்ஸ் முறையின் தகர்வு

பிரட்டன்-வுட்ஸ் முறையின் தகர்வு, இரண்டாவது உலகப் போரின் விளைவாலும், அதற்குப்பின் உள்ள காலத்தின்

விளைவாலும் உருவெடுத்த மேற்கத்திய பண முறை முழுவதும் தகர்ந்ததைக் குறித்தது.

அமெரிக்க ஏகபோகங்களின் நிர்ப்பந்தம் ஏவியபடி 1944ல் பிரட்டன்-வுட்ஸ்ஸில் நிறுவப்பட்ட பண முறையின் முக்கியக் கோட்பாடுகள் என்ன?

பிரட்டன்-வுட்ஸ் பொறியமைவின் மூன்று ''அச்சாணிகளாவன'':

(1) தங்கத்திற்குப் பதிலாக டாலரை, அதிகாரப் பூர்வமாக தங்கத்தை எவ்வித மறுப்பும் இல்லாது (பண தரமாக), புகுத்துவது. சர்வதேச வாணிப நடவடிக்கைகளில் அதிகாரப் பூர்வவிலைக்குத் தங்கத்திற்காக டாலர் தாராளமாகப் பரிவர்த்தனை செய்யக் கூடியது;

(2) அமெரிக்க ஐக்கிய நாடுகளால் உறுதியளிக்கப்பட்டபடி டாலரின் தங்க உள்ளடகத்தின் நிலையான தன்மை;

(3) குறித்த நிலையிலிருந்து ஒரு சதவீதத்திற்கு மேல் விலகாத நிர்ணயிக்கப்பட்ட செலவாணிகளின் பரிவர்த்தனை விகிதாச்சாரம். இத்தகைய நிலையான தன்மையை உத்திரவாதமளிக்க ஒரு 'சர்வதேசிய பண நிதி' நிறுவப்பட்டது. அதனுடைய முன்னணிப் பதவிகள் அமெரிக்க ஏகபோகங்களால் கைப்பற்றப்பட்டன.

இப்படிப்பட்ட முறைக்குப் புறவய அடித்தளம் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அமெரிக்க ஏகபோகங்களின் ஆதிக்கமாகும். முதலாளித்துவ நாடுகளின் மொத்தத் தங்க சேமிப்பு இருப்பில் 75 சதவீதத்தை அமெரிக்கத் தங்கச் சேமிப்புகள் பெற்றிருந்தன. ''டாலர் தங்கத்தின் தகுதியை விட அதிகமானது'' என்று அப்பொழுது சொன்னார்கள். டாலருக்கான பரந்த தேவை ''டாலர் தட்டுப்பாட்டை'' உருவாக்கியது. அது மிக நெருக்கடியான பிரச்சினையானது.

அமெரிக்காவின் நிதி மூலதனத்தால் பிரட்டன்-வுட்ஸ் முறை வெற்றிகரமாக, வெகு காலத்திற்குப் பயன்படுத்தப் பட்டது. அயல் நாடுகளில் பெருவாரியான அமெரிக்க மூலதனத்தை முதலீடு செய்வது, அயல் நாடுகளில் அமெரிக்க ராணுவ தளங்களைக் கட்டிக் காப்பது, உள்நாட்டுப் போர்களைத் தொடுப்பது, மற்ற ராணுவ நடவடிக்கைகளுக்கு

நிதி அளித்தல், உலகத்தின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் பிடிப்பை விரிவுப்படுத்துதல் ஆகியவற்றை இந்த முறையானது உலக செலாவணிப் புழக்கத்தில் காகித டாலர்களைக் கொண்டு சாத்தியமாக்கியது.

### டாலர் நெருக்கடி

இருப்பினும் ஏற்கெனவே குறிப்பிட்டபடி போருக்குப் பின், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் மற்ற முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையேயுள்ள சக்திகளின் ஒப்புநிலை மெதுவாக மாறிக் கொண்டிருந்தது. 1970களின் ஆரம்பத்தில் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பங்கு குறைவாகவே இருந்தது.

வெளிநாடுகளில் அளவற்ற ராணுவச் செலவாலும் அதனுடைய தங்க இருப்பு தீவிரமாகக் குறைந்ததாலும் ஏற்பட்ட நீண்ட காலமான செலுத்தினங்களின் பற்றுக்குறையால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சர்வதேச நிதி மற்றும் பொருளாதார நிலைகள் அரித்து அழிக்கப்பட்டன. 1975ல் அமெரிக்கா முதலாளித்துவ நாடுகளின் தங்க இருப்பு நிதியில் 75 சதவீதத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் அது 29 சதவீதத்தையே பெற்றிருந்தது. 1975ல் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தங்க இருப்பு அமெரிக்க ஐக்கிய நாடுகளை விட இரு மடங்கு அதிகம். அந்நாடுகளில் முதலாளித்துவ நாடுகளின் தங்க இருப்பில் 65 சதவீதம் இருந்தது. போருக்குப் பின்னால் அது 22 சதவீத்மாகத்தான் இருந்தது.

மறு புறம், டாலர்கள் பல ஆண்டுகளாக மிகப் பெரிய அளவில் குவிந்ததால் உலகம் டாலர்களின் வெள்ளத்தில் இருந்தது. ''டாலர் தட்டுப்பாடு'' ''டாலர் உபரிக்கு'' வழி விட்டது.

இது பிரட்டன்-வுட்ஸ் முறையின் விதிக்கு முற்றுப் புள்ளியிட்டது. அது எந்த புறவய அடித்தளத்தையும் இழந்தது.

1971, அமெரிக்க ஐக்கிய நாடுகள் தங்கத்திற்காக டாலர்களை பரிவர்த்தனை செய்வதை ''தற்காலிகமாக'' நிறுத்

தியதாக அறிவித்த பொழுது பண நெருக்கடியின் புதிய கட்டம் ஆரம்பித்தது. அதற்குப் பின்னுல் தங்கத்தின் அடிப் படையில் டாலரின் மதிப்பைக் குறைக்க கோட்பாட்டளவில் அமெரிக்கா ஒத்துக் கொண்டது. 1934லிருந்து அது தான் முதல் மதிப்புக் குறைவாகும். இவ்வாருக அமெரிக்கக் கரு வூலம் டாலரை, ஒரு சாதாரண முதலாளித்துவ செலாவணி யாக, தங்கத்திற்காகப் பரிவர்த்தனை செய்ய முடியாத படி, மதிப்பைக் குறைக்கும் நிபந்தனைக்குட்பட்டதாக மாற்றி யது. 1973 பிப்ரவரியில் டாலர் இரண்டாம் முறையாகக் குறைக்கப்பட்டது.

அதன் விளைவால், பல கோடிக்கணக்கான டாலர்களான அமெரிக்காவின் வெளிநாட்டு கடன்கள் அவற்றின் தங்க மதிப்பை இழந்தன.

அதே நேரத்தில் 1970களில் அமெரிக்க ஐக்கிய நாடு களும் பிற முதலாளித்துவ நாடுகளும் கூட, நிலையான அன்னிய செலாவணி வீத முறையை விட்டுவிட்டு மிதக்கும் பரிவர்த்தனை விகிதாச்சாரத்தை (கூட்டாகவும், தனியாகவும்) தொடர்ச்சியான ஒப்பந்தங்கள், ஒருதலைப்பட்ச நடவடிக் கைகள் மூலம் ஏற்றுக் கொண்டன. இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் இறுதி முடிவு, ஜமாய்க்காவில் உள்ள கிங்ஸ்டனில் 1976ம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற ‘சர்வ தேசிய பண நிதியின்’ தற்காலிகக் கமிட்டியின் கூட்டத்தினுல் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத் தொடர் பரிவர்த் தனை வீதத்தைக் கண்டிப்பாகத் தீர்மானிக்க வேண்டியதை நிராகரித்து தன்னியல்பாக இது நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தது.

இவ்வாருக பிரட்டன்-வுட்ஸ் முறையின் எல்லாக் கோட் பாடுகளும் நிறுத்தப்பட்டன. ஒரு பெரிய முதலாளித்துவ வங்கியான ‘கிரேடிட் சுயிஸ்’ என்ற வங்கியின் இயக்குனர் ஹெய்ன்ஸ் வுஃப்லி 1975ம் ஆண்டு இறுதியில் பேசுகையில், டாலரைத் தங்கத்துக்காக மாற்ற முடியாதவாறு அதிகாரப் பூர்வமாகச் செய்த பிறகு அமெரிக்க ஐக்கிய நாடுகள் உண்மையில் பிரட்டன்-வுட்ஸ் முறையைத் தகர்த்து விட்டன.

இந்தச் சூழ்நிலையில் அமெரிக்க ஏகபோகங்கள் பண நெருக்கடியின் பாரத்தை மேற்கு ஐரோப்பா மற்றும் ஜப்பானில் உள்ள அதனுடைய பங்காளிகளின் மேல் மாற்ற முயன்று கொண்டிருக்கின்றன. பண நெருக்கடி வளரும் நாடுகளின் மேல் பெரும் இழப்பைச் சுமத்தியது. மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் உழைக்கும் மக்கள் தான். ஏகபோகங்கள் இத்தகைய சிக்கல்களை உழைக்கும் மக்கள் மேல் மாற்ற முயன்று கொண்டு இருக்கின்றன.

முதலாளித்துவ உலகில் ஒரு புதிய சர்வதேசிய பண உறவு முறையை உருவாக்க பலவகையான திட்டங்கள் விவாதிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் சில தங்கத் தரத்திற்குத் திரும்புவது பற்றியது; அதற்கு மாருக, தங்கத்தை ஒரு வகையான காகிதச் சான்று இதழ் மூலம் மாற்றீடு செய்ய வேண்டும் என்று சிலர் நம்புகின்றனர். உதாரணமாக, 'சர்வதேசிய பண நிதியின்' பணத்தை எடுப்பதில் தனிச் சலுகை உரிமை என்ற சான்றிதழைத் தங்கத்திற்கு மாற்றீடு ஆக்குவது. அதே நேரத்தில் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் பொது நெருக்கடியைப் போல் பண நெருக்கடியும் மோசமாகி கொண்டே உள்ளது.

இந்தச் சங்கடங்களிலிருந்து விடுதலை பெறுவது உலகப் பொருளாதாரத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையால் ஏற்படும் பிரதிகூலமான பலன்களைச் சமாளிப்பதில் அடங்கியுள்ளது.

## 9. புதிய பொருளாதார முறை. சோவியத் யூனியன் மற்றும் பிற சோஷலிச நாடுகளின் பங்கு

போரிலிருந்து உலக அரங்கில் சோஷலிசத்திற்குச் சாதகமாக சக்திகளின் ஒப்புநிலையில் ஏற்பட்ட மாற்றம், முதலாளித்துவ நாடுகளில் தேசிய விடுதலை இயக்கம், ஜனநாயகச் சக்திகளின் வளர்ந்து வரும் செல்வாக்கு ஆகியவற்ருல் சர்வதேசப் பொருளாதார உறவுகளைச் சமத்துவமான, நியாயமான அடிப்படையில் புனர்நிர்மாணம் செய்யப் புதிய வாய்ப்புகள் தோன்றி உள்ளன. அந்த அடிப்படையில் ஒரு புதிய

பொருளாதார முறையை நிறுவுவதில் சோஷலிச உலகம், வளரும் நாடுகள் மற்றும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள எல்லா முற்போக்குச் சக்திகளும் ஆகியவற்றிற்குப் புறவய ஆர்வம் உள்ளது.

சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும் சமாதானம், சர்வதேச ஒத்துழைப்பு, தேசங்களின் விடுதலை, சுதந்திரம் ஆகியவற்றிற்காக இடைவிடாத போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன. சர்வதேசப் பொருளாதார உறவுகளில் ஏற்றத்தாழ்வுகள், சமத்துவமின்மை, அடக்குமுறை, சுரண்டல் போன்றவற்றின் வெளிப்பாடுகளையும் ஒழிக்கவேண்டிய போராட்டமானது சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் அரசாங்கம் ஆகியவற்றின் சர்வதேச அரசியல் கொள்கையின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று என்று சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி 25வது காங்கிரசில் குறிப்பிடப்பட்டது.

''சர்வதேசப் பொருளாதார உறவுகளைப் புனர்நிர்மாணம் செய்வது பற்றி'' 1976 அக்டோபர் 4ல் சோவியத் அரசாங்கம் விடுத்த அறிக்கை, இந்த மிகச் சிறந்த குறிக்கோளை அடைய சோவியத் யூனியனின் உறுதியான தீர்மானத்திற்குச் சான்றாகும். ஒவ்வொரு நாடும் அதனுடைய இயற்கை வளத்தின் மேல் கொண்டுள்ள அரசுரிமை, ஒவ்வொரு நாட்டு மக்களும் சுதந்திரமாக அவர்களுடைய நாட்டின் வளர்ச்சிக்கான வழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, அயல் நாட்டு மூலதனம், சர்வதேசிய ஏகபோகங்கள் ஆகியவற்றால் ஏற்படும் சுரண்டலை ஒழித்தல் ஆகியவற்றிற்குச் சோவியத் யூனியன் ஆதரவு அளிக்கிறது என்று இந்த அறிக்கை கூறுகிறது.

சோவியத் யூனியனுக்கும் பிற சோஷலிச நாடுகளுக்கும் இடையேயுள்ள உண்மையான சமத்துவ உறவுகள், அவற்றின் வளர்ந்து கொண்டிருக்கும் பொருளாதார, அரசியல், பண்பாட்டு ஒத்துழைப்பு ஆகியவை வளர்ச்சி மட்டங்களில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து சோஷலிச உலகின் எல்லா வகை சமூக முன்னேற்றத்தினையும் மேம்படச் செய்ய உதவுகின்றன. இது சர்வதேச உறவுகள் சம்பந்தப்

பட்ட பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதற்கு ஒரு உதாரணம்.

மற்றொரு உதாரணம், சோவியத் யூனியன் மற்றும் சோஷலிச முகாமை சேர்ந்த நாடுகள் ஆகியவை வளரும் நாடுகளுடன் கொண்டுள்ள சர்வதேசப் பொருளாதார உறவுகளாகும். சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும் புதிதாக விடுதலைப் பெற்ற இளம் நாடுகளுக்கு பலவகையான பொருளாதார, தொழில்நுணுக்க, அரசியல் உதவியைச் செய்கின்றன. நாணயக் கடன்கள், கடன்கள் ஆகியவற்றை வழங்குவது, பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள், வேலைத்திட்டங்கள் ஆகியவற்றைத் தீட்டுவது, வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைகளை நிறுவுவதில், முக்கியமாக கனரகத் தொழிலை (எரிபொருள், ஆற்றல், உலோகத் தொழில், பொறியியல் இத்தியாதி) அமைப்பதில் பங்கு ஏற்பது, விவசாயத்தை வளர்ப்பதில் பங்கேற்பது, தொழில்நுணுக்க உதவி, இயற்கை வளங்களைத் தேடுவது, அந்தந்த நாட்டு நபர்களுக்கு அந்தந்த 'நாடுகளிலும் சோவியத் யூனியனிலும் பயிற்சி அளித்தல்; நுகர்வுப் பொருள்களை அளித்தல், சுகாதாரப் பணிகள் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை வளர்ப்பத்திலும் மக்களின் சேம நலன்களை மேம்பாடு அடையச் செய்வதிலும் அளிக்கும் உதவி ஆகியவை இந்த உதவியில் அடங்கும்.

1960களிலேயே சோவியத் யூனியன் வளரும் நாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்குச் சுங்க வரிகள் எல்லாவற்றையும் நீக்கி விட்டது. மற்ற சகோதர சோஷலிச நாடுகள் அவ்வரிகளை மிகக் குறைவாகக் குறைத்து விட்டன. சோஷலிச முகாம், வளரும் நாடுகளை மேலும் தொழில்மயமாக்குவதைச் சாத்தியமாக்க ஒவ்வொன்றையும் செய்து கொண்டிருக்கின்றது. அந்த நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு நிலையானதும் இடைவிடாது உயர்ந்து கொண்டே இருக்கும் மார்க்கெட்டுக்கும் உத்திரவாதமளிக்கின்றது. எடுத்துக்காட்டாக, வளரும் நாடுகளிலிருந்து சோஷலிச நாடுகள் இறக்குமதி செய்யும் முற்றிலும் முடிந்த செய்பொருள்கள், பாதி முடிந்த செய்பொருள்கள் ஆகியவற்றின் வருடாந்திர வளர்ச்சி வீதம் 1971 முதல் 1975 வரை 22 சதவீதமாக

இருந்தது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் அது 35 சதவீதத்திற்கும் அதிகமாகி விட்டது.

சோஷலிச நாடுகளின் உதவியுடன் 60க்கும் மேற்பட்ட வளரும் நாடுகளில் கிட்டத் தட்ட 3000 தேசியப் பொருளாதார நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன, அல்லது கட்டுமானத்தில் உள்ளன. சோவியத் யூனியன் 1000 தொழில் நிலையங்களைக் கட்ட உதவி செய்து கொண்டுள்ளது. அவற்றில் ஏற்கெனவே 500 தொழில் நிலையங்கள் பூர்த்தி செய்யப்பட்டு செயல்படத் தொடங்கிவிட்டன. வளரும் நாடுகளுக்கு சோவியத் யூனியனின் பொருளாதார, தொழில் நுணுக்க உதவிகளில் மொத்தத்தில் 90 சதவீதம் உற்பத்தி வட்டாரத்திற்கு வழங்கப்படுகிறது. முக்கால் பங்கிற்கு மேல் பொறியியல் மற்றும் மின்சாரத் தொழில்களை வளர்ப்பதற்குச் செலவிடப்படுகிறது. சோவியத் யூனியன், வளரும் நாடுகளுக்காக ஐந்து இலட்சம் நிபுணர்களையும் திறமையுள்ள தொழிலாளர்களையும் பயிற்றுவிக்க உதவியுள்ளது.

சோஷலிச நாடுகள் வளரும் நாடுகளுக்கு அளிக்கும் உதவியை அதனுடைய வீச்சை மட்டும் கொண்டு மதிப்பீடு செய்யக் கூடாது. அதனுடைய மிகச் சுலப பேர வகைகள், மேலும் அது ஏகாதிபத்தியச் சுரண்டலுக்குத் தடையாக உள்ளது என்ற உண்மை ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சோவியத் யூனியன் மற்றும் பிற சோஷலிச நாடுகள் ஆகியவற்றிற்கும், விடுதலை பெற்ற நாடுகளுக்கும் இடையேயுள்ள ஒத்துழைப்பு ஒரு நிலையான உழைப்புப் பிரிவினைத் தன்மையை மேற்கொள்ளுகிறது. இது சர்வதேசப் பொருளாதார உறவுகளில் ஏகாதிபத்திய சுரண்டல் முறைக்கு மாறுபடுகிறது.

தற்காலத்திலுள்ள உலக வர்க்கச் சக்திகளின் ஒப்பு நிலை விடுதலைப் பெற்ற நாடுகளுக்கு, ஏகாதிபத்திய ஆணைகளை எதிர்த்து நியாயமான, அதாவது சமமான பொருளாதார உறவுகளை வலியுறுத்தச் சாத்தியமாக்குகிறது.

வெற்றிகரமான சர்வதேசப் பொருளாதார உறவுகளின் புனர்நிர்மாணத்திற்கு சோஷலிச நாடுகளுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையிலான பிணைப்புகள் சாதாரண

முக்கியத்துவமுடையதல்ல. சோவியத் யூனியனுலும் மற்றும் எல்லா முற்போக்கு சக்திகளாலும் சமாதானம், ஒத்துழைப்பு ஆகியவற்றிற்காகத் தொடுக்கப்படும் உறுதியான போராட்டம், சர்வதேசப் பதற்ற நிலை தணிவுக்காகத் தீர்மானமாகப் பங்காற்றுகிறது. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகள் இன்னமும் ஆயுதப் போட்டியில் ஈடுபட்டுள்ளன. இன்னும் அமைதிக்கு அபாயம் விளைவிக்கும் நிலை நிலவுகிறது. எனவேதான் முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் மக்கள், நாடுகளிடையே சந்தேகத்தையும் பகைமையையும் ஊட்டி வளர்க்கும் ஏகபோகங்கள், அரசு-ஏகபோக அமைப்பு ஆகியவற்றிற்கு எதிரான அவர்களுடைய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும்.

சர்வதேசப் பொருளாதார உறவுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான அவசரப் பிரச்சினையை, அமைதிக்காகவும் சர்வதேச ஒத்துழைப்பிற்காகவும் முன் வரும் எல்லா முற்போக்குச் சக்திகளின் கூட்டு முயற்சிகளால் தீர்க்க முடியும், தீர்க்கப்பட வேண்டும்.

அத்தியாயம் 10

# வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடம். முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியும் தற்கால நிலைமைகளில் அது தீவிரமடைதலும்

*வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடத்தைப் பற்றிய ஒரு வரையறை, லெனினின் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய போதனையில் அடங்கியுள்ளது. அதாவது முதலாளித்துவத்தின் முந்திய வளர்ச்சி முழுவதிலும் மேலும் அதைத் தொடர்ந்த மனித சமுதாயத்தின் முன்னேற்றதிலும் அதன் இடம் பற்றிய வரையறை அடங்கியுள்ளது.*

## 1. ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டம். சோஷலிசப் புரட்சியின் நுழைவாயில்

*ஏகாதிபத்தியமானது பொதுவான முதலாளித்துவத்தின் அடிப்படைக் குணங்களின் ஒரு வளர்ச்சியாகவும் நேரடித் தொடர்ச்சியாகவும் வளர்ந்துள்ளது. ஆனல், முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக அதனுடைய வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மட்டுமே மாறியது. அதனுடைய அடிப்படைக் குணங்களில் சில அவற்றுக்கு எதிராக மாறும் பொழுது, அந்த வழியில் முதலாளித்துவத்திலிருந்து அதை விட உயர்ந்த சமூக அமைப்புக்கு மாறும் இடைப்பட்ட காலத்தின் பண்புக் கூறுகள் தெளிவான பிறகு இது நடைபெற்றது.*

ஏகபோக முதலாளித்துவத்திற்கு முந்திய நிலைக்குப் பிறகு வந்த முதலாளித்துவ வளர்ச்சியின் உச்சக் கட்டம் ஏகாதிபத்தியம். அது அதே நேரத்தில் முதலாளித்துவத்தின் கடைசி கட்டமாகவும் சோஷலிசப் புரட்சியின் நுழை வாயிலாகவும் உள்ளது. ஏகாதிபத்தியத்தின் வரலாற்றுப் பூர்வ இடத்தை ஆராயும் பொழுது ''ஏகாதிபத்தியமானது முதலாளித்துவத்தின் தனியொரு வரலாற்றுக் கட்டமாகும். அதன் தனித்தன்மை மூன்று வகைப்பட்டது: ஏகாதிபத்தியமானது (1) ஏகபோக முதலாளித்துவமாகும்; (2) புல்லுருவித் தனமான, அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமாகும்; (3) அந்திமக்கால முதலாளித்துவமாகும்.''*

## ஏகபோக ஆதிக்கம்

ஏகபோக ஆதிக்கம் என்பது, ஏகாதிபத்தியத்தின் முக்கிய குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகும். அது வரலாற்றில் அதனுடைய இடத்தைத் தீர்மானிக்கிறது. ஏகபோகங்களின் நான்கு முக்கிய வெளிப்பாடுகளை லெனின் குறிப்பிட்டார்.

முதலாவதாக, முதலாளித்துவ ஒருமுனைப்படுத்தலின் விளைவாக, பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி, விற்பனை ஆகியவற்றில் ஏகபோக ஆதிக்கம் நிறுவப்படுகிறது.

இரண்டாவதாக, கச்சாப் பொருள்களின் முக்கிய மூலாதாரங்களைக் கைப்பற்றி ஏகபோகங்கள் சொந்த உரிமை கொண்டாடுவது ஏகபோக ஆதிக்கத்தின் விளைவாகும்.

மூன்றாவதாக, ஏகபோகங்களின் சர்வவியாபகம் நிறுவப்படுவது, வங்கி மூலதனத்தின் ஒருமுனைப்படுத்துதல் மையப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது; நிதி மூலதனம், நிதி ஆதிக்கக் குழு ஆகியவை அவற்றின் ஆதிக்கத்தை பூர்ஷ்வா சமுதாயத்தின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் நிறுவுகின்றன.

நான்காவதாக, ஏகபோகங்கள் காலனி ஆதிக்கக் கொள்கையிலிருந்து வளர்கின்றன. ஏகாதிபத்தியம், காலனி நாடு

* வி. இ. லெனின், சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து, மாஸ்கோ, 1974, பக்கங்கள் 129-130.

களை ஏகபோகங்களின் சொந்தமாக்கும் சகாப்தம், உலகத்தை பிரிக்க, மீண்டும் பிரிக்கக் கொடூரமானப் போராட்டம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

இந்த வழிகளில் ஏகபோகங்களின் வளர்ச்சியானது, ஏக போகங்களும் பூர்ஷ்வா அரசும் இணைவதிலும் அந்த அடிப் படையில் ஏகபோக முதலாளித்துவ அரசு-ஏகபோக முத லாளித்துவமாக வளர்வதிலும் முடிகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையின் உள், வெளி முரண்பாடுகளின் தாக்கத் தால் அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பு ஒன்று உருவெடுக்கிறது. அது ஏகபோகங்களின் நலன்களுக்காக செயல்படுகிறது.

## முதலாளித்துவத்தின் புல்லுருவித்தனமும் சிதைவும்

ஏகபோக ஆதிக்கம் என்பது முதலாளித்துவத்தின் சிதைவு, வளர்ந்து வரும் புல்லுருவித்தனம் ஆகியவற்றின் அடித்தள மாகும். அது அதனுடைய இடத்தை வரலாற்றில் சுட்டிக் காட்டும் இரண்டாவது குணும்சமாகும்.

அதனுடைய ஏகாதிபத்தியக் கட்டத்தில் முதலாளித்து வத்தின் சிதைவு, புல்லுருவித்தனம் ஆகியவை எதில் வெளிப் படுகின்றன? எப்படி இந்த நிகழ்ச்சிப் போக்கு ஏகபோக ஆதிக்கத்துடன் இணைக்கப்பட்டது?

இவற்றிற்கு லெனின் இவ்வாறு பதில் எழுதினுர்: ''ஏக போகங்கள், ஆதிக்கக் கும்பல், சுதந்திரத்திற்காக அல்லா மல் ஆதிக்கத்துக்கான முயற்சிகள், ஒருசில மிகுந்த செல் வந்த அல்லது மிகுந்த வலிமையான தேசங்கள் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையிலான சிறிய அல்லது பலவீன தேசங்களைச் சுரண்டுதல்—இவை எல்லாம், ஏகாதிபத்தியத் தின் தனிப்பட்ட தன்மைக் குறிப்பான இயல்புகளை—புல்லுரு வித்தனமான அல்லது அழுகிவரும் முதலாளித்துவமாக ஏகாதிபத்தியத்துக்கு இலக்கணம் கூறும்படி நம்மை நிர்ப் பந்திக்கும் அந்த இயல்புகளை—தோற்றுவித்திருக்கின்றன.''*

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 229.

ஏகபோகம் பெற்ற சலுகை நிலையைக் காப்பாற்றவும் பெற்ற முயற்சிப்பதும் அதனுடைய ஆதிக்கத்தை அரித்தழிக்கும் எல்லா மாற்றங்களையும் எதிர்ப்பதும், ஒரு ஏகபோகத்தின் இயல்பாகும். மார்க்கெட்டில் பொருளாதார ஆதிக்கம், மிக அதிகமான ஏகபோக இலாப உத்தரவாதம் ஆகியவை, ஏகபோகங்கள் புது இயந்திரங்களைப் புகுத்துவதில் மனமில்லா நிலையையும், தொழில்நுணுக்க முன்னேற்றத்தை பின்தள்ளும் போக்கையும் உண்டாக்குகின்றன. ஏகபோகங்கள் அடிக்கடி புதிய கண்டுபிடிப்புகளின் உரிமைகளை விலைக்கு வாங்குகின்றன. இப்படிச் செய்வது போட்டியாளர்களிடமிருந்து புதிய கண்டுபிடிப்பை மறைக்கும் காரியத்திற்காகவே தவிர வேறு எந்தக் காரியத்திற்கும் அல்ல.

உலகத்தின் மிகப் பெரிய தொழில் ஏகபோகங்களில் ஒன்றான 'ஜெனரல் மோட்டார்ஸ்' கம்பெனி தான் வாங்கிய புதிய கண்டு பிடிப்பு உரிமைகளில் ஒரு சதவீதத்தை மட்டுமே பயன்படுத்துகிறது என்பது தெரிந்ததே. அதே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வாணிப இலாக்காவின் படி, அமெரிக்காவிலுள்ள தொழில் நிலையங்களில் 80 சதவீதம், விஞ்ஞானம், தொழில்நுணுக்கம் ஆகியவற்றின் மிக அண்மை காலத்திய சாதனைகளை எவ்விதத்திலும் பயன்படுத்துவதில்லை.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் போக்கு, உற்பத்திச் சக்திகள் கட்டிப் போடப்படுகின்றன என்ற பொருளையோ அல்லது விஞ்ஞான-தொழில் நுணுக்க வளர்ச்சி நின்று விட்டது என்ற பொருளையோ குறிப்பதாகக் கொள்ளலாகாது. தொழில்நுணுக்கப் புரட்சியின் முன்னேற்றத்திற்கு இடைஞ்சல் தரும் போக்குடன், அதனுடைய வளர்ச்சியை நோக்கிய எதிரிடையான போக்கும் உள்ளது. எதார்த்தங்களை அதிகமாக எளிமைப்படுத்துதல், திரித்துக் கூறல் ஆகியவற்றை எதிர்த்து எச்சரித்துவிட்டு லெனின் எழுதினார்: "இந்த அழுகல் போக்கு முதலாளித்துவத்தின் துரிதமான வளர்ச்சிக்கு இடமில்லாதபடிச் செய்வதாகக் கருதுவது தவறாகும். இந்தப் போக்கு அப்படி ஒன்றும் செய்யவில்லை. ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் சிற்சில தொழிற் கிளைகளும், முதலாளித்துவ வர்க்கத்தின் சிற்சில

படிவத்தினரும், சிற்சில நாடுகளும் அதிகமாகவோ குறைவாகவோ இத்தகைய போக்குகளில் இப்பொழுது ஒன்றையும் பிறகு இன்னொன்றையுமாய் வெளிப்படுத்துகின்றன. ஒட்டுமொத்தமாக முதலாளித்துவம் முன்னிலும் விரைவாகவே வளர்ந்து கொண்டிருக்கிறது, ஆனால் இந்த வளர்ச்சி பொதுவாக மேலும் மேலும் ஏற்றத் தாழ்வானதாகி வருகிறது என்பது மட்டுமின்றி, மூலதனத்தில் மிகவும் செல்வந்த நாடாக இருப்பனவற்றின்... அழுகலில் இந்த ஏற்றத்தாழ்வான வளர்ச்சி குறிப்பிடத்தக்கவாறு வெளிப்பட்டும் வருகிறது.''*

விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சி இயற்கையைச் சாதகமாக மாற்றவும் பொருளாயத செல்வத்தை அளவற்ற வீதத்தில் உற்பத்தி செய்யவும் மனிதனின் படைப்பாற்றலை பெருக்கவும் இதற்கு முன்பு இல்லாத வாய்ப்புகளை மனித குலத்திற்கு வழங்குகிறது என்ற தற்கால நிலைமைகளிலே இந்த ஆழமான வருணனையை நினைவில் கொள்ள வேண்டும். விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றத்தை இலாபம், சுரண்டல் ஆகியவற்றிற்கான துணைக் கருவியாகச் செய்து, சமுதாய நலன்களுக்கான அதனுடைய எல்லா வகை வளர்ச்சியையும் தடுக்கிறது.

முதலாளித்துவத்தின் சிதைவு மிகத் தெளிவாக, பொருளாதாரத்தை ராணுவமயமாக்குவதில் இன்று வெளிப்படுத்தப்படுகிறது. வளர்ந்து வரும் இராணுவமயமாக்கல் என்பது உற்பத்திச் சக்திகளை பெருமளவில் வீணாக்குவதாகக் குறிப்பதுமட்டுமல்ல மனித சமுதாயம் இருப்பதற்கே அது ஒரு அச்சுறுத்தலாக உள்ளது.

முதலாளித்துவத்தின் சிதைவு, அதனுடைய ஏகபோகக் கட்டத்தில், அதனுடைய அதிகரித்துக் கொண்டு வரும் புல்லுருவித்தனமான இயல்பிலும் வெளிபடுத்தப்படுகிறது. பூர்ஷ்வாவின் புல்லுருவித்தனம் உச்ச நிலைக்கு வளருகிறது. அதில் பெரும் பகுதி பொருளாயத உற்பத்தியுடன் தொடர்பே இல்லாமல் போகிறது. நிர்வகிக்கும் செயல்களைக்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, மாஸ்கோ, 1980, பக்கம் 229.

கூடச் சிறப்பான பணியாளர் செய்யுமாறு மாற்றுகிறது. மூலதனத்தைக் கொண்டு வாழும் சுகவாசிகளின் பகுதி அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதாவது பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் வாழும் முதலாளிகள்.

ஏகபோக பூர்ஷ்வா புல்லுருவித்தனமான வாழ்க்கை நடத்துவதோடல்லாது மக்கள் தொகையில் கணிசமான அளவு மக்களை உற்பத்தி வேலையிலிருந்து திருப்பி விடுகிறது. அநேகம் பேர் ராணுவம், போலீஸ், மற்றும் முதலாளிகளின் சேவகர்களாக வேலை செய்தல் போன்ற வேலைகளில் ஈடு படுத்தப்படுகின்றனர்.

முதலாளித்துவத்தின் சிதைவு, அதனுடைய புல்லுருவித்தனம் ஆகியவை, ஏகபோக யுகத்தில் எல்லா சமூக, அரசியல் வட்டாரங்களிலும் பிற்போக்கை நோக்கி மாறுவதில் காட்டப்படுகின்றன. லெனின் எழுதினார்: ''அயல் நாட்டுக் கொள்கை, உள்நாட்டுக் கொள்கை இரண்டிலும் ஏகாதிபத்தியம், ஜனநாயகத்தை மீறுவதை நோக்கியும் பிற்போக்கை நோக்கியும் செல்ல முயலுகிறது. இந்தப் பொருளில் ஏகாதிபத்தியம் மறுக்கமுடியாதவாறு பொதுவாக ஜனநாயகத்தை, எல்லா ஜனநாயகத்தையும் மறுப்பதில் உள்ளது''.*

## சாகும் தறுவாயிலுள்ள முதலாளித்துவமாக ஏகாதிபத்தியம்

முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டத்தைப் பற்றிய அவருடைய ஆழ்ந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் லெனின், ஏகாதிபத்தியம் என்பது சாகும் தறுவாயில் உள்ள முதலாளித்துவம் என்ற முடிவிற்கு வந்தார். அவர் எழுதினார்: ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் சகாப்தம் என்பது பழுத்த, அழுகிப் போகும் நிலையில் உள்ள முதலாளித்துவமாகும். அது தகரும் நிலையிலுள்ளது. மேலும் அது சோஷலிசத்திற்கு வழிவிடுவதற்கான பக்குவமடைந்துள்ளது.''**

சோஷலிசப் புரட்சியின் தவிர்க்க முடியாத நிலையானது, முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளையும், அதாவது

* V. I. Lenin, *Collected Works*, Vol. 23, p. 43.

** V. I. Lenin, *Collected Works*, Vol. 22, p. 109.

பொதுவாக முதலாளித்துவத்தின் தனிமாதிரியான முரண்பாடுகள், ஏகபோக முதலாளித்துவத்தில் புதியதாக உண்டு பண்ணப்பட்ட முரண்பாடுகள் ஆகிய இருவகை முரண்பாடுகளையும் ஏகாதிபத்தியம் அதிகப்படுத்துகிறது என்ற விஷயத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

முதலில் அதிகப்படுத்தப்படுகிற முரண்பாடு, உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் உள்ள முரண்பாடாகும். முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாட்டின்—உற்பத்தியின் சமூக குணும்சத்திற்கும், தனிப்பட்ட முதலாளித்துவ உரிமையாக்கும் முறைக்கும் இடையேயான முரண்பாடு—தீவிரமானது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை முதலாளித்துவம் எல்லைக்குட்படுத்துகிறது என்பதையும், இவை முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கு ஒத்துவரா என்பதையும் காட்டுகிறது. இதனுல் உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாடு இன்னமும் அதிகமாக ஆழப்படுகிறது.

ஏகாதிபத்திய யுகத்தில், முக்கியமாக தற்கால அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் ஏகபோக பூர்ஷ்வாவுக்கும், சமுதாயத்தின் ஏனைய பகுதிக்கும் இடையேயான முரண்பாடு அதிகரிக்கிறது. கருத்தாலும் கரத்தாலும் உழைக்கும் மக்கள், பல்வேறு சமூக படிநிலையினர், தேசிய இனங்கள், வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஆகியோரின் அடிப்படை நலன்களுடன் ஏகாதிபத்தியம் மோதுகிறது.

ஏகாதிபத்திய நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள், ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையேயான முரண்பாடுகள், ஏகாதிபத்திய கோஷ்டிகளுக்கு இடையேயான முரண்பாடுகள், ஏகபோகங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் போன்ற சர்வதேச முரண்பாடுகள் அதிகமாக்கப்பட்டுள்ளன.

உலக சோஷலிச அமைப்பின் தோற்றம் முன்னேற்றம் ஆகியவற்றினுல், உலகில் உள்ள இரு சமூக அமைப்புகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் கூர்மையடைகின்றன.

எல்லா முரண்பாடுகளும் கூர்மை அடைவதும் விரிவடைவதும், ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தில் மேலும் விரிவான மக்கள் பகுதியினரை ஈடுபடச் செய்கின்றன. அதன்

விளைவால் ஏகாதிபத்தியம் சோஷலிசத்திற்கான பொருளாயத முன்தேவைகளைத் தயாரிக்கிறது என்பது மட்டுமல்ல முதலாளித்துவ சமுதாயத்தை புரட்சியின் முனைக்கே கொண்டு வருகிறது. இக்காரணத்தினாலேயே ஏகாதிபத்தியம் சாகும் தறுவாயில் உள்ள முதலாளித்துவம், சோஷலிசப் புரட்சியின் நுழைவாயிலாக இருக்கிறது.

## 2. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி. அதனுடைய பிரதான கட்டங்கள்

### முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் கருதுகோள்

"முதலாளித்துவம் முழுவதுமாகத் தகர்ந்து சோஷலிச சமுதாயம் பிறக்கும்"* வரலாற்றுக் காலத்தை முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி என்று லெனின் அழைத்தார்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியை மேலே விவாதிக்கப்பட்ட பொருளாதார நெருக்கடியைப் பற்றிய கருதுகோளுடன் குழப்பக் கூடாது. அதீத உற்பத்தியின் பொருளாதார நெருக்கடியானது, புனருற்பத்தியின் முரண்பாடுகளை உள்ளடக்கிய மீண்டும் மீண்டும் நடைபெறும் பொருளாதாரச் சுழற்சியின் ஒரு கட்டமாகும். அதீத உற்பத்தி நெருக்கடி இந்தச் சுழற்சியை முடிவுறச் செய்கிறது. அதே நேரத்தில் முரண்பாடுகளின் ஒரு தற்காலிக மூர்க்கமான தீர்மானத்தால் அது அடுத்த சுழற்சியைத் துவக்குகிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி என்பது முதலாளித்துவ சமுதாயத்தின் எல்லா அம்சங்களான பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய முதலாளித்துவ உற்பத்தி முறையின் தகர்வின் உலகளாவிய வரலாற்று நிகழ்ச்சிப் போக்காகவும் உலக அளவில் முதலாளித்துவம் சோஷலிசத்தால் புரட்சிகரமாக மாற்றீடு செய்யப்படுவதாகவும் இருக்கிறது.

பொது நெருக்கடிக்கு பல பண்புக் கூறுகள் உள்ளன.

* V. I. Lenin, *Collected Works*, Vol. 27, p. 130.

ஆனால் அவற்றை கீழ்க் கண்ட நான்கு முக்கியமானவை களாகக் குறைக்கலாம்.

உலகம் சோஷலிச அமைப்பு, முதலாளித்துவ அமைப்பு என்று இரு அமைப்புகளாகப் பிளந்தது முதலாளித்துவத் தின் பொது நெருக்கடியின் முதலாவதும் முக்கியமானது மான குணாம்சமாகும். இந்தப் பிளவு மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியால் தொடக்கப்பட்டது. ருஷ்ய நாட் டில் ஏற்பட்ட பாட்டாளிப் புரட்சியானது உலக சோஷ லிசப் புரட்சியின் ஆரம்பம் மட்டுமே என்று லெனின் கூறினார். லெனின் தீர்க்கதரிசனமாகப் பார்த்தது போலவே, ருஷ்ய புரட்சியைத் தொடர்ந்து பிற சக்திமிக்க புரட்சிகர எழுச்சிகள் நடந்தன. முதலாளித்துவம், ஐரோப்பிய நாடு கள் சிலவற்றிலும், ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகள் சிலவற்றிலும் தகர்ந்தது.

சோஷலிசத்திற்குச் சாதகமாக சக்திகளின் ஒப்புநிலையில் ஏற்பட்ட முற்போக்கான மாற்றமும் ஏகாதிபத்திய ஆதிக்கத் தின் வட்டாரம் குறைந்ததும் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் ஒரு மிக முக்கியமான பண்புக் கூறாகும்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டா வது குணாம்சம் ஏகாதிபத்தியத்தின் காலனி ஆதிக்க முறையின் நெருக்கடியாகும். அது வளர்ந்து வரும் தேசிய விடுதலை இயக்கத்தின் விளைவால் அம்முறையின் இறுதி தகர்வைக் கொண்டு வந்தது. சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளாலும் சர்வதேச தொழிலாளர் வர்க்க இயக்கத் தாலும் ஆதரிக்கப்பட்ட விடுதலை பெற்ற நாடுகளின் மக் கள், ஏகாதிபத்தியத்தைப் பொருளாதார ரீதியாக சார்ந் திருப்பதை நீக்குவதற்காகவும் நவீன காலனி ஆதிக்கத்துக்கு எதிராகவும் போராடிக் கொண்டிருக்கின்றனர். புதிதாக விடு தலைப் பெற்ற இளம் நாடுகள் சோஷலிச வளர்ச்சித் திசை யில் தங்களைத் திருப்புகின்றன.

ஏகாதிபத்திய நாடுகளில் உள் பொருளாதார முரண் பாடுகளின் அதிகரிப்பு, அவற்றின் பொருளாதாரத்தின் நிலை யற்றத்தன்மை அதிகப்படுவது, அதன் சிதைவு ஆகியவை முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றாவது குணாம்சமாகும். இந்த நிகழ்ச்சிப் போக்கு, விஞ்ஞான-

தொழில்துறைக்குப் புரட்சியின் அதிக செல்வாக்கிற்கு உட்பட்ட உற்பத்திச் சக்திகளின் மாற்றத்துடனும் பொருளாதார அடித்தளத்தில் ஏற்பட்ட மாற்றத்துடனும் முக்கியமாக ஏகபோக வளர்ச்சியுடனும் ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்ச்சியடைவதுடனும் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இறுதியானதும் நான்காவதுமான குணும்சம் பூர்ஷ்வா அரசியல், சித்தாந்தம் ஆகியவற்றின் வளர்ந்து வரும் நெருக்கடியாகும். பூர்ஷ்வா முழு சித்தாந்த முறை முதலாளித்துவ அமைப்பை நியாயப்படுத்துவதற்கும் கம்யூனிச-எதிர்ப்பு, சோவியத்-எதிர்ப்பு ஆகியவற்றை முடிந்த அளவு பரவலாகப் பரப்புவதற்கும் திருப்பிவிடப்படுகிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி அதனுடைய வளர்ச்சிப் போக்கில் சில கட்டங்களைக் கடக்கிறது. ஒவ்வொன்றும் அதனுடைய சொந்த குறிப்பிட்டப் பண்புக் கூறுகளைக் கொண்டுள்ளது.

## முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் முதல் கட்டம்

முதல் கட்டம் முதல் உலகப் போர், மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் விளைவால் ருஷ்யா ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து பிரிந்தது ஆகியவற்றால் துவக்கப்பட்டது.

முதலாளித்துவப் பொது நெருக்கடியின் முதல் கட்டத்தில் கூட, சோவியத் குடியரசு பகைமைச் சூழலில் நிறுவப்பட்ட பொழுது, முதலாளித்துவத்தை விட சோஷலிசம் சமூக-பொருளாதாரச் சிறப்புடையது என்பது தெளிவாக்கப்பட்டது. 1930 முதல் 1940 வரையுள்ள ஆண்டுகளின் இறுதிவாக்கில், பின்தங்கிய விவசாய நாடாக இருந்த சோவியத் யூனியனுனது நவீன தொழில் உற்பத்தியின் எல்லா முக்கியமான துறைகளையும் பெற்ற தொழில்-விவசாய நாடாக முன்னேறியது.

முதலாளித்துவ பொது நெருக்கடியின் முதல் கட்டத்

தில் காலனி ஆதிக்க முறையின் நெருக்கடி தொடங்கியது. காலனி ஆதிக்க நாடுகளில் உள்ள மக்கள் ஏகபோகங்களால் சுரண்டப்படுவது காலனி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்திற்கு அகவய, புறவய முன்தேவைகள் தோன்றி வளர்வதற்கு வகை செய்தது.

பல தேசிய இனங்களைக் கொண்ட ருஷ்யாவில் வெற்றி பெற்ற சோஷலிசப் புரட்சி, பின்னால் மங்கோலியா சோஷலிச வளர்ச்சியின் பாதையில் அடி வைப்பது ஆகியவை காலனி ஆதிக்க மக்களுக்கு அவர்கள் ஏகாதிபத்திய ஒடுக்கு முறையைத் தூக்கி எறியவும், தேசியப் பிரச்சினையை, சமத்துவம், சுயநலமற்ற பரஸ்பர உதவி ஆகிய அடிப்படையில் தீர்க்கவும் கூடிய எதிர்கால வாய்ப்புகளை வழங்கின. அதன் விளைவாக காலனி நாடுகளிலுள்ள தேசிய விடுதலை இயக்கம் தூண்டு விசை பெற்றது.

முதலாளித்துவப் பொருளாதாரம் மேலும் நிலையற்றதாகியது. 1929ல் முதலாளித்துவ வரலாற்றில் மிக மோசமான நெருக்கடி தோன்றியது. அதைத் தொடர்ந்து மிக நீண்ட பொருளாதார மந்தம் ஏற்பட்டது. எந்த வித கணிசமான பொருளாதார வீக்கமும் ஏற்படுமுன் முதலாளித்துவமானது 1937ல் மற்றொரு நெருக்கடியால் தாக்கப்பட்டது. நெருக்கடிக்கு முந்திய நிலையான 1928ம் ஆண்டு நிலையை மீண்டும் அடையவில்லை.

ஏகபோக முதலாளித்துவ முரண்பாடுகள் அதிகரிக்கவும் அது அரசு-ஏகபோக முதலாளித்துவமாக முன்னேறியது. பெருந்திரளான மக்களின் ஒடுக்குமுறையை ஏகபோகங்கள் அதிகரித்தன. சில பூர்ஷ்வா அரசுகள் பாசிச அரசுகளாக மாறின.

இந்த நெருக்கடியின் வளர்ச்சி இறுதியில் இரண்டாவது உலகப் போரில் முடிந்தது.

## முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டம்

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டம் இரண்டாவது உலகப் போரின் போது ஆரம்பமானது. இரண்டாவது உலகப் போர் நடக்கும் பொழுதும்

அதற்குப் பிறகும், முதலாளித்துவ அமைப்பின் எல்லா முரண்பாடுகளும் கூர்மையாகுவதன் இயல்பான விளைவால் ஐரோப்பா ஆசியா ஆகியவற்றில் ஏகாதிபத்தியச் சங்கிலி சில நாடுகளில் நொறுக்கப்பட்டது. உலக சோஷலிச அமைப்பு ஒன்று தோன்றியது.

சோஷலிச அமைப்பின் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வேகத்திலிருந்து முதலாளித்துவ அமைப்பை விட சோஷலிசம் மேன்மையானது என்பது தெளிவானது. உலகத் தொழில் உற்பத்தியில் சோஷலிச நாடுகளின் பங்கு 1937ம் ஆண்டில் 10 சதவீதமாக இருந்தது 1955ல் 27 சதவீதமாக உயர்ந்தது.

இரண்டாவது உலகப் போரில் சோவியத் யூனியனின் வெற்றியானது, தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக் காகவும், காலனி ஆட்சிகளைத் தூக்கி எறியவும் சாதக மான சூழ்நிலையை உருவாக்கியது. சீனா, வட கொரியா, வட வியத்நாம் ஆகிய நாடுகள் காலனி ஆதிக்க நுகத் தடியைத் தூக்கி எறிந்தன. உலகப் பொருளாதாரத்தின் முத லாளித்துவ அமைப்பிலிருந்து தங்களை விடுவித்துக் கொண் டன. ஏகாதிபத்திய காலனி ஆதிக்க முறை வீழ்ச்சியுற ஆரம்பித்தது.

இரண்டாவது உலகப் போரின் விளைவுகள் ஏகாதிபத் திய நாடுகளின் பொருளாதாரத்தைப் பாதித்தன. ஒரு புறத்தில், விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் தாக் கத்தாலும், பிற காரணிகளாலும் அவற்றின் பொருளா தார வளர்ச்சி வேகமாகியது. மறு புறத்தில் தொழில் உற் பத்தியின் துறைகள், வட்டாரங்கள், நாடுகளின் வளர்ச்சி சமமற்றதாகியது. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் கட்டமைப்பு மாற்றங்களுடன் தொடர்புடைய முரண்பாடு கள் அதிகமாக்கப்பட்டன. ஏகபோக சக்தியின் வளர்ச்சியுடன் முதலாளித்துவத்தின் சிதைவு அதிகரித்தது. அதனுடைய முரண்பாடுகள் தீவிரமடைந்தன. உழைப்பு, மூலதனம் ஆகியவற்றின் எதிரும் புதிருமான தன்மை வளர்ந்தது. பெரிய ஏகாதிபத்திய நாடுகளில் அரசு-ஏகபோக முதலாளித் துவம் முன்னேறியது.

முதலாளித்துவத்தின் சிதைவின் முக்கிய வெளிப்பாடு

களில் ஒன்று முதலாளித்துவப் பொருளாதாரத்தை ராணுவ மயமாக்குவது ஆகும். இராணுவ-தொழில் தொகுதியின் வளர்ச்சியானது, ஏகாதிபத்திய நாடுகளின் அயல் நாட்டு, உள்நாட்டு அரசியல் கொள்கைகள், பூர்ஷ்வா சித்தாந்தம், கலாசாரம் ஆகியவற்றின் மீது கேடான பாதிப்பை ஏற்படுத்தியது.

## முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றுவது கட்டமும் அதனுடைய குறிப்பிடத்தக்க பண்புக் கூறுகளும்

1950களின் மத்தியில் சோஷலிசத்திற்குச் சாதகமாக, இரு உலக அமைப்புகளின் சக்திகளின் ஒப்புநிலையில் ஏற்பட்ட பரந்த செயல் விளைவையுடைய மாற்றங்கள், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி அதனுடைய மூன்றுவது கட்டத்தில் நுழைந்ததைச் சுட்டிக் காட்டின. இந்தக் கட்டத்தின் குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகள் என்ன?

முதலாவது கட்டம் இரண்டாவது கட்டம் ஆகியவற்றின் ஆரம்பம் உலகப் போர்களுடன் பொருந்தின. மூன்றுவது கட்டம், எதிர் எதிரான இரு சமூக அமைப்புகளுக்கும் இடையே சமாதான சகவாழ்வு இருக்கும் பொழுது ஆரம்பித்தது. இந்தச் சகவாழ்வு அவற்றின் அரசியல், பொருளாதார, சித்தாந்த போராட்டத்தின் ஒரு குறிப்பிட்ட வடிவமாகும்.

மூன்றுவது கட்டத்தின் குறிப்பிடத்தக்கப் பிரதான மாற்றம், மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் உலக சோஷலிச அமைப்பு தீர்மானமான காரணியாக மாறியதாகும். இதனுல், மனித குலத்தை முன் நோக்கி நிற்கும் எல்லா பிரச்சினைகளுக்குமான தீர்வுகள் இப்பொழுது முதல் உலக சோஷலிச அமைப்பின் முயற்சிகளைச் சார்ந்துள்ளன என்று நிச்சயமாக பொருளாகாது. இருப்பினும் சோஷலிசம் தொடர்ந்து புதிய வெற்றிகளைப் பெற்றுக் கொண்டே இருக்கின்றது.

சோவியத் சமுதாயத்தில் மகத்தான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. லெனினின் கட்சியின் வழிகாட்டலின் கீழ் சோவியத் மக்களின் அர்ப்பணிக்கப்பட்ட முயற்சிகளால் வளர்ச்சி

யுற்ற சோஷலிச சமுதாயம் சோவியத் யூனியனில் கட்டப் பட்டுள்ளது என்ற முக்கியமான தத்துவ ரீதியானதும் அரசி யல் ரீதியானதுமான முடிவிற்கு வருவதற்கு இவை சாத்திய மாக்குகின்றன.

சோஷலிசத்தின் நிலைகள் வலுப்படுவது சோஷலிசப் பொருளாதார ஒருமைப்பாட்டின் வளர்ச்சியில் வெளிப்படு கிறது. சோஷலிச அரசுகளின் குடும்பத்துடன் அமெரிக்க கண்டத்திலுள்ள முதல் சோஷலிச நாடான மக்கள் கியூபாவும் சேர்ந்துள்ளது.

1970 முதல் 1980ம் ஆண்டு முடியவுள்ள ஆண்டுகளின் ஆரம்பத்தில் உலகத் தொழில் உற்பத்தியில் சோஷலிச நாடு களின் பங்கு 39 சதவீதமாகி விட்டது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றுவது கட்டத்தின் மற்றொரு தனிமாதிரியான பண்புக் கூறு என்ன வெனில் ஆப்பிரிக்க கண்டத்திலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் பரவி இருந்த ஏகாதிபத்தியத்தின் காலனி ஆதிக்க முறையின் தகர்வாகும். முன்னுளைய காலனி நாடு களில் ஏகாதிபத்திய ஏகபோக ஆதிக்கத்தை முடிவிற்கு கொண்டு வரவும் சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்களை நிறைவேற்றவும் பொருளாதாரச் சுதந்திரத்தை அடையவும் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றுவது கட்டத்தில் நவீன முதலாளித்துவத்தின் அரசு-ஏகபோக குணும்சம் அதிகரிக்கிறது. அதனுடைய எல்லா பொருளா தார, சமூக முரண்பாடுகளும் மேலும் அதிகரிக்கின்றன. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில், முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகளை மட்டுப்படுத்த முயல் கின்ற ஒரு அரசு-ஏகபோக அமைப்பு உருவெடுக்கிறது. ஆனுல் அரசு-ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சியால் சமநிலையற்ற பொருளாதார தன்மையையும் அதிகரித்த உற்பத்தி நெருக் கடிகளையும் தவிர்க்கவோ அல்லது உலக முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடி விரிவுப்படுவதைத் தடுக்கவோ முடியவில்லை.

தொழிலாளர்கள் மற்றும் எல்லா ஏகபோகமல்லாத பகுதியினர் ஆகியோரை ஏகபோகங்கள் சுரண்டுவதும் ஒடுக்கு

வதும் அதிகரித்துக் கொண்டே இருப்பதானது சமூக முரண்பாடுகளை மேலும் அதிகப்படுத்தவும் வர்க்கப் போராட்டத்தை தீவிரப்படுத்தவும் செய்யும் போக்குடையதாகிறது.

அதே நேரத்தில் பூர்ஷ்வா அரசியல், சித்தாந்தம் ஆகியவை இன்னும் அதிகமாக சரிந்து கொண்டிருக்கின்றன. பூர்ஷ்வாவின் வளர்ந்து வரும் வேறுபாட்டுப் போக்கு, அதிகப் பிற்போக்கு ஏகாதிபத்திய வட்டாரங்களின் குறைந்து வரும் செல்வாக்கு, பதட்ட நிலைத் தணிவை நோக்கிச் செல்லும் ஒரு பலமான போக்கு ஆகியவை பூர்ஷ்வா அரசியல் நெருக்கடியின் வெளிப்பாடாகும்.

## 3. தற்கால நிலைமைகளின் கீழ் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் வளர்ச்சியில் பண்பு மாற்றங்கள்

1970ம் ஆண்டு முதல் 1980ம் ஆண்டு முடிய உள்ள ஆண்டுகளில் பரந்த செயல் வினையுடைய பண்பு மாற்றங்கள் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் வளர்ச்சியில் நடந்து கொண்டிருக்கின்றன. மாறிய நிலைகளுக்கு தன்னை தக அமைத்துக் கொள்ளும் முதலாளித்துவத்தின் போக்கு அது ஒரு அமைப்பாக நிலைபெறுவதைக் குறிப்பதாகக் கொள்ளலாகாது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தொடர்ந்து ஆழப்படுகிறது.

### சோஷலிச நாடுகளின் பங்கு

எதிர் எதிரான இரு சமூக அமைப்புகளுக்கு இடையிலான போராட்டத்தை முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் முக்கிய பண்புக் கூறுக முதலில் குறிப்பிடலாம். 1970ம் ஆண்டு முதல் 1980 ஆண்டு முடிய உள்ள ஆண்டுகளில் உலக சக்திகளின் ஒப்புநிலை சோஷலிச அமைப்புக்குச் சாதகமாகவும் ஏகாதிபத்தியத்திற்குப் பாதகமாகவும் மாறியது. அது, சோஷலிசம் சமூக முன்னேற்றத்தின் ஒரு தீர்மானமான காரணியாக மாறுவதில் ஒரு புதுக் கட்டத்தைக் குறிக்கிறது. உலக சோஷலிச அமைப்பை மேலும் வலுப்படுத்துவது, ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு

நிலைகள் கணிசமான அளவு பலவீனமடைதல் ஆகியவற்றின் விளைவாக சக்திகளின் சமநிலையில் பரந்த செயல் விளை யுடைய பண்பு மாற்றம் ஏற்பட்டது.

உலகப் பொருளாதாரத்திலும் கூட சோஷலிச நாடு கள் மேலும் கணிசமான பங்கை ஆற்றிக் கொண்டுவரு கின்றன. சோஷலிச முகாம் இப்பொழுது உலகத்தில் மிக வலிமை வாய்ந்த இயக்க ஆற்றலுள்ள பொருளாதார சக்தி யாக உள்ளது.

உலக சோஷலிசம் ஒரு சமூக அமைப்பாக மிக வலிமை வாய்ந்ததாக மாறியுள்ளது. அதனுடைய உயர்ந்த சமூகப் பக்குவம், கம்யூனிசம் அமைப்பதற்கான பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளத்தைக் கட்டுவதில் சோவியத் மக்கள் அடைந்துள்ள வெற்றிகளால் சுட்டிக் காட்டப்படு கிறது. பிற சோஷலிச நாடுகளில் பெரும்பான்மை பரிபூர்ண மான வளர்ச்சியுற்ற சோஷலிச சமுதாயத்தை நிறுவுவதைத் தங்களது உடனடி குறிக்கோளாக முன் வைத்துள்ளன. இந்தக் குறிக்கோளை நோக்கி வெற்றிகரமாக முன்னேறி வரு கின்றன. சகோதர சோஷலிச நாடுகளிடையே ஒத்துழைப்பு ஒரு புதிய பண்பு அளவுநிலையை எட்டியுள்ளது.

இராணுவம், பொருளாதார துறை ஆகியவற்றில் சோஷ லிச நாடுகள், முக்கியமாக சோவியத் யூனியன் உள்ளிட்ட நாடுகளின் சாதனைகள் இரு உலக அமைப்புகளுக்கு இடையேயுள்ள சக்திகளின் ஒப்புநிலையில் ஒரு அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. அவை ஆக்கிரமிப்பு ஏகாதி பத்தியப் போர்களைத் தடுக்கும் ஒரு காரணியுமாகும்.

### சர்வதேசப் பதற்ற நிலை தணிவை நோக்கிய திருப்பம்

சோஷலிச நாடுகள், முதலாளித்துவ நாடுகள் அவற் றிற்கு இடையிலான உறவுகளில் ஒரு திருப்பத்தை ஏற் படுத்தவும், ‘கெடுபிடி’ போர், வெடிக்கக் கூடிய நிலைகள் ஆகியவற்றிலிருந்து சர்வதேசப் பதட்ட நிலை தணிவுக்கும் வெவ்வேறான சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக் கிடையே சமாதான சகவாழ்வின் கோட்பாடுகளை உறுதியாக நிறுவுவதற்கும் மாற, சோஷலிசம் முதலாளித்துவம் ஆகிய வற்றிற்கிடையிலான சக்திகளின் ஒப்புநிலையில் ஏற்பட்ட

பரந்த செயல் விளையுடைய பண்பு மாற்றங்கள், புறவய அடித்தளத்தை ஏற்பாடு செய்துள்ளன.

மற்ற எல்லாவற்றையும் காட்டிலும், உலக விவகாரங்களில் இரண்டு திசைவழிகளின் தீவிரமான போராட்டத்தை எழுபதுக்களின் கடைசியிலும் எண்பதுக்களின் தொடக்கத்திலும் பார்க்கிறோம். ஒரு பக்கத்தில் ஆயுதப் போட்டிக்குக் கடிவாளம் மாட்டுகின்ற, சமாதானத்தையும் பதட்டத் தணிவையும் பலப்படுத்துகின்ற, தேசங்களின் அரசுரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கின்ற திசைவழி; மறு பக்கத்தில் பதட்டத் தணிவைச் சீர்குலைக்கின்ற, ஆயுதப் போட்டியை அதிகப்படுத்துகின்ற, மற்ற நாடுகளை பயமுறுத்தி அவற்றின் உள்விவகாரங்களில் தலையிடுகின்ற, தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குகின்ற திசைவழி.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது, 25வது, 26வது காங்கிரசுகளில் உருவாக்கப்பட்ட சமாதான திட்டத்தை அமுலாக்குவதில் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் சோவியத் மக்களால் செய்யப்பட்ட செயலூக்கமானதும் காரியார்த்தமானதுமான முயற்சிகளும் எல்லா சோஷலிச நாடுகள், சர்வதேசிய தொழிலாளர், கம்யூனிஸ்ட் இயக்கம், முதலாளித்துவ நாடுகளில் உள்ள எல்லா ஜனநாயக சமாதான சக்திகள் ஆகியவற்றின் முயற்சிகளும் உலக வளர்ச்சியில் சர்வதேச பதட்ட நிலை தணிவை ஒரு முன்னணிப் போக்காகச் செய்துள்ளன.

பதட்ட நிலை தணிவு மிகத் தெளிவாகத் தெரிகிறதாக மாறி கொண்டிருந்தது. கண்ணியமானதும் நியாயமானதுமான சர்வதேச உறவுகளைப் பற்றிய கோட்பாடுகள் சர்வதேச ஆவணங்களால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. ஆயுதப் போட்டிக்கான சில வழிகளை மூடிவிடுவதில் மிதமானதாயினும் முதலாவது ஒப்பந்தங்களை அடைய முடிந்துள்ளது. சோஷலிச நாடுகளுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையே வாணிபம், பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுணுக்கம், கலாசாரத் துறை, மற்றும் பிற துறைகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பு வெற்றிகரமாக முன்னேறி கொண்டிருக்கிறது.

சில செல்வாக்குள்ள ஏகாதிபத்தியப் வட்டாரங்கள்

இராணுவ-தொழில் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், பிற்போக்குச் சக்திகளுடன் கருத்து ஒற்றுமையுடைய தலைவர்கள் ஆகியோர் பதட்ட நிலை தணிவிற்கு எதிராகவும், தேசங்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு எதிராகவும் செயல்படுகின்றனர். அவர்கள் ஆயுதப் போட்டியை அதிகப்படுத்துவதை ஆதரிக்கின்றனர். குறிப்பாக காட்டுமிராண்டித்தனமான புது ஆயுதங்களை உற்பத்திக்காகவும் அவற்றை மேற்கு ஐரோப்பாவில் அமைப்பதற்காகவும் அவர்கள் முன் வருகின்றனர்.

சமாதானத்திற்கு இடர் விளைவிக்கும் இராணுவவாதிகள், அவர்களுடைய அரசியல் ஏஜெண்டுகள் ஆகியோரின் நடவடிக்கைகளைத் தடுக்க ஒரு போராட்டம் உலகம் முழுவதிலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. சமாதானத்திற்காக உலகளாவிய போராட்டத்தில் வழக்கம் போல், முன்னணியில் செல்லுவது உலகிலுள்ள முற்போக்கு சக்திகள், சோஷலிச நாடுகள், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள், மற்றும் பலவகையான ஜனநாயக,அரசியல், சமூக ஸ்தாபனங்கள் ஆகியவையாகும்.

1980க்களின் தொடக்கத்தில் சர்வதேச வானத்தில் இடிமேகங்கள் திரண்ட பொழுது சோவியத் யூனியன் யுத்த ஆபத்தை அகற்றுவதற்கும் பதட்டத் தணிவைப் பாதுகாப்பதற்கும் ஆழப்படுத்துவதற்கும் தன்னுடைய முயற்சிகளைத் தொடர்ந்து செய்தது, உலகத்தின் மிகப் பெரும்பான்மையான நாடுகளோடு பரஸ்பரம் உதவுகின்ற ஒத்துழைப்பை விரிவுபடுத்தப் பாடுபட்டது.

உலகில் சமாதானத்தை விரும்பும் மக்களும் சோவியத் அரசும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் மக்களும் ஆயுதப் போட்டியை நிறுத்தவும் படைக்கலக் குறைப்பை சாதிக்கவும் எடுக்கும் தளராத, உறுதியான முயற்சிகளைப் பாராட்டுகின்றனர். மக்கள் விரும்புவது என்னவெனில் நிலையான சமாதானம். அவர்கள் இன்னுமொரு உலகப் போருக்கான சாத்தியத்திற்கான நடவடிக்கைகளைக் கண்டித்து சோஷலிசத்திற்கும் சமாதானத்திற்கான காரணத்திற்கும் இடையேயுள்ள அறுக்க முடியாத தொடர்பை மேலும் மேலும் நன்ருகப் புரிந்து கொள்ளுகின்றனர்.

''ஒவ்வொரு நாட்டையும் அனைத்து மனிதகுலத்தையும் எதிர்நோக்குகின்ற சமாதானபூர்வமான, ஆக்கபூர்வமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எல்லா நாடுகளும் பலனளிக்கக் கூடிய முறையில் ஒத்துழைக்க வேண்டுமென்று வாழ்க்கை வற்புறுத்துகிறது'' என்று லி. இ. பிரேஷ்னெவ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசில் எடுத்துரைத்தார்.

மாறிய உலகச் சக்திகளின் ஒப்புநிலை தேசிய விடுதலை இயக்கத்திலும் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றிகள் வெளிப்படுத்தும் மிகப் பெரிய நிகழ்ச்சிகள் வருமாறு: ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான வியத்நாம் மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி; வியத்நாம் சோஷலிச குடியரசு நிறுவியது; போர்ச்சுகீசிய காலனி சாம்ராஜ்யத்தின் தகர்வு; முன்னாளைய போர்ச்சுகீசிய காலனி நாடுகளில், குறிப்பாக அங்கோலா, மொஸாம்பிக், கினி-பிஸாவ் ஆகியவற்றில் சோஷலிச திசையை நோக்கிய ஆட்சி முறைகளை நிறுவுவது; நவீன காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதிலும் நாடுகளின் சொந்த தேசிய வளத்தைத் தங்களது முழு உரிமையாக்குவதிலும் விடுதலைப் பெற்ற நாடுகளின் சாதனைகள்; ஒரு புதிய உலகப் பொருளாதார முறையைக் கட்டுவதில் அடைந்துள்ள முன்னேற்றம் ஆகியவை. வளரும் நாடுகளில் சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கும் மக்களால் தொடுக்கப்பட்ட வர்க்கப் போராட்டம் அதிகமான தூண்டு விசையைப் பெற்றுள்ளது.

சமீப காலத்தில் பரந்த செயல் வினையுடைய பண்பு மாற்றங்கள் ஏகாதிபத்தியத்தின் சமூக-பொருளாதார, அரசியல் வளர்ச்சியிலும் கூட ஏற்பட்டுள்ளன.

## முதலாளித்துவத்தின் பொருளாதார இன்னல்கள்

1974 முதல் 1976ம் ஆண்டு முடிய முதலாளித்துவ உலகம் போருக்குப் பிற்பட்ட காலத்தில் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. இதனுடைய முக்கிய பண்புக் கூறு, ஆற்றல், கச்சாப் பொருள்களின் நெருக்கடி, இயற்கைச் சூழ்நிலை நெருக்கடி, பண நெருக்கடி, அரசு-ஏகபோக ஒழுங்கு முறை நெருக்கடி, நகர்புற

நெருக்கடி, இதற்கு முன்பு இல்லாத பணவீக்க வளர்ச்சி போன்ற பல கட்டமைப்பு நெருக்கடிகளுடன் அதீத உற்பத்தி நெருக்கடி ஒரே காலத்தில் நேரிட்டதாகும்.

பணவீக்கம் இன்று முதலாளித்துவத்தின் நீண்ட நாளைய நோயாக மாறியுள்ளது. பணவீக்கத்தின் அளவு மிகக் கூர்மையாக வளர்ந்துள்ளது. விலைகள் மிக வேகமான விகிதத்தில் உயர்ந்துள்ளன.

1950களில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் விலைகள் சராசரியாக 2 முதல் 4 சதவீதம் உயர்ந்துள்ளன. 1960களில் அவை கிட்டதட்ட 3 முதல் 5 சதவீதமாகவும், 1970களில் 10 முதல் 15 சதவீதமாகவும் 20 சதவீதமாகவும் கூட உயர்ந்துள்ளன. 1970 முதல் 1981 முடியவுள்ள கால கட்டத்தில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் விலைகள் சராசரியாக 130 சதவிகிதம் அதிகரித்தன. பணவீக்கக் கோடு செங்குத்தாகப் போய்க் கொண்டிருக்கிறது.

பணவீக்கத்தின் நீண்ட நாளைய குணும்சம், அதனுடைய வீச்சு, அதனுடைய வளர்ந்து வரும் வேகம் ஆகியவற்றை எல்லா வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிலும் நாம் பார்க்க முடியும். ஏகாதிபத்திய மூன்று மையங்களில் ஜப்பான் தான் மிகவும் பணவீக்கத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாகும். அதற்கு அடுத்தப்படியாக மேற்கு ஐரோப்பா பாதிக்கப்பட்டது. பணவீக்கமானது தற்காலத்து ஏகாதிபத்திய மையங்களை மட்டுமல்லாமல் வளரும் நாடுகளையும் பாதித்திருக்கிறது.

1970ம் ஆண்டுகளில் முக்கியமாக, மிகவும் கூர்மையாகிவிட்ட ஆற்றல், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் நெருக்கடி முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பெரும் கஷ்டங்களுக்குக் காரணமாயிற்று. எரிபொருள், ஆற்றல், பிற கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் தட்டுப்பாடு, அவற்றின் அதிகமான விலை ஆகியவை ஓரளவு, முதலாளித்துவ நாடுகளின் உள் வளர்ச்சியின் முரண்பாடுகளின் விளைவாகும். இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால், ஆற்றல் மற்றும் கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் நெருக்கடிகள் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கட்டமைப்பின் நெருக்கடியாகும். இந்த நெருக்கடி, சமமற்ற பொருளாதார வளர்ச்சி,

கழுத்தறுக்கும் போட்டி, உபரி மதிப்பை உற்பத்தி செய்தல், விலையாக்கல் ஆகியவற்றைப் பற்றிய முதலாளித்துவத்தின் பிரதான விதி ஆகியவற்றுல் தோற்றுவிக்கப் பட்டது.

நவீன காலனி ஆதிக்க முறைகளால் ஏகாதிபத்தியம் விருத்தி செய்ய முயற்சித்த முன்னேய காலனி நாடுகளின் எரி பொருள்கள் மற்றும் கச்சாப் பொருள்களின் வளங்களைச் சுரண்டும் பழைய முறை இப்பொழுது நொருக்கப்பட்டிருக்கிறது.

இப்படியாக, ஏகாதிபத்திய நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் கோணத்திலிருந்து பார்த்தால், ஆற்றல் மற்றும் கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் நெருக்கடியை இத்தகைய உறவுகளின் நெருக்கடி என்றும், முதலாளித்துவச் சுரண்டல் முறையின் தகர்வு என்றும், மக்கள் தங்களுடைய தேசிய, சமூக விடுதலைக்காக உறுதியாகப் போராடிய போராட்டத்தின் இயல்பான விளைவு என்றும் விவரிக்கலாம்.

ஏகாதிபத்திய ஏகபோகங்கள், அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பு ஆகியவை, மாறிய நிலைமைகளில் கூட வளரும் நாடுகளின் பொருளாதாரத்தின் மீது தங்களுடைய தாக்குதலைத் தொடர்கின்றன. அவைகள் தங்களை வளப்படுத்திக் கொள்ள, எரிபொருள்கள் மற்றும் கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் விலையேற்றத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. தொழில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் செய்பொருள்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார நாசத்திற்குக் காரணமாயிருந்த, இருக்கும் உலக முதலாளித்துவ வாணிபத்தில் ''விலை கத்திரிக் கோல்களை'' ஒழிக்கும் வளரும் நாடுகளின் நம்பிக்கை மாயத் தோற்றமாக மாறிக் கொண்டிருக்கிறது.

ஐ. நாவின் புள்ளிவிவரங்களின்படி 1975 முதல் உலக மார்க்கெட்டில் விலைகளின் விகிதாச்சாரம் மீண்டும் வளரும் நாடுகளுக்குச் சாதகமற்றதாக உள்ளது.

எரிபொருள் மற்றும் கச்சாப் பொருள் வளங்களைப் பற்

றிய முதலாளித்துவ ஏகபோகங்களின் சுரண்டும் கொள்கை வளரும் நாடுகளால் கடுமையாக எதிர்க்கப்படுகிறது. சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும், ஒவ்வொரு நாடும் அதனுடைய சொந்த வளங்களின் மீதும் அவற்றைப் பயன்படுத்துவதின் மீதும் பயனுள்ள கட்டுப்பாட்டை நிறுவவும் அன்னிய நாட்டு கார்ப்பரேஷன்களை கட்டுப்படுத்தவும் உள்ள உரிமையை தொடர்ந்து பாதுகாத்து வருகின்றன.

## இயற்கைச் சூழ்நிலை நெருக்கடி

1970களில் தன்னிச்சையானதும் கொள்ளையடிக்கும் பாங்குடையதுமான இயற்கை வளங்களைச் சுரண்டல், இயற்கை சூழ்நிலையை அசுத்தமாக்குவது அதிகரித்துக் கொண்டே இருத்தல் போன்றவை, முதலாளித்துவ நாடுகளை, இது வரை இல்லாத இயற்கைச் சூழ்நிலை நெருக்கடி அச்சுறுத்தலுடன் எதிர்நோக்கின. இயற்கைச் சூழ்நிலை நெருக்கடி என்பது மனித வரலாற்றில் தவிர்க்க முடியாத விளைவாகும் என்று பூர்ஷ்வா விஞ்ஞானிகள் அறிவிக்கின்றனர். இந்த நெருக்கடி சமூக-பொருளாதார உறவுகளைச் சார்ந்ததல்ல என்றும் கூறுகின்றனர். அதற்கு மக்கள் தொகைப் பெருக்கம் அல்லது மனிதனின் ''கருவிலேயே உருவான கொடுமை'' அல்லது மனிதன் ''மோசமாக வளர்க்கப்பட்டது'' என பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. சமீபத்தில் இயற்கைச் சூழ்நிலை நெருக்கடிக்கு விஞ்ஞான-தொழில் நுணுக்கப் புரட்சி பொறுப்பு என்று கூறப்படுவது மேலும் மேலும் புதுப்பாணியாகக் கருதப்பட்டது.

எதார்த்தத்தில் இந்த நெருக்கடியானது தொழில் நுணுக்க நெருக்கடி அல்ல. ஆனால் சமூக-பொருளாதார நெருக்கடியாகும். ஏனெனில் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயான உறவுகள் சமூக உறவுகளாகும். விஞ்ஞான-தொழில் நுணுக்க முன்னேற்றத்தை இலாபம் பெறுவதை நோக்கியும் மனிதனையும் இயற்கையையும் சுரண்டுவதை நோக்கியும் திருப்புகிற சமூக அமைப்பு இயற்கைச் சூழ்நிலை நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும்.

சமீபத்தில் ஏகபோகங்களும் பூர்ஷ்வா அரசும் இயற்கைச்

சூழ்நிலைச் சங்கடங்களை மட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்து வருகின்றன. ஆனால் தனியார்-சொத்து குணும்சமுடைய கொள்கை அவற்றின் நடவடிக்கைகளைப் பயனற்றதாக ஆக்கிவிடுகிறது. அது மேலும் இயற்கைக்கு அதிக தீங்கு இழைக்கிறது.

இது முக்கியமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தெளிவாகத் தெரிகிறது. அமெரிக்க நிபுணர்களின் மதிப்பீட்டின்படி உலகத்தில் சுமாராகப் பாதி அளவு அசுத்தமடைந்திருப்பதற்கு அமெரிக்கா தான் பொறுப்பாகும். அங்கே ஒவ்வொரு ஆண்டும் 130 கோடி டன்கள் பண்ணை கழிவுப் பொருள்கள், 100 கோடி டன்கள் சுரங்கக் கழிவுப் பொருள்கள், 35 கோடி டன்கள் உணவு கழிவுப் பொருள்கள், கழிவு நீர், 17,2 கோடி டன்கள் நச்சுப் புகை, 1,8 கோடி டன்கள் மோட்டார் கார்களின் பயனற்றத் துண்டுகள் ஆகியவை சேருகின்றன. காற்று அசுத்துப்படுவதால் நேரடியான நாசம் (வியாதி மற்றும் இயற்கைச்சூழ்நிலைக்கு விரும்பத்தகாத விளைவுகளின் மூலம் ஏற்பட்ட இழப்புகள் நீங்கலாக) அமெரிக்காவில் 1976ல் 1,800 கோடி டாலர்களாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.1978ல் அது 2,500 கோடி டாலர்களை எட்டியது.

ஜப்பானில் இயற்கை சூழ்நிலை அசுத்தமானது அச்சுறுத்தும் விகிதாச்சாரத்தை அடைந்துள்ளது. 1974ல் ஜப்பானிலுள்ள சில மாவட்டங்களைப் பார்வையிட்ட பிறகு ஜப்பானிய விஞ்ஞானிகளின் குழு ஒன்று சிறு வெளியீடு ஒன்றை பிரசுரித்தது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: ''தொழில் துறை இடங்களும் நகரங்களும் புற்று நோய் வளர்ச்சியைப் போல் ஜப்பான் முழுவதும் மிகுதியான அளவில் பரவி கொண்டிருக்கின்றன. அதன் விளைவால் சிறு பாழடைந்த இடங்கள் மிகப் பெரிய பரப்புகளாக வளர்ச்சியடைகின்றன. இப்பொழுது நாடு முழுவதும் பரவியுள்ளன. உண்மையில் ஜப்பான் ஒரு ஆபத்தான நிலையில் உள்ளது. மிகப் பெரிய ஒருங்கிணைக்கப்பட்ட ஆலைகள், காடுகளைப் போன்ற அவற்றின் அடர்த்தியான புகைமண்டலம் ஆகியவை அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் இன்றைய செருக்கான வெற்றிக்கு அடையாளமாகும்.''

இயற்கைச் சூழ்நிலை அசுத்தம் என்பது மேற்கு ஐரோப்பா மற்றும் முதலாளித்துவ உலகில் உள்ள பிற நாடுகள் ஆகியவற்றில் மிகக் கூர்மையான பிரச்சினையாக மாறியுள்ளது.

ஏகாதிபத்திய ஏகபோகங்கள் அதை எதிர்த்துச் சமாளிப்பதற்காக ''அசுத்தமான'' தொழில் துறைகளை வளரும் நாடுகளுக்கு மாற்றி இயற்கைச் சூழ்நிலையை அசுத்தமாக்குவதை விரிவுபடுத்துகின்றன.

இயற்கைச் சூழ்நிலை நெருக்கடி விரிவடைய விரிவடைய அரசு-ஏகபோக அமைப்பு, உழைக்கும் மக்களை அதன் பாரத்தைத் தாங்கும்படிச் செய்ய முயற்சி செய்கிறது.

இயற்கைச் சூழ்நிலை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவது மட்டுமல்ல அவற்றைக்குறைக்கவும் பூர்ஷ்வா அரசால் ஒன்றும் செய்ய முடியாது என்ற உண்மை முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அரசு-ஏகபோக ஒழுங்கு முறை நெருக்கடியின் ஒரு அடையாளமாகும். அது, தற்போதைய கட்டத்தில் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் வளர்ச்சியில் பண்பு மாற்றங்களைக் குறிக்கிறது.

ஒழுங்கு முறை நெருக்கடி, நகர்புற நெருக்கடியில் கூட வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக இந்த நெருக்கடி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிகவும் கூர்மையாக உள்ளது. பிற முதலாளித்துவ நாடுகளிலும் இது தெளிவாகத் தெரிகிறது.

சமீபத்தில் முதலாளித்துவப் பொருளாதாரத்தைத் தாக்கிய பல்வேறு நெருக்கடிகள் இதுவரை இல்லாத நிகழ்வு பொருத்தமானது, அதனுடைய வளர்ந்து கொண்டு இருக்கும் நிலையற்ற தன்மையையும் அதில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் முக்கியமான பண்பு மாற்றங்களையும் குறிப்பதாகும்.

## சித்தாந்த-அரசியல் நெருக்கடி

பூர்ஷ்வா சமுதாயத்தில் அரசியல், சித்தாந்தம், கலாசாரம் ஆகியவற்றில் முக்கிய மாற்றங்கள் அதைப் போல் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை 1970களில் ஏற்பட்ட மிக ஆழமான ஒழுக்க-அரசியல் நெருக்கடியால் சாட்சி கூறப்படுகின்றன. மரபு வழி பூர்ஷ்வா அரசியல் நிறுவனங்களின் ஒரு நெருக்கடி இது. அவை மதிப்பை இழந்து கொண்

டிருப்பது அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. வளர்ந்து வரும் ஊழல், மிக அதிகமான குற்ற விகிதாச்சாரம், தாழ் வான ஒழுக்கத் தரம் ஆகியவற்றின் மூலம் அந்த நெருக் கடி தன்னை வெளிப்படுத்துகிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் தற்கால கட்டத்தையும், அதன் அடிப்படையில் தொடங்கிய பூர்ஷ்வா சமுதாயத்தின் நெருக்கடியையும் 1976ல் பெர்லினில் நடை பெற்ற ஐரோப்பிய கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாடு பரிசீலனை செய்தது. மக்களின் தேவை கள் மற்றும் சமூக முன்னேற்றம், ஜனநாயக அரசியல் வளர்ச்சி ஆகியவற்றுடன் முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார, சமூக கட்டமைப்பு மோதுவது அதிகரித்து கொண்டிருக்கிறது என்ற முடிவிற்கு அந்த மாநாடு வந்தது.

## 4. உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கும் முதலாளித்துவத்தின் இன்றைய வரலாற்றுப் போக்கும்

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய லெனினின் தத்துவம், குறிப்பாக வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடத்தைப் பற்றிய அவருடைய போதனை, முதலாளித்துவ திரட்சியின் வரலாற்றுப் போக்கு, முதலாளித்துவத்தின் தவிர்க்க முடி யாத புரட்சிகரமான தகர்வு ஆகியவற்றைப் பற்றிய மார்க் சின் போதனைகளின் நேரடியான ஒரு தொடர்ச்சியாகும்.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி, மற்ற நாடு களில் சோஷலிசப் புரட்சிகள், உலக சோஷலிச அமைப்பு நிறுவப்பட்டது, உலகம் முழுவதும் தேசிய விடுதலை இயக் கம், தொழிலாளர் இயக்கம் ஆகியவற்றின் வளர்ச்சி ஆகியவை, முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத தகர்வு, சோஷலிசத்தின் வெற்றி ஆகியவற்றினைப் பற்றிய மார்க் சிய-லெனினிய போதனையின் உண்மையைப் பறை சாற்று கின்றன.

இப்பொழுது நடப்பு புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் உள்ளடங்கிய மூன்று முக்கிய அம்சங்களாவன: வெற்றி பெற்ற சோஷலிசத்தை சேர்ந்த நாடுகள், வளர்ச்சியுற்ற

முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம், வளரும் நாடுகளின் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் ஆகியவை.

உலக சோஷலிச அமைப்பு, சர்வதேச தொழிலாளி வர்க்கம், உலகத்தின் எல்லா முற்போக்கு சக்திகள் ஆகியவற்றின் பிரதான ஒரு சாதனையாகும். சோஷலிச முகாமின் நாடுகள் அதிக வலிமை அடைய அடைய உலகத்தின் புரட்சிகர புனர் அமைப்பில் அதன் பங்கு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

மனித குலம் அனைத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்க, சோஷலிச நாடுகள் சமாதானத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. மேலும் அவை வெவ்வேறான சமூக அமைப்பு கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை உறுதியாக அமுல்படுத்தவும் போராடிக் கொண்டிருக்கின்றன.

இப்போராட்டம், உலகப் புரட்சிகர ஏகாதிபத்திய-எதிர்ப்பு இயக்கம் முழுவதற்கும் சிறந்த வாய்ப்புகளை ஏற்பாடு செய்கிறது. 1976ம் ஆண்டு நடைபெற்ற பெர்லின் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டதைப் போல், சமாதான சகவாழ்வு கொள்கை, நாடுகளின் சமூக அமைப்பை அந்நாடுகளிடையே செயல் ஊக்கமுடைய ஒத்துழைப்பு, சர்வதேச பதட்ட நிலை தணிவு ஆகியவை ஒவ்வொரு நாட்டு மக்களின் நலன்களுடன், மனித குல முன்னேற்றத்துடன் ஒத்திருக்கின்றன. எந்த நாட்டிலும் அரசியல் சமூக அந்தஸ்து நிலையைக் குறிப்பதற்கு மாறாக, அவை தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா ஜனநாயக சக்திகள் ஆகியவற்றால் தொடுக்கப்பட்ட போராட்டத்திற்காகவும் ஒவ்வொரு மக்களும் சுதந்திரமாக அவர்களுடைய சொந்த வளர்ச்சிப் பாதையை தேர்ந்தெடுக்கவும், அப்பாதையில் செல்லவும் அவர்களுக்கே உரிய உரிமையை நிலையாக நிறுவுவதற்காகவும் ஏகபோக ஆதிக்கத்தை எதிர்த்து சோஷலிசத்திற்காகப் போராடுவதற்காகவும் மிகச்சிறந்த சாத்தியமான நிலைகளை உருவாக்கிக் கொடுக்கின்றன.

முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம் புதிய நிலைகளில், சிறந்த வாழ்க்கைத் தரத்திற்காகவும்,

பொருளாதார நெருக்கடியின் பாதகமான விளைவுகளை எதிர்த்தும் பரந்த செயல் வினைப்பாட்டுடைய சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்காகவும், ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்திற்காகவும் வீரமுள்ள போராட்டம் ஒன்றை தொடுத்துக் கொண்டிருக்கிறது. போருக்குப் பின் நிகழ்ந்த வேலை நிறுத்தங்களின் அளவு, வீச்சு ஆகியவற்றில் 1970ஆம் ஆண்டுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

மற்ற சமூகப் பகுதியினர்களும் ஏகபோக ஒடுக்குமுறையை எதிர்த்து தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி அணி திரள்வது அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. ஒரு பரந்த ஏகபோக-எதிர்ப்பு அணி உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மக்களின் அரசியல் உணர்வை மேலும் வளர்க்கவும், அவர்கள் ஸ்தாபன ரீதியாக திரள்வதை வளர்க்கவும், சோஷலிசத்திற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்தவும் வசதி செய்து தருகிறது.

இந்தப் போராட்டத்தின் முன்னணியில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்களின் கட்சிகள் ஆகியவை சென்று கொண்டிருக்கின்றன. சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் இன்றைய மிக முக்கியமான அரசியல் சக்தியாக மாறிக் கொண்டிருக்கின்றது.

உலக புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் மூன்றுவது பெரிய சக்தியாக இருப்பது தேசிய விடுதலை இயக்கமாகும்: அது சமீபத்திய பத்து ஆண்டுகளில் மிகப் பெரிய வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தை தொடுக்கும் பொழுது வளரும் நாடுகள், சோஷலிச முகாம், சர்வதேச தொழிலாளர் இயக்கம் ஆகியவற்றின் பலம், அந்தஸ்து, ஆதரவு ஆகியவற்றைச் சார்ந்துநிற்கின்றன.

இன்றைய மகத்தான புரட்சிகர சக்திகளின் ஒற்றுமை, அவற்றின் கூட்டணி வலுப்படுவது, அவற்றின் கூட்டுப் போராட்டத்தின் வளர்ச்சி ஆகியவை, உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கைத் துரிதப்படுத்த, முதலாளித்துவ அமைப்பு, சுரண்டல், ஒடுக்குமுறை, ஆகியவற்றை ஒழிக்க, சமாதானம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகியவை உலகம் முழுவதும் வெற்றி பெற மிகத் தேவையான நிபந்தனைகளாகும்.

அத்தியாயம் 11

# கம்யூனிச உற்பத்தி முறையும் அதனுடைய இரு கட்டங்களும்

கம்யூனிச உற்பத்தி முறை என்பது சமூக உற்பத்தியின் அமைப்பின் மிக உயர்ந்த சமூக-பொருளாதார வடிவமாகும். அதன் வளர்ச்சிக்கு ஒழுங்கான பொருளாதார பண்புக் கூறுகள் உண்டு. கம்யூனிச சமுதாயத்தின் அரசியல் பொருளாதாரத்தில் அவை ஆராயப்படுகின்றன. அரசியல் பொருளாதாரத்தின் இந்தப் பிரிவு, பொதுவாக அரசியல் பொருளாதாரத்தைப் போல், மார்க்சியம்-லெனினியத்தை நிறுவிய மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் வளர்க்கப்பட்டு, மார்க்சிய-லெனினிய கட்சிகளின் தத்துவ, நடைமுறை நடவடிக்கைகளாலும் புதிய கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவதில் ஈடுபட்டிருக்கும் லட்சக்கணக்கான உழைப்பாளிகளின் போராட்டத்தாலும் செழுமைப்படுத்தப்பட்டது.

கம்யூனிச சமுதாயத்தின் அரசியல் பொருளாதாரம், முதலாளித்துவத்தைவிட சோஷலிசமும், கம்யூனிசமும் அளவு கடந்த உயர் தன்மையுடையவை என்பதை தத்துவ ரீதியாக உறுதிப்படுத்தி உழைக்கும் மக்களுக்கு விளக்குகிறது. அது அவர்களை ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்காக அணி திரட்டுகிறது; மனித குலத்தின் உயர்ந்த குறிக்கோளான கம்யூனிசத்தின் வெற்றிக்காக அணி திரட்டுகிறது. சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றைக் கட்டுவதற்கான பொருளாதார விதிகளைப் பற்றிய அறிவை அவர்களுக்குப் போதிக்கின்றது. இந்த அறிவு இந்த நிகழ்ச்சிப் போக்கை அதில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளச் செய்கிறது.

கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டமான சோஷலிசத்தைப் பற்றி விவரிக்கும் அரசியல் பொருளாதாரத்தின் பகுதி தத்துவ ரீதியாக மிக நன்றாக விரிவாக்கப்பட்டும், நடைமுறையில் சோதிக்கப்பட்டும் உள்ளது. இக்காரணத்தால் கம்யூனிச சமுதாயத்தின் அரசியல் பொருளாதாரம் சோஷலிசத்தின் அரசியல் பொருளாதாரம் என்றழைக்கப் படுகிறது.

## 1. கம்யூனிச உற்பத்தி முறையின் பொது பண்புக் கூறுகள்

கம்யூனிச உற்பத்தி முறையானது கம்யூனிச சமுதாயத்தின் வளர்ச்சி முழுவதிலும் அதனுடைய உள்ளடக்கத்தை நிர்ணயத்துக் கொண்டு நிலவுகிறது. சமுதாயமே இரு கட்டங்களையும் கடந்து செல்லுகிறது. அவையாவன: தாழ்ந்த கட்டமான சோஷலிசம், உயர்ந்த கட்டமான கம்யூனிசம். கம்யூனிச உற்பத்தி முறையானது இடை விடாது மாறிக் கொண்டும் மேம்பட்டுக் கொண்டும் இருக்கிறது. ஆனால் அதற்கு சில பொதுவான பண்புக் கூறுகள் எப்பொழுதும் உள்ளன.

### உற்பத்திச் சக்திகளின் பொது பண்புகள்

கம்யூனிச சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் பெருமளவிலான சமுதாயமயமாக்கப்பட்ட உற்பத்தியில் ஒழுங்குப் படுத்தப்படுகின்றன. தேசியப் பொருளாதாரத்தின் எல்லா கிளைகளிலும் அவை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன. மிகச் சமீபத்திய விஞ்ஞான, தொழில்நுணுக்கச் சாதனைகள் எல்லாவற்றையும் அவை உட்கிரகித்து மக்களுடைய நலன்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. கம்யூனிச சமுதாயத்தில் இயற்கை மற்றும் சேர்க்கப்பட்ட பொருளாயத, உழைப்பு வளங்களை சாத்தியமாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான எல்லா நிலைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. உற்பத்திச் சக்திகள் ஒரு திட்டத்தின்படி வளர்ச்சி

யடையச் செய்யப்படுகின்றன. அந்தத் திட்டம், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, மேம்பாடு உள்பட சமூக உற்பத்தியின் எல்லா நிகழ்ச்சிப் போக்குகளையும் முன்னதாக தீர்மானிக்கிறது. கம்யூனிச சமுதாயத்தில், புதிய தொழில் நுணுக்கச் சாதனங்களை பயன்படுத்துவதற்கு முதலாளித்துவத்திற்குரிய சமூகப்-பொருளாதாரத் தடைகள் அழிக்கப்படுகின்றன. ஒரு முதலாளி, ஒரு புதிய தொழில் நுணுக்கம் மாற்றீடு செய்யும் தொழிலாளர்களின் கூலியை விட குறைவாகுமானுல், அந்த முதலாளி அதைப் பயன்படுத்துகிருர். கம்யூனிச சமுதாயத்தில் கூலிகளைக் குறைக்காமல், உழைப்பின் (உற்பத்திச் சாதனங்களில் அல்லது மனித சக்தியில் உள்ளடங்கியுள்ள உழைப்பின்) மொத்தச் செலவைக் குறைப்பதும், ஆரோக்கியமற்ற வேலைகளில் மனிதனுக்குப் பதிலாகத் தொழில்நுணுக்கத்தைப் பயன்படுத்திஞல் வேலை சுலபமாகிறது என்ற உண்மையும், மற்றும் இவை போன்றவையே கம்யூனிச சமுதாயத்தில், பொதுவாக உற்பத்திச் சக்திகளை அபிவிருத்தி செய்தல், ஒரு புதிய தொழில் நுணுக்கத்தைப் புகுத்துதல் ஆகியவற்றின் பொருளாதாரச் சாத்தியத்தை மதிப்பிடும் அளவுகோலாகும். மார்க்ஸ் பின்வருமாறு எழுதினுர்: ''ஒரு பூர்ஷ்வா சமுதாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பை விட கம்யூனிச சமுதாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு மிக வேறுபாடானது.''* கம்யூனிச சமுதாயத்தில், உற்பத்திச் சக்திகளின் பொருளாயத மற்றும் மனித அம்சங்களின் ஒரு பூரண இசைவு தோன்றி தொடர்ந்து வளர்கிறது. விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் போது மேம்படைந்த இயந்திரங்களைப் பயன்படுத்த, தொழிலாளர்களுக்குக் கலாசார, தொழில்நுணுக்கப் பயிற்சி ஆகியவற்றின் உயர்ந்த தரம் தேவைப்படுகிறது. இதை அடைவதில் கம்யூனிச சமுதாயம் முழு வசதிகளையும் செய்து தருகிறது. உதாரணமாக, சோவியத் யூனியனில் மக்கள் தொகையில் பொருளாதாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களில் 78 சதவீதம் உயர் கல்வி அல்லது செகண்டரிக் கல்விப் பெற்றிருப்பவர்

---

* K. Marx, *Capital*, Vol. 1, p. 371.

கள். அதே நேரத்தில், மக்களின் பொதுக் கல்வி, கலாசாரம், தொழில்நுணுக்கம் ஆகியவற்றின் தரத்தின் சீரான வளர்ச்சி யானது உற்பத்திச் சக்திகளின் பொருளாயத அம்சங்களின் வளர்ச்சி, விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றம் ஆகிய வற்றின் மீது ஒரு குறிப்பிட்ட தாக்கத்தை உண்டாக்கு கிறது. உயர் கல்வியறிவுடைய நிபுணர்கள், நவீன உற்பத் தியை நடத்துதல் மட்டுமல்லாமல் அதைத் தொடர்ந்து மேம்பாடு அடைய வெற்றிகரமாக செய்கிறார்கள். இதன் விளைவு ஓர் உயர்ந்த சக்திவாய்ந்த சமூக உற்பத்தியாகும்.

## உற்பத்தி உறவுகளின் பொது பண்புக் கூறுகள்

கம்யூனிச சமுதாயத்தின் வளர்ச்சி முழுவதிலும் உற் பத்தி உறவுகள் பொதுவான முக்கியமான பண்புக் கூறுகளைத் தக்கவைத்துக் கொள்ளுகின்றன. அவைகளில் பிரதானமான ஒன்று உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமை மேலா திக்கம் செய்வதாகும். முதலாளித்துவ தனியார் உடைமை போலன்றி, பொதுவுடைமையானது உற்பத்திச் சாதனங் கள் உழைக்கும் மக்களுக்கே சொந்தம், ஒரு சில சுரண்டும் முதலாளிகளுக்கு அல்ல என்று குறிக்கிறது. உழைக்கும் மக் கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுப் பொது பொருளாதாரத்தை அமைக்கின்றனர். கம்யூனிச சமுதாயத்தில் பொருளாயத நன்மைகளை மற்ற மக்களின் உழைப்பின் செலவில் யாரும் தனதுரிமையாக்க முடியாது. இத்தகைய பொருளாயத நன்மைகள் அவற்றை செய்தவர்களான உழைக்கும் மக் களுக்கே சொந்தம்.

உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமையானது, உற் பத்தி உறவுகளின் முழு அமைப்பின் புதிய குணும்சத்தை, அதாவது எந்தவித சுரண்டலிலிருந்தும் விடுதலைப் பெற்றுள்ள தொழிலாளர்களிடையே நட்பு முறையிலான ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகிய குணும்சத்தைத் தீர்மானிக்கிறது.

கம்யூனிச சமுதாயத்தில் உற்பத்தி உறவுகள், தங்களுக் கும் தங்கள் சமுதாயத்திற்குமாக உழைக்கும் உறுப்பினர் களின் உழைப்பின் குணும்சத்தில் வெளிப்படுகின்றன. சுதந் திரமான ஆக்கப்பூர்வமான உழைப்பு நிலவுகிறது. தங்

களுடைய வாழ்க்கையை அதிக வசதிகளுடையதாக்கவும் அதிக ஆர்வமுடையதாக்கவும் பலவிதமானதாக்கவும் தங்கள் சொந்த நாட்டை அதிக சக்தியுடையதாக்கவும் தங்களுடைய முழு வலிமையையும், திறமையையும் கஞ்சத்தனம் செய்யாமல் அர்ப்பணித்து மக்கள் உழைக்கிறார்கள். ஒவ்வொரு பிரஜைக்கும் உழைப்பதற்கான உரிமை வெறுமனே அளிக்கப்படவில்லை, உற்பத்தி உறவுகளின் தன்மையாலேயே அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மனித குல வரலாற்றில் உழைக்கும் மக்களின் தேவைகளின் நிறைவு சமூக உற்பத்தியின் இயக்கும் சக்தியாக மாறியுள்ளது. இந்த அடிப்படையில், சமுதாயத்திலுள்ள எல்லா உறுப்பினர்களின் பொருளாதார நலன்களிலும் ஓர் ஒற்றுமை தோன்றுகிறது.

ஒரு திட்டமிட்ட சமூக உற்பத்தியின் வளர்ச்சி சோஷலிசம் கம்யூனிசம் ஆகியவற்றில் உள்ள உற்பத்தி உறவுகளின் ஒரு விசேஷமான பொதுப் பண்பாகும். நாட்டின் தேசிய பொருளாதாரம், முன்னதாகவே இடப்பட்ட ஒரு திட்டத்தின்படி அமைக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது என்பது பொருளாகும்.

மக்கள் உடைமையின் ஆதிக்கம், தேசிய பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சி ஆகியவை உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கையும் அதில் பங்கெடுப்பவர்களின் உழைப்பையும் நேரடியாக சமூகத் தன்மையுடையதாக்குகின்றன. ஒவ்வொரு தொழிலாளரின் முயற்சிகளும், ஒரு தொழிலாளர்கள் குழுவின் முயற்சிகளும் சமுதாயத்திற்குத் தேவையான பொருளாயத பொருள்களையும் வசதிகளையும் உருவாக்கவும், சமூக தேவையைத் திருப்திப்படுத்தவும் உற்பத்தியில் திட்டமிடப்பட்டுச் செலவிடப்படுகின்றன. அதாவது அவை நேரடியாக மொத்த சமூக உழைப்பில் சேர்க்கப்படுகின்றன.

## 2. கம்யூனிச உற்பத்தி முறையின் வளர்ச்சியில் இரு கட்டங்கள்

சோஷலிச சமூக உற்பத்தி என்பது கம்யூனிச உற்பத்தி முறையின் முதலாவதான அல்லது தாழ்ந்த கட்டமாகும். கம்யூனிச உற்பத்தி முறைதான் மிக உயர்ந்த கட்டமாகும்.

அவற்றின் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகியவை பக்குவமடைந்ததின் அளவில் ஒன்றுடன் ஒன்று வேறுபடுகின்றன. இந்த ரீதியில்தான் லெனின் சோஷலிசத்தை பூர்த்தி பெருத கம்யூனிசம் என்று கூறினர்.

## சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளம்

சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளமானது,மக்கள் நலன்களுக்காக வளர்ச்சியுற்றும் பொருளாதாரத்தின் எல்லா துறைகளிலும் நிலவியும் உள்ள பெருமளவிலான திட்டமிடப்பட்ட இயந்திர உற்பத்தியாகும்.

சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளமானது கம்யூனிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளத்தைக் கட்டுவதற்கான இன்றியமையாத ஒரு முன் தேவையாகும். இந்த அடித்தளம் சமூக உற்பத்தியின் பொருளாயத மற்றும் ஸ்தாபன ரீதியான அடிப்படைகளின் வளர்ச்சியின் ஓர் உயர்ந்த கட்டமாகும்.

கம்யூனிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளமானது, நாட்டை முழுவதுமாக மின்சாரமயமாக்குவது, மிகவும் பரந்த அளவிலான புது விதமான ஆற்றலைப் பயன்படுத்துவது, உற்பத்தியை முழுமையாக இயந்திரமயமாக்கல் தானியங்கி இயந்திரங்களால் உற்பத்தி செய்வதை வளர்த்தல், உற்பத்தியில் இரசாயன சாதனைகள் புகுத்தப்படுத்துதல், மிகவும் உயர்ந்த தரமுடைய, சிக்கனமான, உயர்ந்த உற்பத்தி வாய்ந்த உழைப்பு கருவிகளையும் பொருள்களையும் பலனுள்ள முறையில் பயன்படுத்துதல், போன்றவைகளைக் குறிக்கிறது. அதற்குரிய சமூக உற்பத்தி முறையின் அமைப்பு சிறந்ததாக ஒருமுனைப்படுத்துதல் உற்பத்தியை விவேகமுள்ள தனிசிறப்புத்தன்மையுடையதாக்குவது, ஒத்துழைப்பு ஆகியவற்றுல் குணும்சப்படுத்தப்படுகிறது. தங்களுடைய திறமையையும் அறிவையும் தொடர்ந்து விருத்தி செய்து கொண்டிருக்கும் மிக உயர்ந்த தரமுள்ள கல்வியறிவுடைய தொழிலாளர்களால், தொடர்ந்து முன்னேறி கொண்டிருக்கும் உற்பத்திச் சாதனங்கள் நேரடியாகப் பயன்படுத்தப்படு

கின்றன. முதலாளித்துவத்தின் கீழ் இருந்த உழைப்பின் உற்பத்தித் திறனைவிட அதிகமான உற்பத்தித் திறனை அடைவதற்கு இது ஓர் அடிப்படையாகும். இது கம்யூனிசத்தின் வெற்றிக்கு முதன்மையான முக்கியத்துவமாகும்.

### சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் கீழ் மக்கள் உடைமையின் வடிவங்கள். சமுதாயத்தின் சமூகக் கட்டமைவின் வளர்ச்சி

சமுதாயத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளத்தின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்தி உறவுகளில் கூட மாற்றங்கள் நடைபெறுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக உற்பத்திச் சாதனங்களின் உடைமையின் உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

சோஷலிசத்தின் கீழ், உற்பத்திச் சாதனங்களின் மக்கள் உடைமை இரு வடிவங்களில் உள்ளது. அவையாவன: தேசிய அரசு உடைமையும் (மொத்த மக்களுக்கும் சொந்தமானது), கூட்டுப்பண்ணை, கூட்டுறவு உடைமையும் (கூட்டுக்குழுவினருக்கு சொந்தமானது). சமுதாயம் முழுமைக்கும் உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திப் பொருள்கள் சொந்தம் என்று முதல் வடிவம் குறிக்கிறது. சமுதாயம் சோஷலிச அரசால் பிரதிநிதித்துவப்படுகிறது. இரண்டாவது வடிவம் தனிப்பட்ட கூட்டுறவு நிலையங்களுக்கு (கூட்டுப் பண்ணைகள்) உற்பத்திச் சாதனங்கள் சொந்தம் என்று குறிக்கிறது.

சோஷலிசத்தின் கீழ் போலல்லாது கம்யூனிசத்தின் கீழ் ஒரே பொதுமக்கள் கம்யூனிச உடைமை பேராதிக்கம் செலுத்தும். சோஷலிச உடைமையின் இரு வடிவங்களும், அரசு சொத்து, கூட்டுறவு சொத்து ஆகிய இரண்டின் மேம்பாடு, அவை ஒன்றுடன் ஒன்று நெருங்கி, ஒரே சீரான கம்யூனிச சொத்தாக இணைவது ஆகியவற்றின் மூலம், கம்யூனிச சொத்தாக வளர்ச்சியுறுவது நடைபெறுகிறது.

உற்பத்திச் சாதனங்களின் சோஷலிச உடைமையின் இரு வடிவங்களும் கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டத்தின் சமூக கட்டமைவைத் தீர்மானிக்கின்றன.

சோஷலிசத்தின் கீழ், தொழிலாளி வர்க்கம், கூட்டுறவு (கூட்டுப்பண்ணை) விவசாயிகளின் வர்க்கம் என்ற இரு வர்க்கங்கள் உண்டு. அத்துடன் அறிவு ஜீவிகளின் சமூக படிநிலை உண்டு. இவைகள் எல்லாம் நட்புறவுடன் கூடிய வர்க்கங்கள். அவைகளுக்கிடையே எதிரும் புதிருமான எந்தவித முரண்பாடுகளும் கிடையாது. ஏனெனில் அவற்றின் இருப்பு, உற்பத்திச் சாதனங்களின் ஒரே ஒரு தனிமாதிரியான (சமூக, சோஷலிச) உடைமையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி சாதனங்களின் ஒரே ஒரு தேசிய கம்யூனிச உடைமை என்ற அடிப்படையில் சமுதாயம் சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுவதுடன் வர்க்கங்களுக்கும் சமூக படிநிலையினருக்கும் இடையிலான பிரிவு கோடுகள் அழிக்கப்படும். சமுதாயம் வர்க்கமற்ற வளர்ச்சியின் கட்டத்தில் நுழையும்.

### உழைப்பின் மாறிய குணம்சம்

சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு சமுதாயம் முன்னேற முன்னேற சமுதாய உறுப்பினர்களின் உழைப்பின் குணம்சம் மாறுகிறது. சோஷலிசத்தின் கீழ் உழைப்பைப் பற்றிய பழைய நோக்கத்தின் தடயங்கள் இன்னமும் நிலவுகின்றன. அதை மக்கள் வாழ்க்கைக்கு நல்ல பொருள்களைப் பெறுவதற்கான ஒரு வழியாகத் தான் பார்க்கிறார்கள். அதை ஒரு இயற்கையான தேவையாக இன்னும் பார்ப்பதில்லை. இக்காரணத்தால் பொருளாயத ஊக்கம் இன்னமும் உழைப்பிற்காகக் கொடுக்கப்பட வேண்டி உள்ளது.

அதே நேரத்தில் வேலையைப் பற்றிய ஒரு புதிய நோக்கம் வளர்ச்சியுற்று கொண்டிருக்கிறது. சுரண்டலில்லாத வேலை, தனக்காக வேலை, தன்னுடைய சமுதாயத்திற்காக வேலை சமுதாயத்திலுள்ள எல்லா உறுப்பினர்களின் கௌரவமிக்கக் கடமையாக மாறிக்கொண்டிருக்கிறது. பழைய சமுதாயத்தில் இருந்ததைப் போல் சொத்து அல்லது உயர் குடி பிறப்பு ஆகியவை ஒருவருடைய சமூக அந்தஸ்தை தீர்மானிப்பது இல்லை. ஆனால் ஒரு நபரின் உழைப்புப் பங்கு அவருடைய சமூக அந்தஸ்தை

தீர்மானித்து, அவருக்கு மரியாதையும், பொதுவான மதிப்பையும் தருகிறது.

சோஷலிசத்தின் கீழ் தோன்றிய உழைப்பின் புதிய குணும்சமும், மக்கள், உழைப்பை ஒரு சமூக கடமை என்று உணர்வு பூர்வமாக நோக்குவதும் சிறுகச் சிறுக ஒவ்வொரு இடத்திலும் பரவுகின்றன. உழைப்பு கம்யூனிச உழைப்பாக மாறுகிறது. உயர்ந்த கட்டமான கம்யூனிச சமுதாயத்தில் அது மனித நடவடிக்கையின் எல்லா அம்சங்களேயும் தீர்மானிக்கிறது. லெனின் கம்யூனிச உழைப்பிற்கு மிக விரிவான விவரணம் கொடுத்தார். அவர் பின்வருமாறு எழுதினர்: ''கம்யூனிச உழைப்பு என்பதை அந்தச் சொல்லின் குறுகிய, மிகக் கண்டிப்பான பொருளில் கூறினுல், இது சமுதாயத்தின் நன்மைக்காக இலவசமாக செய்யப்படும் உழைப்பு,... பரிசை எதிர்பார்க்காமல் கொடுக்கப்படும் உழைப்பு, பரிசு என்பது ஒரு நிபந்தனே அல்லாத உழைப்பு, பொது நன்மைக்காக உழைப்பது என்பது ஒரு பழக்கமாக மாறியுள்ள உழைப்பு, பொது நலத்திற்காக உழைக்க வேண்டியதின் அவசியத்தை உணர்வது, மிக்க, ஆரோக்கியமான உயிரினமாக இருப்பதற்குத் தேவையான உழைப்பு என்று பொருள்படும்.''*

### சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் கீழ் பொருளாயத பொருள்களேயும் சேவைகளேயும் வினியோகிப்பது பற்றிய கோட்பாடுகள்

சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளின் தரமும் உழைப்பின் குணும்சங்களும் ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய வேலேக்கேற்ப'' என்ற கோட்பாட்டைச் செயல்படுத்த வேண்டியதின் அவசியத்தை உண்டாக்குகின்றன. விஷயம் என்னவெனில் சோஷலிச சமுதாயத்தில் பொருளாயத பொருள்கள் சேவைகள் இன்னமும் அபரிமிதமான நிலேயில் இல்லே. அவற்றின் உற்பத்தி ஓர் எல்லேக்கு உட்படும்.

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 30, p. 517.

எனவே தேவைக்கு ஏற்ப அவற்றை விநியோகிப்பது முடியாத ஒன்ருகும். இதற்கு மேலும் சோஷலிசத்தின் கீழ் உழைப்பிற்கு பொருளாயத ஊக்கங்கள் தேவைப்படுகின்றன. இதெல்லாம், வேலையின் அளவு, நுகர்வின் அளவு ஆகியவற்றின் மீது கடுமையான கட்டுப்பாட்டைச் சமுதாயத்தால் புகுத்த வேண்டிய அவசியத்தை செய்கிறது. பொருளாயத பொருள்கள், சேவைகள் ஆகியவற்றை, செய்து முடித்த வேலைக்குத்தக்க விநியோகிப்பது என்பதால் இந்தக் கட்டுப்பாடு செயல்படுத்தப்படுகிறது.

கம்யூனிசத்தின் கீழ், உற்பத்திச் சக்திகளின் உயர்ந்த தரம், அபரிமிதமான பொருளாயத பொருள்கள், சேவைகள், உழைப்பைப் பற்றிய கம்யூனிச நோக்கம் ஆகியவை ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கு ஏற்ப'', என்பதிலிருந்து ''ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப'' என்ற கோட்பாட்டை நிறைவேற்றச் சாத்தியமாக்குகின்றன.

### கம்யூனிசத்திற்கு மாறும் இடைக்கட்ட காலத்தில் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகளைப் படிப்படியாக சமாளித்தல்

சோஷலிசத்தில் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் தங்கியுள்ளன. பொருள்கள் பரிவர்த்தனைப்பண்டங்களாக உற்பத்தி செய்யப்படுகின்றன. பணம், பணப்புழக்கம் ஆகியவற்றின் உதவியுடன் விற்றல், வாங்குதல் மூலமாக அவை பரிவர்த்தனைச் செய்யப்படுகின்றன.

முதலாளித்துவத்திற்கு மாருக சோஷலிச சமுதாயத்தில் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் ஒரு புதிய சோஷலிச உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. பொருளாதாரம் ஒரு திட்டத்தின்படி வளர்கிறது. காப்பாற்றி வைக்கப்பட்ட உறவுகள் உற்பத்தியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

சமுதாயம் கம்யூனிசத்திற்கு மாறும் பொழுது இத்தகைய உறவுகள் அவை இருக்க வேண்டியதற்கு அவசியமான காரணங்கள் மெதுவாக அகற்றப்படுவதால் சிறுகச் சிறுக உதிர்ந்து விடும். இத்தகைய காரணங்

களைப் பற்றி ''பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள்'' என்ற அத்தியாயத்தில் விவாதிக்கப்படும். கம்யூனிசத்தில் தொழில் நிலையங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்படும். பொருளாயத பொருள்களையும் சேவைகளையும் மக்களிடையே வினியோகிப்பது விற்றல், வாங்குதல் என்பதால் செயல் படுத்தப்படுவதில்லை. ஆனால் அவை நடவடிக்கைகளின் நேரடியான பரிவர்த்தனை, இயற்கையான வினியோகம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படும். பணம், பணப் புழக்கம் என்பது தேவைப்படாது.

### சோஷலிசம் கம்யூனிசமாக மாறும் வளர்ச்சியின் முக்கிய பண்புக் கூறுகள்

சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறும் மாற்றம் சமுதாய வளர்ச்சியின் புறவய விதிகளால் ஆளப்படுகின்றது. முதல் முதலில் அது உற்பத்தி உறவுகள், உற்பத்திச் சக்தி களின் குணும்சத்துடன் ஒத்திருக்கும் விதியால் ஆளப்படு கிறது. கம்யூனிசத்தின் பொருளாயத-தொழில் நுணுக்க அடித்தளம் உருவாக்கப்பட்டவுடன் சோஷலிச உற்பத்தி உறவுகள் கம்யூனிச உறவுகளாக மாறி வளர்கின்றன. அதே நேரத்தில் மிக உயர்ந்த கம்யூனிச உணர்வைப் பெற்ற ஒரு புதிய கம்யூனிச சமுதாய மனிதன் உருவாக்கப்படுகிருன்.

கம்யூனிசத்தைக் கட்டுவது என்பது ஒரு திட்டத்தின்படி முன்நோக்கிச் செல்லுகிறது. அந்தத் திட்டம் மார்க்சிய-லெனினிய கட்சிகளால் வகுக்கப்பட்ட சமுதாய வளர்ச்சிக் கான பொருளாதாரப் போர்தந்திர அடிப்படையிலானது.

சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுவது படிப் படியாக நடைபெறுகிறது. சோஷலிசம் கம்யூனிசம் என்பன ஒரே சமுதாயத்தின் வளர்ச்சியின் இரு கட்டங்கள். அவற்றிற்கிடையே அடிப்படை வேறுபாடுகள் கிடையாது. இக்காரணத்தால் சமுதாயத்தின் தாழ்ந்த கட்டமான சோஷ லிசத்திலிருந்து உயர்ந்த கட்டமான கம்யூனிசத்திற்கு மாறு வது ஒரு பரிணும நிகழ்ச்சிப் போக்காக உள்ளது. அதே நேரத்தில் படிப்படியான மாற்றம் என்பது கம்யூனிச கட்டு மான நிகழ்ச்சிப் போக்கு மெதுவாக நடப்பதாக குறிக் காது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாருக இந்த

நிகழ்ச்சிப் போக்கு மிக இயக்க ஆற்றலையுடையது. அது நடப்பிலுள்ள விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சிக்கும் சோஷலிசத்தால் உண்டான அனுகூலங்களுக்கும் இடையிலான நெருங்கிய ஒத்த நடவடிக்கையின் கீழ் வளர்ந்து கொண்டிருக்கிறது.

## 3. வளர்ச்சியுற்ற சோஷலிசத்தின் பிரதான பொருளாதாரப் பண்புக் கூறுகள்

சோஷலிசம் கம்யூனிசமாகப் படிப்படியாக பரிணும வளர்ச்சியடைகிறது என்ருல் கம்யூனிச சமுதாயம் இடைவிடாது வளர்ச்சியுறுகிறது என்பது பொருள். அதனுடைய பிரதான கட்டங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக சோஷலிசம் அதன் வளர்ச்சியில் இரு கட்டங்களை கடந்து செல்லுகிறது. முதலாவதானது பொதுவாக சோஷலிசத்தைக் கட்டுவதாகும். இரண்டாவது, வளர்ச்சியுற்ற சோஷலிச கட்டம்.

வளர்ச்சியுற்ற சோஷலிசத்திற்கான வரலாற்று இடமானது, இந்தக் கட்டத்தில் கம்யூனிச சமுதாயம் அதனுடைய உயர்ந்த கட்டமாக, அதாவது பெருமளவிலான கம்யூனிசத்தைக் கட்டும் கட்டமாக வளர்ச்சியுற ஆரம்பிக்கிறது என்ற விஷயத்தால் குணும்சப்படுத்தப்படுகிறது.

சோவியத் யூனியனில் சோஷலிசத்தைக் கட்டும் முக்கியமான வேலை 1930களின் பிற்பகுதியில் முடிவுற்றது. இன்று சோவியத் யூனியன் வளர்ச்சியுற்ற, பக்குவமடைந்த சோஷலிசத்தின் நாடாகும்.

### மிகவும் வளர்ச்சியுற்ற பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளம்

வளர்ச்சியுற்ற சோஷலிசத்தின் பொருளாயத-தொழில் நுணுக்க அடித்தளம், முழுவதும் உருவான பரிபூர்ணமாக வளர்ச்சியுற்ற இயந்திர உற்பத்தியால் குணும்சப்படுத்தப் படுகிறது. சோவியத் யூனியனில் நவீன, பல கிளைகளைக் கொண்ட தொழில் துறை, பெருமளவிலான சோஷலிச விவசாயம், மிகவும் வளர்ச்சியுற்ற போக்குவரத்து பிற

துறைகள் ஆகியவை ஒன்று சேர்ந்து ஒரு சக்திவாய்ந்த தேசிய பொருளாதாரத் தொகுப்பை உருவாக்கியுள்ளன.

வளர்ச்சியுற்ற சோஷலிசம், உற்பத்தி, விஞ்ஞான-தொழில் கூட்டு நிறுவனங்களும், தொழிலில் பிராந்திய தொகுப்புகளும் விவசாயத்தில் பண்ணைகளுக்கு இடையே சங்கங்களும், விவசாய-தொழில்துறை தொகுப்புகளும்; தேசிய பொருளாதாரத்தின் மற்ற துறைகளில் உற்பத்தியின் உச்சபட்ச ஒருமுனைப்படுத்துதல், பயனுள்ள தனிச் சிறப்புடைய ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யும் சமூகமய மாக்குதலின் ஸ்தாபன ரீதியான ஒத்த வடிவங்களுமாகிய வடிவங்களில், உற்பத்தியைச் சமூகமயமாக்கலின் சோஷலிசத்திற்கு ஒத்த அளவை அடையப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகிறது.

சோவியத் யூனியனில் தற்போதைய பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளத்துக்கும் சோஷலிசத்தின் ஆரம்ப காலத்தில் கட்டப்பட்ட அடித்தளத்துக்கும் பெரிய வேறுபாடு உண்டு. 1980ல் சோவியத் யூனியனில் தேசிய வருமானம் 1940ல் இருந்த நிலையை விட 14.1 மடங்கு அதிகமாக இருந்தது. 1940 முதல் 1980க்குள் தொழில்துறை உற்பத்தி வெளிப்பாடு கிட்டத்தட்ட 21 மடங்காகவும் விவசாய உற்பத்தி வெளிப்பாடு 2.4 மடங்காகவும் உயர்ந்துள்ளன. அதே நேரத்தில் மக்கள் தொகை 30 சதவீதம் மட்டும் உயர்ந்துள்ளது. மிக உயர்ந்த உற்பத்தி திறமை, முதல் முதலாக உழைப்பின் உற்பத்தித் திறனின் உயர்வு ஆகியவற்றால் இது சாத்தியமாயிற்று. 1980ல் தொழில் துறையில் உழைப்பின் உற்பத்தித்திறன் 1940ம் ஆண்டு நிலையை விட 7.7 மடங்கும்,விவசாயத்தில் (1973ல்) 4 மடங்கும் அதிகமாகியுள்ளன.

நாட்டின் தொழில் துறை உள்ளாற்றல் தொடர்ந்து வளர்கிறது.

### பக்குவமடைந்த சோஷலிச உற்பத்தி உறவுகள்

வளர்ச்சியுற்ற சோஷலிச கட்டத்தில் உற்பத்தி உறவுகள் முழுமையான பக்குவத்தை அடைகின்றன. அவை கம்யூனிச உறவுகளாக மாறி வளர்வதின் நிகழ்ச்சிப் போக்கு

ஆரம்பிக்கிறது. தேசியச் சொத்து, கூட்டுப் பண்ணை மற்றும் கூட்டுறவு சொத்து ஆகியவை வளர்ந்து படிப்படியாக ஒன்றுடன் ஒன்று நெருங்குவதன் விளைவால் உற்பத்தி சாதனங்கள், உழைப்பு கருவிகள் ஆகியவற்றைச் சமூகமயமாக்கல் என்பது ஒரு புதிய உயர்ந்த தரத்திற்கு உயருகிறது. தேசிய பொருளாதாரத்தில் சோஷலிச பண்ணைகள் முழுமையாக மேல் ஆதிக்கம் செலுத்துகின்றன.

சோஷலிசத்தின் பொருளாதார விதிகள் மிக உயர்ந்த பக்குவ அளவை எட்டுகின்றன. சமுதாய நலன்களுக்காக அவற்றைப் பயன்படுத்துவது முடிந்த அளவு முழுமையாகவும் பயனளிப்பதாகவும் ஆகிறது.

உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி, அதிகரிக்கும் சமூக உழைப்பு பிரிவினையிலும் தேசிய பொருளாதாரத்தின் எல்லா பகுதிகளும் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தலிலும் வெளிப்படுகிறது. சமூகமயமாக்கலின் வளர்ச்சி சமூக உற்பத்தியின் திட்டமிட்ட ஒழுங்குமுறையின் முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது. திட்டமிட்ட பொருளாதார ஒழுங்குமுறை ஓர் உயர்ந்த மட்டத்திற்கு உயருகிறது. நிர்வாகத்தில் ஜனநாயக மைய அதிகார ஒருமிப்பு என்ற கோட்பாடு முன்னேற்றமடைகிறது. அது, சமூக உற்பத்தியின் கட்டுப்பாட்டில் மைய அதிகார ஒருமிப்பை மிகுதிபடுத்துதல், தொழிற்சாலைகள், நிறுவனங்கள், ஸ்தல ஆட்சித் துறை ஆகியவற்றில் உள்ள உழைக்கும் மக்களின் விரிவான படைப்பாற்றல் முன்முயற்சியை விரிவுப்படுத்த உதவுதல் ஆகிய இரண்டையும் செய்கிறது. பொருளாதாரத் திட்டங்களை விஞ்ஞான ரீதியாக உறுதிபடுத்துதல், நீண்ட கால திட்டம் தீட்டுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது. பொருளாதார வேலை முறைகள் மேம்பாடடையலாயின. (இவை எல்லாம் விரிவாக பின்னால் வரும் அத்தியாயங்களில் விவாதிக்கப்படும்.)

வளர்ச்சியுற்ற சோஷலிசத்தின் உற்பத்தி உறவுகள், விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் விளைவுகளைப் பயன்படுத்துவதற்கான பெரும் வாய்ப்பை ஏற்பாடு செய்கின்றன. அவை விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றத்தின் சக்திமிக்க காரணியாகும்.

## வாழ்க்கைத் தரத்தின் கணிசமான உயர்வு

வளர்ச்சியுற்ற சோஷலிசத்தில், மக்களின் சேம நலனை அதிகமாக மேம்படுத்துவதற்காக புதிய வாய்ப்புகள் தோன்றுகின்றன. பொருளாயத, கலாசார மட்டம் ஒரே சீராக உயர்வது, கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கையின் முக்கிய வட்டாரமாகிறது. சோவியத் யூனியனில், சோவியத் மக்களின் சேம நலனின் திடமான உயர்வு, ஐந்தாண்டு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் அவற்றின் முக்கியப் பொருளாதாரக் குறிக்கோளாக அது ஸ்தூலமாக வெளிப்படுகிறது.

தற்சமயம் சோவியத் யூனியனில் உண்மையான தலா வருமானம் சுமாராக ஒவ்வொரு பதினைந்து ஆண்டுகளில் இருமடங்காகிறது.

உழைப்பு, வாழ்வு நிலைகள், சுகாதாரப் பணிகள், கல்வி, கலாசாரம் ஆகியவற்றின் மேம்பாட்டில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. வெவ்வேறான சமூக படிநிலையிலுள்ள நகர்புறம் நாட்டுப்புறம் ஆகியவற்றைச் சேர்ந்த மக்களின் சேம நலம், கலாசாரம், உழைப்பு, வாழ்வு நிலைகள் ஆகியவற்றின் தரங்கள் ஒன்றுடன் ஒன்று வெகு வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் ஒரு புதிய மனிதனை உருவாக்குவதை எளிதாக்குகிறது. ஒவ்வொரு தனி மனிதனின் சகலதுறை வளர்ச்சியையும் மேம்படுத்துகிறது.

அத்தியாயம் 12

# சோஷலிசம் தோன்றுதல், நிலைபெறுதல் ஆகியவற்றின் புறவயப் பொருளாதாரப் பண்புக் கூறுகள்

## 1. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் இடைக்கட்டக் காலத்தின் தேவையும் சாரமும்

கம்யூனிச சமுதாயத்தின் முதலும் தாழ்ந்ததுமான கட்டம் அல்லது சோஷலிசம் ஒரு சோஷலிசப் புரட்சியின் வெற்றியின் விளைவாக தோன்றுகிறது. முதலாளித்துவத்தின் வீழ்ச்சியும் கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டம் நிறுவப் படுதலும் ருஷ்யாவில் மகத்தான அக்டோபர் சோஷலிச புரட்சியால் ஆரம்பிக்கப்பட்டன. இப்பொழுது சோஷலிசத்தை உலகில் முதல் முதலில் கட்டிய நாடான சோவியத் யூனிய னுடன் அநேக பிற நாடுகளும் ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டும் பாதையைப் பின்பற்றுகின்றன.

### சோஷலிசப் புரட்சிக்கான முன்தேவைகள்

சோஷலிசப் புரட்சி என்பது சமுதாயத்தின் வளர்ச்சியின் ஒரு தவிர்க்க முடியாத விளைவாகும். இப்புரட்சி முதலாளித் துவத்தால் தயாரிக்கப்படுகிறது. சோஷலிசப் புரட்சிக்குத் தேவையான புறவய அகவய முன்தேவைகள் முதலாளித் துவத்தின் ஆழத்தில் பக்குவமடைகின்றன. முதலாளித் துவத்தின் கீழ் உற்பத்திச் சக்திகள் உயர் அளவான வளர்ச் சியை அடைகின்றன. உற்பத்தி ஒருமுனைப்படுத்தப்படுதல், சமூக உழைப்புப் பிரிவினையின் அதிகரிப்பு, உற்பத்தியின் தனி தன்மைப்படுதல், கூட்டுப்படுதல் ஆகியவற்றின் அதிகரிப்பு

ஆகியவற்றுல் உற்பத்திக்கு ஒரு சமூகக் குணும்சம் கிடைக் கிறது; தொழில் துறைகள், தொழில் நிலையங்கள் ஆகியவை யும் எல்லா சமூக உற்பத்திப் பகுதிகளும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்குமாறு மாறியுள்ளன. உலக முதலாளித்துவப் பொருளாதாரம் உருவாக்கப்படுகிறது. உற்பத்திச் சக்திகளும் உற்பத்தியின் சமூகக் குணும்சமும், பொருளாயத பொருள் களைத் தனதுரிமையாக்குவதில் சரியான ஒரு சமூக முறையை யும், சோஷலிச உற்பத்தி உறவுகளையும் கோருகின்றன. சோ ஷலிசப் புரட்சிக்கு இந்த புறவய முன்தேவை, ஏகாதிபத்தி யத்தில் அதனுடைய உயர் அளவு பக்குவத்தை அடைகிறது. முக்கியமாக அரசு-ஏகபோக முதலாளித்துவத்தில் அடை- கிறது. ஏனெனில் லெனின் கூறியதுபோல் இதற்கும், சோஷ லிசத்திற்கும் இடையில் எந்த இடைப்பட்ட படிகளும் இல்லை.

அதே நேரத்தில் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ சமுதாயத்தில் வளர்கிறது. அதிகமாக ஒருங்கமைக்கப்பட்ட தாகவும் நன்ருக ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் மாறுகிறது. அது நகர்புற நாட்டுப்புற உழைக்கும் மக்களுடன் கூட்டணி சேர்ந்தும் அதனுடைய மார்க்சிய-லெனினியக் கட்சியின் வழி காட்டலின் கீழும் முதலாளிகளின் ஆட்சியை கவிழ்க்கக் கூடிய ஒரு வெல்ல முடியாத சமூக சக்தியாகும். இப்படித் தான் சோஷலிசப் புரட்சிக்கான அகவய முன்தேவை தோன்றி பக்குவமடைகிறது.

ஏகாதிபத்தியத்தின் உள், வெளி இரண்டிலுமான எல்லா முரண்பாடுகளின் அதிகரிப்பின் விளைவால், உலக ஏகாதிபத் தியச் சங்கிலித் தொடரின் பலவீனமான இடத்தில் குறிப் பிட்ட நேரத்தில் சோஷலிசப் புரட்சி ஏற்படுகிறது.

## சோஷலிசப் புரட்சியின் சிறப்புப் பண்புக் கூறுகளும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுவதற்கான இடைக்கட்ட காலத்தின் தேவையும்

முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடை யிலான வரலாற்றுக் காலம் இடைக்கட்ட காலம் என அழைக்கப்படுகிறது. அதற்கான தேவை சோஷலிச புரட்சியின் சிறப்புப் பண்புக் கூறுகளாலும் பூர்ஷ்வா புரட்சியிலிருந்து

மாறுப்பட்ட அதனுடைய தனி இயல்புகளாலும் தீர்மானிக் கப்படுகிறது. பூர்ஷ்வா புரட்சி பூர்ஷ்வாக்கள் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் ஆரம்பிக்கிறது, முடிகிறது. உழைக்கும் மக்களுடன் கூட்டணி சேர்ந்து பாட்டாளிகளால் ஆட்சி கைப்பற்றப்பட்டவுடன் சோஷலிசப் புரட்சி தொடங்கு கிறது. பூர்ஷ்வா புரட்சி முதலாளித்துவப் பொருளாதார அடித்தளத்தை (முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் முறை) ஆயத்த நிலையில் காணுகிறது. அது நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் இருதயத்தில் உருவானது. முதலாளித்துவ தொழில் நிலையங்கள் நிலப்பிரபுத்துவ தொழில் நிலையங் களுடன் தோன்றி வளர்கின்றன. ஏனெனில் அவை இரண்டும் உற்பத்திச் சாதனங்களின் ஒரேமாதிரியான தனிவுடைமை யின் வெவ்வேறு வடிவங்களின் அடிப்படையிலானவை. பூர்ஷ்வா புரட்சி பூர்ஷ்வாக்களின் அரசியல் அதிகாரத்தை ஏற்கெனவே நிலவி கொண்டிருக்கும் முதலாளித்துவ பொருளாதார அடித்தளத்தின் வழியில் கொண்டுவருகிறது அவ்வளவுதான்.

சோஷலிச தொழில் நிலையங்களும் சோஷலிச உற்பத்தி உறவுகளும் முதலாளித்துவத்தின் கீழ் தோன்றவில்லை. ஏன் எனில் சோஷலிச உடைமை அடிப்படையிலேயே முதலாளித் துவ உடைமையிலிருந்து மாறுபடுகிறது. அதனுடன் முரண் படுகிறது. லெனின் பின்வருமாறு எழுதினர்: ''சோஷலிசப் புரட்சிக்கும் பூர்ஷ்வா புரட்சிக்கும் இடையிலான வேறு பாடானது, பூர்ஷ்வா புரட்சிக்கு முதலாளித்துவ உறவுகளின் ஆயத்த வடிவங்கள் உள்ளன; சோவியத் ஆட்சி இத்தகைய ஆயத்த உறவுகளை வாரிசாகப் பெறவில்லை என்பதுதான்.''*

தொழிலாளி வர்க்கம், நகர்புற, நாட்டுப்புற உழைக்கும் மக்களுடன் கூட்டணி வகுத்து முதலாளிகளின் ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு, ஒரு சோஷலிசப் பொருளாதாரத் தைக் கட்டுவதற்காக ஆட்சி அதிகாரத்தைத் தங்களுடைய சொந்தக் கைகளில் எடுத்துக் கொண்டுள்ளது. அதைச் செய்து முடிக்க ஒரு குறிப்பிட்ட காலம் தேவையாகும். அது இடைக்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 27, p. 90.

கட்ட காலமாகும். இந்த இடைக்கட்ட காலத்தில் சோஷலிசத்திற்கான பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளம் உருவாக்கப்படுகிறது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் அழிக்கப்படுகின்றன. அவை சோஷலிச உற்பத்தி உறவுகளால் மாற்றீடு செய்யப்படுகின்றன. தொழில் நிலையங்கள் எல்லாம் ஒரு புதிய சமூக அடிப்படையில் ஒழுங்கமைக்கப்படுகின்றன. கலாசாரப் புரட்சி நடத்தப்படுகிறது. தொழிலாளி வர்க்கம் சமுதாயத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய ஒரு சக்தியாகத் தன்னைத் தயார் செய்து கொள்ளுகிறது.

இடைக்கட்டக் காலத்தின் நீட்சி பல உள், வெளி நிலைமைகளைப் பொறுத்துள்ளது. சோஷலிசத்தைக் கட்டும் பொழுது தொழிலாளி வர்க்கம், தூக்கி எறியப்பட்ட சுரண்டும் வர்க்கத்தின் பிடிவாதமான எதிர்ப்பை வெற்றி கொள்ள வேண்டியிருக்கிறது. அத்துடன் சோவியத் மக்கள், பகைமையுள்ள முதலாளித்துவ நாடுகளால் சூழப்பட்டு, ஏகாதிபத்திய போர், உள் நாட்டுப் போர், வெளி நாட்டு ஆயுதம் தாங்கிய தலையீடு ஆகியவற்றால் ஏற்பட்ட பொருளாதார சீரழிவில் சோஷலிசத்தைக் கட்ட வேண்டியிருந்தது.

ஏனைய சோஷலிச நாடுகள் இப்பொழுது மிகவும் உகந்த சூழ்நிலைகளில் சோஷலிசத்தைக் கட்டிக் கொண்டிருக்கின்றன. உலகத்தில் ஒரு சோஷலிச அமைப்பு உள்ளது. அது சோஷலிச நாடுகளின் ஒரு முகாம். சோஷலிச நாடுகள் ஒன்றுக்கு ஒன்று சுயநலமற்ற உதவிகளைச் செய்கின்றன. இன்னும் ஓர் உலகப் போர் தவிர்க்க முடியாததல்ல.

## இடைக்கட்டக் காலத்தின் பொது புறவயப் பண்புக் கூறுகள்

இடைக்கட்டக் காலத்தின் போது சோஷலிசத்தைக் கட்டுவது, சோஷலிசப் புரட்சிக்கும் சோஷலிசக் கட்டுமானத்திற்கும் உரிய சில பொதுவான, புறவயப் பண்புக் கூறுகளால் தீர்மானிக்கப்படுகிறது. அவை, சோஷலிசப் புரட்சி நடந்த எல்லா நாடுகளிலும் ஒரு வடிவத்தில் இல்லாவிடில்

மறு வடிவத்தில் இடம் பெற வேண்டும். இவையெல்லாம் தேவை என்ற உண்மை சோவியத் யூனியனிலும் பிற சோஷலிச நாடுகளிலும் ஒரு புதிய சமுதாயத்தை நிறுவு வதில் உண்டான அனுபவத்தால் உறுதிபடுத்தப்படுகிறது. இத்தகையப் பண்புக் கூறுகள் வருமாறு:

உழைக்கும் மக்கள் எல்லோருடனும் கூட்டணி செய்த தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியை நிறுவுதல்;

முதலாளிகள், மற்றும் பிற சுரண்டல்காரர்களின் சமூக-பொருளாதார ஆதிக்கத்தை அழிக்க உண்மையான அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துதல்;

ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டுவதற்கான போராட்டத்தில் உழைக்கும் மக்களை அணி திரட்டுவது, பொருளாதாரத்தையும் எல்லா சமூக உறவுகளையும் சோஷலிச கோட்பாடுகளில் மாற்றியமைப்பது;

உள், வெளி வர்க்க விரோதிகளின் தாக்குதல்களிலிருந்து புரட்சியைக் காத்தல்.

சோஷலிசத்தைக் கட்டுவது என்பது வெவ்வேறு நாடுகளில் குறிப்பிட்ட பண்புக் கூறுகளை கொண்டிருக்கிறது. அவை, அவற்றின் குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளிலிருந்தும் அவற்றின் தேசிய தனி சிறப்புகளிலிருந்தும், உற்பத்தி சக்திகள், சமூக உறவுகள் ஆகியவற்றின் வேறுபட்ட பக்குவ மட்டத்திலிருந்தும் முளைத்தெழுகின்றன. சோஷலிசப் புரட்சி, சோஷலிசத்தைக் கட்டுதல் ஆகியவற்றின் பொதுவான புறவயப் பண்புக் கூறுகளை மெய்யாக்குவதில் குறிப்பிட்ட சுவட்டை அது விட்டுச் செல்லுகிறது. அவை அமுலாக்கப்படும் குறிப்பிட்ட வழிகளையும், பலவகையான சமூக சீர்திருத்தங்களின் வேறுபட்ட கால அளவுகளையும் விகிதாச்சாரத்தையும் அது தீர்மானிக்கிறது. இத்தகையப் புறவயப் பண்புக் கூறுகளை கணக்கில் எடுத்துக் கொள்வது அவசியமாகும். இத்தகையப் பண்புக் கூறுகளைப் பற்றி ஆழமாகப் புரிந்து கொள்ளுதல், ஆக்கப் பூர்வ அணுகு முறையையும் ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டில் குறிப்பிட்ட நிலைமைகளை கவனிப்பதையும் சேர்த்து அவற்றை ஆதரவாகக் கொள்ளுதல் ஆகியவை மார்க்சிய-லெனினியவாதிகளின் மாற்ற முடியாத பண்பைக் கொண்டிருக்கின்றன.

## 2. இடைக்கட்டக் காலத்தின் போது சமுதாயத்தின் பொருளாதார கட்டமைப்பு

இடைக்கட்டக் காலத்தின் பொருளாதார கட்டமைப்பு, ஒரே நேரத்தில் சமூக உற்பத்தியின் பல வடிவங்கள் இருப்ப தால் விவரிக்கப்படுகிறது. ஒன்று கூட பேராதிக்கம் கொண்ட தல்ல.

சோஷலிசத்தைக் கட்டும் எந்த நாட்டிலும் இடைக் கட்டக் காலத்தில் வழக்கமாக மூன்று பொருளாதார அமைப்புகள் உள்ளன. அவையாவன: சோஷலிச, சிறு-பரிவர்த் தனைப் பண்ட, தனிப்பட்ட முதலாளித்துவ அமைப்புகள். சோவியத் யூனியனிலும் பிற நாடுகளிலும் இத்துடன் இன் னும் இரண்டு பொருளாதார அமைப்புகள் இருந்தன. அவை யாவன: அரசு-முதலாளித்துவம், தந்தை வழி சமுதாயம்.

### சோஷலிசப் பொருளாதார அமைப்பு, அதனுடைய தோற்றமும், பொருளாதாரத்தில் முன்னணிப் பங்கும்

இடைக்கட்டக் காலத்தில் சோஷலிசப் பொருளாதார அமைப்பு, அரசு உடைமை தொழில் துறை, விவசாய, போக்குவரத்து, வாணிப நிலையங்கள், வங்கிகள், கூட்டுறவு நிலையங்கள் ஆகியவற்றால் பிரதிநிதித்துவப்படுத்தப்படு கிறது.

சோஷலிசப் பொருளாதார அமைப்பு இரு வழிகளில் தோன்றுகிறது: முதலாளிகளுக்கும் நிலச் சொந்தக்காரர் களுக்கும் சொந்தமான உற்பத்திச் சாதனங்களை சோஷலிச தேசியமயமாக்கும் நிகழ்ச்சிப் போக்கிலும் நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் இருக்கும் சிறு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுகளை உருவாக்குவதன் விளைவாகவும் தோன்றுகிறது. வழிகளைத் தேர்ந்து எடுப்பது, சோஷலிசப் புரட்சி ஏற்படும் பொழுது, உற்பத்தி சாதனங்களின் மீது தனியுடைமையின் சில வடிவங்கள் உள்ளதைச் சார்ந்திருக்கும். அவை, முத லாளிகள், நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோரின் பெருமள

விலான உடைமையும் தானே வேலே செய்யும் உடைமை யாளர்களின் சிறு உடைமையும் ஆகும். பல்வேறு விதமான உடைமை வடிவங்களே சோஷலிச உடைமையாக மாற்ற வெவ்வேருன அணுகு முறைகள் தேவை.

சோஷலிச தேசியமயமாக்குவதன் மூலம் அதாவது சுரண்டும் வர்க்கங்களிடமிருந்து உற்பத்திச் சாதனங்களேப் புரட்சிகரமாக பறித்து அவற்றை சோஷலிச அரசின் சொத்தாக மாற்றுவதன் மூலம் முதலாளிகள், நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோரின் உடைமையை ஒழிப்பது செயல்படுத்தப் படுகிறது. உற்பத்திச் சாதனங்கள் தேசிய சொத்தாகின்றன.

சோஷலிச தேசியமயமாக்குவதானது முதலாளிகளின் பொருளாதார ஆதிக்கத்தை அழித்து, சோஷலிச தொழில் நிலேயங்களே அமைத்து செயல்படுத்துவதற்கான பொருளாயத சமூக-பொருளாதார அடிப்படைகளே நிறுவுகிறது. அது பாட்டாளிகளின் சர்வாதிகாரத்திற்கான பொருளாதார அடித்தளத்தை அமைத்துக் கொடுத்து தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியை மேலும் நிலேயானதும், நீடித்திருக்கக் கூடியதுமாக்குகிறது.

வழக்கமாக தேசியமயமாக்குதலின் முதல் நடவடிக்கையாக, முதலாளித்துவ தொழில் நிலேயங்களில் தொழிலாளர்களின் கட்டுப்பாடு நிறுவப்படுகிறது. அதனுடைய நோக்கம், பூர்ஷ்வாக்களின் பொருளாதாரச் சக்தியைக் குறைத்து, தொழிலாளர்களே உற்பத்தியை நிருவகிக்கும் சூழ்நிலேயைத் தயாரிப்பதாகும்.

சோஷலிச தேசியமயமாக்கலேச் செயல்படுத்துவது சூழ்நிலேகளேப் பொறுத்துள்ளது. உடைமையைப் பறிமுதல் செய்தல் அதாவது தொழில் நிலேயங்களே நஷ்ட ஈடு கொடுக்காமல் உரிமையாக்குதல் மூலம் அல்லது பகுதியளவு நஷ்ட ஈடு கொடுத்து உரிமையாக்குதல் மூலம் அது செயல்படுத்தப்படுகிறது. தேசியமயமாக்கும் வடிவங்கள் பூர்ஷ்வாக்களின் ஒழுக்கத்தைப் பொறுத்துள்ளது. ருஷ்யாவில் பூர்ஷ்வாக்கள் ஓர் உள் நாட்டுப் போரை அவிழ்த்துவிட்டு வெளியாரின் ஆயுதம் தாங்கிய தலேயீட்டிற்கும் ஏற்பாடு செய்ததைப் போல், பூர்ஷ்வாக்கள் தேசியமயமாக்குவதை முழு மூச்சுடன் எதிர்த்தால் உடைமையைப் பறிமுதல் செய்யும் வழி

யில் தான் தேசியமயமாக்குவது நடைபெறும். பூர்ஷ்வாக்கள் அமைதியாக மக்களின் ஆட்சிக்கு அடங்கிவிட்டால் அவர்களுடைய சொத்திற்கு ஒரு பகுதி நஷ்ட ஈடு கிடைக்கும். இந்த நடைமுறைதான் பிற சோஷலிச நாடுகளில், நாஜி ஆக்கிரமிப்பாளர்களுடன் கூட்டுச் சேராத உள்நாட்டுப் பூர்ஷ்வாக்கள் பால் கடைபிடிக்கப்பட்டது. ஆக்கிரமிப்பாளர்கள், உள்நாட்டு பெரிய பூர்ஷ்வாக்கள் ஆகியோருக்குச் சொந்தமான தொழில் நிலையங்கள் அவற்றின் சொந்தக்காரர்களிடமிருந்து எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்காமல் பறிமுதல் செய்யப்பட்டன.

இடைக்கட்டக் காலத்தில் சோஷலிச அரசால் நடத்தப்படும் தேசியமயமாக்குதல் முதலாளித்துவ நாடுகளில் தேசியமயமாக்குவதிலிருந்து அடிப்படையிலேயே வேறுபடுகிறது. முதலாளித்துவ தேசியமயமாக்கல் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை அழிக்காது. எனவே மனிதனை மனிதன் சுரண்டுவது நிலைத்திருக்கிறது. முதலாளித்துவ நாடுகள் முதலாளிகளின் வர்க்க நலன்களுக்காகத் தேசியமயமாக்கத் தயாராக இருக்கின்றன. உற்பத்தியை சோஷலிச சமுதாயமயமாக்கல், சோஷலிச உற்பத்தி உறவுகளுடன் கூடிய பொருளாதாரத்தின் சோஷலிச வடிவங்களின் தோற்றம் ஆகியவற்றிற்காக சோஷலிச தேசியமயமாக்கல் தேவையான எல்லா நிலைமைகளையும் ஏற்பாடு செய்கிறது. கூலி உழைப்பைச் சுரண்டுவது அழிக்கப்படுகிறது. சோஷலிச தேசியமயமாக்கலின் விளைவாக சமூக சோஷலிச உடைமையின் அரசு வடிவம் தோன்றுகிறது.

இடைக்கட்டக் காலத்தில் சோஷலிசப் பொருளாதார அமைப்பு நாட்டின் பொருளாதாரத்தில் முன்னணிப் பங்காற்றுகிறது. இது ஒரு முற்போக்கான உற்பத்தி வடிவம். எதிர்காலத்தில் இது சமூக உற்பத்தியின் பேராதிக்க வடிவமாகும். இடைக்கட்டக் காலத்தில், பேரளவு தொழில் துறை, வங்கிகள், பொருளாதாரத்தின் பிற கிளைகளிலுள்ள பெரும் தொழில் நிலையங்கள் ஆகியவற்றில் சோஷலிசப் பொருளாதார அமைப்பு பேராதிக்கம் செலுத்துகிறது. இறுதியாக அது பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசாங்கத்திடமிருந்து சகல ஆதரவையும் பெறுகிறது.

## சிறு-பரிவர்த்தனைப் பண்ட பொருளாதார அமைப்பு

நாட்டுப் புறங்களிலுள்ள விவசாயப் பண்ணைகள், நகரங்களிலுள்ள சிறு தொழில் நிலையங்கள் ஆகியவை சிறு-பரிவர்த்தனை பண்ட பொருளாதார அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. பல நாடுகளில், முக்கியமாக தாழ்ந்த அல்லது நடுத்தரமான வளர்ச்சி மட்டமுடைய நாடுகளில் அது இடைக்கட்டக் காலத்தில் பேராதிக்கம் செலுத்துகிறது. உதாரணமாக 1923-24ல் சோவியத் யூனியனில் இந்தப் பொருளாதார அமைப்பு மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் 51 சதவீதத்தைக் கொடுத்தது.

சிறு-பரிவர்த்தனைப் பண்டப் பொருளாதார அமைப்பு, உற்பத்திச் சாதனங்களின் மீது சிறு தனியார் உடைமை, உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களின் சொந்த உழைப்பு ஆகியவற்றில் அமைகிறது. பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகளின் கீழ் சிறு-பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியானது, ஒரு புறம் அவர்களுடைய உற்பத்திச் சாதனங்களை இழந்த ஏழை மக்களையும், மறுபுறம் முதலாளிகளையும் உண்டாக்கும் நிலையான பாகுபாட்டு போக்கில் உள்ளது.

சோஷலிச அரசு சிறு-பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளருக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு பொருளாதார உதவியும் ஆதரவும் அளிக்கிறது. முதலாளித்துவ அம்சங்களால் அவர்கள் சுரண்டப்படுவதையும் தடுக்கிறது.

## தனிப்பட்ட முதலாளித்துவ பொருளாதார அமைப்பு

தனிப்பட்ட முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு நடுத்தர, சிறிய முதலாளித்துவத் தொழில், விவசாய, வாணிப நிலையங்களில் அடங்கியுள்ளது. இடைக்கட்டக் காலத்தில் எல்லா முதலாளித்துவத் தொழில் நிலையங்களையும் உடனே துடைத்தெடுப்பது சாத்தியமல்ல என்பது இதற்குக் காரணம்.

முதலாளித்துவத் தொழில் நிலையங்களில் கூலி உழைப்பைச் சுரண்டுவது தொடர்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் உள்ளன.

விலையை நிர்ணயித்தல், இலாப வரிகள் மற்றும் இது போன்ற பொருளாதார முறைகளையும், சட்டத்தையும் பயன்படுத்தி, முதலாளித்துவ தொழில் நிலையங்களின் நடவடிக்கைகள், சுரண்டலின் அளவு, முதலாளித்துவ மூலதன திரட்சியின் அளவு மற்றும் இது போன்றவற்றை சோஷலிச அரசு தடை செய்கிறது.

## அரசு-முதலாளித்துவ பொருளாதார அமைப்பு

இடைக்கட்டக் காலத்தில், அரசு-முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு, சோஷலிச அரசுக்காக ஒப்பந்த அடிப்படையில், அதாவது சோஷலிச அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வேலை செய்யும் முதலாளித்துவ தொழில் நிலையங்கள், முதலாளிகளுக்குத் தற்காலிகமாக ஒத்திக்கு விடப்பட்ட அரசு தொழில் நிலையங்கள், அரசும் தனியாரும் கலந்த தொழில் நிலையங்கள் ஆகியவற்றின் வடிவத்தில் இருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அரசு முதலாளித்துவம் சோஷலிசத்தைக் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவுகிறது. முதலாளித்துவத் தொழில் நிலையங்கள் படிப்படியாக சோஷலிச தொழில் நிலையங்களாக மாற்றப்படுகின்றன.

சோவியத் யூனியனில் அரசு முதலாளித்துவம் முக்கியமாக சலுகை உரிமைக்கொடை வெளிநாட்டு முதலாளிகளுக்கு அரசு தொழில் நிலையங்களை ஒத்திக்கு விட்டது ஆகியவற்றால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. அது மிகக் குறுகிய எல்லைக்குள் தான் இருந்தது. உதாரணமாக 1923-24ல் அரசு-முதலாளித்துவத் தொழில் நிலையங்கள் மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் ஒரு சதவீதத்தை மட்டுமே கொடுத்தன. மற்ற சோஷலிச நாடுகளில் அரசு முதலாளித்துவம் முக்கியமாக அரசும் தனியாரும் கலந்த தொழில் நிலையங்களின் வடிவத்தில் இருந்தது. இந்த விதமான அரசு முதலாளித்துவமானது முதலாளித்துவ தொழில் நிலையங்களில் ஒரு பகுதியை சோஷலிச அரசு வாங்குவதின் தனி மாதிரியாக இருக்கிறது. அதற்கு நஷ்ட ஈடாக, அந்த முத

லாளி ஆரம்பத்தில் அந்தத் தொழில் நிலையத்தில் கிடைத்த இலாபத்தில் ஒரு பகுதியைப் பெறுகிறார். அதன்பிறகு அவருடைய மூலதனத்திற்குரிய ஒரு குறிப்பிட்ட சதவீத பங்கைப் பெறுகிறார். சரியான காலத்தில் அந்தத் தொழில் நிலையம் அரசின் உடைமையாக மாறுகிறது.

## தந்தை வழிச் சமுதாயப் பொருளாதார அமைப்பு

இந்தப் பொருளாதார அமைப்பு, பிழைப்பிற்கான பொருளாதாரத்தில் ஈடுபட்டிருக்கும் சிறு உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தில் வெளிப்படுகிறது. அவர்களுக்கும் சந்தைக்கும் தொடர்பு கிடையாது. இடைக்கட்டக் காலத்தின் ஆரம்பத்தில் சோவியத் யூனியனில் அது நிலவி இருந்ததற்குக் காரணம் வெகு தொலைவிலுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகள் இருந்ததேயாகும். தந்தை வழி பொருளாதார அமைப்பின் பங்கு மிகக் குறைவானது.

முதலாளித்துவத்தைத் தாண்டி சோஷலிசத்தைக் கட்டும் நாடுகள் பொருளாதாரத்தில் மிகவும் குறைவான வளர்ச்சியுடையனவாக இருக்கும். அத்தகைய நாடுகளில் தந்தை வழி அமைப்பின் பங்கு வழக்கமாக அதிகமாக இருக்கும்.

## இடைக்கட்டக் காலத்தின் முரண்பாடுகள்

இடைக்கட்டக் காலத்திய பொருளாதாரம் சில முரண்பாடுகளைக் கொண்டது. பிரதான முரண்பாடு, முளைக்கும் பருவத்திலும் வளரும் நிலையிலுள்ள சோஷலிசத்திற்கும், வரலாற்றுப் பூர்வமாகமறைந்து சாகும் தறுவாயிலிருந்தாலும் பிடிவாதமாக எதிர்த்துக் கொண்டிருக்கக் கூடிய முதலாளித்துவத்திற்கும் இடையிலான முரண்பாடாகும். அது ஒரு எதிரும் புதிருமான முரண்பாடு. அதற்கு ஒரு கூர்மையான, கருணையற்ற வர்க்கப் போராட்டத்தில் தீர்வு காணப்படும்.

அடுத்த முக்கிய முரண்பாடு சோஷலிசப் பொருளாதார அமைப்புக்கும் சிறு-பரிவர்த்தனைப் பண்டப் பொருளாதார அமைப்புக்கும் இடையிலான முரண்பாடு. சோஷலிசப் பொரு

ளாதார அமைப்பில் விரிவுபடுத்தப்பட்ட உற்பத்தியின் விதிகளின்படி வளர்ச்சியுறும் முக்கியமாகப் பெரிய தொழில் நிலையங்கள் அடங்கியுள்ளன. சிறு-பரிவர்த்தனைப் பண்ட அமைப்பு சிறு விவசாயப் பொருளாதாரத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. அப்பொருளாதாரம் சாதாரண உற்பத்தியின் விதிகளுக்கு ஏற்ப வளருகிறது.

பெருமளவு தொழிலுக்கும் சிறு விவசாய உற்பத்திக்கும் நிலையான சமத்துவமற்ற நிலைக்கான ஒரு மூலாதாரம் இருக்கிறது. அத்துடன் சிறு தனியார் உற்பத்தி தன்னியல்பான அராஜகப் போக்குகளுடையது. அவை திட்டமிட்ட பெருமளவு சோஷலிச உற்பத்திக்கு எதிராகச் செயல்படுகின்றன. அது ஒரு எதிரும் புதிருமான முரண்பாடல்ல. சிறு-பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியைச் சோஷலிச உற்பத்தியாக மாற்றுவதன் மூலம் அதற்குத் தீர்வு காணப்படுகிறது.

## 3. இடைக்கட்டக் காலத்தியப் பொருளாதாரக் கொள்கையின் சாரம்

### இடைக்கட்டக் காலத்தில் பொருளாதாரக் கொள்கையின் தீர்மானமான போக்கு

இடைக்கட்டக் காலத்தில், மார்க்சிய-லெனினியக் கட்சி, சோஷலிச அரசு ஆகியவற்றின் பொருளாதாரக் கொள்கையின் தீர்மானமான போக்கு சோஷலிசத்தின் முக்கியப் பண்புப் கூறுகளைக் கட்டுவதாகும். இந்த வேலையை நிறைவேற்ற அரசு, பெருமளவு தொழில், வங்கிகள், போக்குவரத்து, வெளிநாட்டு வாணிபம், பெரும்பாலான உள் நாட்டு வாணிபம், மற்றும் தேசிய பொருளாதாரத்திலுள்ள மற்ற முக்கிய நிலைகள் ஆகியவற்றை எடுத்துக் கட்டுப்படுத்துகிறது. சோஷலிசப் பொருளாதார அமைப்பின் மீது நேரடியாக கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது; சோஷலிச அமைப்பு அல்லாதவற்றின் மீது, இக்காரியத்திற்காகப் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகளைப் பயன்படுத்தி, ஒரு திட்டமிட்டப் பொருளாதாரச் செல்வாக்கை உண்டு பண்ணுகிறது; தனியார் மூலதன செயல்பாட்டை அது தற்காலிக

மாக அனுமதிக்கிறது; முதலில் அதை ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்துகிறது; அதன் பிறகு சோஷலிசப் பொருளாதார அமைப்பு வலிமைப் பெற்று சோஷலிசம் கட்டப் படுகிற பொழுது அதை மொத்தமாக வெளியேற்றுகிறது.

## இடைக்கட்டக் காலத்தில் முக்கியப் பொருளாதாரப் பணிகள்

இடைக்கட்டக் காலத்தில் பாட்டாளி அரசாங்கத்தின் முதல் வேலை நடைமுறையில் உற்பத்தியைச் சமூகமயமாக்கல். அதாவது சமூக உற்பத்தியின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்வது என்று லெனின் கூறினர். சோஷலிசக் கட்டுமானத்தின் ஆரம்பக் கட்டத்தில் இந்த வேலையை நிறைவேற்றுவது என்பது, சோஷலிச அரசின் நிருவாகத்தின் கீழ் சோஷலிசத் துறை உற்பத்தியின் திட்டமிட்ட செயல் பாட்டைக் குறிக்கிறது. அது சோஷலிசப் பொருளாதார அமைப்புக்கும் சோஷலிசமல்லாத பொருளாதார அமைப்பு களுக்கும், முதல் முதலில் சிறு-பரிவர்த்தனைப் பண்ட அமைப்புக்கும் இடையிலான மார்க்கெட் (பரிவர்த்தனைப் பண்ட-பண) உறவுகளின் மீது முறையான செல்வாக்கைச் செலுத்துகிறது. சோஷலிசத்தைக் கட்டுவதற்கான அக்கறை யில் அவற்றைப் பயன்படுத்தும் காரியத்திற்காகச் செல் வாக்கைச் செலுத்துகிறது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் இடைக்கட்டக் காலத்தில் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் தொடர்ந்து இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் நாட்டில் பலவித பொருளாதார அமைப்புகள் ஒரே நேரத்தில் செயல்படுகின்றன. வேறுபட்ட உடைமை வடிவங்களின் அடிப்படையில் உண்டான இத்தகைய பொரு ளாதார அமைப்புகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை, உற்பத்திப் பொருள்களை விற்பது, வாங்குவது மூலமே செயல்படுத்த முடியும்.

வெவ்வேறான பொருளாதார அமைப்புகளில் பரிவர்த் தனைப் பண்ட-பண உறவுகள், வெவ்வேறான சமூக-பொரு ளாதார இயல்புகளைக் கொண்டிருக்கின்றன. சோஷலிசப்

பொருளாதார அமைப்பில் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் ஒரு புதிய சோஷலிச உள்ளடக்கத்தைப் பெறு கின்றன. சோஷலிசத்தைக் கட்டுவதற்குப் பயன்படக்கூடிய முறையில் அவை அரசால் திட்டமிடப்படுகின்றன. இடைக் கட்டக் காலத்தின் போது செலாவணிப் புழக்கம் ஒழுங்கிற்கு கொண்டு வரப்படுகிறது. தொழில் நிலையங்கள் தற்சார்புடைய தாக்கப்படுகின்றன. உழைப்பிற்குப் பொருளாயத ஊக்கம் அளிக்கப்படுகிறது. தொழில் நிலையங்களுக்கு கடன் அளிக்கப் படுகிறது. இப்படிப்பட்ட உதவிகள் செய்யப்படுகின்றன.

சோஷலிசமல்லாத பொருளாதார அமைப்புகளில் பரி வர்த்தனைப் பண்ட-பண உறவுகள் தன்னியல்பானவை. அவற்றில் உற்பத்தி, மதிப்பு விதியால் ஆளப்படுகிறது.

சோஷலிசமல்லாத உற்பத்தியின் மீது ஒரு பொருளா தாரச் செல்வாக்கை உண்டு பண்ண சோஷலிச அரசால், வெவ்வேறான பொருளாதார அமைப்புகளுக்கு இடையில் உள்ள பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் பயன்படுத்தப் படுகின்றன. தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் இடையில் உள்ள கூட்டணியை சாத்திய மான அளவு வலுப்படுத்தும் விதத்தில் அவை உபயோகிக்கப் படுவது மிக முக்கியத்துவமுடையது. சோவியத் யூனியனில் 1921ல் புதிய பொருளாதாரக் கொள்கையைப் புகுத்து வது சம்பந்தமாக இது வெளியாயிற்று. விவசாயிகள் விளை பொருள் வகையில் வரியை செலுத்த வேண்டியிருந் தது. இதற்கு முன்னால் எல்லா உபரிப் பொருள்களையும் தனதுரிமையாக்கிக் கொள்ளும் முறை செயலில் இருந்தது. இது விவசாயிகள் உபரிப் பொருள்களைச் சந்தையில் விற்க அனுமதித்தது. அவர்களுக்கு அவர்களுடைய உற்பத்தியை விரிவுபடுத்த ஒரு ஆர்வம் உண்டாயிற்று. தொழில் துறைக்கு அதிகமான விவசாயக் கச்சாப் பொருள்கள் கிடைத்தது. நகரில் உள்ள மக்கள் அதிக உணவைப் பெற்றனர். அதே நேரத்தில் விவசாயிகளும் நகர்புற மக்களும் அதிகமான நுகர்வுப் பொருள்களை வாங்க விரும்புகின்றனர். எனவே தொழில் உற்பத்தியும் வர்த்தகமும் அவசரமான தேவையா யின.

சுதந்திரமான வர்த்தகத்தின் கீழ் சிறு விவசாய தனியார்

பண்ணையின் உற்பத்தி தவிர்க்க முடியாதபடி முதலாளிகளை, குலாக்குகள் என்றழைக்கப்படுகிறவர்களை (பணக்கார விவசாயிகளை) வளர்த்தது. அரசு உடைமை தொழிலால் உடனடியாக அல்லது முழுவதுமாக தொழில் உற்பத்திப் பொருள்களுக்கான தேவையைத் திருப்தி செய்ய முடியவில்லை. முளைவிட்டு வரும் சோஷலிச வர்த்தகத்தால், பரிவர்த்தனைப் பண்ட விற்பனைப் புரள்வின், குறிப்பாக நகரத்திற்கும் நாட்டுப் புறத்திற்கும் இடையிலான விற்பனைப் புரள்வின் மொத்த பரிமாணத்தை எதிர்த்துச் சமாளிக்க முடியவில்லை. எனவே அரசாங்கம், தனி முதலாளிகளின் நடவடிக்கையை விவசாயத்தில் மட்டுமல்ல, தொழில் துறை, வர்த்தகம் ஆகியவற்றிலும் அனுமதிக்க வேண்டியிருந்தது.

இது சோஷலிச கட்டுமானத்திற்கு எந்த வித அபாயத்தையும் உண்டாக்காது. ஏனெனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் பொருளாதாரக் கடிவாளத்தை அரசு கையில் வைத்திருக்கும் பொழுது முதலாளித்துவ உற்பத்தியைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு வாய்ப்பும் கிடைப்பதோடல்லாது அதைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தவும் முடிகிறது. பின்னல் சோஷலிச கட்டுமான நிகழ்ச்சிப் போக்கில் சோஷலிச பொருளாதார அமைப்பின் பலம் அதிகரிக்கும் பொழுது முதலாளித்துவ உற்பத்தி படிப்படியாக பொருளாதாரக் கட்டாயப்படுத்தும் நடவடிக்கைகளால் வெளியேற்றப்படுகிறது.

விவசாயிகள், கைவினைஞர்கள் ஆகியோரின் சிறு-பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியைப் பொறுத்த அளவில் அரசாங்கத்தின் திட்டமிட்ட பொருளாதாரத்தின் செல்வாக்கின் நோக்கம் அதனுடைய சோஷலிச மாற்றத்தை தானே விரும்பி செய்ய முன்வரும் ஒத்துழைப்பு வழிகளால் செயல்படுத்துவது ஆகும்.

## 4. சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளத்தைக் கட்டுதல். சோஷலிச தொழில்மயமாக்குதல்

சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளத்தைக் கட்டுவதில் உள்ள முக்கிய அம்சம் சோஷலிச

தொழில்மயமாக்குவதாகும். இத்தகைய தொழில்மயமாக்கல் என்பது கனரகத் தொழிலே, அதனுடைய முக்கிய கிளையான பொறி இயல் உள்பட, உருவாக்கல், தேசியப் பொருளாதாரத்தில் எல்லா கிளைகளிலும் உள்ள தொழில் நிலையங்களை இயந்திரங்களால் நிரப்புவது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சோஷலிசத்தைக் கட்டுவதில் உண்டான அனுபவம், சோஷலிசத்தைக் கட்டும் எல்லா நாடுகளிலும் ஓரளவு தொழில்மயமாக்கல் நடைபெறுகிறது என்பதைக் காட்டுகிறது. இது ஏன் எனில் ஒரு சோஷலிசப் புரட்சியை அனுபவப்பட்ட நாடுகளில் கனரகத் தொழில், பொறி இயல், பெருமளவு இயந்திர உற்பத்தி ஆகியவை இல்லாமலோ, வளர்ச்சியுறாமலோ இருக்கலாம் அல்லது சமமற்ற முறையில் வளர்ச்சியுற்றிருக்கலாம். அதாவது பொருளாதாரத்தின் எல்லா கிளைகளையும் அல்லது நாட்டின் எல்லா பகுதிகளையும் தழுவாமல் இருக்கலாம்.

கனரகத் தொழில், பெருமளவு இயந்திர உற்பத்தி ஆகியவை முதலாளித்துவத்தின் கீழ் ஏற்கெனவே உருப்பெற்றிருந்தால், சோஷலிசத்தின் பொருளாயத தொழில் நுணுக்க அடித்தளத்தைக் கட்டுவது, முக்கியமாக முதலாளித்துவ உற்பத்தியின் புனர்நிர்மாணத்திற்குக் குறைக்கப்படுகிறது. வேலையை அதீத தீவிரமாக்கலுக்கு இட்டுச் சென்ற முதலாளித்துவச் ''சிக்கனச் சீரமைப்பின்'' விளைவுகள் அகற்றப்படுகின்றன; நாட்டின் பிராந்தியங்களுக்குத் தொழில் துறைகளை சமமற்ற முறையில் பிரித்து வினியோகிப்பது, அதன் விளைவாக நாட்டின் பிராந்தியங்களை தொழில் துறையில் முன்னேறிய பகுதிகள், பிற்பட்ட விவசாயப் பகுதிகள் எனப் பிரிப்பது சமாளிக்கப்படுகிறது; இயற்கை வளங்கள் கொள்ளையிடப்படுவது நிறுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன. உற்பத்தி துறை கட்டமைப்பு, பொதுவாக அதனுடைய ஒழுங்கு முறை ஆகியவை தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட சமமான வளர்ச்சிக்கு உத்திரவாதமளிப்பதையும் மக்களின் தேவைகளை திருப்திப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டன.

## சோஷலிச தொழில்மயமாக்கலின் சாரமும் முக்கியத்துவமும்

சோஷலிச தொழில்மயமாக்கல், சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளத்திற்கான அடிப்படைகளைப் போடுகிறது. பெருமளவு தொழில் உற்பத்தியின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தி, சோஷலிசத் தொழில்மயமாக்கலானது சோஷலிச பொருளாதார வடிவங்கள், சோஷலிச உற்பத்தி உறவுகள் ஆகியவற்றை தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் உறுதியாக நிறுவுவதை எளிதாக்குகிறது.

பெரிய, எல்லா சாதனங்களும் நிறைந்த சோஷலிச தொழில் நிலையங்கள், இடைக்கட்டக் காலத்தில் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் முதலாளித்துவ தொழில் நிலையங்களை பொருளாதார ரீதியில் விஞ்சுகின்றன. இவ்வாறாக, முதலாளித்துவ தொழில் நிலையங்களை மூடுவதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றன. இடைக்கட்டக் காலத்திய பிரதான முரண்பாடு சோஷலிசத்திற்குச் சாதகமாக தீர்வு காணப்படுகிறது.

சிற்றளவு விவசாயத்தினை சோஷலிசப் புனர் ஒழுங்குப்படுத்துவதற்கான முக்கிய முன்தேவைகளில் ஒன்று சோஷலிச தொழில்மயமாக்குதலாகும். எனவே அது பெருமளவு சோஷலிச தொழிலுக்கும் சிற்றளவு பண்ணை உற்பத்திக்கும் இடையிலான பகையில்லா முரண்பாட்டைத் தீர்க்க உதவும்.

சோஷலிச தொழில்மயமாக்கலானது இளம் சோஷலிச நாட்டின் சர்வதேச நிலையை வலுப்படுத்துகிறது; அதனுடைய பொருளாதார, பாதுகாப்பு உள்ளாற்றலை உயர்த்துகிறது; நாட்டைப் பொருளாதார ரீதியாக முதலாளித்துவ நாடுகளைச் சார்ந்திராத சுதந்திர நாடாக்குகிறது.

## சோஷலிச தொழில்மயமாக்கலுக்கும் முதலாளித்துவ தொழில்மயமாக்கலுக்கும் இடையிலான வேறுபாடு

சோஷலிச தொழில்மயமாக்கல், முதலாளித்துவ தொழில்மயமாக்கலிலிருந்து பண்பு, விளைவுகள், மூலாதாரங்கள்,

விகிதாச்சாரங்கள் ஆகியவற்றில் அடிப்படையிலேயே வேறு படுகிறது.

சோஷலிச தொழில்மயமாக்கல் சோஷலிசத்தைக் கட்டுவதற்கான ஒரு நிபந்தனையாகும். அதனால் அது உழைக்கும் மக்களின் நலன்களுக்காக இருக்கிறது. முதலாளித்துவ தொழில்மயமாக்கல் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை அதிகரிக்கின்றது; தொழிலாளர்களைச் சுரண்டுவதைத் தீவிரப்படுத்துகிறது. வேலையின்மை, அதீத உழைப்பு தீவிரப் படுத்தப்படுதல், தொழில் துறை விபத்துகள், வியாதிகள் உயர்தல் ஆகியவை அதைத் தொடர்கின்றன. அது சிறு உற்பத்தியாளர்களை (விவசாயிகள், கைவினைஞர்கள்) அழிக்கிறது.

சோஷலிச தொழில்மயமாக்கல் ஒரு திட்டமிட்ட வகையில் நிறைவேற்றப்படுகிறது. உதாரணமாக சோவியத் யூனியனில், 'கோயல்ரோ' திட்டம் (ருஷ்யாவை மின்மயமாக்குவதற்கான அரசு திட்டம்), ஆரம்ப கால ஐந்தாண்டு பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதன் விளைவாக அது எதார்த்தமாயிற்று. முதலாளித்துவ தொழில்மயமாக்கல் சோஷலிச தொழில் மயமாக்கலைப் போலல்லாது போட்டியில் இறங்கிய முதலாளித்துவ தொழில் நிலையங்களுக்கு இடையிலான கூர்மையான போராட்டத்தில் தன்னியல்பாக நடைபெறுகிறது.

முதலாளிகள் அவர்களுடைய சொந்த நாட்டில் கட்டுக் கடங்காத முறையில் தொழிலாளர்களைச் சுரண்டுவது, காலனி நாடுகளையும் சார்ந்திருக்கும் நாடுகளையும் கொள்ளையிடுதல், வெற்றி கொண்ட நாடுகளின் மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட நஷ்ட ஈடுகள், அயல் நாட்டுக் கடன்கள் ஆகியவற்றின் விளைவால் கிடைத்த இலாபம் முதலாளித்துவ தொழில்மயமாக்கலுக்கான நிதிகளுக்கான மூலதாரமாகும். தொழில் மற்றும் வாணிப நிறுவனங்கள், வங்கிகள் போன்ற அரசு நிலையங்களிலிருந்து கிடைத்த நிதிகளைக் கொண்டு சோவியத் யூனியனில் சோஷலிச தொழில்மயமாக்கல் நிறைவேற்றப்பட்டது. சில நிதிகள், எல்லா கடன்களும், வாரம் செலுத்துதல் ஆகியவற்றிலிருந்து புரட்சியால் விடுவிக்கப் பட்ட விவசாயிகளிடமிருந்து கிடைத்தன. மற்றவை மக்

களிடமிருந்து உள் நாட்டு கடனுகப் பெற்ற நிதிகள் மூலம் கிடைத்தன. ஏகாதிபத்திய நாடுகள் சோவியத் யூனியனுக்கு எந்தக் கடனும் கொடுக்கவில்லை.

முதலாளித்துவ தொழில்மயமாக்கலை விட சோஷலிச தொழில்மயமாக்கல் வெகு வேகமாக முன்னேறுகிறது. இது, முளைப்பருவத்திலும் வளர்ந்து வரும் நிலையிலுமுள்ள சோஷலிச உற்பத்தி உறவுகளாலும், அவற்றிற்குரிய திட்டமான தன்மையாலும் உழைக்கும் மக்களின் நலன்களை வெளிப்படுத்தும் சோஷலிச உற்பத்தியின் குறிக்கோளாலும் அதிகரிக்கப்படுகிறது. பகைமை உணர்ச்சியுள்ள முதலாளித்துவ சூழ்நிலையிலே பொருளாதார சுதந்திரத்தையும், போதுமான அளவு இராணுவ பாதுகாப்பு திறமையையும் நாடு அடைய வேண்டியதன் காரணத்தால் சோவியத் யூனியனில் தொழில் மயமாக்கலின் விகிதாச்சாரம் உயர்ந்திருந்தது. அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன், பிரான்சு உண்மையில் எல்லாத் தொழில் துறையில் வளர்ச்சியுற்ற நாடுகள் ஆகியவற்றில் தொழில்மயமாக்கல், சோவியத் யூனியனில் பன்னிரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தொழில்மயமாக்கல் அளவை நிறைவேற்ற பல பத்தாண்டுகள் ஆயின.

## உலக சோஷலிச அமைப்புக்குள் சோஷலிச தொழில்மயமாக்கல்

சோஷலிசத்தைக் கட்டும் நாடுகளில் சோஷலிச தொழில் மயமாக்கல் என்பது, உலக சோஷலிச அமைப்பு நிலவுவது, சோஷலிச நாடுகளிடையே பரஸ்பர உதவி, கடன் கொடுப்பதின் சாதகமான நிபந்தனைகள் ஆகியவற்ருல் இன்று பெரிதும் எளிதாக்கப்பட்டிருக்கிறது. அந்நாடுகள் தொழில்மயமாக்கும் பொழுது அவை சோவியத் யூனியனுல் சேகரிக்கப்பட்ட அனுபவத்தைத் தயாராக எடுத்துக் கொள்ளுகின்றன. இவை எல்லாம் தொழில் மயமாக்கும் வேகத்தை அதிகரிக்கிறது. அதே நேரத்தில் உலக சோஷலிச அமைப்பு ஒன்று இருக்கிறது என்ற உண்மை, சோஷலிச நாடுகள் கூடிய விரைவில் போதுமான அளவு இராணுவ திறமையை அடைவதற்காக தொழில் மயமாக்கு

வதின் வேகத்தை அதிகரிக்க தேவை இல்லாதபடி ஆக்கியுள்ளது. சோஷலிச நாடுகளின் ஒத்துழைப்பு உலக ஏகாதிபத்தியத்தால் வரக்கூடிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக நம்பிக்கையான பாதுகாப்பு அளிக்கிறது.

சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளில் சோஷலிச தொழில்மயமாக்கல் என்பது மற்ருெரு முக்கியமான பண்புக் கூற்றைப் பெற்றுள்ளது. இன்று சோஷலிசத்தைக் கட்டும் நாடுகள் எல்லாத் தொழில் துறைகளையும் முக்கியமாக கனரகத் தொழிலை எவ்விதத்திலேனும் விருத்தி செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. அந்நாடுகள், இயற்கையாக சாதகமாக உள்ள நிலையிலுள்ள தொழில்களையும், அந்நாடுகளின் மரபு தொழில்களையும் வளர்ப்பதில் அவற்றின் முயற்சிகளை ஒருமுனைப்படுத்துகின்றன. அவ்வாறு செய்வதால் அவற்றை வளர்ச்சியுறச் செய்ய தேவையான திறமையுள்ள உழைப்பு எளிதாகக் கிடைக்கும். உற்பத்தியின் அளவு, அந்த நாட்டின் உள் நாட்டுத் தேவை, பிற நாடுகளின் தேவை ஆகிய இரண்டையும் திருப்தி செய்யுமளவிற்குக் கணக்கிடப்படுகிறது. இவ்வாருக இத்தகையத் தொழில் துறைகளின் உற்பத்திப் பொருள்களுக்கான திட்டமிட்ட பரிவர்த்தனையில் சோஷலிச நாடு அதற்குத் தேவையானவற்றைப் பிற சோஷலிச நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளுகிறது.

## 5. விவசாயத்தைச் சோஷலிச முறையில் புனர் ஒழுங்கமைத்தல்

விவசாயத்தில் தனியார் உற்பத்தி வடிவங்கள் இரண்டு இருப்பதை சோஷலிசப் புரட்சி காண்கிறது. அவையாவன: பெரும் நிலச் சொந்தக்காரர்கள், முதலாளித்துவக் குத்தகைக்காரர்கள் ஆகியோரின் சொத்து, விவசாய சிறு பண்ணைகள் ஆகும். மக்கள் அரசாங்கம் பெரும் நிலச் சொந்தக்காரர்களின் நிலவுடைமையை சுரண்டும் அம்சமாகக் கருதுகிறது. அவைகள் தேசியமயமாக்கப்பட்டு, அவைகளுக்குப் பதிலாக அரசு பண்ணைகள் நிறுவப்படுகின்றன. இத்தகைய அணுகு முறையை விவசாயிகளின் பண்ணைகளுக்கு எடுக்கக்

கூடாது. ஏனெனில் விவசாயிகள், உழைப்பாளிகள், மேலும் அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர முயற்சிகளுக்கு ஒத்துழைக்கும் நேச சக்திகள். இவ்வாறாக சிறு விவசாய பண்ணைகள் தேசியமயமாக்கப்படவில்லை. ஆனால் கூட்டுறவை உருவாக்குவதின் மூலம் அவை பெரிய சோஷலிசப் பண்ணைகளாக புனர்நிர்மாணிக்கப்படுகின்றன.

### நிலத்தை தேசியமயமாக்குவதும் விவசாயிகளுக்கு நிலத்தை சொத்தாக ஒதுக்குவதும்

நிலவுடைமையைப் புரட்சிகரமாக புனர் ஒழுங்கமைத்தலானது, விவசாயத்தைச் சோஷலிச முறையில் சீர்திருத்துவதற்கான மிகப்பெரிய முன்தேவையாக இருக்கிறது. அது இரு வழிகளில் நிறைவேற்றப்படுகிறது. வழியைத் தேர்ந்தெடுப்பது விவசாயிகளின் நலன்களால் தீர்மானிக்கப்படுகிறது. விவசாயிகளிடையே தனியார் நிலவுடைமை மரபுகள் வளர்ச்சியடையாத நாடுகளில் (ருஷ்யா, மங்கோலியா) விவசாயிகள் எல்லா நிலங்களையும் தேசியமயமாக்க வேண்டும் என்றனர். பெரும் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலங்களை அரசு பறிமுதல் செய்ய வேண்டும் என்றனர். இந்த நிலங்கள் பின்னால் விவசாயிகளுக்கு, ஈடற்ற முறையில் திருப்பிக் கொடுக்கப்பட்டன. விவசாயிகளிடம் தனியார் நிலவுடைமை மரபு வலிமையாக உள்ள பிற நாடுகளில் விவசாயிகள் நிலத்தை அவர்களுடையச் சொந்த சொத்தாக ஒதுக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். அங்கு நிலத்தை தேசியமயமாக்கல் என்பது முழுவதுமாகச் செய்யப்படவில்லை. ஒரு பகுதியே தேசியமயமாக்கப்பட்டது. தேசியமயமாக்கப்பட்ட நிலத்தில் பெரும் விவசாயப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. பெரும்பாலான நிலங்கள் விவசாயிகளின் சொத்தாகியுள்ளன. இரண்டு விஷயத்திலும் விவசாயப் பிரச்சினை ''நிலத்தில் உழைப்பவர்களுக்கே நிலம்'' என்ற கோஷத்தின் படி தீர்க்கப்படுகிறது.

## விவசாயக் கூட்டுறவுப் பண்ணைகளை உருவாக்குவது

சிறு விவசாய பண்ணைகள் இயந்திரங்களைப் பயனுள்ளதாகவும் பெருமளவிற்கும் பயன்படுத்த முடியாது. அவைகள் இதற்கு மிகவும் சிறியவை. தேவையான நிதியும் பற்ருது. அவற்ருல் உற்பத்தியை விரிவுப்படுத்த போதுமான அளவு வசதி செய்ய முடியாது. விவசாயிகளின் சேம நலனை அதிகரிக்கவும் முடியாது. கிராமப் புறங்களில் சிற்றளவு பண்ணை உற்பத்தியின் பேராதிக்கம் விவசாயத்திற்கும், பெரிய சோஷலிச தொழில் நிலையங்கள் பேராதிக்கம் செலுத்தக் கூடிய தொழில் துறைக்கும் இடையிலான சமத்துவமற்ற நிலைக்கான மாருத மூலாதாரமாகும். மேலும் சிறு விவசாயப் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி, முதலாளித்துவத்தை உருவாக்குகிறது, நாட்டுப் புறங்களில் ஒரு சுரண்டும் படிநிலையை—குலாக்குகளை வளர்க்கிறது. இது, சிறு விவசாய உற்பத்தியை, பெருமளவில் இயந்திரங்களைப் பயன்படுத்தக் கூடிய பெருமளவு சோஷலிச மாதிரியான உற்பத்தியாக புனர் ஒழுங்கமைக்க வேண்டிய அவசியத்தை உண்டு பண்ணுகிறது. சோஷலிசத்தைக் கட்டும் ஒரு நாட்டில் இதை, விவசாயிகள் தாங்களே முன்வந்து கூட்டுறவுப் பண்ணைகளை உருவாக்குவதின் மூலம் சாதிக்க முடிகிறது.

கூட்டுறவுத் திட்டம் லெனினுல் வகுக்கப்பட்டு உறுதிப் படுத்தப்பட்டது. அதனுடைய முக்கிய கோட்பாடுகளாவன: (1) கூட்டுறவுகள் தாஞக முன் வந்து உருவாக்கப்பட வேண்டும்; (2) புனர் ஒழுங்கமைத்தல் படிப்படியாக இருக்க வேண்டும், (3) அரசு கூட்டுறவுகளுக்குப் பொருளாயத மற்றும் ஒழுங்கமைப்பு உதவிகளைச் செய்ய வேண்டும், (4) புனர் ஒழுங்கமைப்பு வடிவத்தைத் தேர்ந்தெடுக்கும் பொழுது விவசாயிகளின் நலன்களை முழுவதுமாக நிறைவேற்றக் கூடிய வடிவம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அது கூட்டுறவு வடிவம் தான்.

சிறு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியைச் சோஷலிச புனர் ஒழுங்கமைப்பதானது தாஞக முன் வந்து செய்யும் அடிப்படையில் தான் நடைபெற முடியும். கூட்டுறவு இலாபகரமானது என்பதை விவசாயிகளுக்குக் காட்ட வேண்டும்.

அப்பொழுது தான் இந்தக் கருத்தை அவர்கள் ஆதரித்து அவர்களாகவே கூட்டுறவுப் பண்ணைகளை அமைப்பார்கள். படிப்படியாக அணுகும் பொழுது இந்த வேலையைச் சமாளிப்பது மிகவும் எளிது. விவசாயிகள் ஓர் உயர்தர கூட்டுறவு ஸ்தாபனத்தை உடனே அமைக்காவிடில், ஆரம்பத்தில் புழக்க வட்டாரத்தில் (நுகர்வோர்களின் கூட்டுறவும், மார்க்கெட் கூட்டுறவும்) கூட்டுறவுகளை உருவாக்க வேண்டும் அல்லது பரஸ்பர உதவி குழுக்கள், நிலத்தில் கூட்டு உழைப்பு குழுக்கள் போன்ற உற்பத்தியாளர்களின் மிக சாதாரண கூட்டுறவு வடிவங்களை உருவாக்க வேண்டும். பின்னல் அதைத் தொடர்ந்து உயர்தர உற்பத்தியாளர்களின் கூட்டுறவுகளை உருவாக்க வேண்டும். சோவியத் யூனியனில் இது ஆரம்பத்தில் விவசாயக் கழகமாக இருந்தது. ஆனல் இப்பொழுது அது கூட்டுப் பண்ணையாக உள்ளது. அதில் நேற்றைய சிறு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளர்களாகிய கூட்டுப் பண்ணை விவசாயிகளின் தனிப்பட்ட ஆர்வங்கள் அவர்களுடைய சமுதாய நலன்களுடன் மிக நன்ருக இணைக்கப்பட்டுள்ளன. ஒரு கூட்டுப் பண்ணையில் பொதுப் பொருளாதாரத்தைத் தவிர கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்குச் சொந்தமாக துணையாக உள்ள சிறு உடைமைகளும் உள்ளன. பொதுப் பொருளாதாரத்திலிருந்து கிடைக்கும் வருமானம் கூட்டுப் பண்ணை விவசாயிகளிடையே ஒவ்வொருவரும் செய்த வேலைக்குத் தக்கவாறு வினியோகிக்கப்படும்.

விவசாயிகளுக்கு நிலத்தை அவர்களுடைய சொத்தாக ஒதுக்கப்பட்ட மற்ற சோஷலிச நாடுகளில், உயர்தர கூட்டுறவு வடிவத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்பு இடைக்கட்டக் கூட்டுறவு வடிவம் பயன்படுத்தப்படுகிறது. இங்கு பொதுப் பொருளாதாரத்திலிருந்து கிடைக்கும் வருமானம், வேலை செய்ததற்குத் தக்கபடி (பெரும் பகுதி) வினியோகிக்கப்படுவதோடு மட்டுமல்லாது கூட்டுறவுப் பண்ணையில் சேருவதற்கு வழங்கிய நிலத்தின் பங்கிற்குத் தக்கவும் வினியோகிக்கப்படும் (சிறு பகுதி).

கூட்டுறவுப் பண்ணைகளுக்குச் சோஷலிச அரசிடமிருந்து நிலையான உதவி தேவை. சோஷலிச அரசு கூட்டுறவுப் பண்ணைகளுக்கு சுலப நிபந்தனைகளில் கடன்களை வழங்கு

கிறது; இயந்திர-டிராக்டர் நிலையங்கள் மூலமாக இயந்திரங்களை அளிக்கிறது, அரசு பண்ணைகளின் பலவித அனுபவத்தை அவைகளுக்குக் கிடைக்கும்படி செய்கிறது.

விவசாயத்தில் சிறு-பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியைக் கூட்டுறவுமயமாக்கல், தேசிய பொருளாதாரத்தின் முக்கிய துறையில் சோஷலிச உற்பத்தி உறவுகளின் வெற்றிக்காக ஏற்பாடு செய்கிறது. அதன் அடிப்படையில் சோஷலிசத்தின் மிகவும் விடாப்பிடியான, அபாயகரமான விரோதிகளுமான குலாக்குகள் அகற்றப்படுகிறார்கள்.

## 6. சோஷலிசத்தின் வெற்றி

இடைக்கட்டக் காலத்தின் இறுதியில் சோஷலிச உற்பத்தி தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் பேராதிக்கம் செலுத்துவதாக மாறுகிறது.

### கம்யூனிச உற்பத்தி முறையின் முதல் கட்டத்தின் வெற்றி

சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளத்தை உருவாக்கல், பொது சோஷலிச உடைமையை அதனுடைய இரு வடிவங்களில் உறுதியாக நிறுவுதல், அத்துடன் சோஷலிச உற்பத்தி உறவுகளின் முறை ஆதிக்கம் செலுத்துதல் ஆகியவை இடைக்கட்டக் காலத்திய பல அமைப்புகளைக் கொண்ட பொருளாதாரம் சோஷலிச உற்பத்தியால் எங்கும் மாற்றீடு செய்யப்படுகிறது. கம்யூனிச உற்பத்தி முறையின் முதல் கட்டம் இவ்வாறாக உறுதியாக நிறுவப்பட்டுள்ளது.

1937ல் சோவியத் யூனியனில் பெருமளவு தொழில் உற்பத்தி 1913ல் இருந்ததை விட எட்டு மடங்கு அதிகமாக இருந்தது. தொழில் துறை உற்பத்திப் பொருள்களின் 80 சதவீதம், புதிய அல்லது முற்றிலும் நவீனமயமாக்கப்பட்ட தொழில் நிலையங்களிலிருந்து பெறப்பட்டது. தொழில் துறையில் உழைப்பின் உற்பத்தித் திறன் 3,2 மடங்கு அதிகரித்துள்ளது. சோவியத் யூனியன் ஒரு பலம் வாய்ந்த தொழில் துறை நாடாக மாறியுள்ளது.

தேசிய பொருளாதாரம் முழுவதிலும் சோஷலிச தொழில் நிலையங்கள் பேராதிக்கம் செலுத்த ஆரம்பித்தன. 1937ல் அவை 99.1 சதவீத தேசிய வருவாயையும் 99.8 சதவீத தொழில் துறை உற்பத்திப் பொருள்களையும் 98.5 சதவீத விவசாய உற்பத்திப் பொருள்களையும் (கூட்டுப் பண்ணை விவசாயிகள், தொழிலாளர்கள், அலுவலக வேலை யாட்கள் ஆகியோரின் சிறு சொந்த துணை நிலங்கள் உள்பட) உற்பத்தி செய்தன.

சோஷலிசத்தின் வெற்றி சமுதாயத்தின் வர்க்கக் கட்ட மைப்பில் வெளிப்பட்டது. சுரண்டல்காரர்கள் அகற்றப் பட்டனர். மக்கள் தொகையில் 50 சதவீதம் தொழிற்சாலைத் தொழிலாளர்களாகவும் அலுவலக வேலையாட்களாகவும் இருந்தனர். கூட்டுப் பண்ணை விவசாயிகளான புதிய வர்க்க மும், கூட்டுறவுகளில் ஸ்தாபன ரீதியாக சேர்ந்த கைவினை ஞர்களும் சேர்ந்து மக்கள் தொகையில் 47 சதவீதமாக இருந்தனர்.

சோஷலிசத்தின் வெற்றியின் காரணமாக நாட்டில் உள்ள பல்வேறு தேசிய இனங்களுக்கிடையேயுள்ள பொருளா தாரச் சமத்துவமின்மை ஒழிக்கப்பட்டது. வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. சோவியத் யூனியனில் 1940ல் தொழில் துறை, நிர்மாணம் ஆகிய தொழிலாளர்களின் வருமானங் கள் 1913ம் ஆண்டில் இருந்ததை விட 2,7 மடங்கு அதிக மாக இருந்தன. விவசாயிகளின் உண்மையான வருமானங் கள் 2,3 மடங்கு அதிகமாக இருந்தன.

## கலாசாரப் புரட்சியின் வெற்றி

சோஷலிசத்தைக் கட்டுவதற்கு, மக்களின் கலாச்சார நிலை கணிசமான அளவு உயர்த்தப்படுவது தேவைப்படுகிறது. சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளம் பெருமளவு இயந்திர உற்பத்தி ஆகியவற்றிற்கு திறமைமிக்க தொழிலாளர்களும், உயர் அல்லது செகண்டரி கல்வித் தர முடைய நிபுணர்களும் தேவையாகும். உற்பத்திப் பெருகப் பெருக விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவையும் முன்னேற்ற மடையும். இவை எல்லாம், தொழிலாளர்கள், கூட்டுப்

பண்ணை விவசாயிகள் ஆகியோரின் உயர்ந்த கலாச்சார, தொழில் நுணுக்க தரத்தை அவசியமாக்குவதோடு, மக்களிடமிருந்து தோன்றி, மக்களுக்காகவே முழுவதுமாக அர்ப்பணிக்கப்படக் கூடிய அறிவுஜீவிகளை உருவாக்குவதைத் தேவையாக்குகிறது.

கலாச்சாரத்தில் பின்தங்கி இருத்தலை அகற்றுதல், பொதுக்கல்வியிலும் மக்களின் கலாச்சார, தொழில்நுணுக்க நிலையிலும் ஒரு கூர்மையான முன்னேற்றம் ஆகியவை சோஷலிசப் புரட்சியின் ஒரு பகுதி, அதுவே ஒரு கலாசாரப் புரட்சியும் ஆகும். அது சமுதாயத்தின் கலாசார வளர்ச்சியின் மாபெரும் முன்னேற்றத்தைக் குறிக்கிறது. சோஷலிச சித்தாந்தத்தின் அடிப்படையில் அது வளர்ச்சியடைய ஆரம்பிப்பதால் கலாசாரம் ஒரு பண்பு ரீதியான மாற்றமடைகிறது.

சோவியத் யூனியனுக்கு கலாசாரப் புரட்சி என்பது குறிப்பிட்ட முக்கியத்துவமுடையது. புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்கு கல்வியறிவற்றவர்கள். இடைக்கட்டக் கால முடிவு வாக்கில் உண்மையில் கல்லாமை ஒழிக்கப்பட்டது. கலாசாரப் புரட்சியின் விளைவால் சோவியத் யூனியன் விஞ்ஞானத்தில் முன்னேறிய நாடாகியது; உருவத்தில் தேசியமான, உள்ளடக்கத்தில் சோஷலிச கலாச்சாரத்தை கொண்ட நாடாகியது.

## வரலாற்றில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் இடைக்கட்டக் காலத்தின் இடம்

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் இடைக்கட்டக் காலம் பழைய முதலாளித்துவ சமுதாயம் ஒரு புதிய கம்யூனிச சமுதாயமாக மாறும் புரட்சிகரமான மாற்றக் காலம் ஆகும். பாட்டாளிகளின் கையில் ஆட்சி வந்தவுடன் இடைக்கட்டக் காலம் ஆரம்பிக்கிறது. சோஷலிசத்தின் முக்கியமான பண்புக் கூறுகள் அதாவது கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டம் கட்டப்பட்ட பின் இடைக்கட்டக் காலம் முடிகிறது. சோவியத் யூனியனில்

இடைக்கட்டக் காலம் 1917ல் தொடங்கியது; 1937ல் முடிவடைந்தது.

கம்யூனிச உற்பத்தி முறையின் முதல் கட்டமான சோஷலிசத்தின் வெற்றியானது சமூக மேல்கட்டுமானம் முழுவதிலும் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நாட்டிலுள்ள வெவ்வேறு தேசிய இன மக்களிடையே நட்புறவு அதிக வலுவுடையதாகிறது; சமுதாயம் ஒழுக்க ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒன்றுசேர்கிறது; சோஷலிச சித்தாந்தம், நாட்டுப்பற்று ஆகியவற்றின் ஆதிக்கம் உறுதியாக நிறுவப்படுகிறது. சோஷலிசத்தைக் கட்டுவதைப் பூர்த்தி செய்யும் வேலையையும், வளர்ச்சியுற்ற சோஷலிசத்தை உருவாக்குவதையும் சமுதாயம் மேற்கொண்டுள்ளது.

## 7. முதலாளித்துவத்தைத் தாண்டி சோஷலிசத்தைக் கட்டுவதிலுள்ள குறிப்பிட்ட பண்புக் கூறுகள்

பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாடுகள், முதலாளித்துவத்தின் அல்லது முன்னேற்றமடைந்த முதலாளித்துவக் கட்டத்தின் வழியே கடந்து செல்லாமல் சோஷலிசத்திற்குச் செல்வதற்கான பிரச்சினை முதல் முதலில் லெனினால் முழுவதும் தீர்க்கப்பட்டது. அவர் பின்வருமாறு எழுதினார்: ''முன்னேற்றமடைந்த நாடுகளிலுள்ள பாட்டாளி மக்களின் உதவியுடன் பின்தங்கிய நாடுகள், முதலாளித்துவ கட்டம் வழியே கடந்து செல்லாமல் சோஷலிச அமைப்புக்குச் செல்ல முடியும்''.* இவ்வாறாக லெனின் சமுதாயம் சோஷலிசத்திற்கு மாறுவதைப் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனைகளை வளர்த்தார். பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நாடுகளுக்கும், மக்களுக்கும் ஒரு புதிய சமுதாயத்தை நிறுவுவதற்கும், எல்லா விதமான சுரண்டல்களிலிருந்தும் உழைக்கும் மக்கள் விடுதலைப் பெறுவதற்குமான போராட்டத்தின் ஒரு தெளிவான எதிர்கால வாய்ப்பு காட்டப்பட்டுள்ளது.

* V. I. Lenin, *Collected Works,* Vol. 31, p. 244.

## புரட்சிகரமான சீர்திருத்தங்களின் முக்கிய கட்டங்கள்

வளரும் நாடுகள் புரட்சிகரமான சீர்திருத்தங்களின் இரு கட்டங்களின் வழியே கடந்து செல்லுகின்றன. முதல் கட்டம், ஏகாதிபத்திய-எதிர்ப்பு, தேசிய விடுதலைப் புரட்சியாகும். அது முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சி, சோஷலிச திசை நோக்கிச் செல்வதான கட்டமாகும். இது அவசியம் ஏன் எனில் பின்தங்கிய நாடுகளில் சோஷலிசத்தைக் கட்டுவதற்கான உடனடியான நிலைமைகள் இல்லை; உற்பத்திச் சக்திகளின் தரம் மிகவும் குறைவானது; முதலாளித்துவத்திற்கு முந்திய சமூக-உறவுகளின் வடிவங்கள் பேராதிக்கம் செலுத்துகின்றன; பாட்டாளிகளே இல்லை அல்லது அவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தனர்.

சோஷலிச திசை நோக்கிச் செல்லும் தேசிய விடுதலைப் புரட்சியானது சோஷலிசத்தைக் கட்டுவதற்கான தொடக்கத்திற்கு வழி வகுக்கிறது. நாட்டில் மக்களின் ஆட்சி நிறுவப்படுகிறது; வெளி நாட்டு ஏகபோகங்களின் நடவடிக்கை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுகிறது, தடுக்கப்படுகிறது, பிறகு முழுவதுமாக நிறுத்தப்படுகிறது; வங்கிகளும் பெரிய தொழில் நிலையங்களும் தேசியமயமாக்கப்படுகின்றன; பொருளாதாரத்தில் பொதுத் துறை நிறுவப்படுகிறது, விரிவாக்கப்படுகிறது; தொழில்மயமாக்கல் தொடங்கப்படுகிறது; விவசாய சீர்திருத்தங்கள், விவசாயிகள், கைவினைஞர்கள் ஆகியோரிடையே கூட்டுறவுகளைப் பெருமளவு அமைப்பது நடைபெறுகிறது; வாணிபத்தில் கட்டுப்பாடு, குறிப்பாக வெளிநாட்டு வாணிகம், உள்நாட்டு மொத்த வாணிகம் ஆகியவற்றில் கட்டுப்பாடு செயல்படுத்தப்படுகிறது.

புதிதாக விடுதலைப் பெற்ற இளம் நாடுகளில் சுதந்திரமான வளர்ச்சி வழியைத் தேர்ந்தெடுக்கும் நாடுகள், இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்கான தேவையான நிலைமைகள் எல்லாவற்றையும் அனுபவிக்கின்றன. முக்கியமான நிலைமை, உலக சோஷலிச அமைப்பு ஒன்று நிலவுவதாகும். சோஷலிச நாடுகள் வளரும் இளம் நாடுகளுக்கு எல்லாவித உதவிகளையும் அளித்து ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய நாடு

களின் இராணுவ தாக்குதலின் சாத்தியத்திலிருந்து பாது காப்பளிக்கின்றன. எவ்வாருயினும், ஏகாதிபத்திய-எதிர்ப்பு, தேசிய விடுதலைப் புரட்சி சுமுகமாக முன்னேறுகிறது என்ருே சோஷலிச திசை நோக்கிச் செல்வதற்கான பணிகள் தனக்குத் தானே நிறைவேற்றப்படும் என்ருே பொருளல்ல. உள்நாட்டு, வெளிநாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கு எதிரான கடுமையான போராட்டத்தில் தான் வெற்றியை அடைய முடியும்.

உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியுற்று தொழிலாளி வர்க் கம் நிலைத்திருப்பதற்கான பொருளாயத அடிப்படையாக இருக்கும் தொழில் துறை உருவாக்கப்பட்ட பிறகு, சமு தாயத்தை ஜனநாயக ரீதியாக மாற்றும் மற்ற எல்லா பிரச்சினைகளும் தீர்க்கப்பட்ட பிறகு, தொழிலாளி வர்க்கத் தால் தலைமை தாங்கி வழி நடத்தப்படும் உழைக்கும் விவ சாயிகள், நகர்புற மத்தியத் தர பகுதியினர், இளம் மக்கள் ஆகியோர் ஒரு வலுவான சமூக சக்தியாக ஒன்று திரட்டப் பட்ட பிறகு, மார்க்சிய-லெனினியக் கட்சியால் வழி நடத்தப் படும் தொழிலாளி வர்க்கம் நகர்புற, நாட்டுப்புற உழைக் கும் மக்களுடன் கூட்டணியமைத்து ஆட்சி அதிகாரத்தை தன் கையில் எடுத்து பாட்டாளி சர்வாதிகாரத்தை நிறுவிய பிறகு தான் நாடானது சோஷலிசத்தைக் கட்டுவதை நோக்கமாகக் கொண்ட சோஷலிசப் புரட்சிக் கட்டத்தைத் தொடங்குகிறது.

முதலாளித்துவக் கட்டம் வழியே கடந்து செல்லாமல் சோஷலிசத்தை அடையும் சாத்தியக் கூற்றைப் பற்றிய மார்க் சிய-லெனினியப் போதனையின் உண்மையை வரலாறு காட்டியிருக்கிறது. இந்த வழி தான் மத்திய ஆசியா, தூர வடதிசை ஆகியவற்றிலுள்ள சோவியத் மக்களாலும், மங் கோலிய உழைக்கும் மக்களாலும் கடைபிடிக்கப்பட்டது. இரண்டாவது உலகப் போரிலிருந்து வியத்நாம் மக்களால் முன்னேறிய முதலாளித்துவத்தைத் தாண்டி சோஷலிசத்தை நோக்கிச் செல்லும் இதைப் போன்ற பாதை ஒன்று கடை பிடிக்கப்படுகிறது.

அத்தியாயம் 13

# உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை

## 1. உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையும் அதனுடைய இரு வடிவங்களும்

பொருளாதார வகையினமாகிய உடைமையானது, பொருளாயத நன்மைகள் அல்லது பொருள்கள் ஆகியவற்றைத் தங்களுடைய உரிமையாக்குவது சம்பந்தமான மக்களிடையேயுள்ள உறவுகளை வெளிப்படுத்துகிறது. இத்தகைய உறவுகள் அதாவது உடைமை உறவுகள் சமூக உற்பத்தி உறவுகளின் முறையை முழுவதும் ஊடுருவிச் செல்லுகின்றன. தீர்மானிக்கும் பங்கு உற்பத்திச் சாதனங்களின் உடைமையால் செயல்படுத்தப்படுகிறது. அது உற்பத்தியின் அடிப்படை நிலைமைகள் சம்பந்தமான மக்களிடையேயுள்ள உறவுகளைப் பிரதிபலிக்கிறது.

### உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையும் சோஷலிச உற்பத்தி உறவுகளின் குணம்சமும்

சோஷலிசத்தின் கீழ், உற்பத்திச் சாதனங்களின் மீது சமூக உடைமை பேராதிக்கம் செலுத்துகிறது. சமுதாய உறுப்பினர்களிடையேயுள்ள உறவுகளை அதாவது உற்பத்திச் சாதனங்களை உழைக்கும் மக்கள் கூட்டாக உரிமையாக்குவதில் உள்ள உறவுகளை அது பிரதிபலிக்கிறது. சோஷலிசத்தின் கீழ், உடைமையுள்ளவர்கள் என்றும் உடைமையில்லாதவர்கள் என்றும் சமுதாயத்தில் பிரிவு இல்லை என்பது இதன் பொருள். உற்பத்தியின் பொருளாயத நிலைமைகளின் கூட்டு எஜமானர்களாக உழைக்கும் மக்கள் உள்ளனர். சுரண்டலிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களின் இணைப்பு

ஒன்றை அவர்கள் உருவாக்குகிறார்கள். ஏன் எனில் உழைக்கும் மக்களே உற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரர்கள். அதனால் கூலி உழைப்புச் சுரண்டல் ஒழிக்கப்பட்டுள்ளது.

உற்பத்திச் சாதனங்களுடன் உழைப்புச் சக்தி தொடர்பு படுத்தப்பட்டுள்ளதின் புதிய முறையை உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை தீர்மானிக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்களிடமிருந்து உற்பத்திச் சாதனங்கள் பறிக்கப்பட்டு, அவர்கள் அவர்களுடைய உழைப்புச் சக்தியை முதலாளிகளுக்கு விற்க வேண்டியுள்ளது. இது சோஷலிசத்தின் கீழ் அவசியமில்லை. உற்பத்திச் சாதனங்களின் கூட்டு உடைமையாளர்களான உழைக்கும் மக்கள் அவர்களுடைய உழைக்கும் சக்தியை உற்பத்திச் சாதனங்களுடன் இணைக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய உழைப்புச் சக்தியை யாருக்கும் விற்பதில்லை. அதனால் அது ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகுவது நிறுத்தப்படுகிறது.

சோஷலிச உற்பத்தி உறவுகளின் முறை முழுவதிலும் உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை தீர்மானிக்கும் உறவுவாக உள்ளது. அது, உற்பத்தியில் சமுதாய உறுப்பினர்களிடையே நடைபெறும் நடவடிக்கையின் பரிவர்த்தனையின் சமூக வடிவங்கள் தவிர, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவற்றின் உறவுகளின் குணும்சத்தையும் வடிவங்களையும் தீர்மானிக்கிறது. இத்தகைய உறவுகளெல்லாம் மக்களின் நலன்களுக்காக வளர்க்கப்படுகின்றன. உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை சோஷலிச உற்பத்தி உறவுகளின் உள் அடக்கத்தை பொதுவாக, சுரண்டலிலிருந்து விடுதலைப் பெற்ற உழைக்கும் மக்களிடையே நட்புறவு மற்றும் பரஸ்பர உதவி உறவுகளை தீர்மானிக்கிறது.

## உற்பத்தி சாதனங்களின் சமூக உடைமையின் இரு வடிவங்கள்

சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை இரு வடிவங்களில் உள்ளது. அவையாவன: அரசு (பொது) சொத்து மற்றும் கூட்டுப் பண்ணை-கூட்டுறவு (கூட்டுக் குழு) சொத்து. அதற்கு காரணம், தொழிலாளி வர்க்

கம், கூட்டுறவு விவசாயிகளின் வர்க்கம் (கூட்டுப் பண்ணை விவசாயிகள்) என்ற சோஷலிச சமுதாயத்தின் இரு நட்பு வர்க்கங்கள் கம்யூனிசத்தை நோக்கிய அவற்றின் முன்னேற்றத்தில் இரு வெவ்வேறு பாதைகளை கடைப்பிடிப்பதாகும். முதலாளித்துவ தொழில் நிலையங்களை தேசியமயமாக்கிய தன் விளைவால் தோன்றிய அரசு (பொதுமக்கள்) சொத்தை தொழிலாளர்கள் அவர்களுடைய உற்பத்திக்கு அடிப்படையையாகக் கொண்டுள்ளனர். கூட்டுப் பண்ணை விவசாயிகள் தாங்களே முன் வந்து தங்களுடைய தனிப்பட்ட உற்பத்திச் சாதனங்களைக் குவித்து கூட்டுறவுச் சொத்தை உருவாக்குகிறார்கள்.

சமூக உடைமையின் இரு வடிவங்களும், உற்பத்திச் சாதனங்களை கூட்டு உரிமையாக்கும் ஒத்த உறவுகளை வெளிப்படுத்துவதாலும் அவை உற்பத்தி செய்யும் உறுப்பினர்களிடையே நட்புமுறை ஒத்துழைப்பையும் பரஸ்பர உதவியையும் ஏற்படுத்துவதாலும் அவை இரண்டும் ஒரே வகையானவை.

அப்படியிருப்பினும் அவை இரண்டிற்கும் இடையிலும் கூட ஒரு வேறுபாடு உண்டு. அரசு சொத்து என்பது மிகவும் வளர்ச்சியடைந்த ஓர் உறவு. உற்பத்திச் சாதனங்களையும், உற்பத்திப் பொருள்களையும் சமுதாயம் முழுவதற்குமாக ஒட்டு மொத்தமாக சமூகமயமாக்கலை அது வெளிப்படுத்துகிறது. கூட்டுறவு-கூட்டுப் பண்ணை சொத்து, கூட்டுறவு உறுப்பினர்கள் அடங்கிய அந்த ஸ்தாபனங்களின் வரைக்குள் மட்டுமே சமூகமயமாக்கலைக் குறிக்கிறது.

தொழிற் சங்கங்களும், பிற சமூக நிறுவனங்களும் அவற்றின் வேலைகளை நிறைவேற்ற தேவைப்படும் சொத்து கூட சோஷலிச சொத்தாகும்.

பொதுவாக, சோஷலிச உடைமை உறவுகளின் முறை, உற்பத்தி உறவுகள் ஆகியவற்றிலும் சோஷலிச தேசியப் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னணிப் பங்காற்றும், மற்றும் தீர்மானிக்கும் பங்கு உற்பத்திச் சாதனங்களின் அரசுடைமையைச் சாரும். தேசியப் பொருளாதாரம் முழுவதையும் ஒரே ஓர் உற்பத்தி பொறியமைவாக, ஒரே ஒரு மாபெரும் தொழில் நிலையமாக மாற்றக் கூடிய தீர்மானமான காரணி

இதுவாகும். எல்லா உற்பத்திச் சாதனங்களின் பெரும் பகுதி அதற்கு சொந்தம். அவை பொருளாதாரத்தின் எல்லா துறைகளிலும் உற்பத்தி நிதிகளுடன் கூடிய அரசு தொழில் நிலையங்கள், போக்கு வரத்து, வங்கிகள், நிலம், அதன் வளம், நீர்நிலைகள், காடுகள் ஆகியவையாகும். அரசுக்குச் சொந்தமான சாதனங்கள் கூட்டுறவு உற்பத்தியை உருவாக்குவதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. உற்பத்திச் சாதனங்களின் அரசுடமையானது கூட்டுறவு சொத்தின் சோஷலிச தன்மையைத் தீர்மானிக்கிறது. உற்பத்திச் சாதனங்களின் சோஷலிச அரசுடமை சமுதாயத்தில் பேராதிக்கம் செலுத்தும் பொழுது மட்டுமே கூட்டுறவு சோஷலிசக் கூட்டுறவு ஆகிறது. லெனின் பின்வருமாறு எழுதினர்: ''நம்முடைய தற்போதைய அமைப்பில் கூட்டுறவு நிலையங்கள்... அமைந்துள்ள நிலமும் அவற்றின் உற்பத்திச் சாதனங்களும் அரசுக்கு, அதாவது தொழிலாளி வர்க்கத்துக்குச் சொந்தமாயிருக்குமாயின் அவை சோஷலிச நிலையங்களிலிருந்து மாறுபடுகிறவை அல்ல.''* இறுதியாக, உற்பத்திச் சாதனங்களின் அரசு உடைமையானது மற்ற பொருள்களுக்கிடையில் கூட்டுறவு உற்பத்தியின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றின் மூலாதாரமாக இருப்பதால் அது கம்யூனிசத்தை நோக்கிச் செல்லும் தேசிய பொருளாதார முற்போக்கு வளர்ச்சியின் முக்கிய மூலாதாரமாகும்.

இதன் தொடர்பாக சோஷலிச சொத்தைக் கூட்டுறவுச் சொத்தாக கருதுவதைப் பற்றிய பிழையானதும் தீங்கு பயப்பதுமான கருத்துக்கள், அரசு தொழில் நிலையங்களைத் தனிப்பட்ட உழைக்கும் மக்களின் ஸ்தாபனங்களுக்கு மாற்றும் திட்டங்கள் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும். இத்தகைய ஆலோசனைகளை அமுலாக்குவது முன்னணியும் தீர்மானமானதுமான அரசு உடைமையின் பங்கு வெளிப்படுத்தப்படுகிற எல்லாவற்றையும் நீக்கிவிட்டு சோஷலிசப் பொருளாதாரத்தின் அடிப்படைகளை அரித்தழிக்கும். அதை தவிர, அரசு சோஷலிச சொத்தை அகற்றுவதானது சமூக உற்பத்தி

* வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்காம் பாகம், மாஸ்கோ, 1978, பக்கங்கள் 383-384.

யின் திட்டமிட்ட, சரிசம வளர்ச்சி, தேசிய பொருளாதாரத்தின் மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் ஆகியவற்றின் முடிவை அது குறித்திருக்கும். ஏனெனில் இவையெல்லாம் உற்பத்திச் சாதனங்களின் அரசுடைமையுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன. தேசிய பொருளாதாரமானது, அராஜகம், தன்னியல்பான மார்க்கெட் சூழ்நிலை, அவற்றின் எல்லா விளைவுகளும் அதாவது மீண்டும் மீண்டும் ஏற்படும் உற்பத்தியின் பின்னடைவு, வேலையின்மை, பணவீக்கம், விலை உயர்வு, இது போன்றவைகளால் கைவிடப்படலாம்.

## இரு விதமான சோஷலிச நிலையங்கள்

உற்பத்திச் சாதனங்களின் சோஷலிச பொது மக்கள் உடைமையின் இரு வடிவங்களுக்கேற்ப அரசு தொழில் நிலையங்கள், கூட்டுறவு நிலையங்கள் என்ற இரு வகை சோஷலிச நிலையங்களாக உள்ளன. கூட்டுறவு நிலையங்கள் விவசாயத்தில், (விவசாயக் கூட்டுறவுகள்—**கூட்டுப் பண்ணைகள்**), தொழில் துறையில், வீடு கட்டுவதில், மற்றும் இது போன்றவற்றில் காணலாம். அவற்றின் சமூக-பொருளாதாரத் தன்மையில், அரசு, கூட்டுறவு தொழில் நிலையங்கள் ஆகியவை உற்பத்திச் சாதனங்களின் ஒரே மாதிரியான பொது உடைமை வடிவங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அவை ஒரே மாதிரியாகவுள்ளன. அவை கூலி உழைப்புச் சுரண்டலை உள்ளடக்கியவை அல்ல. அவை உழைக்கும் மக்களின் நலன்களுக்காக செயல்படுபவை. உழைக்கும் மக்களிடையே நட்புறவு ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் தோன்றுகின்றன.

அதே நேரத்தில் இத்தகைய நிலையங்களுக்கிடையே தனிச் சிறப்புகள் உள்ளன. அரசு தொழில் நிலையங்களின் உற்பத்திச் சாதனங்களும் உற்பத்திப் பொருள்களும் அரசால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற சமுதாயத்திற்குச் சொந்தம். கூட்டுறவு உற்பத்திச் சாதனங்களும் உற்பத்திப் பொருள்களும் கூட்டுறவுத் தொழில் நிலையங்களின் உறுப்பினர்

களுக்கு சொந்தம். அரசு தொழில் நிலையங்களின் பொருளாதார நடவடிக்கைகள் உற்பத்திப் பொருள்களின் முழு அளவும் விலையாகும்படி அரசால் திட்டமிடப்படுகின்றன. கூட்டுறவுகள், குறிப்பாக கூட்டுப் பண்ணைகள் சமுதாயத்திற்குத் தேவையான ஒரு குறிப்பிட்ட அளவு உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யவும் விற்கவும் அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்கின்றன. மொத்தத்தில் உற்பத்தியின் அளவு கட்டமைப்பு ஆகியவற்றின் மொத்தம் கூட்டுப் பண்ணைகளால் அவற்றின் சொந்த விருப்பத்திற்குத்தக்கபடி திட்டமிடப் படுகிறது. உற்பத்திப் பொருள்களின் ஒரு பகுதி கூட்டுப் பண்ணைகளால் நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு கூட்டுப் பண்ணைச் சந்தைகளில் விற்கப்படுகிறது.

தொழிலாளர்களின் கூலிகள், அரசு தொழில் நிலையங்களில் அரசால் உத்திரவாதமளிக்கப்படுகின்றன. அவை தொழில் நிலையங்களிலுள்ள, அவற்றில் செலவிடக் கூடிய, ஆனால் அரசுக்குச் சொந்தமான நிதியிலிருந்து கொடுக்கப் படுகின்றன. கூட்டுறவுகளில் வேலைகளுக்கான ஊதியம் கூட்டுறவுகளால் உத்திரவாதமளிக்கப்படுகிறது. செய்த வேலைக்குக் கொடுக்க வேண்டிய செலுத்தினங்களின் கூட்டுறவு நிதி, அதனுடைய மூலாதாரமாகும். இருப்பினும் கூட்டுறவுத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதற்காக கூட்டுறவுகளுக்குத் தேவைப்பட்டால் அரசு அவற்றிற்கு கடன் கொடுத்து உதவி செய்கிறது. கூட்டுறவு பொருளாதாரத்திலிருந்து பெறும் வருமானம் தவிர, கூட்டுறவு உறுப்பினர்கள் (கூட்டுப் பண்ணை விவசாயிகள்) அவர்களுடைய துணை சிறு உடைமைகளிலிருந்து வருமானம் பெறுகின்றனர்.

அரசு தொழில் நிலையங்கள் அரசால் நியமிக்கப்பட்ட இயக்குநர்களால் நடத்தப்படுகின்றன. கூட்டுறவுகளை (கூட்டுப் பண்ணைகள்) பொறுத்த மட்டில் அவற்றின் உயர்மட்ட நிர்வாக ஸ்தாபனம் அவற்றின் உறுப்பினர்களின் பேரவைக் கூட்டமாகும். அது ஒரு நிர்வாக குழுவையும் தலைவரையும் தேர்ந்தெடுக்கிறது. அவர்கள் பேரவையின் சார்பில் கூட்டுறவுகளின் நடவடிக்கைகளை நடத்துகின்றனர்.

சோஷலிசத்தின் கீழ் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுகளைத் தவிர, வீட்டுக் கூட்டுறவுகள், வாணிப கூட்டுறவுகள்,

பழத் தோட்டம் மற்றும் வீட்டுத் தோட்டக் கூட்டுறவுகள், நாட்டுப்புற குடிசைக் கூட்டுறவுகள் போன்ற பலவித கூட்டுறவுகள் உள்ளன.

## சோஷலிச சமூக சொத்தின் வளர்ச்சி

சோஷலிச சமூக சொத்து நிலையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதனுடைய வடிவங்கள் படிப்படியாக ஒன்றுக்கு ஒன்று நெருங்கி கொண்டிருக்கின்றன. அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகள் மறைந்து கொண்டிருக்கின்றன. கம்யூனிசத்திற்கு மாறும் பொழுது அவைகள் எல்லாம் ஒரே ஒரு கம்யூனிச தேசிய சொத்தாக இணைந்து விடும்.

விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றத்தின் விளைவால் நடை பெறுகிற உற்பத்தியை ஒருமுனைப்படுத்துதல், தனி சிறப்பு நிலை அடையச் செய்தல், கூட்டுறவு ஆக்கல் ஆகியவற்றால் வளர்ச்சியுற்ற சோஷலிசக் கட்டத்தில் அரசு (பொது) சொத்தின் வளர்ச்சி குணும்சப்படுத்தப்படுகிறது. இவை சமூக உழைப்பின் பிரிவினையை மேலும் விரிவு படுத்துவதையும் தேசிய பொருளாதாரத்தின் வெவ்வேறு பகுதிகளின் இடையே உள்ள பொருளாதாரத் தொடர்புகளை மேலும் சிக்கலாக்கி வலுப்படுத்துவதையும் பிரதிபலிக்கின்றன. பொருளாயத பொருள்களைக் கூட்டாக (பொது மக்களால்) தனதுடைமையாக்குவதில் உழைக்கும் மக்களுக்கிடையேயுள்ள உறவுகள் மேம்பாடு அடைகின்றன.

சமூக உற்பத்தியில் பங்கு கொள்வோரின் குழு உணர்வு, நடவடிக்கைகளில் பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு ஆகியவை அதிகரிக்கின்றன; வளர்ச்சி இன்னும் சிறந்த முறையில் திட்டமிடப்படுகிறது; இந்த அடிப்படையில் தேசிய பொருளாதாரத்தின் நிர்வாகம் மேம்படுகிறது.

கூட்டுறவு உற்பத்தியில் பங்கு கொள்ளுவோர் (கூட்டுப் பண்ணை விவசாயிகள்), அரசு உடைமையை நேரடியாக, மிகவும் விரிவாக பயன்படுத்திக் கொண்டனர். மையப் படுத்தப்பட்ட சமூக நுகர்வு நிதிகளை அவர்கள் அதிகமாக பயன்படுத்துவதில் இது பிரதிபலிக்கிறது. அந்த நிதியின் மூலமாக அவர்களுக்கு இன்னும் சிறந்த முறையில் இலவசக்

கல்வி, இலவச சுகாதாரப் பணி, சமூகப் பாதுகாப்பு (ஓய்வு கால ஊதியம், படிகள், நோய்வாய் பட்டால் கொடுக்கப் படும் பண உதவி உள்பட, இத்தியாதி) ஆகியவை உத்தர வாதம் செய்யப்படுகின்றன.

இவை இரண்டும் அரசு (பொது) சொத்தின் வளர்ச்சியின் அடிப்படையில் உற்பத்தியை சமூகமயமாக்கல் வளர்ந்து கொண்டிருப்பதை குணும்சப்படுத்துகின்றன.

கூட்டுப் பண்ணை-கூட்டுறவு சொத்தும் வளர்கிறது.

முதலாவதாக, விவசாயத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது நிர்மாணம், உற்பத்திப் பொருள்களைத் தயாரித்தல், கால் நடைப் பண்ணைகள், கோழிப் பண்ணைகள் போன்ற பண்ணைகளுக்கிடையிலான இணைப்புகள், அத்துடன் உற்பத்தி, இருப்பு வைத்தல் விவசாயக் கச்சாப் பொருள் களை தயாரித்தல் ஆகிய இணைந்த விவசாய-தொழில் தொகுப்புகளையும் அமைக்க வேண்டியதை அவசர, அவசிய தேவையாக்குகிறது. அவை கூட்டுறவுகளாலும் (கூட்டுப் பண்ணைகளால்) அரசு விவசாய-தொழில் நிலையங்களாலும் அமைக்கப்படுகின்றன. அதன் விளைவாக உற்பத்தியை சமூக மயமாக்கல் அதிகரிக்கிறது. பண்ணைகளுக்கிடையிலான இணைப்புகள் கூட்டுறவுகளால் (கூட்டுப் பண்ணைகளால்) அமைக்கப்பட்டால் உற்பத்தியை சமூகமயமாக்கலானது கூட்டுப் பண்ணை-கூட்டுறவுச் சொத்து தனிப்பட்ட நிலையங் களின் எல்லையை விட அதிக அளவு வளர்வதை வெளிப் படுத்துகிறது. கூட்டுப் பண்ணை-கூட்டுறவு சொத்து உறவு கள் மிகவும் பக்குவமடைகின்றன. கூட்டுறவுகள் (கூட்டுப் பண்ணைகள்) அரசு தொழில் நிலையங்கள் ஆகியவற்றின் பங்கேற்பதுடன் பண்ணைகளுக்கிடையிலான இணைப்புகள், அல்லது விவசாய-தொழில் தொகுப்புகள் அமைக்கப்பட் டால், உற்பத்தி சமூகமயமாக்கப்படலின் வளர்ச்சியானது, ஒரே ஓர் உற்பத்தி நிகழ்ச்சி போக்கில் அரசு மற்றும் கூட்டுறவு உற்பத்திச் சாதனங்களின் கூட்டுப்பங்கினுல் குணும்சப்படுத்தப்படுகிறது. இவ்வாருக அவை இணைக்கப் படுகின்றன.

இரண்டாவதாக, கூட்டுறவுகளுக்கு (கூட்டுப் பண்ணை களுக்கு) அரசால் அளிக்கப்படும் உதவியின் தாக்கத்தால்

கூட்டுப் பண்ணை-கூட்டுறவு சொத்தின் வளர்ச்சி ஏற்படுகிறது. அவற்றிற்கு அரசு நவீன இயந்திரங்களை அதிக அளவில் கொடுக்கிறது; பிற உற்பத்திச் சாதனங்களை அளிக்கிறது; நிபுணர்களை பயிற்றுவிக்கிறது; விவசாய விஞ்ஞானத்தை மேம்படுத்துகிறது; நிலச்சீர்திருத்தம் நீர்பாசானத் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுகிறது; கூட்டுறவுகளுக்கு கடன் உதவிகள் செய்கிறது; இது போன்ற இன்னும் பிற காரியங்களைச் செய்கிறது. இதன் விளைவாக கூட்டுறவு (கூட்டுப் பண்ணை) உற்பத்தி வளர்கிறது; மேம்பாடு அடைகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கின் வேளிப்பாடுகளில் ஒன்றை, கூட்டுறவுகளிலுள்ள உறவுகளும் அரசு தொழில் நிலையங்களிலுள்ள உறவுகளும் ஒன்றுடன் ஒன்று படிப்படியாக நெருங்கி வருவதில் பார்க்க முடியும். உதாரணமாக, 1965ல் சோவியத் கூட்டுப் பண்ணைகளில் வேலைக்கு உத்திரவாதமுள்ள ஊதியம் புகுத்தப்பட்டது. மொத்த வருவாய் வினியோக நிதிகள் கூட்டுப் பண்ணைகளில் அமைக்கப்படுகின்றன. இவை அரசு தொழில் நிலையங்களிலுள்ள நிதிகளை காரியத்திலும் வடிவத்திலும் ஒத்திருக்கும். கலாசார மற்றும் வீட்டுக் காரியங்களுக்கான நிதி, கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கான பண உதவி நிதி, பொருளாயத ஊக்க நிதி, உற்பத்திப் பெருக்க நிதி மற்றும் இவை போன்ற நிதிகளாகும். பண்ணைகளில் வேலை, வாழ்க்கை நிலைமைகள், மேலும் மேலும் நகரங்களில் உள்ளவை போல் ஆகிக் கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் கூட்டுப் பண்ணை-கூட்டுறவு சொத்தின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன.

மூன்றாவதாக, கூட்டுப் பண்ணை-கூட்டுறவு சொத்தின் வளர்ச்சியானது, கூட்டுறவு உறுப்பினர்களின் துணை சிறு உடைமையிலிருந்து கிடைக்கும் வருவாய் பங்குடன் ஒப்பிடப்பட்ட அவர்களின் சொந்த வருவாயின் வளர்ச்சியில் பொதுப் பொருளாதாரத்தின் முக்கியத்துவம் உயர்வதில் வெளிப்படுகிறது.

## தனிப்பட்ட சொத்து

சோஷலிசத்தில் சமூக உடைமை தவிர தனிப்பட்ட உடைமையும் உள்ளது. ஒருபுறம் சோஷலிச சமுதாயத்தின் தனிப்

பட்ட உறுப்பினர்களுக்கும், மறுபுறம் தொழிலாளர்களின் கூட்டுக் குழுக்களுக்கும் பொதுவாக சமுதாயத்திற்கும், இடையே தனிப்பட்ட நுகர்வுப் பொருள்களைப் பெரும்பாலும் தனிப்பட்டவர்கள் தனதுரிமையாக்குவதின் அடிப்படையிலான உறவுகளை இது வெளிப்படுத்துகிறது.

தனிப்பட்ட சொத்து முழுக்க முழுக்க உழைப்பை மூலாதாரமாக கொண்டது. அதாவது அது, தனிப்பட்டவரின் சொந்த உழைப்பிலிருந்து, முக்கியமாக சமூக உற்பத்தியில், வெளியாகிறது. இவ்வாறுகத் தனிப்பட்ட சொத்து சமூக சொத்துடன் உள்ள அதனுடைய தொடர்பை வெளிப்படுத்துகிறது. இந்தச் சொத்து கூலி உழைப்பைச் சுரண்டும் ஒரு சாதனமாக இருப்பதாக இருக்க முடியாது.

சோஷலிசத்தின் கீழ், தனிப்பட்ட சொத்து சமூக உற்பத்தியின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றுடன் வளர்கிறது. உழைக்கும் மக்களுக்கு சொந்தமான தனிப்பட்ட பொருளாயதப் பொருள்களின் அளவு ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வளர்ச்சியுள்ள சோஷலிசக் கட்டத்தில், கலாச்சார மற்றும் வீட்டு உபயோகத்திற்கான பொருள்களின் அளவு முக்கியமாக விரைவாக அதிகரிக்கிறது.

மக்களுடைய தனிப்பட்ட ஆர்வங்களிலும், இத்தகைய ஆர்வங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு எதார்த்தமாக்கவும் அவர்களுடைய பலவித தேவைகளை மிக நிறைவாகத் திருப்திப்படுத்துவதற்கான அவர்களின் முயற்சிகளிலும் தனிப்பட்ட சொத்து வெளிப்படுத்தப்படுகிறது. சமூக உற்பத்தியில் சுறுசுறுப்பாகப் பங்காற்றுவதன் மூலமாகத்தான் அவர்களால் இதை அடைய முடியும். எனவே தனிப்பட்ட ஆர்வங்கள் தொழிலாளர்களின் கூட்டு குழுக்கள், சமுதாயம் முழுவதும் ஆகியவற்றின் ஆர்வங்களுடன் இணைக்கப்பட்டு ஒன்று சேர்க்கப்படுகின்றன.

சோஷலிசத்தில் ஒரு வகை தனிப்பட்ட சொத்துடைமையானது, உற்பத்தியைப் பெருக்கும் கால் நடை, கோழிப் பண்ணை, பண்ணைக் கட்டிடங்கள், அவர்களுடையச் சொந்த உடைமைகளான சிறு கருவிகள் சில ஆகியவற்றினை உடைமையாகக் கொண்ட, கூட்டுறவு (கூட்டுப் பண்ணை) உறுப்

பினர்களின் சொத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. இவையெல்லாம் கூட்டுறவுகளால் அவற்றின் உறுப்பினர்களுக்கு (அவர்களுடைய குடும்பங்களுக்கும்) ஒதுக்கப்பட்ட சிறு நிலங்களின் அடிப்படையிலானவை. சொந்த உடைமையின் அளவு கடுமையாக வரையறுக்கப்பட்டுள்ளது. அது ஒரு துணை இயல்பானதாகத் தான் இருக்க முடியும். தனிப்பட்ட வருமானத்தின் முக்கிய மூலாதாரம் பொதுப் பொருளாதாரமே.

வளர்ச்சியுள்ள சோஷலிசக் காலத்திலும்கூட தனிப்பட்ட துணை உடைமைகள் தேவைப்படுகின்றன. ஆனால் பொதுப் பொருளாதாரம் வளர்ந்து, கூட்டுப் பண்ணை விவசாயிகள் அதிலிருந்து பெறும் வருமானம் அதிகரிக்கும் பொழுது துணை தனி உடைமைகள் அவற்றின் முக்கியத்துவத்தை இழந்து படிப்படியாக மறைந்து விடும்.

## 2. சோஷலிசத்தின் கீழ் பொருளாதார விதிகள்

### சோஷலிசத்தின் கீழ் செயல்படும் பொருளாதார விதிகள்

சோஷலிசத்தின் கீழ், எல்லா சமூக-பொருளாதார அமைப்புகளிலுள்ள சமூக உற்பத்தி வளர்ச்சியை தீர்மானிக்கும் ஒரு பொருளாதார விதி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உற்பத்திச் சக்திகளுக்கு ஒத்திசைவான உற்பத்தி உறவுகளுக்கான ஒரு விதி அது. மதிப்பு விதி கூட செயல்படுகிறது. சோஷலிசத்தின் கீழ் பரிவர்த்தனைப்-பண உறவுகள் செயல்படுவதிலிருந்து அதனுடைய இருத்தல் தோன்றுகின்றது. விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியின் விதியும் செயல்படுகிறது, அதாவது உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியை நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியை விட வேகமாக உயர்த்துவதற்கான அவசியம். அதே நேரத்தில் சோஷலிசத்தின் கீழ் கம்யூனிச உற்பத்தி முறையின் உள்ளார்ந்த விதிகளான, பிரதான பொருளாதார விதி, தேசியப் பொருளாதாரத்தின்

திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சியின் விதி உழைப்பின் உற்பத்தித் திறனின் சீரான உயர்வின் விதி, திரட்சியின் விதி போன்ற விதிகள் செயல்பட ஆரம்பிக்கின்றன. சில பொருளாதார விதிகள், அதாவது செய்த வேலேக்கு ஏற்ற அளவு நுகர்வுப் பொருள்களேயும் சேவைகளேயும் வினியோகிக்கும் விதி, மதிப்பு விதி போன்றவை சோஷலிசக் கட்டத்திற்கு அப்பால் விரிவடையாது.

முந்திய சமூக-பொருளாதார அமைப்புகளேப் போல், சோஷலிசத்தில் செயல்படும் பொருளாதார விதிகளும் புறவயமானவை. அவைகள் புதிதாகக் கண்டு பிடிக்கப்படுபவையல்ல, அவைகள் அழிக்கப்படக் கூடியவை அல்ல, மற்றும் அவைகள் நமது விருப்பத்திற்கு ஏற்ப மாற்றப்படக் கூடியவை அல்ல. அவற்றின் செயல்பாடு, சமுதாயத்தில் நிலவிக் கொண்டிருக்கும் பொருளாதார நிலேமைகள், உற்பத்தி உறவுகளின் பேராதிக்கம் ஆகியவற்றிலிருந்து தோன்றுகிறது. உற்பத்தி உறவுகளின் உள்ளடக்கத்தை அவை வெளிப்படுத்துகின்றன. அதே நேரத்தில் அவை சோஷலிசத்தில் செயல்படும் விதம் முதலாளித்துவத்தில் செயல்படும் விதத்தை விட மாறுபட்டது. சோஷலிச உற்பத்தி உறவுகளின் குண இயல்பு, சமூக உடைமையின் பேராதிக்கம் ஆகியவற்ருல் அது தீர்மானிக்கப்படுகிறது.

## பொருளாதார விதிகளின் அறிவும் பயன்பாடும்

முதலாளித்துவத்தின் கீழ் தனியார் முதலாளித்துவ உடைமை பேராதிக்கம் செய்யும் பொழுது, உற்பத்தியாளர்கள் ஒருவரிடமிருந்து மற்றவர் பிரிக்கப்படும் பொழுது, பொருளாதார விதிகளானது, தன்னியல்பானதும் தற்செயலானதுமான ஒரு சக்தியாக மக்களேக் கையாளுகின்றன.

சோஷலிசத்தின் கீழ், சமூக உற்பத்தி ஒரே ஒரு பொருளாதார அமைப்பாக ஆகிறது. அது உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையால் ஒன்று சேர்க்கப்படுகிறது. திட்டமிட்ட உற்பத்தியின் வளர்ச்சிக்கு அராஜகம் வழி விடுகிறது. பொருளாதார விதிகள், சோஷலிச உற்பத்தி உறவு

களின் உள்ளடக்கத்தை, அதாவது சுரண்டலிலிருந்து விடுதலைப் பெற்ற உழைக்கும் மக்களிடையே நட்புறவிலான ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இவை எல்லாம், பொருளாதார விதிகளைப் பற்றிய ஓர் அறிவையும் அவற்றை சமுதாய நலன்களுக்காக, அதாவது உழைக்கும் மக்களுக்காகப் பயன்படுத்துவதையும் சாத்தியமாக்குவது, தேவையாக்குவது ஆகிய இரண்டையும் செய்கின்றன. சோஷலிசத்தின் கீழ், சமுதாயத்திலுள்ள எல்லா உறுப்பினர்களும், சோஷலிச உற்பத்தி வளர்ச்சியிலும் கம்யூனிசத்தைக் கூடிய விரைவில் கட்டுவதிலும் ஆர்வமுடையவர்கள். பொருளாதார விதிகளைச் சிறப்பாகப் புரிந்து, அவற்றைப் பயன்படுத்திஞல் தான் இந்தக் குறிக்கோளை விரைவில் அடைய முடியும் என்று எல்லோரும் அறிவார்கள். இக்காரணத்திற்காக சோஷலிச நாடுகளிலுள்ள மார்க்சிய-லெனினியக் கட்சிகள் பொருளாதார விஞ்ஞானத்தை வளர்க்கவும் பொருளாதார அறிவை மக்களிடையே பரவலாகப் பரப்பவும் வலுவான நடவடிக்கைகள் எடுக்கின்றன.

சோஷலிசப் பொருளாதார விதிகளின் செயல்பாடு புறவயமானது. ஆகவே அது, சோஷலிசப் பொருளாதார விதிகளுக்குத் தன்னிச்சையான விளக்கம் கொடுப்பதையோ, பொருளாதார நடைமுறையில் அவற்றின் உள்ளடக்கத்தை அலட்சியப்படுத்துவதையோ ஒத்துக் கொள்ளக் கூடியதல்ல. இத்தகையத் தன்விருப்பார்வ செயல் முறை மிக விரும்பத்தகாத விளைவுகளை கொண்டுவர முடியும். பொருளாதார விதிகளுக்கு முன்னுல் மக்கள் சக்தியற்றவர்கள் என்ற எந்த வித மூட நம்பிக்கையையும் ஏற்படுத்தக் கூடாது. சோஷலிசத்தின் கீழ் மக்களால், பொருளாதார விதிகளின் உள்ளடக்கத்தைக் கற்றுக் கொள்ள மட்டுமல்ல, அவை சரியாகச் செயல்படுவதற்கான சிறந்த சாத்தியமான நிலைமைகளையும் ஏற்படுத்த முடியும். இப்படி அவற்றின் முழுமையான மிகவும் பயனுள்ள வெளிப்பாட்டுக்கும் ஒரு பரந்த வாய்ப்பை ஏற்படுத்த முடியும். சோஷலிசத்தின் கீழ், இந்தப் பொருளில் உழைக்கும் மக்கள் அவர்களுடைய சொந்த வரலாற்றை உண்மையாக உண்டாக்குகிறவர்களாகவும் புதிய சமுதாயத்தைச் சுறுசுறுப்பாகக் கட்டுகிறவர்களாகவும் மாறுகிருர்கள்.

## 3. சோஷலிச அரசின் பொருளாதாரப் பங்கு

மார்க்சிய-லெனினியக் கட்சியால் தலைமை தாங்கப் பெற்று வழி நடத்தப்படும் சோஷலிச அரசு சோஷலிசத்தின் கீழ் சமூக உற்பத்தியைக் கண்காணிக்கும் ஓர் அமைப்பாகும். சோஷலிச அரசின் பொருளாதாரப் பங்கு, முதலாளித்துவ அரசின் பொருளாதாரப் பங்கிலிருந்து அடிப்படையில் வேறுபட்டது. முதலாவதாக, முதலாளித்துவ அரசால் முதலாளித்துவத்தின் கீழ் பேராதிக்கம் செலுத்தும் தனியார் உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியாது. முதலாளித்துவ அரசு, தனியார் உற்பத்திக்கு கட்டளைகளை இட முடியாது; பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடங்கியிருக்க வேண்டும்; இரண்டாவதாக, அதனால் பொருளாதார விதிகளின் தன்னியல்பான செயல்பாட்டை மீற முடியாது; மூன்றாவதாக, உற்பத்தியின் மீது அதனுடைய பொருளாதாரச் செல்வாக்கு, நிதி ஆதிக்கக் குழுவின் குறுகிய வர்க்க நலன்களில் செயல்படுத்தப்படுகிறது.

சோஷலிசத்தின் கீழ், சமூக உற்பத்தியை நிர்வகிப்பதில், சோஷலிசப் பொது சொத்தின் ஆதிக்கம், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அதனுடைய முன்னணியானதும் தீர்மானிக்கக் கூடியதுமான பங்கு ஆகியவற்றை அரசு சார்ந்திருக்கிறது. சோவியத் யூனியனில் எல்லா உற்பத்திச் சாதனங்களின் 90 சதவீதத்தை அரசு சொந்தமாகக் கொண்டிருக்கிறது. கட்டளைகளின் மூலம் மையப்படுத்தப்பட்ட வழிகாட்டலை, பொருளாதார வளர்ச்சிக்கான, இலாப-நஷ்ட கணக்கு, விலைகள், கடன் இன்னும் இது போன்ற பொருளாதார ஊக்கங்களுடன் சோஷலிச அரசு இணைக்கிறது.

சோஷலிசத்தின் கீழ் பொருளாதாரத்தின் அரசு நிர்வாகம் பரிபூரண விஞ்ஞான ரீதியானது. அது உற்பத்தியின் நிலை, சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியின் தேவைகள் ஆகியவற்றின் சர்வாம்ச பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பொருளாதார விதிகளைப் பற்றிய அறிவை சார்ந்துள்ளது. உழைக்கும் மக்களின் அரசான படியால், சோஷலிச அரசு அவர்களுடைய நலன்களுக்

காக அதனுடைய பொருளாதாரப் பங்கினைச் நிறைவேற்றுகிறது. பாட்டாளி சர்வாதிகார அரசுக்கும், வளர்ச்சியுற்ற சோஷலிசக் கட்டத்திலுள்ள எல்லா மக்களின் அரசுக்கும் அது பொருத்தமாக இருக்கிறது.

சோஷலிச அரசின் பொருளாதார நடவடிக்கைகள் மார்க்சிய-லெனினியக் கட்சியால் தீர்மானிக்கப்படுகின்றன. மார்க்சிய-லெனினிய விஞ்ஞானப்பூர்வ கம்யூனிசத் தத்துவம், சமுதாயத்தின் வளர்ச்சியின் விதிகளைப் பற்றிய அறிவு ஆகியவற்றைக் கருவியாகக் கொண்டு, நாட்டின் உள், வெளிச் சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, மக்களின் நலன்களை வெளிப்படுத்திக் கொண்டு, சோஷலிசம் கம்யூனிசம் ஆகியவற்றைக் கட்டுவதற்கான எதிர்கால வாய்ப்புகளைத் தீர்மானித்து, உண்மையான கட்சி சார்பானதும், விஞ்ஞானப் பூர்வமானதும் ஐனரஞ்சகமானதுமான ஒரு பொருளாதாரக் கொள்கையைத் திட்டமிட முடியும்; திட்டமிடுகிறது; அதை வெற்றிகரமாக அமுலாக்குகிறது.

அத்தியாயம் 14

# சோஷலிசத்தின் பிரதான பொருளாதார விதி

## 1. சோஷலிசத்தின் பிரதான விதியின் சாராம்சம்

பொருளாதார விதிகளின் மொத்த அமைப்பில் ஒரு சிறப்பு வாய்ந்த இடம் பிரதான பொருளாதார விதிக்குச் சொந்தமானது. அது, உற்பத்தி முறையின் முக்கிய சமூக குணும்சம், உற்பத்தி உறவுகளின் உள்ளார்ந்த முக்கிய காரண-காரிய தொடர்பு, சமூக உற்பத்தியின் உடனடிக் குறிக்கோளுக்கும் அதனை அடைவதற்கான வழிக்கும் இடையிலுள்ள உறவு ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.

எந்தச் சமுதாயத்திலும் உற்பத்தியின் இயல்பான குறிக்கோள் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். அதாவது பொருளாயத பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் நுகர்வு. ஆனுல் எதிரும் புதிருமான வர்க்க சமுதாயத்தில் உற்பத்திக்கும் அதனுடைய உடனடியான குறிக்கோளுக்கும் இடையிலான தொடர்பு, உற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரர்களான ஆளும் வர்க்கத்தின் பொருளாதார நலன்களில் குறிக்கப்படுகிறது. இங்கு உற்பத்தியின் குறிக்கோள், இந்த ஆளும் வர்க்கத்தின் நலன்களை நிறைவேற்றுவதாகும். முதலாளித்துவத்தின் கீழ், சாத்தியமான அளவு உச்ச இலாபங்களை முதலாளிகள் தங்களது உரிமையாக்குவது தான் உற்பத்தியின் உடனடிக் குறிக்கோளாகும். ஏன் எனில் முதலாளித்துவ சமுதாயத்தின் ஆளும் வர்க்கத்தின் பொருளாதார நலன் இலாப வேட்டையாடுவதாகும். முதலாளித்துவ உற்பத்தியின் குறிக்கோள் கூலி உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் அடையப் பெறுகிறது.

சோஷலிசத்தில் எதிரும் புதிருமான வர்க்கங்கள் கிடையாது. உழைக்கும் மக்களுக்கு, உற்பத்திச் சாதனங்கள் சொந்தமாக இருப்பதால் அவை பொதுச் சொத்தாகும். இத்தகையச் சூழ்நிலைகளில் சமூக உற்பத்தியின் உடனடிக் குறிக்கோள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதேயாகும். உற்பத்தியின் உடனடிக் குறிக்கோளும் இயல்பான குறிக்கோளும் ஒன்றுடன் ஒன்று பொருந்துகின்றன.

சோஷலிச சமூக உற்பத்தியின் குறிக்கோள்களை அடைவதற்கான சாதனங்கள் அதனுடைய வளர்ச்சியும் மேம்பாடும் ஆகும்.

## சோஷலிச உற்பத்தியின் குறிக்கோள்

உற்பத்தியின் வளர்ச்சியானது மக்களின் நலன்களுக்காக என சோஷலிசம் குறிக்கிறது என்ற உண்மை, மார்க்சிய-லெனினிய ஸ்தாபகர்களால் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டது. ''சமுதாயத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களின் சேம நலம், சர்வாம்ச வளர்ச்சி ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு''* உற்பத்தியின் திட்டமிட்ட ஒழுங்கமைப்பைப் புகுத்துவதை சோஷலிசம் குறிக்கிறது என்று லெனின் எழுதினார். இந்தச் சொற்கள் சோஷலிச உற்பத்தியின் குறிக்கோளின் உள்ளடக்கத்தை மிக நன்றாக வெளிப்படுத்துகின்றன. சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களின் சேம நலம், சர்வாம்ச வளர்ச்சி, ஆகியவற்றை உறுதிப்படுத்த அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வது அதிகரிக்க வேண்டும். இந்தத் தேவைகளின் பல் வகைப் பெருக்கம், கலவை ஆகியவவை சோஷலிச வாழ்க்கை வழியால் தீர்மானிக்கப்படுகின்றன.

தேவைகள் வளர்ந்து கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கின்றன. எனவே அவற்றை முறையாக ஆராய்வது மிகவும் முக்கியம். இத்தகைய ஓர் ஆய்வு, பால், வயது, வாழும் மற்றும் உழைக்கும் நிலைமைகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, சமுதாயத்தின் வெவ்வேறான பகுதி

* V. I. Lenin, *Collected Works*, Vol. 29, p. 102.

களால் பொருளாயத பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் நுகர்வின் விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்ட தரத்தை வரையறுக்கவும் அந்த அடிப்படையில் உற்பத்தியை வளர்க்கவும் சாத்தியமாக்குகிறது.

பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள், சோஷலிசத்தின் பிரதான பொருளாதார விதி விஞ்ஞான ரீதியான சோஷலிசத்தில் கையாளப்படுவதை மறுக்கின்றனர். சோஷலிசத்தின் கீழ் உற்பத்தி, உற்பத்திக்காகவே நிறைவேற்றப்படுகிறது என்றும் அரசின் பொருளாதார, அரசியல் வலிமையை உயர்த்துவதற்காக, நிறைவேற்றப்படுகிறதே தவிர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அல்ல என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

திருத்தல்வாதிகளும் சோஷலிசத்தின் பிரதான விதியை திரித்து விடுகின்றனர். வலதுசாரி திருத்தல்வாதிகள், குழு உடைமையின் அடிப்படையிலான தொழில் நிலையங்கள் மூலம் கிடைக்கப் பெற்ற இலாபங்களை தொழிலாளர்களுக்கிடையே வினியோகிப்பதுதான் சோஷலிச உற்பத்தியின் குறிக்கோள் எனக் கூறுகின்றனர். இப்படியாக அவர்கள் சோஷலிச உற்பத்தியின் பொதுக் குறிக்கோளை மறுத்து, தனிப்பட்ட தொழில் நிலையங்களில் தொழிலாளர்களின் கூட்டுக் குழுக்களின் குறிக்கோள்களை எதிர்க்கின்றனர். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை அதிகரிப்பதானது, பூர்ஷ்வா போக்கைப் புதுப்பிப்பதாகும் என்று இடதுசாரி திருத்தல்வாதிகள் கூறுகின்றனர்.

இருவரும் முதலாளித்துவத்தை விட சோஷலிசத்தின் முக்கிய மேன்மையை மறுக்க முயற்சிப்பதன் மூலம் சோஷலிசத்தின் சாராம்சத்தைப் புரட்டுகின்றனர்.

## வளர்ச்சியுற்ற சோஷலிசத்தின் கீழ் வாழ்க்கைத் தரம்

சோஷலிச உற்பத்தியின் குறிக்கோள் எந்த அளவிற்கு யதார்த்தமடைந்துள்ளது என்பது வாழ்க்கைத் தரத்தில் ஸ்தூலமாக வெளிப்படுகிறது. வளர்ச்சியுற்ற சோஷலிசக் கட்டத்தில் சோஷலிச உற்பத்தியின் குறிக்கோள், பொது

வாக பிரதான பொருளாதார விதி, கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதாரப் போர் தந்திரத்தின் அடிப்படை உள்ளடக்கத்தை உருவாக்குகின்றன. எல்லாப் போர் தந்திரங்களையும் போல், கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதார போர் திட்டம் அதனுடைய பணிகளை அமைக்க ஆரம்பித்து, அதனுடைய அடிப்படையான நீண்ட காலக் குறிக்கோள்களை முன் வைக்கிறது. அதனுடைய மிக உயர்ந்த ஒன்று, எப்பொழுதுமே மக்களின் பொருளாயத மற்றும் கலாசார தரங்களின் சீரான உயர்வாகும்.

1981-1985ம் வருடங்களுக்கும் 1990ல் முடிவடைகின்ற காலகட்டத்துக்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட கட்சியின் 26வது காங்கிரசினுல் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டும் நெறிகள் பின்வரும் திசைவழிகளைக் கொண்டிருக்கின்றன:

''சமூக உற்பத்தியின் மென்மேலும் வளர்ச்சியடைகின்ற திறமை, உழைப்பின் உயர்ந்த உற்பத்தித் திறன், சோவியத் மக்களின் அதிகமான சமூக மற்றும் உழைப்பு நடவடிக்கையின் அடிப்படையில் மக்களின் பொருளாயத மற்றும் கலாச்சார வாழ்க்கைத் தரங்களில் தொடர்ச்சியான வளர்ச்சியை ஏற்படுத்துதல், மனித ஆளுமையின் ஒன்றிணைந்த வளர்ச்சிக்குரிய அதிகச் சிறப்பான நிலைமைகளை ஏற்படுத்துதல் ஆகியனவற்றைத் தலைமையான இலட்சியமாகக் கொண்ட தன்னுடைய பொருளாதார போர்த்திட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சி எண்பதுக்களில் முரணில்லாமல் அமுல் நடத்தும்.''

வாழ்க்கைத் தரம் சில சுட்டிக்காட்டுபவைகளால் குணம் சப்படுத்தப்படுகிறது. அவைகளில் முக்கியமானவை, உண்மையான வருமானங்களின் மாறுபடும் இயல்புகள், நுகர்வின் வளர்ச்சியும் அதன் கட்டமைப்பின் மாற்றமும், வீட்டு வசதிகள் ஏற்படுத்துதல், மக்கள் வாழும் பகுதிகளின் நிலைமைகள், கலாசார, கல்வி நிலை, சுகாதார பணி, வேலை நேரம், வேலை நிலைமைகள் மற்றும் இவை போன்றவையாகும்.

வளர்ச்சியுற்ற சோஷலிச சமுதாயம் ஒன்றை முதலில் கட்டிய சோவியத் யூனியனில் இத்தகைய சுட்டிக்காட்டுபவைகள், மக்களின் உயர் தரமான வாழ்க்கை நிலையையும் அதிகரித்துக் கொண்டேவரும் அவர்களுடைய பொருளாயத, கலாசாரத் தேவைகளை பூர்த்தி செய்தலையும் விளக்கு

கின்றன. உதாரணமாக 1940 முதல் 1980 வரை உண்மை யான தலா வருமானம் ஐந்து மடங்காக உயர்ந்தது. பரி வர்த்தனைப் பண்ட (விற்பனைப்) புரள்வின் வளர்ச்சியால் மக்களின் நுகர்வின் இயக்க இயல்கள் குணும்சப்படுத்தப் படுகின்றன. 1940ம் ஆண்டுடன் ஒப்பிட்டால் இது கிட்டத் தட்ட 10.6 மடங்கு அதிகரித்துள்ளது. நுகர்வின் கட்டமைப்பு நிலையாக உயர்ந்து கொண்டிருக்கிறது. மிக உயர்ந்த மதிப் புள்ள உணவுப் பொருள்கள், கலாசாரத்திற்கான பொருள் கள், பொழுது போக்கிற்கான பொருள்கள் ஆகியவை பெரு மளவில் நுகரப்படுகின்றன. பொருள்கள், சேவைகள் ஆகிய வற்றின் தரம் உயர்ந்து கொண்டிருக்கிறது. சோவியத் யூனியனில் வீட்டு வசதி வளர்ச்சி பெருமளவில் நடத்தப்படு கிறது. சோவியத் வாடகைகள் மிக மிக குறைவானவை என் பதை குறிப்பிட வேண்டும். ஒரு குடும்பத்தின் சராசரி வருமானத்தில் 3 சதவீதம் மட்டுமே வாடகையாக வசூலிக்கப்படும். நகரங்கள், நாட்டுப் புறங்கள் மற்றும் மக்கள் நிறைந்த பகுதிகள் ஆகியவற்றை மேம்படுத்த அதிக மாக செய்யப்பட்டுள்ளது. சூழ்நிலைப் பாதுகாப்பிற்காக அளவுக்கு மேலேயே நிதிகள் ஒதுக்கப்படுகின்றன.

சோவியத் யூனியனில் சர்வ பொது செகண்டரிக் கல்விப் பிரச்சினை உண்மையில் தீர்க்கப்பட்டுவிட்டது. அதிகமான கவனம், சோஷலிசக் கலாச்சாரம், கலை ஆகியவற்றை மேற் கொண்டு வளர்ப்பதில் திருப்பப்படுகிறது. அவை சித்தாந்த, அரசியல், ஒழுக்க, அழகியல் கல்வியிலும் மக்களின் கலா சார, அறிவியல் தேவைகளை உயர்த்துவதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன.

சுகாதாரப் பணி தொடர்ந்து மேம்பாடு அடைகிறது. மருத்துவ உதவி சிறந்த தரமுடையது; வியாதியை வருமுன் தடுக்கும் பணியின் வீச்சு வளர்ந்து கொண்டே இருக்கிறது. மருத்துவமும், கல்வியும் சோவியத் யூனியனில் எல்லோருக் கும் இலவசம்.

உழைக்கும் மக்களின் ஓய்வு, பொழுது போக்கு ஆகியவை சிறந்த முறையில் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன. விளை யாட்டுப் பந்தய நடவடிக்கைகள் பெருவீத அளவில் நடத்தப்படுகின்றன.

1979ம் ஆண்டில் சோவியத் யூனியனில் ஒரு வாரத்தில் உழைக்கும் நேரம் 40.6 மணி நேரமாகும். உழைக்கும் நாள் குறைக்கப்படும் பொழுது, உடல் உழைப்பு, குறைந்த திறமையுள்ள, கடினமான வேலைகள் ஆகியவற்றை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. உழைப்பை ஆரோக்கியமானதாக்கி, அதனுடைய படைக்கும் குண இயல்பை வளர்த்து அதைக் காப்பதற்கான ஒரு முழுத்திட்ட நடவடிக்கைகள் அமுலாக்கப்படுகின்றன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசில் உரை நிகழ்த்தும் பொழுது லி. இ. பிரேஷ்னெவ் பின்வருமாறு கூறினர்: ''பொதுவாக எண்பதுக்களிலும் குறிப்பாகப் பதினேராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் மக்கள் நலத்தில் மேலும் முன்னேற்றங்களைக் கொண்டு வருவதற்குரிய தீவிரமான வேலைத்திட்டத்தைக் கட்சி முன்வைக்கிறது. இந்த வேலைத்திட்டம் சோவியத் மக்களுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும்—நுகர்வு மற்றும் வீட்டு வசதி, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், உழைப்பு மற்றும் வாழ்க்கை நிலைமைகள்—அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறது.''

1981-1985ம் வருடங்களில் உண்மையான வருமானங்கள் ஒவ்வொரு நபருக்கும் 16-18 சதவிகிதம் வளர்ச்சியடையும். வர்த்தகம் 22-25 சதவிகிதம் அதிகரிக்கும். சேவை வசதிகள் 40-50 சதவிகிதம் அதிகரிக்கும். 530-540 மில்லியன் சதுர மீட்டர் அளவைக் கொண்ட புதிய வசிக்குமிடங்கள் கட்டப்பட்டு உபயோகிக்கப்படும்.

சோஷலிசத்தின் கீழ் வாழ்க்கைத் தரத்தின் நிலையான உயர்வானது, மக்களின் வாழ்வில் முக்கியத்துவம் குறையாத ஒரு தொடர்ச்சியான சாதனைகளால் நிரப்பப்படுகின்றது. அவையாவன: உத்திரவாதமளிக்கப்பட்ட வேலை, இப்பொழுது இருக்கும் தலைமுறையினருக்கும் எதிர்கால தலைமுறையினருக்கும் எதிர்காலத்தில் நம்பிக்கை, ஒவ்வொருவருக்கும் அமைதியான வாழ்க்கை, ஒத்துழைப்பு, பரஸ்பர ஆதரவு, உதவி, போன்ற உணர்வுகளும் தங்கள் நாட்டிற்குத் தாங்களே எஜமானர்கள் என்ற உணர்வும் மக்களுக்கு உள்ளன. தன்னுட்டிற்கான தற்கால, எதிர்கால பொறுப்புணர்ச்சியும் உள்ளது.

## சோஷலிச சமூக உற்பத்தியின் குறிக்கோளை அடைவதற்கான சாதனங்கள்

சோஷலிச சமூக உற்பத்தியின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றின் மூலம் சமுதாயத்திலுள்ள எல்லா உறுப்பினர்களின் சேம நலம், சர்வாம்ச வளர்ச்சி ஆகியவை பெறப்படுகின்றன. இதற்கான எல்லா தேவையான நிலைமைகளையும் சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுணுக்க அடித்தளம் ஏற்பாடு செய்கிறது.

வளர்ச்சியுற்ற சோஷலிசத்தின் கீழ்,உற்பத்தியின் அகன்ற விரிவான வளர்ச்சிககான நிலைகள் பொதுவாக தீர்க்கப்பட்ட பிறகு தீவிரமான பொருளாதார வளர்ச்சி பேராதிக்கம் செலுத்தத் தொடங்குகிறது. உற்பத்தித் திறமையை உயர்த்துவதும், வேலையின் தரத்தை உயர்த்துவதும் குறிப்பாக முக்கியத்துவமுடையன. இத்தகைய நிலைமைகளில் உற்பத்தியின் வளர்ச்சியானது,உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவது, கச்சாப் பொருள்கள், எரிபொருள், ஆற்றல் போன்ற மற்றப் பொருள்களை மிச்சப்படுத்துவது, நிலையான மூலதனத்தை (இயந்திரங்கள், இயந்திர நுட்பங்கள், கட்டிடங்கள் இத்தியாதி) சிறப்பாகப் பயன்படுத்துவது ஆகியவற்றின் மூலம் அடைய முடிகிறது. அதன் விளைவாக உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான சாத்தியங்கள் மிகவும் அதிகரிக்கின்றன.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தேசியப் பொருளாதாரத்தின் ஸ்திரமான, மேலேறிச் செல்கின்ற வளர்ச்சி, வேகப்படுத்தப்பட்ட விஞ்ஞான-தொழில்நுட்பவியல் முன்னேற்றம், நாட்டின் உற்பத்தி வாய்ப்புக்களை இன்னும் அதிகமான அளவுக்கு அறிவு பூர்வமான விதத்தில் பயன்படுத்துதல், எல்லா வகையான செல்வாதாரங்களிலும் மிகவும் கண்டிப்பான சிக்கனத்தை அமுலாக்குதல், வேலையின் தன்மையில் மேலும் அதிகமான சிறப்பை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் சோஷலிஸ்ட் உற்பத்தியின் நோக்கம் நிறைவேற்றப்படும் என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரசின் முடிவுகள் வலியுறுத்துகின்றன.

சோஷலிச உற்பத்தியின் குறிக்கோளை அடைவதற்காக உபயோகிக்கப்படும் சாதனங்களாவன: இயக்க ஆற்றலும்

சமநிலையான வளர்ச்சியுமுடைய சமூக உற்பத்தி, அதனுடைய அதிக அளவிலான திறமை, விஞ்ஞான-தொழில் நுணுக்க வளர்ச்சியின் வேகத்தை விரைவுபடுத்துதல் உழைப்பின் உற்பத்தித் திறனின் உயர்வு, தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் வேலையின் தரத்தில் எவ்விதமான மேம்பாடு ஆகியவையாகும். ஆகவே பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1981-1985) சோவியத் யூனியனில் தேசிய வருமானத்தின் உயர்வு 18-19 சதவிகிதமாக இருக்கும், 1990க்குள் தேசிய வருமானம் 1.4 மடங்கு அதிகரிக்கும்.

## 2. சோஷலிச உற்பத்தியின் வளர்ச்சியின் பிரதான மூலாதாரம்

சோஷலிச சமூக உற்பத்தியின் வளர்ச்சியின் பிரதான மூலாதாரம், உற்பத்தியின் மட்டம், மக்களின் இடைவிடாமல் வளர்ந்து கொண்டே இருக்கும் தேவைகள் ஆகியவற்றிற்கு இடையிலான எதிரும் புதிருமற்ற முரண்பாடு ஆகும். இந்த முரண்பாடு நேரடியாகவும், உடனடியாகவும் சோஷலிசத்தின் பிரதான பொருளாதார விதியின் செயலுடன் இணைக்கப்படுகிறது. இடைவிடாது வளர்ந்து கொண்டிருக்கும் அம்சங்களுக்கும், இந்த எடுத்துக் காட்டில் சோஷலிச உற்பத்தியின் குறிக்கோளுக்கும் அதை அடைவதற்கான வழிகளுக்கும் இடையிலான சரியானதொரு பரஸ்பர செயல்பாடு, ஒத்தியல்பு ஆகியவற்றால் உத்திரவாதமளிக்கப்பட்டு அது தீர்க்கப்படுகிறது.

சமுதாயத்திலுள்ள எல்லா உறுப்பினர்களின் சேம நலம், சர்வாம்ச வளர்ச்சி ஆகியவற்றின் மேம்பாடு மாறிக் கொண்டும், அதிகரித்துக் கொண்டும் இருக்கும் அவர்களுடைய தேவைகளை உயர்ந்த அளவில் பூர்த்தி செய்வதைக் குறிக்கிறது. தேவைகளின் வளர்ச்சியானது உற்பத்தியின் வளர்ச்சி, முந்திய தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. ஏனெனில் ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதால் மற்றொரு புதிய தேவை தோன்றுகிறது. இதன் தொடர்பாக மார்க்ஸ், எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்கள்:

''...முதல் தேவையைப் பூர்த்தி செய்தலும் திருப்திப்படுத்தும் செயலும் பெறப்பெற்ற திருப்திப்படுத்தும் கருவியும் என்பது புதிய தேவைகளுக்கு இட்டுச் செல்லுகின்றன.''*

சோஷலிசத்தின் கீழ், திருப்திப்படுத்தப்பட வேண்டிய தேவைகள், தீர்க்கப்படகூடிய கோரிக்கைகளும், சமூக நுகர்வு நிதிகளும் மூலம் மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய, திட்டமிடப்பட்ட நன்மைகள் சேவைகள் ஆகியவற்றின் வடிவத்தில் வெளிப்படுகின்றன. எனவே உற்பத்தியின் முதல் பணி இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்வதே. ஆனல் மக்களின் தேவைகள் மேலே குறிப்பிடப்பட்டதைத் தவிர மேலும் விரிவடைகின்றன. அத்துடன், உற்பத்தியின் வளர்ச்சியுடன், இப்பொழுது இருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் புதிய தேவைகளும் தோன்றுகின்றன. எனவே உற்பத்தி நிலையாக நிற்பதில்லை. இத்தகைய வளர்ந்து கொண்டிருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்ய அது தொடர்ந்து வளர்ந்து மேம்பாடடைகிறது.

இந்த முரண்பாடு, சில திருத்தங்களுடன் கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்திலும் இருக்கும். தேவைக்கு ஏற்ப வினியோகம் நடைபெறும். சமுதாய உறுப்பினர்களின் ஏற்றுக் கொள்ளத்தக்க தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும். உற்பத்தியின் வளர்ச்சியின் அடிப்படையில் தோன்றும் புதிய தேவைகளாலும், நிலவிவரும் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதாலும் உற்பத்தி தூண்டப்படும்.

சோஷலிசத்தில் மக்களின் தேவைகள் தன்னியல்பாகத் தோன்றுவதில்லை. சமுதாயத் தாக்கத்தால் அவை உருவாக்கப்படுகின்றன. அதன் விளைவாக, சோஷலிச வாழ்க்கை வழிக்கு மேலும் இசைந்த தேவைகளும் கம்யூனிச சமுதாயத்தில் தனிப்பட்டவர்களின் சர்வாம்ச வளர்ச்சியை மேம்படுத்தும் தேவைகளும் தோன்றுகின்றன.

---

* Karl Marx, Frederick Engels, *Collected Works*, Vol. 5, 1976, p. 42.

## 3. சோஷலிசத்தின் கீழ் பொருளாதார ஆர்வங்கள்

உற்பத்தி உறவுகளின் குண இயல்பு சமுதாய உறுப்பினர்களின் பொருளாதார ஆர்வங்களில் வெளிப்படுகிறது. இத்தகைய ஆர்வங்கள் மக்களுக்கு உற்பத்தியில் வேலை செய்யவும் அவர்களுடைய குறிக்கோள்களை அடையவும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஊக்கமளிப்பவை.

### சோஷலிச சமுதாயத்தின் உயர்ந்த பொருளாதார ஆர்வம்

எதிரும் புதிருமான முரண்பாடுகளால் சிதறடிக்கப்படும் முதலாளித்துவ சமுதாயத்தில் பொருளாதார ஆர்வங்கள் வர்க்க ஆர்வங்களாகத் தோன்றுகின்றன. முதலாளித்துவத்தின் கீழ் பொதுவான ஆர்வங்கள் இல்லை. சோஷலிச சமுதாயத்தில் அது வித்தியாசமானது. இங்கு எதிரும் புதிருமான வர்க்கங்கள் இல்லை. சமுதாயம் முழுவதும் ஓர் உற்பத்தியாளர்களின் சங்கமாக இருக்கிறது. உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமையின் ஆதிக்கம், தேசிய பொருளாதாரத்தில் அதனுடைய முன்னணியானதும் தீர்மானிக்கக் கூடியதுமான பங்கு ஆகியவற்றால் ஒன்றுசேர்க்கப்பட்ட சங்கம் அது. தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட உற்பத்தியின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றில் மக்களின் பொதுவான பொருளாதார ஆர்வத்தை இது கிளப்பிவிடுகிறது.

சோஷலிசத்தின் கீழ் பொதுமக்களின் பொருளாதார ஆர்வம் மிக உயர்ந்த ஆர்வமாக உள்ளது. இது தவிர, வெவ்வேறு தொழில் நிலையங்களில் உள்ள தொழிலாளர் கூட்டுக் குழுக்களின் ஆர்வங்கள், சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்களின் தனிப்பட்ட ஆர்வங்கள் போன்ற பிற விதமான பொருளாதார ஆர்வங்கள் உள்ளன. அவைகள், பொதுவான, உயர்ந்த ஆர்வத்தின் கலவைகள்.

## தொழிலாளர் கூட்டுக் குழுக்களின் பொருளாதார ஆர்வங்களும் தனிப்பட்டவர்களின் ஆர்வங்களும்

தொழிலாளர் கூட்டுக் குழுக்களின் பொருளாதார ஆர்வங்களும் தனிப்பட்டவர்களின் ஆர்வங்களும் சோஷலிசத்தில் சுதந்திரமான ஆர்வங்களாக இருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவெனில் உழைப்பு நேரடியான சமூக உழைப்பாக, முழுமையாக பக்குவமடையவில்லை. சோஷலிச சமுதாயத்தில், உழைப்பு என்பது ஊதிய விஷயங்களைக் கருத்தில் கொள்ளாமல் வேலை செய்யும் வழக்கமாக இன்னமும் இல்லை. உழைப்பிற்கான ஊதியத்தை எதிர்பார்ப்பதானது, இதற்கு முன்னுல் குறிப்பிடப்பட்ட பொருளாதார ஆர்வங்களின் உள்ளடக்கத்தை அமைக்கிறது. ஒவ்வொரு தொழில் நிலையத்திலும் உள்ள தொழிலாளர்கள், சமூக உற்பத்தியின் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பதைத் தவிர, அவர்களுடைய தொழில் நிலையத்தில் சகஜமான புனருற்பத்திப் போக்கிற்காக ஏற்பாடு செய்யவும் தங்களுடைய சொந்த சேம நலனை உயர்த்திக் கொள்ளவும் ஆர்வமுடையவர்கள். ஒவ்வொரு தொழிலாளியும், தன்னுடைய, தன் குடும்பத்தினுடைய சேம நலனை மேம்படுத்துவதில் ஆர்வமுடையவனுக இருக்கிருன்.

## சோஷலிச சமுதாயத்தின் பொருளாதார ஆர்வங்களின் ஒற்றுமை. பொருளாயத, ஒழுக்க ஊக்கங்கள்

சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் தனிப்பட்ட ஆர்வங்கள், தொழிலாளர் கூட்டுக் குழுக்களின் ஆர்வங்கள் சமுதாயத்தின் உயர்ந்த பொருளாதார ஆர்வத்தின் கூட்டு அம்சங்களாகும். அது அவற்றின் ஒற்றுமைக்குக் காரணமாக உள்ளது. அதே நேரத்தில் பொருளாதார ஆர்வங்கள் ஒட்டு மொத்தமாகவும் அவற்றின் அம்சங்களாகவும் வேறுபடுத்தப்படுகின்றன. இது பொருளாதார ஆர்வங்களின் எதிரும் புதிருமற்ற முரண்பாட்டினை உருவாக்குகிறது. இந்த முரண்பாடு சமுதாயத்தின் பொருளாதார

வளர்ச்சிக்கு ஓர் இயக்கும் சக்தியாக இருப்பதற்கு அது சரியாகத் தீர்க்கப்பட வேண்டும். ஆர்வங்கள் இணைவதில் இது அடங்கியுள்ளது. தனிப்பட்ட ஆர்வங்கள் கூட்டு ஆர்வங்களுக்கு பணி செய்ய வேண்டும். கூட்டு ஆர் வங்கள் சமுதாயத்தின் உயர்ந்த பொருளாதார ஆர்வத்தை எதார்த்தமாக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சமுதாயத் திற்கு என்ன நன்மையோ அது தொழில் நிலையத்துக்கும் இருக்க வேண்டும். தொழில் நிலையத்துக்கு எது நன்மை பயக்குமோ அது, அதனுடைய தொழிலாளர் ஒவ்வொரு வருக்கும் நன்மை பயக்க வேண்டும். உதாரணத்திற்காக, சமுதாயத்திற்கு ஒரு வகைப் பொருள்கள் அல்லது சேவை கள் தேவை எனில் இந்த வகைப் பொருள்கள் உற்பத்தித் திட்டத்தில் சேர்க்கப்படுவதைத் தவிர தொடர் நடவடிக் கைகள் மூலம், அதாவது உற்பத்தி செய்யும் இவ்வகை பொருள்களை தொழில் நிலையங்கள் விற்கும் விலை, முறைகள் போன்ற நடவடிக்கைகள் மூலமும், தொழில் நிலையங்களுக்கு பொருளாதார ஊக்கத்திற்கு ஏற்பாடு செய்யும் மற்றவை மூலமும், வேலைக்கு ஊதியம், போனஸ் கொடுப்பதன் மூலமும் தொழிலாளர் கூட்டுக் குழுக்களுக்கும் தனிப்பட்ட தொழிலாளர்களுக்கும் ஆர்வத்தை உண்டாக்க வேண்டும். அப்படிச் செய்வதால் அவர்கள் இந்தக் குறிப்பிட்ட பொருள் களை உற்பத்திச் செய்ய விரும்புவார்கள். இல்லாவிடில் சமுதாயத்தின் ஆர்வங்கள், தொழிலாளர் கூட்டுக் குழுக் களின் ஆர்வங்கள், தனிப்பட்ட தொழிலாளர்களின் ஆர் வங்கள் ஆகியவை ஒன்றுடன் ஒன்று பொருந்தத் தவறி விடும். சமமற்ற ஒரு நிலை ஏற்படும் வாய்ப்பு கிடைக்கும். அதன் விளைவாக சில பொருள்கள், சேவைகள் அதிக அள விலும் மற்றவை குறைந்த அளவிலும் உற்பத்திச் செய்யப் படலாம்.

ஆர்வங்களின் முரண்பாடு என்பது உற்பத்தி மட்டத் திற்கும் சமுதாயத்தின் வளர்ந்து கொண்டிருக்கும் தேவை களுக்கும் இடையிலான முரண்பாட்டின் ஸ்தூலமான வெளிப் பாடாகும். சோஷலிசத்தின் கீழ், சமுதாயத்தின் உயர்மட்ட பொருளாதார ஆர்வத்துடன், தொழிலாளர் குழுக்கள், தனிப்பட்ட தொழிலாளர்களின் ஆர்வங்கள் நிலவும்

பொழுது ஆர்வங்களின் முரண்பாடு என்பது வளர்ந்து வரும் தேவைகளின் திருப்திக்கும், அதன் மூலாதாரமாகிய உற்பத்தியின் வளர்ச்சிக்கும் இடையேயுள்ள இணைக்கும் தொடர்பாகும்.

பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் சோஷலிசத்தின் கீழ் பொருளாதார ஆர்வங்கள் இருப்பதை மறுக்கின்றனர். அத்தகைய ஆர்வங்கள், தனியார் தொழில் நடவடிக்கைகள் இருந்தால் மட்டுமே இருக்க முடியும் என்று கூறுகின்றனர். வலதுசாரி திருத்தல்வாதிகள் சோஷலிசத்தின் கீழ் உயர் மட்ட பொருளாதார ஆர்வம் என்பது ஒரு தனிப்பட்ட தொழில் நிலையத்தில் தொழிலாளர் கூட்டுக் குழுவின் ஆர்வமாகும் என்று கூறுகின்றனர். ''இடதுசாரி'' திருத்தல்வாதிகள் சோஷலிச சமுதாயத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் மக்களின் ஊக்கத்தின் அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

எதார்த்தத்தில், பொருளாதார ஆர்வங்கள் சோஷலிசத்தில் உள்ளன. அவை மிக முக்கியமான தூண்டும் பங்காற்றுகின்றன. அவை தனிப்பட்ட தொழிலாளர்கள், தொழிலாளர் கூட்டுக் குழுக்கள் சமுதாயம் முழுவதும் ஆகியவற்றை சிறந்த உற்பத்தி இலக்குகளை அடைய முயற்சி செய்யும்படி தூண்டுகின்றன. இப்படியாகப் பொருளாதார ஆர்வங்கள் எதார்த்தமாக்கப்பட்ட பொழுது அவை சிறந்த வேலைக்கான பொருளாயத ஊக்கங்களாக மாறுகின்றன.

அதே நேரத்தில் சோஷலிசத்தின் கீழ் சமுதாய உறுப்பினர்கள் உழைப்பின் மகத்தான சமூக முக்கியத்துவத்தை மேலும் மேலும் தெளிவாக அறிகிறார்கள். கூட்டு உழைப்பில் சுறுசுறுப்புடன் கலந்து கொள்வதை ஒரு முதன்மையான கௌரவமாகவும் பொதுநல கடமையாகவும் பார்ப்பது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் அவர்களுடைய உழைப்பு சாதனைகள் ஊதியத்திற்காக அல்லாமல், அவர்களுடைய சமூகக் கடமையைப் பூர்த்தி செய்வதற்காக அங்கீகரிக்கப்படுவதில் ஆர்வமுடையவர்களாக உள்ளனர். இந்த ஆர்வம் நடைமுறைப்படுத்தப்படும் வடிவங்களும் முறைகளும் வேலை செய்வதற்கான ஒழுக்க ஊக்கங்களின் உள்ளடக்கத்தைத் தீர்மானிக்கின்றன.

உற்பத்தியின் வளர்ச்சியில் மகத்தான பலனை, பொருளாயத, ஒழுக்க ஊக்கங்கள் செயல்படுத்தப்படும் பொழுது அடைய முடிகிறது. அப்பொழுதுதான் சோஷலிசத்தின் கீழ் உழைப்பின் தன்மைக்குத் தக்க கவனம் செலுத்தப்படுகிறது.

## அத்தியாயம் 15

# சோஷலிச சமூக உற்பத்தியின் திட்டமிட்ட வளர்ச்சி

### 1. சமூக உற்பத்தியின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சி—சோஷலிசத்தின் ஒரு பொருளாதார விதி

திட்டமிட்ட உற்பத்தியின் வளர்ச்சி என்பது ஒரு கூட்டான, உணர்வு பூர்வமான, செயல்நோக்கமுடைய உற்பத்தி நடவடிக்கையாகும். ஒரே ஒரு மையத்திலிருந்து உற்பத்தியை நிர்வகிப்பதையும், உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் எல்லா பகுதிகளின் ஒத்துழைப்பையும் அது குறிக்கிறது. சோஷலிசத்தின் கீழ் திட்டமிட்ட வளர்ச்சி, தேசிய பொருளாதாரம் முழுவதற்கும் விரிவடைகிறது; அதன் பொருளாதார விதியாகிறது.

#### சமூக உற்பத்தியின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சியின் விதி

சமூக உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் பொருளாதாரப் பிணைப்புகளின் குணும்சம், உற்பத்திச் சாதனங்களின் உடைமை உறவுகளாலும், அதனுடைய உடனடி நோக்கத்தாலும் தீர்மானிக்கப்படுகிறது. சோஷலிசத்தில் உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையின் ஆதிக்கம் இருக்கிறது. பொது அரசுடைமையானது, முன்னணியானதும் தீர்மானிக்கக் கூடியதுமான பங்காற்றுகிறது. அது தேசிய பொருளாதாரத்தை ஒரே உற்பத்தி அமைப்பாக, ஒரே பிரமாண்டமான தொழில் நிறுவனமாக மாற்றிவிடுகிறது. உற்பத்தியானது தேசிய பொருளாதாரம் முழுமைக்குமான அளவில் சமூகமயமாக்கப்படுகிறது. சோஷலிசத்தின் கீழ் உழைக்கும் மக்கள் தங்களுக்காகவும், தங்களுடைய சமுதாயத்திற்காகவும் உழைக்கிறார்கள். சோஷலிச உற்பத்தியின் குறிக்கோளை

அடைவதன் தொடர்புடன் அவர்களுடைய பொருளாதார ஆர்வங்களின் ஒற்றுமையானது, அவர்களுடைய உற்பத்தி நடவடிக்கைகளின் ஒற்றுமையைத் தீர்மானிக்கிறது. இவை எல்லாம், தேசிய பொருளாதார அளவில் சமூக உற்பத்தி யின் திட்டமிட்ட விகிதாச்சார வளர்ச்சிக்கான புறவயத் தேவையை ஏற்பாடு செய்கின்றன. திட்டமிட்ட வளர்ச்சி யானது சமூக உற்பத்தியினது வளர்ச்சியின் சர்வவியாபக வடிவமாக மாறுகிறது. பொருளாயத பொருள்கள், சேவை கள் ஆகியவற்றின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவற்றையும் அது தழுவுகிறது. சோஷலிச உற் பத்தி உறவுகளின் இயல்புகளைக் குணும்சப்படுத்திக் கொண் டிருப்பதால் சமூக உற்பத்தியின் திட்டமிட்ட விகிதாச்சார வளர்ச்சி சோஷலிசத்தின் ஒரு பொருளாதார விதியாக மாறுகிறது.

இவ்விதியின் செயலானது பொருளாயதம், நிதி, மனித சக்தி ஆகியவற்றின் மூல வளங்களை பகுத்தறிவுடன் பயன் படுத்தத் தேவையான நிலைமைகளை உருவாக்கி, அவற்றை தேசிய பொருளாதார வளர்ச்சியின் தீர்மானமான வட் டாரங்களில் ஒருமுனைப்படுத்துவதை சாத்தியமாக்குகிறது. விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றத்தில் அது ஒரு சக்தி வாய்ந்த காரணியாகும். நடப்பிலுள்ள விஞ்ஞான-தொழில் நுணுக்கப் புரட்சியின் போது அது தனிச்சிறப்புடைய முக்கியமானது. வேலை செய்யும் நேரத்தை மீதப்படுத்தவும் சமூக உற்பத்தியை அதிக பயனுள்ளதாக்கவும் அது உதவு கிறது. இவ்வாருக, குறுக்கீடு இல்லாத சமூக உற்பத்தியின் இயக்காற்றல் வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது. இப்படி யாக முதலாளித்துவத்தினை விட சோஷலிசம் மறுக்க முடி யாத அளவிற்கு உயர்வானது என்பதை அது விளக்குகிறது.

### சமூக உற்பத்தியின் திட்டமிட்ட ஒழுங்கு முறை

சமூக உற்பத்தியின் ஒழுங்கு முறையானது சமூக உற் பத்தியின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சி விதியின் மிக முக்கியமான செயல்பாடாகும். இத்தகைய ஒழுங்கு முறை

ஒரே பொருளாதார மையத்திலிருந்து, உற்பத்தியின் நிர்வாகத்தையும், முழு தேசிய பொருளாதார அளவில் அதனுடைய பங்கேற்போரின் நடவடிக்கைகளையும் ஒத்திசைப்படுத்துவதைக் குறிக்கிறது. உற்பத்தியின் திட்டமிட்ட ஒழுங்கு முறையானது சமுதாயத்தின் பொருளாயத நிதி வளங்கள், மனித சக்திகள் ஆகியவற்றின் கணக்கெடுப்பதுடனும், தொழில் மற்றும் பிற சமூக தேவைகளின் கட்டமைப்பு, அளவு ஆகியவற்றின் கணக்கெடுப்பதுடனும் தொடங்குகிறது. சமுதாயத்தின் வளங்கள், சமூக தேவைகளின்படி உற்பத்தியை ஒழுங்கமைக்கும் நோக்கத்துடன், தேசியப் பொருளாதாரத்தின் வட்டாரங்கள், துறைகள், நாட்டின் வெவ்வேறு பகுதிகள், பலவித தொழில் நிலையங்கள் ஆகியவற்றிற்கு இடையே வினியோகிக்கப்படுகின்றன. இப்படியாக சமூக உற்பத்தியின் எல்லா அம்சங்களுக்கும் கண்டிப்பான விகிதாச்சாரமும் சமநிலையும் நிறுவப்படுகின்றன.

திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சியின் விதியானது சமூக உற்பத்தியை ஒரு ஒழுங்குப்படுத்தும் கருவியாக மற்ற பொருளாதார விதிகளுடன், முக்கியமாக சோஷலிசத்தின் பிரதான பொருளாதார விதியுடன் பரஸ்பரமாகச் செயல்படுகிறது. தேசியப் பொருளாதாரத்தின் உள்ளடக்கம், குண இயல்பு ஆகியவற்றை பிரதான விதி தீர்மானிக்கிறது.

உற்பத்தியின் திட்டமிட்ட ஒழுங்கு முறை ஓர் உணர்வு பூர்வமான, விஞ்ஞான ரீதியில் நிறுவப்பட்ட சமூக நடவடிக்கையாக, தேசியப் பொருளாதாரத்தில் செயல்படும் பொருளாதார விதிகளை ஆராய்ந்து பயன்படுத்துவதன் அடிப்படையில் நடத்தப்படுகிறது.

திட்டமிட்ட ஒழுங்கு முறையின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி, சமுதாயத்தின் தேவைகள், சமுதாய வளர்ச்சியால் தீர்மானிக்கப்படும் உற்பத்தியின் கட்டமைப்பு, வீச்சு ஆகிய வற்றில் எதிர்பார்க்கும் மாற்றங்களின் விஞ்ஞான ரீதியான ஒரு முன்னுணர்வு (முன் அறிவிப்பு) ஆகும். இப்படியாக சமுதாயம் நடப்புக் காலத்திற்கு மட்டுமல்லாது நீண்ட காலத்திற்காகவும் அதனுடைய நடவடிக்கைகளை கணக்கிட்டு, ஒத்திசைப்படுத்துகிறது.

நேரடி ஆணைகள், இலாப நஷ்ட கணக்கு, விலைகள்,

கடன், தொழில் நிலையங்களின் இலாபம் இன்னோரன்ன தூண்டு கோல்களுடன் இணைத்து சோஷலிச அரசு திட்டமிட்ட ஒழுங்கு முறையை நடத்துகிறது. இந்நிகழ்ச்சிப் போக்கில் உழைக்கும் மக்கள் பங்கு பெறுகிறார்கள்; அவர்களின் முன் முயற்சிகள் கவனிக்கப்படுகின்றன.

சோஷலிசத்தின் கீழ் சமூக உற்பத்தியின் திட்டமிட்ட தன்மை, அரசின் தன்னிச்சையான தலையீடு தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது பூர்ஷ்வா அறிவாளிகளால் கூறப் படுவது மிகப் பிழையானது என்று இந்த விஷயத்தில் குறிப் பிடுவது தகுதியுடையதாகும். இடதுசாரி திருத்தல்வாதிகளும் திட்டமிட்ட வளர்ச்சியை அதே வழியில் விளக்கிப் பொருள் கூறுகின்றனர்.

வலதுசாரி திருத்தல்வாதிகளும் சோஷலிசத்தினை, அத னுடைய மையப்படுத்தப்பட்ட அரசு திட்டமிட்ட சமூக உற்பத்தியின் ஒழுங்கு முறை இல்லாமல் தவறாக வர்ணிக் கிறார்கள். உற்பத்தியானது மார்க்கெட் நிலைமையாலும் மதிப்பு விதியின் தன்னியல்பான செயலாலும் ஒழுங்கு படுத்தப்படுகிறது என்று அவர்கள் கருதுகின்றனர். இப்படி யாக சோஷலிசத்தின் கீழான சமூக உற்பத்தியின் திட்ட மிட்ட, விகிதாச்சார வளர்ச்சி விதியின் செயலை மறுத்து, தன்னியல்பான வளர்ச்சி, போட்டி ஆகியவற்றின் மேன் மையைப் பிரச்சாரம் செய்கின்றனர்.

## முதலாளித்துவத்தின் கீழ் சமூக உற்பத்தியின் திட்டமிட்ட வளர்ச்சியின் சாத்தியமின்மை

சமூக உற்பத்தியின் திட்டமிட்ட வளர்ச்சி சோஷலிசத் தின் கீழ் தான் சாத்தியம். முதலாளித்துவத்தில் அல்ல. பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் இதன் எதிரிடையை நிரூ பிக்க உறுதியாக முயற்சித்தாலும் நிகழ்ச்சிகள் பிடிவாதமாக அவர்களுடைய குற்றச்சாட்டுகளை தவறு என நிரூபிக்கின் றன. முதலாளித்துவத்தின் கீழ், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு தேவை மட்டும் இருக்கிறது. இது முத

லாளித்துவ உற்பத்தியின் சமூகக் குணம்சத்திலிருந்து முளைக்கிறது. ஆனால் தனியுடைமையின் ஆதிக்கம் இந்தத் தேவை பூர்த்தி செய்யப்படுவதைத் தடுக்கிறது.

உற்பத்திச் சாதனங்களின் தனி உடைமையால் ஒன்றிலிருந்து மற்றது தனிமைப்படுத்தப்பட்டு முதலாளித்துவ தொழில் நிலையங்கள் அவற்றின் சொந்தப் போக்கிலேயே செயல்படுகின்றன. அவை அவற்றின் நடவடிக்கைகள் ஒன்றுடன் ஒன்று ஒத்திசையவோ அல்லது அவற்றின் உற்பத்திப் பொருள்களுக்கான சமூக தேவையுடன் ஒத்திசையவோ முடியாது. முதலாளித்துவ உலகில் சமூக உற்பத்தியில் அராஜகம் நிலவுகிறது.

ஏகாதிபத்தியத்தின் கீழ் முக்கியமாக அரசு-ஏகபோக முதலாளித்துவத்தில் முதலாளித்துவ நாடுகள் அரசாங்கங்கத் தலையீட்டின் மூலம் பொருளாதார ஒழுங்குமுறையையும் திட்டமிடுதலையும் முயற்சிக்கின்றன. ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் பொதுமக்களை, பூர்ஷ்வா அரசுகளின் இத்தகைய நடவடிக்கைகள் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி அன்றி வேறு ஒன்றுமில்லை என நம்ப வைக்க அவசரப்படுகின்றனர். அவர்கள், ஒரு புதிய ''திட்டமிட்ட'' முதலாளித்துவம், அதனுடையத் தீமைகளை தவிர்க்கக் கூடியதும், நெருக்கடிகளிலிருந்து விடுபட்ட வளர்ச்சிக்கான வசதியும் கொண்ட ஒரு புதிய திட்டமிட்ட முதலாளித்துவத் தோற்றத்தைக் குறிப்பிட்டனர். எதார்த்தத்தில் முதலாளித்துவப் பொருளாதார ஒழுங்கு முறையும் முன்னறிவிப்பும் பூர்ஷ்வா அரசுகளால், பொருளாதார ஊக்கங்களின் மூலம் உற்பத்தியின் மேல் செல்வாக்கு செலுத்த எடுத்த ஒரு முயற்சியாகும். இப்படிச் செய்வதன் நோக்கமே நிதி ஆதிக்கக் குழுவின் நலன்களில் அதன் வளர்ச்சிப் போக்கு இருக்க வேண்டும் என்பதே. இது தனியார் முதலாளித்துவ உடைமையின் ஆதிக்கத்தையோ, சமூக உற்பத்தியில் அராஜகத்தையோ அகற்றாது. அது பொருளாதாரத்தை நிர்வகிக்க வல்லதல்ல. எனவே அதற்கும் திட்டமிட்ட வளர்ச்சிக்கும் பொதுவான அம்சம் எதுவும் இல்லை. மார்க்ஸ் எழுதினார்: ''பூர்ஷ்வா சமுதாயத்தின் சாராம்சம், ஆரம்பம் முதலே அதில் உணர்வு பூர்வமான சமூக உற்பத்தி ஒழுங்கு முறை

என்பது துல்லியமாக இல்லை என்பதே.''* முதலாளித்துவப் பொருளாதாரத்தின் குண இயல்பாக இன்னமும் உள்ள, உற்பத்தியில் ஆழமான சரிவுகள் பின்தொடரப்படும், மீண்டும் மீண்டும் நடைபெறும் பொருளாதார நெருக்கடிகள், வேலையின்மை, பணவீக்கம் ஆகியவற்ருல் இது நிரூபிக்கப் படுகிறது.

## 2. தேசியப் பொருளாதாரத்தில் சரியான விகிதாச்சாரத்தை உறுதிப்படுத்துதல்

### தேசியப் பொருளாதாரத்தின் விகிதாச்சார வளர்ச்சி

திட்டமிட்ட வளர்ச்சி என்பது ஓர் உற்பத்தியுறவாகும். அது சமூக உற்பத்தியின் எல்லா அம்சங்களின் ஒத்திசைவிற்கான புறவயத் தேவையை, அதாவது தேசிய பொருளாதாரத்தின் விகிதாச்சார வளர்ச்சியைக் குறிக்கிறது. லெனின் எழுதினர்: ''நிலையான, வேண்டுமென்று பேணப்பட்ட விகிதாச்சாரம், திட்டமிடுதல் இருக்கிறது என்பதை உண்மையில் குறிப்பிட்டிருக்கும்.''**

பொருளாயத வளங்கள், மனித சக்தி ஆகியவற்றின் பொருளாதாரத் துறைகளுக்கு இடையில் விகிதாச்சார வினியோகமானது, ஒரு சமூக உழைப்புப் பிரிவினையுடன் ஒவ்வொரு சமுதாயத்திலும் நடைபெறுகிறது. மார்க்ஸ், ''குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் சமூக உழைப்பை வினியோகிக்கும் இந்த அவசியம் ஒரு குறிப்பிட்ட சமூக உற்பத்தியின் குறிப்பிட்ட வடிவத்தால் நீக்கப்படக் கூடியதல்ல, ஆனுல் அதனுடைய தோற்றத்தின் வடிவம் மாற்றப்பட முடியும்''*** என்று எழுதினர்.

முதலாளித்துவ சமுதாயத்தில் தேசியப் பொருளாதாரம் தன்னியல்பான ஒரு சமநிலையைக் கொண்டுள்ளது. அதா

* K. Marx and F. Engels, *Selected Works*, in three volumes, Vol. 2, 1977, p. 419.

** V. I. Lenin, *Collected Works*, Vol. 3, p. 617.

*** K. Marx and F. Engels, *Selected Works*, in three volumes, Vol. 2, p. 419.

வது சமநிலையை நிலையாக மீறுவதன் சராசரி, அதாவது சமமற்ற நிலையைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு தொழில் நிலையமும் அதனுடைய சொந்த நலன்களைத் தொடரும் பொழுது, சமூக உற்பத்தியின் அராஜகத்தால் அது நடைபெறுகிறது.

சோஷலிசத்தின் கீழ், சமநிலையானது, ஒரே பொருளாதார மையத்திலிருந்து நிர்வகிக்கப்படும் சமுதாயத்தின் உணர்வு பூர்வமான நடவடிக்கையின் செயல்பாடாக மாறுகிறது. பொருளாதார சமநிலை என்பது கணக்கிடப்படுவது மட்டுமல்ல, அது பேணவும் படுகிறது. உற்பத்தியைக் கூடிய அளவில் பயனுள்ளதாக்க செய்யவும், உற்பத்திச் சாதனங்கள், உழைப்பு ஆகியவற்றை குறைத்துப் பயன்படுத்தி சிறந்தப் பலனை அடையவும் தேசிய பொருளாதாரத்தின் எல்லா அம்சங்களும் ஒழுங்கமைக்கப்பட்டு ஒத்திசைக்கச் செய்யப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிப் போக்கினை நிர்வகிப்பதில் அரசாங்கத் திட்டக் குழுக்கள் அனுகூலமான பொருளாதார விகிதங்களை வகுக்கின்றன.

சோஷலிசத்திலும் சமமற்ற நிலை ஏற்பட சாத்தியமுள்ளது. திட்டமிடுவதில் தவறுகள் சமூக தேவைகளில் எதிர்பாராத மாற்றங்கள், இயற்கை உற்பாதங்கள், மற்றும் இது போன்ற காரணங்களால் அது தோன்றுகிறது. இதைத் தடுத்து, எதிர்த்துச் சமாளிக்க உற்பத்தி கொள்ளளவு, கச்சாப் பொருள்கள், எரி பொருள்கள், நுகர்வுப் பொருள்கள் ஆகியவற்றின் சிறப்பு இருப்புகள் சேகரிக்கப்படுகின்றன. இந்த இருப்புகளின் உதவியால் எல்லா தொழில் நிலையங்களும் எந்த தடையுமின்றி வேலை செய்ய முடியும். அதன் விளைவாக உயர்ந்த வளர்ச்சி விகிதங்கள் பேணப்படுகின்றன.

## பொருளாதார விகிதாச்சாரங்களின் மாதிரிகளும் குண இயல்பும்

ஒரு சோஷலிச சமுதாயத்தின் தேசியப் பொருளாதாரத்தில், நிறுவப்பட்டுப் பேணப்படும் விகிதாச்சாரங்கள் பல்வேறு வகையானவை. ஆனால் அவை பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

**பொது பொருளாதார விகிதாசாரங்கள்.** இவை மொத்த சமூக உற்பத்திப் பொருளின் அதிகரிப்புக்கும் தேசிய வருவாய்க்கும், நுகர்வுக்கும் திரட்சிக்கும், உற்பத்தித் துறைக்கும் உற்பத்தி இல்லாத துறைக்கும், சமூக உற்பத்தியின் பிரிவு 1க்கும் (உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி) பிரிவு 2க்கும் (நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி) இவை போன்றவற்றிற்கும் உள்ள விகிதங்களாகும். அவை பொருளாதாரத்தை ஒட்டு மொத்தமாகத் தழுவி அதனுடைய அடிப்படைக் கட்டமைப்பின் இயக்கும் ஆற்றலை விளக்குகின்றன.

**துறைகளுக்கு இடையிலான விகிதாசாரங்கள்.** இவற்றில் மிக முக்கியமானது தொழில் துறையின் வளர்ச்சிக்கும் விவசாயத்தின் வளர்ச்சிக்கும் உள்ள விகிதமாகும். அவற்றில் தொழில் உற்பத்திக் கிளைகளுக்கும், விவசாயக் கிளைகளுக்கும் இடையிலுள்ள விகிதாச்சாரங்களும் சேர்ந்துள்ளன. இவை, மொத்த சமூக உற்பத்திப் பொருளின் உற்பத்திக் கட்டமைப்பையும், இந்தக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களையும் குணும்சப்படுத்துகின்றன.

**உள்துறை விகிதாசாரங்கள், உள் தொழிற்சாலை விகிதாசாரங்கள்.** இவை குறிப்பிட்ட விதமான பொருள்களின் உற்பத்தியைத் தழுவி இந்த உற்பத்தி வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கின் தொடர்புகளை வெளிப்படுத்துகின்றன.

**பிராந்திய விகிதாசாரங்கள்,** நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உற்பத்தியை இயக்கும் ஆற்றலின் உறவுகளைத் தீர்மானிக்கின்றன. வெவ்வேறு பகுதிகளில் பரிபூரண பொருளாதார வளர்ச்சியையும், நாடு முழுவதும் தொழில் துறையை விவேகமாக வினியோகிப்பதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பிராந்திய விகிதாச்சாரங்கள் உருவாக்கப் படுகின்றன. அவைகள், நாட்டின் இயற்கை வளங்கள், உழைப்புச் சக்தி ஆகியவற்றை விஞ்ஞான அடிப்படையில் பயன்படுத்துதலில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகள், பொருளாதார விதிகளின் செயலை, உற்பத்தியின் தரம், கிடைக்கும் பொருளாயத, நிதி வளங்கள் மற்றும் மனித சக்திகள், விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றம், மற்றும் இவை போன்றவைகளால் தேசியப் பொருளாதார விகிதாச்சாரங்

களின் உள்ளடக்கம் தீர்மானிக்கப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறினுல் ஒரு சோஷலிச தேசிய பொருளாதாரத்தின் சமநிலையானது கண்டிப்பான விஞ்ஞான ரீதியான அடிப்படையிலும், சமூக உற்பத்தி வளர்ச்சியடைந்து வரும் குறிப்பிட்ட நிலைமைகளுக்கு உரிய கவனத்துடனும் அடையப்படுகிறது.

## 3. தேசிய பொருளாதாரத்தின் நிர்வாகம்

*சமூக உற்பத்தியின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சி அதனுடைய நிர்வாகத்தின் போது அமுலாக்கப்படுகிறது.*

### பொருளாதார நிர்வாகத்தின் சாராம்சம்

ஒரு சோஷலிசப் பொருளாதாரம் என்பது திட்டத்திற்கு ஏற்ப வளர்ந்து வரும் ஒரே ஓர் உற்பத்தி அமைப்பாகும். எனவே அது நிர்வகிக்கப்பட வேண்டும். மார்க்ஸ் எழுதினுர்: ''தனிப்பட்ட நடவடிக்கைகள் ஒன்றுடன் ஒன்று இணக்கமாக வேலை செய்வதற்காகவும், உற்பத்தியின் ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பின் செயலில் தோன்றிய, பொது செயல்பாடுகளை நடத்தவும், பெருமளவில் ஒன்றிணைக்கப்பட்ட எல்லா உழைப்பிற்கும் ஏறக்குறைய ஒரு வழிகாட்டும் நிர்வாகம் தேவைப்படுகிறது.''*

சோஷலிசத்தின் கீழ் பொருளாதார நிர்வாகம், அடிப்படையில் முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள பொருளாதார நிர்வாகத்திலிருந்து வேறுபடுகிறது. அங்கு அது தனியார் தொழில் நிலையங்கள், கம்பெனிகள், ஏகபோக கார்பரேஷன்கள் ஆகியவற்றின் எல்லைக்குள் அடக்கப்பட்டுள்ளது. பூர்ஷ்வா அரசாங்கங்கள் அவற்றின் நாட்டின் பொருளாதாரத்தைப் பொதுவாக நிர்வகிக்க முயற்சித்தாலும் சாத்தியமான ஒவ்வொரு வழியிலும் அவற்றின் தலையீட்டை அதிகரித்தாலும் இந்த ''நிர்வகித்தலை'' முதலாளித்துவ தனி

* Karl Marx, *Capital*, Vol. 1, 1975, p. 313.

யார் சொத்து, சமூக உற்பத்தியில் அராஜகம் ஆகியவற்றால் தடை செய்யப்படுகிறது. ஏனெனில் மார்க்கெட் நிலைமைகளாலும் மதிப்பு விதியின் தன்னியல்பான செயலாலும் முதலாளித்துவ உற்பத்தி ஒழுங்கமைக்கப்படுகிறது.

சோஷலிசத்தின் கீழ் முழு பொருளாதாரமும் நிர்வாகிக்கப்படுகிறது. இதில் ஒழுங்கமைப்புப் பொருளாதார நடவடிக்கைகளின் முறை ஈடுபடுகிறது. இப்பொருளாதார நடவடிக்கைகள் தேசியப் பொருளாதாரத்தை, தொடர்ச்சியான செயல்நோக்கமுடைய ஒத்திசைவான செயலாக ஆக்க வகை செய்கின்றன. நிர்வாகத்தில் கீழ்க் கண்ட அம்சங்கள் அடங்குகின்றன. நிர்வாகத்தின் ஒழுங்கமைப்பு (நிர்வாகத்தின் ஸ்தாபன ரீதியான கட்டமைப்பிற்கு வழி அமைத்தல்), பொருளாதாரத் திட்டமிடுதல், சரியான பொருளாதார முறைகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் உற்பத்திக்கு பொருளாதார ஊக்கங்களை ஏற்பாடு செய்தல் ஆகியவை. சோஷலிசத்தில் அரசு தான் மைய நிர்வாக குழுவாகும்.

## பொருளாதார நிர்வாகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்

அரசியல், பொருளாதார நிர்வாகம் ஆகியவற்றின் ஒற்றுமை என்பது பொருளாதார நிர்வாகத்தின் ஒழுங்கமைப்பின் ஓர் அடிப்படைக் கோட்பாடாகும். இந்தக் கோட்பாடு, சமூக உற்பத்தியின் வளர்ச்சியில் மார்க்சிய-லெனினியக் கட்சியின் முன்னணிப் பங்கிலிருந்து ஏற்படுகிறது. கட்சியானது நாட்டின் சமூக வளர்ச்சியின் எதிர்வாய்ப்புகளைத் தீர்மானிக்கிறது; பொருளாதாரக் கொள்கையை வகுக்கிறது; பொருளாதாரத் திட்டத் தந்திரங்களை தீர்மானிக்கிறது; அது மேலும் பொருளாதார நிறுவனங்களின் நடவடிக்கைகளை வழிநடத்துகிறது; அவற்றின் வேலையை கண்காணிக்கிறது; பொருளாதார நிபுணர்களைத் தேர்ந்து எடுத்து பயிற்சியளிக்கிறது. இந்த வழியில் மார்க்சிய-லெனினியக் கட்சி அரசாங்கப் பொருளாதார நிர்வாக குழுக்களுடன் சேர்ந்து சமுதாயத்தின் அரசியல், பொருளாதார வழிகாட்டுதலின்

ஒற்றுமையை அமுலாக்குகிறது. மார்க்சிய-லெனினியக் கட்சி, அரசு பொருளாதார நிர்வாகக் குழுக்களை மாற்றீடு செய்யாது. ஆனால் அவற்றைக் கண்காணிக்கிறது.

ஜனநாயக மையப்படுத்துதல் என்ற கோட்பாடானது நிர்வாக ஒழுங்கமைப்பில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இது, தேசியப் பொருளாதாரத்தின் மையப்படுத்தப்பட்ட அரசு தலைமையுடன் உற்பத்தியின் நிர்வாகத்தில் எல்லா மட்டங்களில் உழைக்கும் மக்கள், பரந்த அளவில் பங்கு கொள்ளுதலின் இணைப்பைக் குறிக்கிறது. மக்கள், மிக உயர்ந்த சட்டமன்ற ஸ்தாபனங்கள், ஸ்தல அரசாங்க ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் வேலையில் மிக சுறுசுறுப்பாக பங்கேற்கின்றனர். உற்பத்தி நிர்வாகத்தில் உழைக்கும் மக்கள் பங்கு கொள்வது, வெகுஜன நிறுவனங்கள் (எடுத்துக்காட்டு: தொழில் சங்கங்கள்), மக்களின் கட்டுப்பாட்டுக் குழுக்கள், தொழில் நிலையங்களில் அடிக்கடி உற்பத்தி கூட்டங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளின் மூலம் அமுலாக்கப்படுகிறது.

மற்ற எல்லா பொருளாதார நிர்வாக முறைகளைப் போல், நிர்வாகத்தில் ஜனநாயக மையப்படுத்துதல் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் நிர்வாகத்தில் இலாகா வாரியான குறுகிய போக்குகளைத் தடுத்து மையப்படுத்துதல் தொடர்ந்து வளர்ச்சி அடைகிறது. 26வது கட்சிக் காங்கிரசில் சுட்டிக்காட்டப்பட்டதைப் போல, தனித்தனியான மந்திரிசபை இலாகாக்கள் மற்றும் நிறுவனங்களின் நலன்களுக்கு மேல் அரசின் பொது நலன்கள் இருக்க வேண்டும். மறு பக்கத்தில், தொழிலாளர் கூட்டமைப்புக்கள் தம் திறமையை உயர்த்துவதற்கும் உற்பத்தியில் அதிகச் சிறப்பான விளைவுகளை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்ற முன்முயற்சியை மென்மேலும் காட்டுகின்றன. இவ்விதம் ஜனநாயக மத்தியத்துவத்தின் இரண்டு கோட்பாடுகளும் ஆழமாக வேரூன்றுகின்றன.

**துறை மற்றும் பிராந்திய பொருளாதார நிர்வாகத்தின் ஒரு கலப்பு** நிர்வாகத்தின் கோட்பாடுகளில் ஒன்றாகும். சோஷலிசத்தின் கீழ், முக்கியமாக வளர்ச்சியுற்ற சோஷலிசக் கட்டத்தில் பொருளாதாரத் துறைகள் சக்திமிக்கதாகவும் எல்லா தொழில்நுணுக்கச் சாதனங்களும் அமையப்

பெற்றதாகவும் மிகச் சிக்கலான அமைப்புகளாகவும் மாறிய பொழுது, உற்பத்தியின் வளர்ச்சிக்கும் முக்கியமாக உற்பத்தித் துறை ரீதியாக பொருளாதார, தொழில்நுணுக்கக் கொள்கைகள் ஒன்ருக இணையவும் ஏற்பாடு செய்வது மிக முக்கியமானது.

ஆனல் பிராந்திய தொகுப்புகளில் உற்பத்தி வளர்ச்சியை உறுதிப்படுத்துவது குறைந்த முக்கியத்துவமுடையதல்ல. உற்பத்தியின் தனிச் சிறப்பின் அக்கறைகளாலும், பிராந்திய, பொருளாதார பகுதிகளின் எல்லைக்குள் துறைகளுக்கிடையிலான உற்பத்தி ஒத்துழைப்பின் அக்கறைகளாலும் இது அவசியமாக்கப்படுகிறது. அவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று சரியாகப் பொருந்த வேண்டும்.

சோவியத் யூனியனில், பல்வேறு தொழில் மற்றும் கட்டுமான கிளைகளில், ஈரடுக்கு மூவடுக்கு நிர்வாக முறைகளின் ஒழுங்கமைப்பு முடிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் பொதுத் திட்டங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன. அதே நேரத்தில் உற்பத்தி இல்லாத கிளைகளில் நிர்வாகத்தின் ஸ்தாபன ரீதியான கட்டமைப்பு மேம்பாடடைகிறது. இத்தகைய நடவடிக்கைகளின் மைய இடம் சங்கங்களின் அமைப்பைச் சார்ந்தது. அதே நேரத்தில் பிராந்திய நிர்வாகமும் மேம்பாடடைந்துள்ளது. குறிப்பாக, யூனியன் குடியரசுகளில் பூரண பொருளாதார வளர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது. பிராந்திய தொழில், விவசாய-தொழில் தொகுப்புகள் ஆகியவற்றை நிறுவுவதற்கும் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

## 4. சமூக உற்பத்தியைத் திட்டமிடுதல்

பொருளாதார நிர்வாகத்தின் ஒரு மிக முக்கியமான அம்சம் திட்டமிடுதலாகும். அதனல் இது பொதுவான நிர்வாகத்தைப் போல், சமூக உற்பத்தியின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சியின் பொருளாதார விதியை அமுலாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு எடுக்கப்படும் ஒழுங்கமைக்கும் பொருளாதார நடவடிக்கைகளின் ஒரு அமைப்பாகும். அதில் தேசியப் பொருளாதாரத் திட்டங்களைத்

திட்டமிடுவதும், அவற்றை நிறைவேற்றுவதை மேற்பார்வையிடுவதும் அடங்கியுள்ளன. திட்டமிடும் நடைமுறையில் அநேக அடிப்படைத் தேவைகள் தோன்றியுள்ளன. அவை அதன் உச்சபட்ச திறமைக்கு ஏற்பாடு செய்கின்றன.

## திட்டமிடுதலின் முக்கிய கோட்பாடுகள்

திட்டமிடுதலின் மிக முக்கிய கோட்பாடு அதனுடைய **கட்சி உணர்வில்** அடங்கியுள்ளது. சோஷலிச சமுதாயத்தில் திட்டமிடுதல் என்பதற்கு ஒரு உண்மையான கட்சி சார்புடைய குண இயல்பு உண்டு. மார்க்சிய-லெனினியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கையை அது உருக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தேசியப் பொருளாதார திட்டமும் கட்சியின் வேலைத் திட்டத்தை அமுலாக்குவதில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றைக் கட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரத் திட்டங்களின் **விஞ்ஞான ரீதியான மெய்ப்பித்தலானது** குறைந்த முக்கியத்துவமுடையதல்ல. திட்டமிடும் நிகழ்ச்சிப் போக்கில், சோஷலிசப் பொருளாதார விதிகளின் ஒட்டு மொத்தம், உற்பத்தியின் தரம், சமூக தேவைகள், சமீபத்திய விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றங்கள், சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றைக் கட்டுவதில் தோன்றும் எல்லா புதியதும், முற்போக்கானதுமானவை கணக்கில் எடுக்கப்படும். திட்டங்களை விஞ்ஞான ரீதியாக மெய்ப்பிப்பதின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு லெனின் எழுதினார்: ''இந்தத் துறையில் நம்முடைய விரிவான திட்டங்கள் கற்பனை உருவங்களல்ல; ஆனால் அவை விஞ்ஞானம், தொழில்நுணுக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்படுகின்றன.''* சமூக தேவைகள், பொருளாயத, நிதி வளங்கள், மனித சக்தி ஆகியவற்றை மிகத் திறமையாகப் பயன்படுத்தி அத்தேவைகளைப் பூர்த்தி செய்தல், திட்டக் குறிக்கோள்களைச் சமநிலைப்படுத்துதல், உற்பத்தித் துறை திட்டமிடுதல், பிராந்திய திட்டமிடு

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 30, p. 334.

தல் ஆகியவற்றை இன்னும் சிறப்பாக இணைத்தல், திட்டகுறிக்கோளான அணுகு முறையை மேலும் அதிகமாகப் பயன் படுத்துதல், பரிபூரணத் திட்டங்களை வகுத்தல், உற்பத்தித் திறமையை அதிகப்படுத்துவதில் ஒரு பங்கை அவற்றிற்கு வழங்கும் நோக்கத்துடன் திட்டங்களின் தரங்கள், சுட்டிக் காட்டுபவைகளின் முறையை மேம்படுத்துதல் ஆகியவற்றை முழுமையாகக் கணக்கில் எடுத்துக் கொண்டு திட்டமிடுதலை விஞ்ஞான ரீதியாக மெய்ப்பிப்பதை இன்னும் அதிகமாக மேம்படுத்தும் தேவையை சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்கள் வலியுறுத்துகின்றன.

**ஜனநாயக மையப்படுத்துதல்** என்ற கோட்பாடும் கூட திட்டமிடுதலில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. அரசால் மையப் படுத்தப்பட்டதும் திட்டமிடப்பட்டதுமான நிர்வாகத்தை, ஸ்தல உற்பத்தி இருப்புகளையும் திட்ட இலக்குகளை நிறை வேற்றுவதில் மக்களின் படைக்கும் செயலையும் உச்ச அளவில் பயன்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட ஸ்தல ஆட்சி ஸ்தாபனங்கள், பொருளாதார நிறுவனங்கள், தொழில் நிலையங்கள் ஆகியவற்றின் திட்டமிடுவதில் பொரு ளாதாரச் சுதந்திரத்துடன் நெருக்கமாக இணைக்கும் அவசியம் சோஷலிச உற்பத்தியின் ஒரு புறவய விதியாக உள்ளது.

சோவியத் யூனியனில் தற்சமயம் தொழில் துறை இணைப்புகள் சுதந்திர (ஒருங்கிணைக்கப்படாத) தொழில் நிலை யங்கள் ஆகியவை அவற்றின் அமைச்சகங்களில் இருந்து, மொத்த விற்பனை பரிமாணம், உற்பத்திப் பொருள்களின் அடிப்படை வகைகள், கூலிகள் நிதி, பொருளாயத-தொழில் நுணுக்க அளிப்பு, புதிய இயந்திரங்களைப் புகுத்துதல், தொழில் கட்டிடங்களின் கட்டுமானம், உழைப்பின் உற் பத்தித் திறனின் உயர்வு, மொத்த இலாபங்கள், அரசு வரவு-செலவு திட்டத்தில் செலுத்தினங்கள், வரவு-செலவு திட்டத் திலிருந்து ஒதுக்கீடுகள் ஆகிய பத்து சுட்டுக்காட்டுபவை களுக்கு ஏற்ப மையப்படுத்தப்பட்ட திட்டப் பணிகளைப் பெறுகின்றன. திட்டமிட்டபடி பொது பொருளாதார சம நிலைகளை உறுதிப்படுத்துவதற்கு இது தேவையாகிறது. இது தவிர மற்ற ஒவ்வொன்றும் இணைப்புகள், தொழில் நிலையங் கள் ஆகியவற்றுலேயே அவற்றின் சாத்தியக் கூறுகள், இருப்பு

கள், தொழிலாளர்களின் முன்முயற்சிகள் ஆகியவைப் பயன் படுத்தப்பட்டுத் திட்டமிடப்படுகின்றன.

தேசியப் பொருளாதாரத் திட்டம் ஒரு சட்டக்குழுவால் (சோவியத் யூனியனில்—சுப்ரீம் சோவியத்)ஏற்றுக் கொள்ளப் பட்ட பின் அத்திட்டமானது எல்லா ஸ்தாபனங்களேயும் குடிமக்களேயும் சட்டப் பூர்வமாகக் கட்டுப்படுத்துவதாகி விடும். திட்டமானது ஒரு நெறிமுறை என்ற உண்மையை இது வெளிப்படுத்துகிறது. அது குறிப்பாக சோஷலிச திட்ட மிடுதலுக்கும், முதலாளித்துவப் பொருளாதார வேலேத் திட்டத்திற்கும் இடையிலுள்ள முக்கிய வேறுபாட்டைத் தெளிவாக விளக்குகிறது. முதலாளித்துவ பொருளாதார வேலேத்திட்டமிடுதல் முழுக்க முழுக்க ஒரு ஆலோசனேயாக இருக்கிறது. சோஷலிச திட்டமிடுதல், முதலாளித்துவ வேலேத்திட்டமிடுதலே விட எவ்வளவு சிறந்தது என்பதை யும் விளக்குகிறது.

மையப்படுத்துதலேத் திட்டமிடுதலின் ஜனநாயக தன் மைக்கு எதிரானதாக்கி திட்டங்களின் கட்டுப்படுத்தும் இயல் பை தன்விருப்பார்வ செயல் முறையுடனும் அரசு விடுக்கும் அடிப்படையற்ற ஆணேகளுடனும் ஒத்திருத்தலாக்கி பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் சோஷலிச திட்டமிடுதலின் சாரத் தைத் திரித்துக் கூற முயலுகின்றனர். எதார்த்தத்தில் இது விவகாரத்திலிருந்து வெகு தூரத்தில் உள்ளது. மேலும் மையப்படுத்துதலும், ஜனநாயகமும் திட்டமிடுதலின் கட்டுப் படுத்தும் இயல்பும், விஞ்ஞான ரீதியாக முழுக்க மெய்ப் பிக்கப்பட்டிருக்கின்றன. அவை திட்டமிடுதலே மிகப் பயனுள்ளதாக்க உறுதியான பங்காற்றுகின்றன.

**திட்டமிடுதலின் மிக முக்கியக் கோட்பாடு திட்டமிடுதலேத் தொடர் தல், நீண்ட, நடுத்தர, குறுகிய காலத் திட்டங்களே இணேத்தலாகும்.**

நீண்ட காலத் திட்டமிடுதல் என்பது விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றத்தின் விளேவுகளேப் பயன்படுத்தி உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக வும், சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றைக் கட்டுவதில் ஈடுபட்ட பெரிய சமூக-பொருளாதாரப் பிரச்சினேகளேத் தீர்ப்பதற்குமான ஒரு கருவியாகும். இந்தக் காரியத்திற் கான சிறந்த திட்டமிடும் காலம் பதினேந்து ஆண்டு காலம்

எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும் பொருளாதாரத் திட்டங்களை வகுத்து இப்பொழுது 1990ம் ஆண்டு முடிய உள்ள காலத்திற்கான பொருளாதாரத் திட்டங்களை அமுலாக்கிக் கொண்டிருக் கின்றன.

எதிர்காலத் திட்டமிடுதலின் முக்கிய வடிவம் நடுத்தரக் காலத் திட்டங்கள் (ஐந்தாண்டு திட்டங்கள்) ஆகும். அவை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு சோஷலிச நாடுகளின் பொரு ளாதார வளர்ச்சிக்கான வழிகாட்டும் பாதைகளைத் தீர் மானிக்கின்றன.

திட்டமிடுதலில் குறுகிய கால அல்லது நடப்புத் திட்டங் கள் ஒரு பெரும்பங்காற்றப்படுகின்றன. குறுகிய கால இடை வெளியைக் குறிப்பிட்டு அவைகள் ஐந்தாண்டு திட்டங்களை ஸ்தூலப்படுத்துகின்றன. ஐந்தாண்டு திட்டங்களில் திருத்தங் களைப் புகுத்துவதை சாத்தியமாக்குகின்றன; திட்டமிடுதலின் தொடர்ச்சிக்கு ஏற்பாடு செய்கின்றன. குறுகிய காலத் திட்டங்கள் வழக்கமாக ஒரு ஆண்டிற்காகத் திட்டமிடப்படு கின்றன.

ஐந்தாண்டு திட்டங்கள், ஆண்டு திட்டங்கள் ஆகியவை தேசிய பொருளாதார அளவில் மட்டுமல்லாது ஒவ்வொரு பொருளாதார இணைப்புக்கும், தொழில் நிலையத்துக்கும் கூட வகுக்கப்படுகின்றன.

## திட்டமிடும் முறைகள்

திட்டமிடுதலின் திறமையானது பெருமளவில் இது பயன்படுத்த முறைகளால் தீர்மானிக்கப்படுகிறது. சமூக தேவைகள், சமூக உற்பத்தி, விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றம், பிறப்பு நிகழ்ச்சிப் போக்கு, மற்றும் இவை போன்றவைகளில் எதிர்பார்க்கும் மாற்றங்களை **விஞ்ஞான ரீதியான முன்னறிவிப்புடன்** ஒரு தேசிய பொருளாதாரத் திட்டம் வகுக்கப்படுவது தொடங்குகிறது. இந்த அடிப் படையில் பொருளாதார வளர்ச்சியின் செயல்திட்ட திசை இந்தக்கால அளவிற்கு வகுக்கப்படுகிறது. திட்டத்தின் முக்கிய உள்ளடக்கம் தீர்மானிக்கப்படுகிறது.

ஒரு தேசியப் பொருளாதாரத் திட்டத்தை வகுப்பதில் திட்டமிடுதலின் ஒரு பரிபூர்ண, அமைப்பு முறை பயன்படுத்தப் படுகிறது. தேசிய பொருளாதாரமானது ஒரே பொருளா தாரத் தொகுப்பாகவும் இடையுறவும் இடைசார்பும் உள்ள உப-பிரிவுகளும் வளர்ச்சி வட்டாரங்களும் உடைய ஒரு சமூக-பொருளாதார அமைப்பாகவும் கருதப்படுகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங் களில் பரிபூர்ண திட்டமிடும் முறையின் மேம்பாட்டிற்கு கணிசமான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பிரதான விஞ் ஞான, தொழில்நுணுக்க, பொருளாதார, சமூகப் பிரச்சினை களுக்குப் பரிபூர்ணத் திட்டங்களைத் தீட்டுவதன் முக்கியத் துவம் வலியுறுத்தப்படுகிறது. உணவுத் திட்டம், பண்ட உற்பத்தியையும் சேவைகளையும் பெருக்குகின்ற திட்டம், உடல் உழைப்பைப் படிப்படியாக அகற்றுகின்ற திட்டங்கள், இயந்திரப் பொறியியல், மின் பொறியியல், எல்லா வகையான போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சிக்காகத் தயாரிக்கப் பட்டுள்ள திட்டங்கள், தேசியப் பொருளாதாரத்தில் இரசா யனத் துறையின் சாதனைகளின் சர்வாம்ச உபயோகத்துக் குரிய திட்டங்கள், இதரவை அதற்கு உதாரணங்களாகும். ஆவணங்கள், துறை அளவில் மட்டுமல்லாது இணைப்பு கள், தொழில் நிலையங்கள், வட்டாரங்கள், நகரங்கள் போன்ற அளவிலும் பொருளாதார, சமூக வளர்ச்சியின் பூர்ண திட்டமிடுதலின் மேம்பாட்டிற்கான தேவையைச் சுட்டிக் காட்டுகின்றன.

திட்டமிடுதலின் முக்கிய முறை சமநிலை முறையாகும். சமநிலை முறை என்பது இடை உறவு சுட்டிக்காட்டுபவை களின் ஓர் அமைப்பாகும். அதில் சமுதாயத்தின் தேவைகளும் அவற்றைப் பூர்த்தி செய்யும் வழிகளும் (வளங்கள்) ஒன்றுடன் ஒன்று ஒத்திசைந்தன. சமநிலை முறை பொருளாதாரத்தைச் சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது. அது உற்பத்தியின் கஷ்டங்களையும் அவற்றை அகற்ற தேவையான நடவடிக்கை களையும் காட்டுகிறது. பொருளாயத, நிதி, உழைப்பு வளங் களின் பிற்சேர்க்கையான மூலாதாரங்களைத் தீர்மானிக்கிறது.

திட்டமிடும் நிகழ்ச்சிப் போக்கில், பொருளாயத (இயற்கை

யான), விலை (நிதி), உழைப்பு (மனித சக்தி) சமநிலைகள் வகுக்கப்படுகின்றன.

பொருளாயத சமநிலைகள் இயற்கையான வகையில் ஓர் உற்பத்திப் பொருளை அல்லது உற்பத்திப் பொருள்களின் வகைகளை உற்பத்தி செய்வது, நுகர்வது ஆகியவற்றிற்கிடையே இணக்கத்தை உண்டாக்கவும் தொழில் துறைகளுக்கு இடையில் தொடர்புகளை தீர்மானிக்கவும் உதவுகின்றன.

விலை சமநிலைகள் நிதி மூலாதாரங்களைப் பண வகையிலும், நிதிக்கான தேவைகளையும் ஒன்றுடன் ஒன்று ஒத்திசைவு ஏற்பட செய்கின்றன. விலை சமநிலைகளாவன: தேசிய வருவாய் சமநிலை, அரசு வரவு-செலவு திட்டம், மக்களின் சொந்த வருமானமும் செலவும், தொழில் நிலையங்களின் சமநிலைகள் இவை போன்றவைகளாகும்.

உழைப்பு சமநிலைகளானது, தேசியப் பொருளாதாரத்திற்காக குறிப்பிட்ட பயிற்சி, திறமையுடைய தொழிலாளர்களின் தேவையான எண்ணிக்கையை ஏற்பாடு செய்வதற்காக வகுக்கப்படுகின்றன. சமநிலைகள் உழைப்பிற்கான தேவைகளையும், அவற்றைப் பூர்த்தி செய்யும் மூலாதாரங்களையும் ஒத்திசைவடையச் செய்கின்றன.

சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும் சமூக உற்பத்திப் பொருளின் உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றின் ஒரு இடை தொழில் சமநிலை திட்டத்தை வகுக்கின்றன.

எல்லாவற்றையும் உள்ளடக்கிய சமநிலையானது தேசிய பொருளாதார சமநிலை. அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய விகிதாச்சாரங்களின் எல்லா சுட்டிக்காட்டுபவைகளையும் ஒன்றுகச் சேர்க்கிறது.

சமநிலைகளை ஒழுங்குபடுத்துவதில் பொதுவாகத் திட்டமிடுதலைப் போல், கம்பியூட்டர்களின் பயனை உள்ளடக்கிய கணிதப் பொருளாதார முறைகள் உபயோகிக்கப்படுகின்றன.

## கூட்டுறவு (கூட்டுப் பண்ணை) உற்பத்தித் திட்டமிடுதலின் குறிப்பிடத்தக்கப் பண்பு கூறுகள்

கூட்டுறவு (கூட்டுப் பண்ணை) உற்பத்தியானது, உற்பத்திச் சாதனங்களின் கூட்டுறவு உடைமையின் அடிப்படையில் உள்ளது. இருப்பினும், முன்னணியும் தீர்மானிக்கும் பங்குமுடைய பொது மக்கள் உடைமையைச் சார்ந்தே சோஷலிச அரசு கூட்டுறவு உற்பத்தியைக் கூட திட்டமிடுகிறது. ஆனால் கூட்டுறவு உற்பத்தியின் (கூட்டுப் பண்ணை) திட்டமிடுதல் குறிப்பிடத்தக்கப் பண்பு கூறுகளைப் பெற்றுள்ளது. மத்திய திட்டமிடும் குழுக்கள், அரசு தொழில் நிலையங்களுக்கு அவற்றைக் கட்டுப்படுத்தக் கூடியதும், அவற்றின் உற்பத்தி நடவடிக்கைகளைத் தீர்மானிக்கக் கூடியதுமான சில அடிப்படைச் சுட்டிக்காட்டுபவைகளைக் கொடுக்கின்றன. கூட்டுறவு தொழில் நிலையங்கள் (கூட்டுப் பண்ணைகள்) அரசிடமிருந்து ஒரு திட்ட-உத்தரவைப் பெறுகின்றன. அது, அவற்றை, அரசுக்கு சில ஆண்டுகளுக்கு அவற்றின் பண்ணை உற்பத்திப் பொருள்களின் குறிப்பிட்ட அளவை விற்கும் படியாக ஒப்புக் கொள்ளச் செய்கிறது. திட்ட-உத்தரவு என்பதின் அடிப்படையில் கூட்டுறவு தொழில் நிலையங்கள் அவற்றின் மொத்த உற்பத்தித் திட்டங்களை வகுக்கின்றன. இந்த உற்பத்தித் திட்டங்கள் கூட்டுறவுகளால் சுதந்திரமாக வகுக்கப்படுகின்றன. இத்திட்டங்களைத் தீட்டுவதில் கூட்டுறவுகள் அவற்றின் சொந்த வளங்களையும், அரசிடமிருந்து பெற இருக்கும் உதவிகளான பண்ணை இயந்திர வகைகள், உற்பத்திச் சாதனங்கள், விஞ்ஞான வளர்ச்சியின் அறிவு, இயந்திரங்களை இயக்குபவர்களுக்கும் பிற தேவையான நிபுணர்களுக்கும் அளிக்கும் பயிற்சி ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுகின்றன.

அத்தியாயம் 16

# பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள்

## 1. சோஷலிசத்தின் கீழ் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள்

சோஷலிசத்தின் கீழ் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் நிலைத்திருப்பதற்கான காரணம், முதலாவதாக, உற்பத்திச் சாதனங்களில் சமூக சோஷலிச உடைமையின் இரு வடிவங்கள் உள்ளதாகும். அவை கூட்டுறவு தொழில் நிலையங்களை பொருளாதார ரீதியாக ஒன்றிலிருந்து மற்றதையும், தேசியப் பொருளாதாரப் பொதுத் துறையிலிருந்தும் ஒப்பியல்பாக தனிமைப்படுத்துகின்றன. கூட்டுறவுகளும் அரசும் பண்டங்களை பரிவர்த்தனை செய்வதன் மூலம் பரஸ்பரம் செயலாற்றுகின்றன. இரண்டாவதாக, பரிவர்த்தனை பண்ட-பண உறவுகள் நிலைத்திருப்பதற்கான மற்ருெரு காரணம் சோஷலிசத்தில் நேரடியான சமூக உழைப்பின் முழுமையடையாத பக்குவமாகும். இது மற்றவற்றுடன், அரசுடைமை தொழில் நிலையங்களிலுள்ள தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்களின் உற்பத்தியின் விளைவுகளில் காட்டுகிற ஒரு பொருளாதார அக்கறையில் வெளிப்படுத்தப்படுகிறது. இந்தப் பொருளாயத அக்கறை பரிவர்த்தனைப் பண்டங்களாக மாறும் உழைப்பின் உற்பத்திப் பொருள்களை பரிமாற்றம் செய்வதன் மூலம் தொழில் நிலையங்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது என்று குறிக்கிறது. எனவே ஒப்பியல்பாக அரசு தொழில் நிலையங்கள் கூட பொருளாதார ரீதியாக தனிமைப்படுத்தப்படுகின்றன.

சோஷலிசத்தின்கீழ் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் முதலாளித்துவ உறவுகளைப் போல் உற்பத்திச் சாதனங்களின் தனியார் உடைமையை அடிப்படையாகக் கொண்டிருக்க வில்லை. ஆனால் அவை உற்பத்தி சாதனங்களின் சமூக உடைமையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. சோஷ லிச சமுதாயத்தில் உற்பத்தியாளர்களாக சோஷலிச தொழில் நிலையங்கள் முன்வருகின்றன.

சோஷலிசத்தின் கீழ் பரிவர்த்தனைப் பண்ட உறவுகள் முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த எதிரும் புதிருமான முரண்பாடுகள் இல்லாதவையாகும். அவை மற்ற மக்களின் உழைப்பைச் சுரண்ட இட்டுச் செல்லா. சோஷலிசத்தில் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் என்பது, மக்களின் வளர்ந்து வரும் தேவைகளை முடிந்த அளவிற்கு முழுமையாக திருப்திப்படுத்துவதற்காக திட்டத்தின்படி வளர்ச்சிபெற்ற சோஷலிச உற்பத்தி உறவுகளின் ஒரு ஸ்தூல வெளிப்பாடாகும்.

சோஷலிசத்தின் கீழ், பரிவர்த்தனைப் பண்ட-பண உறவு கள், முதலாளித்துவ உறவுகளைப் போலல்லாது ஒரு வரை யறுக்கப்பட்ட வட்டாரத்தை மட்டுமே நிரப்புகின்றன.

உழைப்புச் சக்தி என்பது இனி ஒரு பரிவர்த்தனைப் பண்ட மாக இல்லை. சோஷலிச சமுதாயத்தில் தொழில் நிலையங் களையோ, நிலத்தையோ வாங்கவும், விற்கவும் முடியாது.

இருப்பினும், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் சிறிதளவான வீச்சானது, சோஷலிச சமுதாயத்தில் பரிவர்த் தனைப் பண்ட-பண உறவுகள் கட்டாயமாகச் சுருக்கப்பட வேண்டும் என்பது அர்த்தமல்ல. அவை மிகத் திறமை யாக சமூக உற்பத்தியின் நன்மைகளுடன் இணைக்கப்பட்டு அதை மேம்படுத்தப் பயன்படுத்தப்பட வேண்டும்.

சோஷலிசத்தின் கீழ் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவு களின் வளர்ச்சிப் போக்கு, அடிப்படையிலேயே முதலாளித் துவத்தின் கீழ் இருப்பதிலிருந்து வேறுபடுகிறது. அவை ஒரு தொழில் நிலையம் திவாலாவதற்கும் மற்றொரு தொழில் நிலையம் வளமையடைவதற்கும் இட்டுச் செல்லாது. முத லாளித்துவத்தின் கீழ், பரிவர்த்தனைப் பண்ட உறவுகள் வழக்கமாக இப்படித்தான் நடக்கும். சோஷலிச தொழில் நிலையங்களின் நடவடிக்கைகளில், பொருளாதார நிலைமை

கள் முதலாளித்துவ பரிவர்த்தனைப் பண்டப் போக்குகளை வளர்ப்பதில்லை; அவற்றை முதலாளித்துவ தொழில் நிலையங்களாக மாற்றவும் செய்யா.

## 2. பரிவர்த்தனைப் பண்டமும் அதனுடைய குணங்களும்

### சோஷலிசத்தின் கீழ் உபயோக மதிப்பும் பரிவர்த்தனைப் பண்ட மதிப்பும்

சோஷலிச உற்பத்தியின் குறிப்பிட்ட பண்புக் கூறுகள், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் உற்பத்திப் பொருளாகிய பண்டம், அதன் மூலாதாரமாகிய பண்ட உற்பத்தியாளர்களின் உழைப்பு ஆகியவற்றின் குண இயல்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

சோஷலிசத்தின் கீழும் கூட ஒவ்வொரு பரிவர்த்தனைப் பண்டமும் ஒரு உபயோக மதிப்பும், மதிப்பும் பெற்றுள்ளது. அது அதனுடைய இரட்டைத் தன்மையை வெளிப்படுத்துகிறது. உபயோக மதிப்பு என்பது சில மனித தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு பொருளின் திறமையாகும். சோஷலிச சமுதாயத்தில் அதன் பொருளானது, முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ளதிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. முதலாளிகள் உபயோக மதிப்புகள் சிலவற்றை உற்பத்தி செய்வதில் ஆர்வம் உடையவர்கள். ஏனெனில் அவை மதிப்பு, உபரி மதிப்பு இரண்டையும் உட்கொண்டிருக்கின்றன. உபயோக மதிப்பு இல்லாமல் மதிப்பு என்பது இருக்க முடியாது.

சோஷலிசத்தின் கீழ், சமூக உற்பத்தியின் குறிக்கோள் சமுதாய உறுப்பினர்களின் சேம நலத்தையும் சர்வாம்ச வளர்ச்சியையும் மேம்படுத்துவதாகும். இக்காரணத்திற்காக, வளர்ந்து வரும் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப இதுவரை இல்லாத பெருமளவிலும், இதுவரை இல்லாத பெரும் வகையிலும் சிறந்த தரம் உடைய உபயோக மதிப்புகளின் உற்பத்தி முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

பரிவர்த்தனைப் பண்டத்தின் மறுபுறம் அதனுடைய மதிப்பு ஆகும்.

நாம் அறிந்ததைப் போல் மதிப்பு என்பது பரிவர்த்தனைப் பண்டத்தில் அடங்கியுள்ள பண்டங்களை உற்பத்தி செய்பவர்களின் சூட்சும உழைப்பாகும். முதலாளித்துவத்தின் கீழ் உள்ளதைப் போலல்லாது சோஷலிச தொழில் நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் மதிப்பானது, சோஷலிச தொழில் நிலையங்களில் பண்டங்களில் அடங்கியுள்ள தொழிலாளர்களின் உழைப்பாகும். அந்த உழைப்பு தொழிலாளி தனக்காகவும் தன்னுடைய சமுதாயத்திற்காகவும் உழைத்த உழைப்பு, சுதந்திரமான உழைப்பு ஆகும். சோஷலிசத்தின் கீழ் பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பு சோஷலிச உற்பத்தி உறவுகளை வெளிப்படுத்துகிறது. சோஷலிசத்தின் கீழ் இது பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகளின் ஒரு முக்கிய குணும்சமாகும்.

பரிவர்த்தனைப் பண்டத்தை உற்பத்தி செய்ய செலவழிக்கப்பட்ட உழைப்பின் அளவால் மதிப்பின் அளவு தீர்மானிக்கப்படுகிறது. உழைப்பின் அளவானது உழைப்பு எடுத்துக் கொள்ளும் நேரம் அதாவது உழைப்பு நேரத்தால் அளக்கப்படுகிறது.

பரிவர்த்தனைப் பண்டத்தின் தனிப்பட்ட மதிப்பு, சமூக மதிப்பு ஆகியவற்றிற்கிடையே ஒரு தனி வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும். தனிப்பட்ட மதிப்பானது தனிப்பட்ட உழைப்பின் செலவுகளால் அதாவது ஒரு தனிப்பட்ட தொழில் நிலையத்தில் ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய அது எடுக்கும் சராசரி நேரத்தால் தீர்மானிக்கப்படுகிறது. சமூக மதிப்பானது, சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட பண்டத்தை உற்பத்தி செய்ய அது எடுக்கும் சராசரி உழைப்பு நேரத்தால் அளக்கப்படும், சமூக ரீதியாகத் தேவைப்படும் உழைப்பு செலவினுல் தீர்மானிக்கப்படுகிறது.

சமூக மதிப்பு என்பது ஒரு புறவய அளவாகும். முதலாளித்துவத்தின் கீழ் அது தன்னியல்பாக உருவாக்கப்படுகிறது. சோஷலிச சமுதாயத்தில் மக்கள் ஒரு திட்டத்தின் அடிப்படையில், உணர்வு பூர்வமாக அது உருவாதலை தங்கள் செல்வாக்கிற்கு உட்படுத்துகின்றனர். சமூக உழைப்

பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் எல்லாக் காரணிகளையும் உபயோகித்து சோஷலிச சமுதாயம் சமூக ரீதியாக தேவைப் படும் உழைப்பை மீதப்படுத்துவதற்கான, அதன் விளைவாக உற்பத்திப் பொருள்களின் சமூக மதிப்பைக் குறைப் பதற்கான நிலைமைகளை உருவாக்குகிறது. இது சரக்கு களின் விலைகளைக் குறைக்க மிகவும் தேவையாக இருக் கிறது.

## சரக்குகளின் விலைகள்

பரிவர்த்தனைப் பண்ட விலையில் சமூக மதிப்பு வெளிப் படுத்தப்படுகிறது. அது மதிப்பினுடைய பண வடிவம், அத னுடைய அம்சங்கள், அதாவது அடக்க விலை, நிகர வரு மானம் ஆகியவையாகும். சோஷலிச சமுதாயத்தில் விலைகள் அரசால் திட்டமிடப்பட்டதால் விலைகளின் தன்னியல்பான இயக்கம் ஒன்றும் இல்லை. தொழில் துறையின் சராசரி செலவும், மொத்த வருமானத்தின் ஒரு குறிப்பிட்ட அளவும் சேர்ந்ததுதான் விலைகளைத் திட்டமிடுதலின் அடிப்படை யாகும்.

அடக்க விலை என்பதில் உற்பத்திச் சாதனங்களுக்கான செலவு, உழைப்பிற்கான ஊதியம் ஆகிய பண வடிவத்தில் வெளிப்படுத்தப்பட்ட தொழில் நிலையங்களின் செலவுகள் அடங்கும்.

நிகர வருமானம் என்பது விலைக்கும் அடக்க விலைக்கும் இடையிலான வேறுபாடாகும். அது சமுதாயத்திற்கான உற் பத்திப் பொருளின் மதிப்பு வெளிப்படுத்தப்படும் ஒரு வடிவ மாகும். அதாவது சோஷலிச தொழில் நிலையங்களில் தொழிலாளர்களால் உருவாக்கப்படும் உற்பத்திப் பொருள் களின் பங்கானது தனக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருள் என்று அழைக்கப்பட்டதை விட அதிகமானது. பின்னுல் கூறப்பட்டதன் மதிப்பு தொழிலாளர்களுக்கிடையே அவர் களுடைய வேலைக்குத்தக்க வினியோகிக்கப்படுகிறது. நிகர வருமானம் இரு வடிவங்களில் தோன்றுகிறது. அவையா வன: தொழில் நிலையங்களின் இலாபம், விற்பனைப் புரள்வு வரி என்பன. தொழில் நிலையங்களால் பெறப்படும் இலாபத்

தின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் பரிமாணம், விலைகள் ஆகியவற்றை மட்டும் சார்ந்திருக்கவில்லை, தொழில் நிலையங்களின் திறமையையும் சார்ந்திருக்கிறது. குறிப்பிட்ட விலைகளில் சிறந்த தரமான உற்பத்திப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டால், செலவுகள் குறைவாக இருந்தால், இலாபம் அதிகமாக இருக்கும்; அடக்க விலை குறையும்.

இலாபத்தைப் போல், விற்பனைப் புரள்வு வரியானது பரிவர்த்தனைப் பண்ட விலையின் ஒரு குறிப்பிட்ட சதவீதமாக சேர்க்கப்படுகிறது. விற்பனைக்குப் பிறகு உடனடியாக விற்பனைப் புரள்வு வரி அரசுக்குக் கழிக்கப்படுகிறது. எனவே அரசின் மையப்படுத்தப்பட்ட ஒரு நிகர வருமான வடிவமாக இருக்கிறது.

சோஷலிசத்தின் கீழ் சில விதமான விலைகள் உள்ளன. ஒவ்வொன்றும் அதனுடைய சொந்த செயல்பாடு ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறது.

சோவியத் யூனியனில் கீழ் கண்ட விலைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

1) தொழில் நிலையத்தின் மொத்த விலை.
2) தொழில் துறையின் மொத்த விலை.
3) கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகள் ஆகியவற்றின் விவசாய உற்பத்திப் பொருளுக்காகச் செலுத்தப்பட்ட வாங்கும் விலை.
4) அரசு, கூட்டுறவு வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட சில்லறை விலை.
5) கூட்டுப் பண்ணை சந்தை விலை.

**தொழில் நிலையங்களின் மொத்த விலைகளில்** தொழில் நிலையங்கள் பிற தொழில் நிலையங்களுக்கும் விற்பனை நிறுவனங்களுக்கும் சரக்குகளை விற்பனை செய்கின்றன. தொழில் நிலையங்களின் மொத்த விலை என்பதில் தொழில் துறைக்குத் திட்டமிடப்பட்ட சராசரி அடக்க விலையுடன் ஒரு குறிப்பிட்ட நிலையான அளவு இலாபமும் அடங்கும்.

**தொழில் துறையின் மொத்த விலைகளில்** உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிறுவனங்களால் வர்த்தக நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன. இந்த விலையானது தொழில்

நிலையத்தின் மொத்த விலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அத்துடன் திட்டமிடப்பட்டுள்ள இலாபமும் விற்பனை நிறுவனங்களை பராமரிப்பதற்கான செலவுகளும், விற்பனைப் புரள்வு வரியும் சேர்ந்துள்ளன.

வாங்கும் விலைகளில் கூட்டுப் பண்ணைகளும் அரசு பண்ணைகளும் விவசாய உற்பத்திப் பொருள்களை அரசுக்கு விற்கின்றன. வாங்கும் விலைகள் இயல்பான, பொருளாதார வட்டங்களுக்கு ஏற்ப வேறுபடுத்தப்படுகின்றன. ஏனெனில் மிகவும் அதிகமாக வேறுபட்ட இயற்கை நிலைமைகளின் காரணமாக ஒரு இடத்திற்கும் மறு இடத்திற்கும் செலவுகள் அதிகமாக வித்தியாசப்படுகின்றன. வாங்கும் விலைகள், மிக மோசமான இயற்கை நிலைமைகள் உள்ள இடங்களுக்கு உயர்ந்த மட்டத்திலும், சிறந்த இயற்கை நிலைமைகள் உள்ள இடங்களுக்கு குறைந்த மட்டத்திலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

அரசு, கூட்டுறவு கடைகளில் குடிமக்கள் வாங்கும் பொருள்களின் இறுதி விலைகள் **சில்லறை விலைகளாகும்.** அவை கீழ்க் கண்டவாறு நிர்ணயிக்கப்படுகின்றன: திட்டமிடப்பட்ட அடக்க விலை, தொழில் நிலையத்தின் இலாபம், விற்பனைப் புரள்வு வரி, தொழில் துறையின் விற்பனை நிறுவனங்களின் அல்லது மொத்த வர்த்தக நிறுவனங்களின் செலவுகள், இலாபம், சில்லறை வர்த்தக தொழில் நிறுவனங்களின் செலவுகள், இலாபம் ஆகியவை.

**கூட்டுப் பண்ணை சந்தை விலைகள்** வேறுவிதமாக உருவாக்கப்படுகின்றன. அவை அரசால் திட்டமிடப்படுவதில்லை. அவை பெரும்பாலும் அளிப்பு தேவை ஆகியவற்றைச் சார்ந்துள்ளன. ஆனால் அரசு, கூட்டுப் பண்ணைச் சந்தையின் விலைகளின் மேல் ஓர் ஒழுங்குபடுத்தும் செல்வாக்கை ஏற்படுத்தத் தன்னுடைய பண்ட இருப்புகளைப் பயன்படுத்துகிறது. அரசு, கூட்டுறவு கடைகளிலும், கூட்டுப் பண்ணைச் சந்தையிலும் சரக்குகளின் போதுமான அளவு அளிப்பு இருக்குமானால் சந்தை விலைகளானது, திட்டமிடப்பட்ட அரசு, கூட்டுறவு சில்லறை விலைகளுக்கு சமமாக இருக்கும் போக்குடையதாகும்.

விலைகள் மதிப்பின் ஒரு வடிவமாக இருப்பதால் அவை

மதிப்பு எப்படி மாறுகிறது என்று காட்டுகின்றன. சமூக உழைப்பின் உற்பத்தித் திறனின் உயர்வின் விளைவாக மதிப்பு குறைகிறது. அது விலைகளைக் குறைப்பதை சாத்தியமாக்கு கிறது. 1979ல் எடுத்துக் காட்டாக, சோவியத் யூனியனில் நுகர்வுப் பொருள்களின் சில்லறை விலைகள், 1950ம் ஆண்டு நிலையின் 76 சதவீதமாக இருந்தன. 11 வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் (1981—1985) முந்திய ஐந்தாண்டு திட்டத்தைப் போல், முக்கிய உணவுப் பொருள்கள், மற்ற முக்கிய பொருள்கள் ஆகியவற்றிற்கான அரசு சில்லறை விலைகள் நிலையாக வைக்கப்படும்.

## 3. சோஷலிச சமுதாயத்தில் பணம்

### பணத்தின் சாரம்

சோஷலிச சமுதாயத்தில் பணம், பண புழக்கம் ஆகியவை பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகளின் காரணத்தால் உள்ளன. சரக்குகளின் மதிப்பை, விலையைத் தவிர வேறு முறையில் வெளிப்படுத்த முடியாது. விலை தான் மதிப்பின் பண வடிவமாகும்.

சோஷலிசத்தில் பணம் முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ளதிலிருந்து வேறுபடுகிறது. அங்கே அது மூலதனமாக, அதாவது கூலி உழைப்பைச் சுரண்டும் ஒரு சாதனமாகப் பயன்படுத்தப்படுகிறது. சோஷலிசத்தில் பணம் மூலதன மாக முடியாது. சோஷலிச சமுதாயத்தில் ஒருவரும் தொழி லாளர்களைச் சுரண்டுவதற்காக வேலைக்கு அமர்த்த, அதா வது ஒருவரும் தொழிலாளர்களின் கூலி கொடுக்கப்படாத உழைப்பை அபகரிக்க முடியாது.

சோஷலிசத்தின் கீழ் பணமானது, உழைக்கும் மக்களின் நலன்களில் ஒரு திட்டமிட்ட பொருளாதாரத்தை நடத்து வதற்கான ஒரு சாதனமாகும்.

ஒரு பரிவர்த்தனைப் பண்டம் அதற்கென்று சொந்தமாக ஒரு மதிப்பைப் பெற்றிருந்தால் மட்டுமே, அது பணமாக முடியும். தங்கம் அப்படிப்பட்ட ஒரு பரிவர்த்தனைப் பண்ட மாகும். ஆனால் அது சோஷலிச நாடுகளில் புழக்க வட்

டாரத்தில் செயல்படுவதில்லை. அரசு வங்கியால் வெளியிடப்பட்ட காகிதப் பணத்தால் அது புழக்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. சோவியத் யூனியனில் ஒரு ரூபிள் 0.987412 கிராம் சுத்தத் தங்கத்திற்கு சமப்படுத்தப்படுகிறது.

பணத்தின் உயர்ந்த நிலைத்தன்மை என்பது முதலாளித்துவத்தின் மேல் சோஷலிசம் கொண்ட ஒரு பிரதான நன்மையாகும். முதலாளித்துவ நாடுகளில் பணம் இத்தகைய நிலைத்தன்மையை அடையாது; அடையவும் முடியாது. அங்கே ஒருவராலும், அவருடைய பணத்தைக் கொண்டு, நாளைக்கு, அல்லது அதற்கு மறுநாளைக்கு என்ன வாங்க முடியும் என்று இன்று கூற முடியாது. முதலாளித்துவ சமுதாயத்தில் பணத்தின் வாங்கும் சக்தி நிலையற்றதாக இருக்கிறது. பணவீக்கம் என்பது வழக்கமான நிகழ்ச்சியாகும்.

சோஷலிசத்தின் கீழ் இது வேறாக உள்ளது. பணத்தின் வாங்கும் சக்தி இங்கு உறுதியான நிலைத்தன்மையைப் பெறுகிறது. தொழில் நிலையங்கள் அரசாங்க உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதால் கறாரான, திட்டமிட்ட விலைகளில் புழக்கத்தில் வரும் சரக்குகளால் அது உத்தரவாதப்படுத்தப்படுகிறது.

### பணத்தின் செயல்பாடுகள்

சோஷலிச சமுதாயத்தில் பணமானது மதிப்புகளின் அளவு, புழக்கச் சாதனம், செலுத்துகளின் சாதனம், சோஷலிசத் திரட்சியின், மக்களின் சேமிப்புகளின் சாதனம் ஆகிய செயல்பாடுகளைச் செய்கின்றன. சர்வவியாபகமான பணத்தின் செயல்பாடு சோஷலிச சமுதாயத்தில் தங்கத்தால் நிறைவேற்றப்படுகிறது. தேசிய செலாவணி உலக மார்க்கெட்டில் செயல்படுவதில்லை. அயல் நாட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்கான செலுத்தினங்கள், பரஸ்பரம் கொண்டு கொடுக்கும் அடிப்படையில் அல்லது அயல் நாட்டு செலாவணியில் செய்யப்படுகின்றன. அயல் நாட்டு உறவுகளில் வாங்கவும், செலுத்தவும் தங்கம் மிக மிக அரிதாகப் பயன்படுத்தப்படுகிறது.

பரஸ்பர பொருளாதார உதவிக்கான கவுன்சிலைச் சார்ந்த சோஷலிச நாடுகளிடையே உள்ள உறவுகளில் சர்வவியாபக மான பணத்தின் செயல்பாடு மாற்றக்கூடிய ரூபிளால் (19ம் அத்தியாயத்தைப் பார்க்க) நிறைவேற்றப்படுகிறது.

## 4. மதிப்பு விதி

### மதிப்பு விதியும் திட்டமிட்ட விலை உருவாதலும்

பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள் எப்பொழுதும் மதிப்பு விதியின் செயல்பாட்டுடன் சம்பந்தப்படுத்தப்படு கின்றன. இந்த விதியின்படி பண்டங்களின் பரிவர்த்தனை யானது அவற்றின் உற்பத்தியில் செலவு செய்யப்பட்ட சமூக ரீதியான தேவைப்படும் உழைப்பின் அளவிற்கு ஏற்ப அதாவது சமூக மதிப்பிற்கு ஏற்ப நடைபெறுகிறது.

மதிப்பு விதியானது சோஷலிச சமுதாயத்தில் திட்ட மிட்ட விலை உருவாதலின் பொறியமைவின் மூலம் செயல் படுகிறது.

மதிப்பு விதியை கணக்கில் எடுத்துக் கொண்டு விலைகள் திட்டமிடப்படுகின்றன. அவைகள், தனிப்பட்ட மதிப்பு களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதில்லை. சமூக மதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. மிக உயர்ரக தரமுடைய சரக்குகளுக்கு உயர்ந்த விலைகள் நிர்ண யிக்கப்படுகின்றன. ஏனெனில் சிறந்த தரத்திற்கு அதிக அளவிலான உழைப்புத் தேவைப்படுகிறது.

விலைகளைத் திட்டமிடுவதில் அளிப்பு, தேவை ஆகியவை கூட கணக்கில் எடுக்கப்படுகின்றன. சோஷலிச சமுதாயத்தில் அளிப்பு, தேவை ஆகியவை அவற்றை சமநிலைப்படுத்துவதற் காகக் கணக்கிடப்படுகின்றன.

ஆனால் சோஷலிசத்தின் கீழ் அவை தனி வகையான சரக்குகளுக்கு ஒத்திசைய தவறலாம். உற்பத்தியில் நிலையான அதிகரிப்பு, மேம்பாடு, மக்களின் வாழ்க்கைத் தரத்தின் சீரான வளர்ச்சி ஆகியவற்றுடன் மாறுமல் சமூக தேவைகளில் ஓர் உயர்வு, கட்டமைப்பு மாற்றங்கள் ஆகியவை சேருகின்றன. இது தற்பொழுது உற்பத்தி செய்யப்படும் சரக்குகளுக்கான

தேவையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அடிக்கடி இது புதியதும், மிக உயர்ந்ததுமான தரமுள்ள சரக்குகளுக்கான பெரும் தேவையை உருவாக்குகிறது. புதிய திட்டம் தீட்டப் படும் பொழுது சமுதாயத்தின் தேவைகளில் உள்ள மாற்றங் கள் கணக்கில் எடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் உற் பத்தியின் வீச்சை, சில குறிப்பிட்டச் சரக்குகளுக்கான தேவையுடன் மிகச் சரியாக அனுசரித்துப் போகச் செய்வது எப்பொழுதும் சாத்தியமல்ல. எடுத்துக் காட்டாக, உயர்ந்த அளவு தேவையுள்ள சரக்குகளை விரைவாக உற்பத்தி செய்ய போதுமான அளவு உற்பத்தி வாய்ப்புகள் அல்லது கச்சாப் பொருள்கள் இல்லாத போது இது அப்படி இருக்கிறது. இதற்கு நேர்மாறானது சில சமயம் அளிப்பு, தேவையை மிஞ்சும். அடிக்கடி காலம் கடந்த அல்லது வழக்கொழிந்த சரக்குகளுக்கான தேவை குறைகிறது. அத்தேவை மற்றப் பொருள்களுக்கு மாறி மேற்கூறப்பட்ட சரக்குகளின் உற்பத்தி யுடன் ஒத்துப் போகவில்லை.

விலைகளைத் திட்டமிடும் பொழுது அளிப்பு, தேவை ஆகியவற்றின் விகிதம் கணக்கில் எடுக்கப்படுகிறது. தேவை, அளிப்பை விட அதிகமாகும் பொழுது, உற்பத்தியை விரை வாக விரிவுபடுத்தி அவற்றை சமநிலையடையச் செய்வது சாத்தியமில்லாது இருக்கும் பொழுது, தேவையை எல்லைக் குட்படுத்துவதற்காக விலைகள் உயர்த்தப்படலாம். அதே நேரத்தில் இத்தகைய சரக்குகளுக்கு ஒப்பியல்பாக உயர்ந்த விலைகள் நிர்ணயிக்கப்படுவதுடன் அவற்றின் உற்பத்தியை விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மாறாக சில பொருள்களின் அளிப்பு தேவையை விட மிக அதிக மாகி விட்டால் அவற்றின் உற்பத்தி நிறுத்தப்படுகிறது, விலைகள் குறைக்கப்படுகின்றன. இல்லாவிடில் சரக்குகளில் ஒரு தேக்கம் ஏற்படலாம்.

திட்டமிட்ட விலை உருவாதலின் நிகழ்ச்சிப் போக்கில் விலையானது, அளிப்பிற்கும் தேவைக்கும் இடையில் வேறு பாடு இல்லை எனில், மதிப்பிலிருந்து விலகிச் செல்ல சாத்திய முள்ளது. சில பொருள்களின் உற்பத்தியை எல்லைக்குட் படுத்த அல்லது தூண்டிவிடுவதற்காக, மொத்த விலைகளி

விருந்து ஒரு விலகல், ஒரு சக்தி வாய்ந்த பொருளாதார முறையாகப் பயன்படுத்தப்படுகிறது.

நுகர்வுப் பொருள்களின் மதிப்பிலிருந்து சில்லறை விலைகளின் விலகல் மக்களின் சேம நல வட்டாரத்தில் சோஷலிசத்திற்குரிய சமூகக் கொள்கையைக் கடைப்பிடிக்க பயன்படுத்தப்படுகிறது.

முதன்மையான நுகர்வுப் பொருள்களுக்கு ஓர் அதிகமான தேவையை உருவாக்க விலைகள் ஒப்பியல்பாக குறைந்த நிலையில் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆரோக்கியத்தைப் பராமரிக்க (மருந்துகள் இத்தியாதி) அல்லது எடுத்துக்காட்டாக கலாச்சாரத்தை மேம்படுத்த (பாடப் புத்தகங்கள் இத்தியாதி), குழந்தைகளின் உடை, பொம்மைகள் மற்றும் இது போன்ற குழந்தைகளின் பொருள்களுக்கான விலைகள் ஒப்பியல்பாக அதைவிட இன்னும் மிகக் குறைவாக உள்ளன. வீட்டு வாடகை, மின்சாரம், எரிவாயு போன்றவற்றிற்கான வாடகை, போக்குவரத்து கட்டணம் குறைவாக உள்ளன. இவ்வாறாக, மேலே காட்டப்பட்டுள்ள குறைக்கப்பட்ட விலைகளிலிருந்து ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வது அவசியமாகிறது. எனவே வேறு வகையான பொருள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் விலைகள் ஒப்பியல்பாக உயர்த்தப்படுகின்றன. அவைகளாவன: நகைகள், அதிக செலவாகக் கூடிய ரோம உடைகள், விலையுயர்ந்த கண்ணாடிப் பாண்டங்கள். இவை அத்தியாவசியமான பொருள்கள் என்று கருதப்படுவதில்லை. அல்லது குறைவான அளவில் நுகரப்பட வேண்டிய வோத்கா, சிகரெட்டுகள் போன்ற பொருள்களாகும். அவசியமானப் பொருள்கள் என்று இவற்றை வர்ணிக்க முடியாது. விலைகள் மதிப்பிலிருந்து விலகுவது இப்படியாகப் பரஸ்பரமாக சமநிலைப்படுத்தப்படுகிறது.

## உற்பத்தியில் மதிப்பு விதியின் செயல்பாடும் பயன்பாடும்

உற்பத்தியில் மதிப்பு விதியின் செயல்பாட்டில், எல்லாவற்றிற்கும் மேலாக, சரக்குகளின் மதிப்பு இங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதும் தனிப்பட்ட மதிப்புகள்

சமூக மதிப்புக்குக் குறைக்கப்படுகின்றன என்பதும் அடங்கியுள்ளன.

விலையும் அதனுடைய அம்சங்களான அடக்க விலை, நிகர வருவாயும் (தொழில் நிலையங்களின் இலாபம்) என்ற மதிப்பின் பண வடிவங்களின் வழிகளில் இது செய்யப்படுகிறது. சரக்குகளின் தனிப்பட்ட மதிப்புகள், வெவ்வேறு தொழில் நிலையங்களின் அடக்க விலை வடிவங்களில் ஓரளவு வெளிப்படுத்தப்படுகின்றன. உற்பத்தியில் மொத்த விலைகளும் உள்ளன. அவை சமூக மதிப்பின் ஒரு வெளிப்பாட்டின் வடிவமாகும். ஒரு உற்பத்திப் பொருளின் சராசரி அடக்க விலை, மொத்த விலை ஆகியவற்றின் ஒரு ஒப்பீடானது அந்த உற்பத்திப் பொருளை விற்பதிலிருந்து கிடைக்கக் கூடிய நிகர வருமானத்தைத் தருகிறது. இப்படியாக தனிப்பட்ட மதிப்பு சமூக மதிப்புடன் ஒப்பிடப்பட்டு சமூக மதிப்பிற்குக் குறைக்கப்படுகிறது.

மதிப்பின் பண வடிவங்கள் அதாவது விலை, அடக்க விலை, இலாபம் ஆகியவை சோஷலிச உற்பத்தியின் மீது பெரும் தாக்கத்தைக் கொண்டுள்ளன. ஆனால் அவை முதலாளித்துவத்தின் கீழ் செய்வது போல் அதை ஒழுங்குபடுத்தா. சோஷலிசத்தின் கீழ் மதிப்பு விதியானது சமூக உற்பத்தியை ஒழுங்குப்படுத்தக் கூடியதல்ல.

சோஷலிசத்தின் கீழ் சமூக உற்பத்தியானது திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சியின் விதியின் அடிப்படையில் ஒழுங்குப் படுத்தப்பட்டிருக்கிறது. அது பிரதான பொருளாதார விதியுடன் நெருங்கிய தொடர்புடையதாக உற்பத்தியை ஒழுங்குப்படுத்தும் சாதனமாக செயல் புரிகிறது.

பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள், மதிப்பு விதியையும் தன்னியல்பான பொறியமைவையும் உற்பத்தியின் ஒரே ஒழுங்கமைக்கும் சாதனம் என்று கருதுகின்றனர்.

வலதுசாரி திருத்தல்வாதிகளால் அவர்கள் எதிரொலிக்கப் படுகின்றனர். அந்தத் திருத்தல்வாதிகள் ''உண்மையான'' சோஷலிசம் என்பது ''மார்க்கெட் சோஷலிசம்'' என்று வாதிடுகின்றனர். அதன் கீழ் மதிப்பு விதி சமூக உற்பத்தியை ஒரு தன்னியல்பான ஒழுங்குபடுத்தும் சாதனமாகச் செயல் படுகிறது. அவர்களுடைய கருத்தின்படி அது மார்க்கெட்

பொறியமைவின் மூலமாகவும், தன்னியல்பாகத் தோன்றிய மார்க்கெட் சூழ்நிலை மூலமாகவும் செயல்பட வேண்டும். தேசியப் பொருளாதாரத்தின் மையப்படுத்தப்பட்ட, திட்டமிட்ட நிர்வாகத்தின் தேவையை அவர்கள் மறுக்கின்றனர். அளிப்பு, தேவை ஆகியவற்றின் தாக்கத்தால் தன்னியல்பாக அவை வடிவமெடுத்தால் மட்டுமே, விலைகள் உண்மையில் பயனுள்ளவையாக மாறும் என்று கூறுகின்றனர்.

எதார்த்தத்தில் ''மார்க்கெட் சோஷலிசம்'' என்பது முதலாளித்துவத்தின் புறவய குணும்சங்களை சோஷலிச சமுதாயத்திற்குக் கொண்டுவரும் ஒரு மாற்றம் என்பதைத் தவிரவேறு ஒன்றையும் குறிக்காது.

## புழக்கத்தில் மதிப்பு விதியின் செயல்பாடும் பயன்பாடும்

புழக்க வட்டாரத்திலும் கூட மதிப்பு விதி செயல்படுகிறது. சோஷலிச தொழில் நிலையங்களின் பொருளாயத-தொழில்நுணுக்க அளிப்பு, மொத்த மற்றும் சில்லறை (அரசு, கூட்டுறவு) வர்த்தகம், கூட்டுப் பண்ணைச் சந்தைகளின் வர்த்தகம் ஆகியவற்றில் அது செயல்படுகிறது. இங்கே மதிப்பு விதி, விற்பது, வாங்குவது ஆகிய செயல்களில், சரக்குகளின் விலைகளைப் பெறும் பொழுது செயல்படுகிறது. திட்டமிட்ட விலைகள் மிகச் சரியாகவும், பொருளாதார ரீதியாக நியாயப்படுத்தக் கூடியதாகவும் இருந்தால் இந்த நிகழ்ச்சிப் போக்கு மிகவும் தங்கு தடையில்லாததாக இருக்கும்.

பொருளாதார ரீதியாக நியாயப்படுத்தப்பட்ட விலைகளுக்குச் சரக்குகளை விற்பதானது உற்பத்தியின் மீது பெருஞ் செல்வாக்கை ஏற்படுத்துகிறது. அது இலாபத்திற்கும் ஏற்பாடு செய்கிறது. அதிலிருந்து உற்பத்திச் செலவுகளை மாற்றுஈடு செய்ய முடியும்; நிதிகள் திரள முடியும். விலைகளின் நிலை, சராசரி அடக்க விலை ஆகியவற்றைச் சார்ந்து உற்பத்தியானது இலாபமுடையதாகவோ இலாபம் இல்லாததாகவோ இருக்கலாம். இது தொழில் நிலையங்களின் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதித்து அவற்றின் தொழி

லாளர்களை ஒரு வகையான பொருளை அல்லது வேறு வகையான பொருளை உற்பத்தி செய்வதில் அக்கறைக் கொள்ள செய்யத் தவறாது. எனவே அது தேசியப் பொருளாதாரத் திட்டத்தால் திட்டமிடப்பட்ட சமூக உற்பத்தியின் விகிதாச் சாரங்களைக் கண்டிப்பாகப் பாதிக்கும்.

சரியாக நிர்ணயிக்கப்பட்ட விலைகள் விற்பனைகளை மேம்படுத்தும். அதனுல் நிதி வளங்களின் புரள்வு பொருளாதாரம் முழுவதிலும் முடுக்கப்படுகிறது. அதன் விளைவாக சமூக உற்பத்தியின் வளர்ச்சி வேகம் உயருகிறது.

*அத்தியாயம் 17*

# சோஷலிச தொழில் நிலையங்களின் பொருளாதார சுயாட்சி

## 1. இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையின் சாரமும் முக்கிய கோட்பாடுகளும்

*சோஷலிச உற்பத்தியின் முக்கிய அம்சங்கள் தொழில் நிலையங்களும் சங்கங்களுமாகும். அவை, சமூக உற்பத்தியின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றிற்கும், மக்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பொருள்களை உற்பத்தி செய்கின்றன.*

*சமூக தேவைகள் தேசியப் பொருளாதாரத் திட்டங்களில் பிரதிப்பலிக்கப்படுகின்றன. சோஷலிச அரசால் அமைக்கப்பட்ட திட்டப் பணிகளை நிறைவேற்ற சோஷலிச தொழில் நிலையங்கள் கடமைப்பட்டுள்ளன.*

*இருப்பினும் திட்டப் பணிகளைத் திறமையாக நிறைவேற்ற அதாவது சமூக தேவைகளைப் பூர்த்திச் செய்ய உயர் தரமான உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யவும் அதை குறைந்த பட்ச உற்பத்திச் சாதனங்கள், உழைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்திச் செய்யவும், தொழிலாளர்கள் பொருளாதார ரீதியாக நன்முக வேலை செய்வதில் அக்கறைக் கொள்ள வேண்டும். சோஷலிச தொழில் நிலையங்கள், சங்கங்கள்* ஆகியவற்றில் இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையைப் பயன்படுத்தி இது நிறைவேற்றப்படுகிறது.*

---

** தொழில் நிலையங்களில் இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையைப் பற்றி பின்னுல் சொல்லப்பட்டவை யாவும் சங்கங்களுக்கும் பொருந்தும்.*

சோஷலிச அரசால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட முழு சமுதாயத்திற்கும், சோஷலிச தொழில் நிலையங்களுக்கும் இடையிலுள்ள உற்பத்தி உறவுகளை இது வெளிப்படுத்துகிறது. மேலும் அது சோஷலிச தொழில் நிலையங்களுக்கு இடையேயுள்ள உற்பத்தி உறவுகளையும் வெளிப்படுத்துகிறது. இத்தகைய உறவுகளில், தொழிலாளர்களின் பொருளாதார, பொருளாயத அக்கறைகளையும், சமுதாயத்திற்கு தேவையான பொருள்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்வதில் உள்ள சமுதாயத்தின் உயர்ந்த அக்கறையையும் இணைக்கும் ஓர் இணைப்பு சாதிக்கப்படுகிறது. இதனால் சமுதாய நலன்களும் தொழிலாளர் கூட்டுக் குழுக்களின் நலன்களும் ஒன்றுபட முடிகிறது. தொழில் நிலையங்கள் பொருளாதார ரீதியாக சுயாட்சியுடையவை. அதனால் சமூக உற்பத்தியானது, ஒரு திட்டமிட்ட வழியில், பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள், நல்ல வேலைக்கு பொருளாதார ஊக்கங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்படுகிறது.

சோஷலிசத்தைக் கட்ட, பொருளாதார சுயாட்சியின் முக்கியத்துவத்திற்கும், பொருளாயத ஊக்கங்களுடன் அதனுடைய தொடர்பிற்கும் மீண்டும் மீண்டும் கவனத்தை லெனின் திருப்பினார். சோஷலிசத்தை "மகத்தான புரட்சியால் உண்டாக்கப்பட்ட உணர்ச்சி ஆர்வத்தை நேரடியாகச் சார்ந்து மட்டுமல்லாமல், சொந்த ஆர்வம், சொந்த முன் முயற்சி, வேலைக் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலும்..."* சோஷலிசத்தைக் கட்ட வேண்டும் என்று அவர் எழுதினார்.

தற்சார்பு சோஷலிச தொழில் நிலையங்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகள் இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறை கோட்பாடுகள் என அழைக்கப்படும்.

### தொழில் நிலையங்களின் நிர்வாக-செயல்பாட்டு சுயாட்சி

சோஷலிச தொழில் நிலையங்களின் நிர்வாக-செயல்பாட்டு சுயாட்சி என்பது அவற்றின் பொருளாதார சுயாட்சி

* V. I. Lenin, *Collected Works*, Vol. 33, p. 58.

யின் பிரதான கோட்பாடாகும். இந்த நிர்வாக-செயல்பாட்டு சுயாட்சி எல்லையற்றதல்ல, தேசியப் பொருளாதாரத் திட்டத்தின் எல்லைக்குள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

சோஷலிச சமுதாயத்தின் தேவைகளுடன் அவற்றின் நடவடிக்கைகளுடன் கண்டிப்பாக ஒத்துப் போக ஏற்பாடு செய்ய, தொழில் நிலையங்கள் அரசால் ஒதுக்கீடு செய்யப் பட்டத் திட்டப் பணிகளை நிறைவேற்ற வேண்டும். அது தான் சட்டம். அப்படியாயினும் எவ்வளவு பூரணத்துவ முடையதாக ஒரு திட்டம் இருப்பினும் தொழில் நிலையங்கள் செயல்படக் கூடிய குறிப்பிட்ட நிலைமைகளின் முழு விவரத்தைக் கணக்கில் எடுத்து கொண்டதாகவும் அல்லது உற்பத்தியின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றிற்காக இன்னமும் பயன்படாத மறைந்திருக்கும் எல்லா வளங்களின் முழு விவரத்தையும் கணக்கில் எடுத்து கொண்டதாகவும் எந்த ஒரு திட்டமும் இருக்க முடியாது.

எனவே விரைவாக வளர்ந்து கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கும் சமுதாயத் தேவைகளைக் கருத்தில் கொண்டு அரசு திட்டத்தைச் சாத்தியமான அளவு சிறந்த முறையில் நிறைவேற்ற ஒரு தொழில் நிலையத்தில் தொழிலாளர்களை ஒழுங்குதிரட்டவும் அவ்வாறு செய்வதற்கு அவர்களை ஆர்வங் கொள்ளச் செய்யவும் அத்தொழில் நிலையத்துக்கு ஒரு பொருளாதார சுயாட்சியும் அதை சாத்தியமாக்க நிதிகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசு இத்தகைய நிதிகளுக்கு சொந்தக்காரராக உள்ளது. தொழில் நிலையங்கள் அவற்றின் சுதந்திரமான நடவடிக்கைகளை நிறைவேற்ற மட்டும் அவற்றை உபயோகிக்க முடியும். அவைகளுக்கு ஒரு சட்ட ரீதியான நபரின் அந்தஸ்து கொடுக்கப்படுகிறது; அதாவது அவைகள் பிற தொழில் நிலையங்களோடு நடவடிக்கை ஒப்பந்த உறவுகளில் ஈடுபட முடியும்; தொழிலாளர்களை நியமிக்க முடியும்; பொருள் சேகரம், உற்பத்தி விற்பனை ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்ய முடியும். அரசு வங்கியில் இந்தத் தொழில் நிலையங்கள் ஒரு கணக்கு வைத்துக் கொண்டு வங்கிக் கடனை அனுபவிக்கின்றன; அவற்றின் செயல்களின் நிலையைப் பிரதிபலிக்கும் அவற்றின் சொந்த நிதிக் கணக்குகளையும் இன்னோரன்னவற்றையும் வைத்திருக்கின்றன.

கூட்டுறவு நிலையங்கள் எல்லாம் அவற்றின் குண இயல்பால் சுயாட்சியானவை. அவை அவற்றின் சொந்த கூட்டுறவு நிதிகளைப் பயன்படுத்தி செயல்படுகின்றன.

## உற்பத்தி நடவடிக்கைகளின் தற்சார்பு தன்மை

இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையின் அடுத்த முக்கியக் கோட்பாடு, தொழில் நிலையங்கள் தங்களுடைய செலவுகளை தாங்களே மேற்கொள்ள முடியும் என்பதாகும். உற்பத்திக்கு ஆகும் செலவுகளை, அவை, அவற்றின் உற்பத்திப் பொருள்களை விற்று கிடைக்கும் நிதியைக் கொண்டு ஈடுகட்டிவிடும். இப்படியாக அவற்றின் நடவடிக்கைகள் பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள், அதாவது உற்பத்திப் பொருள்களின் விற்பனை, தேவையான உற்பத்திச் சாதனங்களை வாங்குவது, விலை, அடக்க விலை இலாபம் போன்ற மதிப்பு வடிவங்களின் உபயோகம் ஆகியவற்றை நேரடியாகச் சார்ந்திருக்கும்படி செய்யப்பட்டுள்ளன. அவை நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களுக்கும் உழைப்பிற்கான ஊதியத்துக்குமான மொத்தச் செலவுகளைக் கணக்கில் எடுப்பதைச் சாத்தியமாக்குகின்றன; விளைவுகளை செலவுகளுடன் ஒப்பிடவும் உற்பத்தியை நிர்வகிப்பதையும் சாத்தியமாக்குகின்றன.

தற்சார்பு தொழில் நிலையங்கள் இலாபகரமாக இருக்க வேண்டுவது மிக முக்கியம். ஒரு தொழில் நிலையம் உற்பத்திப் பொருள்களை விற்பதிலிருந்து கிடைக்கும் சாதனங்கள், அதனுடைய செலவுகளை ஈடுகட்டவும் இலாபத்தை ஏற்படுத்தவும் செய்ய வேண்டும். தொழில் நிலையங்களின் தேவைகளைத் திருப்தி செய்யவும், அவற்றின் தொழிலாளர்களின் தேவைகளைத் திருப்தி செய்யவும் நிதிகள், இலாபத்திலிருந்து உருவாக்கப்படுகின்றன. இலாபத்தின் ஒரு பகுதி அரசின் வரவு-செலவிற்குக் கொடுக்கப்படுகிறது. அது அரசின் மையப்படுத்தப்பட்ட நிகர வருவாயை உருவாக்குகிறது.

## தற்சார்பு தொழில் நிலையங்களின் பொருளாயத பொறுப்பு

அடுத்த கோட்பாடானது நன்கு செயல்படுவதற்காக ஒரு பொருளாயத ஊக்கத்தைக் கொண்ட தற்சார்பு தொழில் நிலையங்கள் கூட அவற்றின் வேலையின் விளைவுகளுக்குப் பொருளாயத ரீதியாகப் பொறுப்பாகும்.

சோஷலிச தொழில் நிலையங்களிடையே பரிவர்த்தனைப் பண்ட-பண உறவுகள், அவற்றால் செய்யப்பட்ட நடவடிக்கை ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டவை. இப்படிப்பட்ட ஒப்பந்தங்களில் உற்பத்திப் பொருள்களின் வீச்சு, அளவு, தரம், உற்பத்திப் பொருள்களை ஒப்படைக்கும் நிபந்தனைகள், விலைகள், செலுத்தினங்களின் நேரம், நிபந்தனைகள் இன்னோரன்னவை அடங்கியுள்ளன.

தொழில் நிலையங்களின் தங்கு தடையற்ற செயல், அரசு பொருளாதாரத் திட்டங்களைச் சரியான நேரத்தில் பூர்த்தி செய்தல் ஆகியவற்றை உத்திரவாதப்படுத்துவதில் இந்த ஒப்பந்தங்களை நிறைவேற்றுவது ஒரு தீர்மானமான பங்கை ஆற்றுகிறது. இந்த ஒப்பந்தங்கள் நிலையாக மேம்பாடடையவும் தொழில் நிலையங்களுக்கிடையே உறவுகளில் அவற்றின் பங்கு அதிகரிக்கவும் இத்தகைய ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு உயர்த்தப்படவும் இது அவசர அவசிய தேவையாக ஆகிறது. இந்தத் தொடர்பில், ஒரு தொழில் நிலையம் அதனுடைய ஒப்பந்தங்களை நிறைவேற்றும் அளவை, தேசியப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றும் ஒரு முக்கிய அறிகுறியாக சமுதாயம் கருதுகிறது.

தரம் குறைந்த உற்பத்திப் பொருள்களைக் கொடுப்பது, காலம் தாழ்த்திக் கொடுப்பது, குறித்த காலத்தில் கொடுக்காமல் இருப்பது இன்னோரன்ன முறைகளில் தொழில் நிலையங்கள் ஒப்பந்தங்களை மீறினால் அவை வாங்கும் தொழில் நிலையத்துக்கு அபராதம் கட்ட வேண்டும். இலாபங்களிலிருந்து இந்த அபராதம் கட்டப்படுகிறது. மீதி இருப்பது குறைவாக இருக்குமானால், தொழில் நிலையத்தின் நிதி நிலைமை மிக மோசமாகிவிடும்.

மேலும், ஒப்பந்தம் ஏற்றுக் கொண்டபடி உற்பத்திப்

பொருள்களை வழங்குவதும் ஒப்புக் கொண்ட கடமைகளைச் செய்வதும் நிறைவேற்றப்படாத பொழுது தொழில் நிலையங்களின் தலைவர்கள் அவர்களுடைய போனஸை இழக்கிறார்கள்.

## தொழில் நிலையங்களின் நடவடிக்கைகளின் மீது கண்காணிப்பு

அரசு குழுக்களுக்கு உட்பட்ட (எடுத்துக்காட்டு: அமைச்சரகம், மக்கள் கட்டுப்பாட்டுக் குழு) ஒரு சோஷலிச தொழில் நிலையம் ஒன்றின் செயலானது அவற்றால் சரிபார்க்கப்படுகிறது.

அரசு வங்கியால் தொழில் நிலையங்களின் செயல் மீது விசேஷக் கண்காணிப்பு செலுத்தப்படுகிறது. எல்லா சோஷலிச தொழில் நிலையங்களும் அவைகளின் செலவிற்குப் போக மீதமாகும் பணத்தை வங்கியில் போட்டு வைக்கின்றன. அந்த வங்கிகளில் அவை தனி கணக்குகளை வைக்கின்றன. மற்ற தொழில் நிலையங்களுக்கு செலுத்தினங்களையும் அரசு வரவு-செலவு திட்டத்திற்குப் பணத்தையும் வங்கி மூலம் அனுப்புகின்றன. தேவைப்படும் பொழுது அவை வங்கியிலிருந்து கடனும் பெற்றுக் கொள்ளுகின்றன. ஆதலால் அரசு வங்கியிடம், ஒவ்வொரு தொழில் நிலையத்தின் நிதி நிலைமையைப் பற்றிய மிகத் தெளிவான விவரங்கள் உள்ளன.

## தொழில் நிலையத்துக்குள்ளே இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறை

இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையும், உண்மையான சுட்டிக்காட்டுதலுக்கும், திட்டமிட்ட சுட்டிக்காட்டுதலுக்கும் உள்ள ஓர் ஒப்பீடும் தொழில் நிலையங்களில் உள்ள வாரியங்கள், பிரிவுகள், குழுக்கள் ஆகியவற்றின் செயல்களைச் சரிபார்க்க பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொழில் நிலையங்களுக்குள் (தொழில்சாலைக்குள், கூட்டுறவுக்குள்) நிதி சுயாட்சியை ஒழுங்கமைக்க இது அடிப்படையாக இருக்கிறது. தொழில் நிலையங்களின் உப-பிரிவுகள்

முழு தொழில் நிலையங்களை விட குறைவான சுயாட்சி யுடையவை. அவை சட்டபூர்வமானவை அல்ல. அவை இத் தகையப் பிற தொழில் நிலையங்களுடன் அல்லது பிரிவுகளுடன் அவற்றின் உற்பத்திப் பொருள்களை விற்கவோ அல்லது உற் பத்திச் சாதனங்களை வாங்கவோ ஒப்பந்தங்களில் கையெழுத் திட முடியாது. இருப்பினும் அவை அவற்றின் தளவாடங் களையும் அவற்றிற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட பிற உற் பத்திச் சாதனங்களையும் கொண்டுள்ளன. ஒரு குறிப் பிட்ட பொருளின் உற்பத்தி, அதன் செலவுகள் இன் னோரன்னவற்றை உள்ளிட்ட ஒரு திட்டப் பணிகள் அவை களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அவற்றின் தொழிலாளர்கள் நல்ல விளைவுகளை உண்டாக்குவதற்கு ஆர்வங் கொள்ளச் செய்ய அவர்களின் பொருளாயத ஊக்கங்கள் நேரடி யாகத் திட்டம் நிறைவேற்றப்படுவதைச் சார்ந்து இருக்கும் படி செய்யப்படுகின்றன. இதற்கு, மேலே கூறிய கணக்கு வைப்புமுறையும் கட்டுப்பாடும் தேவையாக உள்ளன.

தொழில் நிலையங்களில் நிதி சுயாட்சியானது சரியாக வும் முழுமையாகவும் பயன்படுத்தப்பட்டால், அது சோஷ லிச சமூக உற்பத்தியின் வளர்ச்சிக்கான ஒரு பயனுள்ள சாதனமாக இருக்கும். இதனுல் தான் அதனுடைய கோட் பாடுகள் ஒவ்வொரு சாத்தியமான வழியிலும் பூர்ஷ்வா தத்துவவாதிகளால் திரித்துக் கூறப்படுகின்றன; அல்லது மொத்தமாக மறுக்கப்படுகின்றன. சோஷலிச இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையைப் பொறுத்தமட்டில் அவர் களிடையே கருத்து ஒற்றுமை இல்லை. ஆனுல் அவர்களுடைய மாறுபட்ட கருத்துக்களிலிருந்து இரு அடிப்படைக் கருத்துக் களைப் பிரித்தெடுக்க முடியும். ஒரு குழு, இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையை ஒரு திட்டமிட்டப் பொருளா தாரத்தில் ஒரு குறியீடாகக் கருதுகிறது. அது தொழிலக நிர் வாகிகளுக்காக எழுதப்பட்ட தொடர் விதிகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், ஒரு நிர்வாகியின் நடவடிக் கையைத் தீர்மானிக்கும் விதி என்றும் கருதுகிறது. சொல்லப் போனுல் தொழில் நிலையங்களின் நிர்வாக-செயல்பாட்டுச் சுயாட்சியும் ஒப்பந்த முறைகளும் எல்லாம் முழுக்க முழுக்க சம்பிரதாயமானவை.

மற்ற பூர்ஷ்வா பொருளாதாரவாதிகளின் குழு, சோஷலிசத்தின் கீழ் இலாப-நஷ்டக் கணக்கு வைப்பு முறையை அதனுடைய வரலாற்று நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் சோஷலிச அமைப்புக்கும் முதலாளித்துவ அமைப்புக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை மூடி மறைக்கிறது.

இலாப-நஷ்டக் கணக்கு வைப்பு முறையின் சாரம், அதனுடைய கோட்பாடுகள் ஆகியவற்றின் பரிசீலனையால் இவை இரண்டும் மிகத் தவருனவை என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

## 2. இலாப-நஷ்ட கணக்கு வைப்பு முறையின் ஊக்குவிக்கும் பங்கு

### சோஷலிச தொழில் நிலையங்களின் சாதனங்களை விவேகமான முறையில் பயன்படுத்துவதை மேம்படுத்த நடவடிக்கைகள்

சோஷலிச சமுதாயமானது, தொழில் நிலையங்களின் சாதனங்கள் சிறந்த பயனைத் தரக்கூடிய அளவு பயன்படுத்தப் படுவதில் ஆர்வமுடையதாக உள்ளது. தொழிலகத்தை, அதனுடைய கொள்ளளவிற்கு வேலையளித்து சாத்தியமான அளவு சுறுசுறுப்பாக வைத்திருப்பதில், கச்சாப் பொருள்கள், மற்ற பொருள்கள், எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றை மீதப்படுத்துவதில், நடப்புச் சாதனங்களில் ஒரு குறைந்த செலவிற்காக உற்பத்திப் பொருள்களை விற்று உற்பத்திச் சாதனங்களை வாங்குவதில், இன்னேரன்னவற்றில் சோஷலிச சமுதாயம் ஆர்வமுடையதாக உள்ளது.

இந்தக் காரியத்திற்காக ஊக்க நடவடிக்கைகளின் ஓர் ஒட்டு மொத்த முறை பயன்படுத்தப்படுகிறது.

சொத்துக்களுக்குப் பணம் தருவது அவற்றில் ஒன்ருகும். சோவியத் யூனியனில் ஒவ்வொரு அரசு உடைமை தொழில் நிலையமும் இலாபத்தில் ஒரு குறிப்பிட்டத் தொகையை அரசு வரவு-செலவு திட்டத்திற்கு அதனுடைய பங்காகக் கொடுக்க வேண்டும். இந்தப் பங்கு தொழில் நிலையங்களின்

நிலையான சாதனங்களின் (கட்டிடங்கள், கருவிகள், தளவாடங்கள், இயந்திர சாதனங்கள், இத்தியாதி) அளவையும், புழங்கும் சாதனங்களையும் (கச்சாப் பொருள்கள், பிற பொருள்கள், எரிபொருள், சாமான்கள், நிதி வளங்கள் இத்தியாதி) பொறுத்துள்ளது. வழக்கமாக இந்த பங்கு அவற்றின் மதிப்பில் 6 சதவீதம் ஆகிறது.

சாதனங்களுக்காகப் பணம் தருவதன் நோக்கம் உற்பத்திச் சாதனங்களைச் சிக்கனமாகவும் திறமையாகவும் உபயோகிக்க தொழில் நிலையங்களைப் பொருளாதார ரீதியாக ஆர்வம் கொள்ளச் செய்வதாகும். சொத்துக்களுக்காகப் பணம் தருவது அவற்றின் அளவின் நேர்விகிதத்தில் உள்ளது. நிலையானதும் புழங்கக் கூடியதுமான சாதனங்களின் ஓர் அலகின் இலாபம் அதிகமாக அதிகமாக தொழில் நிலையத்தின் இஷ்டத்திற்குச் செலவு செய்ய அதிகப் பணம் மீதமாகிறது.

## இலாபத்திலிருந்து உருவான நிதிகளின் ஊக்குவிக்கும் பங்கு

இலாபத்திலிருந்து உருவான ஊக்குவிக்கும் நிதிகள் சோவியத் தொழில் நிலையங்களில் உள்ளன. அவையாவன: உற்பத்தி வளர்ச்சி நிதி, பொருளாயத ஊக்குவிக்கும் நிதி, சமூக, கலாசார நடவடிக்கைகள், வீடு கட்டும் நிதி.

**உற்பத்தி வளர்ச்சி நிதி** முதலாவதாகும். அது மூன்று மூலாதாரங்களிலிருந்து வருகிறது. அவையாவன: இலாபத்திலிருந்து ஒதுக்கீடுகள், நிலையான சொத்துக்களை முற்றிலும் மாற்றீடு செய்வதற்கான குறைந்த மதிப்பு படியிலிருந்து கொஞ்சம், உபரி சாதனங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த பணம்.

தொழில் நிலையங்களில், உற்பத்தி வளர்ச்சி நிதியானது, புதிய இயந்திரம், நவீனமயமாக்கல் இன்னோரன்னவற்றில் முதலீடு செய்ய நிதி அளிக்க அமைக்கப்பட்டிருக்கிறது.

உற்பத்தி வளர்ச்சி நிதிக்குள், இலாபத்திலிருந்து ஒதுக்கீடுகள், இலாபத்திற்கு நேர் விகிதத்தில் இருக்கின்றன. அதே நேரத்தில் அவை உற்பத்திப் பொருளின் விற்பனை வளர்ச்சியையும் இலாப வளர்ச்சியையும் வருடத் திட்டத்தை

இலாப ரீதியில் நிறைவேற்றுவதையும் நேராகப் பொறுத்துள்ளன.

இப்படியாக தொழில்நுணுக்க ரீதியாக மேம்பாடடைந்து உற்பத்தியை விரிவுபடுத்தும் சாத்தியத் தன்மைக்கும் தொழில் நிலையத்தின் செயலுக்கும் இடையில் ஒரு நேரடித் தொடர்பு நிறுவப்படுகிறது.

இரண்டாவது நிதியும் இலாபத்திலிருந்து கழிக்கப்படும் கழிவுகளால் உருவாக்கப்படுவதாகும். அது பொருளாயத ஊக்குவிக்கும் நிதியாகும். மிகச் சிறந்த தனிப்பட்டவரின் விளைவுகளுக்கு போனஸ், சிறப்புப் படிகள், சோஷலிச போட்டி இயக்கத்தில் முதல் இடம் பெறுபவர்களுக்கான பரிசுகள் ஆகியவற்றின் மூலாதாரம் இது.

இந்த நிதி, தொழில் நிலையத்திற்கு அதனுடைய தொழிலாளர்களின் சொந்த சாதனைகளையும் தொழில் நிலையத்தின் மொத்தச் சாதனைகளில் ஆர்வங்கொள்வதையும் பயனுள்ள வழியில் ஊக்குவிப்பதைச் சாத்தியமாக்குகிறது. இந்த நிதியிலிருந்து, ஓராண்டு காலத்தில் மீண்டும் மீண்டும் போனஸ், வருடாந்திர போனஸ் ஆகிய இரு வகை போனசும் கொடுக்கப்படுகின்றன.

போனசானது, தொழிலாளர்களின் தனிப்பட்ட விளைவுகளைத் தவிர ஆண்டு இறுதி விளைவுகளுக்காகக் கொடுக்கப்படுகிறது. அதோடு ஒரு தொழில் நிலையத்தில் தொழிலாளர்கள் வேலை செய்த பணி காலம், அதன் விதிகளைக் கடைப்பிடிப்பது ஆகியவற்றை போனஸ் சார்ந்திருக்கிறது.

சமூக, கலாசார நடவடிக்கைகள் மற்றும் வீடு கட்டும் நிதியானது, வீடுகள் கட்ட, ஆரோக்கிய ஸ்தலத்திற்கும் ஓய்வு இல்லங்களுக்கும் போய்வர பணம் வழங்க, தொழிலக விடுமுறை இல்லங்களைக் கட்ட பராமரிக்க, ஆரோக்கிய நிலையங்கள், மன்றங்கள், விளையாட்டு வசதிகள், கோடை முகாம்கள், மழலைப் பள்ளிகள், குழந்தை வளர்ப்புப் பண்ணைகள் போன்ற குழந்தைகளின் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கட்ட பராமரிக்க செலவழிக்கப்படுகிறது.

பொருளாயத ஊக்க நிதி, சமூக, கலாசார மற்றும் வீடு கட்டும் நிதி ஆகியவற்றை உருவாக்குவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடவடிக்கையால் உற்பத்தியில் நல்ல செயல்

நிறைவேற்றத்திற்கு குறிப்பிடத்தக்க ஓர் ஊக்கமானது ஏற்பாடு செய்யப்படுகிறது. இலாபங்களிலிருந்து கழிக்கப்பட்டு இத்தகைய நிதிகளில் சேர்க்கப்படும் கழிவுகள் தொழில் நிலையத்தின் மொத்த ஆண்டுகூலி நிதியின் ஒரு சதவீதமாக நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த எடுத்துக்காட்டில், உற்பத்தி வளர்ச்சி நிதி உருவாதலைப்போல் தொழில் நிலையம் விற்பனைகளின், இலாபங்களின் வளர்ச்சி அல்லது இலாபத் தன்மையின் வளர்ச்சி ஆகியவற்றிற்கான அதனுடைய ஆண்டு திட்டங்களை நிறைவேற்றும் அளவு கணக்கில் எடுக்கப்படுகிறது.

மேலும் ஊக்க நிதியை உருவாக்க பணம் ஒதுக்கிடப்படும் பொழுது, அந்தத் தொழில் நிலையம் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் மிகச் சிறந்த தரமுள்ள உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யவும் அதனுடைய திட்டப் பணிகளை எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளது அல்லது அதிகமாக நிறைவேற்றியுள்ளது என்பது கணக்கில் எடுக்கப் படுகிறது.

ஊக்க நிதிகளை உருவாக்க இலாபங்களிலிருந்து கழிக்கப் படும் கழிவுகள் ஒரு ஐந்தாண்டு காலத்திற்காக நிலையான வீதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அது எல்லா தொழில் துறைகளையும் ஊக்க நிதிகளைப் பொறுத்தமட்டில் சம மான நிலைபாட்டில் வைக்கிறது.

அதே நேரத்தில், இலாபங்களின் வளர்ச்சி, உற்பத்தியில் ஆகும் செலவுகள், உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சி ஆகியவற்றிற்கும் இடையில் பொருளாதார ரீதியாக வலிமை யான ஒரு சம நிலையை அது ஏற்பாடு செய்கிறது. தொழில் நிலையங்கள், எடுத்துக்காட்டாக, அதனுடைய சரியான சரக்கு களை உற்பத்தி செய்வதை விட்டு மற்றவற்றை உற்பத்தி செய்வது, அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட தரத்திலிருந்து விலகுவது, அல்லது அரசு விலைக் கொள்கையிலிருந்து விலகுவது ஆகியவற்றின் மூலம் இலாபங்களில் ஓர் உயர்வு அடைவதை அனுமதிக்க முடியாது. சோஷலிசத்தின் கீழ் பெருமளவு இலாபங்களை அடையும் முதன்மையான வழி, உற்பத்தித் திறமையை அதிகரிப்பது, சராசரி செலவுகளைக் குறைப்பது, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவது,

தரத்தை மேம்படுத்துவது ஆகியவைகளை செய்வதாகும்.

தொழில் நிலையங்கள் இறுக்கமான திட்டங்களை ஏற்றுக் கொள்ளும் முயற்சி, ஒதுக்கப்பட்டத் திட்டத்தை விட அதிகமாக நிறைவேற்றுவதற்காக உள் இருப்புகளைப் பயன் படுத்துதல் ஆகிய முயற்சிகள் முக்கியமாக ஊக்குவிக்கப்பட் டிருக்கின்றன. இந்த காரியத்திற்காக ஊக்குவிக்கும் நிதிக் காகக் கழிக்கப்படும் கழிப்புகளின் விகிதமானது அரசால் அமைக்கப்பட்ட திட்டங்களை விட அதிகமான திட்டங்களை ஏற்கவும் நிறைவேற்றவும் ஓர் ஊக்கமாக இருக்க, உயர்த்தப் படுகின்றன.

ஊக்க நிதிகள் இலாபநிதிகளிலிருந்து பின்வரும் விகிதங் களில் கழிக்கப்பட்டு ஏற்படுத்தப்படுகின்றன. இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பொருளாயத ஊக்க நிதியாக ஒதுக்கப்படுகிறது. இந்தச் சதவிகிதம் பின்வரும் உற்பத்திக் குறியீட்டெண்களை—உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சி விகிதங்கள், உற்பத்தியின் மொத்த அளவில் மிகச் சிறப் பான தரத்தைக் கொண்ட பொருள்களின் பங்கு, நுகர்வோர் களுடன் செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களுக்கு ஏற்ப ஒப்படைப்புத் திட்டங்களை நிறைவேற்றல் ஆகியவை— பொறுத்ததாகும். சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கை களுக்கும் வீடு கட்டுவதற்கும் ஒதுக்கப்படும் பணம் பொரு ளாயத ஊக்க நிதியில் 30-50 சதவிகிதமாக இருக்கும்.

## வேலைக்கான ஒழுக்க ஊக்கங்களுடன் நிதிச் சுயாட்சியை இணைத்தல்

தொழில் நிலையங்களின் நிதி சுயாட்சியானது, வேலைக் கான பொருளாயத ஊக்கங்களையும், தனிப்பட்டவர்களுக் கும், மொத்தத் தொழில் நிலையங்களுக்கும் சோஷலிச மற்றும் கம்யூனிச கடும் உழைப்பாளர்களின் கௌரவப் பட்டங்களை அளித்தல், சோஷலிசப் போட்டி இயக்கத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிப் பதாகைகள் அளித்தல், புகழ்ந்துரைத்தல், கௌரவப்பட்டியலில் பெயரிடுதல், ஒவ் வொரு துறையிலும் சிறப்பாகச் செயலாற்றியவர்களுக்குப் பட்டங்களும் பதக்கங்களும் அளித்தல் போன்ற ஒழுக்க

ஊக்கங்களையும் மிக நெருக்கமாக இணைக்கும் ஓர் இணைப்பைக் குறிக்கிறது.

தொழில் நிலையத்தின் நிதி சுயாட்சி ஒரு தொழில் நிலையத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு இடையிலும் தொழில் நிலையங்களுக்கு இடையிலும் அமைக்கப்பட்ட சோஷலிச போட்டி இயக்கத்துடன் இடைவிடாமல் இணைக்கப்பட்டிருக்கிறது. சோஷலிச போட்டி இயக்கம் என்பது, சிறந்த உற்பத்திச் சாதனைகளை அடைய தொழிலாளர்களின் படைக்கும் உழைப்பை ஒருங்குதிரட்டுவதற்கும், உழைக்கும் மக்களின் கலாச்சார, தொழில்நுணுக்க நிலையை உயர்த்தவும், உழைப்பிற்கு ஒரு கம்யூனிச நோக்கத்தை மனதில் பதியவைக்கவும் ஆன ஒரு முறையாகும்.

கூலிக்கும் வேலைக்கான பொருளாயத, ஒழுக்க ஊக்கங்களுக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பு, சோஷலிச போட்டி இயக்கத்தின் வளர்ச்சி ஆகியவை சோஷலிச உற்பத்தி உறவுகளின் சாரத்தைப் பிரதிபலிக்கின்றன.

*அத்தியாயம் 18*

# பொருளாயத பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் வினியோகம்

## 1. வேலைக்குத் தக்க வினியோகம்

சோஷலிசத்தின் கீழ் உழைக்கும் மக்கள் தங்களுக்காக, தங்களுடைய சமுதாயத்திற்காக உழைக்கிறார்கள். எனவே பொருளாயத பொருள்களும் சேவைகளும் சோஷலிச சமுதாயத்தில் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக வினியோகிக்கப்படுகின்றன.

வேலைக்கு ஏற்ப வினியோகம், சமூக நுகர்வு நிதிகள் மூலம் வினியோகம் என இரு வடிவங்களில் நுகர்வுப் பொருள்களின், சேவைகளின் வினியோகம் சோஷலிசத்தின் கீழ் உள்ளது.

### வேலைக்குத்தக்க வினியோகித்தலின் பொருளாதார விதி

கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டமான சோஷலிசத்தின் கீழ், உற்பத்தியின் நிலை இன்னமும் அபரிமிதமான பொருள்களையும் சேவைகளையும் ஏற்பாடு செய்ய முடியவில்லை. அதே நேரத்தில் சமுதாயத்தின் உறுப்பினர்களால் உழைப்பானது வாழ்வதற்கான ஒரு சாதனமாகக் கருதப்படுகிறது. ஊதியத்தை எதிர்பார்க்காத ஒரு வழக்கமாக, ஒரு முக்கியத் தேவையாக இன்னமும் அது ஆகவில்லை. செய்து முடித்த வேலையைக் கணக்கு வைப்பதையும், நுகரப்பட்ட பொருள்களின் அளவைக் கணக்கு வைப்பதையும், சமூக உற்பத்தி உறுப்பினர்கள் வேலை செய்ய ஒரு பொருளாயத ஊக்கத்தைப் பெற்றிருக்கவும் இது அவசியமாக்குகிறது. பொருளாயத பொருள்களையும் சேவைகளையும் வேலைக்குத்

தக்கவாறு வினியோகிப்பதன் மூலம் இது செய்து முடிக்கப் படுகிறது. சோஷலிசத்தின் கீழ் இந்த வினியோக முறை புறவய ரீதியான தேவை. எனவே அதனுடைய பொருளாதார விதியாக உள்ளது.

வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது செலவழிக்கப் பட்ட உழைப்பிற்குச் சமமாக ஈடுசெய்வதாகும். இதில் சமுதாயத்தின் தேவைகளை திருப்தி செய்ய ஆன ஒரு பகுதி சேர்க்கப்படுவதில்லை, ஒவ்வொரு நபரும் தான் சமுதாயத் திற்கு எவ்வளவு கொடுக்கிருரோ அதற்குத் தக்கவாறு பெறு கிருர்.

வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது மக்களின் சொந்த நுகர்விற்குச் செல்லும் தேசிய வருவாயின் பகுதியைப் பொருத்து சமுதாயத்திலுள்ள உறுப்பினர்களுக்கும் தொழிலாளர் கூட்டுக் குழுக்களுக்கும் பொதுவாக சமுதாயத்திற் கும் இடையே உள்ள உறவை வெளிப்படுத்துகிறது.

வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது சில கோட் பாடுகள் நிறைவேற்றப்படுவதைச் சார்ந்திருக்கிறது. முதலாவதாக வேலை கட்டாயமானது. ஏனெனில் சோஷலிசத்தின் கீழ் நுகர்வு சாதனங்களை தனதுரிமையாக்க வேறு எந்த மூலாதாரமும் கிடையாது. இரண்டாவது கோட்பாடு சம வேலைக்கு சம ஊதியம் என்பதாகும். சோஷலிசம் பால், வயது, இனம் அல்லது தேசிய இனம் என்ற அடிப்படையில் ஊதியம் வழங்குவதில் எவ்வித வேறு பாட்டையும் அனுமதிக்காது. இது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் முதலாளித்துவத்தின் கீழ் இத்தகைய வேறுபாடு பரந்த அளவில் செயல்படுத்தப்படுகிறது. வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது எவ்வளவு கடுமுயற்சி அல்லது கடினமான வேலை என்பதற்குத் தக்க வெவ்வேருன கூலிகள் என்பதனைக் குறிக்கிறது. எளிய உழைப்பால் அதிகப்படுத்தப் பட்ட அதிக திறமையும் சிக்கலானதுமான உழைப்பு, ஓர் அலகு நேரத்தில் அதிக மதிப்பை உருவாக்குகிறது. எனவே அந்த உழைப்பிற்கு அதிக விகிதாச்சாரத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. பூமிக்குக் கீழ், வெப்பமான தொழில் பிரிவுகளில், அல்லது கடுமையான வெப்பதட்ப நிலையில் செய்யப்படும் வேலைக்கு அதிக சக்தி தேவைப்படுகிறது.

எனவே அதற்குத் தாராளமாக ஊதியம் வழங்கப்படுகிறது. கூலிகளில் வேறுபாடு என்பது வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பதின் மூன்றாவது கோட்பாட்டை அமைக்கிறது.

வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது சமப்படுத்தும் வினியோகம் என்பதற்கு முரண்பட்டதாகும். இது சிறு பூர்ஷ்வாக்களின் சோஷலிசத்தைப் பற்றிய கொச்சையான கருத்தாகும். எதார்த்தத்தில் ஒட்டு மொத்தமாக சமப்படுத்தும் முறைக்கும் சோஷலிச வினியோக முறைக்கும் எதுவுமே பொதுவானதாக இல்லை. சோஷலிசம் நன்கு உழைப்பதற்கு ஊக்கமளிப்பதைக் குறிப்பிடுகிறது. அதே நேரத்தில் சமப்படுத்தும் முறை அதை மறுக்கிறது. வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பதன் உதவியுடன், சோஷலிசம் உழைக்கும் மக்களை அவர்களுடைய கலாச்சார, தொழில் நுணுக்க தரங்களையும், திறமைகளையும் உயர்த்துவதற்குத் தூண்டுகிறது. சமப்படுத்தும் வினியோகம் அதைச் செய்வதில்லை.

கம்யூனிசத்திலும் சமப்படுத்தும் வினியோகம் இருக்கப் போவதில்லை. தேவைக்கு ஏற்ற வினியோகம் என்பதன் அர்த்தம் சமபங்காகப் பிரித்து வினியோகிப்பது என்பதல்ல. கம்யூனிசத்தின் கீழ் மக்கள் மிக வேறுபாடான சுவைகளையும் தேவைகளையும் பெற்றிருப்பார்கள். அதன் விளைவாக பொருளாயத பொருள்கள், சேவைகள் ஒரு பங்கிற்கு ஒரு பங்கு சமம் என்ற அடிப்படையில் வினியோகிக்கப்படுவதில்லை. ஆனால் பலவித தேவைகளுக்கு ஏற்ப வினியோகிக்கப்படும்.

### வேலைக்கேற்ற வினியோகமும் சமூக-பொருளாதார சமத்துவமும்

வேலை செய்ய உரிமை, உற்பத்தி சாதனங்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் சோஷலிசம் சமுதாயத்திலுள்ள உறுப்பினர்கள் எல்லோரையும் சமமாக்குகிறது. வேலைக்கு ஏற்ற வினியோகம் என்ற கோட்பாட்டைப் பொறுத்த வகையில் சோஷலிசம் சமுதாயத்திலுள்ள எல்லா உறுப்பினர்களையும் சமமாக இருக்க ஏற்பாடு செய்கிறது. தேவை

களைப் பூர்த்தி செய்வதில் சமத்துவத்தை உறுதியளிக்க சோஷலிசத்தால் இயலாது. வெவ்வேறு திறமையும் தேர்ச்சியும் உடைய, தனியாகவோ அல்லது பெரிய குடும்பமாகவோ இருக்கும் மக்களிடையே வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது, அவர்களுடைய தேவைகளை அடிப்படையாகக் கொண்டதல்ல, ஆனால் சமூக உற்பத்தியில் அவர்களுடைய பங்கை அடிப்படையாகக் கொண்டதாகும். சோஷலிசத்தின் கீழ் வினியோகத்தின் இந்தச் சமத்துவமின்மையைக் குறைக்க ஒரே வழி, முதலாவதாக உழைக்கும் மக்களின் கலாச்சார, தொழில்நுணுக்க தரத்தை அதிகரிக்கவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்தவும் செய்வதாகும். அதனால் உழைப்பு வகைகளுக்கு இடையே உள்ள தர வேறுபாடு குறைக்கப்படும். அவ்வாறே வருமானங்களுக்கிடையே உள்ள வேறுபாடும் குறைக்கப்படும்.

இரண்டாவதாக, சோஷலிசத்தின் கீழ் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள வேறுபாட்டைக் குறைக்கும் ஒரு குறிப்பிட்ட பங்கு, சமூக நுகர்வு நிதிகளை அதிகரிப்பதைச் சேர்ந்ததாகும்.

தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள சமத்துவமின்மையை இறுதியாக நீக்குவது கம்யூனிசத்தின் கீழ் தான் அடைய முடியும். அப்பொழுது பொருளாயத பொருள்களும் சேவைகளும் தேவைகளுக்கு ஏற்ப வினியோகிக்கப்படும்.

## 2. கூலிகளும் சம்பளங்களும். கூட்டுறவுகளில் (கூட்டுப் பண்ணைகளில்) வேலைக்கு ஏற்ற வினியோகம்

வேலைக்கு ஏற்ற வினியோகம் என்ற பொருளாதார விதியானது அரசு உடைமையாக்கப்பட்ட தொழில் நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள தொழிலாளர்களுக்கு மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு ஊதியமளிக்கும் ஒரு வழி முறையாகவும் கூட்டுறவு (கூட்டுப் பண்ணை) உறுப்பினர்களுக்கு இடையே வேலைக்கு ஏற்ற வினியோகம் வழியாகவும் செயல்படுகிறது.

## கூலிகளின் சாரமும் ஒழுங்கமைப்பும்

முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் கூலிகள் அவர்களுடைய உழைப்புச் சக்தியின் விலை, மதிப்பு ஆகியவற்றின் பண வடிவமாகும். சோஷலிசத்தின் கீழ் உழைப்புச் சக்தி ஒரு பரிவர்த்தனை பண்டமல்ல. எனவே அதற்கு ஒரு மதிப்பு இல்லை. சோஷலிச சமுதாயத்தில் கூலிக்கு அடிப்படையிலேயே ஒரு வேறுபாடான உள்ளடக்கம் உள்ளது. தேசிய வருமானத்தின் ஒரு பகுதியை அது குறித்துக் காட்டுகிறது. அது பண வடிவத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. அவர்களில் ஒவ்வொருவராலும் செயல்படுத்தப்படும் வேலையின் அளவு, தரம் ஆகியவற்றிற்கு ஏற்ப சமூக உற்பத்தியில் ஈடுபட்டிருப்போரிடையே வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பதற்காக அது இருக்கிறது.

சோஷலிசத்தின் கீழ் கூலி, தனிப்பட்ட தொழிலாளர்களுக்கும் தொழில் நிலையத்தில் உள்ள தொழிலாளர் கூட்டுக் குழு, பொதுவாக சமுதாயம் ஆகியவற்றிற்கும் உள்ள உறவை வெளிப்படுத்துகிறது. முதலாளித்துவத்தின் கீழ் அது இருப்பதைப் போல் உழைப்புச் சக்தியின் மதிப்பு, உழைப்புச் சக்தியின் அளிப்பு தேவை விகிதாச்சாரத்திலுள்ள ஏற்ற இறக்கங்கள் ஆகியவற்றுடன் அது தொடர்புபடுத்தப்படுவதில்லை. சோஷலிசத்தின் கீழ் கூலியானது தேசிய வருமானம், செய்யப்பட்ட வேலையின் அளவு, தரம் ஆகியவை வளர வளர அதிகரிக்கிறது. அது சோஷலிசத்தின் கீழ் தொழிலாளர்களை தேசிய வருவாயின் வளர்ச்சியில் ஆர்வம் கொள்ளச் செய்கிறது; வேலைக்கு ஏற்ப வினியோகிக்கப்படுகிற பகுதி மட்டுமல்ல, ஆனுல் மொத்த தேசிய வருமானமும் வளர்ச்சியடையச் செய்ய ஆர்வம் கொள்ளச் செய்கிறது. சோஷலிசத்தின் கீழ், வேலைக்கு ஏற்ப வினியோகிக்கப்பட்ட தேசிய வருவாயின் பங்கிற்கும் (தனக்கான உற்பத்திப் பொருள்) சமூக தேவைகளைப் (சமுதாயத்திற்கான உற்பத்திப் பொருள்) பூர்த்தி செய்யும் பங்கிற்கும் எதிரும் புதிருமான முரண்பாடு இல்லை. இரண்டும் மக்களின் நன்மைக்கே. சமூக தேவைகளைப் பூர்த்தி செய்யும் பங்கானது, உழைக்கும் மக்களுக்கு சமூக நுகர்வு நிதிகளாகவும், புதிய தொழில்

நிலையங்களாகவும் திருப்பித் தரப்படுகிறது; மக்களுக்குச் சொந்தமான கலாசார மற்றும் வீட்டுக் காரியங்களுக்கான நிலையங்களாகவும் திருப்பித் தரப்படுகிறது. முதலாளித்துவத்தின் கீழ் இதைப் போன்ற எதையும் காண முடியாது. முதலாளித்துவத்தில் முதலாளிகள் அவர்களுடைய பைகளை தேசிய வருமான உயர்வால் நிரப்பிக் கொள்ளுவார்கள். உழைக்கும் மக்கள் பெறுகின்ற தேசிய வருவாயின் பங்கிற்கும் முதலாளிகளால் தனதுரிமையாக்கப்படும் பங்கிற்கும் எதிரும் புதிருமான முரண்பாடு ஒன்று உண்டு.

உழைப்பின் செலவு, உழைப்பு நேரத்தாலும் உற்பத்தி வெளிப்பாட்டின் அளவாலும் அளக்கப்படலாம். உழைப்பு அளக்கப்படும் முறை கூலியின் வடிவத்தைத் தீர்மானிக்கிறது. சோஷலிசத்தின் கீழ் நேரக் கூலியும், வேலை வீதக் கூலியும் உள்ளன. நேரக் கூலியானது, தானியங்கி உற்பத்தியில், இரசாயன தொழில் துறையில் அதனுடைய தொடர்ச்சியான நிகழ்ச்சிப் போக்கில், பழுது பார்க்கும் வேலைகளில் இன்னோரன்ன வேலைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்த உதாரணத்தில் வருமானம் செலவழிக்கப்பட்ட நேரம், தொழிலாளியின் திறமை ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது. 1975ல் சோவியத் யூனியனில் 43.8 சதவீத தொழில் துறை தொழிலாளர்கள் நேரக் கூலியில் இருந்தனர்.

தனிப்பட்ட உழைப்பு செலவுகளைக் கணக்கில் கொள்வது சாத்தியமாக இருக்கும் பொழுதும், இத்தகைய செலவுகள் ஓர் இயந்திர அமைப்பால் அல்லது உற்பத்தி நிகழ்ச்சி முறையால் தீர்மானிக்கப்படாமல், தொழிலாளியின் முயற்சிகளை மட்டும் சார்ந்திருக்கும் பொழுதும் வேலை வீதக்கூலி கொடுக்கப்படுகிறது. வேலை வீதக் கூலி தனிப்பட்டவர்களுக்கும் இருக்கலாம் கூட்டுக் குழுக்களுக்கும் இருக்கலாம். இரண்டாவது, தொழிலாளர்கள் ஒரு குழுவாக ஒழுங்கமைக்கப்படும் பொழுது கொடுக்கப்படுகிறது. குழுவில் ஒவ்வொரு உறுப்பினரின் வருமானமும் அவர் வேலை செய்த நேரம், அவருடைய திறமை இவற்றால் தீர்மானிக்கப்படுகிறது. குழு கூலி நீதி நெறி முக்கியத்துவமுடையது. உழைக்கும் ஆண்கள், பெண்கள் ஆகியோர் ஒருவருக்கு ஒருவர் உதவியாகவும், ஆதரவாகவும் இருக்கக் கற்றுக்

கொடுத்து, மற்றவர்களிடமும், அவர்களிடமும் பொறுப்பு உணர்ச்சியை அதிகரித்து அது குழு உணர்ச்சியை அவர்களிடம் வளர்க்கிறது.

நேரக் கூலி, வேலை வீதக் கூலி ஆகிய இரண்டுமே வழக்கமாக, உற்பத்தி வெளிப்பாட்டின் தரம், அளவு ஆகியவற்றில் சாதனைகளை அடைவதற்காகக் கொடுக்கப்படும் போனசுடன் இணைக்கப்படுகின்றன. இந்த விஷயத்தில் கூலியானது, நேர-போனஸ் கூலி, வேலை வீத-போனஸ் கூலி என முறையே அழைக்கப்படுகிறது.

வேலை செய்யும் நிலைமைகளைச் சார்ந்து கூலிகளும் பாகுபடுத்தப்படுகின்றன. ஊக்க விகிதாச்சார கூலிகள் முக்கிய பொருளாதாரக் கிளைகளில் பயன்படுத்தப்படுகின்றன. எ—டு: விஞ்ஞான-தொழில்நுணுக்க முன்னேற்றம் நேரடியாகத் தொடர்பு கொள்ளப்பட்ட தொழில் துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இது திறமை உள்ள தொழிலாளர்களை இத்தகைய தொழில் துறைகளுக்குக் கவர உதவுகிறது.

அலுவலக ஊழியர்கள் பொறியியல், தொழில்நுணுக்க சிப்பந்திகள் ஆகியோருக்கு நிறுவனத்தின் குறிப்பிட்ட சம்பளப் பட்டியலின்படி, அவர்களுடைய பதவிக்குத் தக்க சம்பளம் கொடுக்கப்படுகிறது.

சோஷலிசத்தின் கீழ், கூலிகளும், சம்பளமும் மிகக் கண்டிப்புடன் திட்டமிடப்படுகின்றன. திட்டக் காலத்திற்கான கூலி நிதியானது ஒட்டு மொத்தமாக பொருளாதாரத்திற்கும், தொழில் துறைகளுக்கும் தொழில் நிலையங்களுக்கும் அவற்றின் இணைப்புகளுக்கும் நிலையாக்கப்படுகிறது. பொருளாதார சமநிலையை உறுதிபடுத்த அது தேவையாகிறது. கூலி நிதியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, திட்டமிடுவோர் மக்களின் சொந்த பண வருமானங்கள், செலவுகள் ஆகியவற்றின் சமநிலையைத் திட்டமிட்டு, கூலிகளின் வளர்ச்சிக்கும் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சிக்கும் இடையிலான விகிதத்தை தீர்மானிக்கின்றனர். பின்னால் கூறப்பட்டது கூலிகளை விட அதிக வேகமாக வளர வேண்டும். மக்களின் நுகர்விற்காகச் செல்லும் தேசிய வருமானத்தின் ஒரு பகுதிக்கும், திரள்வதற்காக ஒதுக்கப்பட்ட பகுதிக்கும் (உற்பத்தியைப் பெருக்கல், கலாச்சார மற்றும் வீட்டுக் காரியங்

களுக்கான தொழில் துறைக் கட்டுமானம், அவசரகால இருப்பு உருவாக்கல்) சரியான விகிதம் நிறுவப்படுகிறது.

சோஷலிச சமுதாயத்தில் கூலிகளும் சம்பளங்களும் நிலையாக உயர்ந்து கொண்டே இருக்கின்றன. இது, மற்ற விஷயங்களுக்கிடையே மக்களின் வாழ்க்கைத் தரத்தின் உயர்வைச் சுட்டிக்காட்டுகிறது.

சோவியத் யூனியனில் 1975க்கும் 1980க்கும் இடையே உள்ள காலத்தில் சராசரிக் கூலிகளும் சம்பளங்களும் சுமார் 16 சதவிகிதம் அதிகரித்தன. 1981க்கும் 1985க்கும் இடையே அவை மேலும் 13-16 சதவிகிதம் அதிகரிக்கும்.

பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகளும், திருத்தல்வாதிகளும் சோஷலிசத்தை இகழ முயற்சித்து சோஷலிச நாடுகளில் பயன்படுத்தப்படும் வேலைக்கு ஏற்ற வினியோகம் என்ற முறையை விமரிசிக்க தேர்ந்தெடுத்துள்ளனர். பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகள், சோஷலிசத்தின் கீழ் வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது தன்னிச்சையானது அல்லது முதலாளித்துவத்தின் கீழ் உள்ளதைப் போல் உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கு ஏற்ற வினியோகம் என்பதை விட எந்த விதத்திலும் வேறுபட்டதல்ல எனக் கூறுகின்றனர். எதார்த்தத்தில் இது விஷயத்திலிருந்து வெகு தூரத்தில் உள்ளதாகும். வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது சோஷலிசத்தின் புறவயமான பொருளாதார விதியாகும். மேலும் அது உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கு ஏற்ப வினியோகிப்பது என்பதிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டுள்ளது.

வலதுசாரி திருத்தல்வாதிகள், வேலைக்கு ஏற்ற வினியோகம் என்ற ஒரே சீரான முறையை, தனிப்பட்ட தொழில் நிலையங்களின் வருமானங்களைச் சார்ந்த வினியோகம் என்ற முறையால் மாற்றீடு செய்ய வேண்டும் எனக் கூறுகிறார்கள். சோஷலிசத்தின் கீழ் அரசால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சமுதாயத்திற்கு, வேலையின் அளவு, நுகர்வின் அளவு ஆகியவற்றைக் கவனிக்க வேண்டியதன் தேவையை அவர்கள் மறுக்கின்றனர். ''இடதுசாரி'' திருத்தல்வாதிகளைப் பொறுத்த அளவில் அவர்கள் சமப்படுத்தும் வினியோகத்

தைப் போதிக்கின்றனர். ஆனால் ஒட்டு மொத்தமாக சமப் படுத்துவதினால் ஏற்படும் தீங்கு ஏற்கெனவே இங்கு விளக்கப் பட்டிருக்கிறது.

## விவசாயக் கூட்டுறவுகளில் (கூட்டுப் பண்ணைகளில்) வேலைக்கு ஏற்ற விநியோகம்

விவசாயக் கூட்டுறவுகளில் (கூட்டுப் பண்ணைகளில்) வேலைக்கு ஏற்ற வினியோகம் உழைப்பின் அளவு, தரம் ஆகியவற்றிற்கும் ஏற்ப செயல்படுத்தப்படுகிறது. ஆனால் அது அதற்கே உரிய குறிப்பிட்ட பண்புக் கூறுகளைப் பெற்றிருக் கிறது. முதலாவதாக இவையெல்லாம் விவசாய நிலையங் கள், இரண்டாவதாக கூட்டுறவு நிலையங்கள் உள்ளன என்ற விஷயத்திலிருந்து இந்தப் பண்புக் கூறுகள் தோன்று கின்றன. கூட்டுப் பண்ணைகளில் வேலையின் விளைவுகள், எடுத்துக்காட்டாக உழத்தக்கப் பண்ணைகளில் விவசாய ஆண்டு இறுதியில், இறுதியாகத் தெரியவரும். வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பதற்கான நிதி அதே வேளையிலே மையப்படுத்தப்பட்ட அரசு வருவாயிலிருந்து பெறப்படுவ தில்லை, ஆனால் கூட்டுறவு நிலையத்திலிருந்தது பெறப்படுகிறது.

சோவியத் யூனியனில் கூட்டுப் பண்ணை இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பது வேலை நாளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வேலை நாள் என்பது கூட்டுப் பண்ணையின் பொதுப் பொருளாதாரத்தில் கூட்டுப் பண்ணை குடியானவர்களால் செலவழிக்கப்பட்ட உழைப்பின் அளவு, தரம் ஆகியவற்றின் ஓர் அலகாகும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் வேலையின் கடினத்தன்மை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, தன்னுடைய தினசரி வேலையை நிறைவேற்றுவதற்காக குறிப்பிட்ட அளவு வேலை நாட்கள் கொடுக்கப்பட்டன. விவசாய ஆண்டு முடிவில் வினியோகத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம், விளைபொருள் ஆகியவை தனிப்பட்ட உழவர்களால் சேகரிக்கப்பட்ட வேலை நாட்களுக்கு ஏற்ப வினியோகிக்கப்பட்டன. இந்த வினியோக முறை போதுமான அளவு ஊக்கத்தைக் கொடுக் கத் தவறியது. ஏனெனில் கூட்டுப் பண்ணை விவசாயி

களின் வருமானம் ஆண்டு முடிவில் தான் இறுதியாகத் தீர் மானிக்கப்பட்டது. எனவே சரியான காலத்திற்குப்பின் உத்திரவாதமளிக்கப்பட்ட வேலை நாள் முறை புகுத்தப் பட்டது. இந்த முறையின்படி கூட்டுப் பண்ணை விவசாயி களுக்கு, ஒவ்வொரு காலாண்டும், ஒவ்வொரு மாதமும் அவர்களுடைய கணக்கில் இருக்கும் வேலை நாட்களின் அடிப் படையில் முன் பணம் கொடுக்கப்பட்டது.

1965ம் ஆண்டு முதலாக சோவியத் யூனியனின் கூட்டுப் பண்ணைகள், வேலை நாட்களை அடிப்படையாகக் கொள்ளா மல், உத்திரவாதப்படுத்தப்பட்ட மாதாந்திர ரொக்கப் பணமாகக் கொடுப்பதை மேற்கொண்டன. ஒவ்வொரு கூட்டுப் பண்ணையும், மொத்த ஊதிய நிதியில் 90 சதவீதம் வரை உத்திரவாதப்படுத்தப்பட்ட ஒரு குறைந்த பட்ச பணம் செலுத்துவதை நிறுவியுள்ளது. ஒவ்வொரு மாதமும் இந்த உத்திரவாதம் அளிக்கப்பட்ட குறைந்த பட்ச பண மானது, கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு அளிக்கப்படு கிறது. மீதமுள்ள பத்து சதவீதம் ஆண்டு முடிவில் விநி யோகிக்கப்படுகிறது. அது விளைபொருளின் அளவு, தரம் ஆகியவற்றைப் பொறுத்த வகையில் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதா என்பதைச் சார்ந்துள்ளது. திட்டத்திற்கு அதிகமாக நிறைவேற்றுவது, உற்பத்திச் செலவைக் குறைப் பது ஆகியவற்றிற்காகக் கொடுக்கப்படும் பரிசுகளும் இந்தக் கூடுதலில் அடங்கும்.

1975 முதல் 1980 முடிய உள்ள காலத்தில் சோவியத் யூனியன் கூட்டுப் பண்ணைகளில் உழைப்புக்குத் தரப்படு கின்ற ஊதியம் 26 சதவிகிதம் அதிகரித்தது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1981-1985) பொதுப் பொருளாதாரத்திலிருந்து கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்குக் கிடைக்கும் வருமானங்கள் 20-22 சதவிகிதம் அதிகரிக்கும். இது கூலி மற்றும் சம்பளங்களைப் பெறும் தொழிலாளர் களின் ஊதியங்களை மிகவும் ஒட்டியிருக்கும்.

## 3. சமூக நுகர்வு நிதிகள்

சோஷலிசத்தின் கீழ் பொருளாயத பொருள்கள், சேவைகள் ஆகியவற்றை வினியோகிக்கும் இரண்டாவது வடிவம் சமூக நுகர்வு நிதிகள் மூலமாகும்.

### சமூக நுகர்வு நிதிகளின் கலவை

சமூக நுகர்வு நிதிகள் மூலம் வினியோகிப்பது, வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பதைப் போல், மக்களின் சொந்த நுகர்விற்காகச் செல்லக் கூடிய தேசிய வருவாயின் ஒரு பகுதியை பொறுத்த வகையில், சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்கள், தொழில் நிலையங்களில் உள்ள தொழிலாளர் கூட்டுக் குழுக்கள், பொதுவான சமுதாயம் ஆகியவற்றிற்கு இடையேயுள்ள உறவினை வெளிப்படுத்துகிறது. சமூக நிதிகள் மூலம் குடிமக்களுக்கு, இலவசப் பொதுக் கல்வி, மேல் பயிற்சி, இலவச மருத்துவ உதவி, படிகள், ஓய்வு ஊதியங்கள், உபகாரச் சம்பளங்கள், ஊதியத்துடன் விடுமுறைகள், ஓய்வு இல்லங்கள், ஆரோக்கிய மனைகள் ஆகியவற்றிற்குச் செல்ல இலவசமாக அல்லது உதவித் தொகையுடன் அனுமதி அளிப்பது, குழந்தை வளர்ப்புப் பண்ணைகளிலும் மழலைப் பள்ளிகளிலும் குழந்தைகளை வளர்ப்பது போன்ற இன்னோரன்னவை வழங்கப்படுகின்றன. சமூக நுகர்வு நிதிகளின் பெரும் பகுதி (70 சதவீதம்) அரசு வரவு-செலவு திட்டத்தின் மூலம் வருகிறது. அது மையப்படுத்தப்பட்டு வினியோகிக்கப்படுகிறது. இது தவிர சமூக நுகர்வு நிதிகள், தொழில் நிலையங்கள், அவற்றின் இணைப்புகள் ஆகியவற்றால் அமைக்கப்படுகின்றன.

சமூக நுகர்வு நிதிகள் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. கீழ்க் கண்ட விவரங்களிலிருந்து அதைப் பார்க்கலாம்.

### சமூக நுகர்வு நிதிகளின் சமூக-பொருளாதார முக்கியத்துவம்

சமூக நுகர்வு நிதிகள் மூலம் வினியோகிப்பது பெரும் சமூக-பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. சோஷலிசத்தின் கீழ், பொதுக் கல்வி, மருத்துவ

சமூக நுகர்வு நிதிகளிலிருந்து கொடுக்கப்பட்டவை

| | ஆண்டுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1950 | 1960 | 1970 | 1975 | 1980 | 1985 (திட்டமிடப் பட்டவை) |
| மொத்தம் (நூறுகோடி ரூபிள்கள்) | 13.0 | 27.3 | 63.9 | 90.1 | 116.5 | 138 |
| தலா வீதம் (ரூபிள்கள்) | 72 | 127 | 263 | 354 | 448 | 500 |

பணி, மழலைப் பள்ளிகள் போன்ற குழந்தை நிறுவனங்களைப் பராமரித்தல் போன்ற சில சமூக தேவைகளைக் கூட்டாகப் பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஏனெனில் இது பொருளாயத, நிதி, மற்றும் மனித சக்திகளின் செலவுகள் என்ற கருத்திலிருந்து பார்க்க மிகப் பயனுள்ளதாயும் தேவைகளைத் திருப்தி செய்வதில் பயனுள்ளதாயும் உள்ளது. மேலும், இந்த வகையான வினியோகம் பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் கம்யூனிச வினியோகத்தின் ஒரு கருவாகும். அது தனிப்பட்டவர்களால் சமூக உற்பத்திக்கு வழங்கப்பட்ட உழைப்பின் அளவை பெரும்பாலும் சார்ந்திருக்கவில்லை. சமுதாய உறுப்பினர்களுக்கு, அவர்களுடைய தேவைகளுக்குத் தக்கவும் சமுதாயத்தின் சாத்தியங்களுக்குத் தக்கவும் பொருளாயத பொருள்கள், சேவைகள் ஆகியவை கிடைக்கும்படி செய்யப்படுகின்றன. சமூக நிதிகள் மூலம் வினியோகிப்பது உழைக்கும் மக்களின் பல்வேறு பகுதியினரின் உண்மையான வருமானங்களை ஓரளவு நெருக்கமாகக் கொண்டுவருவதை சாத்தியமாக்குகிறது. இப்படிச் செய்வதால் வேலைக்கு ஏற்ற வினியோகத்தால் அகற்ற முடியாத, தேவைகளைப் பூர்த்தி செய்வதிலுள்ள சமத்துவமின்மை குறைகிறது. இறுதியாக அது தேவைகளைத் திருப்தி செய்தல் என்பதைப்

பொறுத்த வகையில் ஒரு குழு உணர்வை சிறிது சிறிதாகப் புகட்டுகிறது. இதன் தொடர்பாக, சமூக நுகர்வு நிதிகள் மூலம் வினியோகம் என்பது வினியோகத்தில் முதன்மை வடிவமாக அல்லாமல், வேலைக்கு ஏற்ற வினியோகம் என்பதை விட அதிக வேகமாக வளர்கிறது.

சோஷலிசத்தை விமர்சிக்கிறவர்கள், சமூக நுகர்வு நிதிகள் சோஷலிசத்தினுல் கிடைத்த பலன் அல்ல என்று அழுத்தமாக கூறுகின்றனர். ஏனெனில் இதைப் போன்ற நிதிகள் முதலாளித்துவத்திலும் கூட இருக்கின்றன என்று கூறுகின்றனர். எதார்த்தத்தில் முதலாளித்துவ நாடுகளில் அரசு, மக்களின் சமூக, கலாச்சார மற்றும் பிற தேவைகளைப் பூர்த்தி செய்கிறது ஏனெனில் அது, முதலாளிகளின் தேவைகளால் (எ—டு உழைப்புச் சக்தியின் தயாரிப்பு) அல்லது உழைக்கும் மக்களின் நிர்பந்தத்தால் செயலூக்கப்படுத்தப்படுகிறது. உழைக்கும் மக்களுக்கு, அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராடிய அவர்களின் போராட்டத்தில் பூர்ஷ்வாக்கள் கட்டாயப்படுத்தப்பட்டு அளித்த சலுகையாக அது செய்யப் படுகிறது.

சோஷலிசத்தின் கீழ், சமூக நுகர்வு நிதிகள் முதலாவதாக, முதலாளித்துவத்தின் கீழ் இருப்பதை விட மிகப் பெருமளவிலானவை, மேலும் இடைவிடாது உயர்ந்து கொண்டே இருக்கின்றன. இரண்டாவதாக, அவை சமுதாயத்தின் பொருளாதார அமைப்பினுல் தோற்றுவிக்கப்படுகின்றன. சோஷலிசத்தின் பிரதான பொருளாதார விதியால் தேவைப்படுகின்றன.

சோஷலிசத்தின் கீழ் வாழ்க்கைத் தரத்தை குணும்சப் படுத்துவதற்கு உண்மையான வருமானம் என்ற கருத்து பயன் படுத்தப்படுகிறது. இது உண்மையான கூலியின் மொத்தம், சமூக நுகர்வு நிதிகளிலிருந்து பெறப்படும் பொருளாயத பொருள்கள், சேவைகள் ஆகியவைகளைக் கொண்டிருக்கிறது. சோஷலிஸ்ட் நாடுகளில் தொழில்துறை மற்றும் அலுவலக ஊழியர்களின் உண்மையான வருமானங்கள் தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. சோவியத் யூனியனில் 1981-1985ம் வருடங்களுக்கிடையில் ஒவ்வொரு குடிமகனின் உண்மையான வருமானமும் 16-18 சதவிகிதம் அதிகரிக்கும்.

அத்தியாயம் 19

# உலக சோஷலிசப் பொருளாதார அமைப்பு

## 1. சர்வதேச பொருளாதார உறவுகளின் புதிய மாதிரி

சில நாடுகளில் ஏற்பட்ட சோஷலிசப் புரட்சிகளைத் தொடர்ந்து தோன்றிய உலக சோஷலிச அமைப்புடன் ஓர் உலக சோஷலிசப் பொருளாதார அமைப்பு உருவாயிற்று. அதற்கு ஒரு புது மாதிரியான சர்வதேசப் பொருளாதார உறவுகள் உரியவை.

### சோஷலிசப் பொருளாதார அமைப்பின் சாரம்

உலக சோஷலிசப் பொருளாதார அமைப்பு என்பது சோஷலிச சர்வதேச உழைப்புப் பிரிவினை, நட்புள்ள ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவற்றால் இணைக்கப்பட்ட, சர்வ சுதந்திரமுள்ள சோஷலிச அரசுகளின் ஒட்டு மொத்தப் பொருளாதார உறவுகளாகும். பரஸ்பர பொருளாதார உதவிக்கானக் கவுன்சிலின் (சி. எம். இ. ஏ.) உறுப்பு நாடுகளிடையே, மிக நெருங்கிய அரசுகளுக்கிடைப்பட்ட பொருளாதார உறவுகள் நிலவுகின்றன. இந்தக் கவுன்சில் 1949ல் அமைக்கப்பட்டு சோஷலிச நாடுகளின் உண்மையான ஒரு சகோதரத்துவ முகாமை உருவாக்கியது.

உலக முதலாளித்துவ பொருளாதார அமைப்பைப் போல் உலக சோஷலிசப் பொருளாதார அமைப்பானது அதனுடைய பொருளாயத அடித்தளத்தை, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலும் அதன் விளைவாலான உற்பத்தியை ஒருமுனைப்படுத்தலிலும் வைத்திருக்கிறது. பயனுள்ளதாக

இருக்க, பெருமளவு உற்பத்திக்குப் போதுமான ஒரு மார்க்கெட் இருக்க வேண்டும். இது உற்பத்தியை சர்வதேசியமயமாக்குவதை நோக்கிய போக்கையும் அது தேசிய எல்லைகளுக்கு அப்பால் பரவும் போக்கையும் உருவாக்குகிறது. முதலாளித்துவத்தின் கீழ் இந்த நிகழ்ச்சிப் போக்கு ஒரு எதிரும் புதிருமான முதலாளித்துவ சமூக அடிப்படையில் ஏற்படுகிறது. இதனுல் தான் உலக முதலாளித்துவ பொருளாதாரமானது ஆதிக்க உறவுகள், உட்படுத்துதல், கழுத்தறுக்கும் போட்டி ஆகியவற்றுல் குணும்சப்படுத்தப்படுகிறது. உலக சோஷலிச பொருளாதார அமைப்பு அடிப்படையிலேயே வேறுபட்ட சமூக அடிப்படையில் தோன்றுகிறது. அது சோஷலிச அரசுகளால் உருவாக்கப்படுகிறது. அவற்றில் சோஷலிச உற்பத்தி உறவுகள் பிரதானமானவை. எனவே அது சமமான நாடுகளிடையே ஒத்துழைப்பு, நட்புரீதியிலான பரஸ்பர உதவி ஆகியவற்றுல் குணும்சப்படுத்தப்படுகிறது. ஆனுல் சில நாடுகள் பிற நாடுகளை ஆதிக்கம் செலுத்துவது அல்லது கழுத்தறுக்கும் போட்டி ஆகியவற்றுல் குணும்சப்படுத்தப்படவில்லை. மார்க்ஸ் எழுதினுர்: ''மக்கள் உண்மையில் ஒன்று சேர்வது சாத்தியமாவதற்கு, அவர்களுக்கு பொதுவான ஆர்வங்கள் இருக்க வேண்டும். அவர்களுடைய ஆர்வங்கள் பொதுவாக இருக்க, இப்பொழுது நிலவும் (முதலாளித்துவ—ஆ-ர்) சொத்து உறவுகள் ஒழிக்கப்பட வேண்டும். ஏனெனில் இத்தகைய சொத்து உறவுகள் சில நாடுகள் பிற நாடுகளைச் சுரண்டுவதை உண்டு பண்ணுகின்றன...''*

சோஷலிச நாடுகளின் ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவை, சோஷலிச சர்வதேசியம் என்ற கோட்பாட்டில் தெளிவாக்கப்படுகின்றன. அது அவற்றின் முகாம் முழுவதிலும் பரவுகிறது. இந்தக் கோட்பாடு தனிப்பட்ட சோஷலிச நாடுகளின் பொருளாதார நலன்களை அவற்றின் பொதுவான சர்வதேச நலனுடன் இணைப்பதைக் குறிக்கிறது.

சோஷலிச நாடுகளிடையேயுள்ள பொருளாதார உறவுகள், சோஷலிசப் பொருளாதார விதிகளின் செயலால்,

* Karl Marx, Frederick Engels, *Collected Works*, Vol. 6, p. 388.

முக்கியமாக சமூக உற்பத்தியின் திட்டமிட்ட, விகிதாச்சார வளர்ச்சியின் பிரதான பொருளாதார விதியின் செயலால் குணும்சப்படுத்தப்படுகின்றன. சோஷலிச நாடுகள் மக்களுடைய சேம நலத்தில் ஒரு உயர்வை அடைவதற்காக அவற்றின் முயற்சிகளை பொதுவாகச் சேர்க்கும் அவற்றின் விருப்பத்திலும் அவற்றின் உலகப் பொருளாதார உறவுகளின் திட்டமிட்ட வளர்ச்சியிலும் இது வெளிப்படுத்தப்படுகிறது. சோஷலிச நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலைகள் ஒன்றோடு ஒன்று நெருங்கி வரக் கூடிய பொருளாதார விதியினை பரந்த அளவில் பயன்படுத்துதல் கூட உலக சோஷலிசப் பொருளாதாரம் உருவாவதில் சம்பந்தப்பட்டிருந்தது. வளர்ச்சியுற்ற சோஷலிச நாடுகள், பொருளாதார வளர்ச்சியில் தாழ்ந்த நிலையில் இருக்கும் பிற சோஷலிச நாடுகளுக்கு எல்லா வித உதவியையும் அளிக்கின்றன. இப்படியாக அந்நாடுகளைப் படிப்படியாகத் தங்களுடைய நிலைக்குக் கொண்டு வருகின்றன.

பொருளாதார வளர்ச்சி நிலைகளை ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக கொண்டுவருவது என்பது, ஏகாதிபத்தியத்தின் கீழ் செயல்படும் சமமற்ற பொருளாதார வளர்ச்சியின் விதிக்கு நேர் எதிரானதாகும்.

## சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினை

உலக சோஷலிசப் பொருளாதார அமைப்பின் முக்கிய குண இயல்புகளில் ஒன்று சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையாகும். சோஷலிச நாடுகளின் வேறுபட்ட இயற்கை நிலைகள், வரலாற்று மரபுகள், தனிச் சிறப்புடைய உற்பத்தியின் ஒருமுனைப்படுத்துவதன் அவசியம் ஆகியவற்றிலிருந்து அது தோன்றுகிறது. பின்னால் குறிப்பிட்டது அரசுகளுக்கிடையே தொழில் துறை ஒத்துழைப்பை அவசியமாக்குகிறது.

சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையின் சமூக உள்ளடக்கம், சோஷலிச உடைமை உறவுகளால் குணும்சப்படுத்தப்படுகிற சோஷலிச நாடுகளின் உற்பத்தி உறவுகளின் ஆதிக்கத்தால் தீர்மானிக்கப்படுகிறது. இதன் தொடர்பில்

சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினை சில முக்கியப் பண்புக் கூறுகளைப் பெற்றிருக்கிறது. அவை முதலாளித் துவ உழைப்புப் பிரிவினையிலிருந்து அதை வேறுபடுத்து கின்றன. எதிரும் புதிருமான முரண்பாடுகள், போட்டிப் போராட்டம் ஆகியவை முதலாளித்துவ சர்வதேச உழைப்புப் பிரிவினையை நிலையற்றதாக ஆக்குகின்றன. பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாடுகளின் ஒரு தலைபட்ச தனிச் சிறப் புடைய உற்பத்திகளால் அது குறிக்கப்படுகிறது. இவற்றின் தேசிய பொருளாதாரங்கள் ஏகாதிபத்திய நாடுகளைப் பெரும் அளவில் சார்ந்துள்ளன. இன்று நவீன காலனி ஆதிக்கம் இந்தச் சார்புத் தன்மையைப் பராமரிக்க மட்டுமல்ல அதை அதிகரிக்கக் கூட உதவுகிறது.

சோஷலிச நாடுகளுக்கிடையே உழைப்பு பிரிவினையானது ஒரு திட்டமிட்ட முறையில், பகுத்தறிவுடன் கூடிய விஞ் ஞான அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாடும், அதனுடைய இயற்கை நிலைமைகள் மிகச் சாதக மாக உள்ளதும், பரம்பரையான தேர்ச்சி மிக்க உழைப்புச் சக்தி கிடைக்கக் கூடியதுமான தொழில் துறைகளை வளர்க் கிறது. உற்பத்தியின் அளவு எல்லா சோஷலிச நாடுகளின் தேவைகளைப் பொறுத்த வகையில் தீர்மானிக்கப்படுகிறது. ஆனல் இது பொருளாதாரத்தின் ஒற்றைக் கட்டமைப்புக்கு இட்டுச் செல்வதில்லை. ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதும் ஒட்டு மொத்தமானதுமான தொழில் துறைகளின் தொகுப் பால் உற்பத்தியின் தனி சிறப்புத் தன்மை நிரப்பப்படு கின்றது. அதன் விளைவாக ஒவ்வொரு சோஷலிச நாடும், தொழில் துறை, விவசாயம், உற்பத்திச் சாதனங்கள், நுகர்வுப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தி, சுரங்கத் தொ ழில், செய் பொருள்களின் உற்பத்தி, இத்தியாதி உள்ளிட்ட ஒரு பரிபூர்ண தேசிய பொருளாதாரத் தொகுதியைக் கட்டு கிறது. சோஷலிச நாடுகள் ஒன்றுடன் ஒன்று மிக நெருக்க மான கூட்டுறவு பிணைப்புகளை நிறுவுகின்றன. ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரத்தின் விகிதாச்சார வளர்ச்சியும் ஒட்டு மொத்த சோஷலிச முகாமின் விகிதாச்சார வளர்ச்சி யால் அதிகப்படுத்தப்படுகிறது. இது ஒத்துழைக்கும் எல்லா சோஷலிச நாடுகளிலும் சமூக உற்பத்தியின் திறமையை

உயர்த்த, இயற்கை வளங்கள் மற்றும் மனித சக்தியை விவேகமான முறையில் பயன்படுத்த, சிறந்த, சாத்தியமான நிலைமைகளை ஏற்பாடு செய்கிறது. 1959ல், சி. எம். இ. ஏ. உறுப்பு நாடுகளின் சோஷலிசப் பொருளாதார ஒருமைப் பாட்டினுடைய ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தவும், மேம்படுத்தவும் வளர்ச்சியுற செய்யவும் பரிபூர்ணத் திட்டம் என்ற பெயரில் நீண்ட காலத்திட்டம் ஒன்றைத் தீட்ட சி. எம். இ. ஏ.யின் 23வது அமர்வு தீர்மானித்தது. இந்தத் திட்டமானது 1971 கோடையில் நடைபெற்ற 25வது சி. எம். இ. ஏ.யின் அமர்வினுல் அங்கீகரிக்கப்பட்டது. சோஷலிச முகாமின் பொருளாதார ஒருமைப்பாட்டிற்காக 1990ம் ஆண்டு வரையுள்ள காலத்திற்கான ஒரு திட்டம் இது. இப்பொழுது இந்தப் பரிபூர்ண திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

## 2. சோஷலிசப் பொருளாதார ஒருமைப்பாடு. சோஷலிச நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு

### சோஷலிசப் பொருளாதார ஒருமைப்பாட்டின் சாரம்

சோஷலிசப் பொருளாதார ஒருமைப்பாடு என்பது, சோஷலிசப் பொருளாதாரங்களை திட்டமிட்டு ஒன்று சேர்த்தல், இடையுறவுள்ள தேசியப் பொருளாதாரங்களின் தொகுப்பு ஒன்றை உருவாக்கல் ஆகியவற்றின் நிகழ்ச்சிப் போக்காகும். இந்த ஒருமைப்பாடு, சோஷலிச சர்வதேசியத்தின் கோட்பாடுகள், அரசுரிமை, சோஷலிச நாடுகளிடையே முழு சமத்துவம், அவற்றின் தேசிய நலன்களை மதித்தல், பரஸ்பர நன்மை, தோழமையுள்ள பரஸ்பர உதவி ஆகிய வழியில் முழுமையாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. ஒருமைப்பாட்டுத் திட்டங்களின் கீழ் சோஷலிச நாடுகளில் கட்டப்பட்ட தொழில் நிலையங்களையும் பிற பொருளாதாரத் திட்டநிலையங்களையும் அவை சொந்தமாகப் பெற்றுள்ளன. அவற்றின் கட்டுமானத்தில் பங்கேற்ற நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய செலுத்தினங்கள், இத்தகைய தொழில் நிலையங்

களில் உற்பத்தியான பொருள்களைத் திருப்பி அளித்தல் என்ற அடிப்படையில் தரப்படுகின்றன. பின்னுல் உற்பத்திப் பொருள்கள் வழக்கமான ஒப்பந்தங்களின் கீழ் வாணிபம் செய்யப்படுகின்றன.

சி. எம். இ. ஏ. உறுப்பு நாடுகளுக்கு, அவற்றின் உற்பத்திச் சக்திகளை வளர்ச்சியுறச் செய்தல், சமூக உற்பத்தித் திறமையை அதிகரித்தல், விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சி வழியில் உற்பத்தியின் கட்டமைப்பை மேம்படுத்துதல், உற்பத்தி வீச்சை அதிகரித்தல், ஒத்துழைக்கும் நாடுகளின் கச்சாப் பொருள்கள், எரிபொருள்கள், தளவாடங்கள் மற்றும் பிற பொருள்கள் ஆகியவற்றிற்கான தேவைகளை நீண்ட காலத்திற்குப் பூர்த்தி செய்தல், மக்களின் பொருளாயத, கலாச்சார தரத்தை உயர்த்துதல், உலக சோஷலிச மார்க்கெட்டை வளர்த்தல், உலகப் பொருளாதாரத்திலும் முதலாளித்துவ நாடுகளுடன் போட்டியிலும் சி. எம். இ. ஏ. நாடுகளின் நிலைகளை வலுப்படுத்துதல், சோஷலிச முகாமின் பாதுகாப்பை பலப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன், பொருளாதார, விஞ்ஞான-தொழில்நுணுக்க ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் பணியை பொருளாதார ஒருமைப்பாட்டிற்கான பரிபூரண திட்டம் அமைக்கிறது.

பரிபூர்ண திட்டம் அமுலாக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், சோஷலிச நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பும் ஒருமைப்பாடும் விரைவாக வளர்கிறது. 1975ல் சி. எம். இ. ஏ. நாடுகள், 1976—1980 ஆண்டுகளுக்கான, அவற்றின் முதல் பல்நோக்கு ஒருமைப்பாட்டு நடவடிக்கைகளின் திட்டத்தை மேற்கொண்டன. பரஸ்பர அனுகூலமான உற்பத்தியின் தனிச் சிறப்புத் தன்மை, ஒத்துழைப்பு ஆகியவற்றின் வளர்ச்சி, பொருளாதாரத் திட்டநிலையங்களின் கூட்டு நிர்மாணம், விஞ்ஞான ஆராய்ச்சியிலும் பிற வட்டாரங்களிலும் பரந்த ஒத்துழைப்பு ஆகியவற்றையும் அது எதிர்நோக்கியது.

சோஷலிசப் பொருளாதார ஒருமைப்பாட்டின் தற்போதைய கட்டத்தில், பல பிரதான பொருளாதாரப் பிரச்சினைகள் நீண்டகாலத்திற்குத் தீர்க்கப்பட்டிருக்கின்றன. 30வது சி. எம். இ. ஏ. அமர்வின் ஒரு தீர்மானம்படி சி. எம். இ. ஏ.

நாடுகள் சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளில் ஆற்றல், எரிபொருள்கள், கச்சாப் பொருள்கள், நுகர்வுப் பொருள்கள், இயந்திரங்கள், தளவாடங்கள் ஆகியவற்றிற்கான வளர்ந்து வரும்தேவைகளை நிறைவேற்ற நீண்ட காலத் திட்டங்களை (1990 வரை) திட்டமிட்டுக் கொண்டும் அமுலாக்கிக் கொண்டும் இருக்கின்றனர்.

சோஷலிச நாடுகளின் பொருளாதார ஒருமைப்பாடு, ஏகாதிபத்திய ஒருமைப்பாட்டிலிருந்து அடிப்படையிலேயே வேறுபடுகிறது. சோஷலிசப் பொருளாதார ஒருமைப்பாடு ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கை வட்டாரத்தையும் தழுவுகிறது. அது உழைக்கும் மக்களின் நலன்களுக்காக நிறைவேற்றப்படுகிறது. ஒரு கண்டிப்பான வளர்ச்சி சமநிலை யால் அது குணும்சப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு சோஷ லிச நாட்டிலும் சோஷலிச முகாம் முழுவதிலும் உற்பத்தித் திறமையின் வளர்ச்சியை அது மேம்படுத்துகிறது.

## சோஷலிச நாடுகளின்<br>பொருளாதார ஒத்துழைப்பு வடிவங்கள்

ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல் சி. எம். இ. ஏ. உறுப்பு நாடுகள் நெருக்கமான ஒத்துழைப்புப் பிணைப்பு களால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. அவை அவற்றின் தேசிய பொருளாதாரத் திட்டங்களை ஒத்திசைக்கின்றன; விஞ்ஞானத்தில், தொழில்நுணுக்கத்தில் ஒத்துழைக்கின்றன; உற்பத்தியில் அரசுகளுக்கிடையே உற்பத்தியின் தனிச் சிறப்பையும் ஒத்துழைப்பையும் வளர்க்கின்றன; பொருளா தாரத் திட்டநிலையங்களை சேர்ந்து கட்டுகின்றன; சர்வதேச வர்த்தகம், கடன் உறவுகளில் ஒத்துழைக்கின்றன.

சோஷலிச நாடுகளின் ஒத்துழைப்பின் முக்கிய வடி வம், கூட்டுத் திட்டமிடுதலும் அவற்றின் தேசியப் பொருளா தாரத் திட்டங்களை ஒத்திசைவுப்படுத்தலுமாகும். இந்த நாடுகளிடையே சமூக உழைப்புப் பிரிவினையின் அடிப் படையில் ஒத்துழைக்கும் தொழில் துறைகளை உள்ளடக் கிய திட்டங்களின் பகுதிகள் ஒத்திசைக்கப்படுகின்றன.

ஒத்துழைப்பு வளர, வளர, இரு தரப்பும் பல் தரப்புமான அடிப்படையில் திட்டங்களை ஒத்திசைப்படுத்துவதானது அதிகப் பரிபூர்ணமானதும் பல் நோக்குடையதும் விரிவானதுமாக மாறுகிறது. பொருளாதார ஒருமைப்பாட்டின் முன்னேற்றத்துடன், பல்நோக்கு ஒத்திசைப்படுத்துதலின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது. தொழில் துறைகளுக்கிடையேயும் அவற்றிற்குள்ளும், உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திக்கும் நுகர்வுப் பொருள்களின் உற்பத்திக்கும் இடையேயும், ஆற்றல், கச்சாப் பொருள்கள் ஆகிய தொழில் துறைகளுக்கும் செய்பொருள்களின் உற்பத்தித் தொழில் துறைகளுக்கும் இடையேயும் வளர்ச்சி விகிதாச்சாரங்கள் அரசுகளுக்கிடையே திட்டமிடப்பட்டு, அமுலாக்கப்படுகின்றன. அரசுகளுக்கு இடையேயுள்ள வளர்ச்சி விகிதாச்சாரங்கள் தனிப்பட்ட நாடுகளுக்குள் தேசியப் பொருளாதார விகிதாச்சாரங்களுடன் நெருக்கமாக இணைக்கப்படுகின்றன.

நீண்ட காலத்தில் உற்பத்தியின் வளர்ச்சியை, மேம்பாட்டை முன்கணித்தல், திட்டமிடுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. அதற்கேற்ப நீண்டகாலக்குறிக்கோளை நிறைவேற்றும் நோக்கமுடைய திட்டங்களைத் தீட்டுவதில் சிறப்பான கவனம் செலுத்தப்படுகிறது.

சோஷலிச நாடுகளிடையே உள்ள பொருளாதார உறவுகளில் அந்நாடுகளிடையேயுள்ள, **விஞ்ஞான-தொழில்நுட்ப ஒத்துழைப்பு** குறைந்த முக்கியத்துவமுடையதல்ல. இது, தொழில் நுணுக்க தஸ்தாவேஜுகளின் பரிமாற்றம், தொழில் நுணுக்க அறிவு, கூட்டு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. அவை, விஞ்ஞான ஆராய்ச்சித் திட்டங்களை ஒத்திசைவுபடுத்துவதையும் விஞ்ஞான மையங்களைக் கூட்டாக நிறுவுவதையும் உள்ளடக்கியுள்ளன.

விஞ்ஞான-தொழில்நுணுக்க சிறப்புப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சியில் பரஸ்பர உதவியானது விஞ்ஞான-தொழில்நுணுக்க ஒத்துழைப்பில் ஒரு முக்கியமான இடம் பெறுகிறது.

ஒத்துழைப்பானது சோஷலிச நாடுகள், பொருளாதார

வளர்ச்சியில் விஞ்ஞான-தொழில்நுணுக்கத்தின் சமீபத்திய சாதனைகளைப் பயன்படுத்தச் செய்கிறது. இத்தகைய ஒத்துழைப்பானது, தற்போதைய விஞ்ஞான-தொழில்நுணுக்கப் புரட்சியின் கட்டத்தில் சிறப்பான முக்கியத்துவமுடையதாகும்.

சோஷலிச நாடுகள் **உற்பத்தியில் அரசுகளுக்கிடையேயான தனிப்பயிற்சி, ஒத்துழைப்பு** ஆகியவற்றிலும் மிக நெருக்கமாக ஒத்துழைக்கின்றன. ஒன்றாகச் சேர்ந்த ஒத்துழைக்கும் சோஷலிச நாடுகளால் உருவாக்கப்பட்ட பரந்த நுகர்வோரின் வட்டாரத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, தனிச்சிறப்பான உற்பத்தியில் ஒரு உயர்ந்த ஒருமுனைப்படுத்துதலை அது மேம்படுத்துவதால் இந்த ஒத்துழைப்பு வடிவம் குறிப்பாக பயனுள்ளதாக இருக்கிறது. தனிச் சிறப்பான உற்பத்தி, விஞ்ஞானம், தொழில்நுணுக்கம், உழைப்பு ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் சிறந்த சாதனைகளைப் பயன்படுத்துவதை சாத்தியமாக்குகிறது; பரிபூர்ண இயந்திரமயமாக்கலை, தானியங்கி இயந்திரங்களை புகுத்துகிறது; உற்பத்தியை பெருமளவில் கம்பியூட்டர்மயமாக்குவதைச் சாத்தியமாக்குகிறது.

உற்பத்தியின் ஒத்துழைப்பு அரசுகளுக்கிடையேயான தனிச்சிறப்பின் அடிப்படையில் வளர்கிறது. அது சோஷலிச நாடுகளின் பொருளாதார ஒருமைப்பாட்டை மேம்படுத்தி, குறைந்த செலவுகளில் அவற்றின் உள்நாட்டு உற்பத்தியை வளர்ச்சியடையச் செய்வதற்கான சாதகமான நிலைமைகளை நிறுவுகிறது.

சோஷலிச நாடுகளின் ஒத்துழைப்பின் மற்றொரு வடிவம் **பொருளாதாரத் திட்ட நிலையங்களைக் கூட்டாகக் கட்டுவதாகும்.** இவை, இயற்கை மற்றும் பிற நிலைமைகள் சாதகமாக இருக்கும் இடங்களில் கட்டப்படுகின்றன. ஒத்துழைக்கும் நாடுகளாலும், சி. எம். இ. ஏ. உறுப்பு நாடுகளால் 1970ல் நிறுவப்பட்ட சர்வதேச முதலீட்டு வங்கியாலும் நிதிகள் வழங்கப்படுகின்றன.

கூட்டாகக் கட்டப்பட்ட தொழில் நிலையங்கள் வழக்கமாக, பெரும் மூலதன முதலீடுகள் தேவைப்படும் சுரங்கத் தொழில் துறைகளிலும், செய்பொருள் உற்பத்தி தொழில்

துறைகளிலும் உள்ளன. சோவியத் யூனியனில் சோஷலிச முகாமின் நாடுகளின் கூட்டு முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டுகளாவன: உஸ்த்-இலிம்ஸ்க் காகிதக்கூழ்-காகித தொழில் சாலை, கியம்பாய் கல்நார் தோண்டும் மற்றும் கெட்டியாக்கும் தொழில்சாலை, ஓரன்பர்க்கிலிருந்து சோவியத் யூனியனின் மேற்கு எல்லை வரை வாயு குழாய் வழி, வினிஸ்ஸாவுக்கும் (சோவியத் யூனியன்) ஆல்பெர்டிர்சாவுக்கும் (ஹங்கேரி) இடையில் உயர்-வோல்டேஜ் அனுப்பும் வழி. பல்கேரியாவில் 'மெடேட்' செம்பு படிகங்கள், போலந்தில் நிலக்கரி, செம்பு, கந்தகம் ஆகியவற்றின் உற்பத்தி ஆகியவையும் வளர்ச்சி அடையச் செய்யப்படுகின்றன. கியூபாவில் நிக்கல் உற்பத்தி விரிவுபடுத்தப்படுகிறது. ருமேனியாவில் ஐஸோபெரின் ரப்பர் உற்பத்திக்கான ஆலைகள் கட்டப்படுகின்றன. இத்தகையத் தொழில் நிலையங்களின் உற்பத்திப் பொருள்கள், ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல், அவைகளின் கட்டுமானத்தில் பங்கு ஏற்கும் நாடுகளுக்கு அனுப்பப்படும்.

சோஷலிச நாடுகள் **வர்த்தகம் மற்றும் கடன் உறவுகளில்** விரிவாக ஒத்துழைத்துக் கொண்டிருக்கின்றன. சோஷலிச நாடுகளிடையே வர்த்தக உறவுகள் உலக சோஷலிச மார்க்கெட்டை உருவாக்குகின்றன. அது முதலாளித்துவ மார்க்கெட்டுடன் நிலவி இருக்கிறது.

சோஷலிச நாடுகளிடையே பரஸ்பர வர்த்தகம் குறிப்பிட்ட முக்கியப் பண்புக் கூறுகளைப் பெற்றிருக்கிறது. வழக்கமாக ஐந்தாண்டுகளில் முடியக் கூடிய வர்த்தக ஒப்பந்தங்களால் நிறுவப்பட்ட நிலையான, திட்டமிட்ட, பரஸ்பரம், அனுகூலம் தரும் விலைகளின் அடிப்படையில் அது நிறைவேற்றப்படுகிறது. தற்செயலான, வர்த்தக சூதாட்ட ஏற்ற இறக்கமான விளைவுகள் நீக்கப்பட்ட பிறகு உலக முதலாளித்துவ மார்க்கெட்டின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்படுகின்றன.

வணிக நடவடிக்கைகளையும் பல்நோக்கு செலுத்தினங்களை எளிமையாக்க 1964ல் சி. எம். இ. ஏ. நாடுகள் பொருளாதார ஒத்துழைப்பிற்கான சர்வதேச வங்கியை நிறுவின. பொருள்களையும் சேவைகளையும் ஒப்படைப்பதற்காகக்

கொடுக்க வேண்டிய செலுத்தினங்கள் சோஷலிச நாடு களுக்கிடையே **மாற்றும் உரிமை பெற்ற ரூபிள்களில்,** செயல் படுத்தப்படுகின்றன. இது ஒரு ஸ்தூலமான செலாவணி அல்ல. ஆனால் அது, மதிப்புகளின் ஒரு அளவாகவும் செலுத்தின சாதனமாகவும் திரட்சி சாதனமாகவும் உலக சோஷலிச மார்க் கெட்டில் சர்வவியாபகப் பணமாகவும் செயல்பட வேண்டிய செயல்பாடுகளைச் சிறப்பாக நிறைவேற்றுகிறது. மாற்றும் உரிமை பெற்ற ரூபிள் சோஷலிச நாடுகளின் உள்நாட்டு செலாவணிகளிலிருந்து வேறுபட்டது. அதனுடைய தங்க உள்ளடக்கம் 0.987412 கிராம் தங்கமாகும்.

சி. எம். இ. ஏ. நாடுகளிடையேயுள்ள வாணிபம் அதிக ரித்துக் கொண்டே உள்ளது. 1971லிருந்து 1980க்குள் அத னுடைய பரிமாணம் 3.5 மடங்காயிற்று. பரிமாற்ற சரக்கு ஒப்படைப்புகள், சோஷலிச நாடுகளின் பிரதான ஏற்றுமதி இறக்குமதி தேவைகளில் 80 முதல் 100 சதவீதம் வரை, பூர்த்தி செய்கின்றன. சி. எம். இ. ஏ. நாடுகளிடையே பரிமாற்ற வாணிபம், அந்நாடுகளின் வெளி நாட்டு வாணிப விற்பனைப் புரள்வில் 60 சதவீதத்தைப் பெறுகிறது.

சோஷலிச நாடுகள் நிலையான, பரஸ்பர நன்மை பயக் கும் கடன் உறவுகளைப் பராமரிக்கின்றன. கடன்கள் மிகக் குறைந்த வட்டிக்கு அல்லது வட்டி இல்லாமலேயே வழங்கப்படுகின்றன. அவற்றின் கடன் உறவுகள், மிகப் பெரிய மூலதன முதலீடுகளுக்குத் தேவையான நிதிகளைச் சேர்க்க அனுமதிக்கின்றன. கடன்கள் வழக்கமான ஏற்றுமதி மூலம் திருப்பித் தரப்படுகின்றன.

சோஷலிச நாடுகள் பொருளாதார ஒத்துழைப்புக்கான சர்வதேச வங்கி, சர்வதேச முதலீட்டு வங்கி ஆகியவற்றி லிருந்தும் கூட கடன்கள் பெறுகின்றன. முன்னல் கூறப்பட்ட வங்கி வாணிப நடவடிக்கைகளுக்கு நிதி உதவி அளிக்கிறது, பின்னல் கூறப்பட்டது தொழில் கட்டுமானத்திற்கு உதவு கிறது. கடன்கள் மாற்றும் உரிமை பெற்ற ரூபிள்கள், இருமை செலாவணி ஆகிய இரு வகைகளிலும் வழங்கப்படு கின்றன. இந்த இருமை செலாவணியை சோஷலிச நாடுகள் முதலாளித்துவ நாடுகளுடன் வாணிப நடவடிக்கையில் ஈடுபடும் பொழுது பயன்படுத்திக் கொள்ளும்.

# 3. இரு உலகப் பொருளாதார அமைப்புகளுக்கு இடையே உள்ள பொருளாதாரப் போட்டி

முதலாளித்துவத்தை விட சோஷலிசம் பெற்ற அனுகூலங்களும் சோஷலிச நாடுகளிடையே உள்ள ஒத்துழைப்பும் அவற்றின் பொருளாதாரம் சீராக முன்னேறுவதையும் முதலாளித்துவ நாடுகளுடன் வெற்றிகரமாக போட்டியிடுவதையும் சாத்தியமாக்குகின்றன. ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகளும், சோஷலிச முகாமின் ''விமரிசகர்களும்'' இதை மறுக்க முயற்சிக்கின்றனர். பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் சி. எம். இ. ஏ. ஐயும் அதனுடைய பயனுள்ள நடவடிக்கைகளையும் இழிவுபடுத்த முயற்சிக்கின்றனர். சோஷலிச நாடுகள் சமமற்றவை, அவை சோவியத் யூனியனைச் சார்ந்துள்ளன என்று அவர்கள் கூறுகின்றனர். சோஷலிசப் பொருளாதார ஒருமைப்பாட்டை, சோவியத் யூனியன் பிற சோஷலிச பொருளாதாரங்கள் மீது தன்னுடைய கட்டுப்பாட்டை நிறுவ முயற்சிக்கும் வழியாகவும், பிற சோஷலிசப் பொருளாதார வளர்ச்சியை தன்னுடைய சொந்த நலன்களுக்காகக் கீழ்படுத்தும் வழியாகவும் பயன்படுத்துவதாக அவர்கள் கருதுகின்றனர்.

சோஷலிச நாடுகள் ஒத்துழைக்கும் விதம், ஒன்று மற்றதன் அனுபவத்தை, சோவியத் யூனியனின் அனுபவத்தை உள்பட, பயன்படுத்தும் விதம் ஆகியவற்றை திருத்தல்வாதிகள் எதிர்க்கின்றனர். சோஷலிச நாடுகளின் ஒற்றுமையை அவர்கள் அரித்தழிக்க முயற்சிக்கின்றனர்; அவற்றின் பொருளாதாரத்தை முதலாளித்துவப் பொருளாதாரத்துடன் பிணைத்து ஏகாதிபத்திய நாடுகளை அவை சார்ந்திருக்கும்படி செய்ய முயற்சிக்கின்றனர். எவ்வாறுயினும் அவர்களுடைய கற்பனைகளை நிகழ்ச்சிகள் மறுக்கின்றன; இத்தகைய முயற்சிகளைக் குலைக்கின்றன. சோஷலிச நாடுகளால் சாதிக்கப்பட்ட வெற்றிகள், முதலாளித்துவ அமைப்பின் மீது சோஷலிசப் பொருளாதாரம் கொண்ட மேன்மை ஆகியவை விஷயங்களால் நிரூபிக்கப்படுகின்றன.

## சோஷலிசத்தின் உயர்வான பொருளாதார வளர்ச்சி விகிதங்கள்

முதலாளித்துவத்தின் மீது சோஷலிசம் கொண்ட மேன்மை, பொருளாதார வளர்ச்சி விகிதங்களில் முதன்மையாக தெளிவாகின்றது. இந்த வளர்ச்சி விகிதங்கள் இரு அமைப்புகளுக்கும் இடையேயுள்ள பொருளாதாரப் போட்டியைத் தீர்மானிக்கக் கூடியவையாகவும், ஒரு பொருளாதாரத்தின் இயக்க ஆற்றலின் அடிப்படையாகவும் உள்ளன.

முதலாளித்துவ நாடுகளை விட சோஷலிச நாடுகள் எவ்வித அனுகூலங்களும் பெற்றுவிடவில்லை என்று சோஷலிச ''விமரிசகர்களால்'' கூறப்படுவதற்கு மாருக பொருளாதார வளர்ச்சி விகிதமானது அதற்கு எதிரானவற்றை நிரூபிக்கிறது.

பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலைச் சேர்ந்த நாடுகளின் தேசிய வருமானத்தின் வளர்ச்சி விகிதம் 1951-1979 காலட்டத்தில் 7.4 சதவிகிதமாக இருந்தது. அதே சமயம் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் அது 4.2 சதவிகிதம்தான். பொருளாதாரத்தில் கேந்திரமான துறையாகிய தொழில்துறையின் வளர்ச்சி விகிதங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் இதே மாதிரியான நிலைமையைக் காண முடியும். இதே காலகட்டத்தில் பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலைச் சேர்ந்த நாடுகளின் தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 9 சதவிகிதமாகும். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் அது 4.8 சதவிகிதமாக மட்டுமே இருந்தது. உலகத் தொழில்துறை உற்பத்தியில் சோஷலிஸ்டு நாடுகளின் பங்கு 1950ல் 20 சதவிகிதமாக இருந்திலிருந்து 1979ல் 40 சதவிகிதத்துக்கு அதிகமாக வளர்ச்சியடைந்தது.

### தலா வீத உற்பத்தி வளர்ச்சி

சோஷலிச நாடுகளின் தலா வீத உற்பத்தி வளர்ச்சியையும், முதலாளித்துவ நாடுகளின் தலா வீத உற்பத்தி வளர்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த வகையில் கூட சோஷலிசம் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளதை நாம் பார்க்கலாம்.

சி. எம். இ. ஏ. நாடுகள், பொதுவாக தொழில் துறை தலா வீத உற்பத்தியில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளை விஞ்சியுள்ளன. 1979ல் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகள் உலகத் தொழில் துறை உற்பத்தி வெளிப்பாட்டில் பாதிக்கு சற்று குறைவை உற்பத்தி செய்தன. பூமியின் மக்கள் தொகையில் 18 சதவீதத்தையும் அவை கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் சி. எம். இ. ஏ. நாடுகள் சுமாராக உலகத் தொழில் துறை உற்பத்தி வெளிப்பாட்டில் மூன்றில் ஒரு பங்கை உற்பத்தி செய்தன (அவற்றின் மொத்த மக்கள் தொகை உலக மக்கள் தொகையில், 10.1 சதவீதமாக இருக்கிறது). இப்படியாக வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் ஒரு சதவீத மக்கள் தொகை, உலகத் தொழில் துறை உற்பத்தி வெளிப்பாட்டில், 2.7 சதவீதத்திற்குச் சற்று அதிகமாகவும், சி. எம். இ. ஏ. நாடுகளின் மக்கள் தொகையில் ஒரு சதவீதம் உலகத் தொழில் துறை உற்பத்தி வெளிப்பாட்டில் 3.3 சதவீதத்தையும் பெற்றன. உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலிருந்தும் உற்பத்தியில் விஞ்ஞான-தொழில்நுணுக்க சாதனைகளைப் புகுத்துவதிலிருந்தும் விளைந்த உற்பத்தியின் ஒரு வளர்ச்சியை அவை பிரதிபலிப்பதால் இந்தப் புள்ளி விவரங்கள் முக்கியமானவையாகும்.

## வசதியான வாழ்க்கை நிலைமைகள்

எப்பொழுதும் உயர்ந்து கொண்டே இருக்கும் சோஷலிச நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிட்டால், அது சோஷலிசத்தின் அனுகூலங்களை விளக்கும் ஒரு தெளிவான வெளிப்பாடாகவும் முதலாளித்துவத்திற்கு எதிரான பொருளாதாரப் போட்டியில் அதனுடைய வெற்றியை மறுக்க முடியாத முறையில் நிரூபிக்கும் நிரூபணமாகவும் இருக்கிறது.

வாழ்க்கைத் தரம் அநேக சுட்டிக்காட்டுபவைகளால் குறும்சப்படுத்தப்படுகிறது. அவற்றில் முக்கியமானவைகள், உண்மையான வருமானங்கள், வேலைகிடைக்கும் வாய்ப்பு, உழைக்கும் நிலைமைகள், வாழ்க்கை நிலைமைகள், கல்வி வாய்ப்புகள், கலாசார தரம், சுகாதாரப் பணி, சமூக இன்ஷூரன்ஸ், சமூகப் பாதுகாப்பு ஆகியவையாகும். இந்த விஷயங்களிலெல்லாம் சோஷலிச நாடுகள் பெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளன. உயர்ந்து கொண்டே இருக்கும் கூலிகள், பணவீக்கம் இல்லாதது, நிலையான விலைவாசிகள் ஆகியவற்றுடன் உண்மையான வருமானங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே உள்ளன. சோஷலிச நாடுகளில் வேலையின்மையும், கூலியில் அநியாயமும் இல்லை. உழைப்பு நிலைமைகளை மேம்படுத்தவும் சூழ்நிலையைப் பாதுகாக்கவும் ஒவ்வொரு காரியமும் செய்யப்படுகிறது. கல்வி, மருத்துவப் பணி ஆகியவை இலவசம். மக்களின் கலாச்சார தரம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. விளையாட்டுகள் விருத்தியடைந்துள்ளன. சோஷலிச நாடுகளில் உள்ள சமூக இன்ஷூரன்சுக்கு, பாதுகாப்பிற்கு ஈடு இணை உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இல்லை.

அதே நேரத்தில் முதலாளித்துவ நாடுகளில் உழைக்கும் மக்கள் ஈவிரக்கமற்றச் சுரண்டலுக்கு ஆளாகின்றனர். உழைப்பை மிக அதிகமாகத் தீவிரப்படுத்துவதாலும் கஷ்டப்படுகின்றனர். இதனால் தொழில் துறை விபத்து விகிதமும், மோசமான ஆரோக்கியமும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. பணவீக்கத்தாலும் உயர்ந்து கொண்டே வரும் விலைவாசிகளாலும் தொழிலாளர்கள் அவர்களுடையச் சுரண்டல்காரர்களிடமிருந்து நிர்பந்தப்படுத்திப் பெற்ற கூலி உயர்வுகள் விழுங்கப்படுகின்றன. அதன் விளைவாக உண்மையான கூலியில் ஒரு சரிவு ஏற்படுகிறது. முதலாளித்துவ நாடுகளில் பால், வயது, இனம், தேசிய இனம் ஆகிய அடிப்படையில் மிகப் பரவலாக கூலி வேறுபாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது. உழைக்கும் மக்கள் வேலையின்மையால் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். இலட்சக்கணக்கானவர்கள் குறைக்கப்பட்ட வேலை நாளுக்கோ அல்லது குறைந்த வேலை வாரத்திற்கோ நியமிக்கப்படுகின்றனர். சமீப

ஆண்டுகளில் மருத்துவ, கல்லூரிக் கட்டணங்கள், சில முதலாளித்துவ நாடுகளில் உயர்ந்துள்ளன.

முதலாளித்துவ உலகில் மக்களின் பொருளாயத நிலைமைகள் மட்டும் சரிந்துகொண்டிருக்கவில்லை. சமுதாயத்தின் அறிவுலக வாழ்க்கையிலும் வீழ்ச்சி ஆரம்பித்து விட்டது. குற்றம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. மக்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாகின்றனர். முதலாளித்துவக் கலாச்சாரம் விபசார இலக்கியப் பெருவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகிறது. முதலாளித்துவத்தை விட சோஷலிசத்தில் கிடைக்கும் அனுகூலங்கள் மகத்தானவை என்பது மறுக்க முடியாதது; முதலாளித்துவ உலகத்துடன் பொருளாதாரப் போட்டியில் சோஷலிச நாடுகளின் வெற்றிகள் மேலும் மேலும் தெளிவாகிக் கொண்டே இருக்கின்றன.

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

*41. பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்.*
*சென்னை—600098.*

ஷோ-ரூம்

*136. மவுண்ட் ரோடு. சென்னை—600002.*

கிளைகள்

*80. மேலக் கோபுர வீதி. மதுரை—625001.*
*87/89. ஒப்பணக்கார தெரு. கோயம்பத்தூர்—641001.*
*சிங்காரத் தோப்பு. திருச்சிராப்பள்ளி—620008.*
*செர்ரி ரோடு. சேலம்—636001.*

விற்பனை நிலையங்கள்

*3—22—75—D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்.*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.*